ஜூன், ௨௨ · [redacted]

(4)

# தமிழரசு

SL
V2:11m N86
N866
F ...

# தமிழரசு

1.6.1986 75 காசு





10649





**ஆப்பிரிக்கக் குழந்தைகள் நலநிதி**

# இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம்



"ஸ்போர்ட்ஸ் எய்ட்" என்ற விளையாட்டு உதவி ஆப்பிரிக்க குழந்தைகள் நல்வாழ்வுக்காக யூனிசெப் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப் பட்ட ஒரு நிகழ்ச்சி.

ஆப்பிரிக்கக் குழந்தைகள் நலனுக்காக உலகின் பல நாடுகள் நிதி திரட்டியுள்ளது. இந்திய நாடும் தனது பங்கை பேரார்வத்துடன் செலுத்தியுள்ளது. தமிழகமும் கடமை உணர்வு டன் நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டது.

இந்தியாவிலேயே தமிழகம்தான் ஆப்பிரிக்கக் குழந்தைகள் நலனுக்கு அதிக நிதியைத் திரட்டித் தந்துள்ளது.

இந்த நிகழ்ச்சி வெற்றி பெறவேண்டு மென்று முதன் முதலில் வாழ்த்துச் செய்தி தந்தவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் நிதி திரட்டுவதற்கு மிகுந்த ஊக்கத்தை அளித்ததுடன், தமிழகத்தின் சார்பில் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 10 இலட்ச ருபாயையும், தமது சொந்தச் சார்பில் 2 இலட்ச ருபாயையும் வழங்கியுள்ளார்முதல்வர்.

இந்தியாவில் 1 கோடி ருபாய் திரட்டித் தருவதாகஇந்தியப் பிரதமர் வாக்களித்திருந்தார். அதில் ஐந்தில் ஒரு பகுதி அதாவது 20 இலட் சத்திற்கு மேல் தமிழ்நாட்டிலேயே வசூலாகி யிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அதனைப் பாராட்டும் வகையில் யூனிசெப் நிறுவனத்தின் பிரதிநிதி, திரு எஸ். தாஸ்குப்தா அவர்கள் இலைகள் பொறிக் கப்பட்ட வெள்ளித் தட்டினை மாண்புமிகு முதல்வருக்காக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் அளித்தார்.



**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2017
அட்சய - வைகாசி 18
மலர் : 16 இதழ் : 23
1-6-1986



1

# புகழ் தேடிக் கொண்ட புகளூர்

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த புகளூரில் உருவாகியுள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் காகித ஆலை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் தமிழ் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்படும் விழா மே திங்கள் 24 ஆம் நாள் புகளூர் காகிதபுரத்தில் நடை பெற்றது.

இந்த விழாவுக்குப் பொது மக்கள் அக்கம் பக்கத்திலுள்ள ஊர்களிலிருந்து ஆர்வத்துடன் வந்திருந்தனர்.

பேருந்துகள் மூலமும், சைக்கிள்கள் மூலமும் லட்சக்கணக்கானவர்கள் வந்திருந்தனர். மாட்டு வண்டிகளில் வந்தவர்கள் பல்லாயிரம் பேர் இருப்பர்.

ஊர் எங்கும் தோரணங்கள் — எழுச்சி முழக்கங்கள் காணப்பட்டன. மக்களின் அகத்திலும் முகத்திலும் மகிழ்ச்சி அலை மோதியது.

தங்கள் ஊருக்குப் புகழ் மகுடத்தையும், பெரும் வளத்தையும் ஒருங்கே வழங்குகின்ற காகித ஆலையின் அர்ப்பணிப்பு விழாவைத் தங்கள் இல்லத்தில் நடைபெறும் புனித விழாவாக ஒவ்வொருவரும் கருதி, பேரார்வத்துடன் திரண்டு வந்தார்கள்.

ஆலையின் திறப்பு விழாவைத் தானும் காண வேண்டும் என்ற ஆசையுடன் மழையும் அங்கே பிற்பகல் 4-30 மணி அளவில் வருகை புரிந்தது. கொட்டும் மழையின் வேகத்தையும் பொருட்படுத்தவில்லை — பொது மக்களின் ஆர்வவேகம். சாரை சாரையாக மக்கள் — விழா நடைபெறும் பந்தலை நோக்கிப் போய்க் கொண்டே இருந்தார்கள்.

சேக் சின்ன மௌலானா அவர்களின் நாயன இசை — பொது மக்களுக்கு விருந்தாக விளங்கியது. அதனை அடுத்து நடைபெற்ற இசை அமைப்பாளர்கள் சங்கர்—கணேஷ் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி, பொது மக்களை மயங்க வைத்தது.

சரியாக 7 மணிக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் புன்னகை சிந்தியவாறு மேடைக்கு வந்து சேர்ந்தார்.

முதல்வரைக் கண்டவுடன் தாயைக் கண்ட குழந்தைகள் போல வாஞ்சையுடன் அவரருகில் சென்று, குனிந்து, வணங்கி அவரது ஆசியைப் பெற்றனர் இசை அமைப்பாளர்கள் சங்கர் கணேஷ், பாடகர் டி.எல். மகராசன் ஆகியோர். முதல்வரைப் பார்த்த பூரிப்பால் டி.எம். சௌந்தரராஜன் அவர்கள், "அச்சம் என்பது மடமையடா அஞ்சாமை திராவிடர் உடைமையடா" என்ற பாடலைப் பாடினார்.

பொதுமக்களும் அந்தப் பாடல் வரியைக் கேட்டவுடன் கரவொலி எழுப்பித் தங்களின் வரவேற்பைத் தெரிவித்தனர்.

பொதுமக்கள் கைகளை உயர்த்திக் காண்பித்து ரசித்தார்கள். அந்தக் காட்சியைக் கண்ட முதல்வர் அவர்களும் தமது வலக் கரத்தை உயர்த்தி மகிழ்ச்சி கலந்த வதனத்துடன் தமது பேரன்பைத் தெரிவித்தார்.

காகித ஆலையின் தொடக்க விழாவிற்கு மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமை ஏற்றார்.

காகித ஆலைத் தலைவர் திரு விஸ்வநாதன் வரவேற்புரை ஆற்றினார். அப்போது அவர் தெரிவித்தார்:

"தமிழ்நாட்டுக்கு — ஏன், இந்தியத் துணைக் கண்டத்துக்கே இன்று ஒரு பொன்னாள். உலகிலேயே முதன் முறையாக, கரும்புச் சக்கையைக் கொண்டு செய்தித்தாள் செய்யும் தொழிற்சாலை இன்று நிறுவப்படுகிறது.

"கரும்புச் சக்கையைக் கொண்டு எழுதுபொருள் காகிதம் 30 வருடத்திற்கு முன்பே தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் கரும்புச் சக்கையைக் கொண்டு செய்தித் தாள் காகிதம் தயார் செய்வது இந்தத் தொழிற்சாலை தான்.

"ஹவாய், அர்ஜென்டைனா, பெரு போன்ற நாடுகளில் கூட இந்தத் தொழில் நுட்ப வளர்ச்சி இல்லை. ஆனால் தமிழ்நாட்டில் இது உருவாகியுள்ளது. பிலாய் சோதனைச் சாலையில் ஆய்வு செய்யப்பட்டு, இந்தத் தொழில் நுணுக்க முறை கையாளப்படுகிறது.



விஞ்ஞானி மூர் நினைவுப் பரிசு பெறுகிறார்





"தமிழ்நாடு தொழில் வளத்தில் சிறந்தோங்க வேண்டும் என்பதற்காக பல தரப்பட்டவர்களிடம் ஆலோசனை நடத்தினார் நமது முதல்வர்.

"இந்த ஆலையினால் 4000க்கு மேற்பட்டவர்கள் வேலை வாய்ப்புப் பெறுவர். கிராமப் பொருளாதாரம் வளரும். விவசாயப் பெருமக்கள் நன்மை அடைவர்.

"இந்த முயற்சி மெக்சிகோ —பெரு போன்ற நாடுகளில் எல்லாம் வெற்றியைத் தரவில்லை. அவை ஏன் தோல்வியடைந்தன என்பதை அறிந்தால்தான் நாம் சரியான முறையில் நடத்தி வெற்றி பெற முடியும் என்று நமது முதல்வர் அவர்கள் கருதினார். அதனால், தானே அந்த நாடுகளுக்கெல்லாம் சென்று, சுற்றிப் பார்த்து, அதிகாரிகளுடன் விவாதித்து ,நீண்ட ஆலோசனைக்குப் பிறகுதான் தமிழ்நாட்டில் இந்தத் தொழிற்சாலை உருவாவதற்கு அனுமதியும் ஆசியும் வழங்கியுள்ளார் நமது முதல்வர்".

அடுத்து, நிர்வாக இயக்குநர் திரு சி. இராமச்சந்திரன்,இ.ஆ.ப. தமது உரையில் குறிப்பிட்டதாவது:

"இந்தக் காகிதத் தொழிற்சாலைக்கு, நீர் நிலம், ரயில், மற்றும் எல்லா வசதிகளும் உள்ள இடம் வேண்டும் என்று திட்டமிட்டதில் புகளூரைத் தான் தேர்ந்தெடுத்தார் நமது முதல்வர்.

"1981-ல் இடம் கிடைத்தது. 1982ல் கட்டட வேலைகள் தொடக்கம் ஆகின. 3 ஆண்டுக்குள் முடிந்துள்ளது.

"இந்தத் தொழிற்சாலை குறித்துச் சில கொள்கைகளை நமது முதல்வர் அவர்கள் எங்களிடம் தெரிவித்தார்கள்.

காலம் தாழ்த்தக் கூடாது.

தொழிற்சாலை குறித்து எந்த விதமான புகாரும் வரக்கூடாது.

உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்புத் தர வேண்டும்.

கழிவு நீரினால் கிராம மக்களுக்கு எந்த விதமான கெடுதலும் வரக்கூடாது.

"இந்த ஆண்டு 70 ஆயிரம் டன் செய்தித் தாள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அடுத்த வருடம் 90 ஆயிரம் டன் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

"இந்தத் தொழிற்சாலை உலகத்திலேயே சிறந்த தொழிற்சாலையாக உருவாவதற்கு நாம் உறுதி எடுப்போம்".



சிறுவர் சிறுமியர்க்கு நோட்டுப் புத்தகங்கள்

தலைமை ஏற்ற மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு க. இராசாராம், தமது உரையில் குறிப்பிட்டார்:

"இந்தியா முழுவதற்கும் ஓராண்டுக்கு 2½ இலட்சம் டன் செய்தித் தாள் காகிதம் தேவைப்படுகிறது. இந்த ஆலை மட்டுமே 50 ஆயிரம் டன் காகிதத்தை உருவாக்க முடியும்.

"பெரு, மெக்சிகோ, அர்ஜென்டைனா ஆகிய 3 நாடுகளில் தான் இத்தகைய ஆலைகள் உள்ளன. அவை எல்லாம் 60 சதவிகிதக் கரும்புச் சக்கையைத் தான் பயன்படுத்துகின்றன. ஆனால் இந்தத் தொழிற்சாலை 80 சதவிகிதம் கரும்புச் சக்கையைப் பயன்படுத்துகிறது. எந்த நாட்டிலும் இப்படி ஒரு காகித ஆலை கிடையாது.

"தனியார் பலர் வந்து, இப்படிப் பட்ட ஆலையை உருவாக்க வேண்டும், எங்கே இருக்கிறது இடம் என்று விசாரிக்கின்றனர். உத்தரப்பிரதேசம், பஞ்சாப், மற்ற மாநிலத்தவர் எல்லாரும் இதே போன்ற ஆலையை அமைக்க விரும்புவதாகச் தெரிவிக்கின்றனர்".

அடுத்து, மெக்சிகோ நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி மூர் பேசும் போது தெரிவித்ததாவது:

"எனது 30 ஆண்டுக் கால அனுபவத்தில் இது போன்ற ஓர் ஆலையை நான் கண்டது கிடையாது. இந்த ஆலைக்கான தொழில் நுட்பத்தை எங்கள் நாடு கண்டு பிடித்திருந்தபோதிலும், கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி, இந்தக் காகித ஆலை வெற்றிகரமாகச் செயல்படுகிறது. இது போன்ற ஆலை இந்தியாவில் வேறு எங்கும்



இல்லை. தமிழக அரசின் ஒத்துழைப்பினால்தான் இந்த ஆலை உருவாகியுள்ளது. இதற்காக நான் பாராட்டுகிறேன். இந்தியாவில் உள்ள தொழில் நுட்பத் திறமைக்குக் கிடைத்த வெற்றியாகும் இந்த ஆலை"

சட்டமன்ற உறுப்பினர் திரு வடிவேலு தமது உரையில் தெரிவித்தார்:

''முற்காலத்தில் இந்தப் பகுதியில் சேர மன்னன் குமரிமலை என்ற ஆலயத்தை உருவாக்கித் தந்தான் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இன்று செய்தித்தாள் ஆலையை இந்தப் பகுதியில் உருவாக்கித் தந்திருக்கிறார் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள். மூன்றே ஆண்டுகளில் இத்தகைய மாபெரும் தொழிற்சாலையை யாரும் உருவாக்கியதாக வரலாறு கிடையாது. இந்த ஆலையில் தயாராகும் காகிதத்தைக் கொண்டு அச்சிடப்படும் புத்தகங்களைக் படித்துச் சிறுவர் சிறுமியர் தமது வாழ்வில் முன்னேற்றம் காண வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு முருகையன் தெரிவித்தார்:

''வீணாகப் போகும் சக்கையைக் கொண்டு காகிதம் செய்ய முடியும் என நிரூபித்து, பலரது வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்கும் முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். இதைப் போலவே பல துறைகளிலும் நன் முயற்சி எடுக்கப்பட வேண்டும். இந்த ஆலை லாபகரமாகச் செயல்பட வேண்டும்''.

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''தமிழ்நாட்டு மக்களின் நலனைக் கருதிக் காரியங்களை ஆற்றுபவர் நமது முதல்வர் அவர்கள்!

இந்த ஆலை, தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் பெற்று மேலும் மேலும் வளர வேண்டும் என வாழ்த்துகிறேன்''.

நாடாளுமன்ற உதவி சபாநாயகர் திரு தம்பித்துரை தமது உரையில் தெரிவித்ததாவது:

''தமிழகத்திற்கு மட்டுமல்ல- இந்தியாவுக்கே இந்த ஆலையை



அர்ப்பணித்துள்ளார் தமிழக முதல்வர்.

''ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம் என்றார் பாரதியார். அதன்படி இந்தக் காகித ஆலையை அமைத்துள்ளார் முதல்வர்.

''கல்வியை இந்தப் பகுதியில் பரப்ப, விவசாயிகள் பயன் அடைய இந்த ஆலை உதவும்.

''இது போன்ற தொழிற்சாலை தமிழகத்தில் மேலும் மேலும் அமைய இது வழி வகுக்கும்.''

மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர் திரு சௌந்தரராஜன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவுகளை எல்லாம் நிறைவேற்றி வருகிறார் நமது முதல்வர்

''ஜப்பான் நாடு எப்படி முன்னேறியது என்று கேட்டால், அங்கே எந்தப் பொருளையும் தேவையில்லை என்று அவர்கள் தூக்கி எறிவது கிடையாது. அதைப் போலத்தான் நாமும் இப்போது செயல்படுகின்றோம். வெறும் எரி பொருளாகப் பயன்படுத்தி வந்த கரும்புச் சக்கையைக் கொண்டு, காகிதம் உருவாக்குகிறோம். நமது காகிதத்தை மேல் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் காலமும் வரலாம்''.

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு அ. அருணாசலம் அவர்கள் தமது உரையில் தெரிவித்தாவது:

''வரலாற்றுப் புகழ் மிக்க சத்துணவுத் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருச்சியில்தான் தொடங்கினார்கள். இப்போது மாபெரும் காகிதத் தொழிற்சாலையைத் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த புகளூரில் தொடங்கி, திருச்சி மாவட்டத்திற்குப் புகழ் தேடித் தந்திருக்கிறார்கள்''.

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு ந. நல்லுசாமி அவர்கள் குறிப்பிட்டார்:

''புகளூர் வந்தது, அது புகழூர் ஆனது என்று சொல்லும் வகை




(47ஆம் பக்கம் பார்க்க)



# தமிழ்நாட்டில் குடும்பநலத் திட்டச் சாதனை

## பிறப்புகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைவு



குடும்பநலத் திட்டத்தை நிறைவேற்றுவதில் 1956முதல் தமிழ்நாடு தீவிரமாக ஈடுபட்டு முன்னணியில் இருந்து வருகிறது. 1984-85ல் கருத்தடைமுறைகளைப் பின்பற்றுவதில் முதலிடம் பெற்று ரூ.2½ கோடி முதல் பரிசு பெற்றது. தொடர்ந்து 1985-86ஆம் **ஆண்டிலும் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது.**

குடும்பநலத் திட்டப் பணிகளை சீரிய முறையில் நிறைவேற்றியதால் தமிழ்நாட்டில் பிறப்புகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்துள்ளது. 1976ல் தமிழ்நாட்டில் 10,27,263 குழந்தைகள் பிறந்தன. 1985ல் அது 9,20,877 ஆகக் குறைந்துள்ளது.

குடும்பநலத் திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை 61,14,439 பிறப்புகள் கருத்தடை முறைகளைப் பயன்படுத்தியதால் தவிர்க்கப்பட்டுள்ளன.

1985-86ஆம் ஆண்டில் மட்டும் 5,50,292 பிறப்புகள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய சாதனைகளால் தமிழ்நாட்டைப் பாராட்டி மத்திய அரசு இந்த ஆண்டும் பரிசு வழங்கவிருக்கிறது.

**குடும்பநலத் திட்டத்தைச் செயலாக்கியதால் தமிழ்நாட்டில் பிறப்புகளின் எண்ணிக்கை குறைந்துள்ள விவரம்**

| ஆண்டு | சமன்படுத்தப்பட்ட குடும்பநல அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை | நடப்பு ஆண்டில் தவிர்க்கப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை | நடப்பு ஆண்டு வரை தவிர்க்கப்பட்ட பிறப்புகளின் மொத்த எண்ணிக்கை | நடப்பு ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1975—76 | 2,85,909 | 2,99,066 | 20,26,893 | 10,11,097 |
| 1976—77 | 5,85,403 | 3,27,233 | 23,54,126 | 10,27,263 |
| 1977—78 | 1,24,740 | 4,11,091 | 27,65,217 | 9,77,564 |
| 1978—79 | 2,35,664 | 3,90,671 | 31,55,888 | 9,56,416 |
| 1979—80 | 1,72,510 | 3,99,237 | 35,55,125 | 9,75,848 |
| 1980—81 | 1,54,042 | 2,90,947 | 39,46,072 | 9,79,968 |
| 1981—82 | 2,03,954 | 3,83,010 | 43,29,082 | 9,21,563 |
| 1982—83 | 2,81,438 | 3,73,434 | 47,02,516 | 9,04,670 |
| 1983—84 | 5,20,382 | 4,02,680 | 51,05,196 | 9,40,249 |
| 1984—85 | 5,60,994 | 4,58,751 | 55,63,947 | 9,20,877 |
| 1985—86 | 5,93,196 | 5,50,292 | 61,14,239 | — |

# சத்துணவால் சமுதாய மலர்ச்சி

**மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர் திரு. சௌந்தரராஜன்**

ஒரு சமுதாயம் மறுமலர்ச்சி அடைய வேண்டுமென்றால், அனைவருக்கும் இருக்க இடம், உடுக்க உடை, உண்ண உணவு இவை கிடைத்திட வேண்டும். பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றார். இதற்கெலாம் வடிவம் காண எத்தனையோ பேர் முயன்றார்கள். சாதியற்ற சமுதாயம் காண வேண்டும் என்று தந்தை பெரியார் அவர்களும் சமய பேதமற்ற சமுதாயம் காண வேண்டும் என்று வடலூர் வள்ளலார் அவர்களும், ஏழை பணக்காரன் என்ற பேதத்தைப் போக்க வேண்டும் என்று பண்டித ஜவகர்லால் நேரு அவர்களும் எடுத்துக் கொண்ட முயற்சிகள் முழு அளவில் நிறைவு பெறாத நிலையில்தான் நாம் இருந்து வருகின்றோம். எனவே எல்லாவிதமான நிலைகளும் நம்முடைய நாடு பெற வேண்டுமானால், அதனுடைய அஸ்திவாரமான பசியைப் போக்கிட வேண்டும். அறியாமையை அகற்றிட வேண்டும் என்று இரு பெரும் தத்துவங்களுக்கு உயிரூட்டம் தர எண்ணினார் நமது முதல்வர் புரட்சித்தலைவர்.

யாருக்கும் தோன்றாத இந்தச் சிந்தனை அவருடைய உள்ளத்தில் எழுந்ததற்கு என்ன காரணம்? பட்டினியின் கொடுமையினைச் சிறு வயதில் தானே அனுபவித்தவர் நமது முதலமைச்சர். படிக்க வேண்டிய வயதில் நடிக்கப் போன வறுமை நிலை—தான் பட்ட துயர நிலை—வேறு எந்தக் குழந்தைக்கும் ஏற்படக் கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தின் வடிவம்தான் தற்போதுள்ள முதலமைச்சர் குழந்தைகள் முத்தான சத்துணவுத் திட்டம். பசி மற்றும் பட்டினியால் வாடும் ஏழைக் குழந்தைகளுக்கு ஒரு வேளையாகிலும் வயிறார உணவு அளிப்பது — அதுவும் சத்துணவு அளிப்பது நமது அரசின் தலையாய கடமை என்று வார்த்தை அளவில் மட்டும் கூறி நிறுத்தாமல், செயல் அளவில் செய்து காட்டியவர் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். ஒரு தலைவன் எப்படி இருக்க வேண்டும்? தாயாய், தந்தையாய், ஆசிரியனாய், உற்ற தோழனாய், அண்ணனாய், பிறர் துயரைத் தன் துயராய் எண்ணுகிற மனநிலை பெற்றவனாய் இருத்தல் வேண்டும். இந்த இலக்கணத்தின் இயக்க சக்தியின் வடிவமே நமது முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள்.

1982ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் நாள் நண்பகல் மணி 12. அடித்ததும் 10,747



குழந்தைகள் நல மையங்களிலும் 32,470 ஆரம்பப் பள்ளிகளிலும் அரசுச் செலவில் தயாரிக்கப்பட்டு, சுடச்சுட உணவு பரிமாற ஏற்பாடு செய்யப்பட்டது. இத்திட்டத்தை அன்று திருச்சியிலுள்ள சமயபுரத்தில் துவக்கி வைத்தார் நமது மாபெருந்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், காரணம், ஆயிரம் கண்கொண்ட அன்னை தரவேண்டிய உணவை அவர்களுக்குத் தந்தவர் தமிழக முதல்வர் அவர்கள். பின்பு 15.9.82 முதல்,நகர்ப் பகுதிகளுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்பட்டது.

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பதற்கிணங்க அவ்வப்போது உடல் பரிசோதனை செய்து தங்களது குறிப்புகளைக் குழந்தைகளுக்கு அளிக்கப்பட்ட உடல் நல அட்டையில் பதிவு செய்து வருகிறார்கள். இதனால் குழந்தைகளின் உடல் வளர்ச்சி மற்றும் தேக ஆரோக்கியத்தை அறிய முடிகிறது. உறுதியான பற்கள், நல்லதோர் உடல் நலத்திற்குத் தேவை. எனவே கிராமப் புறங்களில் குழந்தைகள் பற்பொடி, இலவசமாகப் பெறுகின்றனர். இத் திட்டத்தின் மூலம் 15.1.83 முதல் ஓய்வூதியம் பெறும் சுமார் 1.99 இலட்சம் முதியோர்கள் பயன்பெறுகிறார்கள். இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவத்தினர் அல்லது அவர்களது விதவைகளுக்கும் 1.1.84 முதல் இத்திட்டம் மூலம் உணவளிக்கப்பட்டு வருகிறது. மக்கள் ஆதரவு பெற்ற இந்தச் சமுதாயத் திட்டம் 15.9.84 முதல்,பள்ளியில் பயிலும் 10 வயது முதல் 15 வயதுக்குட்பட்ட மாணவர்களும் பயன் பெற வழி வகை செய்யப்பட்டது.





அரசு இத்திட்டத்தைப் பராமரிக்க அமைப்பாளர்களை நியமித்தது. தற்போது சுமார் 66,504 சத்துணவு மையங்களின் மூலம் 88,88 இலட்சம் நபர்கள் பயன்பெறுகிறார்கள். ஆண்டொன்றுக்கு 165 கோடி ரூபாய் செலவாகிறது.

இதன் மூலம் இரண்டு இலட்சம் பேர் வேலை வாய்ப்பினைப் பெற்று உள்ளனர். இதனால் விதவைகள், ஆதரவற்றவர்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட ஏழைப் பெண்கள் பயன்பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு குழந்தைகளுக்கும் அந்தந்த வயதுக்கேற்றபடி எவ்வளவு அரிசி, பருப்பு, எண்ணெய், காய்கறி, ஒரு நாளைக்குத் தேவை என்பதை விஞ்ஞான ரீதியில் ஆராய்ச்சி செய்து அதன்படி அளிக்கப்பட்டு வருவதால் வருங்கால இளைஞர் சமுதாயம் உடல் வளமுடன் வாழ இத்திட்டம் வெகுவாக உதவுகிறது.

இத்திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பு வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை வறுமையின் காரணமாகப் பள்ளிகளில் சேர்க்காமல் சிறு வயதிலேயே வேலைக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். படித்துக் கொண்டிருந்த சிலரும் வறுமைக் கொடுமையினால் தமது படிப்பை இடையில் நிறுத்திவிடும் நிலைமை உருவாகிக் கொண்டிருந்தது. ஆனால் நமது மாபெரும் முதலமைச்சரின் திட்டம் துவங்கப்பட்ட நாளிலிருந்து, பள்ளியில் சேரும் மாணவர்கள் எண்ணிக்கை கூடுதலானது மட்டுமல்லாது, 'பள்ளிக்கு வராமையும்' இடையில் ''பள்ளியை விட்டு விலகுவதும்' அறவே தவிர்க்கப்பட்டு உள்ளது.

இத்திட்டம் உணவு அளிக்கும் திட்டமாக மட்டும் மாறி விடக்கூடாது என்று கருதிய நமது முதல்வர், சிறு பிராயம் முதல் கல்வி பயிலும் ஊக்கத்தை அளிக்க வேண்டும் என்ற உயர் நோக்குடன் 'முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுக் கூடம்' என்றிருந்த பெயர்ப் பலகையை 'முதலமைச்சர் கல்வி சத்துணவுக் கூடம்' என்று மாற்றி அமைக்க ஆணை பிறப்பித்தார். அதன்படி 'குழந்தைகள் சத்துணவு மையங்களில்' கல்வியும் புகடடப்பட்டு வருகிறது. சத்துணவு அமைப்பாளர்கள், சத்துணவு வழங்கும் பொறுப்போடு ''திருக்குறள்'' கற்பிக்கும் பொறுப்பினையும் துவக்கப் பள்ளி மையங்களில் ஏற்றுள்ளனர்.

இந்தத் திட்டத்தினால் வயிறு நிரம்புவது மட்டுமல்லாமல் கல்விக் கண் திறக்கப் படுகிறது. இதற்கு மேல் மற்றொரு மிகப் பெரிய சமுதாயப் புரட்சி ஏற்படுகிறது. 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்ற பாரதியின் எண்ணம் — 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்' என்ற தத்துவம் நிலைக்க வழியாகிறது. இரண்டு வயது முதல் ஐந்து வயது வரை குழந்தைகள் சத்துணவுக் கூடத்தில உண்ணும்போது, ஜேம்சும், ராமனும், இப்ராகிமும், சதாசிவமும் ஒன்றாக அமர்ந்து உண்ணுகிறார்கள். காலப் போக்கில் சாதி மத மாச்சரியங்கள் மறையும் ஒரு நிலை ஏற்படும். பசுமரத்தாணி போல், வளருகின்ற குழந்தைகளின் மனங்களிலே இந்த சாதி பாகுபாடற்ற நிலை உருவாக, சத்துணவுத் திட்டம் ஒரு மிகப் பெரிய திறவுகோலாக இருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. எதிர்காலம் வளம் மிக்கதாக மட்டுமல்லாமல் நம நாட்டில் உறவு மிக்கதாகவும் மலரும் என்பதை உணரலாம். ஒளிபடைத்த கண் கொண்டவராய்— உறுதி கொண்ட நெஞ்சினராய்— எதிர்காலச் சமுதாயம் உருவாகும்.

இம்மாபெரும் திட்டத்தை ஒரு குறையும் இல்லாமல் செம்மையாக நடத்தி வர வேண்டுமென நமது முதலமைச்சர் விரும்புகிறார். இத்திட்டத்தில் அக்கறை கொண்ட நமது முதல்வர் திடீரென மதுரையில் சத்துணவுக் கூடத்தைச் சோதனையிட்டு, நல்ல அரிசி வழங்க உத்தரவிட்டுள்ளார்.

கிராமப்புறங்களில் தேவையான இடங்களில் நவீன முறையின்படி சத்துணவுக் கூடங்கள் கட்டி வருகிறோம். ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள சத்துணவுக் கூடங்கள் காலப் போக்கில் பராமரிக்கப் பணம் இல்லாததால் சீரழிந்து போகின்றன என்று கேள்விப்பட்டவுடன் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அம்மாதிரியான கூடங்களை உடனடியாகச்

செம்மைப்படுத்த வேண்டி 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்ய அனுமதி அளித்துள்ளார்கள். இது தவிர, கடந்த பொங்கல் விழாவிற்கு முன்பு, பல சத்துணவுக் கூடங்களுக்கு நல்லெண்ணம் படைத்தவர்கள் இலவசமாக வெள்ளை அடித்துத் தந்துள்ளார்கள்.

மாண்புமிகு முதல்வர், சத்துணவுக் கூடங்களுக்குப் புதிய பாத்திரங்கள் வாங்க ஒரு கோடி ரூபாய் வழங்கியுள்ளார்.

முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தில் பயன் பெறும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகம் 13.6.85 முதல் வழங்க ஏற்பாடு செய்து, வழங்கப்பட்டு வருகிறது. சுமார் 60 லட்சம் மாணவ, மாணவிகள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுகின்றனர். இந்த மாணவ, மாணவிகளுக்கு இலவசமாகச் சீருடை வழங்க வேண்டுமென நமது முதலமைச்சர் விருப்பம் தெரிவித்ததையொட்டி பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான 15.9.85 முதல் இலவசச் சீருடை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதனால் கிராமப் புறங்களில் உள்ள உடை தைப்போருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என இங்கு நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

தரமான காய்கறிகளை மையங்களுக்கு விநியோகம் செய்ய காய்கறி உற்பத்தி செய்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஏற்பாடு செய்திருக்கிறோம். இதனால் காய்கறி உற்பத்தியாளர்கள் பயன் பெறுகிறார்கள்.

கல்வி, உணவு, உறை, தேக ஆரோக்கியம் ஆகியவற்றை மேம்படுத்த வேண்டுமென்று நம் முதலமைச்சர் விரும்பியபடி நம் மாநிலத்தில் 1.7.82 அன்று ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் தொடர்ந்து நன்முறையில் செயற்பட்டு வருகிறது. பிற மாநிலங்களில் இத்திட்டம் கைவிடப்பட்டிருப்பினும் வருங்காலச் சந்ததியினருக்கு நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் அளிக்கும் நல்ல இத்திட்டம் எவ்வித இடையூறு வந்தாலும் அவைகளைக் களைந்து நல்ல முறையில் நடத்தித் தர நாம் எல்லோரும் கடமைப்பட்டு இருக்கிறோம். இத்திட்டத்தினை மக்கள் ஒவ்வொருவரும் தமது சொந்தத் திட்டமாகக் கருதி, தங்களது முழு ஒத்துழைப்பையும் மனப்பூர்வமாக நல்கினால் இத்திட்டம் உலகத்திற்கே எடுத்துக்காட்டாக விளங்கும் என்று நான் திட்டவட்டமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா வழியைப் பின்பற்றும் நமது புரட்சித் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களது சத்துணவுத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் சமுதாய மறுமலர்ச்சியை உருவாக்கி வருவது யாவரும் அறிந்ததே. கிராம ராஜ்யம் உருவாக வேண்டும் என்ற உலகப் பெரியார் காந்தியின் எண்ணத்தை நமது முதல்வர் புரட்சித் தலைவர் உருவாக்கி வருகிறார். அவரது 'திட்டத்தினை நல்ல முறையில் பாதுகாத்திட நம் முழுச் சேவையையும் நல்க நாம் தயாராக உள்ளோம் என நாம் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

வணக்கம்!

(18-5-86 அன்று சென்னை வானொலியில் ஆற்றிய உரை).










# சுற்றுப்புறத் தூய்மையைக் காப்போம்

பல கோடி ஆண்டுகளாக இயற்கையில் சில மாற்றங்கள் ஏற்பட்டு, மரங்களும், பறவைகளும், மிருகங்களும், மற்றும் பல உயிரினங்களும் தோன்றின. இவ்வுயிரினங்கள் இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ இயற்கை வழி வகைகள் செய்துள்ளது. நாம் வசிக்கவும் விவசாயம் செய்யவும் வளமான நிலம், பருகச் சுத்தமான நீர், சுவாசிக்க மாசற்ற காற்று, உண்ணக் காய் கனிகள் இப்படி எத்தனையோ வசதிகள் இயற்கையின் படைப்பில்! மனிதன் ஒரு இழை மட்டுமே!

மற்ற உயிரினங்களும் இயற்கையின் அழகையும் வளத்தையும் அதிகமாக்குகின்றன. இன்னும் சொல்ல வேண்டுமென்றால் உலகில் உள்ள எல்லா உயிரினங்களும் ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பிணைப்பினால் தான் ஒவ்வொரு உயிரினமும் வாழ, வளர மற்ற உயிரினங்களின் உதவி தேவைப்படுகிறது. இந்த விதிக்கு மனிதன் விலக்கல்ல. இதைப் புரிந்து கொள்ளாமல் மனிதன் கடந்த சில நூற்றாண்டுகளாகச் செய்து வரும் காரியங்களினால் இன்று இயற்கையையே அழித்துவிடும் ஆபத்து நம்மை எதிர்நோக்கியுள்ளது. முக்கியமாக, தொழில் வளர்ச்சியின் பெயரால் தான் இந்த ஆபத்து அதிகமாகத் தோன்றியது.

மனிதன் வளர்ச்சி பெறப்பெற விஞ்ஞானமும் வளர்ந்தது. புதிய கண்டுபிடிப்புகளால் நமக்குப் பெரும் நன்மை கிடைத்ததை யாரும் மறுக்க முடியாது. ஆனால் சிறுகச் சிறுக இது மனிதனின் எதிர்காலத்துக்கு எப்படிக் கேடு விளைவித்தது என்பதை நாம் உணரத் தாமதமானதுதான் வருந்தத் தக்கது.

உதாரணமாக, காகிதத்தை எடுத்துக் கொள்வோம். இன்றைய சமுதாயத்தில் காகிதம் இல்லாத நிலையை நம்மால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. ஆனால் காகிதம் தயாரிக்கப் பல லட்சம் ஏக்கராக்களில் இருந்து, பெரும் மரங்களை வெட்டவேண்டியிருந்தது. இன்று கூட மரங்களையோ, மூங்கிலையோ பயன்படுத்தாமல் காகிதம் தயாரிக்கும் முறை அதிகமாகப் பயன்படுத்தப்படவில்லை. கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயாரிப்பது வெகு சமீப காலமாக எடுக்கப்பட்ட ஒரு முயற்சி. செயற்கை முறையில் துணி தயாரிப்பதிலும் ( Raoyn Viscose ), மரங்களை அழிக்க வேண்டியிருக்கிறது. வளர்ந்து வரும் ஜனத்தொகைக்கு உணவுப் பொருட்கள் தேவை. அதற்கு விவசாய உற்பத்தியைப் பெருக்குவது மிக அவசியம். அதனால் காடுகளை அழித்துப் பயிர் செய்யத்தொடங்கினோம். மலைப் பகுதியில் கூட தேயிலை, உருளைக்கிழங்கு, காய்கறிகள், ஆப்பிள் இப்படிப் பல பயிர்கள் வந்தன. ஆனால் நூற்றாண்டுகளாக இருந்த மரங்கள் மறைந்தன.

மனிதன் வாழக் கட்டடம் தேவை. முதலில் அழகான மரங்

களுக்கும் செடிகளுக்கும் நடுவே கட்டடம் வந்தது. ஆனால் நாளடைவில் நகர்ப்புறங்களில் கட்டடங்களே அதிகமாகக் காணப்படும் நிலை வந்தது. நகரங்களை, காரைக் கட்டடக் காடு (Concrete Jungle ) என்றால் மிகையாகாது. அதனால் தற்போது கட்டடங்களின் நடுவே மரம் நடும் முயற்சி தேவையாக உள்ளது. இது வினோதமாக இல்லையா? கிராமப்புறத்தையோ மலைப்பகுதியையோ தேடிச் சென்றால், அங்குக் கூட மரங்களில்லையே!



இயற்கை, மனிதனுக்கு அளித்த பல பரிசுகளில் கனி வளமும் ஒன்று. பேராசையால்மனிதன் கனிம வளத்தை அதிக அளவில் எடுத்து வருவதால் தற்போது சில கனிம வகைகள் கிடைக்காமல் போய்விட்டன. கனிமங்களைத் தோண்டி எடுத்த இடங்களில் மண்ணும் பாறையும் மட்டுமே மிச்சம். இதில் ஒரு செடி கூட வளர முடியாத இடங்களும் உண்டு.

பெட்ரோலியப் பொருள்களை எடுத்துக் கொள்வோம். டீசல் எண்ணெய், பெட்ரோல், சமையல் வாயு போன்றவை தேவைதான். ஆனால் மிக அதிகமான அளவில் பூமியிலிருந்து பெட்ரோலியப் பொருள்களை எடுத்துப் பயன்படுத்தி விட்டபடியால் இனி ஒரு நூற்றாண்டுக்கு மேல் இப்பொருள்கள் அறவே கிடைக்காமல் போய்விடும் என்று கூறப்படுகிறது. நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறதல்லவா?

நீர் வளத்தைப் பற்றி ஆராய்வோம். மனிதன், குடிக்க, குளிக்க, விவசாயம் செய்ய, தொழில் செய்ய, நீர் தேவைப்படுகிறது. ஆனால் அந்த வளத்தையும் வரம்பின்றிப் பயன்படுத்தியதால் பல நீர் நிலைகள் வறண்டுவிட்டன. நிலத்தடி நீர் கூடக் கிடைக்காத பகுதிகள் தோன்றியுள்ளன. அத்துடன் தொழிற்சாலைகளில் கழிவு நீர்களாலும், நகர்ப்புறங்களில் உள்ள சாக்கடை மற்றும், கழிவு நீராலும் நதிகள், ஏரிகள், கிணறுகள், ஏன் கடல்கூட மாசுபட்டுள்ளது. பல இடங்களில் நீரைப் பருக முடியாது. சில இடங்களில் நீரைச் சுத்தம் செய்வது கூடக் கடினம். மனிதன் நீரை வீணாக்குவதிலும், மாசுபடுத்துவதிலும் சளைத்ததாகவே தெரியவில்லை. இப்படியே தொடர்ந்தால், விளைவுகள் பயங்கரமாகவே இருக்கும். சோலைகள், பாலை வளங்களாக மாறத் தொடங்கி விட்டன. தாகம் தணிய நீர் கிடைக்காமல் மனிதன் அல்லல்படத் தொடங்கிவிட்டான். இது எங்குபோய் முடியும் என்பதை எண்ணிப் பார்க்கக்கூட நமக்கு நேரம் கிடைக்காதா?



அமைதியைத் தேடும் ஒருவர் கடற்கரை அல்லது மலைவாசத் தலத்துக்குச் சென்று காற்றாட இருக்க விரும்புவார். சுத்தமான காற்று உயிர்வாழ இன்றியமையாதது. ஆனால் நாம் சுவாசிக்கும் காற்றோ ஆயிரக்கணக்கான தொழிற்சாலையிலிருந்து வரும் புகை மற்றும் நச்சுப் பொருள்களால் மாசடைந்து வருகிறது. அனல் மின் நிலையங்கள், மோட்டார் வாகனங்கள், தூசி எல்லாம் காற்றைப் பாழ்படுத்தலாம். இதைச் சுவாசிப்பதால் மனிதனின் உடல் நலம் குன்றுகிறது. இக்காற்றுப்படும் மரங்கள், செடிகள், மிருகங்கள் அழிகின்றன. விபத்தில் ஒருவர் இறந்தால் அதை எல்லோரும் உணருகின்றார்கள். ஆனால் மாசு அடைந்த நீர், காற்றால் பலர் சிறுகச்சிறுக அழிவதை நாம் ஏன் புரிந்துகொள்வதில்லை? போபால் துயரச் சம்பவம் போன்றவை நடக்காமல் பார்த்துக் கொள்வது நம் எல்லோருடைய 'கடமையல்லவா?

விவசாயத்தில் நாம் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளோம். அதிக மகசூல் தரும் பயிர் வகைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இப்பயிர்களுக்கு அதிக அளவில் இரசாயன உரங்களும், பூச்சிக்கொல்லி மருந்துகளும் தேவை. அதிக அளவில் இரசாயன உரங்கள் சேர்ப்பதால் மண்ணின் தரமே மாறி சில ஆண்டுகளுக்கு பிறகு உற்பத்தி குறையும் என்பது விஞ்ஞான ரீதியாகக் கண்டறிந்த உண்மை. பூச்சிக்கொல்லி மருந்துகள் நாம் உண்ணும் தானியங்கள், காய்கறிகள், பழங்களில் கலந்து காணப்படுகின்றன. இதனால் மனிதன் பல வியாதிகளுக்கு ஆளாகின்றான்.

மரங்களின் வேர்கள் மண்ணை இறுக்கமாகப் பிடித்து வைக்கின்றன. ஆனால் மரங்கள் அழிந்த நிலையில் மழைக் காலத்தில் மேல் மண் கரைந்து, பள்ளத்தாக்குகளை அடைகிறது. அங்கு அணைக்கட்டுகள் அல்லது ஏரிகள் இருந்தால் அவைகளில் மண் நிறைந்து பல பிரச்னைகள் தோன்றுகின்றன. இப்படியே மேல் மண் (Top Soil) முழுமையாகக் கரைந்து விட்டால் நம் மலைப்பகுதிகளில் வெறும் பாறை மட்டுமே இருக்கும். பாறையில் பயிர் செய்ய விஞ்ஞானம் இன்றுவரை கற்றுத் தரவில்லை. இப்படி மரங்களை வெட்டினால் மண் மறையும்; மண் மறைந்தால் மரங்கள் மறையும் ( Vicious Circle ) நச்சுச் சூழல் தொடங்கியுள்ளது. இறுதியாக மரங்கள் இல்லாமல் மழை குறையும் நிலையும் உருவாகிறது.



ஒருவருடைய சுவாரசியமான பேச்சையோ, இனிமையான இசையையோ கேட்பது மகிழ்ச்சி தரும் அனுபவம். ஆனால் ஒரு ஒலி பெருக்கியை நம் வீட்டில் வைத்துப் பல மணி நேரம் இதே இசையைத் தந்தால் தலைவலியாக இருக்காதா? ஆம். ஒலி கூட ஓரளவுக்கு மேல் மனிதனின் மன நிலையையும், உடல் நலத்தையும் பெரிதும் பாதிக்கும் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. இதற்கு நாம் என்ன செய்யப் போகிறோம்? பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் உலகில் வாழ்ந்து வந்த சில மிருகங்களும், பறவைகளும் இன்று இல்லை. எந்தக் காரணத்தினால் அவை அழிந்து விட்டன என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. அதேபோன்று சில தாவர இனங்களும் அழிந்துவிட்டன. அவற்றில் விலை மதிக்க முடியாத மூலிகைகள் கூட அடங்கும். இன்றும் நம்மிடையே உள்ள பசு, குதிரை, ஆடு, யானை மற்றவன விலங்குகள் அழியாமல் இருக்க வேண்டாமா? நெல், தென்னை, வாழை போன்ற பயனுள்ள தாவர இனங்கள் நமக்குத் தொடர்ந்து கிடைக்க வேண்டாமா? அப்படியென்றால் நீர், நிலம், காற்றில் உள்ள நச்சுத் தன்மையை அகற்றியே தீர வேண்டும். மரங்களின் வதைகளில் அந்த மரத்தின் வடிவம் எப்படியிருக்க வேண்டும் ,அந்த மரம் என்ன உயரம் வரை வளர வேண்டும், அதன் இலை ,பூ,காய், வேர் எப்படியிருக்க வேண்டும், எத்தனை வருடம் இருக்கவேண்டும் என்பதைப் போன்ற விவரங்கள், தோற்றம் பற்றிய விதிகளில் (Genetic Code) பதிந்து இருக்கின்றன. இது கெடாமல் இருக்கும் வரை எந்த விதையை நட்டாலும் ஒரே மாதிரியான மரம் வளருவதற்கு வாய்ப்புண்டு. ஆனால் இன்று உள்ள சுற்றுப்புறச் சூழ்நிலையினாலும், மாசினாலும் விதைகளிலேயே மாற்றம் வந்து விட்டால் நம் சந்ததியினர் ருசியான பல காய் கனிகளையும், பூக்களையும் பார்க்க முடியாமல் போய்விடுமே! பசுவையும் பாலையும் கூட மறந்துவிட வேண்டிய துரதிருஷ்டம் வரலாமா?



இப்படியே இன்று உள்ள நிலைமையைப் பற்றிக் கூறிக் கொள்வதால், பயனில்லை. கடந்த இருபது ஆண்டுகளாக நாம் நம் தவறை ஓரளவு புரிந்து கொண்டு அதற்கான சில முயற்சிகளையாவது தொடங்கி விட்டோம் என்பது மகிழ்ச்சி தரும் செய்தியாகும். உலகெங்கும் சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்க வேண்டுமென்ற விழிப்புணர்ச்சியும் ஆர்வமும் காணப்படுகிறது. மாசு கட்டுப்பாட்டுக்கான முயற்சிகளும் தொடங்கப்பட்டு விட்டன. இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகளைப் பற்றி சிறிது பார்க்கலாம்.



பல நாடுகளில் மாசுக்கட்டுப்பாட்டுக்குச் சட்டவடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது நீர் நிலைகளுக்கோ, காற்றிற்கோ மாசு உண்டாக்குவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம். அதற்குக் கட்டுப்பட்டுத் தொழிற்சாலைகளில் மாசுத் தடுப்புக்கான ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். இது போதுமானதா என்பதையும் அரசு இலாக்காக்கள் கண்காணிக்கின்றன. மாசைக் கட்டுப்படுத்துவதற்கான ஆராய்ச்சிகளில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. விஞ்ஞான ரீதியாக இதில் மேலும் வளர்ச்சி இருக்கும் என்பதில் ஐயமில்லை.

சுற்றுப்புறத் தூய்மைப் பாதுகாப்பில் மாசுக் கட்டுப்பாடு மட்டும் அடங்கவில்லை, அதிக அளவில் மரங்களை வளர்ப்பது, இருக்கும் மரங்களைப் பாதுகாப்பது, பாலை வனங்கள் விரிவடையாமல் தடுப்பது, காடுகளை உருவாக்குவது, விலங்கினங்கள் அழியாமல் பாதுகாப்பது போன்றவைகளுக்கும் முக்கியமான பங்கு உண்டு. மேலும் இயற்கை வளங்களை மிதமாகப் பயன்படுத்துவதும் அவசியம். உதாரணமாக எரிபொருள்களைக் குறைவாகப் பயன்படுத்த வேண்டும். விறகு, நிலக்கரி, பழுப்பு நிலக்கரி, பெட்ரோலியம், போன்றவை இயற்கையால் மறுபடி உருவாக்க முடியுமா என்பது சந்தேகம். அப்படி உருவாக்குவதென்றாலும் பல லட்சம் ஆண்டுகளுக்குப் பிறகு தான் அதன் பயன் கிடைக்கும்.

அதனால் இப்பொழுதிருந்தே மற்ற சக்திகளைப் பயன்படுத்தித் தெரிந்து கொள்ள வேண்டும். காற்று, சூரிய ஒளி, கடலில்

உள்ள வெப்ப நிலை மாற்றங்கள் போன்ற சக்திகள் தொடர்ந்து கிடைக்கும் வாய்ப்புகள் அதிகம். விஞ்ஞானம் இதில் இன்னும் முன்னேற வேண்டும். அதை விட முக்கியமா மனிதன் தேவைகளைக் குறைத்துக் கொள்ளவும், சிக்கனமாக இருக்க பழகிக் கொள்ள வேண்டும்.

அடுத்த நூறாண்டுகளில் வாழும் மனிதன் நன்கு வாழ்க்கையை அனுபவித்தால் போதும், அதற்குப் பிறகு வரும் சந்ததிகள் எப்படியோ போகட்டும் என்ற ஒரு மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளக்கூடாது. நாமும் வாழ வேண்டும், மற்ற உயிரினங்களையும் வாழ வைக்க வேண்டும். இன்றைய தலைமுறை நன்றாக இருக்க வேண்டும்; அடுத்த பல நூற்றாண்டுகளில் வரும் தலைமுறைகளும் நன்றாக இருக்க வேண்டும், இயற்கை வளங்களைப் பொறுத்தமட்டில் நாம், ஓர் அறங்காப்பாளர் ( Trustee ) மட்டுமே என்ற சுயநலமற்ற கொள்கையை ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டும். இயற்கையைப் பாதுகாப்பதென்பது சட்டம் போட்டுச் சாதிக்கக்கூடிய காரியமல்ல. சட்டம் ஒரு தூண்டுகோலாகத்தான் இருக்க முடியும். சுற்றுப்புறத் தூய்மைப் பாதுகாப்புத் துறையும் அதே போன்று மற்ற துறைகளையும் பொதுமக்களையும், தொழி[illegible]பர்களையும் சிந்திக்க வைக்[illegible] தான் முடியும். ஒவ்வொரு பகுதியிலும் இதற்கென அதிகாரிகள் உட்கார்ந்து கொண்டு கண்காணிப்புச் செய்வது நடைமுறைக்கு ஒத்துவராது. பொது நலன் கருதி எல்லோரும் ஒன்றாகப் பாடுபட்டால் தான் ஒளிமயமான எதிர்காலத்தைக் கற்பனை செய்ய முடியும்.

சுருங்கக் கூறின் நம் கடமைகள் வருமாறு.

அ) ஒவ்வொருவரும் தன் வீட்டையும், சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆ) வீட்டில் மரங்கள் வளர்க்க வேண்டும்; இருக்கும் மரங்களை வெட்டக் கூடாது.

இ) பொதுமக்கள் ஒன்[illegible]க முடிவெடுத்துக் கிராமங்களிலும், நகரங்களிலும் உள்ள தெருக்கள், மற்ற பொது இடங்கள் ஆகியவற்றைச் சுத்தமாக வைக்கப் பழகிக் கொள்ள வேண்டும். பூங்காக்கள் அமைத்து, மரங்கள் வளர்த்து அவற்றை நன்கு பராமரிக்க வேண்டும்.



ஈ) வீட்டிலிருந்து வரும் கழிவுநீர், வீட்டின் உள்ளேயோ, தெருக்களிலோ வழிந்து ஓடக்கூடாது. கழிவுநீர்ச் சாக்கடைகள் (Septic Tanks) போன்றவையால் இதைத் தவிர்க்கவேண்டும்.

உ). தொழிற்சாலைகளை எங்கு வேண்டுமானாலும் அமைக்கலாம் என்ற நிலை மாற வேண்டும். உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் நகரமைப்பு, சென்னைப் பெரு நகர வளர்ச்சிக் குழுமம், மாசுக் கட்டுப்பாடு வாரியம் (Town Planning M.M.D.A. Pollution Control Board) போன்ற அமைப்புகளின் அறிவுரைகளையும், அனுமதியையும் பெற்ற பிறகே தொழிற்சாலைகள் தொடங்கப்பட வேண்டும். பொதுமக்களுக்கும் இடைஞ்சல் விளைவிக்கக் கூடிய - நீர், காற்று மாசுபடக் கூடிய தொழிற்சாலைகளை அனுமதியின்றி ஆரம்பித்தால் சட்டப்படி தண்டனை பெறக்கூடிய ஆபத்தும் உண்டு.

ஊ) மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி அளிக்கும்பொழுது விதிக்கும் நிபந்தனைகளைத் தவறாமல் பின்பற்றினால் நீர், காற்று மாசு படுவதையும், சட்டப்படி குற்றம் செய்வதையும் தவிர்க்கலாம்.

எ) மிருகங்கள், பறவைகள், பாம்புகள் மற்றும் பிற உயிரினங்களை அழிக்கக் கூடாது. மிருகங்களை வேட்டையாடுவது சட்டப்படி குற்றமாகும்.

ஏ) நச்சுப் பொருள்கள், விரைவில்நெருப்புப் பற்றிக் கொள்ளும் பொருள்கள், வெடி மருந்துகள், அமிலங்கள் போன்றவற்றைச் சேமித்து வைக்கும் இடங்கள், ஏற்றிச் செல்லும் லாரிகள், குழாய்கள் போன்றவற்றைப் பராமரிப்பதிலும் கண்காணிப்பதிலும் மிக எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். ஒருவர் கவனக்குறைவாக இருந்தாலும் பலர் அல்லல் படவேண்டி வரலாம். தொழிலாளர்களுக்கு இப்பொருள்கள் பற்றி நல்ல பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

ஐ) இலாபத்தைக் கருதி மாசுக் கட்டுப்பாட்டிலும், ஆபத்தான பொருள்களை (Hazardous Materials) கையாளுவதிலும் தேவையற்ற சிக்கனம் காட்டக்கூடாது.

ஒ) தேவைகளைக் குறைத்துக் கொண்டு வளங்கள் இன்னும் பல்லாயிரம் ஆண்டு கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டும். கார், லாரிகள், பஸ், மோட்டார் சைக்கிள் போன்றவைகளை நன்கு பராமரித்தல் மிக முக்கியம். இதனால் காற்று மாசுப்படுவது குறையும்.

ஓ) சூரிய ஒளி, காற்று போன்றவற்றிலிருந்து பெறக்கூடிய புதிய சக்திகளை (New sources of energy) அதிகமாகப் பயன்படுத்த வேண்டும். பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், நிலக்கரி ஆகியவற்றைப் பயன்படுத்துவதில் சிக்கனம் தேவை.

ஔ) அணைக்கட்டுகள், மின்சார உற்பத்தித் திட்டங்கள், சாலைகள், சுற்றுலா மையங்கள், போன்றவற்றைத் துவக்கும் முன் சுற்றுப்புறத் தூய்மை பாதிக்கப்படுமா, திட்டத்தின் நீண்டகால விளைவுகள் என்ன என்பதை எல்லாம் நன்கு ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும்.

பொது மக்களிடையே, குறிப்பாக மாணவர்கள் மத்தியில், விஞ்ஞான முறையில் சிந்திக்கும் ஆற்றலை ஊக்குவித்து வளர்க்க வேண்டும். இதனால் அடுத்த சந்ததியினர் பிரச்னைகளை நன்கு புரிந்து கொண்டு, ஆக்கப் பூர்வமாக அணுகுவார்கள்.

மாசற்ற ஓர் உலகை உருவாக்குவது எல்லோருடைய கூட்டு முயற்சியாகும். என்பதைத் திரும்பத் திரும்ப எடுத்துக்கூறி மக்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

(சுற்றுப்புறத் தூய்மைக்கட்டுப்பாட்டுத் துறையிலிருந்து . . .)





# ஆலய மேம்பாட்டுத் திட்டங்கள்

நம் தமிழ் நாட்டில் பழங் காலத்தில் கோயில்களே கல்வி நிலையங்களாக விளங்கின. கலை வளர்க்கும் கழகங்களாகத் திகழ்ந்தன. ஏழை எளியவர்களை உணவளித்துப் பாதுகாக்கும் அறச்சாலைகளாக அமைந்திருந்தன. மருத்துவ மனைகளாகப் பணி புரிந்தன. தொழில் தரும் நிறுவனங்களாகத் தொண்டாற்றின. பொது மக்களுக்குப் பொருள் கொடுத்தும் வாங்கியும் உதவி புரியும் நிதி நிலையங்களாக இயங்கின.

இவ்வாறு நம் தமிழகத்தில் சமய இயல், சமுதாய இயல், கலையியல், கல்வியியல், பண்பாட்டியல், பொருளியல், நாகரிக இயல் முதலிய பல்வேறு துறைகளிலும் தொடர்புகொண்டு மக்கட் சமுதாயத்திற்கு நலன்கள் பல செய்து வந்த திருக்கோயில்கள் ''சமுதாய நல நிலையங்கள்'' ஆகத் திகழ்ந்த வரலாற்றை நமக்கு இலக்கியங்கள் படம் பிடித்துக் காட்டியுள்ளன.

இத்தகைய சமுதாய நல நிலையங்களாகிய தமிழகத் திருக்கோயில்களின் நிர்வாகத்தினைக் கண்காணிக்கும் பொறுப்பைத் தமிழக அரசே ஏற்று சிறப்பாக நடத்தி வருகின்றது. கடந்த ஏழெட்டு ஆண்டுக் காலமாகத் தேவையான பல சட்டத் திருத்தங்கள் மூலமாகவும், ஆணைகள் மூலமாகவும் நிருவாகச் சீர்திருத்தங்கள் பலவற்றை உண்டாக்கி, ஆன்மீகத் துறையின் பொற்காலம் இக்காலமே என்று ஆன்றோர்கள் போற்றுமாறு அறநிலையத் துறையின் நிர்வாகம் சீரும் சிறப்புமாக நடை பெற்று வருகிறது.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின் கீழ் 34,340 சமய நிறுவனங்கள் தற்போது உள்ளன. இதில் திருமடங்கள் 56ம் சேர்ந்து அடங்கும். இவற்றின் ஆண்டு வருமானம் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டன. 186 நிறுவனங்கள், ஆண்டு வருமானம் ரூ. 10,000-க்கு மேற்பட்டன 1612 நிறுவனங்கள், ஆண்டு வருமானம் ரூ.10,000— க்குக் கீழ்ப்பட்டன 32542 நிறுவனங்கள், இந்நிறுவனங்கள் அனைத்திலிருந்தும் பெறப்படும் ஆண்டு வருமானம் சுமார் 22.88 கோடி ரூபாய்கள். (ரூபாய் இருபத்திரண்டு கோடியே எண்பத்தெட்டு லட்சங்கள் ஆகும்)

ரூபாய் பத்தாயிரத்திற்குக் குறைவான ஆண்டு வருமானம் உடையனவாய் விளங்கும் ஆலயங்களில் சில ஒரு வேளை பூசை செய்வதற்குக் கூட வழியில்லாமல் இருக்கும் சிறுமை நிலையைப் போக்க அறநிலையத்துறை கொண்டு வந்து நிறைவேற்றி நடத்திக் கொண்டிருக்கும் ஒப்பற்ற திட்டமே ஆலய மேம்பாட்டுத் திட்டம் எனப்படும் எழுச்சி மிகு ரூபாய் ஏழு கோடித் திட்டமாகும்.

வருவாய் அற்ற ஆலயங்களின் வழிபாட்டிற்கென வைக்கப்பட்ட ஐந்து கோடி ரூபாய் வைப்பு நிதி, கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணிக்கென வைக்கப்பட்ட ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதி, ஆலயப் பணியாளர் மருத்துவம் மற்றும் அவர்தம் பிள்ளைகள் கல்வி நிதிக்காக அமைக்கப்பட்ட ஒரு கோடி

**க. சுந்தரமூர்த்தி, இ.ஆ.ப.,**
**ஆணையாளர்,**
**இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை,**
**தமிழ்நாடு அரசு.**



ரூபாய் வைப்பு நிதி ஆகிய இம் மூன்று திட்டங்களுமே, ஒருசேர ஆலய மேம்பாட்டுத் திட்டம் அல்லது ஏழு கோடி ரூபாய் வைப்பு நிதித் திட்டமென அழைக்கப்படுகிறது. ஆன்மீகத் தலைவர்கள், ஆன்றோர்களால் பெரிதும் வரவேற்றுப் பாராட்டப்பட்ட இத்திட்டம் 15.8.1984 ஆம் நாளன்று மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் திருச்சி சமயபுரத்தில் தொடங்கி வைக்கப் பெற்றது. ஆலயங்களில் விளக்கேற்றி வைக்க, நாட்டிற்குச் சுதந்திர விளக்கு ஏற்றப்பட்ட நல்ல நாளைத் தேர்ந்தெடுத்தது மிகப் பொருத்தம்தானே!

ஆலயங்களின் உபரித் தொகை ரூ. 4½ கோடியிலிருந்து கடந்த ஏழெட்டு ஆண்டுகளில் 28 கோடிகளாக உயர்த்தப்பட்டுள்ளது. அவ்வாறு உயர்த்தப்பட்ட 28 கோடி ரூபாய்களில் ஏழு கோடி ரூபாய்கள் முப்பெரும் திட்டங்களுக்காக வங்கிகளில் வைப்புத் தொகையாக வைக்கப் பெற்றுள்ளன. அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி ஆலயம் மட்டும் இம் மூன்று திட்டங்களுக்காக இரண்டரைக் கோடி ரூபாயை வைப்பு நிதியாக வழங்கியுள்ளது. எஞ்சிய நாலரைக் கோடி ரூபாய்களை, இலட்ச ரூபாய்களுக்கு மேலே ஆண்டு வருமானம் பெற்று விளங்கும் இதர 69 ஆலயங்கள் வழங்கியுள்ளன.

வங்கிகளில் வைப்பு நிதியாக வைக்கப்பட்டுள்ள இந்த ஏழு கோடி ரூபாய் கரையாது கட்டாகப் பேணப்படுகிறது. அத்தொகையிலிருந்து வட்டியாக ஆண்டொன்றுக்குப் பெறப்படும் சுமார் எழுபத்தைந்து லட்ச ரூபாய் மட்டுமே ஆலய மேம்பாட்டுத் திட்டங்களுக்குப் பயன் படுத்தப்படும்.

இப்புதுமையான திட்டம் அறிவிக்கப்பட்ட ஓராண்டிற்குள்ளாகவே இத்திட்டங்களின் செயல்முறைத் துவக்க விழாவும் 20.7.85 அன்று தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடந்தேறியது குறிப்பிடத்தக்கது. கிராமப்புறக் கோயில் திருப்பணிக்காகப் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சாமி திருக்கோயிலின் நிதியினின்றும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபாய் ஒரு கோடியின்றும் கிடைத்துள்ள வட்டி வருவாயினின்றும் அண்மையில் இரண்டாவது நிகழ்ச்சியாக 13.3.86ஆம் நாளன்று சென்னை அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயிலில் நடைபெற்ற



விழாவில் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தேர்வு செய்யப்பட்ட 150 கிராமப்புறக் கோயில்களுக்கு ரூ. 10,000 — வீதம் ரூ. 15 லட்சம் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் நிதி வழங்கப்பட்டது.

ஒரு வேளை பூசைக்குக் கூட வருமானம் இல்லாத 32 ஆலயங்களுக்குத் தலா ஐயாயிரம் ரூபாய் பூசை செலவிற்காக வழங்கப்பட்டுள்ளது. ஆலயப் பணியாளர்களுக்கு மருத்துவ நிதி தலா ரூபாய் 100 — வீதம் பலருக்கும், கல்வி நிதி தலா ரூ.100 — பலருக்கும் வழங்கி இத்திட்டம் முதல் கட்டமாகச் செயல்படுத்தப்பட்டிருப்பது மட்டும் அல்லாமல் வரும் ஆண்டுகளில் மேலும் இத்திட்டங்களால் மிக அதிகமான ஆலயங்கள் பயன்பெற இருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாலய மேம்பாட்டுத் திட்டங்கள் தஞ்சையில் செயல்பட்ட 20.7.85ஆம் நாளன்று இத்திட்டங்களில் குறிப்பிடப்படாத மற்றொரு திட்டமும் செயல்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஆலயப் பணியாளர்களுக்குச் சம்பளம் கூடத்தர முடியாத நிலையில் தஞ்சையிலும், திருநெல்வேலியிலும் பல கோயில்கள் உள்ளன. இக்கோயில்களுக்கு நிலங்கள் ஏராளமாக இருந்தபோதிலும், அவற்றைப் பயிர் செய்யும் குத்தகைதாரர்கள் பலர், விளைவில் 25 சதவீதம் என விதிக்கப்பட்டுள்ள குத்தகையை ஆலயங்களுக்குச் சரிவர செலுத்துவதில்லை. குத்தகையை முறையாகச் செலுத்தாத குத்தகைதாரர்களை எதிர்த்து வழக்கு மன்றத்திற்குப் போகவும் முடியாமல், அவர்களை வெளியேற்றவும் முடியாமல் மாரடோரியம் (Morrtorium) என்ற பாதுகாப்புச் சட்டமும் அமலில் இருந்தபடியால், 1392ஆம் பசலி முடியவரவேண்டிய குத்தகைப் பாக்கி வேறு ரூ. 31.5 கோடியாக உயர்ந்து விட்டது.

இதனால், தஞ்சையிலும், திருநெல்வேலியிலும் ஆலயப் பணியாளர்கள் 930 பேருக்குச் சம்பள பாக்கி வழங்கப்படாமல் அவர்கள் பரிதவித்த நிலையையும் அறநிலையத்துறை பரிவுடன் பரிசீலித்து, 930 பேருக்கு வழங்கப்பட வேண்டிய சமபள பாக்கி ரூ. 5,64,856 — மற்றும் 41 காசுகளையும் இவ்வேழு கோடி ரூபாய்த் திட்டத்தின் துணை கொண்டு வழங்குவதென முடிவு செய்து, மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், ஆலயப் பணியாளர்களின் சம்பள பாக்கியையும், தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தில் நடைபெற்ற ஆலய மேம்பாட்டுச் செயல்முறை தொடக்க விழாவில் தீர்த்து வைத்ததும் குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பு வழங்கி வந்த மாரடோரியம் என்ற பாதுகாப்புச் சட்டமும், 1985 ஜனவரி மாதத்தோடு காலாவதியாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பல ஆண்டுகளாகக் குத்தகைதாரர்கள் சேர்த்து வைத்துள்ள குத்தகை பாக்கிகளை 1987ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிவதற்குள் ஐந்து தவணைகளில் அவர்கள் கட்டியாக வேண்டும். குறிப்பிட்ட தவணைகளில் பாக்கியைச் செலுத்தவில்லையானால், உடனடியாக அத்தகையவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க அறநிலையத்துறை வழிவகை செய்து, நிலுவைகளை



வேகமாக வசூலிக்க ஆவன செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆலய நிர்வாக அதிகாரிகள், உதவி ஆணையர்கள், துணை ஆணையர்கள் ஒவ்வொருவருக்கும் நிலுவைகளை வசூலிக்க குறியீடு ( Target ) நிர்ணயம் செய்து, அறநிலையத் துறை வேகமாகச் செயல்பட்டு வருகிறது.

தமிழக அரசின் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை எண்ணற்ற சமுதாய நலப்பணிகளையும் மேற்கொண்டு செயல்படுத்தி வருவது இங்கே குறிப்பிடத்தக்கது. அறநிலையத் துறையின் கீழ் தற்போது கல்வி நிறுவனங்கள் 44, பெண்கள் தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளி 1, அன்பு இல்லங்கள் 35, மருத்துவ மனைகள் 20, நூலகங்கள் 201 ஆகியவை இயங்கி வருகின்றன. இவைகள் மட்டுமல்லாமல் சமுதாய வளர்ச்சிக்கு அறநிலையத்துறை மேலும் பல பணிகளை நிகழ்த்தி வருகின்றது. அவற்றில் ஒன்றுதான் சுதந்திரத் திருநாளில் ஆண்டுதோறும் நடத்தப்படும் சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து நிகழ்ச்சிகள்.

''எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந்நாட்டு மக்கள்'' என்று பாடிய மகாகவி பாரதியார் ''சாதிகள் இல்லையடி பாப்பா' எனச் சாற்றினார். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திருமூலரும், ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்று அறுவுறுத்தியிருக்கிறார். உலகப் பொது மறை தந்த திருவள்ளுவரும் ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்று பாடியிருக்கிறார். இறைவன் ஆலயத்தில் அனைத்துத் தரப்பினரும் சரிநிகர் சமானமானவர்களே என்பதை வற்புறுத்தும் பொருட்டு 1918ஆம் ஆண்டு முதல் ஆகஸ்ட் 15ஆம் நாளில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சிகள் அறநிலையத்துறையால் சிறப்புற நடத்தப்பட்டு வருகின்றன.

பொது விருந்து திட்டம் தொடங்கப்பட்ட அதே 1981 ஆம் ஆண்டு முதல்,வசதி மிக்க ஆலயங்களில் அறநிலையத்துறையால் தொடங்கி நடத்தப்படுவதே சிறப்புத் திருமணங்கள் எனும் சீரிய திட்டமாகும். ஏழைகள் பலர் வயது வந்த தம் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து பார்க்க முடியாமல் அதற்குக் குறைந்த பட்ச செலவாகத் தேவைப்படும் ஒரு ஆயிரம் ரூபாய் கூட இல்லாமல் வாடி நிற்கிறார்கள். எண்ணற்ற விதவைத் தாய்மார்கள், வயது முதிர்ந்து வறுமையில் வாடும் பெற்றோர்கள் படும் துன்பங்களைத் துடைக்க, அறநிலையத்துறை கண்ட திட்டமே சிறப்புத் திருமணத் திட்டமாகும். மாண்புமிகு அமைச்சர்கள், ஆன்மீகத் தலைவர்கள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மடாதிபதிகள், பொது மக்கள் ஆகிய அனைவரும் ஒரு சேர வாழ்த்த இத்தகு திருமணங்கள் நடத்தப் பெறுவதால், இவற்றை இலவசத் திருமணங்கள் என்று கூறாமல், சிறப்புத் திருமணங்கள் என்றே குறிப்பிட வேண்டும் என்பது அரசின் விருப்பமாகும். 1981 ஆம் ஆண்டில் 220, 1982ல் 622, 1983ல் 182, 1984ல் 112, 1985ல் அக்டோபர் திங்கள் வரை 109 திருமணங்கள் ஆக இதுவரை மொத்தம் 1245 திருமணங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இதில் பயன்பெற்றவர்களில் 979 ஜோடி ஆதிதிராவிட மணமக்கள், 209 ஜோடி பிற்பட்ட மணக்கள், 44 ஜோடி கலப்புத் திருமண மக்கள்13ஜோடி இதர வகுப்பைச் சேர்ந்த மணமக்கள் ஆவர். ஒரு திருமணத்திற்கு சுமார் ரூ. 750— லிருந்து ரூ. 1000 — வரை அந்தந்தத் திருக்கோயில் உபரி நிதியிலிருந்து செலவிடப்படுகிறது. இதுவரை இத்திருமணங்களுக்காக ரூ. 9,61,200 — வசதிமிக்க அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி ஆலயம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் ஆலயம், திருவேற்காடு அருள்மிகு கருமாரியம்மன் ஆலயம் போன்ற ஆலயங்களிலிருந்து செலவிடப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு வசதியற்றவர்களுக்குச் சிறப்புத் திருமணங்கள் நடத்தி வைக்கப்படுவதுடன்



வசதி குறைந்தவர்கள் திருமணங்கள் நடத்திக் கொள்ள திருமண மண்டபங்கள் தேவைப்படுவதையும் அறநிலையத்துறை உணர்ந்து இதுவரை 109 திருமண மண்டபங்களைச் கட்டித் தந்திருப்பதுடன், தற்போது 32 திருமண மண்டபங்களையும் கட்டுவதற்கு அனுமதியும் வழங்கியுள்ளது. அறநிலையத்துறையின் திருமண மண்டபங்களோ, நடுத்தர, கடைத்தர மக்களுக்கு வரப்பிரசாதம் போல் குறைந்த வாடகையில் பயன்பட்டு வருகின்றன.

தல தரிசனம் காணவேண்டிப் புறப்பட்டு வரும் தமிழக மக்களுக்கும் இதர மாநில மக்களுக்கும் தங்குமிட வசதிகளைச் செய்து தருவதிலும் சிறப்பிடம் வகிக்கிறது, நம்முடைய அறநிலையத்துறை. திருக்கோயில்களில் இதுவரை 58 ஒய்வு விடுதிகளும் 231 குடில்களும், 951 அறைகளும் யாத்திரிகர்களின் வசதிகளுக்காக அமைக்கப்பட்டிருக்கின்றன. தனியார் தங்குமிடங்களில் வசதிகள் குறைவாக இருந்தபோதிலும் மிக அதிகமான கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. அறநிலையத்துறை அமைத்துள்ள தங்குமிடங்களில் மிகக் குறைவான கட்டணங்களே வசூலிக்கப்படுகின்றன.

பழமையான கோயில்களைப் பழுதுபார்ப்பது, திருக்குளங்களைச் சீரமைப்பது, தேர்களைச் செப்பனிடுவது போன்ற பல கோயிற் திருப்பணிகளையும் அறநிலையத்துறை முனைப்போடு செயல்படுத்தி வருகின்றது. அரசாங்கமும் இப்பணிகளில் ஆர்வம் கொண்டு ஆண்டுதோறும் மானியம் வழங்கி வருகின்றது. 1981-82ஆம் ஆண்டிற்கு ரூ.12 இலட்சமும், 1982-83ஆம் ஆண்டிற்கு 20 இலட்சமும், 1983-84ஆம் ஆண்டிற்கு 23 இலட்சமும் ரூ. 30 இலட்சமும் கோயில் திருப்பணிகளுக்காக அரசு மானியம் வழங்கப்பட்டிருக்கின்றன. இவ்வரசு மானியங்களோடு அறநிலையத்துறையும் ஆலய நிதிகளிலிருந்து பெருமளவில் நிதி ஒதுக்கித் திருப்பணிகளைச் செய்து வருகின்றன.

உலகிலேயே மிக உயர்ந்த கோபுரமாக 13 நிலைகளுடன் அமைக்கப்பட்டு வரும் திருவரங்கக் கோபுரத்தில் 13 வது நிலை கோபுரக் கட்டுமானப் பணிக்கு ரூ.7 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டு திருப்பணி நடந்து வருகின்றது. அருள்மிகு காசிவிஸ்வநாதசுவாமி ஆலய இராசகோபுரத் திருப்பணி 90 இலட்ச ரூபாய், அருள்மிகு சிதம்பரம் சபாநாயகர் திருக்



கோயில் திருப்பணி 38 இலட்ச ரூபாய், அருள்மிகு மாங்காட்டு காமாட்சியம்மன் கோயில் திருப்பணி 8 இலட்ச ரூபாய், சேலம் கோட்டை மாரியம்மன் ஆலயத் திருப்பணி 17 இலட்ச ரூபாய், ஸ்ரீரங்கம் அரங்கநாதசுவாமி திருக்கோயில் திருப்பணி ஒரு கோடி ரூபாய், திருவாரூர் தியாகராஜசுவாமி திருக்கோயில் இராஜகோபுரத் திருப்பணி ரூ. 11.57 இலட்ச ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. சேலம் மாவட்டம், திருச்செங்கோடு மலை மீது அமைந்துள்ள அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலுக்கு வாகனங்கள் மூலம் மலை மீது பக்தர்கள் சென்று வழிபடுவதற்கு வசதியாக மலைப்பாதை ரூ. 60 — இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, தமிழ்நாடு கட்டுமானக் கழகம் மேற்படி மலைப்பாதை அமைக்கும் வேலையைத் துரிதமாகச் செய்து வருகிறது (அரசு மான்யமாக ரூ. 5 இலட்சம் வழங்கப்பட்டு இருக்கிறது.)

இது போன்ற பல திருப்பணிகளும் அறநிலையத்துறையின் சார்பாக நடைபெற்று வருகின்ற எண்ணற்ற திருப்பணிகளில் குறிப்பிடத்தக்க சிலவாகும்.

திருக்கோயில்களில் உள்ள பஞ்சலோக விக்கிரகங்கள் விலை மதிப்பற்றவை. அவற்றைப் பாதுகாக்க தக்க பாதுகாப்புப் பணிகளையும் அறநிலையத்துறை சிறப்பாகச் செய்து வருகின்றது. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 2000 உலோகக் திருமேனிகள் உள்ளன. இவற்றைப் பாதுகாக்க அருள்மிகு திருவாரூர் தியாகராஜசுவாமி ஆலயத்தில் ரூ. 12,90,000 — மதிப்பீட்டில் ஒரு சிலை காப்புக் கூடம் அமைக்கும் பணியை அறநிலையத்துறை மேற்கொண்டு பணி முடியும் தருவாயில் உள்ளது. வங்கிகளிலுள்ளது போன்ற பாதுகாப்பான கதவுகள் அங்கே பொருத்தப்பட்டுள்ளன. எளிதில் உடைக்க முடியாத கான்கிரீட்டு அறைகளும் உறுதியான தளமும் உள்ள பலமான கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மற்றும் திருவானைக்கா ஆகிய இரு இடங்களிலும் இதே போன்று பாதுகாப்பான சிலை பாதுகாப்புக் கூடம் ஏற்படுத்த மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு அரசு மான்யம் வழங்கப்பட்டு வேலை துவங்கப்பட உள்ளது.

1981ல் 88 கோயில்களிலும் 1982ல் 69 கோயில்களிலும், 1983ல் 114 கோயில்களிலும் 1984ல் 84 கோயில்களிலும் 1985ல் 117 கோயில்களிலும் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவில் திருப்பணிகள் முடிந்து கும்பாபிஷேகங்கள் நடந்தேறியுள்ளன. கடந்த 8 ஆண்டுக் காலத்தில் மட்டும் ஏழு தங்கத் தேர்கள் அமைக்கப்பட்டுள்ளன. சங்கரன் கோயில் சங்கரநயினார் ஆலயத்தில் அறநிலையத்துறையின் பத்தாவது தங்கத் திருத்தேர் 15.12.85ல் வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது.

திருநாவுக்கரசர் பெருமான் உழவாரத் திருப்பணி புரிந்து ஆலயத் தூய்மையைப் பராமரித்த அருங்குணச் செல்வர் ஆவார். அவர் தம் வழியில் ஆலயங்களில் தூய்மையைப் பராமரிக்க அண்மையில் அறநிலையத்துறை மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் திருக்கோயில் தூய்மைப் பராமரிப்புப் பணியைத் தொடக்கி வைத்து, அத்தகைய பணியில் அனைத்து ஆலயங்களும் ஈடுபட ஆவன செய்து வருகிறது. கவிச் சக்ரவர்த்தி கம்பருக்கு அவர் பிறந்த தேரழுந்தூரில் கம்பர் கோட்டம் ரூ. 20 இலட்சம் செலவில் கட்டி அதனை 10.12.84ல் திறந்து வைத்திருக்கும் அறநிலையத் துறை, இளங்கோ அடிகளுக்கும் சேக்கிழாருக்கும், சிறந்த சமயச் சான்றோர்கள் பலருக்கும் கோட்டங்கள் அமைக்க முயன்று வருகின்றது.

இவ்வாறு அற நிலையத் துறை ஆற்றியிருக்கும் பணிகள் மிகப்பல. ஆற்ற வேண்டிய பணிகளும் மிகப்பல. ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் மகேசன் தொண்டே மக்கள் தொண்டாகவும் மக்கள் தொண்டே மகேசன் தொண்டாகவும் முனைந்து செயலாற்றி வரும் அறநிலையத்துறை வருங்காலத்திலும் பல சிறந்த செயல் திட்டங்களைத் தீட்டி, நிறைவேற்ற உள்ளது.



# சிறுபான்மையோர் நலம் காக்கும் தமிழக அரசு

**தலியார்கான்**
**சிறுபான்மைக்குழு உறுப்பினர்**

இந்தியாவில் சிறுபான்மையினரான முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், புத்த மதத்தினர், பார்சி வகுப்பினர், சமணர்கள் மற்றும் சில பிரிவினர் இருக்கின்றனர். அவர்களுடைய வாழ்க்கை வசதிகள், முன்னேற்றங்கள், வருங்காலத் தேவைகள் ஆகியவை பற்றி அறிந்து கொள்வதற்காக இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.



இதன் தொடர்பாக கோவை, ஊட்டி, நெல்லை மற்றும் பல ஊர்களுக்குச் சென்று வந்தேன். அரசு அதிகாரிகளிடமும் பேசினேன். சிறுபான்மை நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் மற்றும் பல தனிப்பட்டவர்களையும் சந்தித்துப் பேசினேன்.

பெரும்பான்மையினருக்கும் சிறுபான்மையினருக்கும் இடையே நடைபெறும் வகுப்பு வாத மோதல்கள் தமிழ்நாட்டில் அதிகமாக இல்லை. இரு வகையினருக்கும் இடையே சுமுகமான உறவும் புரிந்து கொள்ளும் பண்பும் இங்கே இருப்பதைக் காண்கிறேன்.

முஸ்லீம்களில் 85 சதவிகிதம் பேர் தமிழ்நாட்டில் பின் தங்கியோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு, பல வசதிகள் பெற்று வருகிறார்கள் என்பதை அறிகிறேன்.

பின் தங்கியோருக்குத் தொழில் முதலீட்டு வாரியத்தைத் தமிழக அரசு தொடங்கியிருப்பதன் வாயிலாக, சிறுபான்மையினரும் நல்ல முறையில் முன்னேற்றம் பெற்று திருப்தியுடன் இருக்கிறார்கள் என்பதையும் கண்டேன்.

தமிழக அரசு, சிறுபான்மை இனத்தவருக்கு அளித்து வரும் வசதிகள், கல்வி நிலையங்களில் மாணவர்களுக்கு ஏற்படுத்தித் தரும் இட வசதிகள், அரசுப் பணிகளில் சிறு பான்மை இனத்தவருக்குத் தந்திருக்கும் இடங்கள், சிறுபான்மையினர் தொழில் தொடங்குவதற்கு நிதி வசதி வழங்குதல் ஆகியவற்றைக் கவனிக்கும் பொழுது, மற்ற மாநிலங்களைவிட, தமிழகத்தில் சிறு பான்மையினருக்குச் சிறந்த வசதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிகிறேன்.

பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் படிப்பை நிறுத்தி விடுவதில் அகில இந்திய சராசரி 70 சதவிகிதமாக உள்ளது. அதே நேரத்தில் அந்தச் சராசரி தமிழ்நாட்டில் 23 சதவிகிதமாகக் குறைந்திருப்பது பாராட்டுக்குரியது.

தமிழக முதல்வர் அவர்கள் அறிமுகம் செய்து அமல்படுத்தி வரும் சத்துணவுத் திட்டம்தான் இதற்குக் காரணம். இந்தத் திட்டத்தின் மூலம் சிறு பான்மை இனத்தவர்களும் நலிந்த நிலையில் உள்ளவர்களும் பயனடைந்திருக்கிறார்கள். இதனை நான் வரவேற்கிறேன்.

தமிழ்நாட்டில் பின் தங்கியோர் நலனைக் கவனித்துக் கொள்வதற்குத் தனி இயக்குநர் இருப்பது போல, சிறுபான்மை இனத்தவரின் நலனைக் கவனிப்பதற்குத் தனி இயக்குநர் விரைவில் நியமிக்கப்பட இருக்கிறார் என்பதை அறிந்து மகிழ்கிறேன்.

(மைய அரசு நியமித்துள்ள சிறுபான்மையினர் குழுவினரின் உறுப்பினர் தலியார்கான் 23.5.86 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நிருபர்களைச் சந்தித்தபோது தெரிவித்த கருத்து.)



# காலத்தை வெல்லும் ஓட்டம்

**வா**னம் பார்த்த வறண்ட பாலையாகி விட்டது ஆப்பிரிக்க நாடு. இதன் காரணமாக அங்கே பரவிப் படர்ந்த பஞ்சமும் பசியும் நாள் தோறும் எண்ணற்றோரின் உயிர் வாங்கும் கொடுமை நிகழ்ந்த வண்ணமிருக்கிறது. குறிப்பாக அந்நாட்டு அரும்புச் சிறுவர் சிறுமியர் உணவின்றிச் செத்துமடியும் கொடுமை மனித வர்க்கத்தின் சித்தம் தடுமாறச் செய்வதாகும். இன்று நேற்றல்ல; கடந்த பல ஆண்டுகளாகவே ஆப்பிரிக்க நாட்டில் தொடர்ந்து கொண்டிருக்கிறது இந்த பயங்கரம்.

ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நிதியமைப்பு ( UNICEF ) அந்நாட்டுக் குழந்தைகளுக்கு உணவளித்துக் காக்கவும், உரிய மருத்துவச் சிகிச்சைகளுக்கு ஏற்பாடு செய்து உயிர்ப்பிக்கவும் முன் வந்தது. அதன்படி நிதி சேர்ப்பதற்கென உலக நாடுகள் தோறும் 'காலத்தை வெல்லும் ஓட்டம்' (Race against time) எனும் பெயரில் நிகழ்ச்சியொன்று கடந்த 25.5.86 ஞாயிறு அன்று நடந்தப்பெற்றது.

அதாவது உலகெங்குமுள்ள 75 நாடுகளில் உள்ள 266 பெரு நகரங்களிலே இந்த ஓட்டம் 10 கிலோ மீட்டர் தூர அளவினதாக நடைபெற்றது. மொத்தம் 3 கோடிப் பேருக்கு மேல் இதில் பங்கேற்றார்கள்.

சென்னை மாநகரம் உட்பட இந்தியாவில் 16 நகரங்களில் இந்த நெடுந்தூர ஓட்டம் நடைபெற்றது.

சென்னை நகர ஓட்டத்தினை இந்திய விளையாட்டுக் குழுமம், தமிழ்நாடு இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறை, தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம் ஆகியவை இணைந்து நடத்தின.




சென்னையில் மேதகு ஆளுநர் மாளிகையான ராஜ்பவனில் இருந்து, அண்ணா சாலையில் உள்ள அண்ணா சிலை வரை ஓட்டம் நடந்தது. இரவு 9.30 மணிக்குத் தொடங்கிய ஓட்டத்தில் 6 வயது சிறுவனிலிருந்து 60 வயது முதியோர் வரை ஏறத்தாழ பத்தாயிரம் பேர் பங்கேற்றார்கள்.

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் 'ஸ்போர்ட்ஸ் எய்ட்'



ஜோதியை நடிகர் திலகம் திரு சிவாஜிகணேசன் அவர்களிடம் தர, அவர் அதை ஏந்திக் கொண்டு சிறிது தூரம் ஓடி ஹாக்கி வீரர் திரு. பாஸ்கரனிடம் கொடுக்க- ஓட்டம் தொடங்கியது.

உன்னதமான குறிக்கோளின் அடிப்படையிலான இந்த ஓட்டத்தில் மாணவ மாணவியர், விளையாட்டு வீரர்கள், காவல் துறை அதிகாரிகள், சென்னை மாநகராட்சி, பல்லவன் போக்குவரத்துக் கழகம், தீயணைப்புப் படை, பல்வேறு தனியார் நிறுவனத்தைச் சேர்ந்தோர், சமூக நல அமைப்பினர் ஆகியோரும் கலந்து கொண்டு ஓடினர்.

வழி நெடுகிலும் கூடி நின்ற பல்லாயிரக் கணக்கான மக்கள் அவர்களைக் கைதட்டி உற்சாகப்படுத்தினர்.

ஆப்பிரிக்கக் குழந்தைகளுக்கு உதவும் இந்த 'ஸ்போர்ட்ஸ் எய்ட்' நிதிக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தன் சொந்தப் பொறுப்பில் ரூ 2 இலட்சமும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ 10 இலட்சமும் வழங்கினார்.

சென்னை மாநகராட்சி ரூ. 2 இலட்சம் வழங்கியது.

இப் பந்தயத்தில் கலந்து கொண்ட ஒவ்வொருவரும் ஒரு கிலோ மீட்டருக்கு ரூ.10 வீதம் பத்து கிலோ மீட்டருக்கும் நிதி செலுத்திய பின்பே ஓடும் அனுமதி பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடெங்கும் ஓட்டத்தில் 10 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர். ஒவ்வொருவரும் ரூ. 10 செலுத்தியதன் மூலம் ஒரு இலட்ச ரூபாய் வசூலாகியது.



பொது நிறுவனங்கள், தொழிற்சாலைகள், ரோட்டரி சங்கத்தினர், அரிமா சங்கத்தினர் ஆகியோர் வழங்கிய நிதி, இசை நிகழ்ச்சிகள் மூலமாக வசூலான தொகை யாவும் சேர்ந்து ரூபாய் 5 இலட்சம் வசூலாகியது.

தமிழகத்திலிருந்து மொத்தம் 20 இலட்ச ரூபாய் வசூல் ஆகியது.

• ஆப்பிரிக்கக் குழந்தைகள் நல நிதிக்காக உலகெங்கும் நடத்தப்பட்ட இந்த ஓட்ட நிகழ்ச்சி மூலம் 187 கோடி ரூபாய் வசூலானதாக — 26.5.86 அன்று லண்டன் மாநகரில் கூடிய 'விளையாட்டு நல நிதி' நிர்வாகிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

— நமது செய்தியாளர்



## மாண்புமிகு முதல்வர் வாழ்த்துச் செய்தி

**பி**றக்கும் குழந்தைகளைப் பேணிக் காத்திடுவதையும் வளரும் குழந்தைகளுக்குச் சத்துணவு, கல்வி, மருத்துவ வசதி இவற்றை நல்கிடுவதையும் பெருநோக்கமாகக் கொண்டு யூனிசெஃப் எனும் ஐக்கியநாடுகள் குழந்தைகள் நிதி நிறுவனம் 40 ஆண்டுகளாக ஆற்றிவரும் பணி பாராட்டத்தக்கதாகும்.

குழந்தைகள் நலன் பற்றிய கருத்துகளை உலக மக்கள் அனைவருடைய உள்ளங்களில் பதிய வைத்து, குழந்தைகள் நலக்காப்பு எனும் முயற்சியில் ஒரு புரட்சியை ஏற்படுத்தும் வகையில் யூனிசெஃப் நிறுவனமும், ஸ்போர்ட் எய்ட் எனும் அமைப்பும் ஒருங்கிணைந்து Race against time எனும் ஓட்டப் பந்தய விழாவினை உலகின் முக்கிய நகரங்களில் நடத்த இருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த விளையாட்டு விழாவிற்காக இந்தியாவில் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ள ஐந்து நகரங்களில் சென்னை மாநகரும் ஒன்று என்பது தமிழக மக்கள் அனைவருக்கும் பெருமை தருவதாகும்.

குழந்தைகளுக்கு உணவும், கல்வியும் தர வேண்டும் என்கிற எனது தணியாத ஆவல், தமிழகத்தில் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டமாக அமல் நடத்தப்பட்டு வருவதை அனைவரும் அறிவார்கள். தாய் சேய் நலத்திட்டங்கள் பல, தமிழகத்தில் செம்மையாகச் செயல்பட்டு வருகின்றன. எனவே குழந்தைகள் நலனைக் காக்கின்ற எந்த ஒரு சீரிய முயற்சியும் தமிழக மக்களின் சிறப்பான ஆதரவைப்பெறும் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு.

யூனிசெஃப் நிறுவனம் நடத்தும் Race against time எனும் நெடுந்தூர ஓட்டப்பந்தயத்தின் வாயிலாகக் கிடைக்கும் தொகையில் ஒரு பகுதி, வறுமையிலும் நோய்களிலும் சிக்கித் தவிக்கும் ஆப்பிரிக்கக் குழந்தைகளின் நலனுக்கும், மற்றொரு பகுதி இந்தியக் குழந்தைகள் நலனுக்காகவும் செலவிடப்படும் என்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். குழந்தைகள் நலனுக்காகச் செய்யப்படும் இந்தப் புனிதப் பணிக்கு என் இனிய நல்வாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்துப் பகுதி மக்களும் இந்த அற்புதத் திட்டத்துக்கு தங்கள் தங்கள் வசதி வாய்ப்புகளுக்கேற்ப உதவியும் ஒத்துழைப்பும் அளித்திட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

குழந்தைச் செல்வங்களுக்காக நடத்தப்படும் இந்த ஓட்டப்பந்தயம் எல்லாவகையிலும் சீரிய வெற்றி பெற்றிட எனது இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



# குறள் நெறி பரப்பு ஒரு மையம்

திருக்குறளார் வீ. முனிசாமி
இயக்குநர்
திருக்குறள் நெறிபரப்பு மையம்

தமிழர் பெற்றுள்ள பெரும் பேறுகளுள் தலையாய சிறப்புடையது திருக்குறள்.

உலகப் பேரறிஞர்களால் ஒரு மனதாகப் போற்றப்பெறுவதும், தமிழர் தம் சிந்தனை வளர்ச்சிக்கும் சீரிய பண்பாட்டு நெறிகட்கும் ஓர் ஒப்பற்ற எடுத்துக்காட்டாக விளங்கிவரும் தனிச் சிறப்புக் கொண்டதுமான உலகப் பொதுமறையாம் திருக்குறளின் அருமை பெருமைகள் பற்பல.

தமிழின் புகழைக் குன்றின் மேல் இட்ட விளக்காக ஆக்கிக் காட்டிய பெருமை திருக்குறளையே சாரும்.

உலகத்தின் தலைசிறந்த தமிழிலக்கிய அறநூலாக மட்டுமல்லாது, ஒரு சிறந்த சமுதாயப் பண்பாட்டு நூலாகவும் இலங்கி வருகின்ற திருக்குறளின் மாண்பினை-இதன் திரண்ட அரிய கருத்துக்களை-மொழி, இனம், நாடு, மதம் என்னும் பாகுபாடு இல்லாது, அவனியெங்கும் அறியச் செய்திடும் உயரிய நோக்குடன் 'திருக்குறள் நெறிபரப்பு மையம் என்னும் அமைப்பு தனியொரு துறையாக, தமிழுக்குச் சிறப்பான முறையில் நல்தொண்டாற்றிவரும் தமிழ்நாடு அரசால் கடந்த 1984ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 28ஆம் நாள் தோற்றுவிக்கப்பெற்றது.

குறிப்பான காலவரையறை என்று ஒன்று குறிக்கப்படவேண்டுமானால், கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் மக்களிடையே திருக்குறள் வளர்ச்சியும் ஆர்வமும், பாராட்டும் விரைவாக வளர்ந்து வந்திருப்பது நாடறிந்த உண்மையாகும். இந்த வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு தான் அரசு இம்மையத்தினை உருவாக்கியுள்ளது.

சென்னையில் உள்ள வள்ளுவர் கோட்டத்தைத் தலைமை இடமாகக் கொண்டு இம்மையம் கடந்த ஓராண்டுக் காலமாகச் சிறப்புறப் பணியாற்றி வருகின்றது.

புகழ்பெற்ற வெளிநாட்டுப் பேரறிஞர்களால் போற்றப் பெற்றதும், உலகமொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்ட சிறப்பினை உடையதுமான திருக்குறளின் அருமை பெருமைகளை உலகோர் உணர்ந்து ஒழுக வழிவகை செய்ய வேண்டும் என்கிற பெருநோக்கின் அடிப்படையில், இம்மையம் கடமையாற்ற முனைந்துள்ளது.

அறமே. தகளி, பொருளே நெய், இன்பமே திரியாக விளங்கும் குறள்மணி விளக்காம் திருவள்ளுவர் இயற்றியருளிய தெய்வத்தமிழ் நூலானது அறிஞர்கட்கு மட்டும் உரியதன்று. படித்த மக்களுக்கும் படிக்காத பாமர மக்களுக்கும் எழுதப் பெற்றதே இந்நூல். இதன் திரண்ட அரிய கருத்துக்கள் எல்லோரும் புரிந்து கொள்ளும் வண்ணமாக விளக்கிச் சொல்லப்படல் வேண்டும். அவரவர் தகுதியறிந்தும் தேவையறிந்தும் சொல்லப்படல் வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் உண்மையை உணர வேண்டும்.

மக்கள் அனைவரும் சாதி, சமய, சமுதாயக் கொள்கைகளை -தங்களைப் பிணித்துள்ள அறியாமைக் கட்டுகளை உணரவும் அவற்றை உதறித் தள்ளிவிட்டு, தகுதியும், துணிவும், தெளிவும் பெற்ற மனிதர்களாக மாறவும் வேண்டும். அதற்கு வழிகோலும் வகையில் திருக்குறள் கருத்துகளைப் பட்டிதொட்டி எங்கும் பரப்புவதே இம்மையத்தின் தலையாய குறிக்கோள் ஆகும்.

கல்வி பயிலும் மாணவர் நெஞ்சங்களில், திருக்குறள் நெறி பசுமரத்தாணி போல் பதிய வேண்டும் என்பதை, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்கள் பல நிகழ்ச்சிகளில் வலியுறுத்தியிருப்பதை இங்குக் குறிப்பிடவேண்டும்.








திருக்குறள் நெறிபரப்புமையம் கல்வித் துறையுடன் ஒருங்கிணைந்து, பள்ளி மாணவமணிகள், திருக்குறளின் அரிய கருத்துக்களை அறிந்து ஒழுகும் பொருட்டு, பல அருமையான திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இம்மையத்தின் சார்பாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்று மாலை ஆறு மணியளவில் திருக்குறள் வகுப்பு, பொதுமக்களும் மாணவமணிகளும் பயன்பெறும் பொருட்டு, வள்ளுவர் கோட்ட வளாகத்தின் உள்ளேயே ஏற்பாடு செய்யப்பட்டுச் சிறப்புற நடைபெற்று வருகிறது. மைய இயக்குநர் திரு திருக்குறளார் அவர்களும், தமிழ்வளர்ச்சி—பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் அவர்களும் குறள் விளக்கம் அளித்தனர்.

இத்திருக்குறள் வகுப்பின் தொடக்கவிழா 23-11-84 அன்று வள்ளுவர் கோட்டத்தில், முன்னாள் சட்டப் பேரவைத் தலைவரும், இந்நாள் தொழில் அமைச்சருமான மாண்புமிகு க. இராசாராம் அவர்களால் துவக்கி வைக்கப் பெற்றது.

வாரந்தோறும் வெள்ளிக்கிழமை வள்ளுவர் கோட்டத்தில் தொடர்ந்து நடத்தப்பட்டுவரும் இத்திருக்குறள் வகுப்பில் இளையோர் முதல் முதியோர் வரை பல்துறையைச் சார்ந்த பேரறிஞர்கள், வல்லுநர்கள், தமிழாசிரியர்கள், பள்ளி மாணவ மாணவியர் ஆகியோர் பங்கு கொண்டு குறள் விளக்கம் கேட்டுப் பெரிதும் பயனடைகின்றனர். வெள்ளிக்கிழமை சிற்சில சமயங்களில் அரசு விடுமுறை நாளாக இருப்பினும், வகுப்பு நடைபெறுவது தடைபடக்கூடாது என்னும் ஒரே குறிக்கோளின் காரணமாக அந்நாட்களிலும் திருக்குறள் வகுப்பு நடத்தப்படுகிறது.

இறைவணக்கத்துடன் குறள் வணக்கமும் இந்நிகழ்ச்சியில் இடம் பெறுகிறது. பொதுவாக வகுப்பு என்று குறிப்பிடுவதுடன் ஒருகலந்துரையாடலைப்போன்று அமைந்து, வருகைபுரியும் திருக்குறள் ஆர்வலர்களின் எண்ணங்களையும், கருத்துகளையும் அறிந்து செயல்படும் ஒரு சாதனமாகவும்அது விளங்கி வருகிறது. இம்முறையில் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வது திருக்குறள் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படும் என்பது கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

திருக்குறள் நெறிபரப்பு மைய இயக்குநரின் ஆலோசனையின் பேரில், சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளில் திருக்குறள் சொற்பொழிவுக் கூட்டங்கள், திருக்குறள் அன்பர்களால் நடத்தப் பெற்று வருகின்றன. இக்கூட்டங்களில் இயக்குநர் கலந்து கொண்டு, திருக்குறள் நெறி மக்களிடையே பரவ வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தியும், குறளின் அரிய கருத்துகளை எளிமையானமுறையில் எடுத்துக் கூறியும் சொற்பொழிவுகள் ஆற்றி வருகின்றார்.

மிகக்குறுகிய கால அளவில் திருக்குறள் நெறிபரப்பு மையம் மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்று கூறினால் அது மிகையாகாது.

உடற்பயிற்சி வாயிலாகக் குறள் பயிற்சியளிக்கும் ஒரு புதுமையான திட்டத்தைத் தீட்டி, இம்மையம் செயல்படுத்தி வருகிறது. பள்ளி மாணவ மாணவரிடையே திருக்குறளை உடற்பயிற்சி வாயிலாகப் பயிற்றுவிப்பது, உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவுவதோடு மட்டுமல்லாமல், குறட்பாக்களை மனத்தில் நன்கு பதியும்படி செய்யும் என்பதனைக் கருத்திற்கொண்டு, முதற்கட்டமாக சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் ஒத்துழைப்புடன் சென்னை மாநகர மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவியருக்கு இவ்வகைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. நாளடைவில் இதனைத் தமிழகம் முழுவதிலும் உள்ள அனைத்துப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்குப் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

உடற்பயிற்சி மூலம் குறட் பயிற்சித்திட்டத்தின்கீழ்ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளியிலிருந்தும் 50 மாணவ மாணவியர் இப்பயிற்சியினால் பயன் அடைகின்றனர். இப்பயிற்சியினை, உடற்கல்விப் பயிற்றுநர் மற்றும் தமிழாசிரியர்களின் ஒத்துழைப்புடன் அந்தந்தக் கல்வி நிலையங்களின் வளாகத்தினுள்ளேயே மாணவமணிகளுக்கு அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இப்பயிற்சிக்கென உகந்தனவாகத் தேர்ந்தெடுத்த குறட்பாக்களின் துணைகொண்டு, குறளடிக்கு ஏற்றாற்போல் அங்க அசைவுகளை அமைத்துப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

திருக்குறளைத் திருவள்ளுவர் இயற்றியருளினார் என்பதைத் தமிழுலகம் அறிந்திருப்பினும், இதன்கண் உள்ள பொருண்மையும் பயனும் உணர்ந்தோர் மிகச் சிலரே யாவர். எனவே இதனைச் சரியான முறையில் பொது மக்களுக்கு எடுத்தியம்புவதே, திருக்குறளுக்குச் செய்யும் மாபெரும் தொண்டு ஆகும். படிக்காத பாமரரும் புரிந்து கொள்ளத்தக்க வகையில், எளிய முறையில், காலச்சூழலுக்கு ஏற்றவாறு இம் மைய இயக்குநரால் திருக்குறள் விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. குறள் தொடர்பான ஐயங்கள் குறித்து தெளிவு வேண்டுவோருக்குத் தேவையான விளக்கங்கள் இயக்குநரால் அளிக்கப்படுகின்றன. திருக்குறள் சொற்பொழிவுக் கூட்டங்கள் மிகுந்த அளவில் ஏற்பாடு செய்யும்படி, திருக்குறள் ஆர்வலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டு வருகிறார்கள்.

திருக்குறளுக்குத் தொண்டாற்றி வரும் பேரவைகள் சங்கங்கள், மன்றங்கள் போன்றவை தமிழ்நாட்டிலும், வெளி மாநிலங்களிலும், அயல் நாடு

களிலும் பல உள்ளன. திருக்குறள் நெறிபரப்பு மையம் இவைகளுடன் ஒருங்கிணைந்து, குறள் நெறியைப் பரப்பிடும் பெரும் பணியில் துணைபுரியக் கருதியுள்ளது.

திருக்குறளைப் பள்ளிப்பாடத் திட்டத்தில் மனனப் பகுதியாகப் புகுத்தி, அதன் மூலம் மாணவ மாணவியரின் அறிவுத் திறனையும், ஞானத்தையும் நினைவாற்றலையும் மிகுதியாக்கச் செய்வது நல்ல பலனைத் தரும் என்பதைக் கருத்தில் கொண்டு ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கென, அவரவர் வகுப்புக்கு ஏற்றாற்போல் குறட்பாக்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றைச் சிறு புத்தக வடிவில் அச்சிட்டு, இம்மையத்தின் சார்பாக 'திருக்குறள் மனனப் பகுதி வெளியீடு' என்னும் தலைப்பில் வழங்குவதற்கு (விநியோகிப்பதற்கு) நடவடிக்கைகள் எடுக்கப் பெற்று வருகின்றன.

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிமொழியும் திருக்குறள் அன்பர்களையும், தொண்டர்களையும், ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்களையும் பேணி போற்றும் பெருவிருப்புடைய தமிழ்நாடு அரசின் சார்பாக, திருக்குறள் நெறிபரப்பு மையம் 18-8-85 அன்று வள்ளுவர் கோட்டத்தில் திருக்குறள் நெறி பரப்பு மாநாட்டினைச் சிறப்பாக நடத்தியது.

திருக்குறள் உரையாசிரியர்கள் மொழிபெயர்ப்பாளர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள், நூலாசிரியர்கள், எழுத்தாளர்கள் திருக்குறள் நெறிபரப்பும் மன்றத்தார், திருக்குறள் இசை




வாணர்கள், திருக்குறள் நினைவுக் கலைஞர்கள், திருக்குறள் இதழாசிரியர்கள், பல்லாற்றாலும் குறள் நெறிபரப்பும் தொண்டர்கள் முதலானோரைப் பேணிப் போற்றிப் பாராட்டும் வகையில் இம்மாநாடு வீறுடன் விளங்கியது.

பாராட்டத்தக்க சான்றோருக்குப் பொன்னாடை அணிவித்தும், பதக்கங்கள் வழங்கியும் சான்றிதழ்கள் நல்கியும் சிறப்புச் செய்துள்ளது.

தமிழர் பெற்ற செல்வத்துள் செல்வமான திருக்குறளைத் தமிழ்நாட்டிலும், பிற மாநிலங்களிலும், உலகெங்கிலும் என்றும் நின்று நிலைபெறும்வண்ணம் பரப்புதல் தமிழர்தம் தலையாய கடமையாகும். திருக்குறள் நெறி பரப்பு மையம் இக்குறிக்கோளினைத் தலை மேற்கொண்டு, செவ்வனே செயல்படுத்திட நல்ல பல திட்டங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

இளம் பருவத்தில் எக்கருத்தும் பசுமரத்தாணிபோல் நன்கு பதியும். எனவே ஆரம்பக் கல்வி நிலையங்களில் இருந்தே, குறட்பாக்களைப் பயிலச் செய்தல் சிறந்த நல்ல பலனைத் தரும், இதனைக் கருத்திற்கொண்டு மழலை வகுப்பு முதல், ஐந்தாம் வகுப்பு வரை உள்ள கல்வி நிலையங்களில் திருக்குறளுக்கு முக்கியத்துவம் (சிறப்பிடம்) கொடுத்துப் பரப்ப வழி முறைகள் மேற்கொள்ளப்படும்.

எடுத்துக்காட்டாக, எப்படி ஆங்கில வழிக் கல்வி முறையில் சீர்வரிசை (Rhymes) பாட்டுக்களை அங்க அசைவுடன் சொல்லித் தருகிறார்களோ, அம்முறையில் குறட்பாக்களை இளஞ்சிறார்கள் கற்கும்படி செய்ய இம்மையம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும், மேலும் சத்துணவுத்திட்ட மையங்களுடன் தொடர்பு கொண்டு, திருக்குறளை அவ்விடங்களில் போதிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திருக்குறள் பரப்பும் திட்டத்தைப் பள்ளிகளில் நடைமுறைப் படுத்தக் கூடியவர்கள் பள்ளி ஆசிரியர்கள்—உடற்பயிற்சி ஆசிரியர்கள் ஆகியோரே.

எனவே, இவர்களுக்கு சென்னை, திருச்சி, மதுரை தஞ்சை, கோவை, சேலம், நெல்லை முதலிய நகரங்களில் அல்லது மாவட்டந்தோறும் தலை நகரங்களில் ஒருவாரம் அல்லது இருவாரம் பணிக்களம் அல்லது கோடைப் பயிற்சி வகுப்பு நடத்தி குறள்நெறி பரப்பும் வழிமுறைகளைச் சிறப்புத் தகுதிப் பயிற்சியாக்கவும் திட்டமிடப்படும்.

திருக்குறளைப் பாமர மக்களும் புரிந்து கொள்ளத்தக்க வகையில், எளிய முறையில் தக்க உதாரணங்களோடு சுவைததும்ப சொற்பொழிவாற்றிட மாணவ மணிகளுக்குத் தக்க பயிற்சியளிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும் ஒவ்வொரு பள்ளிக் கூடத்திலும், மாணவர் இலக்கிய மன்றத்தில், மாணவர்கள் திருக்குறளைப் பற்றிப் பேசுகின்ற சொற்பொழிவுகளை ஒவ்வொரு வாரமும் நிகழச் செய்யவும், நீதிபோதனை வகுப்புகளில் அதிகமான குறட்பாக்களை விளக்கம் செய்யும்படியும் எல்லாப் பள்ளிகளிலும் குறட்பாக்களைக் கரும்பலகையிலோ அல்லது அட்டைகளிலோ எழுதி வைக்கும்படியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திருக்குறளில் சொல்லப்பட்டுள்ள கருத்துகள் அனைத்தும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வகுக்கப்பட்ட நெறிகள் அனைத்தையும் கூறுவதாகும். ஆட்சிமுறைகள், அமைச்சர் இயல்புகள், போர்த்திறன், உழவர் பெருமை, காதலர் வாழ்க்கை, கற்பின் சிறப்பு, பொருள்செயல் வகை, ஈகையின் உயர்ச்சி, சான்றாண்மை, இல்லறமேன்மை என்றெல்லாம் அனைத்தும் நிறைந்து செறிந்திருப்பது திருக்குறள்.

இத்தகைய சிறப்புப் பொருந்திய திருக்குறளை நினைவூட்டும் அல்லது விளக்கும் ஓவியங்களை இம்மையமே பெருமளவில் ஆக்கம் செய்து பள்ளிகளுக்கு வழங்கிடவும், அவற்றின் துணையுடன், புதிர் விளையாட்டுப் போல திருக்குறளையும் பயிற்றுவிக்கவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இது தவிர, உவமைக் குறட்பாக்களை எடுத்து, அவற்றின் கருத்துக்களை விளக்கிக் காட்டிடும் வகையில் வண்ண ஓவியங்களைத் தீட்டி, பொது மக்கள் காட்சிக்கு வைக்கப்படும்.

பள்ளிகளில் காலையில் பள்ளி தொடங்கும்போது இறை வணக்கத்துடன் திருக்குறட்பாக்கள் சிலவற்றையும் சொல்லுமாறு செய்யவும் இம்மையம் தகுந்த நடவடிக்கைகளை மேற் கொள்ளும். அத்துடன் அரசு விழாக்களிலும் குறள் வணக்கம் ஏற்பாடு செய்து சில குறட்பாக்களைச் சொல்லிய பின், நிகழ்ச்சியைத் தொடங்குமாறு செய்யவும், இம்முறையைத் தவறாது ஒழுங்காகக் கடைப்பிடிக்கச் செய்யவும் தக்க நடவடிக்கைகளை மையம் மேற்கொள்ளும்.

திருக்குறளில் காணப்படும், எளிமையாகச் சொல்ல முடிகிற குறட்பாக்களையெல்லாம் தொகுத்து, தனிப்பட்டியலாகத் தயாரித்து, அவற்றைச் சிறு அறிக்கைகள்போல் வெளியிட்டுப் பள்ளி மாணவர்கள் படித்து, உணர்ந்து பயன்பெறும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை, ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை, பண்புடைமை, இடுக்கணழியாமை, சான்றாண்மை-இந்தப் பத்து அதிகாரங்கள் ஒரு தனி தொகுப்பாகவும்

'மனத்துக்கண் மாசிலனாதல்'
'உள்ளியது எய்தல் எளிது'
'உள்ளவ எல்லாம் உடன் எய்தும்'
'எண்ணியாங் கெய்துப' என்பன போன்ற உள்ளத்தைத் தொட்டுக் காட்டி எழுச்சி யுண்டாக்கக்கூடிய குறட்பாக்களைத் தனியொரு தொகுப்பாகவும்—

அன்புடைமை,, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை என்பன போன்ற பத்துப்பத்து அதிகாரங்களாகக் கலந்தெடுத்து மாணவர்களுக்குக் கற்பிக்கவும்—

பாயிரம் என்று சொல்லப்படுகின்ற முதல் நான்கு அதிகாரங்களான கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்னும் இவ்வதிகாரங்களைத் தனித் தொகுப்பாக அமைத்து மாணவர்களை மனப் பாடம் செய்யச்சொல்லவும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திருக்குறளைப் பற்றிப் பிற நாட்டு அறிஞர்கள் எவ்வாறு எளிமையாக விளக்கம் செய்து பாராட்டுகிறார்கள் என்பதையும், இயற்கையில் எளிமையாகக் காணக்கூடிய பொருள்களை வைத்துக் கொண்டு நீதிகளை எவ்வாறு வள்ளுவர் புகட்டுகிறார் என்பதையும் பற்றிய, சொற்பொழிவுகள் நிகழுமாறு அமைக்கப்படும்.

திருக்குறளை நன்கு கற்றறிந்த பேராசிரியப் பெருமக்களைக் கொண்டு திருக்குறள் விளக்கவுரைக் கூட்டங்கள் தமிழ் நாடெங்கிலும் மாவட்டங்கள் தோறும் ஏற்பாடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். குறிப்பாக தமிழிலக்கிய மேதைகள், பேரறிஞர்கள் போன்றோர் குறட்பாக்களைத் தங்கள்



**கு**றள் பக்தி நூலல்ல; கடவுளைக் காட்டும் எந்த விதமான மத நூலும் அல்ல; மதப் பிரச்சாரம் செய்யும் மதக் கோட்பாட்டு நூலும் அல்ல.. உண்மையான ஒழுக்கத்தை அதாவது, யாவருக்கும் பொருந்தும் சமத்துவமான ஒழுக்கத்தைப் போதிப்பதற்காகவே இருக்கின்றது.

நூல்களிலும், மற்ற முறைகளிலும் எவ்வாறு மேம்படுத்திக் காட்டியிருக்கிறார்கள் என்பது பற்றிய விளக்கமும் அளிக்க வகை செய்யப்படும்.

திருக்குறளின் அருங்கருத்துகளை, ஆய்வரங்கம், சிந்தனையரங்கம், பட்டிமன்றம், வழக்காடு மன்றம் போன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதன் வாயிலாக, பொதுமக்களிடையே பரப்புவதற்கு இம்மையம் முனையும்.

மகளிர் பள்ளிக் கூடங்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்திட, திருக்குறளை நாட்டியத்தின் வாயிலாகப் பயிற்றுவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் ஆடலும் பாடலும் என்றால் பொதுவாகவே மகளிர்க்கு ஆர்வம் சற்று மிகுதியாகவே இருப்பது இயல்பு. எனவே இதனைக் கருத்திற் கொண்டு மகளிர்க்குப் பாலப் பருவத்திலேயே நாட்டியங்கள் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும். எனவே திருக்குறளில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு சிறுசிறு காட்சிகள் கொண்ட நாடகங்களைத் தயாரித்து, அவற்றைப் பள்ளி மாணவ மணிகளைக் கொண்டே அரங்கேற்றவும் இம்மையம் முயலும்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளிடையே திருக்குறள் கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, வினாடி வினா நிகழ்ச்சி, பட்டிமன்றம் போன்ற போட்டிகளை நடத்தி, அவற்றில் சிறந்து விளங்கும் மாணவ மாணவியருக்குக் கோப்பைகள், பதக்கங்கள், சான்றிதழ்கள் ஆகியவற்றை வழங்கிப் பாராட்டவும், இதன் மூலம் அவர்களிடையே திருக்குறள் ஆர்வத்தையும் நாட்டத்தையும் அதிகரிக்கச் செய்யவும் இம்மையம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

வட்டந்[illegible]றும் [illegible] தேர்ந்த [illegible] ஒரு[illegible] நியமித்[illegible] [illegible]ருக்கு ஓர் [illegible] என்ற [illegible]யில், கிராம ம[illegible] களுக்[illegible] [illegible]படும், குறட்பாக்[illegible] தேர்ந்தெடுத்து விளக்[illegible]ம் அளித்திட வழிவகை செய்[illegible]ம்.

மலேசியா, இலங்கை, தென் ஆப்பிரிக்கா, பிஜி, மொரிஷியஸ், பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் தமிழர்கள் பெருமளவில் வாழ்ந்து வருகிறார்கள். தமிழ்ச் சங்கங்கள் பலவும் இந்நாடுகளில் இயங்குகின்றன. இச்சங்கங்கள் வாயிலாகத் திருக்குறள் கருத்துகளை அந்நாடுகளில் பரப்புவதற்கு இம்மையம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

அத்துடன் இச்சங்கங்களையெல்லாம் ஒருங்கிணைக்கும் வகையில் 'குறள் உலகப்பேரவை' என்னும் அமைப்பை உருவாக்கிட இம் மையம் முனையும், இதன் மூலம் உலகத் திருக்குறள் மாநாட்டினை நடத்திட, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திருக்குறள் நெறிபரப்பு மையத்தின் கீழ், மாவட்டந்தோறும் குறள் நெறிபரப்புத் திட்டம் எல்லாக் கல்வி நிலையங்களிலும் செம்மையாகச் செயல்படுமாறு கண்காணிப்பதும், திருக்குறள் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்வதும் இதன் பணிகளில் அடங்கும்.

திருக்குறள் ஆர்வம் கொண்டிருக்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் விழாக்கள் நடத்திட திருக்குறளில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்குக் கேடயம் தந்து, பரிசுகள் வழங்கிச் சிறப்பிக்க இம் மையம் திட்டமிட்டுச் செயலாற்றும்.

திருக்குறளில் பலர் அட்டாவதானம், தசாவதானம் செய்து கொண்டு வருகிற வளர்ச்சி காணப்படுவதால், அத்தகைய அறிஞர்களை அழைத்துப் பாராட்டி, பதக்கங்கள், சான்றிதழ்கள் வழங்கப்படும்.

1330 குறட்பாக்களையும் நன்றாக மனனஞ் செய்து ஒப்புவிக்கின்ற மாணவர்களுக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் திருவள்ளுவர் திருநாளன்று "திருக்குறள் விருது'' வழங்கிச் சிறப்பித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பரிசளிப்பு விழா தனிப்பட்ட முறையில், தனிச்சிறப்புடன் நடத்தப்படும்.



# தீயணைப்புப் படையின் தீரமிகு பணிகள்

ஆண்டுதோறும் ஏப்ரல் 14ஆம் நாள் தீத்தடுப்புப் பணிநாளாகக் கொண்டாடப்படுகிறது.

சமையல் முடிந்ததும் நெருப்பை அணைக்கத் தவறாதீர்கள். எண்ணெய் விளக்குகளைக் கூரை அருகிலோ, படுக்கை அருகிலோ வைக்காதீர்கள். பீடி சிகரெட் புகைப்பவர்கள் அவற்றை அணைக்காமல் கீழே போடாதீர்கள். படுக்கையிலிருந்தபடி புகைக்காதீர்கள். எரியும் ஸ்டவ்வில் எண்ணெய் விடாதீர்கள். அடுப்பருகே ஸ்பிரிட், பெட்ரோல், பஞ்சு போன்றவற்றை வைக்காதீர்கள். மின் சாதனங்களைக் கவனமாகப் பயன்படுத்துங்கள். குழந்தைகளைத் தீப்பற்றும் பொருட்களோடு விளையாட விடாதீர்கள். காற்றடிக்கும் வேளையில் குப்பை கூளங்களைச் சேர்த்து நெருப்பு வைக்காதீர்கள்.

இப்படிப்பட்ட எச்சரிக்கைகள் துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், படங்கள் தீயணைப்புப் படைப் பிரிவு மூலம் அவ்வப்போது வெளியிடப்பட்ட வண்ணம்தான் இருக்கின்றன.

கண்காட்சிகள் தோறும் இப்பிரிவினரால் தனி அரங்குகள் அமைக்கப்பட்டு, தீ விபத்தைத் தவிர்ப்பது - தீ விபத்திலிருந்து தப்புவதுபோன்றவைகளெல்லாம் காணவரும் மக்களின் கவனத்தில் நிற்கும்படி உணர்த்தப்படுகின்றன.

என்ன செய்து என்ன? தீ விபத்து நடக்காத ஆண்டே இல்லை எனலாம்.

### தீ விபத்து குறைகிறது

''ஆனால், விபத்தும் விளைவும் ஆண்டுக்கு ஆண்டு குறைந்தே வந்திருக்கின்றன'' என்று புள்ளி விவரங்களைத் தெரிவித்து அத்துறை இயக்குநர் திரு வி.கே. ராஜகோபாலன், ஐ.பி.எஸ். ''அந்த அளவுக்குத் தீயணைப்புப்படை வீரர்கள் தீவிரமாகச் செயல் படுகிறார்கள்'' என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டார்.

இவர்கள் கணக்குப்படி சென்னை மாநகரில் 58 குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. பெரும்பாலான தீவிபத்துகள் நெருக்கடி மிகுந்த குடிசைப் பகுதிகளிலேயே ஏற்படுகின்றன. 1981ல் இப்பகுதிகளில் 53 தீ விபத்துகள் நடந்துள்ளன. 1982ல் 36 தீ விபத்துகள் தான். 1983ல் 27ஆகக் குறைந்திருக்கிறது. பின்னர், 1984ல் அந்த எண்ணிக்கை 25 ஆகி, கடந்த 1985ஆம் ஆண்டில் அது 23 ஆக மட்டுப்பட்டிருக்கிறது.

கடுமையான தீ விபத்தென்பது 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் சேதம் -குறைந்த பட்சம் ஒருவரின் உயிரிழப்பு ஆகும். கடந்த ஆண்டில் இப்படிப்பட்ட தீ விபத்து ஒன்றே ஒன்றுதான் சென்னை சைதாப்பேட்டைப் பகுதியில் நடந்திருக்கிறது.

1985ல் 8,703 தீ விபத்து அழைப்புகள் இருந்தன. அங்கெல்லாம் விரைந்துபோய் 52.53 கோடி ரூபாய் பெறுமானமுள்ள பொருட்களைப் பாதுகாத்திருக்கிறார்கள் இவர்கள். ''இந்த ஆண்டில், மற்றைய ஆண்டுகளைக் சாட்டிலும் தீ விபத்து மிகமிகக் குறைந்த அளவிலேயே இருக்கும் எனக் கருதப்படுகிறது. ஏனென்றால் குடிசைப் பகுதியில் தகுந்த முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இரவு பகலாக 'வயர்லஸ்' வண்டிகளில் சுற்றுகிறோம். கோடையை ஒட்டி பெரிய குடிசைப்பகுதிகள் தோறும் ஒரு அவுட்போஸ்ட்- அதாவது ஒரு தீயணைப்பு வண்டி வைக்கப்பட்டிருக்கிறது. அங்கெல்லாம் 'வயர்லஸ்' சுடன் ஒருவரும் தற்காலிகமாக இருப்பார். சாதாரண குடிசைப் பகுதிகளிலெல்லாம் ஒரு பெரிய நீர்த் தொட்டியில் அவசரத் தேவைக்காகத் தண்ணீர் நிரப்பி வைத்திருக்கிறோம்'' என்று தெரிவித்த தீயணைப்புப் படைத் துணை இயக்குநர் திரு.வி. ஜெயபெருமாள் ''பெரும்பாலான தீ விபத்துக்களுக்கு மக்களின் கவனக்குறைவே காரணமாக இருக்கிறது. அலட்சியமே பெரும் சேதத்தை உண்டாக்குகிறது'' என்று மிக வருத்தத்தோடு கூறினார். குடிசைப் பகுதி மக்களுக்குத் தீ தடுப்புப் பற்றி அவ்வப்போது விளக்கப் படுவதாகவும் தெரிவித்தார்.





தீப்பிடித்த இடங்களில், உயிரையும் துச்சமென மதித்துப் படைவீரர்கள் அணைப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும்போது, அப்பகுதி மக்கள் உதவுவதாக எண்ணித் தரும் உபத்திரவங்களையும் அவர் வேதனையோடு விவரித்தார்.

### கவனம் காட்டாவிட்டால் எப்படி ?

பகலில் 11 மணியிலிருந்து 2 மணிவரையும், மாலையில் 6மணி முதல் 8 மணி வரையும் தான் தீ பரவும் நேரங்களாகப் பெரிதும் உள்ளன. இந்தச் சிறிது நேரத்தில்கூட கவனம் காட்ட முடியா விட்டால் எப்படி?

ஒரு தீயணைப்புப் படை இயக்குநர், துணை இயக்குநர் இருவர், 14 கோட்ட தீயணைப்பு அலுவலர், 16 உதவிக் கோட்ட தீயணைப்பு அலுவலர் ஆகியோரின் கட்டுப்பாட்டில் மற்றும் நிலைய தீயணைப்பு அலுவலர், உதவி நிலை தீயணைப்பு அலுவலர், முன்னணி தீயணைப்பு அலுவலர், எந்திரக் கம்மியர், ஓட்டுநர், தீயணைப்போர் எனத் தமிழ் நாடெங்கும் உள்ள இப்படைப் பிரிவில் அடங்கியுள்ளோர் 4,305 பேர் ஆவர்.



''தமிழ் நாடெங்கும் உள்ள தீத் தடுப்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 144. மாவட்டத் தலைநகரங்களிலும், பெரு நகரங்களிலும் இப்போதுள்ள தீயணைப்புப் படையைக் கிராமப் புறங்களிலும் விரிவாக்கத் திட்டமிருக்கிறது. இப்போது சில இடங்களில் தரப்பட்டுள்ள தீத் தடுப்பு உடைகள் பெரும்பாலான படை வீரர்களுக்கு அளிப்பதும், தீயைக் கட்டுப்படுத்தும் வண்ணங்களைப் பூசச் செய்வதும் போன்ற பல திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எங்கள் படைப்பிரிவின் முன்னேற்றத்தில் இத்துறைப் பணிகளை நவீனப் படுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்'' என்றார் துணை இயக்குநர் திரு வி.ஜெயபெருமாள்.

ஆண்டுதோறும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பில் இப்படை வீரர்களுக்கு விருது வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

### தீயணைக்கும் ''ஸ்நார்க்கல்''

ரூ. 40 லட்சம் செலவில் இப்படைக்காக வாங்கப்பட்ட 'ஸ்நார்க்கல்' (Snorkel) என்ற தீயணைப்பு வண்டி மூலம் 100 அடி உயரமுள்ள கட்டடங்களையும் தீவிபத்திலிருந்து காப்பாற்ற முடியும்.

தண்ணீர் எடுத்துச் செல்லும் வண்டிகள், தீயணைக்கப் பயன்படும் ஊர்திகள், உபரி ஊர்திகள், ஜீப்புகள், அலுவலர்களுக்கான வண்டிகள், நீர்திட்டங்கள் உள்ள இடங்களைக் கண்டறிந்து வருவோருக்கான மோட்டார் சைகிள்கள், ஆம்புலன்ஸ் வண்டிகள், வயர்லஸ் பொருத்தப்பட்ட ஊர்திகள் என ஏராளமான வண்டி வாகனங்கள் தீயணைப்புப் படைப் பணிகளுக்காகப் பயன்படுத்தப் படுகின்றன.

இங்கே பணிபுரிவோருக்கு ஆண்டுக்கு ஒருமுறை சீருடை அளிக்கப் படுகிறது. மலிவு விலை உணவுப் பொருட்கள் அரசின் கருணையால் வழங்கப்படுகின்றன. இது தவிர, மாதந்தோறும் பாதுகாப்புப் படியும் (Risk Allowance) உண்டு.

இந்திய அளவிலான தீயணைப்புப் படைப் பயிற்சிக் கல்லூரி நாகபுரியில் இருக்கிறது. அங்கும் ஆண்டுதோறும் தமிழக வீரர்களே எல்லாவற்றிலும் முதன்மை பெற்று வருகிறார்கள்.

நம்மாநில அளவில் - இப்படையில்பணிபுரிவோருக்கு, சென்னை பேசின்பிரிட்ஜ் பகுதியில் ஒரு பயிற்சிப் பள்ளி இருக்கிறது. தீயணைப்புப் பயிற்சி, ஊர்தி ஓட்டுநர் பயிற்சி, எந்திரக் கம்மியர் பயிற்சி எனப் பலவிதப்





பயிற்சிகள் அங்கே அளிக்கப்படு கின்றன. பள்ளிகள், தனி நிறு வனங்கள் மூலமும் பலர் இவ்வா றான பயிற்சிகளுக்காக இங்கே அனுப்பப்படுகிறார்கள்.

இப்படைக்கான வாகனங்க ளைச் செப்பனிட மாநிலப் பட் டறை ஒன்றும் இருக்கிறது.

**பாதுகாப்புப் படையும்கூட !**

தீ பிடித்தால் அணைப்பது மட்டுமல்ல அவர்கள் பணி. படைப் பெயர்தான் அப்படியே தவிர - வெள்ளப்பாதிப்பு, நிலச் சரிவு, கட்டட இடிபாடு போன்ற இயற்கைப் பாதிப்பு நேரத்திலும் இவர்கள் பணி மகத்தானதாக இருக்கிறது. மிருகங்கள் வதை படாமல் காத்தல், பாதுகாப்புப் படைப் பணிகளை ஏற்றல், பாதாள சாக்கடைப் பணியில் ஈடு பட்டு அவதிக்குள்ளாவோரைக் காத்தல், பழுதான லிப்ட்டில் சிக்கி யோரை மீட்டல், மீட்புப் பணி களில் முன்நிற்றல் ஆகியவற்றி லும் இந்தப் படைப் பிரிவு முழு மூச்சோடு ஈடுபடுத்தப்படுகிறது.

''வெறிநாய்க் கடியால் தொந் தரவா? தென்னையில் உள்ள விஷ வண்டுப் பெருக்கத்தால் ஆபத்தா? அவைகளை அழிப்ப தற்கும்கூட நாங்கள்தான் அழைக் கப்படுகிறோம். ஆகையால் - எங்கள் படை தீயணைப்புப்படை மட்டுமல்ல; தீயணைப்பு மற்றும் பாதுகாப்புப் படையும் கூட!'' என்றார், கோட்டத் தீயணைப்பு அலுவலர் திரு வி. மதுர பாண்டியன்.

அண்மையில்கூட தஞ்சை மாவட் டம் ஒரத்தநாட்டில் இந்த தென்னை வண்டுக் கடியால் ஒரு வர் மாண்டதும் - தீயணைப்புப் படையினர் அழைக்கப்பட்டு அந்த வண்டினங்கள் அழிக்கப் பட்டதும் பற்றிய செய்தி, செய் தித்தாள்களில் வெளியாயிற்று.

'வருமுன்னர்க் காவாதான்
வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்'

என்றார் திருவள்ளுவர். தீயின் கொடூரம் எப்படிப்பட்டதென்று இதன் மூலம் நாம் உணரலாம்.

அப்படிப்பட்ட தீயின் கொடுமை களைவதற்காக ஒரு தனிப்படை தமிழ்நாட்டில் எப்போது உரு வாக்கப்பட்டது தெரியுமோ?

**தீயணைப்புப் படை வரலாறு**

இதுபற்றி தீயணைப்புப்படை யின் முன்னாள் இயக்குநர் திரு எ. ரபேல் தெரிவித்த வரலாறு இது:

*1908 ஆகஸ்ட் மாதத்தில்,* சென்னையில் ஏற்பட்ட பெரும் தீவிபத்து ஒன்றை மனதில் கொண்டு -கையால் இயக்கும் பம்புகளோடும், நீராவியால் இயக் கப்படும் பம்புகளோடும் முதன் முதலில் ஒரு சிறு தீயணைப்புப் படை அமைக்கப்பட்டது. அதில் ஒரு ஓட்டுநர், 2 சுத்திகரிப் பாளர், 4 லஸ்கர்கள் மட்டுமே இருந்தனர்.

1914ல் மெரிவெதர் பம்பு இப்படைக்காக இங்கிலாந்தில் இருந்து வாங்கப்பட்டது. இதைப் பராமரிக்கும் பொறுப்பு மாநக ராட்சியிடமும், இயக்கும் பொறுப்பு ஆயுதக் காவல் படை யினரிடமும் ஒப்படைக்கப்பட்டது 1941ல், தனித்துறையான இப் படையினரின் பலம் 106ஆக உயர்த்தப்பட்டது.

1942ல்'சென்னை தீயணைப்புத் துறை' என்று இதற்குப் பெய ரிடப்பட்டது. பர்மா நாட்டின் தீயணைப்புத்துறை இயக்குநர் திரு டபுள்யு. ஏ.டாசர் இதன் இயக்குநராக நியமிக்கப்பட்டார். காவல்துறை ஆணையர் இதன் பொறுப்பை விட்டு விலகினார்.

இதன் பின்னர், தீயணைப்புத் துறையில், இங்கிலாந்தில் பயிற்சி பெற்ற அலுவலர் பலரும் சென்னைக்கு வரவழைக்கப்பட்டு நியமிக்கப்பட்டார்கள். நகரெங்கு முள்ள முக்கிய இடங்களில் தண் ணீர்த் தொட்டிகள் வைக்கப்பட் டன. 1947ல் இந்தியா விடுதலை பெற்ற பிறகு காவல்துறைத் தலைவரிடமே மீண்டும் இப் படைப் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டது. 1954 வரையில் இப்படி யிருந்தது. பிறகு, தீயணைப்பு மண்டல அலுவலர் பதவி 2 உருவாக்கப்பட்டு, அவர்களாலும் காவல்துறை அதிகாரிகளாலும் இத்துறை நிர்வகிக்கப்பட்டது.

1966ல் கூடுதல் இயக்குநர், துணை இயக்குநர் பதவி உரு வாக்கப்பட்டுச் சீரமைக்கப் பட்ட தீயணைப்புப்படை, 1967 முதல் தனியாகச் செயல்பட முடி வெடுக்கப்பட்டது. இயக்குநர் பதவி உருவாக்கப்பட்டு, அதை தீயணைப்புத்துறை கூடுதல் இயக்குநரைக் கொண்டு நிரப்பி தனியே செயல்படத் தமிழ்நாடு அரசு ஆணையிட்டது.

இதுதான் இன்றைய தீயணைப் புப் படையின் வரலாறு ஆகும்.

தீயணைப்பு அழைப்பிற்கான தொலைபேசி எண்கள் 101,102, 103 ஆகியவைகளாகும். இவை தவிர 82111, 82112, 82113, 811136 ஆகிய எண்களிலும் அழைக்கலாம்.

**—பி.எல். ராஜேந்திரன்**



# மலர் தரும் தேன் மருந்தும் ஆகும்

**ஏ.ஆர்.என், துரைராஜ்**

'செந்தமிழ் நாடென்னும்போதி
னிலே-இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே'

என்று பாடினார் மகாகவி சுப்பிர மணிய பாரதி.

பேச்சிலும் எழுத்திலும் தேன் போலத் திகழ்ந்ததால் திரு.வி.க. தேனருவி திரு.வி.க. என்ற சிறப் புப் பெயரைப் பெற்றார்.

தேன் இலக்கியங்களில் அடிக்கடி பேசப்படுகிறது.

தீபகம், சுவர்யம், விருஷ்யம், மேத்தியம், விரணரோபம் என்று பல்வேறு பெயர்கள் தேனுக்கு உண்டென்று ஆயுர்வேத சாத்தி ரங்களின் வாயிலாக அறிந்து கொள்கிறோம்.

தேனைப் புகழ்ந்துபாடாத கவி ஞர்கள் இல்லை.

தேன் பற்பல நோய்களை நீக்கப் பயன்படும் சஞ்சீவியாக வும் திகழ்கிறது. இயற்கை அன்னை நமக்கு வழங்கியுள்ள பரம்பொருள் மூலிகைகளில் தேனும் ஒன்று.

**தீரும் நோய்:**

நீர்க்கோவை, கண்சிகப்பு, அழற்சி மூச்சுக்குழல், ஜுரம், இருமல், குமட்டல் வாந்திபேதி, ஜலதோஷம், கக்குவான், மார்புச் சளி, உடல் அழகுபெற, தாது பலம் பெற, சிறுநீர்கடுப்பு, மலச் சிக்கல், நரம்புத்தளர்ச்சி நீங்க ,இரத்த விருத்தி ஏற்பட தேன் சிறந்தது.

## உபயோக முறை:

**நீர்க்கோவைக்கு:**

தேவையான எலுமிச்சம்பழச் சாறு 56 கிராம், சுத்தமான தேன் 28 கிராம் இவை இரண் டையும் சேர்த்து நன்கு கலக்கி அருந்தி வந்தால், நீர்க்கோவை நீங்கி நலம் பெறலாம்.

**கண்சிவப்பு நீங்க:**

நெல்லி விதை 25 கிராம், கடுக் காய் சுமார் 75 கிராம், ஆல்பக் கோடா 50 கிராம், இவை அனைத்தும் சேர்த்து அம்மியில் வைத்து அரைத்து லேகியம் போலாக்கி, 21 கிராம் தேன் கலந்து சாப்பிட்டு வரக் கண் சிவப்பு நீங்கும். அழற்சி, மூச்சுக் குழல், ஜுரம் ஆகியவையும் குணமாகும்.



*200 மி.லி. கஞ்சியில், 4கிராம்* தேன் கலந்து கொடுக்க மேற் கண்ட பிணிகள் நீங்கும்.

**இருமல் போக:**

தேவையான இஞ்சிச்சாறு, எலு மிச்சம் பழச்சாறு, தேன் இவை மூன்றையும் சம அளவு எடுத்துக் கலந்து அருந்திவரின் இருமல் விலகும்.

**குமட்டல், வாந்தியுடன் பேதி யாகும் என்றால்:**

தேவையான வசம்பு, மயி லிறகு ஆகிய இரண்டையும் சேர்த்துச் சுட்டுச் சாம்பலாக்கித் தேனில் குழைத்து, காலை-மாலை கொடுக்க மேற்கண்ட நோய்கள் நீங்கும்.

**ஜலதோஷம் நீங்க:**

ஒரு தம்ளர் காய்ச்சிய பசும் பாலில் சுத்தமான தேன் 28 கிராம் கலந்து காலையில் அருந்தி வந்தால் ஜலதோஷம் நீங்கும்.

**கக்குவான் இருமல்:**

தேவையான படிகாரத்தை எடுத்து அம்மியில் வைத்து நைய அரைத்துத் தூள் செய்து, அத் தூளில் 3 கிராம் எடுத்து அதற்குத் தகுந்த தேனை விட்டுக் குழப்பி ஒரு நாளைக்கு 3 முறை சாப் பிட கக்குவான் இருமல் நீங்கும்.

**தீப்பட்ட ரணம்:**

உடலில் எந்தப் பாகத்திலா வது ,நெருப்பு சுட்டவுடன் சுத்த மான தேனை எடுத்து, ரணம் உள்ள இடத்தில் பூசவும், ரணம் ஆறிவிடும்.

**கட்டிகள் மறைய:**

தேவையான, கோலி அளவு சுண்ணாம்பை எடுத்து, அதற்குத் தகுந்த தேன் விட்டுக் குழப்பிக் கட்டியின் மேல் தடவவும். தொடர்ந்து தடவி வந்தால் குணம் காணும். பழுக்காத கட்டி யும் பழுத்து உடைந்துவிடும்.

**பித்தம் தெளிய:**

தேவையான, நெல்லிப்பொடி எடுத்து அதில் தேன் கலந்து உண்டுவந்தால், பித்தம் அகலும். அல்லது தேவைப்பட்ட நெல் லிக்காய்ச் சாறறில் தேன் கலந்து அருந்தினாலும் பித்தம் நீங்கும்.

**நரை திரை, மூப்பின்றி வாழ:**

100 கிராம் இஞ்சியை வாங்கி மேல் தோல் நீக்கி அதைப் பாகப் படுத்தி அகன்ற புட்டியில்

போட்டு நல்ல தேனில் ஊற வைத்து, அனுதினமும் கற்பக முறைப்படி சாப்பிட்டு வந்தால் நாளடைவில் நரைதிரை, மூப் பின்றி நலமாகவும் ஆரோக்கிய மாகவும் வாழலாம்.

**மார்பில் தோன்றும் சளி நீங்க:**

இஞ்சித் தூளும், தேனும் கலந்து தொடர்ந்து சாப்பிட, மார்பில் அடைந்து காணப்படும் சளி கரைந்து உடல் நலம் காணும்.

**உடல் அழகுபெற:**

இரவு உணவு முடிந்த பிறகு தூரம் உலாவிவிட்டு, தூங்கச் செல்லுமுன், பசும்பாலில் தேனும் சிறிது மஞ்சள்பொடியும், குங்கு மப்பூவும் கலந்து அருந்த, உடல் மினுமினுப்பும், அழகு பெறும்.

**தாதுபலம்:**

கோழி முட்டையை உடைத்து தம்பளரில் ஊற்றி நன்கு அடித்து, 7 கிராம் தேன் கலந்து சாப்பிட, நாளடைவில் தாது பலம் பெறும்.

குறிப்பு: 7 கிராம் என்பது, இரண்டு தேக்கரண்டி அளவாகும்.

சுக்கிலம் வலிமை பெறவும், சிறு நீர்க் குழாயில் ஏற்படும் கடுப்பு நீங்கவும்.

ஓர் அளவாக, நெல்லிக்காய் களை எடுத்து அம்மியில் வைத்து தட்டி தேவையான நெல்லிக்காய் சாற்றில் தேன் கலந்து அருந்தி வரவும்

**மலச்சிக்கல் நீங்க:**

தேவையான நெல்லிக்காய் களை நறுக்கி, ஒரு தம்ளரில் போட்டு, அதற்குத் தகுந்த தண் ணீர் ஊற்றி இரவில் ஊறவைத்து காலையில் பல் துலக்கிய பிறகு அந்நீரில் சிறிது தேன்விட்டு அருந்தி வந்தால் மலச்சிக்கல் போகும்.

**வாய், தொண்டை, நாக்கு ஆகிய வற்றில் உள்ள ரணத்திற்கு:**

தேவைப்பட்ட நெல்லிச்சாறு தேன், திப்பிலிப்பொடி இம்மூன் றையும் ஓர் அளவாக எடுத்து இம் மூன்றையும்—குழைத்து உள் வாய், நாக்கு ஆகியவைமீது தடவினால் அங்கு காணப்படும் ரணம் ஆறும்.

**விக்கல் நீங்க:**

ஒரு தம்ளர் தண்ணீரில், தேனைக் கலந்து அருந்த விக்கல் அகலும்.

**உடல் வலிமை பெறவும், இரத்த விருத்தி பெறவும்:-**

ஒரு தம்ளர் ஆவின் பாலில், தேன் கலந்து பானமாக அருந்தி வந்தால் நாளடைவில் உடல் வலிமை அடைவதோடு, இரத்த ஓட்டம் அதிகமாவதுடன் இரத்த சக்தியும் பெருகும்.

**கண் பார்வை மங்காமல் இருக்க:**

நெல்லிப் பொடியில் தேன் விட்டுக் குழைத்து இரவில் உண விற்குப் பின் அருந்திவர, முதுமை யிலும் கண்பார்வை மங்காமல் இருக்கும்.

**சளி முறிவதற்கு:**

தேவையான, கற்பூர வெற் றிலையைக் கொண்டு வந்து, அம்மியில் வைத்து இடித்து, அச்சாற்றுடன் தேன் கலந்து கொடுக்க சளி முறிந்து விடும்.

**களைப்பு நீங்க:**

அதிகமான உழைப்பு, சிந் தனை உள்ளவர்கள் தேன்பானம் அருந்தி வந்தால், எளிதாக உடற் களைப்பு நீங்கும். புதிய தெம்பு ஏற்படும்.

**முடக்கு வாதம் குணமாக**

தேனைத் தினசரி கொஞ்சம் அருந்தி வந்தால், முடக்கு என்ற வாதம் அதாவது கால், கை மூட்டுகளில் ஏற்படும் நோய் நீங்கும், மற்றும், தேன் கற் கண்டு சாப்பிட்டால் வாத நோயும் நீங்கும்.

ஜுரம், பித்தம், இருமல் ,மலச் சிக்கல் நீங்கவும், பலம் இரத்த சுத்தி பெறவும் :—

தான்றிக்காய், கடுக்காய், நெல்லிக்காய் வற்றல் , இவை அனைத்தையும் ஓர் அளவாக எடுத்து, வெயிலில் 3 தினங்கள் காய வைத்து, பின், எல்லாவற் றையும் எடுத்து, உரலில் போட்டு இடித்து, மெல்லிய துணியில், இவைகளைப் போட்டுச் சலித்து, ஒரு பாட்டிலில் சேமித்து வைத் துக் கொண்டு, காலை - மாலை இருவேளை ஒரு தேக்கரண்டி அளவுத் தூளுடன் இரண்டு தேக்கரண்டித் தேன் சேர்த்துக் குழப்பிச் சாப்பிட்டு வந்தால், மேலே கண்ட பிணிகள் யாவும் நீங்கும்.

குறிப்பு : சரக்குகள் யாவும் நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும்.

## மண் பரிசோதனைக்குப் புதிய கருவி!

பூமிக்கு அடியில் போடப்பட் டுள்ள டெலிபோன் கேபிள்கள் பழுதடைந்துள்ளனவா என்பதை எப்படிக் கண்டறிவது? ''கேபிள் டெஸ்டர்'' என்னும் கருவி இதற்கு உதவுகிறது. அது மட்டுமன்று, இக்கருவியைக் கொண்டே, மண்ணின ஈரப் பசையையும் அதன் உப்புச் சத்தின் அளவையும் கூடக் கண்டறிய முடியுமாம்.

''மண்ணின் ஈரத்தன்மையின் அளவை அறியவும், மண்ணில் உப்புச்சத்து எவ்வளவு உள்ளது என்பதைக் கணக்கிடவும் முன் பெல்லாம் இருதனித்தனிக் கருவி கள் தேவைப்பட்டன; அதனால் செலவு அதிகமானது மட்டு மன்றி, காலமும் வீணாகியது. ஆனால் இப்போதோ இந்தக் கருவியைக கொண்டு இரண் டையும் ஒரே சமயத்தில் அறிய முடியும்'' என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்தக் 'கேபிள் டெஸ்டர்' கருவியைக் கையில் எளிதில் எடுத்துச் செல்லலாம்; இக்கருவி மின்சாரச் சிக்னல்களை வெளி யிடுகிறது; பரிசோதனைக்கென எடுத்துக்கொள்ளப்படும் மண் வழியாக இந்தச் சிக்னல்கள் போய்த் திரும்ப எவ்வளவு நேரம் பிடிக்கிறது. என்பதைக்கொண்டு அந்த மண்ணின் ஈரத்தன்மை கணக்கிடப்படுகிறது. அதேபோல திரும்பி வரும் சிக்னல்கள் எவ் வளவு வலுவானவையாக உள் ளன என்பதை வைத்து, அந்த மண்ணின் உப்புத் தன்மையை மதிப்பிடுகிறார்கள். ஆராய்ச்சி யாளர்கள், பாசனத்துறை நிபு ணர்கள் ஆகியோருக்கு இந்தச் சாதனம் மிகவும் பயன்படும்.

கலிபோர்னியாவில், ரிவர் சைட் என்னும் நகரிலுள்ள "அமெரிக்க வேளாண்மை ஆய்வு மைய" விஞ்ஞானிகள் தங்களது ஆய்வின் மூலம் இதனைக் கண்டுபிடித்துள்ளனர்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்



**ஆயுள் நீடிப்பு:**

தேனும், பாலும் கலந்து அருந்திவந்தால் வாழ்வு நீடிக் கும். பிணி அண்டாது என்று சித்தர் சாத்திரம் கூறுகிறது. மற்றும், எல்லா வகையான ஊட்டச் சக்திகள் நிரம்ப இருக் கின்றன. தேனும் பாலும் இந்த இரண்டையும் கலந்து அருந்தி னால் சுவையும் அதிகம். பெறக் கூடிய பயனும் அதிகம்.

**இரத்த சோகை, இரத்தம் போதாமை ஆகியவை குணமாக:**

தேனையும், ரோஜாவையும் கலந்து உண்டு வந்தால், உடல் நலம் பெறுவதோடு மேற்கண்ட பிணிகள் நீங்கி,இரத்தத்தில் இரும் புச் சத்து சேர்ந்து வளம் பெரு கும்; மற்றும் கர்ப்பிணிகள் சாப் பிட கருவிலுள்ள சிசுவுக்கும் பல நலன்கள் ஏற்படும்.

**முதியவர் வாலிபர் ஆகலாம்!**

வயதானவர்களுக்குத் தேனால் மிகவும் நன்மை. முதுமையால் வரும் பல பிணிகள் அகலும். தேவையான, கடுக்காயைக் கொண்டு வந்து இடித்துத் தூள் செய்து சேமித்து வைத்துக் கொண்டு,அத் தூளுடன் தேனைக் குழைத்து, மாலையில் தவறா மல் சாப்பிடவும். இஞ்சிச்சாறும் தேனும் கலந்து காலையில் தவ றாமல் உண்ணவும், தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் முதியவரும் வாலிபர் ஆகலாம்.

**40 வயதுக்கு மேல் இரத்தம் கெடாமல் இருக்க:**

தேவையான, நெல்லிக்காய் களை ஒரு புட்டியில் போட்டு, அதற்குத் தகுந்த தேனை நிரப்பி ஊற வைத்து 2 வாரம் சூரிய வெளிச்சத்தில் வைத்து , பிறகு தினந்தோறும் ஒரு காய் தேனு டன் ஒரு மண்டலம் (48 நாள்) சாப்பிட்டு வரவும்.

**வாயு சம்பந்தமான நோய்கள் நீங்க:**

வெள்ளைப் பூண்டை பாலில் வேக வைத்து தேன் கலந்து சாப் பிட்டால், வாயு சம்பந்தமான நோய்கள் நீங்கும்.

**இடுப்புவலி, பாதவலி, கால் கைகளில் மூட்டுவலி விலக:**

பொன்னிறமாய் வறுத்த கோதுமை மாவில் 30 கிராம் எடுத்துக் கொண்டு அத்துடன் போதுமான அளவு தேன் சேர்த்துப் பிசைந்து காலை — மாலை சாப்பிட்டு வர மேற் கண்ட பிணிகள் அகலும்.

**சீதபேதி நீங்க:**

மாம்பழத் தோலிலும் வைட்ட மின் 'சி' சத்து அ[illegible]கியுள்ளது. எனவே, பழத்தோ[illegible] எறிந்து விடுதல் கூடாது. ஆகையால், மாம்பழத்தின் தோலைப் பாலில் நன்றாக அரைத்துத் தேனுடன் கலந்து உண்டு வந்தால் சீதபேதி அகலும். வெங்காயச் சாற்றுடன் தேனைக் கலந்து சேர்த்துச் சாப் பிட்டாலும் சீதபேதி அகலும்.

**உடல் நலம் பெற:**

பலாப்பழத்தை அதிகமாகச் சாப்பிட்டு விட்டால் வயிற்றோட் டம் ஏற்பட ஏதுவாகும்.எனவே இதைத் தேனில் நனைத்து உண்பது மிகவும் நல்லது.மற்றும் இதை வெறும் வயிற்றோடு உண்பது மேலும் சிறப்புத்தரும்.

**ஆண்மை பெருக, நீர்த்த சுக்கிலம் கெட்டிப்பட:**

தேவையான வெங்காயத்தை வதக்கி, அதில் தேன் விட்டுச் சாப்பிட்டு, இரவில் படுக்கைக்குப் போகுமுன் பசுப்பால் அருந்தி வந்தால் ஆண்மை பெருகு வதுடன், நீர்த்த சுக்கிலமும் கெட்டிப்படும் என்பதில் ஐய மில்லை.

**சீதபேதிக்கு:**

வெங்காயச் சாற்றுடன் தேனைக் கலந்து சேர்த்துச் சாப் பிட்டால் சீதபேதி நலமாகும்.

**தாதுபுஷ்டிக்கு:**

தேவையான, வெங்காய விதை யோடு, தேன் பால் ஆகியவை கலந்து தொடர்ந்து அருந்தி வந்தால், தாதுபுஷ்டி உண்டா கும்.

## பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில்

**மாவட்ட வயது வந்தோர் கல்வித் திட்டம்**

இம்மாவட்டத்தில் சிங்கம் புணரி, தேவகோட்டை, இ[illegible]ள யான்குடி, மானாமதுரை, [illegible]வ கங்கை ஆகிய ஒன்றியங்களில் மாநில வயதுவந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் 500 மையங் களில் 15,313 கற்போர்களும், 45 ஏட்டறிவு மையங்களில் 1,350 கற்போர்களும், கல்லூரி களால் நடத்தப்படும் 50 மையங்களில் 1655 கற்போர் களும், ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் 300 மையங்களில் 9516 கற் போர்களும் 'ட்ருபா'( திருப்பத் தூர்) தொண்டு நிறுவனம் மூலம் 20 ஏட்டறிவு மையங் களில் 609 கற்போர்களும் 6 முறைசாராக் கல்வி மையங் களில் 180 கற்போர்களும் பயன் பெற்றுள்ளனர்.

**போக்குவரத்து**

மாவட்டம் தொடங்கப்பட்ட திலிருந்து 871 புதிய வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 28.2.86 தேதி வரை 228 பேருந்துகள், 311 பொதுச் சரக்கு வாகனம், 149 தனியார் சரக்கு வாகனம், 40 வாடகை கார், 102 சுற்றுலாப் பேருந்து என எண் ணிக்கை அதிகரித்துள்ளன. இதன் மூலம் அரசுக்கு வருமானம் வரியாக ரூ.1,15,61,531-60-ம், கட்டணமாக ரூ. 6,13,895-80ம் வசூலிக்கப்பட்டுள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர் நலத்திட்டம்**

பிற்படுத்தப்பட்டோர் மாண வர்களுக்கு ரூ. 52178 செலவில் பாடப் புத்தகங்களும். ரூ. 54000 செலவில் பள்ளிச் சீருடைகளும் ஏற்கெனவே இயங்கி வரும் 16 விடுதிகளில் 710 மாணவர்களுக்கு உணவு உடைகளும், குன்னக்குடி யில் ஒரு விடுதியில் 50 மாண வர்களும் பயனடைந்துள்ளனர். பிற்படுத்தப்பட்டோர் சீர் மர பினர் வகுப்பைச் சேர்ந்த 6225 மாணவியர்களுக்கு ரூ.10,06,243 —கல்வித் தொகையாக வழங்கப் பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் வகையில் குடியரசு தினவிழா வில் முதல் 3 மாணவிகளுக்கு ரூ. 600 பரிசுத் தொகையாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்கள்.

நாவிதர் சலவைத் தொழி லாளி இனத்தவர்கள் 96 நபர் களுக்கு இலவசமாக. ரூ. 3,600 மதிப்புள்ள கருவிகள் நாவிதர், நரிக்குறவர், சலவைத் தொழி லாளி ஆகியோருக்கு ரூ. 51,603 —மதிப்பில் நிலம் கையகப் படுத்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

# எலக்ட்ரானிக் கார்கள் தயார்!



தகவல் தொடர்புக்கான மூன்று புதிய செயற்கைக் கோள்களை அமெரிக்க விண்வெளிஓடம் மூலமாக அடுத்த ஆண்டுத் துவக்கத்தில் விண்வெளியில் ஏவுவதற்குச் 'சர்வதேச தொலைத் தொடர்பு செயற்கைக்கோள் நிறுவனம் (இன்டெல்சாட்) ஒப்புக் கொண்டுளளது.

'இன்டெல்சாட்' நிறுவனத்துக்கும், அமெரிக்க விண்வெளி நிறுவனத்துக்கும் (நாசா) இடையே, இதுபற்றிய உடன்பாடொன்று பிப்ரவரி மாதம் கையெழுத்திடப் பட்டது. இது, 18 கோடி டாலர்களுக்கான ஒப்பந்தம்.'

''இன்டெல்சாட் VI ''என்று பெயரிடப்படும் இந்தச் செயற்கைக் கோள்களில் முதலாவது 1987 ஜூலை 15ஆம் தேதியன்று விண்வெளியில் ஏவப்படும்; இரண்டாவது செயற்கைக்கோள், 1988 பிப்ரவரி 2ஆம் தேதியிலும், மூன்றாவது செயற்கைக் கோள் 1991ஆம் ஆண்டிலும் ஏவப்படும்.

இந்தச் செயற்கைக் கோள்கள் இதற்கு முன்பு விண்வெளியில் எப்போதுமே ஏவப்பட்டிராத மிகப்பெரிய, அதிநுட்பமான செயற்கைக் கோள்களாக இருக்கும். ஒவ்வொன்றும் 30,000 இருவழித் தொலைபேசித் தொடர்புகளையும், 2 டெலிவிஷன் அலை வரிசைகளையும் கையாளக்கூடிய திறன் படைத்தவையாக இருக்கும். இதற்கு முன்பு ஏவப்பட்ட ''இன்டெல்சாட்'' செயற்கைக் கோள்களைவிட, இந்தச் செயற்கைக்கோள்கள் ஒவ்வொன்றும் எட்டு மடங்கு திறன் கொண்டது ஆகும்.

சாலெஞ்சர் விபத்திற்குப் பிறகு, விண்வெளி ஓடத்தைப் பயன்படுத்துவதற்கு வர்த்தக நிறுவனம் ஒன்றுடன் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டிருப்பது இதுவே முதல்தடவையாகும்.

''இன்டெல்சாட்'' நிறுவனம் லாபநோக்கற்ற ஒரு கூட்டுறவு அமைப்பாகும். இதில் 110 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. சர்வதேசத் தகவல் தொடர்பிற்கான செயற்கைக் கோள்களை இந்த நிறுவனம் தயாரித்து நிர்வகிக்கிறது.

இன்றைய எலெக்ட்ரானிக்ஸ் யுகம், கார் சவாரியை மேலும் சொகுசு மிக்கதாக்கி வருகிறது.

அமெரிக்காவில் போர்ட், ஜெனரல் மோட்டார்ஸ் என்னும் மோட்டார் வாகன நிறுவனத்தினர், தங்களது புதிய கார்களில் அதிநூதனமான எலெக்ட்ரானிக் சாதனங்களைப் பொருத்தியுள்ளனர்.

''காரில் உள்ள பெட்ரோல் எவ்வளவு தூரத்திற்குத் தாக்குப் பிடிக்கும்? இந்த வேகத்தில் போனால், குறிப்பிட்ட ஓர் இடத்தை அடைய எவ்வளவு நேரம் பிடிக்கும்? வண்டிக்கு வெளியே நிலவும் உஷ்ணநிலை என்ன?'' என்பது போன்ற விவரங்களை ஒரு கம்ப்யூட்டர் சாதனம் கணக்கிட்டுத் தெரிவிக்கிறது.

பின்னாலே வருகின்ற வாகனங்களைப் பார்ப்பதற்கு உதவும் 'ரியர்வியூ' கண்ணாடியும் கம்ப்யூட்டர் மயமாக்கப்பட்டுள்ளது; இந்தக் கண்ணாடி பகல்நேரத்திற்கும் இரவு நேரத்திற்கும் தகுந்தாற்போலத் தன்னை மாற்றியமைத்து இயங்கும் திறன் படைத்தது.

ஜெனரல் மோட்டார்ஸ் தயாரிக்கும் ''ஓல்ட்ஸ்மோபில்'' காரில் ''டாஷ்-போர்ட்'' பகுதியில் ஒரு கருவி அமைக்கப்பட்டுள்ளது; பெட்ரோல் குறைந்துவிட்டால், இந்தக் கருவியில் உள்ள ''இன்டிகேட்டர்'' ஆரஞ்சு நிறமாக மாறிவிடுகிறது.

இந்நிறுவனம் தயாரித்துள்ள 'பியூக்' காரில், மிகவும் நுட்பமான சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன; காருக்கு உள்ளே நிலவும் வெப்ப நிலையைக் குறைக்கவோ அல்லது அதிகரிக்கவோ வேண்டுமா? ரேடியோவை இயக்க வேண்டுமா? மீட்டர்களைக் கண்காணிக்க வேண்டுமா? இந்தக் காரில் உள்ள கம்ப்யூட்டர் திரையில் விரலால் தொட்டாலே போதும்; விரும்பிய பணி நடக்கும்.

கார்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளிலும் மிகுந்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. போர்ட் காரில் பொருத்தப்பட்டுள்ள நூதன 'பிரேக்'குகளை இயக்குவதன் மூலம், வண்டியை நினைத்த இடத்தில் 'சட்'என்று நிறுத்த முடியும்; அவ்வாறு பிரேக் போடும் அதேசமயம், வண்டியை டிரைவர் தாம் விரும்பும் திசையில் திருப்பவும் வகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் விபத்துக்களைக் குறைக்க முடியும்.

இவை எல்லாமே, தற்போதைய எலெக்ட்ரானிக்ஸ் யுகத்தின் ஆரம்பங்கள்தான்; காரின் பல்வேறு யந்திரங்களையும், கம்ப்யூட்டரைக் கொண்டே கட்டுப்படுத்தும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்கிறார்கள் கார் தயாரிப்பாளர்கள்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்







# தானியப் பாதுகாப்பு

ஜி. பி. அரங்கநாதன்
துணை இயக்குநர்
தானிய சேமிப்பு இயக்கம்
மத்திய உணவுத்துறை.

கடந்த சில ஆண்டுகளில் நவீன விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தியதன் மூலமும், பசுமைப் புரட்சியின் விளைவாகவும் உணவு உற்பத்தியில் இந்தியா தன்னிறைவை அடைந்துள்ளது. தற்போது சுமார் 151 மில்லியன் மெ.டன் அளவிற்கு உணவு உற்பத்தியைப் பெருக்கி இருக்கிறது. பல்வேறு இயற்கையின் கோளாறுகள், சோதனைகளுக்கிடையில் உற்பத்தி செய்துள்ள தானியத்தைச் சேதமின்றிக் காப்பது மிகவும் அவசியமாகிறது. பயிர்ப் பாதுகாப்பு எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் தானியத்தைச் சேதமின்றிக் காப்பதும் ஆகும்.

**விஞ்ஞான முறையில் தானிய சேமிப்பின் அவசியம்:**

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் உணவுதானியங்கள் விவசாயிகள், வியாபாரிகள், அரசு ஏஜண்டுகள் மட்டத்தில் சேமிப்பில் வைக்கப்படுகின்றன. இந்திய அரசு மற்றும் மாநில அரசுகள் நவீன முறையில் தானியப் பாதுகாப்பிற்குப் பெரிதும் முயற்சிகளை மேற்கொள்கின்றன. தற்சமயம் உற்பத்தியாகும் தானியத்தைச் சேதமின்றிக் காக்க 15 சதவீத உற்பத்தி அளவிற்கே நவீன தானிய சேமிப்புக் கிடங்கு வசதிகள் உள்ளன. போதுமான பாதுகாப்பு இன்றித் தானியங்களைச் சேமிக்கும் போது தானியங்களின் தரமும், அளவும் குன்றி அதன் மதிப்புக் குறைந்துவிடுவதோடு மட்டுமில்லாமல், அதன் சத்துப்பகுதி சிதைக்கப்பட்டு ஊட்டச்சத்துகள் இல்லாதவாறு செய்யப்பட்டு விடுகின்றன. இது ஒரு தேசிய இழப்பாகும்.


சீர் செய்யப்பட்ட மண்குதிர்

**அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகள்:**

அறுவடைக்குப்பின் தானியங்களிடையே பல்வேறு மட்டங்களில் உண்டாகும் இழப்பைக் கண்டறிய இந்திய அரசு, டாக்டர் பான்ஸே என்பவர் தலைமையில் வல்லுநர் குழு ஒன்றை அமைத்து ஆய்வு செய்ததில் கீழ்க்கண்டவாறு இழப்பு ஏற்படுவதாகத் தெரியவந்தது:

1. கதிரடிக்கும் களங்களில் ஏற்படும் இழப்பு—1.68%
2. போக்குவரத்தில் உண்டாகும் இழப்பு—0.15%
3. உணவிற்காகப் பக்குவப் படுத்திக் கையாளும் போது இழப்பு—0.92%
4. சேமிப்பின் போது ஏற்படும் இழப்பு—6.58

மொத்த இழப்பு —9.33%

**சேமிப்பில் ஏற்படும் இழப்பு:**

| | |
|---|---|
| புழுப்பூச்சிகளால் | 2.55% |
| எலிகளால் | 2.50% |
| பறவைகளால் | 0.85% |
| ஈரப்பதத்தால் | 0.68% |
| மொத்தம் | 6.58% |

இவ்வாறு இந்தியாவில் ஏற்படும் மொத்த தான்ய இழப்பானது, தமிழகத்தின் உறபத்தியைக் காட்டிலும் அதிகமாகிறது.

ஒவ்வொரு விவசாயியும் தன் குடும்பத் தேவைக்கான உணவிற்காகவும் தன்னை அண்டி வாழும் வீட்டு விலங்கினங்களுக்குத் தேவையான உணவிற்காகவும், விதைகளுக்காகவும், நல்ல விலை வரும் சமயத்தில் விற்பனை செய்து பயனடைவதற்காகவும் தானியங்களைச் சேமித்து வருவது மிகவும் அவசியமாகிறது. இத்தகைய சேமிப்புக் காலங்களில்தான், தானியங்களில் பெரிய இழப்பு உண்டாகிறது.

இத்தகைய பேரிழைப்பைத் தவிர்த்து விவசாயிகளிடையே சேமிப்பதில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த இந்திய அரசு ''தானிய சேமிப்பு இயக்கம்'' என்னும் நாடு தழுவிய ஒரு சீரிய திட்டத்தைத்துவங்கி அதன் மூலம் தன் பணியைச் செய்து வருகிறது.

**தானிய சேமிப்பு இயக்கத்தின் நோக்கங்கள்:**

விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் நவீன தானிய சேமிப்புப் பற்றிய நுணுக்கங்களைக் கற்பித்தல்.

விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும், உணவுத்துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் விஞ்ஞான முறையில் தானிய சேமிப்புக் குறித்துச் செயல்முறை விளக்கங்களுடன் பயிற்சி அளித்தல்.

விவசாயிகளுக்கு உலோகத்தாலோ, அலோகத்தாலோ ஆன, பல தரப்பட்ட நவீன சேமிப்பு வடிவங்களைப் பயன்படுத்த உற்சாகமூட்டி அறிவுறுத்தல்.

மாநில அரசுகளுடன் தொடர்பு கொண்டு விவசாயிகளுக்குக் கிடங்கு வசதி, இரசாயன மருந்துகள் ஆகியவை தடங்கலின்றிக் கிடைக்குமாறு பார்த்துக் கொள்ளல்.

மாநிலத்திலுள்ள அனைத்து உழவர் பயிற்சி நிலையங்களுக்கு

கிராம அளவில் விஞ்ஞான முறையில் தானியப் பாதுகாப்புச் செய்வதில் உதவி அளித்தல்.

**பயிற்சியும் செயல் முறை விளக்கங்களும்:**

தானிய சேமிப்பு இயக்கம், உதவித்தொகையுடன் கூடிய மற்றும் உதவித்தொகை இல்லாத இரண்டுவகையான பயிற்சிகளை அளித்துவருகிறது. 21 நாட்கள் கொண்ட உதவித்தொகையுடன் கூடிய தானிய சேமிப்புப் பயிற்சி ஒன்றினை 50 படித்த இளம் ஆண்-பெண் விவசாயிகளுக்கு ஒவ்வொரு மாதிரி கிராமங்களில் அளித்து வருகிறது. ஒவ்வொரு பயிறசியாளருக்கும், பயிற்சியின் முடிவில் தலா ரூ.100 வீதம் உதவித் தொகையும், ஒரு சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

உதவித்தொகை இல்லாத பயிற்சிகள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. இதில் கிராம விரிவாக்கப் பணியாளருக்கு வேண்டிகொடுக்கப்படும் ஒருவார பயிற்சியும், கிராமத் தொண்டர்கள் விவசாயிகளுக்கு அளிக்கப்படும்2 முதல்3 நாட்கள் கொண்ட பயிற்சியும் அடங்கும்.

செயல்முறை விளக்கங்களில் (அ) உணவு தானியங்களுக்கு மருந்துப் புகையிடுதல் (ஆ) தெளி மருந்து பயன்படுத்தி முன்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் (இ) எலிவளைகளில் மருந்துப்புகையிடுதல் (ஈ) வீட்டு எலிகளை இரசாயன மருந்துகள் கொண்டு கட்டுப்படுத்துதல் போன்றவை அடங்கும்.

**உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் உதவி:**

கிராம அளவில் பெண் விவசாயிகளைக் கொண்டு விஞ்ஞான முறை தானிய சேமிப்பு முறை குறித்துப் பிரசாரங்கள் செய்து விவசாயிகள் பயன் அடையச் செய்வது மிகவும் சுலபம். இதைக் கருத்தில் கொண்டு மாநில அரசு விவசாயத்துறையின் மூலம் 100 தேர்ந்தெடுத்த உழவர் பயிற்சி நிலையங்களை நாடெங்கிலும் துவக்கிச் செயல்பட வைத்துள்ளது. ஒவ்வொரு நிலையத்திலும் பெண் விளக்குநர் ஒருவரை வேலைக்கு அமர்த்தி, அவர்கள் மூலம் தலா ஒவ்வொரு ஆண்டும் 10 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றில் வசிக்கும் விவசாயப் பெண்களுக்குத் தானிய சேமிப்புமுறை குறித்தும், விஞ்ஞான முறையில் தானியப் பாதுகாப்பு செயல்முறை விளக்கங்கள் கொண்டும் கற்பிக்கப்படுகின்றது. தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், இராணிப்பேட்டை, ஆடுதுறை, லால்குடி, திண்டிவனம், திருநெல்வேலி, புதுக்கோட்டை மற்றும் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம் ஆகிய இடங்களில் தற்சமயம் இத்தகைய நிலையங்கள் இயங்கி வருகின்றன.

**உலோகக் குதிர் விநியோகத் திட்டம்:**

மத்திய அரசு, தமிழ்நாடு அரசுக்கு இத்திட்டத்தின் கீழ் உலோகக் குதிர்கள் செய்து விநியோகிப்பதற்காக ஒரு கடன் வசதியைச் செய்துள்ளது. தமிழகத்தில், தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவுப் பணி இணையம் (ENCOFED) தனது மாவட்ட மையங்கள் மூலம் பல்வேறு கொள்ளளவுகளில் உலோகக் குதிர்கள் செய்து விநியோகிக்கின்றது. உலோகக்குதிர்கள் தானியங்களை எலிகள், புழுப்பூச்சிகள், ஈரப்பதம், பறவைகள் போன்ற எதிரிகளிடமிருந்து நீண்ட நாட்களுக்குப் பாதுகாப்பாகச் சேமிக்க உதவுகிறது.

இவ்வகையான குதிர்கள் 300, 500, 600, 750 மற்றும் 1000 கிலோ அளவுகளில் முறையே ரூபாய் 320-330, 480, 575,585, 680, 25 சதவிகித மானிய விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை தமிழ்நாட்டில் 14205 குதிர்கள் தயார் செய்யப்பட்டு, 13232 விநியோகிக்கப்பட்டுள்ளன. இதுவரை இந்திய அரசு, தமிழ்நாடு அரசுக்கு இத்தகைய செயல்களுக்கு ரூபாய் 42 இலட்சம் கடனாக அளித்துள்ளது. தமிழக அரசும் இதற்காக ரூபாய் 15 இலட்சம் 1982-83ஆம் ஆண்டில் உதவி அளித்தது.

**மாநில அரசு உதவித் தொகைத் திட்டம்:**

இந்திய அரசு கிராமங்களில் விவசாயிகளிடையே காணப்படும் பண்டைய சேமிப்பு வடிவங்களை சீர்செய்து அமைப்பதற்காகவும், பக்கா கோத்தி, பூசா குதிர் மேலும் அதிக அளவு சேமிக்க உறுதிப்படுத்தப்பட்ட செங்கல் குதிர் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட கான்கிரிட்டு குதிர் போன்ற நவீன தானிய சேமிப்புக் களஞ்சியங்களை நிறுவுவதற்காகவும் மாநில அரசுகளுக்குப் பணஉதவி செய்து வருகிறது. தமிழ்நாடு அரசு இத்தகைய நடவடிக்கைகளைத் தமிழகத்தில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுத்து 69 ஒன்றியங்களில் மேற்கொள்வதற்காக ரூபாய் 11.65 இலட்சம் வழங்கியது. சிறு விவசாயிகளுக்கு மரச் சட்டங்கள்



தானியங்களில் புழு பூச்சிகளைக் கட்டுப்படுத்த மண்குதிரில் இ.டி.பி. குமிழ் கொண்டு புகையிடுதல்.

மரப்பெஞ்சுகள், சீர்செய்யப்பட்ட ஸ்டாண்டுகள் போன்றவை இலவசமாக வழங்கப்பட்டன. மேலும் இத்திட்டத்தின்கீழ் பக்காகோத்தி, பூசா குதிர் போன்ற நவீன தானிய சேமிப்புக் களஞ்சியங்களுக்குத் தேவையான வெளிமூடி, உள்மூடி போன்றவையும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

**தமிழகத்தில் 'யுனிசெஃப்' உதவித் திட்டம்**

இந்தியாவில் சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு தீவிர தானிய நவீன சேமிப்புத் திட்டம் ஒன்றை யுனிசெஃபின் பண உதவியுடன் 10 ஒன்றியங்களைத் தேர்ந்தெடுத்து 1977ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் செய்து வந்தது. இந்தத் திட்டம் தமிழகத்தில் செங்கை மாவட்டத்தில் காஞ்சிபுரத்தில் செயல்பட்டது. இத்திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்குத் தேவையான இரசாயன மருந்துகளும், மற்றும் பண்டைய சேமிப்பு வடிவங்களைச் சீர்செய்து அமைத்தலுக்குத் தேவையான பொருட்களும் இலவசமாக வழங்கப்பட்டன. மேலும் இதன்கீழ் மரபெஞ்சுகள், மரச்சட்டங்கள், வீடுகளில் உள்ள கதவுகளைச் சீர்



செய்து அமைக்கத் தேவையான துத்தநாகத் தகடு, ஜன்னல்களுக்கு அடிக்கடிக் கம்பி வலைகள் மண் குதிரில் அமைக்க வெளிமூடி, தார் பாலித்தீன் தாள், வீட்டில் கழிவு நீர்க் குழாய்களில் எலிகள் புகா வண்ணம் அமைக்க வடிகால் சல்லடை மூடி, போன்றவைகளும் வழங்கப்பட்டன. உலோகக் குதிர்களும் 25 சதவிகிதம் மானியம் விலையில் வழங்கப்பட்டன.



தானிய மூட்டைகளின் மீது முன்னெச்சரிக்கை மாலத்தியான் தெளித்தல்.

**ஐக்கிய நாட்டு உணவு மற்றும் விவசாய நிறுவனத் திட்டம்**

மேற்படி நிறுவனமும் தமிழகத்தின் பெரியார், சேலம் ஆகிய மாவட்டங்களில் சில குறிப்பிட்ட கிராமங்களில்விவசாயிகளிடையே கிராம தானிய சேமிப்பு வளர்ச்சிக்காக ரூ. 5 இலட்சம் வழங்கியது. இத்திட்டம் கோவை பெண்கள் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியைச் சேர்ந்த தேர்ந்தெடுத்த விரிவாக்கப் பணியாளர்களைக் கொண்டு நடைமுறைப் படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு, அவர்களிடையே நடைமுறையிலிருந்து வரும் பண்டைய சேமிப்பு வடிவங்களைச் சீர்செய்து அமைப்பதற்காகவும், நவீன தானிய சேமிப்புக் களஞ்சியங்களான பக்காகோத்தி பூசா குதிர்போன்றவற்றை அவர்களின் இல்லங்களில் அமைப்பதற்காகவும் பணஉதவி செய்யப்பட்டது. மேலும் தேவையான விவசாயிகளுக்கு உலோகக் குதிர்கள் வழங்குவதற்கும் போதுமான உதவிகள் அளித்தது. இதற்குத் தேவையான அனைத்து உதவிகளும் சென்னையில் இயங்கும் இந்திய அரசு உணவுத்துறையைச் சேர்ந்த 'தானிய சேமிப்பு இயக்கம்' செய்து வந்தது.

**மாதிரி கிராமங்கள்**

தமிழகத்திலுள்ள சென்னை யிலே இயங்கிவரும் தானிய சேமிப்பு இயக்கம் 1973ஆம் ஆண்டு முதல், கிராம அளவு தானியப் பாதுகாப்புத் திட்டத்தில் கிராம மக்களுக்காக ஓர் ஆக்க பூர்வமான பணிகளைச் செய்து வருகிறது. மேற்படி பணிகள் அனைத்தும் மாநில அரசுத் துறையைச் சேர்ந்த பல்வேறு அலுவலகங்களோடு குறிப்பாக விவசாயத்துறையோடு சேர்த்து செயல்பட்டு வருகிறது. செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களிலும், புதுவை யூனியன் பிரதேசத்திலும் மொத்தம் 250 கிராமங்களைத் தன் மாதிரி கிராமங்களாகத் தானிய சேமிப்பு இயக்கம் ஏற்றுக் கொண்டது. இக் கிராமங்களில் பயிற்சியாளர்கள் மற்றும் விவசாயிகள் தொண்டர்கள் போன்றவர்களைக் கொண்டு நவீன தானிய சேமிப்பு யுக்திகளை கையாண்டது. இத்தகைய செய்கைகளின் மூலம் இது நாள் வரையில் எலிகள், புழுபூச்சிகள் போன்றவற்றின் சேதாரத்தில் இருந்து ரூ. 11 கோடி மதிப்புள்ள உணவு தானியங்கள் காப்பாற்றப் பட்டு இருக்கின்றன. இதைத் தவிர மேற்படி இயக்கத்தின் பணிகள் தமிழ்நாட்டு கிராம மக்களிடையே தானிய சேமிப்பில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. எலிகளுக்கும் பூச்சிகளுக்கும் தானியங்களை இரையாக்கக்கூடாதுஎன்ற கருத்து தற்போது மக்கள் மனத்தில் வேரூன்றி நிற்கிறது. பாடுபட்டு விளைவித்த தானியத்தை பாழடிக்காமல் விளைந்ததைக் காத்து, விரயத்தைத் தவிர்ப் போமானால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதோடு நாமும் பயனடைந்து நம் நாட்டையும் முன்னேறச் செய்யலாம்.



எலிகள் புகாவண்ணம் கதவுகளுக்குத் துத்தநாகத் தகடு பொருத்துதல்

**விளைந்ததைக் காப்போம்!**

**விரயத்தைத் தவிர்ப்போம்!**

**''பாதுகாக்கப்பட்ட ஒவ்வொரு தானியமும் உற்பத்திக்குச் சமம்''**



# நீலகிரி மாவட்டத்தில் சமூகநலக்காடுகள்

அனைத்துலக சுவீடன் நாட்டு நிறுவன உதவியுடன் செயல்படும் சமூகக் காடுகள் திட்டம் சிறப்பான நோக்குடன் செயல்படும் சீரிய திட்டமாகும். பாதுகாக்கப்பட்டு வரும் வனத்தோட்டங்களுக்கு வெளியில் விவசாயத்திற்குப் பயன்படுத்தமுடியாத அரசு புறம்போக்கு நிலங்கள், பஞ்சாயத்து நிலங்கள், அதாவது குளக்கரைகள், காடுகள் (மலைப் பகுதிகள்) சாலை ஓரங்கள், இருப்புப்பாதை ஓரங்களில் இருக்கும் இடங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பண்ணைக்காடுகள் உற்பத்தி செய்து அதன்மூலம் கால்நடைத் தீவனங்கள், விறகுக்குப் பயன்படுத்தக்கூடிய அளவில் ஊரக எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்தல், கிராம மக்களைத் தோட்ட வேலைகளுக்கு அமர்த்திக் கொண்டு வேலை வாய்ப்பு அளித்தல், தோட்டங்களிலிருந்து கிடைக்கக் கூடிய வனப்பொருட்கள், எரிபொருட்கள் பெரும்பான்மை அளவில் கிராமங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் கிராமங்களுக்கு அளித்தல் போன்றவை இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

இரா. அண்ணாதுரை
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நீலகிரி மாவட்டம்

நீலகிரி மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் சமூகக்காடுகள் திட்டத்தின்கீழ் 19.25 இலட்ச ரூபாய் செலவில் 431 எக்டேர் பரப்பில் மலைத்தோட்டங்களும், 17.5 கி.மீ. தொலைவிற்குச் சாலை ஓரத்தோட்டங்களும், 17.5 கி.மீ. தொலைவிற்கு இருப்புப்பாதை ஓரத்தோட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் இலவசத்திட்டம் மற்றும் விரிவாக்கத்திட்டத்தின்கீழ் 23 இலட்சம் நாற்றுகள் சிறு-குறு விவசாயிகள், நிலமற்ற ஏழைகள், ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாகவும், மான்ய விலையிலும் வழங்கப்பட்டுள்ளன.



# சூரியகாந்தி சாகுபடி நுட்பங்கள்

என். முகம்மது சரீப்
இணைப் பேராசிரியர்
(சூரியகாந்தி)
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.

வட அமெரிக்காவைத் தோற்றுவிடமாகக் கொண்ட ஓர் மலர் இனத்தை எண்ணெய்வித்தாக ஏன் நமது நாட்டில் அறிமுகம் செய்ய வேண்டும்?

இந்தியாவில், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி, பற்றாக்குறை நிலையில் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 11 இலட்சம் டன்கள் தாவர எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு ரூபாய் 600 கோடி முதல் ரூபாய் 800 கோடி வரை அந்நியச் செலாவணியை நாம் இழக்கின்றோம். எனவே எண்ணெய் அளிக்கக் கூடிய எந்தப் பொருளையும் நாம் பயன்படுத்த வேண்டும்.

## சூரியகாந்தி எண்ணெய்யின் தன்மைகள்

சூரியகாந்தி எண்ணெய்யின் நிறம், மணம், கலை எல்லாம் நமக்கு ஏற்புடையன. நமது நாட்டிற்கு சூரியகாந்தி புதிதாகப் புகுத்தப்பட்ட பயிர் என்றாலும் அகில உலக அளவில் இது ஓர் முக்கிய எண்ணெய்வித்து ஆகும். உலக தாவர எண்ணெய் உற்பத்தியில், சோயா மொச்சை எண்ணெய் 28.83 சதமும், அடுத்து சூரியகாந்தி 17.77 சதமும், நிலக்கடலை 17.34 சதமும் பங்கு வகிக்கின்றன. எனவே சூரியகாந்தி அகில உலக அளவில் ஓர் முக்கிய எண்ணெய்வித்துப் பயிர் என்பதை நாம் அறிய வேண்டும்.

இந்த எண்ணெய்யில் கொழுப்புச் சத்து குறைவாக உள்ளது. சூரியகாந்தியில் 9.8 சதமும், நிலக்கடலையில் 19.4 சதமும். நல்லெண்ணெய்யில் 14.2 சதமும் கொழுப்புச் சத்து இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதேபோல் கொழுப்பற்ற எண்ணெய்ப் பொருட்கள் சூரியகாந்தியில் அதிகம். எனவே இந்த எண்ணெய்யை இருதய நோய் உள்ளவர்கள்கூட அச்சமின்றிப் பயன்படுத்தலாம்.

சூரியகாந்தி விதைகளில் புரதச் சத்து (27.7 சதம்) அதிகம். நிலக்கடலையில் 23.7 சதமும், எள்ளில் 19.3 சதமும் மட்டுமே புரதச்சத்து உள்ளது.

சூரியகாந்தியில் எண்ணெய்ச் சத்தும் சுமார் 36 முதல் 40 சதவீதம் வரை உள்ளது. மேலும் சூரியகாந்தி எண்ணெய், வண்ணங்கள், வார்னிஷ் போன்றன தயார் செய்யவும் உபயோகமாகிறது.

உழவியல் பயன்கள் : சூரியகாந்தியின் பயிரின் வயது மிகவும் குறைவு. $2\frac{1}{2}$ முதல் 3 மாதங்களில் அறுவடைக்கு வருகின்றது. எந்தப் பருவத்திலும், ஏறக்குறைய எல்லா மண் வகைகளிலும் பயிர் செய்ய ஏற்றது. பாசனம் மற்றும் மானாவாரியாகவும் இதைப் பயிர் செய்யலாம். பூச்சி - நோய்களின் தாக்குதல் அதிகம் கிடையாது. சூரியகாந்திக்குப் பின் அதே நிலத்தில் பயிராகும் சோளத்தில் சுடுமல்லி என்னும் களை அதிகம் வளர்வதில்லை. இவ்வாறு பல நன்மைகள் கொண்டிருப்பதால் சூரியகாந்தி ஓர் எண்ணெய் வித்தாக அறிமுகம் செய்யப்பட்டு, ஊக்கமளிக்கப்படுகிறது.

சூரியகாந்தியின் பயிர்ப்பரப்பு: தமிழ்நாட்டில் சுமார் $1\frac{1}{4}$ இலட்சம் எக்டரில் பயிர் செய்யப்பட்டு சுமார் 60,000 டன்கள் தானியம் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆயினும் வடமாவட்டங்களாகிய செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் சூரியகாந்தி மிகவும் குறைந்த அளவில்தான் பயிரிடப்படுகிறது.

பயிர் வளர்ச்சி முறைகள் : சூரியகாந்தி அயல்மகரந்தச் சேர்க்கை மூலம் இனவிருத்தியாகும் ஓர் பயிர். அத்தோடு இதில் தன் மகரந்தம் ஏற்காத தன்மையும் உண்டு. எனவே பயிர் வளர்ச்சித் திட்டங்களில், கூட்டு இனத்தேர்வு கலப்பினங்களின் கூட்டு வீரிய இரக உற்பத்தி ஆகியன பின்பற்றப்படுகின்றன.

நிறைந்த மகசூல், அதிக எண்ணெய்ச்சத்து, நோய், பூச்சிகள் தாக்காத தன்மை, ஆகியன பயிர் வளர்ச்சித் திட்டங்களில் முக்கியக் குறிக்கோள்கள் ஆகும். அயல் மகரந்தச் சேர்க்கை பாதிக்கப்படும் போதும், மழைக் காலங்களில் மகரந்தம் அடித்துச் செல்லப்பட்டாலும், பெரிய பூக்களாக இருந்து மகரந்தச் சேர்க்கைக்கு போதிய மகரந்தத்தூள்



வந்து சேராவிட்டாலும், பூவின் மத்தியில் விதைப்பிடிப்பு மிகவும் பாதிக்கப்படும். எனவே, தன் மகரந்தச் சேர்க்கை கொண்ட வகைகளை உருவாக்கவும் ஆய்வுகள் நடக்கின்றன. தற்போது இந்த நிலையைச் சரி செய்ய 'பூத்தேய்த்தல்' பரிந்துரை செய்யப்படுகிறது. கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் நடத்திய நான்காண்டு ஆராய்ச்சி பூத்தேய்த்தலின் நன்மைகளைத் தெளிவுப்படுத்துகிறது. பூக்கும் காலத்தில் காலை நேரம் மென்மையான துணியால் பூக்களைத் தேய்ப்பதால் மகரந்தத் தூள் பூ முழுதும் பரணி பூத் தேய்க்காத பயிரைவிட சுமார் 250 கிலோ விதை (27.2 சதம்) கூடுதல் மகசூல் கிடைத்துள்ளது. இதன் மூலம் ஒரு எக்டேரில் சுமார் 600 ரூபாய்கள் வரை கூடுதல் இலாபம் பெற வாய்ப்புள்ளது.

இதுவரை தமிழகத்தில் மூன்று பொறுக்கு இரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. கோவில்பட்டி ஆராய்ச்சி நிலையத்தில் கே. 1, கே. 2 இரகங்களும், கோவையில் கோ. 1 என்னும் சூரியகாந்தி இரகமும் உருவாக்கப்பட்டுள்ளன. கே 1, 90 நாட்களும், கே 2, 70 நாட்களும் வயதுடையன. இதுவரை வெளிவந்துள்ள இரகங்களில் மிகவும் குறுகிய வயதுடைய (65 நாட்கள்) இரகம் கோ. 1 ஆகும். இம்மூன்று இரகங்களும் ருஷ்ய வகைகளிலிருந்து தேர்வு செய்யப்பட்டன. குறுகிய வயதுடைய கோ. 1 சூரிய காந்தியை தோட்டங்களில் இரு பயிர்களுக்கு இடையே சுமார் 70 நாட்கள் கால வெளி கிடைக்கும் போது பயிர் செய்யலாம். இதன் செடிகள் சுமார் 80-85 செ. மீ. உயரம் வளர்வன. பூக்கள் 10-12 செ. மீ. குறுக்களவு கொண்டுள்ளன. சிறிய செடியமைப்புடைய இவ்வகைக்குக் குறைந்த இடைவெளி கொடுத்து (30 ஒ 15 செ. மீ.) பயிர் செய்தால் நல்ல மகசூல் பெறலாம்.

தற்போது கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் எண்.யு.எப். 3 என்னும் ஓர் வகை உருவாக்கப்பட்டு கோ. 2 வகையாக வெளியிடப்பட்டுள்ளது. இதுசுமார் 90 நாட்களில் 1500 கிலோ/எக்டர் மகசூல் அளிக்கவல்லது. தற்போது விநியோகத்தில் உள்ள கே. 1 (இ. சி. 68414) வகையை விட சுமார் 20 சதம் கூடுதல் விளைச்சலும், ஒரு சதம் கூடுதல் எண்ணெய்ச் சத்தும் கொண்டது. துருநோய் எதிர்ப்புத் தன்மையும் அதிகம்.

அகில இந்திய அளவில் 'மார்டன்' இ.சி. 68414, இ.சி.68415



ஆகிய இரகங்களும் பி.எஸ்.எச். 1 என்னும் வீரியச் சூரிய காந்தியும் வினியோகத்தில் உள்ளன.

சாகுபடி முறைகள் : சூரிய காந்திக்கு ஏற்ற சாகுபடி நுட்பங்களை இனி அறியலாம்.

வகைகள்:
1. கோ. 1.
2. மார்டன்
3. கே.1 (இ.சி.68414)
4. கே.2.
5. இ.சி. 68415
6. பி.எஸ்.எச். 1 (வீரியவகை)

வயது :
1. கோ. 1 : 65 நாட்கள்
2. மார்டன் : 75 நாட்கள்
3. கே. 2 : 70 நாட்கள்
4. மற்ற வகைகள் : 85-90 நாட்கள்.

பருவம் :
1. ஜூன்-ஜூலை
2. செப்டம்பர் - அக்டோபர்:
3. ஜனவரி-பிப்ரவரி-
பாசனம் மற்றும் மானாவாரி.

முன்செய்நேர்த்தி :

நன்கு உழுது தயார் செய்யப்பட்ட நிலத்தில் விதைக்க வேண்டும்.

உர அளவு:பல்வேறு இடங்களில் உர அளவு மாறுபடுகிறது. ஆயினும் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் முறையே 40:20:20 கிலோ- எக்டருக்கு சிபாரிசு செய்யப்படுகிறது. எல்லா உரங்களையும் அடியுரமாக இடவேண்டும்.

இடைவெளி: 1.கோ.1
2.கே.2 30 x 15 செ.மீ.
3.மார்டன்
4.கே.1 30 x 30
5. இ.சி.68415
6.பி.எஸ். எச்.1
(6 மீட்டர் நீளப்பார்களில் விதைக்கலாம்)

விதயைளவு:1.கோ.1
2.கே.2 30 கிலோ/எக்டர்
3.மற்றவகைகள்
15 கிலோ/எக்டர்

(ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'பெவின்டின்' அல்லது 4 கிராம் 'திரம்' மருந்து கலந்து விதைக்க வேண்டும்).

பாசனம் : விதைத்தவுடன் முதல் பாசனமும், மூன்று நாட்கள் கழித்து உயிர்ப்பாசனமும் அளிக்க வேண்டும். பின்னர் தேவைக்கேற்ப 10 நாட்கள் இடைவெளியில் நீர் பாய்ச்சலாம்.

பின்செய்நேர்த்தி: விதைத்த 15ஆம் நாள் மற்றும் 30ஆம் நாள், களைஎடுத்து நிலத்தைத் கொத்திவிட வேண்டும்.

பயிர்பாதுகாப்பு: எண்டோசல்பான் 35, இ.சி. 625 மில்லியும், மென்கோசிப் 1250 கிராமும் கலந்து விதைத்த 30வதுநாள் தெளிக்க வேண்டும். தேவை ஏற்படின் 10 நாட்கள் கழித்து மறுமுறையும் இதே மருந்துகள் தெளிக்கவும்.

(பூக்கும் காலங்களில் தேனீக்கள் பாதிக்கப்படாதவாறு மாலை நேரங்களில் மருந்து தெளிக்க வேண்டும். விதை பிடிக்கும் நேரத்தில் கிளிகளை விரட்டி அவற்றின் தாக்குதலிலிருந்து காக்கவேண்டும்).

பூத்தேய்த்தல்: மென்மையான துணி கொண்டு பூக்களை காலை நேரம்(9-11 மணியளவில்) தேய்ப்பதால் விதைப் பிடிப்பு அதிகமாகும். 5 முதல் 7 நாட்கள் வரை பூக்கும் காலத்திற்கேற்ப பூத்தேய்த்தல் செய்யலாம்.

அறுவடை:பூக்களின் அடிப்பகுதி மஞ்சளாகமாறி விதைகள் முற்றியவுடன் அறுவடை செய்ய வேண்டும். நல்ல சூரிய ஒளியில் காயவைத்து, அடித்து விதைகளைப் பிரித்தெடுக்க வேண்டும்.

மகசூல்:குறுகிய வயதுடைய கோ.1, கே.2, மார்டன் ஆகிய இரகங்களில் எக்டருக்கு சுமார் 1000 கிலோ, கே.1, இ.சி.68415 ஆகியவற்றில் 1250 கிலோ, வீரிய வகையாகிய பி.எஸ்.எச். 1ல் சுமார் 1500 கிலோ மகசூல் பெறலாம்.

தமிழ்நாட்டில் பல மாவட்டங்களிலும் தனிப்பயிராகவும், நிலக்கடலை. பயறுகள் இவற்றுடன் கலப்புப் பயிராகவும் சூரிய காந்தியை விளைவிக்க நல்ல வாய்ப்புகள் உள்ளன. பல நன்மைகள் கொண்டசூரியகாந்தியை அதிக அளவில் பயிர் செய்து எண்ணெய் வித்து உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவிடுவோம்.



# சாண்டினோ புதிய கம்பள இன ஆடு

டாக்டர் நடராசன்
பேராசிரியர் மற்றும் தலைவர்
ஆட்டினவிருத்தி ஆராய்ச்சி நிலையம்
நீலகிரி.



நீலகிரி மாவட்டத்தில் சுமார் 7770 செம்மறி ஆடுகள் உள்ளன. இவைகள் 'நீலகிரி' என்று கூறப்படும் மென்மைக் கம்பள இனத்தைச் சார்ந்தவை. விவசாயிகள் இவ்வாடுகளை 50 முதல் 150 ஆடுகள் கொண்ட மந்தைகளாக, மலைப்பிரதேசப் புல்வெளிகளில் வளர்க்கிறார்கள். இவ்வாடுகள் ஆண்டிற்குச் சுமார் ஒருகிலோ எடையுள்ள மென்மைக் கம்பளத்தைக் கொடுக்கின்றன. இக்கம்பளம் உயர்ரகக் கம்பள ஆடைகள் நெய்யப் பயன்படுகின்றது.

ஊட்டி அருகே உள்ள சாண்டிநல்லாவில் ஆடு இனவிருத்தி ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றது. இங்கு நீலகிரி ஆட்டினத்தை மேலும் அபிவிருத்தி செய்வது சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. முக்கியமாக நீலகிரி ஆட்டினத்தின் கம்பள அளவு, உடல் எடை ஆகியவைகளை அதிகரிக்க, மெரினோ என்ற மேனாட்டுச் செம்மறி ஆட்டினத்துடன் கலப்பினச் சேர்க்கை ஆராய்ச்சி, சென்ற 15 ஆண்டுகளுக்கு மேல் நடத்தப்பட்டு வருகின்றது. இவ்வாராய்ச்சியின் மூலம் நீலகிரி இனத்தின் மென்மைக் கம்பளத்தன்மை குறையாது. கம்பள அளவும் உடல் எடையும் கூடும் என எதிர்பார்க்கப்பட்டு அதற்கான கலப்பினச் சேர்க்கை ஆராய்ச்சி மேற் கொள்ளப்பட்டது. இதன்படி ஐம்பது, எழுபத்தி ஐந்து, அறுபத்தி இரண்டரை சதவிகித மெரினோ வம்சாவளி கொண்ட மெரினோ நீலகிரிக் கலப்பின ஆடுகள். உருவாக்கப்பட்டு, அவற்றுக்குள்ளேயே உள் இனச் சேர்க்கையும் (Intersex Mating) செய்யப்பட்டுப் பல்வேறு குணங்கள் நிர்ணயிக்கப்பட்டன. மெரினோ, நீலகிரி, இவற்றில் பல்வேறு கலப்பினங்கள் இவைகளின் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த குணங்கள் ஒப்பிடுதலும் செய்யப்பட்டது.

கம்பள அளவு, கம்பளத் தன்மைகள், இனவிருத்தித் தன்மைகள், வாழும் திறன் இவைகளை ஒப்பிடும்பொழுது, நீலகிரி மாவட்ட தட்ப-வெப்ப நிலையில் அறுபத்திரண்டரை சதவிகிதம் மெரினோ வம்சாவளி கொண்ட மெரினோ நீலகிரிக் கலப்பின ஆடுகள் மிகவும் ஏற்றதாகவும், விவசாயிகளுக்கு அதிக லாபம் தரக்கூடியதாகவும் உள்ளன. இக்கலப்பினம் நீலகிரி இனத்துடன் ஒப்பிடும்பொழுது எவ்வளவு உயர்வுள்ளது என்பதைப் பின் கண்ட அட்டவணையின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

| பொருளாதாரக் குணங்கள் | 62.5% கலப்பினம் (சாண்டினோ) | நீலகிரி |
|---|---|---|
| ஆண்டுக்குக் கம்பள உற்பத்தி அளவு(கிலோ) | 2.7 | 0.8 |
| வயதுவந்த ஆடுகளின் உடல் எடை(கிலோ) | 29 | 25 |
| கம்பள இழை குறுக்களவு (மைக்கிரான்) | 21 | 25 |
| கம்பள இழை நீளம் (செ.மீட்டர்) | 7 | 6 |
| பொலிவுத்தன்மை (சதவிகிதம்) | 79 | 83 |
| குட்டி ஈனும் திறன் (சதவிகிதம்) | 63 | 80 |
| வாழும் திறன் (சதவிகிதம்) | 89 | 85 |

62.5 சதவிகித வம்சாவளி மெரினோ நீலகிரி கலப்பின ஆடுகள் கம்பள உற்பத்தியில் நீலகிரி இனத்தைவிட இரண்டரை மடங்குக்கும் மேலாக உள்ள கம்பளத் தன்மையும், வாழும் திறனும் கொண்டவை. இதனால் கம்பள உற்பத்தி மூலம் ஒவ்வொரு ஆட்டிற்கு ஆண்டிற்கு ரூபாய் ஐம்பதுக்கும் குறையாத அதிக வருவாய் கிடைக்கும். உடல் எடை அதிகம் இருப்பதால் வேண்டாத ஆடுகளை விற்பனை செய்வதன் மூலம் அதிக வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. பராமரிப்புச் செலவுகளில் எந்தவித்தியாசமும் இல்லை.

இந்த அறுபத்தைந்தரை மெரினோ வம்சாவளி உள்ள மெரினோ நீலகிரிக் கலப்பினத்தை 'சாண்டினோ' என்ற பெயரில் அழைக்கிறோம். (சாண்டிநல்லாவில் உருவாக்கப்பட்ட மெரினோ வம்சாவளி உள்ள கலப்பினம்) இதனை வளர்ப்பதன் மூலம் விவசாயிகளுக்கு அதிக வருவாய் கிடைக்கின்றது. பிரத்தியேகப் பராமரிப்புச் செலவு ஒன்றும் இல்லை. ஆனால் நீலகிரி போன்ற குளிர்ப்பிரதேசங்களில் மட்டும் வளர்க்க இவ்வினம் ஏற்றது.




## திறனாய்வுச் செல்வம்

ஆசிரியர் : நா. பார்த்தசாரதி.

வெளியீடு: நவபாரதி பிரசுரம்,
6 நல்லதம்பி தெரு.
சென்னை-600 002.

விலை ரு. 10. பக்: 144

இலக்கியக் கட்டுரைகள் பத்தொன்பது கொண்ட தொகுப்பு இது. முத்தொள்ளாயிரம், கலிங்கத்துப் பரணி, பத்துப்பாட்டு, விறலிவிடு தூது, சிலப்பதிகாரம் ஆகிய இலக்கியங்கள் குறித்து ஆய்வு முறையில் எழுதப்பட்டுள்ள கட்டுரைகள் சுவையாக உள்ளன.

கலைகளைக் குறித்துத் தீட்டப்பட்டுள்ள கட்டுரைகள் தகவல் களஞ்சியங்களாக மிளிர்கின்றன. பழமொழிகளின் தோற்றமும் வளர்ச்சியும் தக்க வகையில் விவரிக்கப்பட்டுள்ளது.

திறனாய்வும் இலக்கியமும் என்ற கட்டுரை திறனாய்வின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

'கணிதமோ அறிவியலோ எவர் எழுதினும் எத்துணை முறை எழுதினும் ஒரே விதமான முடிவு தரக் கூடியது. இலக்கியம் அப்படி அன்று, ஒவ்வொருவர் எழுத்துக்கு ஒரு சுவை' என்று நூலாசிரியர் குறிப்பிட்டிருப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கது.

இலக்கியக் கட்டுரைகள் இன்சுவைக் கனிகளாக விளங்குகின்றன. பல நூல்களைப் படித்த திருப்தி இந்நூலைப் படிக்கும் போது ஏற்படுகிறது. ஆசிரியரின் ஆரவாரமில்லாத - ஆனால் அழுத்தமான நடை நம்மைக் கவர்கிறது.

—தமிழ்ப்பித்தன்

## பொய் பொய்யைத் தவிர வேறில்லை

ஆசிரியர்: பட்டுக்கோட்டை-பிரபாகர்

விலை ரூ. 10-00

இந்நூலில் இரண்டு கதைகள் உள்ளன. ஒன்று பொய், பொய்யைத் தவிர வேறில்லை - மற்றொன்று மர்டர் மார்க்கெட்.

முதல் கதை இது—

சம்பிரதாயச் சடங்குகளுடன் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு, 25 ஆண்டுகள் அவளுடன் பல துன்பங்களுக்கிடையில் வாழ்ந்த பின்னர் வசதிகள் பல கிடைக்கப் பெற்றதும் வேறொரு பெண்ணுடன் ஏற்பட்ட தொடர்பால் கட்டிய மனைவியையே வஞ்சகமாகக் கொலை செய்யும் கதாபாத்திரத்தைப் பற்றிய கதை.

மேலும் 6ம் அத்தியாயக் கதையை முதலில் தொடங்கி, பின்னர் முதல் அத்தியாயத்துடன் இணைத்து இருப்பது புதுமையாய் அமைந்துள்ளது.

இரண்டாவது கதை மர்டர் மார்க்கெட்

கோபால்ராவ் எனும் ஜியாலஜிஸ்ட், பதின்மூன்று வருடங்கள் பாடுபட்டு கோடிக்கணக்கான ரூபாய்கள் மதிப்பு வாய்ந்த வைர சுரங்கத்தைக் கண்டுபிடிக்கிறார். இதனை அறிந்த ஒரு சதிக்கும்பல் வைர சுரங்க விவரத்தை அறிய அவரைக் கடத்திச் சென்று துன்புறுத்துகின்றது. தேச பக்தி நிறைந்த அவர் விவரத்தைக் கூற மறுத்து மாரடைப்பால் உயிர் துறக்கிறார்.

முதல் கதையின் நடையோடு ஒப்பிடும்போது, இந்தக் கதை சுமார் என்றே சொல்லத் தோன்றுகிறது.

—கு. மல்லிகா

## மாணவச் செல்வங்களுக்கு போப்பாண்டவர்

ஆசிரியர் : கவியழகன்

வெளியீடு: சோமு புத்தக நிலையம்
42, அப்பர்சாமி கோவில் தெரு,
மயிலாப்பூர்,
சென்னை-4.

விலை ரூ. 9 பக்கம்: 96.

இரண்டாவது போப் ஆண்டவர் ஜான் பால் அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், அவர் நமது இந்திய நாட்டுக்கு வருகை புரிந்த நிகழ்ச்சியையும் இந்நூல் எடுத்துக் கூறுகிறது.

மாணவர்களுக்கு உரிய முறையில் எளிய நடையில் எழுதப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. இந்திய வருகையின்போது போப் ஆண்டவர் பேசிய உரைகளின் சில பகுதிகளை ஒவ்வொரு அத்தியாயத்தின் தலைப்பிலும் வெளியிட்டிருப்பது போற்றத்தக்கது.

போப் ஆண்டவரின் இளம் பருவ நிகழ்ச்சிகளைச் சொல்லியிருக்கும் விதம் நெகிழ்ச்சியை உருவாக்குகிறது.

## தொழிலாளர் வர்க்க உரிமைத் திருநாள் மே-1

ஆசிரியர் : கே. ராமநாதன்.
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41, பி. சிட்கோ, இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-98.

விலை : ரூ. 2 பக்கம்: 83

மே தினம் பாட்டாளி வர்க்கத்தின் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. மே தினத்தின் சிறப்பு - பெருமை - தொழிலாள வர்க்கத்தின் சாதனை ஆகியவை குறித்து இந்நூல் விளக்குகிறது.

உலகப் பாட்டாளிகளின் திருவிழா நாளாகிய மே தினத்துக்கும் இந்தியத் தொழிற்சங்கத்திற்கும் உள்ள தொடர்பு குறித்தும் இந்நூல் தெரிவிக்கிறது.

இந்தியாவில் முதன் முதலில் மே தினம் தமிழகத்தில்தான் சிங்காரவேலரால் 1923-ல் சென்னையில் கொண்டாடப்பட்டிருக்கிறது என்ற வரலாற்றுச் செய்தியின் மூலம், மே தின விழாவில் தமிழகம் கொண்டுள்ள ஈடுபாடு புலனாகிறது.

'மே தினமும் இந்தியத் தொழிற்சங்கமும்' என்று ஒரு பகுதி பிரித்து, பல செய்திகளைச் சொல்லியுள்ள நூலாசிரியர், தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா முதல்வரானவுடன் மே தினத்தை சம்பளத்துடன் கூடிய விடுமுறையாக அறிவித்ததைக் குறிப்பிட மறந்தது ஏன் என்பது புரியவில்லை.

—எஸ். எஸ். சுந்தரம்



## பேச்சுக்கலை

ஆசிரியர்: அன்புப்பழம் நீ, கே.வீ. வீரராகவன்.

வெளியீடு; அபிராமி நிலையம்
307, லிங்கிச் செட்டித் தெரு,
சென்னை-600 001

விலை ரூ.7 பக்கம்: 88

பேச்சுக்கலை இன்று பெரிதும் போற்றும் அருங்கலையாக விளங்கி வருகிறது. மேடைப் பேச்சினை மெய்மறக்கக் கேட்பவர்களுக்கு, நாமும் மேடையில் பேசவேண்டும் என்ற ஆவல் எழுவது இயல்புதானே? இந்நூல் அவர்களுடைய ஆவலை நிறைவேற்றி வைக்கும் என நிச்சயம் நம்பலாம்.

ஆரம்பப் பேச்சாளர்கள் எப்படியெல்லாம் பழக வேண்டும் என்பதற்கான காரண காரியங்களை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டு, பேச்சுக்குத் தயாராகும் முறை, பேசும்போது செய்ய வேண்டியவை — செய்யக்கூடாதவை போன்ற பல கருத்துக்கள் தொடர்பான நிகழ்ச்சிகளுடன் நன்கு விளக்கப்பட்டுள்ளன. பேச்சுக்கலை பற்றி ஆராய அல்லது அறிந்து கொள்ள விரும்பும் தமிழ் அன்பர்கட்கு இந்நூல் ஓர் வரப்பிரசாதமாகும்.

## இலக்கியப் பூங்கா

ஆசிரியர்: வித்துவான் பி.கே. பொன்னம்பலநாதன்,
வெளியீடு: பூங்கொடிபதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்குவீதி,
சென்னை-600 004.

விலை: ரூ.20 பக்கம்: 216

இந்நூலில் ஒன்பது கட்டுரைகளும், மூன்று கவிதைகளும் உள்ளன. அவை இலக்கியப் பூங்காவில் மணம் பரப்பும் பன்னிற மலர்களாகக் காட்சியளிக்கின்றன.

இராமர் திருப்பெயர் மாண்பு-முதல் கட்டுரை நல்ல ஆய்வுக்கு ஓர் எடுத்துக்காட்டு. அருளும் பொருளும் கட்டுரை ஆசிரியரின் ஆழ்ந்த புலமைக்குச் சான்று. இதே போன்று அடுத்துவரும் கட்டுரைகளும் இலக்கியச் செறிவோடு, சிந்தனைப் பூக்கள் மலர விளங்குகின்றன. இக்கட்டுரைகளின்மூலம் ஏராளமான செய்திகளைத் தெரிந்துகொள்கிறோம். இலக்கிய நயம் உணர்ந்து மகிழ்கிறோம்.

நூலில் இடம்பெற்றுள்ள மூன்று கவிதைகளும் முத்தானவை. அமர கவிபாரதியின், கவியரசர் கண்ணதாசனின் புகழைப் பாடுவன அவை.

—பொ. மறைமலை

## கவிதை மலர்கள்

எழுதியவர்: கவிஞர் சுசீந்திரம் வ.நீலகண்டன்,

வெளியீடு: அசுவநீ பதிப்பகம்,
317, அண்ணாசாலை,
சென்னை-600 018.

விலை ரு.8.50 பக்கம்: 112

நாற்பத்தைந்து இனிய மரபுக் கவிதைகளின் தொகுப்பு இந்நூல். அறிவியல், சமூகம், இயற்கை, கதைப் பாடல்கள் என வகைப்படுத்தி எளிய நடையில் கவிதைகளைத் தீட்டியுள்ளார் ஆசிரியர்.

அண்ணல் காந்தி, தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கர்மவீரர் காமராஜர் ஆகியோரைக் குறித்து எழுதப்பட்டுள்ள கவிதைகள் சுவை நல்குகின்றன.

கதைப் பாட்டுகள் வாழ்க்கை தத்துவத்தை வகையுற எடுத்துச் சொல்கின்றன. எலிகள் மாநாடு நகைச்சுவை விருந்தை வழங்குகிறது. விதியை வென்றவன்-நீதியை போதிக்கிறது. உழைப்பே உயர்வு என்பதை தக்க முறையில் வலியுறுத்துகிறது 'தந்தை சொன்ன புதையல்' என்னும் கவிதை.

## காதில் விழுந்த கவிதைகள்

தொகுப்பு: முகவை இராஜ மாணிக்கம்,

கிடைக்குமிடம்: 14 கரீம் சுபேதார் தெரு, ராயப்பேட்டை,
சென்னை-14.

விலை: ரூ.16 பக்கம்: 204

குழந்தை பிறந்ததிலிருந்து அது வளர்ந்து, மனிதனாகி, மண வாழ்வில் ஈடுபட்டு, இறுதியில்



மறைவு எய்துகின்ற வரையில் பல்வேறு சூழ்நிலைகளிலும்பாடல் பாடப்படுகின்றது. தமிழ்ப்பெரு மக்களின் வாழ்க்கையில் பாடல் சிறப்பிடம் பெறுகிறது. கிராமப் புறங்களில் இந்தப் பாடல்கள் அதிகமான அளவில் பழக்கத்தில் இருந்து வந்திருக்கின்றன. இந்நாளில் கூட நினைத்தவுடன் பாடலைப் பாடுகின்ற திறம் பெற்றவர்கள் கிராமங்களில் வாழ்ந்து வருகிறார்கள். எழுத்து எழுதத் தெரியாத அவர்கள், பெரிய கவிஞர்களாக மாறிப் பாடல் மணிகளை உதிர்த்து வருகிறார்கள். அத்தகைய சான்றோர்களின் பாடல்கள் பலவற்றையும் சேகரித்து, தொகுத்து, நூலாக வெளியிட்டிருக்கிறார் தொகுப்பாசிரியர். பாடல்களுக்கு எளியமுறையில் விளக்கம் எழுதி, படிப்போரின் நெஞ்சில் பரவசத்தை ஊட்டுகிறார்.

தேசபக்தி, காதல், தாலாட்டு, இன்ப உணர்ச்சி, விளையாட்டு, ஒப்பாரி என்ற தலைப்புகளில் சுவையான நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்துத் தந்திருக்கிறார் நூலாசிரியர். பட்டிதொட்டிகளுக்கெல்லாம் அலைந்து திரிந்து மேற்கண்ட பாடல்களைத் தமது 15வது வயதிலிருந்து தேடிச் சேகரித்திருக்கிறார் என்பதிலிருந்து, ஆசிரியரின் கடும் உழைப்பு தெற்றென விளங்குகிறது.

உரையாடல் பாணியில் உள்ள பாடல்கள், உள்ளத்துக்கு மகிழ்ச்சியை அளிப்பதுடன் வாக்குவாதத் திறமை படைத்ததாக விளங்குகின்றன. வகைவகையான காதல் பாடல்கள், மனதுக்கு கதகதப்பை வழங்கத் தவறவில்லை. தாலாட்டுப்பாடல்கள் நமது இதயத்துக்கு இனிமையையும் இன்பத்தையும் அள்ளித் தருகின்றன. வீர உணர்வுத் தாலாட்டுப் பாடல்களைப் படிக்கும்போது வீறு கொள்ளத் தோன்றுகிறது.

ஜாடையாகப் பாடப்படும் ஒப்பாரி - சிலேடையாகப் பாடப்படும் ஒப்பாரி ஆகியவை - நமது தமிழக நாட்டுப்புறக் கவிஞர்களின் சொல்லாற்றலையும் கவித்திறனையும் நயக்குச் சொல்லாமல் சொல்கின்றன.

ஒருவரே பல பாடல்களைப் பாடுவது எளிது; ஆனால் பலர் பல்வேறு சூழ்நிலைகளில் பாடிய பாடல்களைத் திரட்டி நூலாக்குவது என்பது பெருஞ்சாதனையாகும். அந்தச் சாதனையைப் புரிந்துள்ள தொகுப்பாசிரியர் பாராட்டுக்குரியவர்.

—சுந்தர்



# உவகை தரும் உதகை

உதகையின் சிறப்பை நாட்டுக்கு விளக்குகிற வகையில் நல்ல தொரு நிகழ்ச்சியாக மலர்க் கண்காட்சி, பழக் கண்காட்சி, படகுப் போட்டி ஆகியவையும் நடை பெறுகின்றன.

"இப்படிப்பட்ட கோடை விழாக் களை மாண்புமிகு புரட்சித் தலை வர் அவர்களின் அரசு ஏற்பட்ட பிறகு ஏர்க்காடு, கல்வராயன் மலை, எலகிரி, கொடைக்கானல் ஆகிய இடங்களில் நடத்தி வரு கிறோம். ஆனால் உதகை மலர்க் கண்காட்சி இந்தியாவே பாராட் டுகிற அளவில் நடைபெறுகிறது. இந்த மலர்க்கண்காட்சிக்கு சென்ற ஆண்டைப் போல கூட் டப் வரவில்லை என்று சட்ட மன்ற உறுப்பினர்கள் கூறினார் கள். என்ன காரணம்? மலை களின் அரசி என்று போற்றப்படு கின்ற உதகை தமிழகத்திற்கு மட்டும் அல்ல, இந்தியாவுக்கே பெருமை தேடித் தருகிற உதகை என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

''இயற்கை எத்தனை அற்புதங் களை நமக்கு அளித்து இருக் கிறது. அது எத்தனை பாடங் களை நமக்குக் கற்றுத் தருகிறது. வெவ்வேறு நிறங்களில் வெவ் வேறு வடிவங்களில் இங்கே மலர்க் கூட்டத்தைக் காண்கிறோம். அதேபோல் என்ன மொழி பேசி னாலும் எத்தனை வகையாக இருந்தாலும் மனிதர்கள் ஒன்று சேர்ந்து சிறப்புச் சேர்க்கிறார்கள் என்ற கருத்தைத் தான் பல வண்ண மலர்கள் கொண்ட மலர்க் கண்காட்சி நமக்கு உணர்த்து கிறது.

''அமெரிக்கபுருக்லின் மருத்துவ மனையின் டாக்டர் பட் அவர் கள், கலிபோர்னியா, லாஸ் ஏஞ் சல்ஸ் ஆகிய இடங்களையெல் லாம் பார்த்தவர். ஆனால் உதகை போன்றொரு மாவட்டத்தைப் பார்த்தது கிடையாது என்று பாராட்டி இருக்கிறார்.

"அகில உலகிலேயே உதகை மாதிரி ஒரு மாவட்டம் கிடை யாது. இதமான காற்றும் எழில் பொங்கும் காட்சிகளையும் கொண்ட உதகையின் அழகு குறைந்து கொண்டே வருகிறது. இந்த அற்புதமான வனப் பிர தேசத்தை மனிதர்கள் அழித்துக் கொண்டே வருகிறார்கள்.

''இங்கே பேசிய அனைவரும் ஆண்டுக்கு ஆண்டு ஊட்டியில் மழை குறைந்து கொண்டே வரு கிறது என்று குறிப்பிட்டார்கள். காரணம் காடுகள் அழிக்கப்படு கின்றன. மழை குறைந்து கொண்டே வருகிறது.

''தொழிற்சாலைகளை ஏற் படுத்தி, அதனால் கழிவுநீர், புகை இவைகளால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படும் என்று கருது கிறோம். அதனால் மாவட்டத் தின் நன்மையைக் கருதி தொழிற் சாலை வருவதைத் தடுத்து நிறுத் தியாக வேண்டும்.

''இது சுற்றுலா மாவட்டம். இதைத் தொழில் மாவட்டமாக மாற்றினால் மாவட்டத்தின் அழகை மட்டுமல்ல, சுற்றுலா மூலம் வரும் வருமானத்தையும் இழந்து விடுகிறோம். கடைசியில் இது சுற்றுலா மாவட்டமாகவும் இருக்காது; தொழில் மாவட்ட மாகவும் இருக்காது.

''இங்கே அருமையான மலர்க் கண்காட்சி ஏற்பாடு செய்திருக் கிறார்கள். அதே போல் பழம், காய் கண்காட்சிகளையும் அற்புத மான முறையில் ஏற்பாடு செய்த அனைவருக்கும் பாராட்டினை தெரிவித்துக் கொள்கிறேன்.

''ஆனால் மலர்களை அடுக்கி வைத்து அழகு பார்க்கக் கற்றுக் கொண்டு இருக்கிறோமே தவிர, மலர்கள் சொல்லுகிற பாடத்தை நாம் கற்றுக் கொள்ளவில்லை. அதனால்தான் உதகையின் வனப்பு அழிந்து கொண்டே வரு கிறது.

"நாம் கீழே இருக்கிறோமா அல்லது 6,000 அடி உயரத்தில் இந்த மலை அரசியின் மடி யில் இருக்கிறோமா என்ற சந் தேகம் எழுகிற அளவுக்கு இயற் கையை அழித்து மனித வாழ்க் கையையே அமைத்துக் கொண்டி ருக்கிறோம் (இயற்கை தந்த வனச் செல்வங்களை அழித்து)






மாண்புமிகு புரட்சித் தலைவர் வர்களும், இந்தியப் பிரதமர் வர்களும், மறைந்த பிரதமர் ருமதி இந்திராகாந்தி அவர் ளும் வனங்களைப் பாதுகாப்ப ல் வனங்கள் அழிக்கப்படக் டாது என்பதில் —ஒரே கருத் தக் கொண்டவர்கள். அதனால் னங்களை அழிப்பதைத் தடை சய்தார்கள்.

"உதகையில் குடிநீர் தட்டுப் ாடு குறைந்து கொண்டே வரு றது என்ற செய்தி மீண்டும் ண்டும் வருகிறது. ஃபார்சில்ஸ் வயிலிருந்து உதகைக்கு குடி ர் கொண்டு வருகிற ஒரு திட் த்தை மாண்புமிகு புரட்சித் லைவர் அவர்கள் 4 கோடி பாய் செலவில் நிறைவேற்ற ப்புதல் அளித்து மூன்று ஆண்டுக் காலம் அதை இன்னமும் நிறை வேற்ற முடியாமல் இருப்பது வருத்தத்தை அளிக்கிறது.

''புரட்சித் தலைவர் அவர்கள் உதகையின் வளர்ச்சியில், உதகை யின் வனப்பைக் காப்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருக் கிறார் என்பதை நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. 1981-ஆம் ஆண்டு பெரு மழை யினால்சாலைகள் பழுதானபோது சாலைகளைப் புதிதாய்ப் போட வேண்டுமானாலும் சரி, பழுது பார்க்க வேண்டுமானாலும் சரி எத்தனை கோடி ரூபாய் செல வானாலும் பரவாயில்லை என்று புரட்சித் தலைவர் அவர்கள் அறி வித்தார்கள். உதகைக்கு மார்க் கெட் திட்டம் உருவாக்கி 28லட் சம் ரூபாயை அதற்கென்று ஒதுக் கித் தந்தார்கள். சுற்றுலாத்துறை யின் வளர்ச்சிக்கு 2 கோடி ரூபாய் ஊட்டிக்கென ஒதுக்கப்பட்டது. 1982-83ஆம் ஆண்டில் மாண்பு மிகு புரட்சித் தலைவர் அவர் கள் வந்திருந்தபொழுது இந்தத் திட்டத்திற்கு அனுமதி அளித் தார்கள்.

"மக்களுக்கு தண்ணீர் வேண்டும். தண்ணீர் வேண்டும் என்றால் மழை வேண்டும். மழை வேண்டு மென்றால் காடுகள் அழிக்கப் படாமல் காக்கப்படவேண்டும்.

"தொழிற்சாலைகளுக்கு வேண் டிய உயர்ந்த மரங்களைக் கூட வெட்டாமல் இருக்க வேண்டும். இத்தகைய உயர்ந்த மரங்களை சமவெளிப் பகுதிகளில் வளர்த்து வெட்டலாமாஎன்பதையோசித்து வருகிறோம். இப்படி எல்லாம்





பாதுகாக்கவில்லையென்றால் இயற்கை நமக்கு தண்டனை அளித்துவிடும். எந்தப் பகுதியில் எந்தப் பயிரை, எந்தச் செடியைப் போடுவது என்பதுதான் விவசாயம். அதேபோல் எந்தப் பகுதியை சுற்றுலாத் தலமாக வைத்துக் கொள்வது, எதைத் தொழிற்சாலைப் பகுதியாக மாற்றுவது என்பதைக் கணக்கில் கொள்ளவேண்டும்.

''குழந்தைகளின் சிரிப்பை மலகளின் சிரிப்புக்கு ஒப்பிட்டுப் பார்த்து மகிழ்கிறோம். இந்த மலர்ச் சிரிப்பை காணாமல் இருப்பது என்னநியாயம்? அந்த மலர்ச் சிரிப்பையே கொன்றுவிட முயன்றால்நம்மை எந்த வகையில் சேர்ப்பது?

இந்த மலர்கள் எல்லாம் தம் சிரிப்பின் மூலம், தம் மௌன மொழியின் மூலம் என்ன சொல்கின்றன? ''எங்களை வாழ விடுங்கள்,''எங்களை சிரிக்க விடுங்கள்' என்றுதான் கூறுகின்றன. அந்த மலர்ச் சிரிப்பை மழலைச் சிரிப்பை அழித்துவிடாதீர்கள் என்றுதான் இந்த மலர்க் கண்காட்சியில் உள்ள மலர்கள் எல்லாம் நமக்குக் கற்றுத் தருகின்றன?

''இந்தஉன்னதமான கருத்தைக் கற்றுத் தருகின்ற அந்த மலர்களை வாழ்த்தி, இந்த அற்புதமான மலர்களை ஒன்றாக்கி மலர்க் கண்காட்சியை சிறப்பாக ஏற்பாடு செய்த அனைவருக்கும் பாராட்டைத் தெரிவித்து விடை பெறுகிறேன்''

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம வீரப்பன அவர்கள் உதகை மலர்க் கண்காட்சியை 17.5.86 அன்று ஊட்டியில் தொடங்கி வைத்தபோது இவ்வாறு மணிக் கருத்துக்களை அளித்தார்.

இவ்விழாவிற்கு தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையேற்றார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கே.எஸ்.ஸ்ரீபதி அவர்கள் வரவேற்புரையாற்றினார். குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் சிவகுமார், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் உச்சி, உதகை சட்டமன்ற உறுப்பினர் கே.கல்லன், உதகை நகராட்சித் தலைவர் சுந்தர்ராஜன், தோட்டக்கலைஇயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், இரெ. அண்ணாத்துரை ஆகியோர் பங்கேற்றனர்.



விழாவின் மலர்க் கண்காட்சி நிறைவு விழா இரண்டாவது நாளான 18.5.86 அன்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு கே. இராசாராம் அவர்கள் தலைமையேற்க, மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பரிசுகளை வழங்கி விழா நிறைவுரை ஆற்றிச் சிறப்பித்தார்கள்.

அனல் கக்கும் கோடையில் மக்களுக்கு அமுதமான குளிர்ச்சியை வாரி வழங்கும் உதகையின் கோடை விழா 1.5.86 தொடங்கி 26.5.86 வரை ஒவ்வொரு நாளும் சிறப்பு நிகழ்ச்சிகளுடன் நிறைவு பெற்றது. ஒவ்வொரு நாளும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி தலைமையில் விழாக் குழுவினர், கோடை விழாவை குறைவு படாமல் நடத்திக் காட்டினர் என்பது குறிப்பிடத் தக்கது.

**—நமது செய்தியாளர்**



(6-ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் உலகமே வியக்கும்படியாக ஒரு ஆலை உருவாகியுள்ளது. தமிழகத்துக்கு மட்டுமல்ல இந்தியாவுக்கே பெருமை தேடித் தருபவர் நமது முதல்வர் என்பது நிருபிக்கப்பட்டுள்ளது''.

மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் திரு வீராசாமி அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

''பலர் வரலாறு படைக்கிறார்கள். நமது முதல்வர் அவர்கள் மாபெரும் சாதனைகளை நிகழ்த்துவதன் வாயிலாக வரலாறாகத் திகழ்ந்து வருகிறார்கள்.

''நலிந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்ட நமது முதல்வர் அவர்கள், சமூகப் பொருளாதார உயர்வுக்கு ஏற்ற வகையில் திட்டம் தீட்டிச் செயல் புட்டு வருகிறார்கள். தமிழகம் வேளாண்மையை நம்பி வாழும் மாநிலம். அந்த அடிப்படையில் திட்டம் தீட்டப்பட்டு இந்த ஆலை உருவாக்கப்பட்டுள்ளது''.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர். திரு. சு. முத்துசாமி அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

''இந்த அரசு எல்லாத் துறைகளிலும் தனி முத்திரை பதித்து வருகிறது. இந்தக் காகித ஆலை இடம் பெறுவதற்காக இரண்டு இடங்கள் தேர்தெடுக்கப்பட்டன. பெரியார் மாவட்டத்தில் ஒரு இடமும் — திருச்சி மாவட்டத்தில் ஒரு இடமும் காட்டப்பட்டது. முதல்வர் அவர்கள் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த புகளூரையே தேர்தெடுத்தார்கள். இந்த ஆலையை இப்பகுதி மக்கள் நல்ல வகையிலே பயன்படுத்திக் கொள்ள வேண்டும்''.

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''இந்த ஆலை உருவாகிவரும் நேரத்தில் பலர், இது கற்பனையான திட்டம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். இன்று மாபெரும் ஆலையாக உருவாகி நம் கண் முன்னே காட்சி தந்து கொண்டிருக்கிறது. நமது முதல்வர் அவர்களின் ஆட்சியில் தமிழகம் தொழில் துறையில் முன்னேறி வருகிறது என்பது உறுதி''

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப.உ. சண்முகம் அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

''மாதந்தோறும் புதிய புதிய தொழிற்சாலையை நமது முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்து வருகிறார்.



''தொழில் துறையானலும் சரி, தொழிலாளர் நலத் துறையானாலும் சரி, வேறு எந்தத் துறையானாலும் சரி, நமது முதல்வர் அவர்கள் செய்திருக்கும் சாதனை போல வேறு யாரும் செய்ததாக வரலாறு இல்லை.

''இந்த அரசு செயலற்ற அரசு என்று பல எரிச்சல்காரர்கள் கூறி வருகிறார்கள். இது செயலாற்றும் அரசு என்பதை எடுத்துக் கூறுகிறேன்.

''இது போன்ற தொழிற்சாலைகளை டாக்குமெண்டரிப் படமாக எடுத்து மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் காண்பிக்க வேண்டும். அப்போதுதான் வளர்ந்து வரும் தமிழகத்துக்கு நமது முதல்வர் ஆற்றியுள்ள தொண்டினை நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள முடியும்''.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

''உலகம் முழுதும் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி, செய்தித்தாள் தயாரிக்கும்ஆலை எங்கும் இல்லை. இந்தியாவில். தமிழகத்தில்—புரட்சித் தலைவரின் ஆட்சியில் தான் அது உருவாக்கப்பட்டுள்ளது.

''தமிழகம் இந்தியாவில் அரிசி உற்பத்தியில் 5 வது இடத்தையும், நிலக்கடலை உற்பத்தியில் 2வது இடத்தையும், பஞ்சு உற்பத்தியில் 2 வது இடத்தையும் கரும்பு உற்பத்தியில் முதலாவது இடத்தையும் வகிக்கிறது. அப்படிப்பட்ட தமிழ்நாட்டில் தற்போது காகித ஆலை உருவாக்கப்பட்டுள்ளது''.

அடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொத்தானை அழுத்தி — தமிழ்நாடு காகித ஆலையின் பெயர்ப்பலகையைத் திறந்து வைத்து — மேற்படி ஆலையை நாட்டுக்கு அர்ப்பணித்தார். அப்போது பொதுமக்கள் மகிழ்ச்சி ததும்பக் கரவொலி எழுப்பினார்கள்.

அடுத்து, காகித ஆலை அமைந்துள்ள காகிதபுரம் என்ற நகரியத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

காகித ஆலையினர் நடத்தி வரும் 'காகித மலர்' என்ற இதழின் சிறப்பு மலரை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட, முதல் பிரதியை நிர்வாகத் தலைவர் திரு விஸ்வநாதன் பெற்றுக் கொண்டார்.

ஆலை நிர்வாகத்தினரின் சார்பில் அமைச்சர் பெருமக்களுக்கு அளிக்கப்பட்ட நினைவுப் பரிசுகளை மாண்புமிகு முதல்வர் வழங்கினார். பொறியாளர்களுக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

நிர்வாகஇயக்குநர் முதல், தொழிலாளர் வரை அனைவரும் சீருடை அணிய வேண்டும் என்ற திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதன் தொடர்பாக தொழிலாளர்களுக்குச் சீருடைகளையும் மாண்புமிகு முதல்வர் வழங்கினார்.

காகித ஆலையில் தயாரிக்கப்பட்ட எழுது காகிதத்தினால் உருவாக்கப்பட்ட நோட்டுப் புத்தகங்களை சிறுவர், சிறுமியர்க்கு வழங்கினார் மாண்புமிகு முதல்வர்.

ஆலை நிர்வாகத்தினர் வனகியம்மன் கோவில் திருப்பணிக்காக வழங்கிய நிதிக்குரிய காசோலையை மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர். திரு இராம. வீரப்பன். அவர்களிடம் அளித்தார் மாண்புமிகு முதல்வர்.

ஒவ்வொரு கட்டமையை ஆற்றும் போதும் முதல்வரின் உள்ளம் பூரிப்பால் நிறைந்தது. உற்சாகம் அவரது வதனத்தில் மிதந்தது.

அங்கு நிரம்பியிருந்த இலட்சக்கணக்கான மக்களின் ஆர்வத்தைப் பூர்த்தி செய்யும் வண்ணம், மாண்புமிகு முதல்வர் சொற்பொழிவாற்றினார்.



''என்னை வாழ வைக்கும்''. என்று அவர் பேச்சைத் தொடங்கிய உடனேயே பொது மக்கள் பெரு மகிழ்ச்சியடைந்து கரவொலி எழுப்பி, தங்களது பேரன்பைத் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் ஆற்றிய உரை வருமாறு:

"என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்க்குலமே!

என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே!

என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளே!

இந்தப் புகளூரில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 236 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி காகித உற்பத்தி செய்யப்படும் தொழிற்சாலை இந்தியாவிலேயே இது ஒன்றுதான்.

இந்த நிறுவனத்தின் உதவியால் செய்தித்தாள் காகிதத் தட்டுப்பாடு வெகுவாகக் குறையும்.

இந்த நிறுவனத்தின் கழிவுநீரால் சுற்றுப்புறத் தூய்மைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது. விவசாய நிலங்களுக்கும் பாதிப்பு ஏற்படாது.

இந்த நிறுவனத்தினால் ஏறத்தாழ 1530 பேருக்கு நேர்முக வேலை வாய்ப்பும், சுமார் 5 ஆயிரம் பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

இந்தத் தொழிற்சாலை அமைவதற்கு மூல காரணமாக இருந்தவர் இதன் தலைவர் விஸ்வநாதன் அவர்கள் தான். கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கலாம் என்ற கருத்தை என்னிடம் சொன்னவரும், உலக வங்கியின் உதவியுடன் அதற்கு முழு வடிவம் கொடுத்தவரும் அவர்தான்.

அவருடன் தோளோடு தோள் நின்று கடுமையாக உழைத்து இந்த ஆலையை உருவாக்குவதற்குப் பெரும்பாடு பட்டவர் நிருவாக இயக்குநர் ராமச்சந்திரன் ஆவார்.

இவர்களின் முயற்சி இல்லை எனில் இந்த மாபெரும் நிறுவனம் நமக்குக் கிடைத்திருக்காது.

விஸ்வநாதன் அவர்களையும் ராமச்சந்திரன் அவர்களையும் மற்றும் இணைந்து பணியாற்றிய அனைவரையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

இந்த நிறுவனம் மென்மேலும் வளர்ந்து சிறப்புற என்னுடைய வாழ்த்துக்களைக் கூறிக்கொண்டு இதை நாட்டுக்கு அர்ப்பணம் செய்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

நன்றி! நன்றி! வணக்கம்."

முதல்வரின் உரைக்குப் பின்னர் கரக ஆட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. ஒரு புறம் வாண வேடிக்கையும் நடைபெற்றது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் காகித ஆலைத் தொடக்க விழா, வரலாற்றுப் புகழ் படைத்த விழாவாகத் திகழ்ந்தது.

நமது செய்தியாளர்

## புகளூர் காகித ஆலையின் புகழ் மகுடத்தின் சில முத்துகள்

உலகத்திலேயே முதல் முறையாக 80 சதவிகிதத்துக்கும் அதிகமான கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி நீண்ட நார்ப் பொருளின் துணை சிறிதுமின்றி தயாராகும் செய்தித்தாள் உற்பத்தி ஆலை இதுதான்.

இந்தியாவிலேயே முதன் முறையாக உலக வங்கியின் நிதி உதவி பெற்று இயங்கும் காகித ஆலை இது.

உலக வங்கி இதற்கு அளித்துள்ள நிதி உதவி 100 டாலர் ஆகும்.

785 ஏக்கர் பரப்பளவு கொண்டது இந்த ஆலை.

ஓராண்டிற்கு 1 லட்சம் டன் செய்தித்தாள் அல்லது 80 ஆயிரம் டன் எழுது காகிதம் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. தற்போது 50 ஆயிரம் டன் செய்தித்தாள் காகிதமும் 40 ஆயிரம் டன் எழுது தாளும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்த ஆலையின் மூலம் தமிழகத்திற்கு- இந்தியாவுக்கு ஆண்டுக்கு 55 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி மிச்சமாகிறது.

ஒரு நிமிடத்திற்கு 650 மீட்டர் செய்தித்தாள் காகிதம் உற்பத்தி செய்யப்படுகிறது.

ஆலையின் கட்டடப் பணிகளுக்குச் சுமார் 35 ஆயிரம் டன் சிமெண்ட்டும் 10 ஆயிரம் டன் வலிமையூட்டப் பெற்ற இரும்பும், 5 ஆயிரம் டன் கட்டட இரும்பும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தமிழக அரசின் பொதுத் துறை நிறுவனம் இது.

திட்டமிடப்பட்ட 36 திங்களுக்குள் திட்டத்தை நிறைவேற்றிய பெருமை பெற்றிருக்கிறது இந்த ஆலை.

இதன் மொத்த முதலீடு 236 கோடி ரூபாய் ஆகும்.



# படமும் செய்தியும்



தென் பிராந்திய இராணுவத் தளபதி லெப்டினெண்ட் ஜெனரல் ரஞ்சித்சிங் தயாள் அவர்கள், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களை ராமாவரம் தோட்ட இல்லத்தில் 18-5-86 அன்று சந்தித்தார்.





அமெரிக்காவுக்குக் கடத்திச் செல்லப்பட்ட சிவபுரம் நடராசர் சிலையும் திருவேள்விக்குடி மணவாள ஈஸ்வரர் சிலையும் 10 ஆண்டுகள் கழித்து சென்னைக்கு மீட்டுக் கொணரப்பட்டன. அவற்றை மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் 16-5-86 அன்று பார்வையிடுதல்.



சென்ற இதழில்...

உதகமண்டலத்தில் நடைபெற்ற மலர்க் கண்காட்சியை சென்ற இதழ் (16.5.86) அட்டை அலங்கரித்தது.

# பார்த்தோம் படித்தோம்

உலகத் தமிழ்ச்சங்கத் தொடக்க விழாவைப்பற்றி 1.5.86 இதழில் நேர்முக வர்ணனை போல் விளக்கமாக வெளியிட்டதற்கு மிக்க நன்றி. நேராகச் சென்று கண்டு களித்தது போல் அமைந்திருந்தது கட்டுரை.

—கே.எம். சுப்பிரமணியம்,
வேலூர்

உலகத் தமிழ்ச் சங்க மாநாட்டில் கலந்து கொள்ள முடியவில்லையே என்ற ஆதங்கத்தைப் போக்கியது, மே 1 இதழ். மாநாட்டு நிகழ்ச்சிகளை எதார்த்தமாக விளக்கியது. நேரில் பார்ப்பது போலிருந்தது. நன்றி! பாராட்டுக்கள்.

எஸ்.கே. விஜயகுமார்
குழிவிளை

உலகத் தமிழ்ச் சங்கத் துவக்க விழா நிகழ்ச்சிகளை நேரில் காணாத எம்போன்றவர்க்கு இக் கட்டுரை ஒரு வரப்பிரசாதம். முதல்வரின். அட்டைப் படம் வெகுஜோர்!.

—குறிஞ்சி வானொலி மன்றம்
கரியணம்பட்டி,
பண்ணைப்புரம்.

உலகத் தமிழ்ச் சங்கம்-முதல்வர் ஆற்றிய உரை, இன்னிசை விருந்துகள் மிகவும் என் நெஞ்சைக் கவர்ந்தது. நேரில் கண்டதைப் போன்று இருந்தது.

—பி. பாண்டியன்.,
திருவையாறு.

''நீங்களே சொல்லுங்கள்'' கவிதை மிகவும் என்னைக் கவர்ந்தது.

—கே.எஸ். பாலதண்டாயுதம்
எம்.வி. சந்திரசேகரன்
செருவாமணி.

உழைப்பைப் பற்றியும், உழைப்பாளர் பற்றியும் பேரறிஞர் அண்ணாவின் கருத்துக்கள் சிறப்பாகப் பாராட்டும்படி இருந்தன; எக்காலத்துக்கும் ஏற்புடையவையாக இருக்கும் அக்கருத்துக்களைச் சிந்தித்துச் சிந்தித்து மகிழ்ந்தேன்!

'நட்புக்கு நட்பு' கோமகளின் சிறுகதை அருமையாக இருந்தது; முடிவு சிறப்பாக அமைந்தது.

வேணாப்பிரியன்,
திருமருகல்

தமிழரசில் வெளிவரும் கட்டுரை, கவிதைகள், மிக மிக அருமை. 'மாணவர் பகுதி' மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் ஏற்ற பக்கங்கள்.

—எஸ்.என். கோகுலம்,
கீழப்பாலூர்.

1.5.86ல் வெளியான முதல்வரின் மே தினச் செய்தி, அண்ணாவின் பொன் மொழிகள், தமிழ்ச் சங்கம் படச் செய்தி, தமிழகத்தில் குடும்ப நலத்திட்டம் — உரை, பொருட்காட்சி பரிசு பெற்றோர் படச் செய்தி, ''நட்புக்கு நட்பு'' — கோமகள் எழுதிய சிறுகதை அனைத்தையும் படித்தோம், பரவசமடைந்தோம்.

—செ. சுப்பாராஜன்,
சிறாச நல்லாயம் அஞ்சல்

மாணவர்களின் அறிவை வளர்க்கும் பயனுள்ள பகுதி 'மாணவர் பக்கம்'.

இ. வை இராஜன்,
திருவிடைமருதூர்.

கோமகளின் ''நட்புக்கு நட்பு'' சிறுகதை சிறப்பாக இருந்தது. ''ஜெனரேஷன் கேப்பினால்'' வயதான உள்ளங்கள் எப்படி நொந்து விடும் என்பதை அறிய முடிந்தது.

—எஸ். சண்முகவல்லி,
கப்பேகவுண்டன்புதூர்.

16-5-86 இதழின் வண்ண முகப்பு கண்ணைக் கவர்ந்தது; பிளவைக்கல் அணை சுற்றுலா மையம் - கட்டுரை கருத்தைக் கவர்ந்தது.

—வி.பி. செல்வராஜ்,
கும்பகோணம்.

'வங்கம் தந்த தங்கக் கவிஞர்' என்னும் கட்டுரை, தாகூர் பற்றி அறிந்து கொள்ளப் பெரிதும் உதவி செய்தது - வாழ்க்கை நிகழ்ச்சிகள் மனத்தைக் கவர்ந்தன.

—ம. இரத்தினவேல்,
ஸ்ரீபெரும்புதூர்.

மே 16 இதழ், பல்சுவை நிறைந்த செய்திகளை அள்ளித் தந்தது. கதை, கட்டுரை, கவிதை எனச் சிந்தைக்கு விருந்தூட்டின.

எஸ். திருநாவுக்கரசு,
சென்னை—82.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23






# அரசுக் கவிஞர் கண்ணதாசன்



தோற்றம்: 24-6-1927 மறைவு: 17-10-1981

# தலைமைச் செயலகத்தில் சுற்றுப்புறத் தூய்மைப் பாதுகாப்பு நாள்

11377





உலகச் சுற்றுப்புறத் தூய்மைப் பாதுகாப்பு நாள், தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையில் ஜூன் 5ஆம் நாளன்று பகல் 10.30 மணி அளவில் நடைபெற்றது.

சரியாக 10.22மணிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை புரிந்தார். 10 மாடிக் கட்டடத்திற்கு முன்னே உள்ள புல்வெளிப் பகுதியில் சுமார்6அடி உயரமுள்ள மகிழ மரம் ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நட்டார்கள். அதன் பின்னர் அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலர் திரு டி.வி. அந்தோணி,இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு இரா. கற்பூர சுந்தரபாண்டியன், இ.ஆ.ப., மற்றும் பல அரசு அதிகாரிகள் ராயல் பாம் கன்று நட்டார்கள்.

அதன் பின்னர், மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்.

''சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் ஒவ்வொருவரும் அக்கறை செலுத்த வேண்டும். சுற்றுப்புறச் சூழல் தூய்மையாக இருக்க வேண்டும். கவர்ச்சியாக அமைய — வசதி வாய்ப்புடன் இருக்க — அழகாக இருக்க ஒவ்வொருவரும் கண்ணும் கருத்துமாக இருந்து இந்த மரங்களை நட வேண்டும்.

''உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற வகையில், காற்று தூய்மையாக இருக்க — குடிநீர் உணவுப் பண்டங்கள் தூய்மையாக இருக்க—தங்குமிடங்கள் தூய்மையாக இருக்க—துப்புரவு கெடாமல் இருக்க — இந்த மரங்கள் பயன்படுகின்றன. அவற்றை நாம் பாதுகாக்க வேண்டும். இவற்றால் நம் வாழ்நாளை நீட்டித்துக் கொள்ள முடியும்.

''காடுகள் நன்கு செழிப்பதற்கு மரங்கள் காரணமாக அமைகின்றன. தூய்மை செழிப்பதற்கு மரங்கள் பயன்படுகின்றன. உயிர் இனம் வாழ்வதற்குரிய பிராண வாயுவை மரங்கள் வெளியே விடுகின்றன. வெப்பக் காலத்தில் குளிர்ச்சியை வழங்குகின்றன மரங்கள்.

''மரம் தரும் காய் நமக்குப் பயன்படுகிறது; கனி பயன்படு

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2017
அட்சய - ஆனி 2
மலர் : 16 16-6-1986 இதழ் : 24

கிறது. மரத்தின் பட்டை கூட மருந்தாகவும் பயன்படுகிறது.

''மரம், தூய்மையைப் பாது காக்க உதவும் என்பதன் காரண மாகத்தான் இங்கே நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு செடியை நட்டிருக்கிறார்கள்.

''ஒவ்வொருவரும் மரங்களை-செடிகளை— பயிர்களை இயன்ற அளவு வளர்க்க வேண்டும். வீட்டில் சிறிது இடம் கிடைத்தாலும் அதில் செடி கொடிகளை வளர்க்க வேண்டும். அதற்காகத் தான் இங்கே மரக் கன்றுகள் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. நாம் வளர்ப்பதுடன், மற்றவர்களையும் மரம் வளர்க்கத் தூண்ட வேண்டும்.

''ஒரு நாட்டின் பரப்பளவில் மூன்றில் ஒரு பகுதி காடாக இருக்க வேண்டும் என்பது நியதி. ஆகவே, நாம் எல்லோரும் இங்கு ஓர் உறுதி மொழி எடுத்துக் கொள்ள வேண்டும்'' என்று சொல்லி விட்டு உறுதி மொழியைப் படித்தார். அது வருமாறு:

**உலக சுற்றுப் புறத் தூய்மைப் பாதுகாப்பு நாளான இன்று சுற்றுப் புறத் தூய்மையைக் காப்பதில் என்னால இயன்ற பங்கை முழு மனத்தோடு நிறைவேற்றுவேன் என்று உறுதி கூறுகிறேன்.**

**உயிர்கள் வாழ்வதற்குப் பெரிதும் துணை புரியும் மரம், செடி கொடிகளை எந்த வகையிலும் நான் அழிக்க மாட்டேன் என்றும் ஒரு புதிய மரத்தையேனும் நானும் நட்டு, வளர்த்து, பராமரித்து, நன்கு காத்து வருவேன் என்றும் உளமார உறுதி கூறுகிறேன்.''**

இந்த உறுதிமொழியை மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் படிக்க, அமைச்சர் பெருமக்கள். அதிகாரிகள் அனைவரும் திரும்பச் சொல்லி உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

அதன் பின்னர், தலைமைச் செயலக ஊழியர்களுக்கு மரக் கன்றுகளை இலவசமாக வழங்கினார் மாண்புமிகு முதல்வர் அவர்கள். முதல் கன்றை - தலைமைச் செயலகப் பெண் ஊழியர் ஒருவர் பெற்றுக் கொண்டார்.

நன்றியுரை கூறிய தலைமைச் செயலர் திரு டி.வி. அந்தோணி இ.ஆ.ப. அவர்கள், ''இங்கு பப்பாளிக் கன்றுகளைச் சிலர் பெற்றுச் சென்றனர். அவர்கள் எல்லாம் பப்பாளிப் பழத்தை- அடுத்த ஆண்டு, நமது முதல்வர் அவர்களிடம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நன்றி உரையாகத் தெரிவிக்க விரும்புகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

**நமது செய்தியாளர்**



தமிழரசு
1-7-1986 இதழ்
தமிழ்நாடு அரசின்
9 ஆண்டுப் பணிகள்
தொகுப்பு மலராக
மலர்கிறது
கட்டுரைகள்,
வண்ணப் படங்கள்,
தகவல்கள்
அனைத்தும்
இம்மலரில் உண்டு!
அதிகப் பக்கங்கள். விலை ரூ. 1-00
விவரங்களுக்குத் தொடர்பு கொள்க:
உதவி இயக்குநர் (விற்பனை)
தமிழரசு அலுவலகம்
அரசினர் தோட்டம், சென்னை - 600 002.



# இலங்கைத் தமிழருக்காகத் தமிழகத்தில் பொது அடைப்பு

இலங்கை அரசு அங்குள்ள தமிழர்கள் மீது நடத்திய கொலை வெறித் தாக்குதல்களைக் கண்டித்து, மே மாதம் 31ஆம் தேதியன்று(1986) பொது அடைப்பு நடத்துவதென்று — மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையில் மே 29 ஆம் நாளன்று கூடிய அனைத்துக் கட்சியினர் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை மாண்புமிகு மின் துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன் அவர்கள் நிருபர்களிடம் தெரிவித்தார். அவை வருமாறு:

''இலங்கை அரசு முப்படை கொண்டு தமிழ்ப் பகுதியில் திட்டமிட்டு இனப்படுகொலை நடத்துவதை இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

''எதிர்பாராத இத் தாக்குதலினால் உயிரும் உடைமைகளும் இழந்து சொந்த இடத்தை விட்டு வேறு நாடுகளிலும் காடுகளிலும் மலைகளிலும் வாழ வேண்டிய அவல நிலைக்கு ஆளாகிய இலங்கைத் தமிழ் மக்களுக்கு முழு அனுதாபத்தை இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் தெரிவிக்கிறது.

''இலங்கை அரசின் அடக்குமுறை நடவடிக்கைகளைக் கண்

டிக்கும் வகையிலும் அல்லல்படும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையிலும் மே 31 ஆம் தேதி காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணிவரை தமிழ்நாட்டில் பொது அடைப்பு நடத்துவது என்று இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் தீர்மானிக்கிறது.

''எந்தத் தமிழர்களைப் பிளவுபடுத்தி தங்கள் சுயநல வேட்டையில் வெற்றி பெற வேண்டும் என்று ஜெயவர்த்தனா அரசு நினைக்கிறதோ அதற்குச் சற்றும் இடம் கொடுக்காத வகையிலும் இரையாகா வண்ணமும் இம் முடிவு அனைத்துக் கட்சியினரால் மேற் கொள்ளப்படுகிறது.

''மத்திய அரசு மற்றும் மாநில அரசு இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்வு சம்பந்தமாக மேற்கொண்டு வரும் அனைத்து முயற்சிகளுக்கும் இக் கூட்டம் முழு ஒத்துழைப்புத் தருவதுடன் உயிர்ச் சேதம், பொருட் சேதம் நிறுத்தப்படும் வகையில் உடனடியாக தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள, மத்திய, மாநில அரசுகளை இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

''முழு அடைப்பையொட்டி அதை வெற்றிகரமாக அமைதியுடன் நடத்தித் தர வேண்டும் என்று தமிழக மக்களையும் இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.''

முழு அடைப்பில் தமிழக அரசே கலந்து கொண்டதனால், மே 31 ஆம் நாளை அரசு விடுமுறை நாளாக அரசு அறிவித்தது. தமிழ்நாட்டில் உள்ள எல்லா வங்கிகளுக்கும் விடுமுறை விடப்பட்டது.



முழு அடைப்பு காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற்றது. அந்த நேரத்தில் பேருந்துகள், ரயில்கள், ஆட்டோக்கள், டாக்சிகள் எதுவும் ஓடவில்லை. தெருக்களெல்லாம் வெறிச்சோடிக் கிடந்தன. விமானப் போக்குவரத்தும் ரத்து செய்யப்பட்டது. ரயில் போக்குவரத்திலும் மாறுதல்கள் செய்யப்பட்டன. சில ரயில்கள் நடுவழியில் நிறுத்தி வைக்கப்பட்டன. காலை 6 மணிக்குள், வெளியூர்களிலிருந்து சென்னை எழும்பூர் ரயில் நிலையத்துக்கு வந்த பயணிகள்—அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்துகளின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

தமிழக மக்கள் அனைவரும் இந்த முழு அடைப்பு நிகழ்ச்சியில் மனப்பூர்வமாகப் பங்கு கொண்டு, இலங்கைத் தமிழர்களுக்கு, தங்களின் அனுதாபத்தைத் தெரிவித்தனர்.

தொழிற்சாலைகள், உணவு விடுதிகள், தனியார் கடைகள், திரையரங்குகள் அனைத்தும் மாலை 6 மணிவரை மூடப்பட்டிருந்தன.

சென்ட்ரல் ரயில் நிலையத்தில் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட பயணிகள் தங்கி இருந்தனர். இவர்களுக்குத் தங்கும் வசதி, உணவு, மருத்துவ வசதி ஆகியவற்றை ரயில்வே நிர்வாகம் ஏற்பாடு செய்து தந்தது.

முழு அடைப்பு நிகழ்ச்சி குறித்து, தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு டி.வி. அந்தோணி இ.ஆ.ப. தெரிவித்ததாவது:

''மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களின் தலைமையில் மே 29 ஆம் நாள் கூடிய அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்த முடிவிற்கு இணங்க, அல்லல்படும் இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக தமிழகம் முழுதும் கடைப்பிடிக்கப்பட்ட முழு அடைப்பு தமிழ்நாடு முழுதும் அமைதியான முறையில் வெற்றிகரமாக நடைபெற்றது.

''தமிழக மக்கள் எல்லோருமே மனதாரக் கலந்து கொண்டார்கள். இதற்காக எல்லா அரசியல் கட்சிகளுக்கும் தமிழக மக்கள் எல்லோருக்கும் தமிழக அரசு தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.''

மே திங்கள் 29 ஆம் நாளன்று இலங்கைத் தமிழர்களுக்காக, தமிழ்நாட்டில், அரசே முழு அடைப்பு நடத்தியது நான்காவது முறையாகும். இதற்கு முன்னர் 1981 செப்டம்பர் 12 ஆம் நாளிலும், 1983 ஆகஸ்ட் 2 ஆம் நாளிலும், 1985 செப்டம்பர் 24 ஆம் நாளிலும், அரசு முழு அடைப்புகளை நடத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

1985 செப்டம்பர் 24 ஆம் நாளன்று முழு அடைப்பு நிகழ்ச்சியுடன், மாண்புமிகு முதல்வர் அவர்களும்-அமைச்சர் பெருமக்களும், அனைத்துக் கட்சியினரும் சென்னைக் கடற்கரையில் அண்ணா சதுக்கத்தின் அருகில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை உண்ணா நோன்பும் மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



பொது அடைப்பின் காரணமாக வெறிச்சோடிக் கிடக்கும் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம்.



# சட்டமன்றங்கள் ஆற்றும் பணிகள்

## மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர்

## திரு பி. எச். பாண்டியன்

'சட்டமன்ற உறுப்பினர் எவ்விதம் சிறப்பாகப் பணியாற்றுவது?'

—இந்தத் தலைப்பு மிக முக்கியமான ஒன்றாகும். அரசியல் அமைப்பை உருவாக்கிய நமது முன்னோர்கள் நமது நாட்டிற்குப் பாராளுமன்ற ஜனநாயகம்தான் ஏற்புடையது என்று கருதினார்கள். அவர்களுடைய கருத்து சரி என்பது கடந்த கால வரலாற்றிலிருந்து நமக்குத் தெரிகிறது. இப்போது நம் முன் உள்ள கேள்வி, அரசியல் அமைப்புச் சட்டத்தின் முகவுரையில் குறிப்பிடப்பட்டுள்ள இலட்சியங்கள் எந்தளவிற்குப் பாராளுமன்ற ஜனநாயகத்தைக் கடைப்பிடித்ததால் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதாகும்.

தற்போதைய சட்டமன்றத்தினுடைய பணிகள் பரந்த தன்மை உடையதாகவும், பலதரப்பட்டதாகவும் உள்ளன. சட்டம் இயற்றுவதுதான் சட்டமன்றத்தினுடைய முக்கியமான நோக்கம் அல்லது அதனுடைய பணி என்பது அல்ல. அரசுக்கு வேண்டிய மானியங்களைப் பேரவை வழங்குகிறது. பல வளர்ச்சிப் பணி குறித்த திட்டங்களுக்குப் பேரவை ஒப்புதல் அளிக்கிறது.

சட்டமன்றத்தில் கேள்வி நேரம் மற்றும் அமைச்சர்களின் கவனத்தை ஈர்த்தல் போன்ற முறைகள் உள்ளன. பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் குறித்த விவாதங்களும் நடைபெறுகின்றன. இது தவிர சட்டமன்றத்தில் பல குழுக்கள் உள்ளன. உதாரணமாகப் பொதுக் கணக்குக் குழு, மதிப்பீட்டுக் குழு, பொது நிறுவனங்கள் குழு, அரசு உறுதிமொழிகள் குழு, சட்ட ஆய்வுக்குழு போன்றவை.

மேற்கண்ட பல முறைகள் இருப்பினும், அரசு நிர்வாகத்தினைச் சட்டமன்றம் சிறந்த முறையில் கண்காணிக்கிறதா என்பதை நாம் ஆலோசிக்கவேண்டும். சட்டமன்றம் நிர்வாகத்திற்கு ஒரு மாற்று அமைப்பு அல்ல. சட்டமன்றம் நிர்வாகப் பணிகளுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ குந்தகம் விளைவிக்கக் கூடாது. ஆனால் அரசுப் பணிகளைக் கண்காணிக்க உரிமை உண்டு. அரசியல் சட்டப்படி நிர்வாகம் சட்டமன்றத்திற்குத் தனது நடவடிக்கை குறித்துப் பதில் அளிக்க வேண்டிய நிலையில் உள்ளது. அது நல்ல முறையில் செயல்படுகிறதா என்பது ஒரு கேள்விக் குறியாகும். உதாரணத்திற்கு ஒன்றை எடுத்துக் கொள்வோம். சட்டமன்றம் ஒவ்வொரு ஆண்டும் பல தலைப்புகளின் கீழ் அரசுக்குப் பணம் ஒதுக்குகிறது. சட்டமன்றம் எந்த நோக்கத்திற்காக அளித்துள்ளதோ, அந்த நோக்கத்திற்குப் பணம் பயன்படுத்தப்பட்டதா என்று அறிய, சட்டமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

அரசியல் சட்டத்தின்கீழ் அரசு கணக்குகள் குறித்து தலைமைக் கணக்காய்வுத்துறைத் தலைவர் அளிக்கும் அறிக்கையை அரசு அவை முன் வைக்கவேண்டும். அந்த அறிக்கை குறித்து விவாதிக்க சட்டமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. ஆனால் நடைமுறையில் அந்த அறிக்கைகள் மீது சட்டமன்றம் விவாதம் நடத்துவதில்லை. ஆனால் பொதுக் கணக்குக் குழு அவைகளை ஆய்ந்து அறிக்கையை அளிக்கிறது.

பொதுக் கணக்குக்குழு, அரசின் கணக்குகள் குறித்து ஆய்ந்து அறிக்கை அளிக்கிறது. கணக்குகளில் செலவிடப்பட்டுள்ளதாகக் காட்டப்பட்டுள்ள தொகை, எந்தப் பணிகளுக்காகச் செலவிடப்பட்டதோ, அல்லது நோக்கத்திற்காகக் காட்டப்பெற்றதோ, அந்தப் பணிக்கும் நோக்கத்திற்கும் சட்டப்படி கிடைக்கப்பெறறு, செலவிடப்பட்டிருக்கிறதா என்பதைக் குழு ஆய்கிறது. கணக்காய்வுத்துறைத் தலைவரின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் குறித்தும் இக்குழு பரிசீலிக்கிறது.

அங்கீகாரம் செய்யப்படாத செலவுகள் குறித்தும், முறையின்றிச் செலவிட்ட செலவினங்கள் குறித்தும், ஆய்ந்து வர இக்குழு அதற்கு ஒரு கண்காணிப்பாக அமைகிறது. குழு, இத்தணிக்கை அறிக்கைகளை ஆராயும் [illegible]. துறைகளிடமிருந்து விளக்கக்குறிப்புகள் காலம் தாழ்த்தி அனுப்பப்படுவதால், இந்தக் குறைகளுக்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து நேரில் விசாரிக்க இயலாமல் போகிறது. ஏன் என்றால், அந்த அதிகாரிகள் மற்றத் துறைகளுக்கு மாற்றப்பட்டோ அல்லது அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெற்றோ சென்று விடுகிறார்கள். இந்தக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட பரிந்துரைகள் உடனடியாக ஆராயப்பட்டு, அதன் மேல் அரசு நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பதில்லை. ஆகவே, இந்தக் குழுக்களினுடைய பரிந்துரைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கையில் உள்ள பல பரிந்துரைகள் இன்னும் அரசால் ஏற்றுக்கொள்ளப்படாத நிலுவையில் உள்ளதை நாம் காண்கிறோம். இதனால் இந்தக் குழுக்கள் எந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறாமல் போய்விடுகிறது. இதைப் பல முறை பொதுக்கணக்குக் குழு சுட்டிக்காட்டியிருந்தும், அந்த நிலையில் எந்த விதமான முன்னேற்றமும் காணப்படவில்லை. எனவே அரசு செலவினங்களைச் சட்டமன்றம் கண்காணிப்பதில் தொய்வு ஏற்படுகிறது.

பொது நலன் கருதிய வழக்குகள் தற்போது நடைமுறையில் இருப்பதை நாம் யாவரும் அறிவோம். உச்ச நீதிமன்றம் ஒரு புதுச் சட்ட இயலை உருவாக்குவதில் பல ஆண்டு காலமாக முனைந்து இந்தச் சமூகத்தில் உள்ள நலிவுற்ற பிரிவினரின் நன்மைக்காக ஒரு புதுக் கொள்கையை உருவாக்கி உள்ளது. அதாவது நீதி மன்றத்திற்கு அனுப்பப்படும் ஒரு கடிதத்தைக் கூட ஒரு ரிட் மனுவாக எடுத்துக் கொண்டு, அதன் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்ற நிலை உள்ளது. இந்தப் பிராது, இதனால் பாதிக்கப்பட்ட நபராலோ அல்லது மற்ற ஒருவராலோ அனுப்பப்படலாம். இந்த முறையில் சட்ட விரோதமாகக் காவலில் வைக்கப்பட்டுள்ள பல நபர்களுடைய வழக்குகள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன. பல கொத்தடிமைகள் இதனால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மத்திய அரசுக்கும், எஸ்.எஸ்.குப்தா என்பவருக்கும் நடந்த வழக்கில் உச்ச நீதிமன்றத்தலைமை நீதிபதி திரு பகவதி அவர்கள் கீழ்க்கண்டவாறு கூறி உள்ளார்,

''பெரும்பகுதியான பொதுமக்களுக்கு அடிப்படை மனித உரிமை மறுக்கப்படுகிறது. அவர்களுக்குச் சுதந்திரமும், விடுதலையும் அர்த்தமில்லாத சொற்களாக அமைகின்றன. அவர்களுக்கும் நீதி கிடைக்கும் வகையில் புதிய முறைகளையும், வழிவகைகளையும் உருவாக்குவது உடனடித் தேவையாகும்.

''சட்டங்களை நடைமுறைப்படுத்துவதை அதிகார வர்க்கத்தின் சொந்த விருப்பு வெறுப்புக்குகந்ததாக அமையும் ஒரு சூழ்நிலையையும், அம்மாதிரி சட்டங்கள் மீறப்பட்டால் அதற்குப் பரிகாரம் அளிக்கும் இல்லாத நிலை உருவாவதையும், அதிகார வர்க்கத்திலுள்ள அரசு அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் அரசியலமைப்புச் சட்டத்தையும் பிற சட்டங்களையும் மீறும்போது அதற்கு அவர்கள் பொறுப்புடையவர்களாவார்கள்'' என்ற புதிய சட்டயியல் சித்தாந்தத்தை நீதிபதி திரு.வி.ஆர்.கிருஷ்ணஐயர் அவர்கள் உருவாக்கியுள்ளார்கள்.

முனிசிபல் கவுன்சில் ஏத்லமுக்கும் வரதட்சன் என்பவருக்கும் நடந்த வழக்கில் கீழ்க்கண்டவாறு அவர்கள் கூறியுள்ளார்கள்.

''நீதியை நிலைநாட்டுவதில் தற்போது பலதரப்பட்ட நடைமுறை வழிவகைகள் உள்ளன. நிதி வசதியில்லாத பாமர மக்கள் நீதிக்காக நிலை குலைந்து நிற்கும்போது அதற்குக் காரணமான அதிகாரிகளும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் நீதிமன்றமும் சட்டவிதிகளும் அவர்களுக்கு இட்ட கட்டளைகளை நிறைவேற்றாமலோ அல்லது எதிர்த்தாலோ அவர்கள் தண்டனைக்குட்படுவார்கள்''. நீதிபதி குறிப்பிட்ட கீழ்க்கண்ட வாசகங்களை மீண்டும் நினைவுறுத்துகிறேன். ''அதாவது பாமரமக்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீதி வழங்கப்படவில்லையென்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் தண்டனைக்குள்ளாவார்கள்.''

அரசியலமைப்புச் சட்டப்படியோ, மற்ற சட்டப்படியோ உள்ள விதிகள், பொறுப்பில் உள்ளவர்களால் மீறப்படும்பொழுது, அவற்றால் பாதிக்கப்பட்ட, சமூகத்தில் நலிவுற்ற வர்க்கத்திற்குத் தகுந்த பரிகாரம் தேட வகை செய்யாவிடில் சட்டமன்றம் தனது கடமையிலிருந்து வழுவிடவில்லையா? இக்கேள்வியை நாம் நமக்குள் கேட்க வேண்டிய கால கட்டத்தில் உள்ளோம்.

தமிழ்நாட்டில் மனுக்கள் குழுவின் பணிகளை, பாதிக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, மக்களின் நலன் கருதி, அதன் அதிகாரத்தையும், நோக்கங்களையும் விரிவாக்க உத்தேசித்துள்ளோம். ஏனெனில், பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாக நாம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம். அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை அகற்றி பரிகாரம் தருவது நமது பொறுப்பாகும். அவர்களுக்கு நெருக்கமாக இருப்பது நாம்தான். அவர்களுக்கு உண்மையாக இருப்பவர்களும் நாமேதான். பாமரமனிதன், பண-நேர விரயம் இன்றி எளிதாக நீதி பெற, சட்டமன்றம் தனது அமைப்பில் மாறுதல்களைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தமான நிலை வெகுதூரத்தில் இல்லை. அவர்கள் அப்படி உணராத வரை நமது ஜனநாயகம் சிறந்த முறையில் செயல்படுவதாகக் கூறுவதற்கில்லை.

அடுத்த கேள்வி, சிறந்த சட்டமன்ற உறுப்பினராக இருப்பது எப்படி என்பதாகும். மேலை நாடுகளில் சட்டமன்ற உறுப்பினர் பணி முழுநேரப்பணியாகும். அவர்கள் தொகுதிகளுக்குத் தேவையான வசதிகள் செய்து தரப்படுகின்றன. நமது நாட்டில் நாம் செய்ய வேண்டியது நிறைய உள்ளன. அங்கு அநேகமாக ஒத்த கருத்துக்கள் நிலவி முடிவு எடுக்கப்படும். குழுக்களில் மாறுபட்ட கருத்து அநேகமாக இருக்காது.

நமது செயலகத்தில் 'குறிப்பு ஆராய்ச்சிப் பிரிவு' என்று ஒரு பிரிவு செயல்படுகிறது. உறுப்பினர்களுக்குத் தேவையான விவரங்களை, தகவலை அது சேகரித்துத் தரும். எனவே, உறுப்பினர்கள் தங்கள் பணிகளுக்குத் தேவையானவற்றை, உதவியை அப்பிரிவின் மூலம் பெற்று, அதைப்பயன்படுத்திக் கொள்ளலாம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய மேலான கருத்துக்களைச் சொல்லலாம் என்று கூறி, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

[காமன்வெல்த் பாராளுமன்றச் சங்கத்தின் தமிழ்நாடு கிளையின் சார்பில் 26.5.86 அன்று உதகையில் நடந்த கருத்தரங்கில் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு]



# குடிநீர் வசதியைப் பெருக்க 10 கோடி ரூபாய்த் திட்டம்

**1986** மே மாதம் 8,9, ஆகிய நாட்களில் சென்னை தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சியாளர் மாநாடு நடைபெற்றது. இதில் மாண்புமிகு அமைச்சர்களும் செயலர்களும் கலந்து கொண்டனர்.

சத்துணவுத் திட்டம், வறட்சி நிவாரணம், மாவட்டத் தொழில் வளர்ச்சி நிலை ஆகியவை குறித்து இம்மாநாட்டில் கலந்துரையாடல் நடைபெற்றது.

மாநாடு முடிந்த பின்னர், தலைமைச் செயலர் திரு டி.வி. அந்தோணி இ.ஆ.ப., நிருபர்களிடம் தெரிவித்த தகவல்கள் வருமாறு:

''பல மாவட்டங்களில் உள்ள தண்ணீர்ப் பற்றாக்குறை பற்றி இந்தக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. மாவட்ட வாரியாகத் தண்ணீர்த் தட்டுப்பாடு பற்றி முதலமைச்சர் ஆய்வு செய்தார். காலையில் கூட்டம் முடிந்த பிறகு பிற்பகலில் ஒவ்வொரு அதிகாரியிடமும் தனித்தனியாகக் கருத்துக் கேட்டார்.

தமிழ்நாட்டில் உள்ள 75 ஆயிரத்து 786 பம்புகளையும் சோதனை போட்டு, இயங்கும் நிலையில் வைத்து இருக்க வேண்டும் என்று கூறினார். ஏதாவது குடிநீர்க் குழாயில் பழுது ஏற்பட்டு இருந்தால், ஒரு வாரத்திற்குள் பழுது பார்க்க வேண்டும் என்று முதலமைச்சர் கூறி இருக்கிறார்.

குழாய்களை ரிப்பேர் செய்ய, போதுமான அளவு பணியாளர்கள் இல்லை என்று மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தெரிவித்தனர். 100 பம்புகளுக்கு ஒரு 'பிட்டர்' நியமிக்கப்பட்டு இருக்கிறார் இப்போது.

ஒரு பிளாக்கில் 100-க்கு மேற்பட்ட குழாய்கள் இருந்தால் கூடுதலாக உள்ள 30 பம்புக்கு ஒரு பிட்டர்வீதம் தற்காலிகமாக நியமிக்கலாம் என்று முதலமைச்சர் உத்தரவு வழங்கி இருக்கிறார்.

தமிழ்நாட்டில் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள பகுதிகளில், 5 ஆயிரத்து 83 கிணறுகளை ஆழப்படுத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தெரிவித்தனர். இதற்காக ஒரு கோடியே 82 இலட்சம் ரூபாயை ஒதுக்கி முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். பல மாவட்டங்களில் கூடுதலாகக் கைப் பம்புகள் அமைக்கப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கருத்துத் தெரிவித்தனர். மேலும் 2 ஆயிரத்து 500 ஆழ் குழாய்க் கிணறுகள் மற்றும் கைப் பம்புகள் அமைக்க 2½ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

சில நகர சபைகளிலும், நகரப் பஞ்சாயத்துகளிலும் லாரிகள் மூலம் குடிநீர் வழங்க வேண்டும் என்று இந்தக் கூட்டத்தில் கூறப்பட்டது. லாரிகளை வாடகைக்கு எடுத்துக் குடிநீர் வழங்கச் செய்வதற்காக ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கிணறுகள் தோண்டுவதிலும், கைப் பம்புகள் அமைப்பதிலும் பல் வேறு துறைகளுக்கிடையே நல்ல ஒருங்கிணைப்பு இல்லை என்று கூறப்பட்டது.

இதற்காக மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் குடிநீர் வடிகால் வாரியத் தலைமைப் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் தலைமைப் பொறியாளர் என்கோபட் அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

வாரத்துக்கு ஒரு முறை இந்தக் குழு கூட்டம் கூடி கிணறுகள் தோண்டுவது, ஆழ் குழாய்க் கிணறுகள் அமைப்பது, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் பராமரிப்பது போன்ற பணிகளை விரைவுபடுத்துவது பற்றி ஆலோசனை நடத்தும்.

இப்போது இருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், பல ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டவை. பல தொட்டிகள் துருப்பிடித்துள்ளன. குழாய்கள் சரியாக இயங்கவில்லை என்று கூறப்பட்டது.

இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைப் பழுது பார்த்துப் பராமரிக்க ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. வறட்சிநிவாரணப் பணிகளை மேற்பார்வையிடவும், குறித்த காலத்தில் நடைபெறுகிறதா என்று பார்க்கவும் மாவட்டந்தோறும் அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செய்வார்கள் என்று முதலமைச்சர் கூறினார்.

பொதுவாக மேற்குப் பகுதியில் உள்ள மாவட்டங்கள் தான் வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. தர்மபுரி மாவட்டம் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கோவை மாவட்டத்தில் சில பகுதிகள், பெரியார் மாவட்டம் மற்றும் சேலம், திருச்சி, காமராஜர், பசும்பொன் முத்து ராமலிங்கம், இராமநாதபுரம், நெல்லை ஆகிய மாவட்டங்களில் உள்ள பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த சில மாதங்களுக்கு முன்னால் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்படாத மாவட்டங்கள் இப்போது வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. வறட்சி குறித்த அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்ப இருக்கிறோம்.

இந்தக் கூட்டத்தில் சத்துணவுத் திட்டப் பணிகளையும் முதலமைச்சர் ஆய்வு செய்தார். சத்துணவுக் கூடங்களில் நல்ல தரமான அரிசி வழங்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் கூறினார்.

மாவட்ட ஆட்சித்தலைவகள் மாதத்துக்கு 10 சத்துணவுக் கூடங்களிலாவது திடீர்ச் சோதனை போட வேண்டும் என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

சத்துணவுக் கூடங்களில் சோதனை போடுவது பற்றிய வழி முறைகள் இன்னும் 3 நாட்களில் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அனுப்பப்படும். அதன் அடிப்படையில் சத்துணவுக் கூடங்களில் அதிகாரிகள் சோதனை போடுவார்கள்.''



மாண்புமிகு முதல்வர் தலைமையில நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு (மே 8,9-1986)



# வணிக வரித் துறையின் சீரிய பணி

**மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்**

**திரு தா. வீராசாமி**

மக்களாட்சியில் சமுதாயப் பணிகளுக்கான செலவினங்களுக்கு வருவாய் திரட்டுவதில் வணிகவரிகளின மூலம் அரசுக்குக் கிடைக்கும் வருவாய் பெரும்பங்கு வகிக்கிறது. கேளிக்கை வரிகளின் மூலம் கிடைக்கும் வருவாய் உள்ளாட்சி நிறுவனங்களுக்கே பெரிதும் பயன்படுகிறது.

வணிகவரிகளுள் முதன்மையானது விற்பனை வரியே. இவ் வரி விதிப்பு மிகச் சிறிய அளவில், அதாவது, விற்பனைத் தொகையில் ஒரு ரூபாய்க்கு ஒரு காசு (1/192 ரூபாய்) என்ற விகிதத்தில் 1939-ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டது. மாநிலங்களில் அதிகார வரம்பிற்குட்பட்ட இந்த வரி விதிப்பின் மூலம் அரசுக்கு வருவாய் கிடைக்க வழி வகுத்து மற்ற அனைத்து மாநிலங்களுக்கும் தமிழ்நாடு முன்னோடியாக விளங்குகிறது. இவ்வரிகள், உள் மாநில இடைமாநில விற்பனையின் மேல் விதிக்கப்படுகின்றன. வெளிநாட்டு மது, உள்நாட்டில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகள், உள்நாட்டு மதுபான சாராயம் ஆகியவற்றிற்கு அதிகபட்ச வரியாக 50, 30 மற்றும் 20 சதவீதம் விதிக்கப்படுகிறது.

மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்பொழுது இம்மாநிலத்தில் வரி விகிதம் அதிகமில்லாத பொழுதும், இந்தத்துறை அலுவலர்களின் ஒத்துழைப்பினாலும் வரி விதிப்புக்குட்பட வேண்டியவர் வரி விதிப்பின்றி விடுபடாமல் காத்து வரி வசூல் பணியில் தீவிரம் காட்டி, மொத்த வரி வசூலில் தமிழ்நாடு அனைத்து இந்திய அளவில் மகாராட்டிரத்திற்கு அடுத்த இடத்தைப் பெற்று வருகிறது.

வரி விதிப்பில் முன்னோடியாகத் திகழ்ந்த தமிழ்நாட்டில் வரி தவிர்ப்பு மற்றும் வரி ஏயப்புகள் கண்டுபிடிக்கப்பட்டு அந்தந்த ஆண்டே வரி விதிப்பு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு வரி வசூல் செம்மையாகச் செய்து வரப்படுகிறது. 1976—77ஆம் ஆண்டில் வணிக வரிகள் மூலம் (கேளிக்கை வரிகள், பந்தய வரிகள் உட்பட) அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ. 255.58 கோடியாக இருந்தது. 1985—86ஆம் ஆண்டில் ரூ. 1035.08 கோடியாக, அதாவது நான்கு மடங்காக உயர்ந்துள்ளது. இத்துறையின் மிகச் சிறந்த சாதனையாகும்.

**வளரும் தமிழகம்**

இத்துறையின் மற்றுமோர் சாதனை 1976—77 ஆம் ஆண்டில் 55, 683 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ. 43.71 கோடி விற்பனைத் தொகை மறைப்பு வெளிக் கொணரப்பட்டு அரசுக்கு ரூ.1 கோடி 74 இலட்சம் அதிக வரி கிடைக்க வழி செய்யப்பட்டது. 1984—85ஆம் ஆண்டில் 96,746 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ.245 கோடி விற்பனைத் தொகை மறைப்பு வெளிக்கொணரப்பட்டு, அரசுக்கு ரூ.21 கோடி 57 இலட்சம் அதிகவரி கிடைக்க வழி செய்யப்பட்டது.

இம்மாநிலத்தில் வரி விதிப்பின் மூலம் ஏழை, எளிய நடுத்தர மக்களைப் பாதிக்காமல் இருக்க, அம்மக்களின் அடிப்படையாகத் தேவைப்படும் பொருட்களின் விற்பனையின் மேல் முழு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. ஏழை எளிய மக்களின் அன்றாடத் தேவையான விறகின் மேல் முழு வரி விலக்குள்ளது. மண்ணெண்ணெயின் மேலிருந்த 8.5 சதவீத வரி நான்கு சதவீத வரியாகக் குறைக்கப்பட்டுள்ளது. மண்ணெண்ணெயால் எரிக்கப்படும் திரி விளக்குகள் அனைத்திற்கும் முழு வரி விலக்குள்ளது. காய்கறிகள், பழங்கள், பூ, செடிகள் ஆகியவற்றிற்கும் வரி விலக்கப்பட்டிருக்கிறது.

உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவுப் பொருட்களுக்கும், பன், பொறை, ரொட்டி முதலியவறறிறகும் முழு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. அப்பளம், சேமியா பொருட்களின் மேலும் 1981-ஆம் ஆண்டிலிருந்து வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. முதியோரின் நலன் காக்கும் பொருட்டு மூக்குக் கண்ணாடிகளுக்கு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. கையினால் செய்யப்படும் செங்கற்கள், மண்பாண்டங்கள் ஆகியவைகளுக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகங்கள், கரும்பலகைகள், எழுது பொருட்கள் ஆகியவற்றிற்கும் முழு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. புத்தகங்கள் அனைத்திற்கும் வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. கால்நடைகள் மற்றும் விலங்கினங்கள் விற்பனையின் மேலும், கால்நடைகளுக்கு இரையாக உள்ள புல், வைக்கோல், தாழ், தவிடு முதலியவற்றிற்கும் வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. மனிதர்கள் மற்றும் விலங்குகள் சக்தி மூலம் இயக்கப்படும் விவசாயத் துணைப் பொருட்கள் மேலும் வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும் இயற்கை உரத்திற்கு முழு வரி விளக்களிக்கப்பட்டுள்ளது. ஆனால், இரசாயன உரங்கள் மீதும், பூச்சி, காளான், வேர்க் கொல்லிகளுக்குக் குறைந்த வரியாக மூன்றரைச் சதவீதம் விதிக்கப்படுகிறது.

நடுத்தர மக்களுக்கு வரி விதிப்பில் சலுகைகள் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் தயார் செய்யப்படும் மின்னணுக் கருவிகளுக்கு வரிவிதிப்பு 6 சதவிகிதமாகவும், பிற இடங்களில் தயாரிக்கப்படும் மின்னணுப் பொருட்களுக்கு 10 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. சைக்கிள்கள் அவற்றின் டயர், டியூபுகள், கையால் செய்யப்படும் சோப்புகளுக்கு வரி விகிதம் குறைக்கப்பட்டுள்ளது. இயற்கைச் சக்திகளான சூரிய ஒளி, காற்று, தழை மற்றும் சாணம் ஆகியவற்றை மக்களுக்குப் பயன்படும் எரிபொருள் மற்றும், மற்றச் சக்திகளாக மாற்றிடும் கருவிகளுக்கு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. உயிர்காக்கும் 41 மருந்து வகைகளுக்கு வரி 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

பலமுனை வரிககுட்பட்ட பொருட்கள் மட்டுமே விற்பனை செய்யும் வணிகர்கள் பதிவு செய்து கொள்வதற்கான விற்பனைத் தொகை வரம்பு ஆண்டொன்றுக்கு ரூ.75,000 இந்தியாண்டிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும், இப்பொருட்களில் வாணிபம் செய்யும் சிறு வணிகர்களுக்கு, ஆண்டொன்றிற்கு விற்பனைத் தொகை ஒரு இலட்சம் ரூபாய்க்குள் இருந்தால் வரி விதிப்பு இல்லை. இவ்வணிகர்களின் ஆண்டு விற்பனைத் தொகை ஒரு இலட்சத்திலிருந்து இரண்டு இலட்சம் ரூபாய்க்குள் இருந்தால் சலுகை வரி விதிப்பு முறை அமலில் உள்ளது.

கேளிக்கை வரி விதிப்பு இம்மாநிலத்தில் 1926-ஆம் ஆண்டு முதல் அமலில் உள்ளது. இதன் மூலம் கிடைக்கும் வருவாய் பெரும் பகுதி உள்ளாட்சி-ஊராட்சி ஒன்றியங்களுக்கே அளிக்கப்பட்டாலும், வணிகவரித்துறையே இவ்வரியையும் வசூலித்துவருகிறது. 1939-ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட சட்டத்தில் 77-ஆம்ஆண்டிலிருந்து, முழு அளவில் நகராட்சி மற்றும் பஞ்சாயத்து எல்லைகளுக்குட்பட்ட திரையரங்கங்கள் இணக்கத் தொகையான வரி செலுத்தும் முறை அமல் செய்யப்பட்டு வரி ஏய்ப்பு எண்ணம் ஏற்படாத வண்ணம் அரசு காத்துள்ளது.

பந்தய வரி, சென்னை மற்றும் ஊட்டியில் நடக்கும் குதிரைப் பந்தயங்களின் மேல் 1935-ஆம் ஆண்டு முதல் விதிக்கப்பட்டு வருகிறது. இவ்வரியும் இத்துறை மூலமே வசூலிக்கப்படுகிறது. மேலும், ஓட்டல்கள் மற்றும் தங்குமிடங்களில் விதிக்கப்படும் சொகுசு வரி 13.11.80லிருந்து இத்துறை மூலம் வசூலிக்கப்படுகிறது.

**1976-77இல் வணிகவரிகள் மூலம் கிடைத்த தொகை ரூ. 256 கோடி. இது 1985-86இல் ரூ. 1035 கோடியாக-நான்கு மடங்காக உயர்ந்தது.**

வணிகர்களின் நலனுக்காக வணிகர் நல ஆலோசனைக்குழு மாநில அளவில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அரசுக்கு வரி விதிப்பு ஆலோசனை கூறவும், வணிகர்களின் பொதுக் குறைகளைக் களைவதற்கும், மாநில அளவில் வணிகவரித்துறை அமைச்சரின் தலைமையில், மாநில விற்பனை வரி ஆலோசனைக்குழு செயல்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் குறைகளைக் களைவதற்காக மாவட்ட ஆட்சியாளர் தலைமையிலும், துறை அலுவலர்கள், வணிகர்களின் பிரதிநிதிகள் ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட மாவட்ட விற்பனை வரி ஆலோசனைக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

வரி ஏய்ப்புத் தொடர்பான இரகசியத் துப்புகள் அளிப்பவர்களுக்குத் துறையின் மூலம் தகுந்த பரிசு வழங்கப்படுகிறது. அது போன்றே, வரி தவிர்ப்பு அல்லது ஏய்ப்பினை ஆராய்ந்து கண்டுபிடித்து அரசுக்கு வரி வசூலித்துத் தரும் இத்துறை அலுவலர்களுக்கு முதலமைச்சரின் திறமைச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. தமிழகத்தைப் பின்பற்றி, பிற மாநிலங்களும் இம்முறைகளைக் கடைப்பிடிக்கின்றன.

வணிகர்களின் குறிப்பிட்ட புகார்களை விசாரித்து நடவடிக்கை எடுக்க வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் உயர் மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. அக்குழுவினிடம் தெரிவிக்கப்படும் புகார்களின் மேல், உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்துறை மூலம் கிடைக்கும் வருவாயினை மக்களின் நல்வாழ்வு மற்றும் முன்னேற்றத் திட்டங்களுக்குப் பயன்படுத்த அரசு உதவுமுகத்தான் வரி வருவாயினைப் பெருக்கிட முழு ஒத்துழைப்புத் தாருங்கள் என மக்களையும், வணிகர்களையும் விரும்பி வேண்டிக் கொள்கின்றேன்.

''வரப்புயர நீர் உயரும்;
நீர் உயர நெல் உயரும்;
நெல் உயரக் குடி உயரும்;
குடி உயரக் கோன் உயரும்.''

என்ற நல்வாக்கின்படி அரசுக்கு வருவாயினைப் பெருக்கித் தாருங்கள்; அவ்வாறு அரசின் வருவாயைப் பெருக்கி மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களும் பல மடங்காய்ப்பெருகிட அனைத்து வளமும் நிறைந்த, அனைவருக்கும் முன்னோடியான தமிழகம் ஒன்றினை உருவாக்குவோம் எனும் உறுதி மொழியை அனைவரும் மேற்கொள்வோம்.

**('வளரும் தமிழகம்' என்னும் வரிசையில் 1.6.86 அன்று சென்னை வானொலியில் ஆற்றிய உரை).**



# அன்னை பூமி அள்ளித்தரும் செல்வங்கள்

''ஆலைகள் செய்வோம்'' எனப்பாடினான் கவி பாரதி. ஒவ்வொரு ஆலை அமைப்பு மற்றும் இயக்கத்தில் பல கனிமங்கள் பல்வேறு நிலைகளில் பங்கேற்கின்றன. ஒரு நாட்டின் தொழில், பொருளாதார வளர்ச்சி மற்றும வேலை வாய்ப்பு முதலியவற்றிற்குக் கனிமங்கள், இன்றியமையாதவையாகும்.

தமிழ்நாட்டில் பழுப்பு நிலக்கரி, இரும்புத்தாது, சுண்ணாம்புக்கல், மாக்னசைட், வெங்கக்கல், பெல்ஸ்பார், தீக்களிமண், கடற்கரை மணலில் காணப்படும் இல்மனைட், கார்னட், மானசைட் போன்ற கனகனிமங்களும், கிராபைட் போன்ற தொழிற்சார்ந்த கனிமங்களும், தகுந்த வடிவங்களில் உடைத்து மெருகேற்றாமலும், மெருகேற்றியும் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படும் கரும்பாறை, சிகப்புப் பாறை, சாம்பல் நிறப்பாறை. மற்றும் பல்வண்ணப் பாறை போன்ற சிறுவகைக் கனிமங்களும் பல மாவட்டங்களில் காணப்படுகின்றன.

மேற்கூறிய கனிம அமைப்புகளைத் தொழில் மற்றும் வணிகத் துறையின் கீழ் இயங்கி வந்த மாநிலப் புவியியல் பிரிவு கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் கண்டறிந்து, அவைகளின் தன்மை, இருப்பளவு, தொழில்களில் பயன்படுத்தும் சாத்தியக்கூறுகள் முதலியன பற்றி விரிவான அறிக்கைகளை அளித்துள்ளது. 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தனித்துறையாக உயர்த்தப்பட்டு இவ்வமைப்பு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

இத்துறை காமராசர் மாவட்டம், இராசபாளையத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் காணப்படும் சுண்ணாம்புக்கல் படிவங்களை ஆதாரமாகக் கொண்டும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரியலூர் பகுதியிலும் காணப்படும்படிந்தவகைச் சுண்ணாம்புக்கல் அமைப்பினை மூலப்பொருளாகக் கொண்டும் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், பொதுத் துறையில் இரண்டு சிமெண்ட் ஆலைகளை நிறுவி, சிமெண்ட் உற்பத்தி செய்து வருகின்றது. இது தவிர, தனியார் துறையில் ஆறு சிமெண்ட் ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் மேற்குறித்த இரு அரசு சிமெண்ட் ஆலைகளின் விரிவாக்கத்திற்கு அத்தியாவசியமான கூடுதல் சுண்ணாம்புக்கல் படிவங்களைக் கண்டறிந்து மறுமதிப்பீடு செய்யும் ஆய்வுப்பணியினையும்,

புதிய சுண்ணாம்புக்கல் படிவங்களை ஆலலயைச் சுற்றி 50 கி. மீ. ஆரப்பகுதியிலும் கண்டறிய ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துடன தமிழகத்தின் பல்வேறு இடங்களில தனித்தனியே காணப்படும் குறைந்த இருப்பளவு கொண்ட சிறிய சுணணாம்புக்கல் படிவங்களைப் பயன்படுத்தி சிறு சிமெண்ட் ஆலைகளில சிமெண்ட் உற்பத்திக்காகப் பல மனுக்கள் பாிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன், இச்சிறியவகை சிமெண்ட் ஆலைகள் இரண்டு தற்போது உற்பத்தியைத்துவங்கியுள்ளன.

தென்ஆர்க்காடு, செங்கல்பட்டு மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் காணப்படும் வெள்ளை மற்றும் தீக்களிமண் படிமங்களை அடிப்படையாகக் கொண்டு பீங்கான் மற்றும் மட் குழாய்கள் உற்பத்திக்காக அமைக்கப்பட்ட அரசு நிறுவனம் தமிழ்நாடு சிராமிக்ஸ், ஆகும். தமிழ்நாட்டில் காணப்படும் வெங்கக்கல் அமைப்புகளையும் இந்நிறுவனம் பயன்படுத்திக் கொள்கிறது. இன்று பெருமளவில் வெங்கக்கல்மற்றும் கரும்பாறை, சாம்பல் நிலப் பாறை மற்றும் பல வண்ணப் பாறைகளை வெளிநாட்டிற்கு வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்வதன் மூலம் மிகுந்த அந்நியச் செலாவணி ஈட்டி வரும் தமிழ்நாடு கனிம நிறுவனம் அமைவதற்கு இத்துறை அடிப்படையான ஒன்றாகும். இத்துறை பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், சிவகங்கையில் கண்டறிந்த கிராபைட் படிவங்களைத் தமிழ்நாடு கனிம நிறுவனம் மேம்பாடு செய்து மூசைக்கல் உற்பத்திக்குத் திட்டமிட்டுள்ளது.

இத்துடன் நாட்டிலேயே சிறந்த மாக்னசைட் படிவமாகக் கருதப்படும் சேலம் பகுதியில் காணப்படும் மாக்னசைட் கனிமத்தை வெட்டியெடுத்து விற்பனைக்காகத் தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனத்தினை அரசு தனியாக அமைத்துள்ளது. மாக்னசைட் விற்பனையுடன் குறைந்த தரமுள்ள மாக்னசைட் கனிமத்தை மேம்பாடு செய்து வெப்பந்தாங்கி சூளைக்கற்கள் தயாரிப்பதற்கும், சுட்ட மாக்னசைட் உற்பத்திக்கும் அரசு திட்டம் வகுத்துள்ளது.

மேற்கூறிய கனிமம் சார்ந்த அரசு கழகங்களின் அமைப்புகள் இத்துறை மேற்கண்ட களப்பணி ஆய்வு முடிவுகளின் மூலம் நிறுவப்பட்டு, தொடர்ந்து பயனடைகின்றன.

நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியினைப் பயன்படுத்தி மத்திய

வாசக நேயர்களுக்கு!

1-7-1986 முதல் தமிழரசு விலை 75 காசிலிருந்து ஒரு ரூபாயாக உயர்கிறது.

வாசகர்கள் வழக்கம்போல் ஆதரவு தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழரசு ஆண்டுச் சந்தா ரூ. 24.00

அரை ஆண்டுச் சந்தா ரூ. 12.00

அரசு நிறுவனமான நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் மின் உற்பத்தி மற்றும் விவசாய இடு பொருட்கள் தயாரிப்பது வெகு காலமாக அறிந்த ஒன்றாகும். தற்போது புவியியல் மற்றும் சுரங்கத்துறை நெய்வேலி லிக்னைட் கழகத்தின் சுரங்கக் குத்தகையற்ற பகுதிகளில் காணப்படும் பழுப்பு நிலக்கரி பற்றி ஆய்வு செய்ய அரசு தனிநிதி அளித்துத் திட்டமும் ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும் ஒரு நாட்டின் பொருளாதார நிலைத்தன்மை அந்நாடு தன்னகத்தே கொண்டுள்ள தங்கம் இருப்பினைக் கொண்டு முடிவு எடுக்கப்படுகிறது என்பது நாமறிந்த பொருளாதாரத் தகவலாகும். கர்நாடக மாநிலத்தில் கோலார் தங்கவயல்களில் தங்கம் கிடைப்பது என்பது பழைய செய்தி. அத்தகைய தங்கம் காணப்படும், பாறை அமைப்புகளின் தென் தொடர்ச்சியினைத் தமிழ்நாடு புவியியல் மற்றும் சுரங்கத்துறை கண்டறிந்து விரிவான களப்பணி ஆய்வுகள் மேற்கொண்டு தங்கம் கிடைப்பதை உறுதி செய்துள்ளது என்பது புதிய செய்தியாகும். இத்துறை கிருட்டிணகிரி வட்டத்தில் கடந்த மூன்றாண்டுகளாக ஆய்வு மேற்கொண்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இங்கு மேற் கொள்ளப்படும் ஆய்வுப்பணிகளை விரிவாகவும் விரைவாகவும் மேற்கொள்ள அரசு தனி நிதி அளித்துச் சிறப்பு ஆய்வுப் பணியாக அனுமதியளித்துள்ளது.

இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் இடையூறுகளில் நிலச்சரிவும் அடங்கும். இதன்மூலம் பொருள் மற்றும் உயிர்ச் சேதம் மிக அதிக அளவில் ஏற்படும். பொதுவாக நிலச்சரிவுகள் மலைப் பகுதிகளிலேயே உண்டாகின்றன. இமாலய மலைத் தொடர்களில் ஏற்படும் நிலச் சரிவுகள் பாறைகள் மற்றும் பனிப்படர்வுகளுடன், சரிந்து இன்னல் விளைவிக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவுகள் மேல் மட்டத்தில் காணப்படும் மண் மற்றும் சிறுபாறைத் துண்டுகளுடன் சரிவதால் பயிர், குடியிருப்பிடங்கள், மற்றும் கட்டுமானப் பகுதிகளில் சேதம் விளைகின்றது.

நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவுகள் பற்றி இத்துறை விரிவாக ஆய்வு செய்து நிலச்சரிவுக்கு உட்படக்கூடிய பகுதிகளைப்பற்றியும், அவை ஏற்படா வண்ணம் தடுப்பு முறைகள் பற்றியும் ஆலோசனைகள் அளித்து, அறிக்கைகள் வைக்கப்பட்டன. நிலச்சரிவுகள் பற்றி இத்துறை மேற்கொண்ட ஆய்வுப்பணி முறைகளையும், பரிந்துரைகளையும் பல மத்திய மற்றும் மாநில அரசு அமைப்புகள் பெரிதும் போற்றுகின்றன. நிலச்சரிவுகள் பற்றித் தனியே ஆய்வு செய்யத்தொழில் நுட்ப அலுவலகம் ஒன்றினை அரசு குன்னூரில் நிறுவியுள்ளது. மேலும் நிலச்சரிவுகள் நகரும் தன்மையுடையனவா என்பதை விஞ்ஞானக் கருவிகள் மூலமாக முதன் முறையாக இத்துறை ஆய்வு செய்யும்.

தமிழ்நாட்டில் குறைந்த தரமுள்ள இரும்புத்தாதுப் படிவங்கள் பெருமளவில் காணப்படுகின்றன. திருவண்ணாமலையில் காணப்படும் இரும்புத்தாதுவைப் பயன்படுத்தி நேரடி குறைத்தல் முறையில் ஸ்பாஞ்ச் இரும்பு தயாரிக்கும் சாத்தியக் கூறுகளை இத் துறை, தேசிய உலோகவியல் சோதனைக்கூடம் மற்றும் ஆந்திரப்பிரதேசம் கொத்தகூடம் அருகில் அமைந்துள்ள 'ஸ்பாஞ்ச் அயர்ன் இந்தியா லிமிடெட் நிறுவனம்' இவற்றுடன் கூட்டாக இணைந்து பூர்வாங்கச் சோதனைகள் மேற்கொண்டது. இச்சோதனைகளின் முடிவுகள் மிகவும் ஊக்கமூட்டுவதாக அமைந்துள்ளன. இதை மேலும் விரிவாக ஆய்வு செய்ய இத்துறை நடவடிக்கை எடுக்கும்.

மேற்குறித்த நான்கு சிறப்புக் களப்பணி ஆய்வுகள் மற்றும் சோதனைகள் இத்துறையின் வளர்ச்சிப்பணிகளில் வெற்றிச் சரிதங்களாக அமைகின்றன.

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாம் தஞ்சை மாவட்டத்தில் நெற்பயிர் விளைவதைப் போல் கனிமங்கள் காணப்படவில்லை என்பது கூற்று. அவ்வாறிருப்பினும் இத்துறை தஞ்சைமாவட்ட கடற்கரைப் பகுதிகளில் கனகனிமங்களான இல்மனைட், ரூடைல், கார்னட், மாக்னைடட் மற்றும் மானசைட் போன்றவை இருப்பதைக் கண்டறிந்தது. இப்பகுதிகளில் விரிவான ஆய்வு தற்போது நடைபெறுகிறது. ஆய்வு முடிவுகள் ஊக்கமூட்டுபவையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவைகளுடன் இத்துறை நிலநடுக்கம் பற்றியும் ஆய்வுகள் மேற்கொண்டது. வடஆர்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூருக்கு அருகிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரியலூருக்கு அருகிலும் உணரப்பட்ட நிலநடுக்கம்பற்றி களப்பணி ஆய்வுகள் மேற்கொண்டு நிலநடுக்க மூலமையப் பகுதியினைக் கண்டறிந்து, இதுபற்றி இத்துறை அளித்த அறிக்கைகள் வருவாய்த்துறை அலுவலர்களுக்குப் பெரிதும் பயனுள்ளவையாக அமைந்திருந்தன.

1983-ஆம் ஆண்டு ஏப்ரல் வரை வருவாய்த் துறையினரிடமிருந்த கனிம நிர்வாகம் இத்துறையின் கீழ் கொண்டு வரப்பட்டது. முதல் முறையாக மாவட்ட அளவில் அலுவலகங்கள் அமைக்கப்பட்டு, கனிம நிர்வாகப் பணிகள் பெருமளவில் முறைப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 574.82 இலட்சங்களாக இருந்த கனிம வருவாய் 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 841.53 இலட்சங்களாக உயர்ந்துள்ளது. இதனை மேலும் பலமடங்கு உயர்த்தப் பல நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.





## மீனைப் பெரிதாக்க இன்ஜெக்ஷன்!

மீன்களைப் பெரிதாக வளர்ப்பதற்கு உதவுகின்ற 'நொதிப் பொருட்கள்' (ஹார்மோன்கள்) விரைவில் உலகெங்கும் விற்பனைக்கு வரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இந்தத் தொழில்நுட்ப முறையினை அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். சல்மான் என்னும் மீனின் உடலில் இந்த நொதிப்பொருளை ஊசி மூலம் செலுத்தியதில், 6 வார காலத்தில், அது பெரிதாக வளர்ந்தது; அதன் எடை, அதனுடைய சாதாரண எடையைக் காட்டிலும் 50 சதவீதம் அதிகமாகி இருந்தது.

இந்த நொதிப் பொருளைக் கலிபோர்னியாவைச் சேர்ந்த 'ஆம்ஜென்' என்னும் நிறுவனம் உருவாக்கியுள்ளது. இந்தநொதிப் பொருளைப் பயன்படுத்துவது மூலம், மீன்களின் அளவை அதிகரிப்பது மட்டுமன்றி, புரோட்டீன் சத்து மிகுந்ததாகவும் ஆக்க முடியும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.



## மோட்டார் கார்களுக்குப் பீங்கான் உறுப்புகள்:

மோட்டார் வாகனங்களுக்குப் பீங்கான் உறுப்புகளைத் தயாரித்துப் பொருத்துவதென்பது அமெரிக்காவில் விரைவில் இயல்பான பணியாகி விடக்கூடும்.

பீங்கான் உறுப்புகளைத் தயாரிப்பது சிக்கனமானது என்பதுடன், அது வெப்பத்தைக் கடத்துவதில்லையாதலால், மிகவும் பயனுள்ளதாகவும் இருக்கும் என்று மோட்டார் வாகனத் தயாரிப்பாளர்கள் கூறுகிறார்கள்.

பீங்கானாலான பிஸ்டன்களும், சிலிண்டர்களும் சமீபததில் இங்குச் சோதனை முறையில் தயாரிக்கப்பட்டு, 2 லிட்டர் எஞ்ஜின் ஒன்றில் பொருத்திப் பார்க்கப்பட்டன. அவை அற்புதமாக வேலை செய்ததாக, மோட்டார் வாகன நிபுணர்கள் கூறினர். 'சிலிகான் கார்பைட்' என்னும் புதுவிதமான பீங்கானைக் கொண்டு அந்த உறுப்புகள் தயாரிக்கப்பட்டிருந்தன. வெப்பத்தடை சம்பந்தப்பட்ட பணிகளுக்குப் பீங்கான் மிகவும் பயனுள்ளது. 'உதாரணமாக 2500 டிகிரி அளவுக்கு வெப்பம் கிளப்பப்படும்போது, அதனைத் தாக்குப் பிடிப்பதற்கான டர்பைன் எஞ்ஜின்களைத் தயாரிப்பதற்கு மிகவும் விலையுயர்ந்த உலோகங்களைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். இதற்குப் பதிலாகப் பீங்கானை உபயோகித்தால்,அது மிகமிகச் சிக்கனமானதாக இருக்கும். பீங்கானாலான டர்பைன் இயந்திரங்கள் 1990-ஆம் ஆண்டுகளின் இடைப் பகுதிக்குள் புழக்கத்துக்கு வந்து விடக்கூடும்.



## மலேரியாவுக்குத் தடுப்பு மருந்து

மலேரியாவுக்கு எதிரான தடுப்பு ஊசி மருந்து ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். உயிரியல் தொழில்நுட்பம் மூலம் இந்த மருந்து தயாரிக்கப்பட்டுள்ளது; மலேரியா காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதில் இது திறனுள்ளதாக இருக்கும்.



மிகவும் கொடிய தொற்று நோய்களில் ஒன்றான பெரியம்மை நோய், உலகம் முழுவதிலுமிருந்தும் 1981-ஆம் ஆண்டில் ஒழிக்கப்பட்டுவிட்ட பிறகு, இதர கொடிய நோய்களையும் இதுபோல ஒழிப்பதற்கு அமெரிக்க விஞ்ஞானிகள் முழு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றனர்.

கல்லீரல் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய 'ஹெபாடைடிஸ்-பி' என்னும் கொடிய வைரஸ் கிருமிகளுக்கு எதிராகப் பாதுகாப்பானதொரு தடுப்பு மருந்து 1982-ஆம் ஆண்டு முதல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அமெரிக்காவில் பள்ளி செல்லும் வயதை எட்டும் குழந்தைகள் அனைவருக்கும் டிப்தீரியா, டெட்டனஸ், தட்டம்மை, கக்குவான் இருமல், புட்டாளம்மை போன்ற நோய்களுக்கு எதிரான தடுப்பு மருந்துகள் அளிக்கப்படுகின்றன.

## தவிட்டிலிருந்து சமையல் எண்ணெய் தயாரிப்பு!

அரிசித் தவிட்டிலிருந்து சமையல் எண்ணெய் தயாரிக்கும் புதிய தொழில்நுட்ப முறை ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

அரிசித் தவிட்டில் 15 முதல் 20 சதவீதம் வரையில் எண்ணெய் உள்ளது. அரிசி ஆலைகளில் நெல்லை அரைவை செய்த பிறகு, இந்த எண்ணெய்ச் சத்து சிதைந்து விடுகிறது. இதனை அழிய விடாமல் பாதுகாத்து,



## திருமதி இந்திராகாந்தி நினைவுப் பூங்கா

மாண்புமிகு தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், திருமதி இந்திரா காந்தி நினைவுப் பூங்காவினை கடந்த 17.5.1986 அன்று திறந்து வைத்தார்கள். இந்தப்பூங்கா உதக மண்டலத்திலிருந்து 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. இப்பூங்காவில் உள்ள யூகலிப்டஸ் மரங்கள் 1863ல் நடப்பட்டன. தற்போது 69 மரங்கள் உள்ளன. இந்தியாவிலேயே மிகவும் உயரமான (256 அடி 4 அங்குலம்) மரம் இங்குதான் உள்ளது. இந்தப் பூங்காவில் உள்ள மரங்கள் தேசிய நினைவுச் சின்னமாகக் காப்பாற்றப்பட்டு வருகின்றன.

அந்த எண்ணெயைத் தனியே பிரித்தெடுக்கும் முறையைக் கலிபோர்னியாவிலுள்ள 'அமெரிக்க வேளாண்மை ஆய்வு நிலையத்




தின்' விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

அரிசி ஆலைகள் அரைவை செய்யப்படும்போது, தனியே பிரித்தெடுக்கப்படும் தவிடு, 'கிராப் குக்கர்' என்னும் இயந்திரத்தில் செலுத்தப்படும்; இந்த இயந்திரத்தில் கணிசமான அளவுக்கு வெப்பம் உற்பத்தியாகும்; அரிசித் தவிட்டிலுள்ள எண்ணெயை அழித்து விடக்கூடிய சக்திவாய்ந்த நொதிப் பொருளை இந்த வெப்பம் சிதைத்து விடுகிறது. இதனையடுத்துத் தவிட்டிலிருந்து எண்ணெயைச் சுலபமாகப் பிரித்தெடுக்க முடியும்.

இந்த முறையானது எல்லா விதச் சூழ்நிலைகளுக்கும் ஏற்றது. நெல் பெருமளவில் சாகுபடி செய்யப்படுகின்ற ஆனால் சமையல் எண்ணெய்ப் பற்றாக்குறையாக உள்ள நாடுகள், அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெயை உருவாக்கும் இந்த முறையைப் பயன்படுத்தலாம். ஆண்டொன்றுக்கு 700,000 டன்கள் உயர் ரகச் சமையல் எண்ணெயை இதன் மூலம் உற்பத்தி செய்ய முடியும்.



### பெருவிரல் முட்டு அறுவைச் சிகிச்சை!

கீல்வாத நோய் காரணமாக இயங்காமல் இருக்கும் பெருவிரலை ஒரே நாள் சிகிச்சையில் சரி செய்து விடுவதில் அமெரிக்க டாக்டர்கள் வெற்றி கண்டுள்ளனர்.

இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், மருத்துவமனையில் ஒரே ஒரு நாள் இரவு மட்டுமே தங்கவேண்டியிருக்கும்; பாதிக்கப்பட்ட பெருவிரல் கல்முட்டைச் சிறு அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றி விட்டு, அதற்குப் பதிலாக, உலோகச் சாதனம் ஒன்றை டாக்டர்கள் பொருத்தி விடுகிறார்கள். இச்சிகிச்சை பெற்றவர்கள், இரண்டே வார்த்திற்குப் பிறகு பழையபடி தங்கள் பெருவிரலை இயல்பாக அசைத்துப் பணியாற்ற முடியும்.

இந்தச் சோதனைகளின்போது 45 பேருக்கு இவ்வாறு செயற்கை முட்டுகள் பொருத்தப்பட்டன; அவர்களில் 42 பேர் தங்கள் பெருவிரலைப் பழையபடி அசைக்கும் திறனைப் பெற்றனர். இவர்களில் பெரும்பாலோரினால் தங்கள் பெருவிரலைப் பயன்படுத்திக் கார் கதவுகளைத் திறக்க முடிகிறது; கத்தரிக்கோலால் வெட்ட முடிகிறது; சாவியைச் செருகித் திருக முடிகிறது.

**—அமெரிக்கத் தகவல் நிலையம்**



# சட்டப் பேரவை சிறந்து விளங்கிட...

**கா**மன்வெல்த் பாராளுமன்றச் சங்கத்தின் தமிழ்நாடு கிளையின் சார்பாக ஒரு கருத்தரங்கு உதகமண்டலத்தில் 1986-ஆம் ஆண்டு மே மாதம் 26-ஆம் தேதி முதல் 29-ஆம் தேதி வரை நடைபெற்றது. முதல் நாள் கூட்டத்தில் மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் தலைமை தாங்கிட, மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் வரவேற்புரை ஆற்றிட, மேதகு ஆளுநர் அவர்கள் கருத்தரங்கைத் துவக்கி வைக்க, அதன் பின், கருத்தரங்கில் கீழ்க் கண்ட பொருள்கள் குறித்து விவாதம் நடைபெற்றது:

*சட்டமன்றமும், அதனுடைய பணிகளும் - சட்டமன்ற உறுப்பினராகத் திறன்பட இயங்குவது எவ்வாறு?

*அவையில் விவாதம் நடக்கும் முறை, மற்றும் அவையில் உறுப்பினர்கள் கடைப் பிடிக்க வேண்டிய நெறி முறைகள்.

*சட்ட மன்றமும், நிர்வாகமும்.

*சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தேவைப்படுகிற வசதிகளும், செயலக உதவிகளும்,

*சட்டமன்றமும், நீதி மன்றமும்,

*சட்டமன்றத்தில் கேள்வி நேரம்.

*சட்ட முன் வடிவு தயாரிக்கும் முறை.

*சட்ட மன்றத்தில் சட்ட முன் வடிவு நிறைவேற்றப்படும் முறை.

*நிதி நிலை அறிக்கை தயாரிக்கும் முறை.

சட்டமன்றத்தில் நிதி நிலை அறிக்கையும், மானியக் கோரிக்கைகளும் நிறைவேற்றல்.

கருத்தரங்கில் மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு மேலவைத் தலைவர், மாண்புமிகு பேரவை முன்னவர் (நிதி அமைச்சர்), மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு க. இராசாராம், ஊரகத் தொழில் அமைச்சர் மாண்புமிகு திரு ஆனூர் ஜெகதீசன், பேரவை மேலவைத் துணைத் தலைவர்கள், பேரவை எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் கிட்டத்தட்ட 45 பேரவை மேலவை உறுப்பினர்கள் பங்கு கொண்டார்கள். மேலும் தமிழக அரசு உள் துறைச் செயலாளர், சட்டத் துறைச் செயலாளர், நிதித் துறைத் துணைச் செயலாளர்,

ஆந்திர மாநில சட்டப்பேரவைச் செயலாளர், தமிழக முன்னாள் சட்டப்பேரவைச் செயலாளர் திரு ம. சண்முகசுப்பிரமணியம் ஆகியோர் கருத்தரங்கில் உரையாற்றினார்கள்.

கருத்தரங்கு, சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பெரிதும் பயன் தருவதாக அம்மந்தது. இம் மாதிரியான கருத்தரங்குகள் அவ்வப்போது நடத்தப்பட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. அடுத்தபடியாக, சென்னை மாநகரத்தின் அரசியல் சட்டம் மற்றும் அடிப்படைச் சட்டங்கள் குறித்து கருத்தரங்கு ஒன்று உறுப்பினர்களின் நன்மைக்காக நடத்தப்படும்.

**2-6-86 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு சட்ட மன்றப் பேரவைத் தலைவர் திரு பி. எச். பாண்டியன் அவர்கள் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது கருத்தரங்கு தொடர்பாக அவர் தெரிவித்த சில தகவல்களாவன:**

"பொதுமக்களுக்கும், மக்கள் மன்றமான சட்டமன்றத்துக்கும் இடையே மிக நெருக்கமான தொடர்பை ஏற்படுத்தி, சமுதாயத்தைப் பாதிக்ககூடிய முக்கிய பிரச்சினைகளில் உடனுக்குடன் பரிகாரம் காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஒரு ஏற்பாட்டை உருவாக்குவது குறித்து சில யோசனைகள், உதகையில் நடைபெற்ற 'காமன்வெல்த் பார்லிமெண்டரி சங்கத் தமிழ் மாநிலக் கிளையின்' கருத்தரங்கில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

"மக்களைப் பாதிக்கக்கூடிய பொதுவான பிரச்சினைகள் அல்லது புகார்கள் அல்லது குற்றச் சாட்டுக்கள் போன்றவற்றைக் கவனத்துக்குக் கொண்டு வருவதற்கும், அவற்றுக்குப் பரிகாரம் காண்பதற்கும் பேரவை விண்ணப்பக் குழு, '(பெட்டிஷன்ஸ் கமிட்டி.)' என்ற ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை ஏறத்தாழ நூறு மனுக்கள் இக்குழுவின் ஆய்வுக்கும், விசாரணைக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

"சொந்தக் குறைகள் அல்லது தனிப்பட்ட விருப்பு, வெறுப்புக் களின் அடிப்படையிலான புகார்கள் அல்லது கோரிக்கைகள் குறித்த மனுக்களை இக்குழு பரிசீலிக்காது. சமுதாயததைப் பாதிக்கக்கூடிய அல்லது முறைகேடான அல்லது சட்ட விரோதமான புகார்கள், குற்றச்சாட்டுகள், குறைபாடுகள் இருப்பின், பூர்வாங்கமாக அவை பரிசீலிக்கப் பட்டு, பின்னர் சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பி வைக்கப் பட்டு விளக்கம் கோரப்படும். மனு கொடுத்தவரையும், துறை அதிகாரிகளையும் தனித்தனியாக அழைத்து விசாரணை நடத்தப்படும். பின்னர் இந்த விசாரணைக் குழுவின் அறிக்கை அவை முன், மேல் நடவடிக்கைக்காகத் தாக்கல் செய்யப்படும்.

"இக்குழுவின் அறிக்கைகள், பரிந்துரைகளின் அடிப்படையில் அமைந்ததாக இருக்கும்.

''பேரவையில் கூறப்படும் குற்றச் சாட்டுகள் அல்லது புகார்கள் குறித்து விசாரித்து அறிந்து உண்மையைக் கண்டறிவதற்காக 'அவைக் குழு' அமைக்கலாம் என்ற யோசனை தெரிவிக்கப்பட்டது. இதுவும் ஒரு பரிந்துரையாகச் செய்யப்பட்டுள்ளது.

''ஆண்டு முழுவதும் சட்டப் பேரவைத்துறை செயல்பட்டு வருகிறது என்ற உயிரோட்டத்துடன் நடப்பதற்காகச் சில பரிந்துரைகளும் செய்யப்பட்டுள்ளன. தற்போதைய விதிப்படி பேரவைக் கூட்டம் நடைபெறும் நாட்களில் தான் கேள்வி நேரம் முடிந்ததும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக்குறித்து கவன ஈர்ப்புத்தீர்மானம்கொண்டு வரும் ஏற்பாடும், அதற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர் விளக்க அறிக்கை அல்லது விவரஅறிக்கை அளிக்கும் நடைமுறையும் உள்ளது. பேரவைக் கூட்டம் நடைபெறாத காலங்களிலும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக் குறித்து அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்து, பதில் அல்லது விளக்கம் பெறும் ஏற்பாட்டைச் செய்யலாம். அவ்வாறு தரப்படும் விளக்கம் அல்லது விவர அறிக்கையைச் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு அனுப்பி வைப்பதோடு, சட்டப் பேரவைத் துறை மூலம் வெளியிடலாம் என்ற பரிந்துரையும் இக்கருத்தரங்கில் செய்யப்பட்டது. இதுவும் பரிசீலிக்கப்படுகிறது.

''அரசின் பொதுக் கணக்குத் தணிக்கைக்குழு அறிக்கை, மதிப்பீட்டுக்குழு அறிக்கை, பொது நிறுவனங்கள் குழு அறிக்கை போன்றவை பேரவைக்கு அளிக்கப்படும்போது, 'அவற்றிற்கான துறையிடமிருந்து விளக்கங்கள் கோரப்பட்டன. இன்னமும் பதில் வரவில்லை; பதில் எதிர்பார்க்கப்படுகிறது' என்ற வாசகம் தவறாமல் இருந்து வருகிறது. இந்தக் குறைபாட்டைப் போக்கி சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து விரைவில் விரிவான அறிக்கை பெற ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கருத்தரங்கில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. நிர்வாகமும், அதிகாரத்துறையும் மக்கள் மன்றமான சட்டப் பேரவைக்குக் கட்டுப்பட்டவை; பதில் சொல்ல வேண்டியவர்கள் என்ற ஒரு ஏற்பாட்டை நிலை நிறுத்துவதோடு, சமூக நீதி, பொது நீதி ஆகியவற்றை நிலை நாட்டுவதற்கும் இப்படிப்பட்ட ஒரு ஏற்பாடு தேவை என்று பரவலான கருத்து கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டு, அதற்கான பரிந்துரையும் செய்யப்பட்டுள்ளது.

''ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டவுடன் முந்தைய ஆண்டில் துறை வாரியாக ஒதுக்கப்பட்ட தொகைகள் எவ்வாறு செலவிடப்பட்டுள்ளன. அந்தப் பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் என்ன, காணப்படும் குறைபாடுகள் என்ன, அதற்கு யார் காரணம், அதைப் போக்குவதற்கான நடவடிக்கை என்ன என்பனவற்றை எல்லாம் கண்டறிந்து அந்தக் குறைபாடுகளைக் களைவதற்காகப் 'பல்துறை ஆய்வுக்குழு' ஒன்றைக் கேரள மாநிலச் சட்டப் பேரவை அமைத்து நடத்தி வருகிறது. பார்லிமெண்டும் இதைச் சோதனை அடிப்படையில் நடைமுறைப்படுத்துவது குறித்து யோசித்து வருகிறது. இதே ஏற்பாட்டை அதன் அனுபவ அடிப்படையில் தமிழகச் சட்டப் பேரவையிலும் கொண்டு வருவது குறித்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதுவும் ஆய்வில் உள்ளது.

''ஜனநாயக அமைப்பின் மூன்று ஊற்றுக் கண்களான சட்டப் பேரவை, நிர்வாகம், நீதித்துறை ஆகியவை இணைந்து செயல்படும் விதம் குறித்தும் இக்கருத்தரங்கில் விரிவாக விவாதிக்கப்பட்டது. செய்யப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்குச் சட்டமன்ற விதிகளில் தேவையான திருத்தம் கொண்டு வரப்படும். சட்டங்களை நிறைவேற்றுவதை நிதானமாகவும், நீண்ட ஆழ்ந்த விவாதத்துக்குப் பிறகும் நிறைவேற்ற வேண்டும். அவசரம் அவசரமாக மசோதாக்களை அரசு தரப்பில் தாக்கல் செய்வதும், விதிகளைத் தளர்த்தி உடனடியாக அவற்றை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவதும் சட்ட நிறைவேற்றத்தில் அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்ததைப் போல உள்ளது. எனவே, இந்தக் குறைபாட்டை போக்க வேண்டும். ஒரு மசோதா தாக்கல் செய்யப்படுவதற்கும், அதை விவாதத்தில் எடுத்துக் கொள்வதற்கும் விதிப்படி ஐந்து நாள் அவகாசம் அளிக்க வேண்டும் என்ற விதி கண்டிப்பாக அமல்படுத்தப்பட வேண்டும் என்ற பரிந்துரையும் செய்யப்பட்டது.

''அமைச்சர்களுக்கு உறுப்பினர்கள் எழுதும் கடிதங்கள் வந்து சேர்ந்தது பற்றிய அறிவிப்புகூட இல்லாமலும், பதிலே வராத நிலையும் உள்ள குறைபாடு போக்கப்பட வேண்டும். அரசு இயற்றும் சட்டங்கள், நடைமுறைக்கு வரும் தேதியை அறிவிப்பதில் உள்ள காலதாமதம் போக்கப்பட வேண்டும். பேரவை விவாதத்தின்போது தேவையற்ற குறுக்கீடுகள் இருக்கக் கூடாது என்பன போன்ற யோசனைகளும் பரிந்துரைகளும் இந்தக் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டன.

## விண்வெளியிலிருந்து பூமி ஆராய்ச்சி!

விண்வெளியிலிருந்து சேகரிக்கும் தகவல்களைக் கொண்டு புவி-இயல் ஆராய்ச்சியைத் தீவிரமாக நடத்தும் முறையை சோவியத் யூனியன் கண்டு பிடித்திருக்கிறது.

பூமியில் பெரும் பிரதேசங்களில் புவி இயல் நிலைமைகளை அறிய இந்த முறை பெரிதும் பயன்படுகிறது. புவி-இயல் ஆய்வு நடத்தும் வேலை இதனால் பெரிதும் குறைந்து விடுகிறது.

இரும்பு அல்லாத உலோகங்கள், எண்ணெய், எரிவாயு முதலிய பொருள்களின் படிவங்கள் உள்ள இடங்கள் இந்த முறையின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டன.

விண்வெளியிலிருந்து எடுக்கப்பட்ட பூமியின் படங்களில் 50 சதவிகிதத்திற்கு மேல் புவி-இயல் ஆராய்ச்சியாளர்களுக்குக் கிடைத்தன. மற்றவற்றை விவசாய நிபுணர்கள், கால நிலைஆராய்ச்சியாளர்கள், புனல்-இயலாளர்கள், காடு வளர்ப்பு நிபுணர்கள், கட்டட நிபுணர்கள், நில-மீட்சி நிபுணர்கள் முதலியோர் பயன்படுத்துகின்றனர்.

—சோவியத் சிறப்புக் கட்டுரைகள்



பெரியார் மாவட்டம்:



# சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டம்

கா. சம்சுதீன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
பெரியார் மாவட்டம்.

பெரியார் மாவட்டத்தில் 13 இலட்சம் மரக் கன்றுகள் சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் நடப்பட்டுள்ளன. தாராபுரம் வனச் சரகத்தில் 3,50,000 நாற்றுகளும், கோபி வனச் சரகத்தில் 4,75,000 நாற்றுகளும், ஈரோடு வனச்சரகத்தில்4,50,000 நாற்றுகளும் வளர்க்கப்பட்டு வருகின்றன.

இந்த மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு, மர உற்பத்தி வளர்ப்புத் திட்டம், மர உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டம் மூலம் விநியோகிக்கப்படுகிறது. ஸ்விடன் நாட்டு வளர்ச்சித் திட்ட ஏஜன்சியின் மூலம் பணம் செலவு செய்யப்பட்டு, இந்த சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டம் நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டப்படி, காடுகள் வளர்க்கப்பட்டு பத்து ஆண்டுகள் கழித்து மரங்கள் ஏலம் விடப்பட்டு, அந்த வருமானத்தை அந்தப் பகுதி பஞ்சாயத்து பாதியும், அரசு பாதியும் எடுத்துக் கொள்ள வேண்டும். சமூக நலக் காட்டு அதிகாரிகள் காட்டை வளர்த்து 3 ஆண்டுகள் கழித்து, அந்தப் பகுதியை உள்ளூர் பஞ்சாயத்துக்கு ஒப்படைத்து விடுகிறார்கள்.

தாராபுரம் வனச் சரகத்தில் குண்டடம், கொழிஞ்சிவாடி, வெள்ளக் கோவில், கால்வாய் ஓரங்களில் 35 கி.மீ. நீளத்திற்கு மரங்கள் நட்டுள்ளனர். மேலும் உப்பாறு அணையினால் 80 எக்டேர் பரப்பிற்கு மரங்கள் (கருவேல், தகரை, வேம்பு) நடப்பட்டுள்ளன.

ஈரோடு வனச் சரகத்தில் எழுமாத்தூர் மலையில் 30 எக்டேரில் 27,000 செடிகளும், அந்தியூரில் 40 எக்டேரில் 64,000 மரங்களும் நடப்பட்டுள்ளன. அரச்சலூர் - காங்கேயம்1!0கி.மீ. தூரம், ஊஞ்சலூர் வாய்ப்பாடி 10 கி. மீ. தூரம் வாய்க்கால் ஓரம் மரங்கள் நடப்பட்டுள்ளன. ரோடு ஓரங்களிலான செங்கப்பள்ளி-பெருமாநல்லூர், பொன்முடி-துடுப்பதி ஆகிய 15 கி.மீ.தூரங்களில் 3000 புளியங்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

கோபி சரகத்தில் குறிச்சிமலையில் 200 எக்டேரிலும், மற்ற இடங்களிலும் சேர்த்து 2,35,000 செடிகளும் பவானிசாகர் அணையின் கடைசியில் 200 எக்டேரில் 5 இலட்சம் கருவேல் மரங்களும் நடப்பட்டுள்ளன. கீழ்பவானி கால்வாய், கூகலூர், பெரியபுலியூர் கால்வாய் ஓரங்களில்50கி.மீ. தூரம் 10,000 செடிகள் நடப்பட்டுள்ளன.

### குடிநீர்ப் பிரச்னை

### போர்க்கால நடவடிக்கை

தமிழ்நாட்டில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போகக 2 ஆயிரம் ஆழ் துளைக் குழாய்கிணறுகள் (போர் வெல்) அமைக்க அரசு திட்டமிட்டு உள்ளது. இதில் பெரியார் மாவட்டத்தில 250 அமைக்கப்படுகின்றன. . இதற்கான வேலை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தொடங்கப்பட்டுள்ளது. ஆழ் துளைக் கிணறுகள் போடுவதற்காக 4 ''ரிக்குகள்'' வரவழைக்கப்பட்டு உள்ளன. இவை கிராமங்களிலும், கிராமப்புறப் பஞ்சாயத்திலும் போடப்படும். அதைத் தவிர நகரப் பஞ்சாயத்துக்களில் 35 அமைக்கப்படுகின்றன. கோபி, சத்தி நகரசபைகளில் ஆழ்துளைக் குழாய் கிணறுகள் அமைக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் இந்த இரு நகரசபைகளிலும் கோடைக்காலத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டால் லாரிகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்ய, ரூபாய் ஒரு இலட்சம் நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. இந்த நிதி, கடனாக வழங்கப்பட்டுள்ளது.

கோபி, சத்தி நகரசபைப் பகுதிகளில் ஏற்கெனவே உள்ள கைப்பம்புகள் பழுதடைந்து இருந்தால் அவற்றைப் பழுது பார்க்கவும், கிணறுகளில் தண்ணீர் குறைவாக இருந்தால் அவற்றை ஆழப்படுத்தவும் அரசு ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், பெரியார் மாவட்டத்தில் கிணறுகளை ஆழப்படுத்த ரூ.15 இலட்சம் செலவிடப்படுகிறது. இதற்காக நிலத்தடி நீர் ஆய்வாளர்கள் 6 பேர் நியமனம் செய்யப்பட்டு, அவர்கள் 1,161 கிணறுகளை ஆய்வு செய்தனர். இதில் 842 கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு அவர்கள் சிபாரிசு செய்துள்ளனர். இதில் 557 கிணறுகளை ஆழப்படுத்த மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.



**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டுக்கு மத்திய அரசு 80.06 இலட்சமும், மாநில அரசு ரூ. 76.78 இலட்சமும் முதல்தவணையாக ரூ. 156.84 இலட்சமும் இம் மாவட்டத்திற்கு வழங்கியுள்ளன. இதில் 20 ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தலா ரூ. 5.75 இலட்சம் வீதம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதில் 65.06 இலட்சம் செலவு செய்யப்பட்டு 10,175 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

இந்த மாபெரும் திட்டத்திற்கு 1985-86ஆம் ஆண்டிற்குரூ.54.11 இலட்சம் அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இதுவரை ரூ. 14.43 இலட்சம் செலவு செய்யப்பட்டு அதனால் 739 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

**கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டம் '83-84ஆம் ஆண்டில் இரண்டு ஊராட்சி ஒன்றியங்களிலும், 1984-85ல் 10 ஒன்றியங்களிலும், 1985-86ல் 9 ஒன்றியங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை ரூ.28.49 இலட்சம் மாநில, மத்திய அரசு மானியம் மற்றும் 'யுனிசெப்' நிறுவனத்திலிருந்தும் பெறப்பட்டு ஒன்றியங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு குழுவிற்கு சராசரியாக 15 முதல் 20 நபர்கள் சேர்க்கப்பட்டு 102 குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் 2005 உறுப்பினர்கள் உள்ளனர். வங்கிக் கடன் பெற்று ஜமக்காளம் நெய்தல், துண்டு நெய்தல், அகர்பத்தி தயாரித்தல், ஆடுவளர்ப்பு, தின்பண்டங்கள் தயாரித்தல் முதலிய தொழில்களில் குழு உறுப்பினர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் ஒரு ஒன்றியத்திற்கு ஒரு குழு வீதம் தேர்ந்தெடுத்து தேசீய ஊரக வேலைத்திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் சமூகநலக்காடுகளுக்குத் தேவையான மரநாற்று வளர்க்கும் பணி ஒப்படைக்கப் பட்டுள்ளது.

**தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்**

தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டுக்கு அரசு227.39 இலட்சம் ஒதுக்கீடுசெய்துள்ளது. கீழ்க்கண்டவாறு வேலைகள் தேர்வு செய்யப் பட்டுள்ளன.

புறம்போக்கு நிலங்களில் மரம் வளர்த்தல்.

பள்ளிக் கட்டடங்கள்.

ஊராட்சி அலுவலகங்கள்.

கிராமச் சாவடிகள் மற்றும் கால்நடைப் பட்டிகள்.

சமுதாயக் கூடங்கள்.

கால்நடை மருந்தகங்கள்.

மேலும் 1984-85ஆம் ஆண்டில் நிலுவையிலுள்ள 141 வேலைகளில் 119 முடிக்கப்பட்டுள்ளன. இதற்கான செலவினம் 152.47 இலட்சம் ஆகும். 1985-86ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 1507 வேலைகளில் 713 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன.

**ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டிற்கு அரசிடமிருந்து ரூ.164.12 இலட்சம் பெறப்பட்டுள்ளது. இதில் 108.09 இலட்சம் செலவிடபபட்டுள்ளது. 19 இணைப்புச் சாலைகள், 32 கசிவு நீர்க்குட்டைகள் வேலை முடிக்கப்பட்டுள்ளன. 5 இணைப்புச் சாலை வேலைகள், 3 கசிவு நீர்க் குட்டைகள் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

முதல் கட்டமாக 645 ஆதி திராவிட மலைவாழ் மக்களுக்கான குடியிருப்புகளில் 95 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக 591 வீடுகள் கட்ட அரசு அனுமதித்துள்ளது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் சமூக நலக்காடுகள் வளர்ப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப் படவுள்ளன. 215 கழிவறைகள் 4 பலநோக்கு சமுதாயக் கூடங்கள் கட்ட அரசு அனுமதித்துள்ளது.



# அறுவைச் சிகிச்சை ஆபத்து இல்லை

சென்னை வடபழனியில் உள்ள மாநகராட்சி மருத்துவமனையின் பேறுகாலப் பின்கவனிப்பு மையத்தை ( Past Partum Centre ) அண்மையில் செய்தியாளர்கள் பார்வையிட்டனர்.

அங்கே குடும்ப நல அறுவைச் சிகிச்சை பெண்களுக்கும், ஆண்களுக்கும் அளிக்கப்பட்டு வருகிறது. அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு சில நாட்கள் மருத்துவமனையில் உள்ள பேறுகாலப் பின்கவனிப்பு மையத்தில் தாய்மார் தங்கியிருக்கும் அரங்கினைச் செய்தியாளர்கள் பார்த்தனர். அங்கு தொலைக் காட்சி, வீடியோ படக் காட்சி வசதி செய்யப்பட்டுள்ளது. தாய்மார்கள் மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர்.

முதல் நாள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள் கூட எந்த வேதனையும் இல்லாமல் சர்வசாதாரணமாக எழுந்து உட்கார்ந்து கொண்டு பேசிக்கொண்டிருந்தனர். எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்துவிட்டு வந்த செய்தியாளர்கள், அந்த மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை பெற்ற சில ஆண்களையும், பெண்களையும் பேட்டி கண்டனர். பேட்டியின்போது அவர்கள் கூறியவை:

**கே. ராமமூர்த்தி**

கே: உங்கள் பெயர் என்ன?

ப: கே. ராமமூர்த்தி. பழைய மாம்பலத்தில் இருக்கிறேன்.

கே: என்ன வேலை?

ப: இந்துப் பத்திரிகையில் வேலை செய்கிறேன்.

கே: உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?

ப: ஒரு பெண். ஒரு பையன்.

கே: உங்கள் வயது?

ப: முப்பத்து மூன்று.

கே: அறுவைச் சிகிச்சைசெய்து கொண்டதால் உங்களுக்கு ஏதாவது தொல்லை இருந்ததா?

ப: ஒரு தொந்தரவும் இல்லை.

கே: உங்களுக்கு ஆண்மைக் குறைவு ஏதாவது ஏற்பட்டதா?

ப: அதெல்லாம் சரியாகவே இருக்கிறது.

மேலும் ஆண்களுக்கு அறுவை செய்வதுதான் நல்லது. பெண்களுக்கு என்றால் அவர்கள் வீட்டை விட்டு ஆஸ்பத்திரியிலேயே தங்கவேண்டியதிருக்கிறது. ஆண்களுக்கு ஒரு சிரமமும் இல்லை. ஆப்பரேஷன் முடிஞ்ச உடனே நான் பஸ்ஸில் ஏறிப் போக முடிந்ததே! இந்த ஆபரேஷனைப் பற்றி ஆண்கள் கொஞ்சம்கூட பயப்படத் தேவை இல்லை.



வடபழனியில் உள்ள மாநகராட்சி மருத்துவ மனையின் பேறுகால பின்பணி மையத்தில், அறுவைச் சிகிச்சை பெற்ற தாய்மார்கள் டி. வி, வீடியோ கண்டு களித்தல்.

**ஆ. சுப்பிரமணியம்**

கே: உங்களுக்கு வயது என்ன?

பதில்: 34

கே: எத்தனை குழந்தைகள்?

ப: ஒரு ஆண்; ஒரு பெண்·

கே: எப்போது சிகிச்சை பெற்றீர்கள்?

ப: கடந்த ஆண்டு நவம்பரில் ஆப்பரேஷன் ஆச்சுது. 6வதுநாள் தையல் பிரிச்சி எடுக்க வந்தேன். அதைப் பிரிச்சாங்க.எனக்கு எந்த குறையும் இல்லே.

கே:உங்களுடைய உணர்ச்சிகள் ஏதும் பாதிக்க வில்லையா?

ப: ஒரு பாதிப்புக் கிடையாது.

**வீ. வைரமுத்து**

கே: உங்களுக்கு என்ன வயது?

ப: முப்பத்தேழு

கே: வேலை எங்கே?

ப: பொதுப்பணித் துறையில் வேலை செய்கிறேன்.

கே: குழந்தைகள்?

ப: இரண்டு ஆண்குழந்தைகள்.

கே: பெண் குழந்தைவேண்டும் என்று நினைக்கவில்லையா?

ப: வருமானத்துக்குத் தக்கபடி தானே வாழ முடியும்? ஆப்பரேஷன் செய்தபோது எனக்கு எந்த வலியும் இல்லேங்க. ஊசி போடுவது மட்டும் தெரிஞ்சது.

திருமதி சாந்தா (வயது -33) இவருக்கு 3 குழந்தைகள்.''11 மாதத்துக்கு முன்பு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டேன். ஆப்பரேஷன் ஆகி ஆறு நாள் மருத்துவமனையில் இருந்தேன். எந்தக் கோளாறும் இல்லை'' என்கிறார் இவர்.

திருமதி தேவகி (வயது -30) ஆண் பெண் இரண்டு குழந்தைகள். ''ஆப்பரேஷன் ஆகி உள்ளது. நல்லபடியாக இருக்கிறேன்'' என்கிறார் இவர்.

திருமதி பானுமதி (வயது-23) இவருக்கு 2 ஆண்குழந்தைகள் உள்ளன.“அறுவைசிகிச்சைசெய்து கொண்டேன். நல்லபடியாக இருக்கிறேன். எந்தக் கோளாறும் இல்லை'' என்கிறார் இவர் மகிழ்ச்சியுடன்.



# தனி நபர் தொகுதி விபத்து ஈட்டுறுதித் திட்டம்

தொழிலாளர் கோரிக்கை, சட்டமன்றப் பேரவையில் 7.5.86 அன்று விவாதிக்கப்பட்ட போது, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு விபத்து ஈட்டுறுதித் திட்டம் ஒன்றினைச் செயலாக்குவது குறித்து அறிவித்தார்கள். அவ்வறிவிப்பிற்கிணங்க, அரசு, நேஷனல் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் என்ற நிறுவனத்துடன் கலந்தாலோசித்து தீப்பெட்டி, பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கென விபத்து ஈட்டுறுதித் திட்டத்தினைத் தீட்டி உள்ளது.

இத்திட்டம் தீப்பெட்டி, பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கான ''தனி நபர் தொகுதி விபத்து ஈட்டுறுதித் திட்டம்'' என்று பெயர் பெறும். இது ஒரு தன்னிச்சையான திட்டம். இத்திட்டத்தின் கீழ் ஒரு நபர் ஓராண்டுக்கு 7 ரூபாய் சந்தாத் தொகையாகச் செலுத்த வேண்டும். இத்திட்டம் 14 வயது முதல் 65 வயது வரை உள்ள தொழிலாளர்களுக்கும் பொருந்தும். இத்திட்டத்தில் சேர விரும்பும் தொழிலாளர்கள் தங்களது விருப்பத்தை 1986ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் தேதிக்குள் தங்களது நிறுவன உரிமையாளரிடம் தெரிவிக்க வேண்டும். தொழிலாளர்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற விருப்பத்தினை எல்லாம் தொகுத்து சிவகாசியில் உள்ள துணைத் தொழிற்சாலைகள் ஆய்வாளரிடம் கொடுக்க வேண்டும்.

தொழிலாளர்களுக்கான சந்தாத்தொகையினைத் தொழிலதிபர்களே முதலில் செலுத்த வேண்டும்.

இத்திட்டத்தில் சேர்ந்துள்ள தொழிலாளர்களுக்கு, தொழிற்சாலைகளில் மட்டுமின்றி 24 மணி நேரமும் விபத்து உதவிப் பாதுகாப்பு அளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் ஏற்படும் விபத்து, அதற்காக வழங்கப்படும் ஈட்டுத் தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்:

**விபத்தினால் ஏற்படும் மரணத்திற்கு ரூ.16,000,**

**விபத்தினால் இரண்டு கால் அல்லது இரண்டு கை அல்லது ஒரு கால், ஒரு கை அல்லது திரும்பப்பெற முடியாத அளவிற்கு இரு கண்களின் பார்வையை இழந்தால் ரூ. 16,000**

**விபத்தினால் ஒரு காலை இழந்தாலோ, ஒரு கையை இழந்தாலோ, திரும்பப் பெற முடியாத அளவிற்கு ஒரு கண்ணின் பார்வையை இழந்தாலோ ரூ. 8,000,**

**விபத்தினால் நிலையான ஊனம் ஏற்படுமேயானால் ரூ. 16,000 என ஈட்டுத் தொகை வழங்கப்படுகிறது.**

**துணைத் தொழிற்சாலைகள் ஆய்வாளர் இத்திட்டத்தின் கீழ் தொகுதி ஈட்டுறுதி உடைமையாளர் ஆவர். இத்திட்டம் 1986ஆம் ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து நடைமுறைக்கு வரும்.**

# இராமநாதபுரத்தில் குடிநீர்த் திட்டம்

**கோ. தி. மோகன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**இராமநாதபுரம் மாவட்டம்.**

இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாகத் தொடர்ந்து வான் பொய்த்ததால் கடும் வறட்சி நிலவி வருகின்றது. நிலவி வரும் வறட்சியைப் போக்குவதற்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிட்டார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகப் போர்க்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மண்டபம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பனைக் குளத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் கூட்டு குடிநீர்த் திட்டம் தீட்டப்பட்டு அமல்படுத்தப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த்திட்டம் மூலம் பனைக்குளம் மற்றும் பனைக் குளத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள 7,000 பொது மக்கள் பயன் பெறுவார்கள். இத்திட்டத்திற்காக ரூ. 4 இலட்சத்து 94 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 4.5 மீட்டர் விட்டமுள்ள 2 நீர் ஊடுருவும் கிணறு 6 மீட்டர் ஆழத்திற்கு அமைக்கப்பட்டுள்ளன. இக்கிணறுகளில் போதிய அளவு நீர் ஊற்றுத் திறன் உள்ளது. இக்கிணற்றிலிருந்து சுழற்சி மின் இறைப்பான் மூலம் நீர் உந்தப்பட்டு 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு நீர் அனுப்பப்பட்டு பின்னர் பகிர்மானக் குழாய்கள் மூலம் குடியிருப்புகளின் பல பகுதிகளுக்குக் குழாய்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது.

தமிழக அரசின் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் கா.காளிமுத்து அவர்கள் இக்கூட்டு குடிநீர்த் திட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தமிழகத்தில் பொதுமக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அரசு தனிக்கவனம் செலுத்தி போர்க்கால நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இக்கூட்டுக்குடிநீர்த்திட்டம் மேலும் சில கிராமங்களுக்கு விரிவாக்கம் செய்யப்படும். மண்டபம் ஊராட்சி ஒன்றியத்தில் பல கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் வேகமாகச் செயல்படுத்தப்பட உள்ளன. மக்களுக்குச் சேவை செய்யும் நோக்கத்துடனேயே தான் அரசில் அங்கம் வகித்து வருகின்றோம். இராமநாதபுரம் மண் வறட்சியாக இருந்தாலும் இங்குள்ள மக்களின் முகங்களைப் பார்க்கும்போது மலர்ச்சி தெரிகின்றது. பல வறட்சிகளைப் பார்த்ததனால் பக்குவப்பட்டுத் தொடர் வறட்சி நிலை தாங்கும் மனநிலையைப் பெற்றதனால் தான் முக மலர்ச்சி தெரிகின்றது.

''இராமநாதபுரம் மாவட்டத்தைச் சீர்படுத்தி, செம்மைப்படுத்தி, சோலையாக்க, பல்வேறு நிவாரணப் பணிகளும்,வளர்ச்சிப் பணிகளும் நடைபெற உள்ளன. இம்மாவட்டத்திலுள்ள குடிநீர்ப் பிரச்சினையைப்போக்குவதற்குத் தொலைநோக்குத் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தி உப்புநீரைக் குடிநீராக்கும் முயற்சிகள் விரைவில் இம்மாவட்டத்தில் அமல்படுத்தப்படும்.

''இராமநாதபுரம் மாவட்டத்தின் குடிநீர்த் திட்டங்களுக்காக





உலக வங்கி, ஆயுள் காப்பீட்டுக் கழகம், ஐரோப்பிய கலாச்சாரக் கழகம் போன்றவற்றின் மூலம் நிதி வசதிகள் பெற்று நிரந்தர திட்டங்கள் அமல்படுத்தப்படும்''

**தொலைக்காட்சிப் பெட்டிகள்**

வளர்ந்து வருகின்ற நவீன யுகத்தின் முக்கியத்துவம் விஞ்ஞான வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டே இருக்கின்றது. விஞ்ஞான வளர்ச்சியின் அளவு சாதாரண ஏழை, எளிய மக்களும் உணரும் வகையில் வளர்ந்து வருவது மின்இயலேஆகும். இதில் தொலைக்காட்சிச் சாதனத்தின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

தற்காலத்தில் செய்திகள் மற்றும் வளர்ச்சிகள் குறித்து தொலைதூரத்தில் உள்ளவர்களும் அறிந்து கொள்வதற்கு வசதியான சாதனமாகத் திகழ்வது தொலைக்காட்சியே. இத்தொலைக்காட்சி மக்களுக்குப் பயன்படும் வகையில் நிகழ்ச்சிகள் பலவற்றைத் தொகுத்து ஒளி பரப்பு செய்து வருகின்றது.

இந்தியத் தொலைக்காட்சி நிறுவனம் தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்டங்களின் தலைநகர்களில் தொலைக் காட்சி ஒளி பரப்பு நிலையங்களை நிறுவி உள்ளது. இதன் மூலம் இந்தியாவின் தலைநகரமான டெல்லியில் இருந்து ஒளிபரப்பப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தென் கோடியில் இருக்கின்ற பாமர மக்களும் கண்டு மகிழ வாய்ப்புள்ளது. கிராமப் பொது மக்கள் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளைப் பார்த்து மகிழத் தக்க வகையில் தமிழக அரசு ஊராட்சிகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகளை இலவசமாக வழங்கும் திட்டத்தை கடந்த நிதியாண்டின் கடைசியில் அமல்படுத்தியது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 8 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 244 ஊராட்சிகள் இத்திட்டத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டு, இவ்வூராட்சிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆர். எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு 32 தொலைக்காட்சிப் பெட்டிகளும், திருவாடானை ஊராட்சி ஒன்றியத்திற்கு 35 தொலைக்காட்சிப் பெட்டிகளும், பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்திற்கு 30 தொலைக்காட்சிப் பெட்டிகளும், போகலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 17 தொலைக்காட்சிப் பெட்டிகளும், முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 30 தொலைக்காட்சிப் பெட்டிகளும், கமுதி ஊராட்சி ஒன்றியத்திற்கு 52 தொலைக் காட்சிப் பெட்டிகளும், கடலாடி ஊராட்சி ஒன்றியத்திற்கு 32 தொலைக்காட்சிப் பெட்டிகளும், மண்டபம் ஊராட்சி ஒன்றியத்திற்கு 16 தொலைக்காட்சிப் பெட்டிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

மண்டபம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பனைக்குளத்தில் ஊராட்சிகளுக்கான இலவசத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கும் விழா 11.5.86 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு மறுவாழ்வுத்துறை அமைச்சர் திரு. டி. இராமசாமி அவர்கள் இலவசத் தொலைக் காட்சிப்பெட்டிகளை ஊராட்சித் தலைவர்களிடம் ஒப்படைத்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

''வளர்ந்துவரும் சமுதாயத்தின் தேவைகளையும், அத்தியாவசியத்தையும் மனதில் கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், கிராமத்தில் உள்ள ஏழை எளிய மக்களும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிக்கும் வகையில் இலவசத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்திற்கு ஆணையிட்டுள்ளார்கள். இத்தொலைக் காட்சிப் பெட்டிகளை நல்ல முறையில் பாதுகாத்துப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் அறிவுறுத்தப்படுகின்ற மேம்பாட்டுத் திட்டங்களை அறிந்துகொண்டும், அதன் மூலம் அரசு மக்களுக்கு அளித்துள்ள சலுகைகளைப் பெற்று, கிராம மக்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளல் வேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ. 9 இலட்சம் செலவில் 244 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன''



இவ்வாறு இராமநாதபுரம் மாவட்டம் பல்வேறு நலப்பணிகளில் சிறந்து விளங்கி வருகிறது.

இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கத்தல் உப்பின் அடிப்படையிலான இராசாயன வேதியியல் தொழில் கருத்தரங்கு ஏப்ரல் 14 அன்று நடைபெற்றது.

''மிகவும் பின்தங்கிய பெரிய மாவட்டமாக இருந்த இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்றாகப் பிரித்துச் சிறிய மாவட்டங்களானபின், மாவட்ட ஆட்சித் தலைவர் ஒவ்வொரு தாலுகாவாகச் சென்று மக்களின் குறைகளைக் கேட்டு நீக்கிட வளமிக்க மாவட்டமாக மாறிக் கொண்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்டம் கடல் உள்ளிட்ட பகுதியாகும். எனவே கடல் வளத்தைப் பயன்படுத்தி இம்மாவட்டத்தைத் தொழில் வளமிக்க மாவட்டமாக்க மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவரின் அரசு செயல்பட்டு வருகிறது. வாலிநோக்கத்தில் உள்ள உப்பு நிறுவனத்தை இன்னும் சிறந்த முறையில் நிர்வகிக்க, சென்னையில் உள்ள தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தை இராமநாதபுரத்திற்கு மாற்றித் தரவேண்டும்''— என்று மாண்புமிகு மறுவாழ்வுத் துறை அமைச்சர் திரு. டி. இராமசாமி தமது தலைமை உரையில் கூறினார்.

''புதியதாகப் பிரிக்கப்பட்ட இராமநாதபுரம், பசும்பொன் முத்து ராமலிங்கம், காமராஜர் மாவட்டங்களில் தொழில்



மையங்கள் துவங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதால் இம்மாவட்டங்களில் தொழில் மையங்கள் துவங்கப்படும். மிகவும் பின்தங்கிய வாலிநோக்கத்தில் ஒரு கோடி ரூபாய் முதலீட்டில் தொழில்கள் துவக்கப்படுகின்றன. இதில் அரசு 21 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்குகிறது. இப்பகுதியில் உப்புக் கரைசலில் இருந்து மக்னீசியம் உலோகக் கலவைத்தொழிற்சாலை 6 கோடி ரூபாய் செலவில் அமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன'' என்று தெரிவித்தார் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. க. இராசாராம்.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காகத் தொழில் அமைச்சர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்படுகிறது. இக்குழு எவ்வகைத் தொழில்களை எப்பகுதிகளில் நிறுவலாம் என்பதை நிர்ணயிக்கும். இக்கருத்தரங்கின் முடிவின்படி மேலச்செல்லனூரில் ரூ. 14 இலட்சத்தில் 350 பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்பட உள்ள ''பிளாஸ்டர் ஆப் பாரிஸ்'' ஆலையும், ரூ. 13 இலட்சத்தில் 30 பேருக்கு வேலை வாய்ப்புத் தரும் பொட்டாசியம் அயோடைடு ஆலையும், காலக்குளம் கிராமத்தில் ரூ. 4 இலட்சத்தில் 20 பேருக்கு வேலை வாய்ப்புததரும் பாலித்தீன் பைகள் தயாரிக்கும் ஆலையும், வாலிநோக்கத்தில் ரூ. 4 இலட்சத்தில் 15 நபர்களுக்கு வேலை வாய்ப்புத் தரும் மெக்னீசியம் கார்பனைட் ஆலையும், தனிச்சியம் கிராமத்தில் ரூ. 12 இலட்சத்தில் 15 பேருக்கு வேலை வாய்ப்புத்தரும் பண்ணை உப்பு ஆலையும், ரூ. 16 இலட்சத்தில் 20பேருக்கு வேலை வாய்ப்புத் தரும் மக்னீசியம் ஹைராக்ஸைடு ஆலையும் நிறுவப்பட வேண்டும் என இக் கருத்தரங்கில் தீர்மானிக்கப்பட்டது.

## பொன் விளையும் பூமியாக...

நமது பிரதமரின் 20 அம்சத்திட்டங்களில் ஒன்றானதும், உணவுஉற்பத்திக்கு இன்றியமையாததுமான 5வது திட்டம், ''தரிசு நிலங்களை விளைநிலமாக்குதல்'' ஆகும். இப்பெரும் பணியில் சாதனைகள் புரிவது தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பொறியியல்துறை.

தமிழ்நாட்டில் தென்கோடி மாவட்டங்களில் ஒன்றான இராமநாதபுரத்தில், பரமக்குடியை மையமாகக்கொண்டு, வேளாண்மைப் பொறியியல் துறையின், உதவி செயற் பொறியாளர் (இயந்திரம்) அலுவலகம் இயங்கி வருகிறது. இவ்வலுவலகம் பல சாதனைகளைப் புரிந்துள்ளது.

1983ஆம் ஆண்டு தேர்போகி கிராமத்தில் திரு கே. சுந்தரராஜ் அவர்களது பத்து ஏக்கர் ( 4... டேர்) தரிசு நிலமானது, பரமக்குடியில் உள்ள (இயந்திரம்) அலுவலகத்தில் புல்டோசர் மூலம் நிலச் சமன் செய்யப்பட்டு விளைநிலமாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் திரு. கே. பொ. சுந்தரராஜ், அவர்களுக்கு ஆண்டு வருமானம் ரூ. 5000 உயர்ந்துள்ளது.

தவக்குறிச்சி கிராமத்தில் திரு. அ. வகாப் அவர்களின் மேடு பள்ளமான 22 ஏக்கர் (8.70 எக்டேர் ) தரிசு நிலங்களைச் ... செய்து பொன்கொழிக்கும் விளைநிலமாக மாற்றியதில் மேற்படி விவசாயிக்கு ஆண்டு வருமானம் ரூ. 25,000 அதிகரித்துள்ளது. இவ் விவசாயிக்கு நிலச் சமன் செய்ததோடன்றி, குழாய்க் கிணறுகள் அமைத்து, விவசாய த்திற்கு நீர்த் தேவையையும் அதிகப்படுத்தியுள்ளது.

பூவளத்தூரைச் சேர்ந்த திரு. உ. இராமசாமி அவர்களின் மானாவாரி நிலத்தில் குழாய்க் கிணறு அமைத்து, சுமார் 3.60 ஏக்கர் (1.40 எக்டேர்) நிலத்தில் விவசாய விளைபொருட்கள் அதிகரிக்க ஆவன செய்துள்ளது. மேற்படி விவசாயிக்கு ரூ. 6,000, ஆண்டு வருமானம் அதிகரித்ததோடு, தமிழ்நாட்டின் உணவு உற்பத்தியும் கூடியுள்ளது.

இதே மாவட்டத்தில் அரியனந்தல் கிராமத்தில் உள்ள திரு. கோ. சண்முகம் அவர்களின் நிலத்தில் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, மணிக்கு 30,000 லிட்டர் நீர் வரத்துக்கு வழி செய்யப்பட்டது. அதன்படி, மேற்படி விவசாயிக்கு ஆண்டு வருமானம் ரூ. 3500 அதிகம் ஆனது. உணவுப் பொருட்கள் உற்பத்தியும் கூடியது.

இச்சாதனைகள் இராமநாதபுர மாவட்டத்தில் மட்டும் அல்லாது தமிழகம் முழுவதும் உள்ள எல்லா மாவட்டத்திலும் தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பொறியியல் துறையின் அலுவலகங்கள் மூலம் செய்யப்பட்டு வருகின்றன.

## புதுப்பட்டி பெரியசாமியின் பெருமிதக் கதை



டி.பி.எஸ். சுந்தரநாதன்,
செய்தி மக்கள் தொடர்பு
அலுவலர்,
அண்ணா மாவட்டம்,

அண்ணா மாவட்டம், கன்னிவாடி அருகேயுள்ள புதுப்பட்டிக் கிராமத்தில் வாழ்ந்து வருபவர் பெரியசாமி என்ற விவசாயி. 53 வயதுடைய பெரியசாமிக்கு 10 ஏக்கர் நிலம் உள்ளது.

கிணறு வெட்டி விவசாயம் செய்வதற்கு மிக இன்றியமையாத தேவையாக இருப்பது மின்சாரம். இன்றைய நிலையில் மின்சாரம் பெற்று விவசாயம் நடத்துவது ஒரு மாபெரும் பிரச்சினை என எண்ணிவந்தார். கிணறு வெட்டாமல் விவசாயத்தை நடத்த இயலாது என்ற ஏக்கத்தினை மனதிற்கொண்டு, பிரச்சனையைச் சமாளிப்போம் என்ற அடிப்படையில் கிணறுவெட்ட முடிவெடுத்து, கிணறு தோண்டும் வேலையினையும் துவக்கி விட்டார்.

கிணற்றிலே தண்ணீர் ஊறியவுடன் நீர் இறைக்கும் ஆயில் என்ஜின் ஒன்று வாங்கினார். கிணறு தோண்டிக் கொண்டே இருக்கும் காலங்களில் ஒருமணி நேரத்திற்கு, ஆயில் என்ஜினுக்கு ஒரு லிட்டர் டீசல் தேவைப்பட்டது. அன்றாட நடைமுறையில் நான்கு மணி நேரம் ஆயில் என்ஜின் மூலம் நீர் இறைக்க, நாலு லிட்டர் டீசல் தேவைப்பட்டது. மொத்தத்தில் மாதத்திற்கு 120 லிட்டருக்குக் குறைவின்றி டீசல் தேவைப்பட்டது. டீசல் செலவினத்தையும், விவசாய உற்பத்தியையும் கணக்கிடுகையில், டீசல் வாங்கும் செலவினம் மிக அதிகமாகப்பட்டது.

கிணறு வெட்டிய இருமாத காலத்தில் ஆயில் என்ஜின் எரிபொருள் செலவினத்தைக் கணக்கிட்டுப் பார்த்த இந்த விவசாயி மின்சார மோட்டார் இன்றி விவசாயத்தை நடத்த இயலாது என்ற முடிவுக்கு வந்தார்.

இத்தருணத்தில் புதுப்பட்டிக் கிராமத்தில் காந்தி கிராமக் கிராமியப் பல்கலைக் கழகத்தினர் அங்குள்ள விவசாயிகளைச் சந்தித்து, சாண எரிவாயு பற்றியும், அதன் நன்மைகள் பற்றியும், அரசின் சலுகைகள் பற்றியும் எடுத்துக் கூறினார்கள். ஏற்கெனவே டீசல்எரிபொருளின் அதிகச்செலவினத்தால் கவலையுற்றிருந்த விவசாயி பெரியசாமிக்கு இச்செய்தி ஆறுதல் அளித்தது.

இப்பல்கலைக் கழகத்தின் உறுதுணையுடன், அரசு கொடுக்கும் மானியத்தொகையுடன் கூடிய கடன் தொகையைப் பெற்று, சாண எரிவாயுக் கலத்தினைத் தனது தோட்டத்தில் அமைத்தார். சாண எரிவாயு சக்தியால் தனது ஆயில் என்ஜினை இயக்கி விவசாயம் செய்ய ஆரம்பித்தார். "முன்பு மாதம் 120 லிட்டர் டீசல் செலவானது தற்போது சாண எரிவாயுவைப் பயன்படுத்துவதால் மாதம் 30 லிட்டர் டீசல்தான் செலவாகிறது" என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார், விவசாயி பெரியசாமி. தான் பயன்படுத்துகின்ற சாணம், எரிபொருளாகிய பின்பு விவசாயத்திற்குத் தகுந்த நல்ல உரமாக உள்ளது என்றும் கூறினார். தற்போது வேர்க்கடலை, கிழங்கு, அவரை, தக்காளி மற்றும் நெல் வகைகளைத் தான் விவசாயம் செய்து வருவதாகத் தெரிவித்தார்.

முன்புபோல முழுமையாக டீசல் எரிபொருளைப் பயன்படுத்தினாலோ அல்லது மின்சக்தியைப் பயன்படுத்தி என்ஜினை இயக்கினாலோ அதிகச் செலவினம் மட்டுமல்லாது நடைமுறை இன்னல்களுக்கு அதிகம் என்று கூறும் இந்த விவசாயி, சாண எரிவாயுக் கலன், வேளாண் பெருங்குடி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்று கூறி மகிழ்கிறார்.

கன்னிவாடி கனரா வங்கிக் கிளையின் மூலம் இக்கலன் அமைக்க ரூ. 12,000 கடன் தொகை வழங்கப்பட்டதாகவும், இதில் அரசின் மானியத்தொகை ரூ. 5,250 என்ற விவரமும் தெரிவித்தார்.

கிராம மக்களுக்குக் கிராமங்களினால் பொருளாதாரச் சிக்கல் தவிர்க்கப்பட்டு பொலிவான வளவாழ்வுக்கு, சாண எரிவாயுக் கலன்கள் போன்ற பல்வேறு அரசின் திட்டங்கள் புதிய மறுமலர்ச்சியைத் தோற்றுவித்து வருகின்றன.

புன்னகை தவழ-பெருமிதம் ஆட்கொள்ள புதுப்பட்டி பெரியசாமி தன்னம்பிக்கையோடு நம்மை நோக்கி வருவது தெரியவில்லையா?



## வட ஆர்க்காடு மாவட்டத்தில்...

வட ஆர்க்காடு மாவட்டத்தில் மாவட்டத் தொழில் மையம் மூலமாக 1984-1985-ஆம் ஆண்டு 2,836 பேர்களுக்கு ரூ. 575.61 இலட்சம் கடன் ஒப்பளிக்கப்பட்டு 2,308 பேர்களுக்கு ரூ 515.23 இலட்சம் கடன் தொகை அளிக்கப்பட்டது. கடனுதவி பெற்றவர்களில் 229 பேர்கள் பெண்களாவர். மற்றும் 107 பேர் தாழ்த்தப்பட்ட பிரிவைச்சேர்ந்தவராவர்.

1985-1986-ஆம் ஆண்டு 3,000 பேர்களுக்குக் கடன் உதவி வழங்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதுவரையில் 3,744 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ. 927. இலட்சத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர்.

2,599 பேர்களுக்கு ரூ. 634.98 இலட்சம் கடன் ஒப்பளிக்கப்பட்டு 891 பேர்களுக்குரூ.162.75 இலட்சம் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம்:**

வட ஆர்க்காடு மாவட்டத்தில் நலிவடைந்த மக்கள் வாழ்வில் எழுச்சி பெற்று ஆக்கமும் ஊக்கமும பெற்றுட இளைஞர்களுக்குச் சுயவேலைவாய்ப்புப் பயிற்சியும், பின்பு வேலைவாய்ப்பும் பெற்றிட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மாதனூர் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் பயிற்சி அளிக்கும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

'செட்வின்' ( SETWIN ) என்ற திட்டத்தின் கீழ் ஐதராபாத்திலும், செகந்தராபாத்திலும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த முஸ்லீம் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுவது போல் தமிழ்நாட்டிலும் முதன் முதலாக முஸ்லீம்கள் அதிகம் வாழும் ஆம்பூர் நகரில் இத்திட்டம் செயல்படத் திட்டம் தீட்டப்பட்டது.

ஆம்பூர் மற்றும் வாணியம்பாடிப் பகுதிகளில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் தோல் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அதிகம் உள்ளன. தோல் பொருட்களை வெட்டி, சீரமைத்து, தைத்துக் கொடுப்பதற்கு மிகுந்த ஆட்கள் தேவைப்படுகின்றனர். எனவே நலிவடைந்த பிரிவைச் சார்ந்த 18 முதல் 25 வயது வரை உள்ள 50 முஸ்லீம் பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குத் 'தமிழ்நாடு தோல் பொருள் உற்பத்தியாளர் சங்கம்' மூலம் 15-11-85 முதல் 15-5-86 வரை 6 மாத காலத்திற்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியின்போது பயிற்சி பெறும் பெண்களுக்கு ஊக்கத் தொகையாக மாதம் ரூ. 200 வீதம் 50 பெண்களுக்கு 6 மாதத்திற்கு 60,000 ரூபாயும், பயிற்சி அளிக்கும் விரிவுரையாளருக்குப் பயிற்சிக் கட்டணமாக நபர் ஒருவருக்கு ரூ. 50 வீதம் கணக்கிடப்பட்டு 15,000 ரூபாயும், தையல்



பயிற்சி மூலம் பொருட்கள் வாங்க நபர் ஒருவருக்கு ரூ. 25 வீதம் கணக்கிடப்பட்டு 7,500 ரூபாயும், டூல்ஸ் பெட்டிகள் வாங்க ரூ. 350 வீதம் 7500 ரூபாயும் ஆக ரூ. 1 இலட்சம் அரசு மூலம் செலவிடப்பட்டுப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி அளிக்கப்பட்ட பெண்களுக்குச் சான்றளிக்கும் விழா மற்றும் தோல் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பளிக்கும் விழா 18-5-86 அன்று நடைபெற்றபோது மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இ. எஸ். தானியல் குணாநிதி, இ.ஆ.ப., அவர்கள் மூலம் 40 முஸ்லீம் பெண்களுக்குத் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பளிக்கும் உத்தரவும், மீதமுள்ள 10 பெண்களுக்குச் சுயமாகத் தொழில் செய்ய தையல் இயந்திரங்கள் அரசு மானியத்துடன் கடனாகவும் வழங்கினார் தொழிற்சாலைகளில் பணியிலமர்த்தப்படும் பெண்களுக்கு ரூ. 700 அளவில் மாத வருவாய் கிடைக்கும்.

''ஏழையின் சிரிப்பில், இறைவனைக் காண்போம்' என்ற அரசுக் கொள்கைக்கேற்ப வட ஆர்க்காடு மாவட்டம் செயலாற்றி வருகிறது.

**மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை**

கிராமப்புற இளைஞர்களுக்கு மீன்வளர்ப்பு மூலம் வேலை வாய்ப்பு அளித்ததில் மீன்வளர்ப்போர்கள் என்ற பிரிவினை உருவாக்குதல், சிறு குளங்களில் உரிமையாளர்களை உற்சாகப்படுத்துதல், ஒருங்கிணைந்த திட்டத்தின் மூலம் அறிவியல் அடிப்படையில் மீன் வளர்ப்பு செய்தல், நவீன மீன்வளர்ப்புத் திட்டத்தை மீன் வளர்ப்பில் செயலாற்றுதல் போன்ற பணிகள் மூலம் உற்பத்தியைப் பெருக்கி அவைகளை மீன் வளர்ப்போர்களும், பொதுமக்களும் பயன் அடையும் வண்ணம் விற்பனை செய்தல் போன்றவை மீன்வளர்ப்போர்' மேம்பாட்டு முகமையின் பொதுவான நோக்கங்களாகும்.

மீன் வளர்ப்பு செய்வதற்கு 1. உரிமையாளர்களின் இசைவுடன் தனியார் குளங்கள், 2. ஊராட்சி நிறுவனங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான குளங்கள். 3. பொதுப்பணித்துறைக் குளங்கள் 4. அறக்கட்டளை அமைப்பின் இசைவுடன் ஆலயங்களுக்குச் சொந்தமான குளங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இம் முகமை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்கி வருகிறது.

மீன்வளப் பணிகளை மேற்கொள்வதற்குஅனைத்துக்கிராமப்புறக் குளங்களும் ஆய்வு செய்யப்பட்டுத் தேர்வு செய்யப்படுகின்றன; அதன்பின், ஊராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்கள், பொதுப்பணித்துறை, அறநிலையத்துறை போன்ற நிறுவனங்களுக்குச் சொந்தமான குளங்களைத் தகுந்த தீர்மானங்களுடன் இம்முகமைக்கு நீண்ட காலக் குத்தகைக்கு வழங்கக் கோரி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அவ்வாறு குளங்கள் முகமையால் எடுக்கப்பட்டவுடன், குளங்களுக்கு மீன் வளர்ப்போர் நியமனத்திற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. செய்தித்தாள்கள் மூலமும் ஊராட்சி



ஒன்றியங்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மூலமாகவும், அறிவிப்பு செய்து மீன்வளர்ப்போர் நியமனத்திற்கு எழுச்சியுறுமாறு பொதுமக்களுக்கு இத்திட்டம் அவ்வப்போது தெரிவிக்கப்படுகிறது. தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் கடலூர் மண்டல மீன்துறை உதவி இயக்குநர், வேலூர் இந்திய வங்கியின் மண்டல மேலாளர் மற்றும் முகமையின் முதன்மை நிர்வாக அலுவலர் ஆகிய மூவர் அடங்கிய தேர்வுக் குழுவால் நேரடித் தேர்வு செய்து மீன் வளர்ப்போர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர்.

கலப்பின மீன்வளர்ப்பு ஆங்காங்கே அமைந்துள்ள குளங்களில் எவ்வாறு செயலாற்றப்படுகிறது மற்றும் அறிவியல் அடிப்படையில் இதர மீன் வளப் பணிகள் எப்படிச் செயல்படுகிறது என்பதனை விளக்குவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மீன் வளர்ப்போர்களுக்கு 15 நாட்களுக்குத் தொழில் நுட்பப் பயிற்சி, முகமையால் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி முடிந்ததும் அவரவர்களுக்குக் குளங்களில் தூர் எடுத்தல் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மீன்வளர்ப்பில் அடிப்படைப் பணிகளான குளங்களில் தூர் எடுத்தல், உள்மடை மற்றும் வெளிமடை ஆகியவைகளைப் பராமரித்தல் முதலியன மீன் வளர்ப்போர்களால் கவனிக்கப்படுகிறது. இது சம்பந்தமாக இம்முகமை மூலம் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. குளங்களில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்து வளர்க்க ஏதுவாக எரு மற்றும் உரம் இடுதல் மற்றும் கூடுதல் தீனி போடுதல் ஆகிய பணிகளை மீன் வளர்ப்போர்கள் செய்து வருகிறார்கள்.

கிராமியக் குளங்களில் இத்திட்டத்திற்கு ஒரு எக்டேர் நீர் பரப்பில் பெறப்பட்ட 100 கிலோ மகசூலுக்கு எதிராக அதனை 1,000 கிலோவாக அதிகரிக்க, சீக்கிரத்தில் வளரக் கூடிய உயர்ரக மீன் இனங்களான கட்லா, ரோகு மிர்கால் வெள்ளிக் கெண்டை, சாதா கெண்டை மற்றும் புல்கெண்டை மீன்குஞ்சுகள் நீர்நிலைகளின் தன்மைக்கேற்ப இருப்பு செய்து இலாபகரமாகக் கலப்பின மீன் வளர்ப்பு நடத்தப்பட்டு வருகிறது. மீன்குஞ்சுகள், எரு மற்றும் உரங்கள், மீன்களுக்கு உணவு ஆகியவைகளைக் குளங்களில் இடுவதற்கு உள்ளீட்டுக் கடனுடன் 25 சதம் மானியத் தொகை மீன் வளர்ப்போர்களுக்கு வழங்கப்படுகிறது. இதனைப் போன்று, குளங்களைப் புதுப்பிப்பதற்கும், 25 சதம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் மானியம் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களைச் சார்ந்த மீன் வளர்ப்போர்களுக்கு ஒரு மடங்காக உயர்த்தி வழங்கப்படுகிறது.

திறம்பக் குளங்களில் மீன் வளர்ப்பு நடத்திட தொடர்ந்து தொழில் நுட்ப ஆலோசனைகளும் பயிற்சிகளும் முகமையின் விரிவாக்க அலுவலர்களாலும் இதர களப் பணியாளர்களாலும் வழங்கப்பட்டு வருகின்றன. மீன் வளர்ப்போருக்கு மேற்படி உள்ளீட்டு வேலைகளுக்குத்தேவைப்படும் கடன், அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக பெற்றுதரவும் இம்முகமை ஏற்பாடு செய்கிறது. மீன் வளர்ப்பிற்கு மீன் பிடிப்பு, மீன் விற்பனை போன்ற பணிகளுக்குத் தேவைப்படும் நுட்ப அறிவு உதவிகள் செய்யப்படுகின்றன.



**தேர்ந்தெடுக்கப்பட்ட குளங்கள்**

முகமை தொடக்கத்திலிருந்து இம்மாவட்டத்தில் 340 எக்டர் பரப்புள்ள 258 குளங்கள், ஏரிகள் ஆய்வு செய்யப்பட்டு 205.35 எக்டேர் பரப்புள்ள 161 குளங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இவைகளில் 148 குளங்கள் 181 மீன் வளர்ப்போர்களுக்கு வழங்கப்பட்டன. இன்னும் 21.72 எக்டேர் பரப்புள்ள 13 குளங்களுக்கு மீன் வளர்ப்போர்கள் தேர்ந்தெடுத்து பயிற்சி அளிக்க குளங்கள் மீன் வளர்ப்போர் தேர்ந்தெடுக்கும் பணியில் கடந்த ஆண்டு இநத அரசு தடை நீக்கியிருப்பதால், இந்த் ஆண்டு மேலும் குளங்கள் தேர்ந்தெடுத்து 300 எக்டேர் இலக்கு அடையப்படும்.

**மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல்**

கடந்த ஆண்டில் (1985-86) 114.75 எக்டேர் பரப்புள்ள 72 குளங்களில் 4,59,205 மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டன. மற்ற குளங்களில் தேவைப்படும் அளவு தண்ணீர் இல்லாததாலும் கடன் செலுத்தாத மீன் வளர்ப்போர்களின் குளங்களிலும் மீன்குஞ்சுகள் இருப்புச் செய்யப்படவில்லை. பரப்பளவு, தண்ணீர் வசதி, கணத்தின் அடிப்படையில் இருப்பு செய்யப்பட வேண்டிய 4,37,570 மீன்குஞ்சுகள் இலக்கினை எய்திடப்பட்டுள்ளது. இவைகளில் கூட்டின மீன் வளர்ப்புத் திட்ட அடிப்படையில் ஆறு வகை உயர்ரக மீன்களும் இருப்பு செய்யப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டு குறைந்தது 200 எக்டேர் பரப்பளவு குளங்களில் 8 இலட்சம் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்படும்.

**மீன்வளர்ப்பு**

கூட்டின மீன்வளர்ப்பினால் 1984-85ஆம் ஆண்டு 126.35 எக்டேர் பரப்புள்ள 89 குளங்களில் மொத்தம் 1,01,795.00 கிலோ மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன. எக்டேருக்கு 805 கிலோ மீன் உற்பத்தி ஆகும். 1985-86-ஆம் ஆண்டு 80.50 எக்டேர் பரப்புள்ள 68 குளங்களில் 68,86,000 கிலோ மீன்கள் பிடிக்கப்பட்டன. மீன் உற்பத்தி எக்டேருக்கு 851.500 கிலோ ஆகும். சராசரி 7 மாதங்களில் தண்ணீர் இருப்பில் வளர்ந்த மீன் உற்பத்தி ஆகும். இது ஆண்டு முழுதும் தண்ணீர் இருப்பு உள்ள குளங்களில் 1,500 கிலோ உற்பத்திக்குச் சமமானது. கடந்த ஆண்டு உல்லா வகைக் கூட்டின மீன் வளர்ப்பு மீன் வகை குளம் இருப்புச் செய்யப்பட்டிருப்பதால், இந்த ஆண்டு 1986-87 மீன்பிடிப்பு கணிசமாக உயரும் என்பதில் ஐயமில்லை. ஏப்ரல் 86 ஒரு மாதத்தில் மட்டும் 6142 எக்டர் பரப்புள்ள குளங்களில் முதல் தவணையாக 384,95,250 கிலோ மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது. இது எக்டேருக்கு 626.700 கிலோ சராசரி ஆகும். ஆண்டு இலக்கான 1,000 கிலோ மீன்பிடிப்புக்கு மேல் கூடுதல் உற்பத்தி கிடைக்கும் என்பது திண்ணம்.



**நவீன மின்விசிறி!**

● வீட்டுக்குள் தென்றல் காற்றை அனுபவிக்க ஒரு மின்விசிறி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இயற்கையான காற்று அலைகளை இந்த மின்விசிறி ஏற்படுத்துகிறது. இந்த மின்விசிறியோடு இணைத்துள்ள ஒரு சிறிய கம்ப்யூட்டர் இதற்கு உதவுகிறது. இயற்கையான தென்றல் காற்றின் வேகமாறுபாட்டையும் சுழற்சியையும் கம்ப்யூட்டரின் நினைவில் பதிவு செய்துவிடுகிறோம். இதற்கு தகுந்தாற்போல் மின்விசிறிக்குச் செல்லும் மின் ஓட்டத்தை மாற்றி கம்ப்யூட்டர் நமக்கு இந்த விசிறியிலிருந்து தென்றல் காற்று கிடைக்கச் செய்கிறது.

நன்றி: வானொலி

**முழு மீன் உற்பத்தித் திட்டம்**

ஒரு குளத்தில் விஞ்ஞான ரீதியில் கட்டுப்பாட்டுடன் மீன் உற்பத்தியினைப் பெருக்கும் இத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் இரண்டு குளங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவைகளில் ஆண்டுக்கு எக்டேருக்குச் சராசரி 3,000 கிலோ மீன் உற்பத்தி செய்திடல் வேண்டும். கடந்த ஆண்டு ஒரு குளத்தில் 3295 கிலோ மீன்களும், மற்றொரு குளத்தில் 1385 கிலோ மட்டும் கிடைத்தன. இந்த ஆண்டும் இன்னும் மீன்பிடிப்பு நடத்தப்படவில்லை.

**கூடுகளில் மீன்குஞ்சுகள் வளர்ப்பு**

இம்முகமையில் மிதப்புக் கூடுகளில் மீன்குஞ்சுகள் வளர்க்கப்படுகின்றன. நுண்மீன்குஞ்கள் மற்றும் சிறிய மீன்கள் வேலூர் கோட்டை அகழியில் வைக்கப்பட்டுள்ள மிதப்புக் கூடுகளில் ஒரு மாதம் முதல் இரண்டு மாதங்கள் வரை விரலளவு மீன்குஞ்சுகளாக வளர்க்கப்பட்டுக் குளங்களில் இருப்புச் செய்ய விற்கப்படுகின்றன. 1985-86-ஆம் ஆண்டு 8 மிதப்புக் கூடுகளில் மொத்தம் 10,62,000 நுண்சிறிய மீன் குஞ்சுகள் 2,79,835 விரலளவு மீன்குஞ்சுகளால் வளர்க்கப்பட்டு இருப்புச் செய்ய விற்கப்பட்டன. மொத்தம் ரூ. 26,000 இலாபம் கிடைத்தது. 1986-87-ஆம்ஆண்டு மட்டும் புதிதாக 12 மிதப்புக் கூடுகள் வாங்கப்பட்டுள்ளன. மொத்தம் 20 கூடுகளில் மூன்று மடங்கு மீன்குஞ்சு உற்பத்தி செய்யப்படும்.

இதுவரை தேர்ந்தெடுக்கப்பட்ட குளங்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட மீன்வளர்ப்போர்கள் 20 பேர்களுக்கு மட்டும் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. மேலும் புதிதாக இந்த ஆண்டு 100 எக்டேர் குளங்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளன. இவைகளுக்கு மீன் வளர்ப்பில் ஆர்வம் உள்ள—வேலையில்லாத—படித்த ஏழை இளைஞர்களைத் தேர்வு செய்து பயிற்சி அளிக்கப்படும்.

1984-85ஆம் ஆண்டு வங்கிக் கடன் வசதித் திட்டத்தில் 87 மீன் வளர்ப்போர்கள் ரூபாய் 1,21,470.00 கடன் வசதி பெற்றுப் பயனடைந்தார்கள். இத்தொகையில் இது வரையில் ரூ. 99,309 வசூல் செய்யப்பட்டுள்ளது. 1985-86-ஆம் ஆண்டில் 62 மீன் வளர்ப்போர்களுக்கு வழங்க ரூ.97,760 வங்கிக்கடனில் இதுவரை 41,884.40 வசூலிக்கப்பட்டுள்ளது. மீதம், மீன்பிடிக்கப்படும் இன்னும் மூன்று மாதங்களில் வசூல் செய்யப்படும். கடந்த மூன்று ஆண்டுகளாக வழங்கப்பட்ட ரூ. 3,08,867.40 முகமைக் கடனில் இதுவரையில் ரூ. 2,84,900 வசூல் செய்யப்பட்டுள்ளது. மீன்பிடிப்பு நடத்தும்பொழுது இதுவரை வசூலிக்கப்படும்.

**எம். கலைமணி**
உதவி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
வேலூர்,
வட ஆர்க்காடு மாவட்டம்

# நவீன நெற்பயிர்ப் பாசனம்

வளர்ந்து வரும் மக்கள் தொகைக்குத் தேவையான உணவு உற்பத்தியைப் பெருக்க வேளாண்மையில், இயற்கையின் இன்றியமையாத வளமான நீரினைத் திட்டமிட்டுப் பயன்படுத்துவது அவசியம். இன்னும் இருபது ஆண்டுகளில், நீரின் தேவை இரு மடங்காக உயரும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள். எனவே, இருக்கின்ற நீர்வளத்தினை மக்களுக்குச் சீரியமுறையில் பயன்படுத்த, நீர் வளத்தைக் காப்பதும், திறமையாகவும், முறையாகவும் பயன்படுத்துவது நம் கடமையாகும்.



விடப்படுகிறது. மற்ற எல்லாப் பயிர்களுக்கும் மீதமுள்ள 15சத வீத நீர் மட்டுமே கிடைக்கிறது. எனவே நெற்பயிரின் பாசனத்தை நூதனமாக்குவதன் மூலம் ஓரளவு நீரைச் சேமிக்கலாம். இந்த உபரி நீரைக் கொண்டு நெற்பயிராகும் பரப்பளவை அதிகரிக்கலாம் அல்லது மற்ற பயிர்களுக்கு இந்த உபரி நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தலாம்.

மற்ற எல்லா வகைப் பயிரையும் விட நெற்பயிருக்கு அதிகமான அளவு நீர் தேவைப்படுகிறது. தற்போது உள்ள நீர்ப் பாசன முறையின் மூலம் 1கிலோ நெல் மணியை உற்பத்தி செய்ய ஏறத்தாழ 10,000 லிட்டர் நீர் தேவைப்படுகிறது. ஆனால் முறையான, நீர்ப்பாய்ச்சு முறையினாலும், நூதனப் பாசன முறையினாலும் 3000 லிட்டர் நீரிலேயே 1 கிலோ நெல் மணியை உற்பத்தி செய்ய முடியும். இவ்வாறு, நூதனப் பாசனமுறையுடன், திருந்திய வேளாண் முறைகளை இவற்றோடு இணைத்துச் செயல்படுத்துவதன் மூலம் பயன்படுத்தி இந்த நீரைக் கொண்டு மற்றப் பயிர்களுக்கோ அல்லது வேறு தேவைக்கோ பயன்படுத்த முடியும். இம் முறையையும் மற்றும் திருந்திய சாகுபடி முறைகளையும் மேற்கொள்ளுவதன் மூலம், தற்போது கிடைக்கும் நெல் விளைச்சலான எக்டருக்கு 3 டன் என்பதை அதிகரித்து எக்டருக்கு 5 முதல் 7 டன் வரை பெற முடியும்.

சிறப்பான முறையில் நீரையும், பயிரையும் நன்கு நிர்வகித்து வந்தால், சராசரி நெல் விளைச்சலை அதிகரிக்க முடியும். இதனால் மொத்த விளைச்சலைப் பாதிக்காமல் நெல் பயிரிடும் பரப்பினைக் குறைக்கலாம். அப்படி நெல் பயிரிடப்படும் பரப்பினைக் குறைப்பதன் மூலம் குறிப்பிட்ட அளவு நீரைச் சேமிக்கலாம். இந்த உபரி நீரைக் கொண்டு நாட்டின் பாசன வசதி கிடைக்காத மற்ற நிலப்பகுதிக்கும் பாசனம் அளிக்க முடியும்.

இந்தியாவிலுள்ள அனைத்து நீர்ப்பாசனத் திட்டங்களும் "பயிர் விளையும் பரப்பு மற்றும் பாசன நீர்த்தேவை" என்ற அடிப்படையில்தான் செயல்படுகின்றன. ஆனால் இந்த அடிப்படை அறிவியல் பூர்வமாக இல்லை. மேலும் அதை உத்தேசமாகத் தான் சொல்ல முடியும். அது மட்டுமின்றி சராசரி நீர்த் தேவையை மட்டுமே அந்த அடிப்படைக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆனால் பயிர்களின் நீர்த் தேவை என்பது வானிலை, மண்ணின் தன்மை, பயிர், பயிரின் வளர் நிலைகள் மற்றும் சாகுபடி முறைகளைப் பொறுத்துதான் அமைகிறது.

இப்போது நம் நாட்டில்உள்ள பாசனக் கால்வாய்கள் மேற்சொன்ன அறிவியல் பூர்வமற்ற அடிப்படையில் அமைக்கப்பட்டிருப்பதால் பயிரின் முழுத்

இந்தியாவில் பாசனம் செய்யப்படும் நிலப்பரப்பு 6 கோடியே 80 இலட்சம் எக்டர் ஆகும். இது பயிர் செய்யப்படும் மொத்த நிலப்பரப்பில் 40 சதவிகிதம் ஆகும். நிலத்தின் மேற்பரபபிலும், நிலத்தடியிலும் சேர்த்துப் பாசனத்திற்கு மொத்த நீர் இருப்பு 10.5 கோடி எக்டர் மீட்டர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் இதில் 6 முதல் 5.6 கோடி எக்டர் மீட்டர் நீரை மட்டுமே நாம் பயன்படுத்துகிறோம். வேளாண்மையில் நாம் பயன்படுத்தும் நீரின் அளவில் பெரும் பகுதி அதாவது 40 முதல் 45 சதவிகிதம் வரை நெல் உற்பத்திக்கே செலவிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் பாசனத்திற்குப் பயன்படும் நீரில் 85 சதவீதம் நெல் சாகுபடிக்கு மட்டும் செல

விளைச்சலை அதிகரிக்கலாம்.

இனி, திறமையாகப் பாசனம் செய்து, விளைச்சலை அதிகப் படுத்தும் வழி வகைகளைப் பற்றி ஆராய்வோம்.

**நெற்பயிரின் பாசனத்தை நூதனமாக்குதல்**

இம் முறையினால் நாம் திறமையாகப் பாசனம் செய்து, 20 முதல் 30 சதவீதம் வரை மிச்சப்


**ஆர். குழந்தைவேலு**
**ஆர். கே. சிவனப்பன்**
**நீர் நுட்ப மையம்,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்.**




தேவையை அவற்றால் பூர்த்தி செய்ய முடிவதில்லை. நெற்பயிருக்கு நிலத் தயாரிப்புக்குத் தேவையான நீரின் அளவு, மொத்த நீர்த் தேவையில் 1/4 முதல் 1/3 பங்கு வரை ஆகிறது. கால்வாய்களின் கொள்ளளவு குறைவாக இருப்பதால், இந்நீர்த் தேவையை அவற்றால் பூர்த்தி செய்ய முடிவதில்லை. இதனால் சமமற்ற முறையில் நீர் பகிர்ந்தளிக்கப்பட்டு, கால்வாயின் கோடியில் இருக்கும் உழவர்களுக்கு நீர் முழுவதும் கிடைக்காமலே போய் விடுகிறது. இப்பிரச்சினையைத் தீர்க்க, பழைய பாசன முறையை நூதனமாக்கி நீர்ப்பாசனத் திட்டங்களைச் சீர் திருத்த வேண்டும். நீரைச் சமமாகவும் பயிர் பருவத் தேவையைப் பூர்த்தி செய்யும்படியாகவும் பகிர்ந்தளிக்க வேண்டும். பாசன வசதி அமைப்புக்களை ஏற்படுத்தியும் அவற்றைப் பராமரித்தும் வந்தால் பாசனத்தைச் சிறந்த முறையில் செய்ய முடியும். நிலத்தின் பாசன அமைப்புகள் சீர் திருத்தப்பட்டு, களைகள் முழுவதும் நீக்கப்பட்டு நிலம் தயாராக்கப்பட வேண்டும். மேலே சொன்ன அனைத்தும், பாசனத்தை நூதனமாக்குவதன் மூலமே முடியும். மேலும் நீரின் அளவை மிச்சப்படுத்தவும் பாசன நூதனமாக்குதலே சாத்தியப் படுத்தும்.

கால்வாயின் பயன்பாட்டுக்குட்பட்ட பகுதிகளில், முதலிலுள்ள பகுதிகளுக்கும், கடைசியிலுள்ள பகுதிகளுக்கும் நிலத் தயாரிப்பில் உழவர்கள் ஈடுபடும் கால வித்தியாசம் அதிகமிருப்பதால், அடிப்பரப்பு, உட்பரப்பு, மேற்பரப்பில் ஏற்படும் நீர் இழப்புகள் பெரிய அளவில் இருக்கின்றன. 20 நாட்களில் தொளியடிக்க வேண்டியதை, சில உழவர்கள் 50 முதல் 60 நாட்கள் வரை நீடித்துச் செய்கிறார்கள். இதனால் பூச்சி, நோய் தாக்குதலுக்குள்ளாகிப் பயிர் விளைச்சல் குறைகிறது. எனவே, இந்த இடைவெளியை முடிந்த அளவு மிகவும் குறைத்து தேவையான அளவு நீர்ப் பாசனம் செய்து, நீர் நிர்வாகம் செய்ய வேண்டும். மேலும், இதைப் பற்றி உழவர்களுக்கு அறிவுறுத்த வேண்டியதும் அவசியம்.

பாசன நீர் அளவை மிச்சப் படுத்த இன்னொரு முறை உள்ளது. அதாவது நெற் பயிர்ச்சாகுபடியை மழைக்காலத்தோடு முடித்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், இப்பருவத்தில் மேகம் சூழ்ந்த நிலையில் பயிரின் நீர்த் தேவை குறைவாக உள்ளது. மேலும், மழை நீர் பயிரின். தேவையைச சரிசெய்துவிடுகிறது. எனவே, மழைக் காலங்களில் குறைந்த அளவு பாசனமே செய்து, மிச்சப்படுத்தும் நீரை- பின்னால் தேவைப்படும்போது பயன்படுத்த வேண்டும்.

பொதுவாக நெல்லிற்கு, தொடர்ந்து அறுவடை முடியும் வரை தண்ணீர் பாய்ச்சுவது வழக்கமாக இருக்கிறது. சில நேரங்களில் அணைக்கட்டுகளில் தண்ணீர் அளவு தேவைக்குக் குறைவாக இருக்கும்போது, கால்வாயில் ஒருவாரம் முழுவதும் நீர் விடப்படுகிறது. அதற்கு அடுத்த ஒருவாரம் முழுவதும். கால்வாய் மூடப்படுகிறது. இந்தப் பாசனத்திற்கு "முறை வைத்து" நீர்ப்பாசனமுறை என்றும் பெயர் இம்முறையினால் நீர் தட்டுப் பாட்டினால் நேரிடும் விளைச்சல் இழப்பைத் தவிர்ப்பதோடு, பொதுவாக மகசூலும் அதிகமாகக் கிடைக்கிறது.

பாசனப் பொறியாளர்களோடு- உழவர்கள் ஒத்துழைத்தால் எந்தப் புதிய பாசன முறையையும் செயல்படுத்த முடியும் உழவர்கள் இங்ஙனம் ஒத்துழை காததிற்கு ஒரு காரணம், ஒ பாசனத்திற்குப் பத்துகாசே போதுமான கால்வாய்ப் பா னத்தை அவர்கள் விரும்புவதே ஏனெனில் மற்ற பாசன வ முறைகளில் இதைவிட 20 மடங்கு அதிகமாகச் செலவ கிறது. உழவர்களின் ஒத்துழை பைப் பெற வேண்டும் என்றால் ஒவ்வொரு நிலையிலும் "பாச வசதிக் கழகங்களை" நிறுவி உழவர்களுக்குப் பயிற்சியும் புதிய நீர் நிர்வாக முறைகளை பற்றிய கல்வியும் தரவேண்டிய அவசியம். மாநில அரசுகள் ஒ வொன்றும் மேற்சொன் யோசனையைச் செயல்படுத் முன்வர வேண்டும்.

மேற்சொன்ன பரிந்துரைகளை செயல்படுத்தினால், நீரைச்சேமி துத் திறமையாகப் பயன்படுத்தி பாசனம் செய்து, நெல்விளை சலைப் பெருக்குவதோடு, பாச வசதி குறைவாக உள்ள மற் பகுதிகளுக்கும் நல்ல முறையி நீர்ப்பாசனம் செய்ய முடியு என்பதில் ஐயமில்லை.

## ஆப்பிள்

**நாம் ருசித்து உண்ணும் ஆப்பிளின் தாயகம் பாரசீகம் முதல் கருங்கடல் வரை. ஆப்பிள் 'ரோசேதி' என்னும் தாவர இனத்தைச் சேர்ந்தது. இதனுடன் சேர்ந்து கொள்ளும் இதர பழங்கள் ஏப்ரிகாட், பீச், இராஸ்பெரி, சேர்ரி மற்றும் ஆல்பகோடா ஆகும். ஆப்பிள் வகையில் 7000 உள்ளன. ஆப்பிள் பெரும்பாலும் உஷ்ணப் பகுதியிலும் மிக உயர்ந்த மலைப்பகுதியிலும் சிறப்பாக வளரும். நமது நாட்டின் வடக்கே காஷ்மீரிலும், இமயமலைப் பகுதியிலும், தெற்கே பெங்களூர், நீலகிரி, கொடைக்கானலிலும் பயிராகின்றன. நம்மவர்கள் வாழைப்பழத்தை தெய்வங்கட்கு வைத்துப் படைப்பது போல், டென்மார்க், சுவீடன், நார்வே போன்ற நாடுகளில் ஆப்பிளை வைத்துப் படைக்கிறார்கள்.**

**மேல்நாடுகளில் ஒவ்வொரு வேளை சாப்பாட்டிலும் ஆப்பிள் நிச்சயம் இடம் பெறும். மது வகைகளைத் தயாரிப்பதில் ஆப்பிள் மூலப் பொருளாகப் பயன்படும். "மாலிக் அமிலம் மதுவகை தயாரிப்பின் முக்கிய பொருள் இது ஆப்பிளில் அதிகம்.**

**இது தவிர ஆப்பிளில்,**

**புரதப்பொருள் 0.1 கிராமும்,**

**கார்போஹைட்ரேட் 3.8 மில்லி கிராமும்,**

**சுண்ணாம்பு 0.3 மில்லி கிராமும்,**

**பாஸ்பரஸ் 0.6 மில்லி கிராமும்,**

**இரும்புச்சத்து 0.3 மில்லி கிராமும்,**

**வைட்டமின் 'இ' யும் உள்ளன.**



**இரத்தப்போக்கை நிறுத்தவும், இரத்தத்தைச் சுத்தப்படுத்தவும், இடுப்பு சந்து வாதம், கீல் வாதம், நரம்புத்தளர்ச்சி முதலியவற்றைக் குணப்படுத்தவும், நல்ல மலமிளக்கியாகவும், வாதநோயை அகற்றவும், கல்லீரல் சுறுசுறுப்பாக இயங்கவும், ஆப்பிள் மருந்தாகப் பயன்படுகிறது.**

*நன்றி* : **விஞ்ஞானச் சுடர்**



# நூல் நயம்

> 'நூல் நயம்' பகுதிக்குப் புத்தகங்கள் அனுப்புவோர் தவறாமல் இரண்டு படிகளை அனுப்புதல் வேண்டும். அரசியல், சாதிமதங்கள் தொடர்பான நூல்களுக்கு மதிப்புரை வழங்கப்படுவதில்லை.
>
> — ஆசிரியர்

## அருட்சுவை வழங்கும் ஆறுமுகன்

ஆசிரியர்: திருக்கோவிலூர் சிவ சக்தி,
வெளியிட்டோர்: தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ, பெரியார்பாதை(மேற்கு) சூளைமேடு, சென்னை-600 094

பக்கம்: 120 விலை ரூ.8.50

முருகனை-செந்தில் முதல்வனை வழிபடும் பக்தர்களுக்கெல்லாம் இந்நூல் ஒரு வரப்பிரசாதம்.

கந்தபுராணம் பாடிய கச்சியப்பரில் தொடங்கி, ஆறுமுகனின் தத்துவம்வரை-பல்வேறுதலைப்புகளின் கீழே திருமுருகன் தொடர்பான சில புராணச்சம்பவங்கள் 'அருட்சுவை வழங்கும் ஆறுமுகன்' நூலில் அழகுற எடுத்தியம்பப் படுகின்றன.

சர்க்கரைப் பொங்கலில் திராட்சை போல, இந்த நூலில் ஆங்காங்கே பழந்தமிழ்ப் பாடல்கள் தென்படுகின்றன.

'வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை' என்றுள்ள பக்தகோடிகள் படித்துப் பயன்பெறத்தக்க நூல்.

## அரசும் தமிழும்

ஆசிரியர்:ஒப்பிலா மதிவாணன்,

கிடைக்குமிடம்: பாரி நிலையம் மற்றும் சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை-600 108

பக்கம்:168 விலை ரூ.18

1977முதல் 1983 வரையில் இன்றைய தமிழ்நாடு அரசு, தமிழ் ஏற்றம்பெற என்னவெல்லாம் செய்திருக்கிறது என்பதை மிகமிகத் தெளிவாக விளக்கும் அரிய நூலாகும் இது.



சங்க காலத் தமிழ்த்தொண்டு, சங்கம்மருவியகாலத் தமிழ்வளம், சோழர் காலத் தமிழ்ப்பணி, பல்லவர் காலத் தமிழ்வளர்ச்சி, நாயக்கர் காலத் தமிழ் நலம், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத் தமிழ் என்றெல்லாம் நூற்கள் பல வெளிவந்திருக்கின்றன. தற்காலத் தமிழ்பற்றிச் சில நூற்களே வந்துள்ளன. அவற்றுள் இந்த நூல் மிகக் குறிப்பிடத்தக்க ஒன்றாகத் திகழ்கிறது.

உலகத்தமிழ்ச் சங்கத்தொடக்க விழா நாளில் வெளியிடப்பட்டுள்ள இந்நூல் மூலம் தற்காலத் தமிழக அரசு தமிழ்காத்துப் பொற்காலம் படைக்கிறது என ஆதாரங்களோடு கூறப்பட்டுள்ளது.

பெரிதும் பயனுள்ள நூல்.

—இல. இராசேந்திரன்

## ஆன்மீக அருள்வாக்கு

ஆசிரியர்: மயிலைத்தொண்டன்,
வெளியீடு: தமிழ்மணிபதிப்பகம் 107-பெரியார் பாதை (மேற்கு), சூளைமேடு, சென்னை-600094

விலை: ரூ.10 பக்கம்: 104

பொன்மொழிகள் நம் வாழ்வைப் பொன் மயமாக்கவல்லன. பெரியோர்களின் அனுபவ மொழிகள், அறிவு மொழிகள் நம் வாழ்வை வளப்படுத்த உதவுவன.

இந்நூலில் ஏராளமான அருள் வாக்குகள் உள்ளன. ஆதி சங்கரர், சங்கராச்சாரிய சுவாமிகள், பட்டினத்தார், தாயுமானவர், வள்ளலார், அரவிந்தர், கிருபானந்தவாரியார் இப்படிப் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் அறிஞர் பெருமக்களுடைய ஆன்மீக வாசகங்கள் நம் மனத்தைக் கவர்வன.

## வீட்டுக்கு ஒரு மருந்தகம்

தொகுப்பாசிரியர்:எம்வி.சுந்தரம்

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் அவுஸ் பிரைவேட் லிமிடெட், 41—பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-600 098.

விலை: ரூ. 9. பக்கம்: 126

வெள்ளம் வருவதற்கு முன் அணை போடுவது போல, நோய் வருமுன் காத்துக்கொள்வதுதான் சாலச் சிறந்தது. சித்தர் மருத்துவ முறைகளைக் கூறும் இந்நூலில், வீட்டிலேயே ஒரு மருந்தகத்தை உருவாக்கி விடலாம் என்றும் யோசனை கூறுகிறது.

இந்நூலில் நோய்களின் தன்மை, நோய்க்கான அறிகுறி, நோய்களைப் போக்க மருந்துகளைத் தயாரிக்கும் முறை முதலான விவரங்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. மேலும் தகாத உணவினால் வரும் நோய்கள், கைவைத்தியம் — செய்வைத்தியம் அனுபவ மருந்துகள் ஆகிய செய்திகளும், சித்தர் மருத்துவ அரும்பொருள் பதவுரையும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நோயற்ற வாழ்வுக்கு இந்நூல் பெரிதும் உதவும் என நம்பலாம்.

## அறிஞர் அண்ணா சொன்ன குட்டிக் கதைகள் 100

தொகுத்தவர்: பொன். கு. கோதண்டபாணி

வெளியீடு: அபிராமி பப்ளிகேஷன்ஸ் 307, லிங்கி செட்டி தெரு, சென்னை—600 001,

விலை: ரூ. 7 பக்கம்: 86

பேரறிஞர் அண்ணா அவர்கள் பேச்சுக்கலைக்கே முன்னுதாரணமாக விளங்கினார்கள். தம்முடைய அரிய சொற்பொழிவின் இடையிடையே கருத்துக்களை விளக்கிட சொன்ன குட்டிக்கதைகள் ஏராளம். அவை சிரிப்புக்கும் சிந்தனைக்கும் விருந்தூட்டுபவை. கேட்போரை மயக்குபவை; அறிவுத் தெளிவு உண்டாக்குபவை. அத்தகைய அற்புதமான குட்டிக்கதைகளையெல்லாம் அழகுறத் தொகுத்துத் தந்துள்ளார் பொன். கு. கோதண்டபாணி அவர்கள்.

படிக்கப் படிக்கத் திகட்டாத இந்தக் கதைகளை அனைவரும் படித்து மகிழலாம்.

பி. வி. கிரி




# புதிய மஞ்சள் ரகம்

மஞ்சள் நமது நாட்டில் மிகவும் விரும்பி உபயோகப்படுத்தப் படுகின்ற ஒரு வியாபாரப் பயிர். இது இந்தியாவில் ஒரு இலட்சத்து ஐயாயிரம் எக்டரில் பயிராகி, 2,35,000 டன் கிழங்குகள் மகசூல் பெறப்படுகிறது. இதில் சுமார் 10 சதவீதம் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு சுமார் 5½ கோடி ரூபாய் மதிப்புள்ள அந்நியச் செலாவணியை ஈட்டுகிறது.

தமிழகத்தில் மஞ்சள் 16,000 எக்டரில் சாகுபடியாகிறது. ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 60,000 டன் கிழங்குகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஈரோடு நாட்டு இரகம் மற்றும் கோ. 1 ஆகிய இரு இரகங்கள் தமிழகத்தில் பரவலாகப் பயிரிடப்படுகின்றன.

இந்த இரகங்களைவிடக் கூடுதல் மகசூல் தரும் ஒரு இரகத்தை உற்பத்தி செய்வதற்காக ஈரோடு நாட்டு இரகத்தை எக்ஸ்ரே கதிர்கள் மூலம் சடுதிமாற்ற முறை கையளாப்பட்டுபி.எஸ்.5378-3-1 என்ற இனம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இந்த இனம் ஆறாண்டுக் காலமாகப் பவானிசாகர் வேளாண் ஆராய்ச்சி நிலையத்திலும், ஓராண்டுக் காலம் கொடுமுடி மஞ்சள் ஆராய்ச்சி நிலையத்திலும ஆய்வு செய்ததில் பி.எஸ்.ஆர்.1 என்ற புதிய இரகம் உருப்பெற்றது. இந்த இரகம் 30,685 கிலோ, எக்டருக்குப் பச்சை மஞ்சள் மகசூல் தரும் திறனுடையது. இது கோ.1 என்ற இரகத்தைவிட 24.1 விழுக்காடும் ஈரோடு நாட்டு இரகத்தைவிட 51.7 விழுக்காடும் கூடுதல் மகசூல் கொடுத்துள்ளது.

இந்த இரகத்தைத் தமிழ்நாட்டிலுள்ள பத்து வெவ்வேறு ஆராய்ச்சி நிலையங்களில் பயிரிடப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. மற்ற இரண்டு இரகங்களை விட பி.எஸ்.ஆர்.1, 18.1 முதல் 30.9 விழுக்காடு கூடுதல் பச்சை மஞ்சள் மகசூல் தந்துள்ளது.

விவசாயிகள் பண்ணையில் இம்மூன்று இரகங்களும் பரிசோதனை செய்து பார்க்கப்பட்டன. பி. எஸ்.ஆர்.1 என்ற புதிய இரகம் கோ. 1 இரகத்தைவிட 11.1 விழுக்காடு அதிக மகசூல் தந்துள்ளது. அனுசரணை ஆராய்ச்சியிலும் இந்தப் புதிய இரகம் மற்ற இரு இரகங்களைவிடக் கூடுதல் மகசூல் கொடுத்துள்ளது.

மற்றும், இந்த இரகம் அதிக அளவு சிறிய விரலிகளும், அதிக ''குர்குமின்'' என்ற பொருளும் (4.2 விழுக்காடு), அதிக அளவு பதப்படுத்தும் திறனும் (20.0 விழுக்காடு) கொண்டது. பி.எஸ். ஆர்.1 இரகம் 6.14 டன்-எக்டர் பதப்படுத்திய மஞ்சள் மகசூல் கொடுப்பது ஓர் சிறப்பு அம்சமாகும்.

### சிறப்பியல்புகள்

அ) இதன் வயது 280 நாட்கள். இது கோ.1 இரகத்தைவிட இரண்டிலிருந்து மூன்று வாரங்களுக்கு முன்பு அறுவடைக்குத் தயாராகிறது.

ஆ) அதிகப் பச்சை மற்றும் பதப்படுத்திய மஞ்சள் மகசூல் தரவல்லது. (இ) அதிக அளவு ''குர்குமின்'' கொண்டது. (இ) அதிக அளவு பதப்படுத்தும் திறன் கொண்டது.

### சாகுபடிக் குறிப்புகள்

பருவம்: மே-ஜுன் மாதங்கள்.

விதையளவு: ஒரு எக்டருக்கு கிழங்கு 1750 முதல் 2000 கிலோ வரை. விரலி 1250 முதல் 1500 கிலோ வரை

### விதை நேர்த்தி

விதைப்பதற்கு முன், விதை மஞ்சளைக் கரையும் எமிசான் மருந்து கரைசலில் (1 லிட்டர் நீரில் 1 கிராம்) 30 நிமிடங்கள் வரை ஊறவைப்பதன் மூலம் கிழங்கு அழுகல் நோயிலிருந்து பாதுகாக்கலாம். தொடர்ந்து மற்றொரு 15 நிமிடங்கள் 0.05 விழுக்காடு ஜோலோன் அல்லது நுவக்கரான் மருந்து கரைசலில் ஊறவைப்பதன் மூலம் செதில் பூச்சித் தாக்குதலிலிருந்து பாதுகாக்கலாம்.

# தரமான சிமெண்ட்டுக்கு ஒரு துலக்கப்பட்டி

தமிழ்நாட்டில் சிமெண்ட் உற்பத்தியில் ஆரம்பகாலம் தொட்டு தனக்கென ஒரு தனி இடத்தைத் தொடர்ந்து வகித்து வருகிறது காமராஜர் மாவட்டத்தில் உள்ள துலுக்கப்பட்டி சிமெண்ட்ஸ் நிறுவனம்.

இத்தொழிலின் சமீபத்திய கண்டுபிடிப்புதான் ''காம்பிடான் மில்'' எனப்படும் புதிய இணைப்பு.

இப்புதிய இராட்சச இயந்திரம் முற்றிலும் கம்ப்யூட்டர் முறையில் இயங்கவல்லது. இந்த இயந்திரம் அமைக்கப்பட்ட பிறகு, இதன்மூலம்,

சிமெண்டின் தரம் வேறுபாடு ஏற்படாமல் ஒரே சீராகஇருக்கும்.

எப்போதும் இல்லாத அளவில் புதியபலம் இத்தகைய சிமெண்டில் உருவாகிறது.

பதமான குறைந்த வெப்பத்தில் சிமெண்ட் இருப்பதால் சிமெண்ட், கட்டி ஆவதில்லை.

மிக முக்கியமாக உற்பத்தியில் ஏற்படும் மின்சாரச் செலவு குறைகிறது.

இத்தகைய நற்பயனை அளிக்கும் இந்த கம்பிடான் மில் தென் இந்தியாவிலேயே முதன் முறையாக இங்குதான் நிறுவப்பட்டுள்ளது. இந்த ராட்சச இயந்திரத்தை நிறுவுவதற்கு டென்மார்க்கிலிருந்து எப். எல். ஸ்மித் கம்பெனியைச் சேர்ந்த தொழில் வல்லுநர் குழு வருகை தந்து அமைப்புப் பணியில் ஈடுபட்டது. 6.12.85 அன்று துவக்கி வைக்கப்பட்ட இப்புதிய இயந்திரத்தின் மதிப்பு ரூபாய் 5 கோடியே 40 இலட்சம் ஆகும்.

இங்குள்ள இந்தத் தொழிற்சாலையின் உற்பத்தி ஆண்டொன்றுக்கு 4.2 இலட்சம் டன் ஆகும். தென் ஆசியாவிலேயே மிகவும் நவீனமயமாக்கப்பட்ட ஆலைகளில் ஒன்றாக இது திகழ்கிறது. உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் கம்ப்யூட்டர்களின் கட்டளைப்படி உற்பத்திப் பணி மேற் கொள்ளப்படுகிறது. கணிசமான உத்திகளைக் கையாளுவதின் மூலம் எரிசக்தி மிகவும் மிச்சம் செய்யப்படுகிறது.

வெளிநாட்டார் வருகைதந்து இதன் அமைப்பையும், செயல் திறனையும் சுற்றுப்புறச் சூழலினால் சுகாதாரம் பாதிக்கப்படாமல் பேணிக்காப்பதையும் கண்டு வியந்து பாராட்டுகின்றனர்.

சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பேணிக்காத்திட 'எலக்ட்ரோஸ்டாடிக் பிரிசிபிடேட்டர்' என்ற கருவியை நிறுவி, தொழிற்சாலையையும், அதன் சுற்றுப்புறப் பகுதிகளையும் தூசுபடியாமலும், மாசு படியாமலும் பாதுகாத்து வருகிறார்கள்.

மூலப் பொருட்கள் மற்றும் உற்பத்தியின் தரத்தை உடனுக்குடன் கண்காணிக்கும் வகையில் எக்ஸ்ரே அனலைசர் என்ற கருவி தென் இந்தியாவிலேயே பல இலட்ச ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தில் தொழிலாளர்கள் அனைவருக்கும் வீட்டுவசதி, பள்ளி, மருத்துவ வசதி, விளையாட்டு வசதி, பொழுதுபோக்கு வசதி, இறையருள்ஏற்பாடு, ஆயுள் காப்பீட்டு வசதி போன்றவற்றை உழைக்கும் வர்க்கத்திற்கு இம் முன்னேற்றத்தின் அடித்தள சர்த்தாக்களுக்கு வழங்கிப் பெருமை பெற்றுள்ளது.

**ரெ.இராவணன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காமராஜர் மாவட்டம்**

**நிலம் தயாரித்தல்**

மழைக்குப்பிறகு நிலத்தை 4 அல்லது 5 முறை நன்றாகக் கட்டிகளில்லாமல் உழவு செய்து பதப்படுத்தவேண்டும். கடைசி உழவின்போது எக்டருக்கு 25 டன் என்ற அளவில் தொழு உரம் இடவேண்டும்.

**இடைவெளி**

பார்களுக்கு இடையே 50செ.மீ. இடைவெளி இருக்குமாறும் 15 செ.மீ. இடைவெளியில் விதை மஞ்சளை நடவேண்டும்.

**உரமும், உரமிடுதலும்**

எக்டருக்கு தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்கள் முறையே 120 கிலோ, 60 கிலோ, 60கிலோ என்ற விகிதத்தில் இடவேண்டும். 24 கிலோ தழைச்சத்துடன் மணி மற்றும் சாம்பல் சத்து முழுவதும் நடவின்போது இடவேண்டும். மீதமுள்ள 96 கிலோ தழைச்சத்தினை ஒவ்வொரு முறையும் 24 கிலோ வீதம் நடவு செய்த 30, 60,90 மற்றும் 120 ஆம் நாட்களில் இடவேண்டும். தழைச் சத்திற்காக யூரியாவை உபயோகிப்பது சாலச் சிறந்தது.

**பின்செய் நேர்த்தி**

30 நாட்கள் இடைவெளியில் 3 அல்லது 4 முறை, களை எடுப்பது அவசியம். நட்ட 60 மற்றும் 120 வது நாள் மேலுரம் இட்ட பிறகும் மண் அணைக்க வேண்டும்.

**நீர்ப்பாசனம்**

மண்ணின் தன்மையைப் பொறுத்து 7லிருந்து 9 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும்.

**ஊடுபயிர்**

சிறிய வெங்காயத்தை ஊடுபயிராக 10 செ.மீ. இடைவெளியில் பார்களில் பயிர் செய்யலாம்.

**அறுவடை**

சுமார் 9½ மாதங்களில் மஞ்சள் அறுவடைக்குத் தயாராகும். கிழங்குகளைக் கவனமாகப் பெயர்த்தெடுத்து தாய் மஞ்சளையும் (குண்டு) விரலிகளையும் தனித் தனியே பிரித்து எடுக்கவேண்டும். விதை மஞ்சளைப் பொறுக்கி எடுத்தபின் மற்ற மஞ்சளை 0.1 சத சோடியம்-பை-கார்பனேட் கரைசலில் வேகவைத்துப் பதப்படுத்தவேண்டும்.

**பயிர்ப் பாதுகாப்பு**

பேன் மற்றும் தண்டு துளைக்கும் பூச்சியினைக் கட்டுப்படுத்த ரோகார் அல்லது மெட்டாசிஸ்டாக்ஸ் அல்லது நுவான் மருந்தினை (1 லிட்டர் -1மில்லி வீதம்) தெளிக்கலாம்.

இலைப்புள்ளி நோயிலிருந்து காக்க டைத்தேன் எம்.45 மருந்தினை (1 லிட்டருக்கு 2.5 மிலி) தெளிக்கலாம்.

அழுகல் நோயைக் கட்டுப்படுத்த ஒரு விழுக்காடு போர்டாக்ஸ் மிக்சர் அல்லது 0,25 விழுக்காடு காப்பர் ஆக்ஸிகுளோரைடு கரைசலை ஊற்றவும்.

மூன்றாவது மற்றும் ஐந்தாவது மாதப் பருவத்தில் கார்போபியூரானை 33 கிலோ எக்டர் என்ற விகிதத்தில் தெளித்து, நூற்புழுவைக் கட்டுப்படுத்தலாம்.

தகவல்:

**பி. வி. பாலசண்முகம்,**
**உதவிப்பேராசிரியர்,**
**தோட்டக்கலை,**
**விவசாய ஆராய்ச்சி நிலையம்,**
**பவானிசாகர்.**









# உங்களுக்குத் தெரியுமா?



பசு ஒரு நாளைக்கு 100-130 லிட்டர் தண்ணீர் குடிக்கும். இதில் 80-100 லிட்டர் நீர், தீவனத்தை அசை போடும்போது ஊறும் எச்சிலுக்குத் தேவைப்படுகிறது.

இந்தியாவின் மொத்தக் கடற்கரை நீளம் 6000 கி.மீ. இதில் 10 பெரிய துறைமுகங்களும், 160 சிறிய துறைமுகங்களும் பரவலாக அமைந்துள்ளன.



பால்

ஐரோப்பாவில் உள்ள டான்யூப் (Danube) என்னும் நதி, ஜெர்மனி, ஹங்கேரி, ஆஸ்திரியா, செக்கோஸ்லோவாக்கியா, யூகோஸ்லேவியா, பல்கேரியா, ருமேனியா ஆகிய 7 நாடுகளின் வழியே பாய்கிறது.



காய்க்காத மரம் ஏதேனும் ஒன்றைச் சுற்றித்தான் மிளகுக் கொடிகள் படரும். வேர் இல்லாத தாவரம் இலுப்பை. சிவப்பு நிறத்தை மிக நீண்ட நேரம் உற்றுப் பார்த்து விட்டு வெள்ளை நிறத்தைப் பார்த்தால் பச்சையாகத் தோன்றும். அதுபோல நீல நிறத்தை நீண்ட நேரம் உற்றுப் பார்த்து விட்டு வெள்ளை நிறத்தைப் பார்த்தால் மஞ்சளாகத் தோன்றும்.



சைவ உணவு உண்பவர்கள் இரும்புச் சத்தைப்பெற உயிர்ச்சத்து -சி அதிகமுள்ள காய்கறிகளை உண்ண வேண்டும்.

முதன் முதலில் 1840ஆம் ஆண்டு மே மாதம் 6ந் தேதி அஞ்சல் தலை புழக்கத்திற்கு வந்தது. உலகில் முதல் தபால் தலையை வெளியிட்ட பெருமை இங்கிலாந்தைச்சேரும்.

ஒரு வாழைப் பழம் 20 திராட்சைப் பழங்களுக்கும், 4 பேரீச்சம் பழங்களுக்கும், 2 ஆரஞ்சுப் பழங்களுக்கும் சமம்.

பாலை நன்கு வெளிச்சம் படும் இடத்தில் வைக்கக்கூடாது. காரணம் வெளிச்சம் பட்டால், பாலில் உள்ள உயிர்ச்சத்து-பி2 மறைந்து விடும்.

நேபாளத்தில் பார்லிமெண்டை 'பஞ்சாயத்' என்றழைக்கிறார்கள். இரான், மலேசியா ஆகிய நாடுகள் பார்லிமெண்டை 'மஜ்லிஸ்' என்கிறார்கள்.

முதலாவது இந்திய ரூபாய் நாணயம் 1757ஆம் ஆண்டு ஆகஸ்டு 27ஆம் தேதி கல்கத்தாவில் தயாரிக்கப்பட்டது.

தட்டச்சு இயந்திரங்களிலே சீன எழுத்துக்களைக் கொண்ட இயந்திரங்கள்தான் வேகம் குறைந்தவை. இந்த இயந்திரங்களில் அதிகபட்சமாக நிமிடத்திற்கு 11 சொற்களை மட்டுமே தட்டச்சு செய்ய இயலும்.

தொகுப்பு:
ஆர். எஸ். சுப்பிரமணியன்



## நெறி முறை அறி!

வடகரைச் செல்வன்

அரிதான உண்மையினை உரைக்க வேண்டும்
அன்பாக உயிர்களிடம் பழக வேண்டும்
நெறிமுறை வழுவாது வாழவேண்டும்
நீதிவழி நேர்மையுடன் நடக்கவேண்டும்!

இழிசெயல்கள் எந்நாளும் ஒழிக்க வேண்டும்
இரப்போர்க்கு இரக்கமுடன் ஈயவேண்டும்
பழிபாவச் செயலின்றி வாழவேண்டும்
பஞ்சமா பாதகத்திற்(கு) அஞ்சவேண்டும்!

விழிமுழுதும் கருணை யினைக் காட்டவேண்டும்
வீழ்ந்தாரைக் கரங்கொடுத்துக் காக்கவேண்டும்
எளியோருக்கு இயல்உதவி புரியவேண்டும்
எந்நாளும் நன்மைகளே செய்ய வேண்டும்!

மானமே பெரிதாக மதிக்கவேண்டும்
மன்னுயிரைத் தன்னுயிராய் நினைக்கவேண்டும்
ஈனமே இல்லாத இதயம்வேண்டும்
ஈடில்லா நாட்டின்புகழ் காக்கவேண்டும்!



# புதுக்கோட்டை மாவட்டத்தில் வளரும் தோட்டக் கலை

தமிழ்நாட்டில் சுமார் 2,000 எக்டேர் நிலப்பகுதியில் மா, முந்திரி, சப்போட்டா, கொய்யா, பலா போன்ற பழவகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

தமிழ்நாட்டில் மிகவும் பின்தங்கிய மாவட்டங்களுள் புதுக்கோட்டையும் ஒன்றாகும். இம்மாவட்டத்தில் உள்ள விவசாயப் பெருமக்கள் பொருளாதாரத்திலும், சமூக நிலையிலும் மற்ற மாவட்ட விவசாயிகளைவிட மிகவும் நலிவடைந்துள்ளனர். எனவே இம்மாவட்டத்தில் உள்ள விவசாயிகளை அவர்களின் வாழ்க்கைத் தரத்தில் மேம்படுத்தும் பொருட்டும், அவர்களுக்குத் தரம்வாய்ந்த விதைகள் மற்றும் செடிகள் ஆகியவற்றைக் குறைந்த விலையில் கிடைக்கச் செய்வதற்கும் தோட்டக் கலைத்துறை இம்மாவட்டத்தில் பல பண்ணைகளையும், திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பயிரிடுவதற்கு ஏற்ற சுமார் 30,000 ஏக்கர் நிலங்கள் தரிசாக உள்ளன. இந்த நிலங்கள் பெரும்பாலும் செம்புறை மண் வகையைச் சார்ந்தவை. இவற்றில் நீண்ட காலம் நிலைத்து நின்று பயன்தரக்கூடிய பழமரங்களை நட்டால் விவசாயப் பெருமக்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்புக் கிடைப்பதுடன் குறைந்த செலவில் நிறைந்த உயர் வருவமானம் கிடைக்கவும் வழியுள்ளது. மேலும் இம்மாவட்டம் ஆண்டிற்குச் சராசரியாக சுமார் 970 மி.மீ. மழையைப் பெறுகிறது. இந்த மழை மா,

சி.பி. இராமநாதன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
புதுக்கோட்டை மாவட்டம்.

முந்திரி போன்ற பழமரங்கள் பயிரிடுவதற்கு ஏற்றதாக உள்ளது. இந்த சாத்தியக்கூறுகளைப் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளுக்கு உணர்த்தவும், அவர்களுக்கு உதவிடும் தமிழ்நாடு அரசின் ''தோட்டக்கலைத்துறை'' இம்மாவட்டத்தில் 1985-86ஆம் ஆண்டு முதல் சில மாதிரிப் பண்ணைகளையும், விரிவாக்கத் திட்டங்களையும் ரூபாய் 17.2 இலட்சம் செலவில் செயல்படுத்தித் தனது பணியை ஆற்றி வருகிறது.

### வல்லத்திரைக்கோட்டை மகாத்மா காந்தி ஊரகப் பழப்பண்ணை

இப்பண்ணை 1300 ஏக்கர் நிலப்பரப்பில் மா, கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை, நெல்லி போன்ற பயிர்களின் சிறந்த ரகங்கள் பெரும்பரப்பில் பயிரிடப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்




திற்குத் தேவையான பழக் கன்றுகள், மற்ற இதர பயன்தரும் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப் பட்டு வருகின்றன. மா மூலம் முதன்முதலாக ரூ. 77,000 வருமானம் கிட்டியுள்ளது. 1990ஆம் ஆண்டு முதல் 30,000 மரங்களின்



மூலம் ரூ. 5 இலட்சம் நிகர வருமானம் உயருமென எதிர் பார்க்கப்படுகிறது. இது தவிர, 150 ஏக்கரில் முந்திரி, 50 ஏக்கரில் கொய்யா, 25 ஏக்கரில் சப்போட்டா, 25 ஏக்கரில் எலுமிச்சை, 50 ஏக்கரில் நர்சரித் தோட்டங்கள் இப்பண்ணையில் உருவாக்கப்பட்டுள்ளன. ஆண்டு தோறும் ரூபாய் 5 இலட்சம் இப் பண்ணைப் பெருக்கத்திற்கெனத் தமிழ்நாடு அரசினால் செலவு செய்யப்படுகிறது. 1985-86ஆம் ஆண்டு ஒரு இலட்சம் ரூபாய் வருமானக் குறியீட்டை மிஞ்சி ரூபாய் 2.2 இலட்சம் வருமானம் இப் பண்ணையின் மூலம் கிடைத் துள்ளது.

**வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம்**

புதுக்கோட்டைமாவட்டத்தில் வறட்சிக்கு இலக்கான பகுதி களான புதுக்கோட்டை, கறம்பக் குடி, திருவரங்குளம், கந்தர்வக் கோட்டை போன்ற ஊராட்சி ஒன்றியங்களில் காய்கறி விதை கள், பழக்கன்றுகள் மற்றும் அவற் றுக்குத் தேவையான இடுபொருட் களை 50 சதவிகித மான்ய விலை யில் விவசாயிகளுக்கு வழங்கி அதன் மூலம் சுமார் 2500 ஏக்கர் பரப்பில் பழப்பயிர்கள் மற்றும் காய்கறிகள் சாகுபடி செய்யப்பட் டுள்ளன. 1985-86ஆம் ஆண்டில் முந்திரி, பலா, மா ஆகியவற்றில் 200 எக்டரில் செயல் விளக்கங் களும், 10,000 காற்றுத் தடை கன்றுகள் விநியோகமும் செய்யப் பட்டுள்ளன.

**நாட்டுமங்கலம் அரசு தோட்டக் கலைப் பண்ணை**

புதுக்கோட்டை மாவட்டத் தில் அதிகமாகப் பயிரிடப்படும் முந்திரிப் பயிரில் புதிய சாகுபடி முறைகளைக் கையாள்வதற்கு விவசாயிகளுக்கு உணர்த்தும் பொருட்டு இப்பண்ணையில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் முந்திரி பராமரிக்கப்பட்டு மாதிரிப் பண் ணையாக விளங்கி வருகிறது. மேலும் இப்பண்ணையில் பட்டை ஒட்டுக்கட்டும் திட்டம் அமலாக் கப்பட்டு முந்திரியின் விதையில் லாப் பெருக்கத்தின் மூலம் தரம் வாய்ந்த முந்திரிக் கன்றுகள் விநி யோகம் செய்யப்படுகின்றன.

மேற்கண்ட திட்டங்களைத் தவிர 1985-86ஆம் ஆண்டில் இம் மாவட்டத்தில் 409 பயறு வகை, காய்கறிகளுக்கான மினிகிட்டு களும், ரூபாய் 15,000 பெறுமான முளை வீரீய ஒட்டுக் காய்கறி விதைகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 65 ஏக்கர் முந்திரிப் பண் ணையில் பயிர்ப் பாதுகாப்பும், 10 ஏக்கரில் நிரூபணத் தளைகளும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் குடுமியான்மலையில் 300 ஏக்கர் பரப்பளவில் மாதிரிபழப்பண்ணை அமைக்கப்பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சியும், விளக்கங்களும் அளிக் கப்பட்டு வருகின்றன.

## நீண்ட ஆயுளின் ரகசியம்!

சோவியத் நாட்டில் அஜர்பாய்ஜானில் 100 வயதுக்கு மேல் ஆனவர்கள், 14,200 பேர் இருப்பதாக, அண்மையில் எடுக்கப் பட்ட மக்கள் தொகைப் புள்ளி விவரங் களிலிருந்து தெரிகிறது. அவர்களுக்குள் மிகவும் முதியவர் குல்பதான் அல்லாவெர் தியேவா. அவருக்கு இப்பொழுது வயது 150.

இன்னொருவர் 97 வயதான மாமெத் அலியேவ்.

அலியேவுக்கு 5 மகன்கள், 12 பேரன், பேத்திகள், 14 கொள்ளுப் பேரன், பேத்திகள், 3 எள்ளுப் பேரன்-பேத்திகள் ஆகியோர் இருக்கின்றனர். அவர் மூக்குக் கண்ணாடி இல்லாமல் படிக்கிறார்.

மாமெத், 65 வயதில் ஓய்வு பெற்றார். ஆனால் அதோடு அவர் வீட்டில் தங்கி விடாமல், ஒரு தபால் நிலையத்தில் வேலைக்கு அமர்ந்தார். இப்பொழுது கூட அவர் சோம்பலாக இருப்பதை அவர் விரும்பவில்லை. கடைக்கும் மார்க்கெட் டுக்கும் போய்ப் பொருள்கள் வாங்கி வருவது, தோட்ட வேலை முதலியவற்றை அவர் செய்கிறார்.

கீரைகள், பழம், புளித்த மோர் முத லியவைதான் பெரும்பாலும் அவர் உணவு. அதிகக் கொழுப்பு இல்லாத இறைச்சிப் பண்டங்களையும் அவர் சாப்பிடுகிறார். இரவில் ஒரு மணி, அல்லது இரண்டு மணி நேரம் நடக்கிறார்.

நீண்ட நாள் வாழ்வதற்கு உழைப்பு அவசியம் என்பது முதுமை - இயல் ஆராய்ச்சிகளிலிருந்து தெரிகிறது.

வாழ்க்கையை ரசிப்பதும், அடுத்த நாளை மகிழ்ச்சியுடன் எதிர்பார்ப்பதும் தான் நீண்ட ஆயுளின் ரகசியம்.




## படமும் செய்தியும்



தமிழ்நாட்டில் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு விட்டு, டில்லிக்குத் திரும்பும் குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், சென்னை மீனம்பாக்க விமான நிலையத்தில் வழியனுப்பி வைத்தார். (7-6-86)

மேற்கு வங்க செய்தித் துறையின் சார்பில் கலைவாணர் அரங்கில் 29-5-86 அன்று கவியரசர் தாகூரின் 125-வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பெற்றது. மைய அரசின் முன்னாள் தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு பி. கோபால ரெட்டி அவர்களின் தலைமையில் மாண்புமிகு தமிழக கல்வி அமைச்சர் திரு சி. அரங்கநாயகம் அவர்கள் விழாவைத் தொடக்கி வைத்தார்.



# ஞானக்கீரை

தூதுவளைக்கீரை எங்கும் பயிராகும் ஒரு கொடிவகையைச் சேர்ந்தது. இது அற்புத மருந்தாகப் பயன்படுகிறது. தமிழ் இலக்கியத்தில் தூதுவளையைத் தூதுணம் என்று கூறுவர். இக்கீரையின் வேறு பெயர்கள் தூதுளை, தூதுணம், அலர்க்கம், கங்கவல்லி ஆகியவை.

இக்கொடி வறட்சியான பகுதிகளில் வேலிகளில், தானே வளரும். இதன் இலைகள் கத்திரிச் செடியின் இலை போன்று இருக்கும். இந்த இலைகள் சிறியதாகவும், கனமானதாகவும் இருக்கும். இதில் கொக்கி போன்ற முட்கள் நிறைந்திருக்கும். ஆகையால் இதைப் பறிப்பது மிகக் கடினம்.

இதன் பூ கத்திரிப்பூ நிறமுடையது. பார்ப்பதற்குப் பூ அழகாகத் தோன்றும். இதன் காய் கண்டங்கத்திரியின் காய்போல இருக்கும். காய் பச்சையாக இருக்கும்; பழுத்தால் சிவப்பாக மாறிவிடும்.

இத் தூதுவளைக்கீரை மருந்துக்குப் பயன்படுவதுடன், உணவுடன் சேர்த்து உண்பதற்கும் ஏற்றது. இக்கீரையை நெய்யில் வதக்கி துவையல், கடையல், குழம்பு போன்ற பதார்த்தங்களாகச் செய்து சோற்றுடன் உண்ணலாம்.

இக்கீரையின் பூ, காய், பழம், வேர் ஆகியவைகள் பொதுவாக உடலுக்கு வெப்பத்தைக் கொடுக்கக் கூடியவைகள். இக்காரணத்தால் உடலில் சேரும் கோழையை அகற்றும் ஆற்றல் இதற்குண்டு. அத்துடன் உடலுக்கு உறுதியைத் தரும்.

இக்கீரையை பசுவெண்ணெய் யுடன் சேர்த்துக் காய்ச்சி எலும்புருக்கி நோய் உடையவர்களுக்குக் கொடுத்தால் நல்ல பலன் அளிக்கும். மேலும் கபக்கட்டு விலகும். புத்தித் தெளிவு உண்டாகும். அறிவை வளர்க்கும். இக்காரணங் கொண்டே இக்கீரையை




ஞானிகள் 'ஞானக்கீரை' என்று கூறுவர்.

இக்கீரையால் செய்யப்படும் துவையல். பசியை உண்டாக்கும். வாய்வைக் கண்டிக்கும். தினசரி உணவில் இக்கீரையைச் சேர்த்துக் கொண்டால் விஷசுரத்தால் ஏற்படும் காது மந்தம், நமைச்சல் உடம்பு எரிச்சல், ஆஸ்துமா நோய் ஆகியவை நீங்கும். நிமோனியா, டைபாய்டு, கபவாதஜுரம், சன்னி வாதசுரம் போன்ற நோய்களுக்கு இக்கீரை அருமருந்தாகிறது.

நாட்டில் ஒவ்வொரு பகுதியிலும் வாழும் ஆயிரமாயிரம் பாமர மக்களே இந்தியாவின் உண்மைச் சக்தியாக விளங்குகின்றனர். நாம் எவ்வளவுதான் ஆர்வம் காட்டினாலும், எத்தனையோ காலமாக முற்றி முதிர்ந்துள்ள பிரச்னைகளுக்குத் திடுதிப்பென்று தீர்வுகாண முடியாது. கடினமாக உழைத்துக் கூடிப் பேசி ஆலோசித்து பாமர மக்களும் எல்லா வகுப்பினரும் மனம் உவக்கச் செயல்பட்டால் தான் எதிர்காலம் சிறக்க அடிகோல முடியும்.

—திருமதி இந்திராகாந்தி

குளோரோமைசின், ஆண்டிபையாடிக்ஸ் போல மிக விரைவாகவும், வேகமாகவும், அபாயம் இல்லாமலும் நோயாளியைக் காக்கவல்லது இக்கீரை.

தூதுளைக்கீரையில்உள்ள சத்துப் பொருள்கள்

| | |
|---|---|
| நீர் | 84.7 |
| புரதச்சத்து | 3.9 |
| கொழுப்புச்சத்து | 0.7 |
| தாதுப்புக்கள் | 0.38 |
| நார்ப்பாகம் | 2.3 |
| மாவுச்சத்துக்கள் | 4.6 |

நூறு கிராம் கீரையில் 334 மில்லி கிராம் சுண்ணாம்புச் சத்தும், 52 .மில்லிகிராம் மணிச்சத்தும், 5 மில்லி கிராம் இரும்புச் சத்தும் இருக்கின்றன.

எண்ணெய் தேய்த்துக் குளித்த அன்று இக்கீரையை உணவுடன் சேர்த்துக் கொள்வது நல்லது.

தூதுளைப் பூவை உணவாக உண்டால் உடல்பலம் பெறும். முக வசீகரமும் அழகும் பெறலாம் தேரையர் என்ற சித்தர் இப் பூவைப் பற்றிப் பேசும்போது முற்றும் தளர்ந்த கிழவனையும் வாலிபனாக்கும் சக்தி பெற்றது என்று கூறியுள்ளார். மேலும், இப்பூ சித்த மருத்துவத்தில் அமிர்த சஞ்சீவி லேகியத்திற்குத் துணைப் பொருளாகத் தாதுபுஷ்டிக்குச் சேர்க்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

தூதுளங் காயை நெய்யிட்டு வதக்கி குழம்புகளில் சேர்த்து உண்பார்கள். இக்கீரையின் வேரும் கொடியும் சில நோய்களைப் போக்குகின்றன.

இக்கீரை 'அமிர்த சஞ்சீவியாக் இருப்பதால் ஒவ்வொருநாளும் சேர்த்துக் கொள்ளாவிட்டாலும் வாரம் ஒருமுறையாவது சேர்த்துக் கொள்வது சிறப்புடையதாகும்.

நன்றி : 'செய்தி மடல்'





# இதிகாசக் கவிஞர்

—மாண்புமிகு முதல்வர்
டாக்டர் எம்.ஜி.ஆர்.

மற்றவர்கள் கவிதை எழுதினார்கள். கவியரசு கவிதையாகவே வாழ்ந்தார். கவிஞர் என்றால் அது கண்ணதாசன் ஒருவரைத்தான் குறிக்கும் என்கிற அளவிற்கு அவருக்குப் புகழ் சேர்ந்தது.

பாரதி—பாரதிதாசனுக்குப் பிறகு தமிழுக்கு அவர்தான் என்பது நிலைமை! அவர் காலத்தில் வாழ்ந்தது தமிழர்களாகிய நமக்குப் பெருமை!

பல கவிஞர்கள் வாழ்க்கைப் பயணத்தை முடித்த பிறகே வாழ்த்தப்பட்டார்கள். கவியரசு கண்ணதாசன் வாழ்ந்தபோதே வரலாறாகி விட்டார்! மரணத்திற்குப் பிறகு அவருக்குச் சூட்டப்படப்போகிற கீர்த்திக் கிரீடத்தை வாழ்ந்தபோதே பார்க்கக் கொடுத்து வைத்த கவிஞர்களில் அவரே தலையானவர்.

மற்றவர்கள் சரித்திரம் படித்தவர்கள். கவிஞர் சரித்திரமே படைத்தார். பள்ளியிறுதி பார்க்காத அவர், பழந்தமிழ்ச்சாற்றைப் பருகி புதுத் தமிழ் பொழிய வாழ்ந்தார் என்பது அதிசயமாகவே இருக்கிறது.

அவர் சொன்னால் கவிதை — அவர் சொன்னதெல்லாம் கவிதை என்று வாழ்ந்தவர் அவர்.

இலக்கியம் படைக்க முடிந்தவர்களால் எளிதான கவிதைகளைப் படைக்க முடிந்ததில்லை! இந்த இலக்கிய வேலி கவியரசு காலத்திலேதான்—அவராலேதான் வீழ்த்தப்பட்டது.

'மாங்கனி' போன்ற காவியங்களை எழுதிய அவரது கரமே, கோடிக்கணக்கானவர்கள் கேட்டு மகிழ்கின்ற எளிதான, இனிமையான திரைப்படப் பாடல்களையும் எழுதியது.

திரைப்படப்பாடல்கள் தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சிக்குரிய அற்புதங்களாவதற்கு அவரே பெருங்காரணமாக இருந்தவர்.

அருவிநடை - ஆன்றபுலமை - அன்புள்ளம்- பிள்ளை மனது-உயர்ந்த சிந்தனை - உலகளாவிய பார்வை இதுதான் கவியரசு கண்ணதாசன்.

நூறு கவிஞர்கள் சேர்ந்து செய்ய வேண்டிய இலக்கியப்பணியைக் கவிஞர் அவர்கள் ஒருவரே செய்தார்.

எப்போதோ ஒருமுறை தோன்றுகின்ற இதிகாசக் கவிஞர் அவர்.

அமரத்துவம் பெற்றுவிட்ட அந்த அழியாத கவிஞனின் கலை இலக்கியத் தொண்டினை உலகமெல்லாம் போற்றச் செய்வோம்.

வாழ்க கவியரசு கண்ணதாசன்! வளர்க அவர்தம் நீடு புகழ்!!

## காலக் கணிதம்

கவிஞர் கண்ணதாசன்

கவிஞன் யானோர் காலக் கணிதன்
கருப்படு பொருளை உருப்பட வைப்போன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்!
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!
செல்வர்தங் கையிற் சிறைப்பட மாட்டேன்;
பதவி வாளுக்கும் பயப்பட மாட்டேன்!
பாசம் மிகுத்தேன்; பற்றுதல் மிகுத்தேன்;
ஆசை தருவன அனைத்தும் பற்றுவேன்!
உண்டா யின்பிறர் உண்ணத் தருவேன்
இல்லா யின்எமர் இல்லந் தட்டுவேன்!
வண்டா யெழுந்து மலர்களில் அமர்வேன்
வாய்ப்புறத் தேனை ஊர்ப்புறந் தருவேன்!
- பண்டோர் கம்பன், பாரதி, தாசன்
சொல்லா தனசில சொல்லிட முனைவேன்!
புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக் காது;
இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது;
வளமார் கவிகள் வாக்குமூ லங்கள்
இறந்த பின்னாலே எழுதுக தீர்ப்பு!
கல்லாய் மரமாய்க் காடுமே டாக
மாறா திருக்கயான் வனவிலங் கல்ல!
மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது!
நானே தொடக்கம்; நானே முடிவு!
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!



அரசுக் கவிஞர் விருது வழங்கும் விழா (9-7-1978)

# கவியரசு கண்ணதாசன் வாழ்விலே....

முன்னாள் இராமநாதபுரம் மாவட்டத்தை—இந்நாள் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள சிறுகூடல் பட்டி என்னும் சிற்றூரில் சாத்தப்பச் செட்டியார், விசாலாட்சி ஆச்சி ஆகியோரின் எட்டாவது மகனாக 24.6.1927ல் திரு கண்ணதாசன் பிறந்தார்.

பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் முத்தையா என்பதாகும். இவருடன் பிறந்த சகோதரர் இருவர்; சகோதரியர் அறுவர். புகழ்பெற்ற திரைப்படத் தயாரிப்பாளர் திரு ஏ.எல்.சீனிவாசன் இவரது உடன் பிறந்தவர் ஆவார்.

தேவகோட்டைக்கு அருகிலுள்ள அமராவதி புதூரில் உள்ள குருகுலத்தில் எட்டாம் வகுப்புவரை கல்வி பயின்றார். பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், அப்போது அந்தக் குருகுலத்தில் இவருக்கு ஆசிரியர். குருகுலத்தில் எட்டாவது வரைதான் பயின்றார் என்றாலும், தமிழ் இலக்கிய, இலக்கணங்களில் ஆர்வமும் திறமையும் இவருக்கு ஏற்பட்டன. குடும்பச் சூழ்நிலையின் காரணமாக குருகுலக் கல்வியைத் தொடர இயலாமற் போய் விட்டது.

ஏற்கெனவே எழுத்தார்வம் கொண்டவர் ஆதலின், பத்திரிகை ஆசிரியராகப் பணிபுரிய விரும்பினார். எண்ணிய வண்ணமே நடைபெற்றது. 1944ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டம் இராமச்சந்திரபுரத்திலிருந்து வெளிவந்த 'திருமகள்' பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். அப்போது கண்ணதாசன் என்ற புனை பெயரைச் சூட்டிக் கொண்டார். பின்னர் 'திரை ஒலி', 'மேதாவி' ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகப் பணிபுரிந்து, அதன் பின்னர் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸார் நடத்தி வந்த 'சண்டமாருதம்' என்னும் திரைப்பட இதழின் ஆசிரியரானார். சிறிது காலத்தில் அப்பத்திரிகை நிறுத்தப்பட்டதால், 1948ல் மாடர்ன் தியேட்டர்ஸ் கதைத்துறையில் பணிபுரியத் தொடங்கினார். 1949ஆம் ஆண்டில் ஜூபிடர் பிக்சர்ஸ் நிறுவனத்தார் தயாரித்த 'கன்னியின் காதலி' என்னும் படத்தில் முதன்முறையாகப் பாடல் எழுதினார். அவரது முதற் பாடலின் பல்லவி:

கலங்காதிரு மனமே-உன்
கனவெல்லாம் நனவாகும் ஒரு
தினமே!—

'அவள்' இவரது முதல் கவிதை. அகத்துறையைச் சேர்ந்த இந்தக் கவிதையை 1944ஆம் ஆண்டு 'திருமகள்' இதழில் எழுதினார். இவர் எழுதிய முதற்காவியம் 'மாங்கனி'.

1949ஆம் ஆண்டில் இவர், காரைக்குடியில் இருந்த பழனியப்பச் செட்டியார்-தெய்வானை ஆச்சி தம்பதியருக்குச் சுவீகார மகன் ஆனார். அப்போது முத்தையா என்னும் பெயர் நாராயணன் என மாற்றப்பட்டது.

மூன்று மனைவியரை உடைய கவிஞருக்கு 9 ஆண் மக்களும், 6 பெண் மக்களும் உள்ளனர்.

1954ஆம் ஆண்டு ஜூன் திங்களில் 'தென்றல்' என்னும் இலக்கிய வார ஏட்டைச் சொந்தமாகத் தொடங்கி நடத்தினார். தென்றல் ஏட்டில் இவர் நடத்தி வந்த 'வெண்பாப்போட்டி' தமிழ் இலக்கியப் பித்தர்களை மிகவும் ஈர்த்தது. அவ்வெண்பாப் போட்டியில் பங்குகொண்டு பயிற்சி பெற்ற பலர் இன்று புகழ்பெற்ற கவிஞர்களாக விளங்குகிறார்கள். அந்நாளில் இவர், குறிப்பிட்ட ஒரு கட்சியைச் சேர்ந்தவராக இருந்த போதிலும், இவர் நடத்திய இலக்கிய ஏடு, எல்லாச் சாராரிடமும்-எல்லாக் கட்சியினரிடமும் இவருக்கு ஆதரவை உருவாக்கியது.

அறிஞர் அண்ணாவின் கட்டளைப்படி, 1957ல் திருக்கோஷ்டியூர் சட்டமன்றத் தொகுதிக்குப் போட்டியிட்டார். ஆனால் தோல்வியுற்றார். அதன்பின்னர் தேர்தலில் நிற்கவே இல்லை.

**தமிழ்ப்பித்தன்**





''பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் முக்கிய நகரமான காரைக்குடியில், மறைந்த கவிஞர் கண்ணதாசன் நினைவாக 21 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மணிமண்டபம் கட்டப்படும்.

அதில் நூல் நிலையம், மக்கள் கூடும் அரங்கம் எல்லாம் இருக்கும்.''

[மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் 11.5.86 அன்று சட்டப் பேரவையில் தெரிவித்த தகவல்.]

'தென்றல் திரை', 'முல்லை', 'கடிதம்' ஆகிய ஏடுகளின் ஆசிரியராக இருந்ததுடன் அவற்றைச் சொந்தத்தில் நடத்தவும் செய்தார். பின்னர், 'கண்ணதாசன்' என்னும் திங்கள் ஏட்டின் ஆசிரியராக இருந்து இலக்கியப் பணியை மிக அருமையாகத் தொடர்ந்து செய்து வந்தார்.

இவரது கவிதைகள் ஏழு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. மாங்கனி, ஆட்டனத்தி, ஆதிமந்தி, கவிதாஞ்சலி, தைப்பாவை, பாண்டிமாதேவி (முற்றுப்பெறவில்லை) ஆகியவை இவரது காவியங்கள்.

இந்துமதத்தைச் சேர்ந்த இவர், மதவேற்றுமை கருதாமல், ஏசு காவியம் பாடியுள்ளார்.

ஏறக்குறைய 20க்கு மேற்பட்ட நவீனங்களையும், 20க்கு மேற்பட்ட கட்டுரை நூல்களையும் இவர் எழுதியுள்ளார். இவரது 'அர்த்தமுள்ள இந்து மதம்' இதுவரை 10 பாகம் வெளிவந்துள்ளது. இந்நூல் எண்ணற்ற வாசகர்களின் வரவேற்பைப் பெற்றது. இந்நூல் 45 நிமிடம் ஓடுகின்ற அளவுக்கு எல்.பி. இசைத் தட்டாகவும் அமைக்கப் பட்டிருக்கிறது. அதில் கவிஞரே பேசியுள்ளார்.

வணங்காமுடி, தமிழ்மன்னன், காரைமுத்துப்புலவர், பார்வதிநாதன், கமகப்பிரியா என்பவை கவிஞரின் ஏனைய புனை பெயர்கள்.

கம்பரின் செய்யுளிலும், பாரதியாரின் பாடல்களிலும் ஈடுபாடு கொண்ட கவிஞர், அன்னார் இருவரையும் தமது மானசீகக் குருநாதர்களாகக் கொண்டிருந்தார்.

நாவலைப் பொறுத்தவரை, வங்க இலக்கிய மேதை சரத் சந்திரருக்கு இவரது உள்ளத்தில் தனி இடம் உண்டு. அதன் காரணமாகவே சரத்பாபுவின் 'சந்திரநாத்' என்னும் நவீனத்தை இவர் 'மாலையிட்ட மங்கை' என்னும் பெயரில் சொந்தமாகத் திரைப்படமாக்கினார். அதற்குரிய வசனம், பாடல்களை இவரே அமைத்தார்.

இவரது 'அழகி' என்னும் கவிதை இதுவரை ஆங்கிலம், இந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது.

இவர் எழுதிய 'பாடாய் தும்பி மணவறைப் பாட்டு' என்னும் கவிதை சாகித்திய அகாடமியினால் 1958ஆம் ஆண்டு மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

சில கவிதைகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு AU REVOIR என்னும் தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளன.

இவர் எழுதிய குட்டிக் கதைகள் கன்னடத்திலும், புஷ்பமாலிகா என்னும் நூல் ஆங்கிலத்திலும், மலையாளத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

'விளக்கு மட்டுமா சிவப்பு?' என்னும் நவீனம் 'மலையாள நாடு' என்னும் இதழில் மலையாளத்தில் மொழிபெயர்க்கப் பட்டு வெளிவந்துள்ளது.

திரைப்படங்களுக்கு மிகச்சிறப்பாக உரையாடல் எழுதிய பெருமை இவருக்கு உண்டு. ஏறக்குறைய 20 படங்களுக்கு மேல் உரையாடல்கள் எழுதியிருக்கிறார். 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகளையும், 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களையும் எழுதியிருக்கிறார்.

இந்தியாவிலேயே சிறந்த திரைப்பட பாடலாசிரியர் என்னும் விருதை மத்திய அரசினரிடம் 1970ஆம் ஆண்டு பெற்றார். அதே ஆண்டில் தமிழ்நாடு அரசு அளித்த சிறந்த திரைப்படப் பாடலாசிரியர் விருதையும் பெற்றிருக்கிறார்.

பண்டிதரும் பாமரரும் ஒரு சேரப் போற்றிப் புகழும் வண்ணம் பாடல்களையும், கவிதைகளையும் எழுதுவதில் தனித்திறமை பெற்றவர் இவர்.

1978-ஏப்ரலில் தமிழக அரசின் அரசவைக் கவிஞராக நியமிக்கப் பட்டார்.

தமிழ்நாடு அரசின் சார்பில், அரசுக்கவிஞராக நியமிக்கப்பட்ட கவிஞர் கண்ணதாசன் அவர்களுக்கு விருது வழங்கும் விழா 9.7.1978ல் நடைபெற்றது.

இவருடைய 'சேரமான் காதலி' நூல், சாகித்ய அகாடமியின் பரிசினைப் பெற்றது. எம்.ஏ.சி. அறக்கொடையின் சார்பில் அண்ணாமலையரசர் நினைவுப் பரிசாக வழங்கப்படும் ரூ.10,000 சிறந்த கவிஞர் என்பதற்காக இவருக்கு வழங்கப்பட்டது.

அமெரிக்காவில் நடந்த தமிழ்ச் சங்க விழாவிலும், கவிஞர்கள் மாநாட்டிலும் கலந்துகொள்ளச் சென்ற கவிஞர் கண்ணதாசன் நெஞ்சுவலி காரணமாக சிகாகோ நகர மருத்துவ மனையில் 1981 ஜூலை மாதம் 24 ஆம்நாள் சேர்க்கப்பட்டார். சில நாட்கள் உணர்வு இழந்த நிலையிலிருந்த இவர், பிறகு கண் விழித்துப் பார்த்தார். பிறர் பேசுவதைப் புரிந்து கொண்டார். அவர் உதடுகள் அசைந்தன. என்றாலும் பேசமுடியவில்லை.

இன்னும் மூன்று மாதங்களில் முழுமையாகக் குணம் அடைவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 17.10.81 சனிக்கிழமை இந்திய நேரப்படி இரவு 10.45 மணிக்கு மரணமடைந்தார்.

அக்டோபர் 20ஆம் நாளன்று அவரது உடல் அமெரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்டது. ஏராளமான பொதுமக்களும் அமைச்சர் பெருமக்களும், அரசியல்வாதிகளும் கவிஞருக்கு அஞ்சலி செலுத்தினர். பின்னர் அவரது உடல், சங்கரதாஸ் சுவாமிகள் கலையரங்க வளாகத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. அவரது இறுதி ஊர்வலத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களும், அமைச்சர் பெருமக்களும், தமிழறிஞர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர். மயானத்தில் பிரார்த்தனை நடைபெற்றது.

''கவிஞர் கண்ணதாசனுக்குக் காரைக்குடியில் நினைவு மண்டபம் உருவாக்கப்படுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

பின்னர், கவிஞரின் உடல் எரியூட்டப்பெற்றது.

கவியரசர் பாரதியார், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆகியோருக்குப் பின்னே இந்த நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞராகத் திகழ்ந்த கவியரசு கண்ணதாசன் புகழ் என்றுமுள தென்தமிழ்போல் நிலைத்திருக்கும்.



# நம்பினோர் கெடுவதில்லை

கவியரசர் கண்ணதாசன்

மதுரையில் வேட்பு மனு தாக்கல் செய்துவிட்டுச் சென்னை வந்த எம். ஜி. ஆரை இன்று (ஞாயிற்றுக்கிழமை) ஆற்காடு முதலித் தெருவில் சந்தித்த போது, நான் ஆச்சரியப்படவில்லை. சுமார் ஒன்றரை மணி நேரம் என்னோடு பேசிக்கொண்டிருந்தார். அதிலே தன் ..ம்பிக்கையின் உச்சக் கட்டம் தெரிந்தது.

நியாயம்தான். தமிழ்நாடு பூராவிலும் அவர் மீது ஓர் அனுதாபம் இருக்கிறது.

அவர் உற்சாகமாக இருக்கிறார். சிரித்த முகத்தோடிருக்கிறார். திடகாத்திரமாகவும், சுறுசுறுப்போடும் இருக்கிறார். முன்னைவிடப் பளபளப்பாக இருக்கிறார்.

''நாங்கள் இந்திரா வரவேண்டும் என்று விரும்பினோமே தவிர, எம்.ஜி.ஆர். போக வேண்டும் என்று விரும்பவில்லை'', என்பது ஏழை எளிய மக்களின் வாதம். ''டில்லிக்கு இந்திரா, நம் ஊருக்கு எம்.ஜி.ஆர்.'' என்றே எங்கே பார்த்தாலும் பேசுகிறார்கள்.

அதை நேரிலேயே கேட்டு, மக்கள் வெள்ளத்தைச் சந்தித்துத் திரும்பிய அவர், நாணயமான நடத்தையை இந்த நாட்டு மக்கள் மதிக்கிறார்கள் என்பதை நன்றாக உணர்ந்திருக்கிறார்.

நிர்வாகத் திறமையில் எம்.ஜி.ஆர். ஓர் சர்ச்சிலாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஜனங்களின் மனோபாவத்தைக் கணிப்பதில் எப்போதுமே அவர் வெற்றி பெற்றிருக்கிறார்.

அவர் என்னிடம் அரசியலைப் பற்றி ஏதும் அலட்டிக் கொள்ளவில்லை. அதற்கு மாறாக என்னோடு வந்திருந்த என் மகன் கலைவாணனுக்கு ஒரு மணிநேரம் புத்திமதிகள் கூறினார்.

சினிமாவில் நடிக்கும் கலைவாணன் உடம்பை எப்படி வைத்துக் கொள்ளவேண்டும் என்பதற்கு, அவர் சில ஆசனங்களைச் செய்தே காட்டினார்.

கலைத்துறையில் அரை நூற்றாண்டாக வளர்ந்து கொண்டிருக்கும் அவர், உடம்பைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் முறை கண்டு என் மகனே கூட ஆச்சரியமடைந்தான்.

''வெறும் கறி, மீனிலே உடம்பைக் காப்பாற்ற முடியாது; கீரை வகைகள் நிறையச் சாப்பிடு'' என்றார் அவர்.

இடையிடையே வருகின்ற டெலிபோன் கால்களுக்கு அமைதியாகப் பதில் சொல்லிக் கொண்டேயிருந்தார்.

அவரிடம் நிதி கொடுப்பதற்கென்றே ஒரு பெரும் கூட்டம் காத்துக் கொண்டிருந்தது.

நான் மதுரை வீரனையோ, மன்னாதி மன்னனையோ, ராஜா தேசிங்கையோ, நாடோடி மன்னனையோ சந்திக்கவில்லை. மக்களின் விசுவாசத்துக்குப் பாத்திரமான ஒரு மகா மனிதனைத்தான் அப்போது சந்தித்தேன்.

''எழுதினால் கண்ணதாசன் தான் எழுத வேண்டும்'' என்று அவர் சொன்ன காலங்களும் உண்டு. ''கண்ணதாசன் எழுத வேண்டாம்'' என்று மறுத்த காலங்களும் உண்டு. ஆனால் கவிதையில அவர் என்னை ரசித்ததைப் போல், யாரையும் ரசித்ததில்லை.

'எதிரி என்றால் எதிரி; நண்பன் என்றால் நண்பன்', என்பதுவே அவரது கொள்கை. நண்பன் என்று சொல்லிக்கொண்டே முதுகிலே குத்தும் பழக்கம் அவருக்கு இல்லை.

ஒரு படத்தில் அவருக்காக நான் வசனம் எழுதினேன், ''என்னை நம்பாமல் கெட்டவர்கள் உண்டே தவிர, நம்பிக் கெட்டவர்கள் இல்லை'' என்று! அது இன்று பலிக்கிறது.

நம்பாமல் சென்றுவிட்டவர்கள் இன்று அஞ்ஞாத வாசம் செய்கிறார்கள். நம்பித் துணை நிற்போர், நல்ல எதிர்காலத்தை எதிர்பார்க்கிறார்கள்.

அவருடைய ஜாதகம் அசுர ஜாதகம். விழுவதுபோல் தெரியும்; எழுந்துவிடுவார். நீண்டகால வீழ்ச்சியை அவர் சந்தித்ததே இல்லை.

*(15.5.80 குமுதம் - 'இந்த வாரம் சந்தித்தேன்' கட்டுரையிலிருந்து)*





# திருவிழா நகரில் ஒரு பெருவிழா

நிகழ்ச்சித் தொகுப்பு
**கவிஞர் சாமி பழனியப்பன்**

இந்தியாவில் பலவகையாலும் புகழ்பெற்று விளங்கும் திருக்கோயில்களில் இரண்டாவதாகவும், திருமுருகாற்றுப்படை கூறும் ஆறுபடை வீடுகளில் மூன்றாவதாகவும் விளங்கும் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து 13 லட்சத்து 42ஆயிரம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப் பெற்ற கட்டிடங்களின் திறப்பு விழாவும், 1 கோடியே 57 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டுள்ள 19 பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழாவும் 5-6-1986 அன்று, பழனி மலை அடிவாரத்திலுள்ள குடமுழுக்கு நினைவரங்கில் சிறப்பாக நடைபெற்றன.

விழா தொடங்குவதற்குமுன், மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள், உலகச்சுற்றுப்புறச் சூழல் சுகாதார நாளையொட்டி, விழா அரங்கிற்கு அருகில் செடி ஒன்றினை நட்டுவைத்தார்கள்.

குடமுழுக்கு நினைவரங்கம் மிகச் சிறப்பாக அலங்கரிக்கப் பெற்றிருந்தது.

விழாவிற்கு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. க. சுந்தரமூர்த்தி, இ.ஆ.ப. தலைமை வகித்தார்.

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் தக்கார் திரு.க. பொன்னுசாமி அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் விழாவில் பங்கேற்க வந்திருந்த பெருமக்களுக்கும் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். பின்னர் தமது வரவேற்புரையில், திருக்கோயிலின் தூய்மையைக் காக்கவும், திருக்கோயில் வளர்ச்சிக்கும் மேற்கொண்டுள்ள அரும்பெரும்பணிகளையும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப் பட இருக்கும் பணிகளையும் விளக்கினார்கள்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் திருமதி இராதா தியாகராசன் அவர்கள், அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலின் உபரி நிதியை முதலீடாகப் பெறும் வங்கிகள், மலையை அழகுபடுத்தும் நோக்கத்தோடு அமைத்துப் பராமரித்து வரும் பூங்காக்கள், தோட்டங்கள் ஆகியவற்றைத் திறந்து வைத்து, கிரி வீதியை வலம்வர சிறிய சொகுசுப் பேருந்தை இயக்கி வைத்தார்கள்.

டாக்டர் திருமதி இராதா தியாகராசன் அவர்கள் தமது பேருரையில் திருக்கோயில்களின் இன்றியமையாமையையும், அவை எவ்வாறு சமய சமுதாய மையங்களாகிக் குடிதழீஇ வாழ்ந்தன என்பதையும் பல்வேறு எடுத்துக் காட்டுகளோடு விளக்கினார்கள்.

விழாவில், சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், பழநி நகரமன்றத் தலைவர் திரு க.குமாரசாமி, திரு குப்புசாமி, எம்.எல்.ஏ., திரு.பெ. செல்வேந்திரன், எம்.பி., அண்ணா மாவட்ட காவல் துறை தலைமை அதிகாரி திரு. இராமநாதன், ஐ.பி.எஸ். ஆகியோர் உரையாற்றினர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, திருமுருகன் திருஉருவம் பதிக்கப் பெற்ற நினைவுப் பெட்டகத்தை, தக்கார் திரு.பொன்னுசாமி அவர்கள் வழங்கினார்.

கடந்த காலத்தில் சிறப்பாகப் பணியாற்றியதைப் பாராட்டி, தக்கார் அவர்கள் சார்பில் டாக்டர் திருமதி இராதா தியாகராசன் அவர்கட்கு சென்னை பி. ஏ.கன்ஸ்டிரக்ஷனின் தங்கப்பதக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அணிவித்தார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமது சிறப்புரையில், ''நமது முன்னோர்கள் மரங்களைத் தெய்வமாகக் கருதினார்கள்; இன்று ஆலயங்களுக்குச் சொந்தமான நந்தவனங்கள், தோட்டங்களே அழிக்கப்பட்டு வருகின்றன. இதைத் தடுத்து நிறுத்தி, ஆலயங்களுக்குச் சொந்தமான காலியிடங்களில் நந்தவனங்களையும், தோட்டங்களையும் உருவாக்கி வளர்க்கவேண்டும்'' என்றார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலும் குறிப்பிட்டதாவது:

''பழநி பேருந்து நிலைய அபிவிருத்திக்கும் பழநி நகர குடிநீர் உபயோகத்திற்கும் ஆலய நிதியினின்றும் நிதி உதவி தரவேண்டும் என்ற கோரிக்கையை நகர் மன்றத் தலைவரும் வேறு சிலரும் இங்கு வைத்தார்கள்.

''நான் ஏற்கெனவே கூறியிருக்கிறேன். அதனையே இப்போதும்

கூறுகிறேன். ஆலய நிதியினின் றும் இலவசமாக வழங்குவது இயலாது. சத்துணவுக்கு வழங் கியதற்கே எதிர்ப்புத் தெரிவித்து நீதிமன்றம்வரை சென்றார்களே, அவர்கள் சும்மா இருப்பார்களா?



"நகரசபையின் இரண்டுதிட்டங் களுக்கும் ஆகக்கூடிய மொத்தச் செலவில் பாதித் தொகையை அருள்மிகு பழநி தண்டாயுத பாணி சுவாமி திருக்கோயில் வட்டியில்லாக் கடனாகத் தரும்.

''இன்னும், பழநி நகரஆட்சித் தலைவர், அரசு நிதி உதவி தர வேண்டும் என்று கேட்டார். தரு கிறேன் என்று சொல்லவும் எனக் குத் தகுதியில்லை. தரமாட்டேன் என்று கூறவும் எனக்கு உரிமை இல்லை. எனவே, உங்கள் கோரிக் கையை இந்த நாட்டின் நாயக னான பொன்மனச் செம்மல்— புரட்சித் தலைவர் அவர்களிடம் எடுத்துக் கூறி, அந்த உதவி கிடைத்திட நான் உதவுகிறேன் என்றுமட்டும் கூறிக் கொள்கி றேன்.

''அடுத்து, சென்ற ஆண்டு நடைபெற்றிருக்க வேண்டிய பழநி அருள்மிகு தண்டாயுத பாணி சுவாமி திருக்கோயிலின் குடமுழுக்கு விழா, வருகிற 6-7-1987 அன்று நடைபெறும். அதற்கான குழுக்கள் அமைக்கப் பெற்று, நமது தக்காரும் அதி காரிகளும் துரிதமாகச் செயல் படுவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

''தமிழகத்திலுள்ள பல்வேறு ஆலய ஊழியர்களின் பணி நிலைமை பற்றி ஆராய்ந்து ஒழுங்குபடுத்த, அறநிலையத் துறை ஆணையர் அவர்கள் தலை மையில் அரசாங்கம் ஒரு குழுவை நியமித்துள்ளது. ஆலய நிர்வாகங் கள் சீரமைப்புப் பணிகளுக்கான யோசனைகளை அந்தக்குழு அர சுக்கு அறிவிக்கும். அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

"இந்தத்திருக்கோயிலுக்குத் தக் காராக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. க. பொன்னுசாமி அவர்கள் மிக நல்லவர். மிக மிகப் பொறுமை சாலி-அமைதியானவர். அவருக்குக் கோபமேவராது போலிருக்கிறது. அவரது துணைவியார் அவர் களைப் பார்த்தாலும் அப்படித் தான்தெரிகிறது. திரு. பொன்னு சாமி அவர்களின் தந்தையார் நல்ல தேசபக்தி உடையவர். அது மட்டுமல்ல, கால்நடை யாகவே பழநிக்கு வந்து செல்லும் பக்தர் குடும்பம் அது என்று கேள்விப்பட்டேன்.




''தக்கார் திரு பொன்னுசாமி, தனது போக்குவரத்துச் செல வுக்குக்கூட திருக்கோயில் காசைச் செலவழிப்பதில்லை. இங்கு அவர் தன்னுடைய சொந்தச் செலவி லேயே வந்து போகிறார். அது மட்டுமல்ல. அவர் தங்கும் அறைக் குக் கூட அவர்தம் சொந்தப் பணத்திலிருந்து வாடகை செலுத்திவிடுகிறார். மற்ற பல நல்ல காரியங்களையும் அவர் சிறப்பாக செய்து வருகிறார். இன் னும் சொல்லப்போனால், கோயில் காரியங்கள் பலவற்றை அவரது சொந்தச் செலவிலேயே செய்து வருகிறார். அவரது காலத்தில், கோயிலிலும், இந்தப் பகுதியிலும் பல நல்ல காரியங்கள் நடைபெற எனது வாழ்த்துக்களைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

''இனி, இந்த இனிய விழாவில் பத்திரிகையாளர்களையும், எழுத் தாளர்களையும் நான் ஒன்று கேட்டுக் கொள்ள ஆசைப்படு கிறேன்.

''ஆலயச் சிலைகள் திருட்டுப் பற்றி, பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்படுகின்றன. அவ் வாறு, வெளியிடப்படுவது தவறு என்று நான் கூறவரவில்லை.

''இதுபோன்றசெய்திகளைப் பல விளக்கத்தோடு வெளியிடுவதன் மூலம், மற்றவர்களையும் அந்தப் படுபாதகச் செயலைச் செய்யும் படி தூண்டாதீர்கள். அத்தகைய சண்டாளர்களுக்கு ஆதரவு கொடுக்காதீர்கள்.



''சிலைகளைத் திருடுவது சண்டாளத்தனம் என்கிற எண் ணத்தை ஏற்படுத்த, பத்திரிகை யாளர்களும் எழுத்தாளர்களும் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

''சிலைத்திருடர்களைத் தடுக்க முயன்று கொலையுண்ட உத்தம பாளையம் கோயில் காவல்காரர் மெய்யத்தேவரின் குடும்பத்திற்கு ரூ.10 ஆயிரம் வழங்கப்படும். மாண்புமிகு முதல்வர் அவர்களி டம் பேசி, அரசின் சார்பில் நிதி வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

''மற்றும், கொலையுண்ட திரு மெய்யத்தேவரின் மகனான முத்து முனியாண்டி என்பவருக்கு பழநி அருள்மிகு தண்டாயுத பாணிசுவாமி திருக்கோயிலில் ஒரு வேலை போட்டுக் கொடுத்து ஆதரிக்கும்படியும்கேட்டுக் கொள் கிறேன.''

இவ்வாறு மாண்புமிகு அமைச் சர் பேசி முடித்தார்.

பின்னர், சென்ற ஆண்டில் இத் திருக்கோயில் நடைமுறைக்கு உதவியாக இருந்து திறம்படப் பணி புரிந்தமைக்காக, சென்னை பி.ஏ.கன்ஸ்டிரக்சன் சார்பில், அண்ணா மாவட்ட ஆட்சியாளர் திரு. எம். மாதவன் நம்பியார், இ.ஆ.ப.அண்ணா மாவட்ட காவல் துறை தலைமை அதிகாரி திரு இராமநாதன், ஐ.பி.எஸ். வரு வாய்க் கோட்டாட்சித் தலைவர் திரு. எஸ். பத்மநாபன், பழநி காவல்துறை கண்காணிப்பாளர் திரு. கே. கே. முத்துசாமி ஆகி யோருக்கு பொற்பதக்கங்களை யும், மலையை அழகுபடுத்தும் நோக்கத்தோடு தோட்டமிட்டும் பூங்காக்கள் அமைத்தும் உள்ள 15வங்கிகளின் சார்பாளர்களுக்கு அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருவுருவம் பொறித்த வெள்ளிப் பதக்கங்களையும் மாண்புமிகு அமைச்சர் அணிவித் தார்.

மற்றும், திருக்கோயில் திருவிழாவின்போது, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பக் தர் விட்டுச் சென்ற 22 ஆயிரம் ரூபாய் கொண்ட பணப்பையை எடுத்து, உரியவரிடம் சேர்ப்பித்த தற்காக திருக்கோயில் பேஷ்கார் திரு. ஆர். ஆர். விஸ்வநாதன், எழுத்தர் திரு. பி. ஆறுமுகம், பணி யாள் திரு. ஏ. இராமலிங்கம் ஆகி யோருக்கு மொத்தமாக ரூ.500 ரொக்கப்பரிசும்,

சென்னை உயர்நீதிமன்ற நீதி பதி மாண்புமிகு மகேஸ்வரன் அவர்களின் உறவினர் தங்கி யிருந்த அறையில் விட்டுச்சென்ற தங்கச் சங்கிலியைக் கண் டெடுத்து உரியவரிடம் சேர்ப்பித் ததற்காக திருக்கோயில் ஊழியர் திரு. சி. காளியப்பன் என்பவருக்கு ரூ.500 ரொக்கப்பரிசும் சென்னை பி.ஏ.கன்ஸ்ட்ரக்சன் சார்பில் பழநி அருள்மிகுதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஊழியர் களுக்கு ஊக்க போனஸ் வழங்கும் திட்டத்தின் கீழ், அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

இறுதியாக, அருள்மிகு தண்டா யுதபாணிசுவாமி திருக்கோயில் நிர்வாகத் தலைவரும், துணை ஆணையருமான திரு. கே. எஸ். சோமசுந்தரம் நன்றி கூற விழா இனிது நிறைவேறியது.



சென்ற இதழில்.....

புகளூரில் காகித ஆலையை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் நாட்டிற்கு அர்ப்பணம் செய்த விழா நிகழ்ச்சியை, சென்ற இதழ் (1-6-86) அட்டை அலங்கரித்தது.

# பார்த்தோம் படித்தோம்..

'தமிழரசு - 1-6-86 இதழில் மலர்ந்துள்ள 'மலர்தரும் தேன் மருந்தும் ஆகும்' என்றகட்டுரை உண்மையிலேயேசிறந்த மருத்துவக் கட்டுரை. 'புகழ் தேடிக் கொண்ட புகளூர்' கட்டுரையும், 'தானியப் பாதுகாப்புக்' கட்டுரையும் இதழின் சிறப்புக்கு அணி செய்கின்றன.

பா. சாந்தி
சென்னை-24

ஆப்பிரிக்கக் குழந்தைகள் நலனில் மிகுந்த அக்கறை காட்டும் நமது முதல்வரைப் பாராட்டுகிறேன். குடும்ப நலத்திட்டத்தில் நமது சாதனையை வியந்து பாராட்டுகிறேன்.

ஆனந்த்
சென்னை-28

1.6.86 இதழில் இடம்பெற்ற ஒவ்வொரு கட்டுரையும் படங்களும் மிகச் சிறப்பாக இருந்தன.

சியாமளா
திருத்துறைப்பூண்டி

உவகைதரும் உதகை கட்டுரை வெகு அருமையாக இருந்தது.

கிருத்திகா
காரைக்கால்

தீயணைப்புப் படையினருக்கு இவ்வளவு வேலைகளா? அந்தக் கட்டுரை தந்த விவரங்கள் என்னை வியப்பிலாழ்த்தின.

ஆர். வெங்கடேசன்
நாகை.

'புகழ்தேடிக்கொண்ட புகளூர்' கட்டுரையின் மூலம் நேரடியாக அந்த நிகழ்ச்சியிலேயே பங்கேற்ற உணர்வைப் பெற்றேன்.

பா. ஜீவா
பனங்குடி.

1.6.86 இதழில் இடம்பெற்ற 'சுற்றுப்புறத் தூய்மையைக் காப்போம்' கட்டுரை மிகவும் பயனுள்ள முறையில் இருந்தது.

அரவிந்த்
விழல் நகர்

1.6.86 இதழில் 'மலர்தரும் தேன் மருந்தும் ஆகும்' கட்டுரை மிக அருமை. ஒவ்வொருவரும் படித்துப் பயன் பெறவேண்டிய செய்திகள் அதில் உள்ளன.

காயத்ரி
தேவகோட்டை.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

புதிய வண்ண
துணி வகைகளுக்கு



பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23






இனிவருங் காலங்களிலும்
ஏழைக் குழந்தைகள்
கல்விக்கண் திறந்திட
இலவசப்பாட நூல், சத்துணவு
சீருடை வழங்கிட
எழுச்சிமிக்க பணிகளாற்றிவரும்
சரித்திர நாயகரே!
இதய உணர்வுகளால்
வணங்குகிறோம்!

கோடம்பாக்கம் எம். குமார்
மேலாண்மை இயக்குநர்



தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
"ஈ. வெ. கி. சம்பத் மாளிகை"
சென்னை-600 006.






"நீதி நிலைக்க வேண்டும் - அனைவருக்கும் சமவாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் - ஒரு வகுப்பை அழுத்தி இன்னொரு வகுப்பு முன்னேறும் என்ற காட்டுமுறை அழிக்கப்பட வேண்டும்" என்று இந்தச் சர்க்கார் நினைக்கிறது.

"என்றையத் தினம் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவன் சமநிலைக்குக் கொண்டு வரப்படுகிறானோ, அன்றுதான் சமூக நீதி ஏற்படும். அந்தச் சமூக நீதி இந்த அரசாங்கத்தில் நாட்டப்படுவதைத்தான் நான் விரும்புகிறேன்".

"எல்லோருக்... எவருக்கும் ... இப்படித்தான் ... இருக்க விரும்புகிறோம்."

—பேரறிஞர் ...

தமிழ்நாடு அரசின் 9 ஆண்டுப் பணிகள் தொகுப்பு மலர்

# அண்ணா வழியில் தமிழக அரசு

**மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர்**

அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் தமிழக அரசைத் தலைமை தாங்கி நடத்தி வருகிற பொறுப்பை, மக்களின் மகத்தான தீர்ப்பின் வாயிலாக நான் ஏற்று, ஒன்பது ஆண்டுகள் நிறைவுற்று, பத்தாவது ஆண்டு தொடங்குகிறது. தமிழகத்தின் வரலாற்றில் கடந்த ஒன்பது ஆண்டுகளில் பல முற்போக்கான சாதனைகளை எனது அரசு நிறைவேற்றியுள்ளது. அதன் காரணமாகவே தமிழக மக்கள் 1977 தேர்தலில் அளித்த ஆதரவைக் காட்டிலும் அதிகமான ஆதரவை 1980, 1984 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் தங்கள் வாக்குகள் வாயிலாகத் தெரியப்படுத்தியுள்ளனர்.

மாநில அரசுக்குள்ள நிதி ஆதாரம், அதிகார வரம்பு இவற்றுக்கு உட்பட்டு எனது தலைமையிலான தமிழக அரசு, முற்போக்குத் திட்டங்களையும் வளர்ச்சிப் பணிகளையும் நிறைவேற்றி வருகிறது. அவையனைத்தையும் நான் விரிவாகக் கூற விரும்பவில்லை. மக்களுக்கு நன்கு தெரிந்தவைதான் அவை.

தன்னிறைவுத் திட்டம், குழந்தைகளுக்கு இலவச மதிய சத்துணவுத் திட்டம், குடிசைகளுக்கு மலிவு விலையில் மின்வசதி, ஏழை விவசாயிகளுக்கு மின் சலுகை போன்ற பல நல்ல திட்டங்கள் இன்று அனைத்து இந்தியாவிலும் தமிழகத்தின் புகழைப் பரப்பி வருகின்றன.

மாறி மாறி, வறட்சியும் வெள்ளமும் ஏற்பட்ட போதிலும். உணவு உற்பத்தியைப் பெருக்கி, விலை உயராது காத்து-மக்களுக்கு மலிவு விலையில் தட்டின்றி உணவுப் பொருள்களைக் கிடைக்கச் செய்து வருகிறோம்.

கல்வி, போக்குவரத்து, தொழில் வளர்ச்சி, மருத்துவ வசதி போன்ற எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் தமிழக அரசின் சாதனை மகத்தானதாகும்.

எல்லாவற்றையும்விட, பிரச்னைகள் இல்லாத மாநிலமாக - அமைதி தவழும் மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருவதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மைய அரசுடன் இணக்கமான நல்லுறவு கொண்டு, கோரிக்கைகளுக்காக வாதாடி, மாநில நலன்களைப் பேணிப் பாதுகாத்து வருகிற அரசு என்ற சிறப்புப் பெருமையும் தமிழக அரசுக்கு உண்டு.

இந்த அரசுக்கு, கடந்த ஒன்பது ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட சோதனைகள் பல. அரசியல் உள்நோக்கம் கொண்டு, உருவாக்கப்பட்ட எத்தனையோ கிளர்ச்சிகள்! போராட்டங்கள் ! அவையெல்லாம் இந்த அரசுக்கு மக்கள் அளித்த ஆதரவுக்கு முன்னால் தோல்வி கண்டன.

எனினும் எல்லாப் பணிகளையும் முடித்துவிட்டோம் என்று நாம் நிம்மதி அடைவதற்கில்லை. எடுத்துக்காட்டாக மக்களுக்கு - அதிலும் குறிப்பாக வறட்சிப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு குடிநீர் கிடைக்கச் செய்யும் முயற்சியில் அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. விவசாயிகளுக்குப் பாசன நீர் கிடைக்கவும், மின் உற்பத்தியை அதிகரிக்கவும்



நாம் தொடர்ந்து கவனமுடன் பணியாற்ற வேண்டியுள்ளது. வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள நலிந்த பிரிவினருக்கு அரசின் திட்டப் பலன்கள் போய்ச் சேருமாறு கண்காணிக்க வேண்டியுள்ளது. இவை நம்முன் உள்ள ஒரு சில அவசரக் கடமைகளாகும்.

இந்த மாபெரும் முயற்சிகள் அரசு நிர்வாக இயந்திரத்தினால் மட்டுமே முடியக் கூடியதல்ல.

இவற்றுக்கிடையே அமைதியைக் குலைக்கவும், வளர்ச்சிப் பணியின் வேகத்தைத் தடுக்கவும், அரசுக்கும் மக்களுக்கும் இடையே பேதங்களை உருவாக்கவும் ஒரு சில சக்திகள் முயற்சி செய்யக் கூடும்.

அரசும் அதன் நிர்வாக இயந்திரமும் தடையின்றி வேகமாக இயங்கத் தக்க ஒரு சூழ்நிலையே வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலையாகும். 'அமைதி தவழும் இனிய சூழ்நிலை என்றும் நிலவும் ஒரு மாநிலம் இந்தத் தமிழகம்' எனும் நிலை இன்று போல் என்றும் நின்று நிலவிட அனைவரின் ஆதரவை நான் வேண்டுகிறேன்.

அரசின் தீவிரமான கொள்கைத் திட்டங்களை, பழுதின்றி நிறைவேற்றிடவும், மக்களின் நலனையே முன்வைத்து, தாமதமின்றி விரைந்து செயல்படவும், அரசின் அனைத்துப் பிரிவினரும் சபதம் ஏற்க வேண்டும்.

இந்த இரண்டு துறைகளிலும் நாம் பெறும் வெற்றியே, நமது எதிர்காலச் சிறப்புக்கு வழி வகுப்பதாக அமையும் என்பது என் கருத்து.

'தமிழரசு' இதழின் சிறப்பு மலருக்கு இதையே எனது செய்தியாக அளிக்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க.



# கடமையில் சிறந்த காவல்துறை

குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் மிகுந்த திறமையும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் கண்ணும் கருத்தும் பாரபட்சமுமின்றிச் செயல்படும் காவல் துறைக்கு ஊக்கமும் உரிய சாதனங்களும் அளிப்பது அரசின் கடமை என்பதை உணர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த பத்தாண்டுகளில் வியத்தகு முறையில் கூடுதல் பணியாளர்களையும் சாதனை வகைகளையும் உரிய அளவில் வழங்கி உள்ளார்.

தமிழகத்தில் பெருநகரங்களை ஒட்டியுள்ள இடங்களில். குடியிருப்புகள் மிக அதிகமான முறையில் ஏற்பட்டு அந்தப் புதிய நகர்களில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கப் புதிய காவல் நிலையங்கள் திறக்கப்படவேண்டிய நியாயத்தை உணர்ந்த தமிழக அரசு, இந்த வகையில் நடவடிக்கைகள் எடுத்தது. 1976ல் 873 காவல் நிலையங்களும், 181 புறக்காவல் நிலையங்களும் இருந்த நிலை மாறி, தற்போது 984 காவல் நிலையங்களும், 167 புறக்காவல் நிலையங்களும் இருக்கும் நிலை ஏற்பட்டது. மொத்தம் கூடுதலாக 14,207 காவலர்களையும் நியமனம் செய்தது.

காவல்துறை நிர்வாக நலன் கருதி பெரியார், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர், அண்ணா மாவட்டங்கள் பிரிக்கப்பட்டன.

காவல்துறையில் பெண் குற்றவாளிகளைக் கையாள்வதற்கும், திருவிழாக் காலங்களில் பெண்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், அரசு மருத்துவமனைகளில் வேலை செய்யவும் பெண்களே தகுதி உடையவர்களாக இருப்பார்கள் எனக் கருதிய அரசு 1980ல் 62 பெண் சார்பு ஆய்வாளர்களையும், 66 பெண் தலைமைக் காவலர்களையும், 624 பெண் காவலர்களையும் நியமித்துள்ளது.

1976க்கு முன்பு ஐந்து அணிகள் தான் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் இருந்தன. கடந்த பத்து ஆண்டுகளில் இவர்களின் செயல்திறனையும், நேர்மையையும், பணியில் காட்டிய செம்மையையும் கருத்தில் கொண்டு ஒரு அணி டெல்லியிலேயே மறுபணியில் முக்கியத் தலைவர்களின்பாதுகாப்புக்காகப் போடப்பட்டு உள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் தாலுகாவில் தமிழக.எல்லையில் ஆக்கிரமிப்பைத் தடுக்கவும், தர்மபுரி, வட ஆர்க்காடு மாவட்டத்தில் தீவிரவாதிகளின் நடவடிக்கையை ஒடுக்கவும் நான்கு கூடுதல் அணிகள் 2,880 காவலர்கள் -- அதிகாரிகள் ஒப்பளிக்கப்பட்டு சேவை செய்து வருகின்றனர்.

சிறப்புக் காவல் படையில் 17 ஆண்டுகள் பணிபுரிந்தால்தான் மாவட்டத் தாலுகா காவல் நிலையங்களுக்கு மாற்றுவதற்குத் தகுதி பெற்றவராய்க கருதப்பட்டனர். 1985ல் இந்த வீது தளர்த்தப்பட்டு 10 ஆண்டுகள் பணிபுரிந்தாலே அவர்கள் மாறுதலுக்குத் தகுதி ஆக்கப்பட்டார்கள்.

மக்களின் கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்த காவல் குதிரைப் படைப் பிரிவு சென்னையில் மட்டுமே இருந்தது. இதனைப் புதிதாக மதுரை, கோயம்புத்தூர் நகரங்களுக்கும் ஏற்படுத்தப்பட்டது.

சென்னையில் மட்டும் இருந்த காவல் துப்பறியும் நாய்ப் பிரிவு திருச்சி, மதுரை, கோயம்புத்தூருக்குப் புதிதாக ஏற்படுத்தப்பட்டது.

குற்றவாளிகளைப் பிடிப்பதற்கும், இரவு ரோந்து போவதற்கும் சட்டம் ஒழுங்கைக் கட்டுப்படுத்தவும் மிகவும் இன்றியமையாதது ஊர்திகள் ஆகும்.

1976ல் மொத்த ஊர்திகளின் எண்ணிக்கை1,790 ஆக இருந்தது. 1986-ல் 2,618 ஆக உயர்ந்தது. இந்த உயர்வு 46விழுக்காடு ஆகும். மொத்தம் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 13,61,99,400-26.

சென்னையில் இருந்து ஓடிக்கொண்டிருக்கும் வாகனத்தில் இருந்து கொண்டு நாகர்கோவிலுக்கும் அப்பால் உள்ள ஊரில் போய்க்கொண்டிருக்கும் வாகனத்தில் உள்ள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நொடிப்பொழுதில் தகவல்களைத் தெரிவிக்க இயலும். இந்தச் சாதனங்கள் காற்றிலும் கடிதாகச் செல்ல நினைக்கும் சமூக விரோதிகளை மின்னலென வளைத்துப் பிடிக்க உதவுகின்றன. .

தமிழகத்தில் உள்ள குற்றங்களும், குற்றவாளிகளின் விவர ஏடுகள் குற்றம் செய்த விவரம் முதலியன கனனி இயந்திரத்தில் (கம்ப்யூட்டர்) சேமிக்கப்பட்டு தமிழகத்தின் எந்த மூலையில் உள்ள காவல் நிலையத்தில் இருந்து நுண்அலை கொண்ட தனித்தனி மாவட்ட முடுக்கு முனையிலிருந்து கேள்வி கேட்பின், சென்னை கனனி இயந்திரம் முழு விவரத்தையும் அச்சுப் பதித்து குற்றவாளிகளின் பட்டியல், குற்றத்தன்மை ஆகியவற்றை நொடிப்பொழுதில் தந்துவிடுகிறது.

அதேபோல் குற்றம் நடந்த இடத்தில் இருந்து கிடைக்கும் கைரேகை தமிழகத்தின் எந்த மூலையில் கிடைத்தாலும் உடன் சென்னையில் உள்ள இந்த இயந்திரத்தில் ஒப்பு நோக்கப்பட்டு குற்றத்தில் சம்பந்தப்படாத சந்தேக நபர்கள் உடனுக்குடன் வெளியே அனுப்பப்பட ஏதுவாகிறது. இந்தியாவிலேயே முதன் முதலாகத தமிழகத்தில்தான் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இந்த இயந்திரங்களுக்கும் மற்றும் அதற்குரிய தளவாடங்களுக்கும் தமிழக அரசு செலவிட்ட தொகை ரூபாய் ஒரு கோடியாகும்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று காவல் துறையில் வீர தீரச் சாகசச் செயல்கள் புரிந்த காவலர்கள்-அதிகாரிகளுக்குத் தகுதியின் அடிப்படையில், ஆண்டுதோறும் 'அண்ணா பதக்கம்' வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு 40 முதல் 60 வரை பதக்கங்கள் பெற்ற அளவில் இதுவரை 524 பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. பதக்கங்கள் பெற்றவர்களுக்குப் பணஊதியமும் தரப்படுகிறது. இந்தியாவிலேயே பண ஊதியம் அடங்கிய பதக்கம் இது ஒன்றுதான்.

1982ல் ஒவ்வொரு பொங்கல் நாளன்றும் தமிழகக் காவல்துறையில் தண்டனை ஏதும் பெறாமல் பத்து ஆண்டுக்காலம் சிறப்பாகச் சேவை செய்துள்ள தலைமைக் காவலர்கள்—காவலர்கள் மற்றும் இதே தகுதியுள்ளவர்களுக்கு ஆண்டுக்கு 1500 எண்ணிக்கைக்கு மேற்படாமல் பதக்கமும், மாதம் ரூ.20 தலைமைக் காவலர்களுக்கும், ரூ. 25 நாயக் முதல் அவில்தார் வரை வழங்கப்படுகிறது. 1985ல் 1262 பேருக்கும், 1986ல் 1359 பேருக்கும் இப்பதக்கமும், படியும் வழங்கப்பட்டன.

1982 முதல் சீருடை, ஆய்வாளர்கள் முதல் காவலர்கள் வரை இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. இதற்கு ஆண்டுக்கு ஆகும் செலவு ரூ. 25 இலட்சம் ஆகும்.

1984-85ல் காவலர்கள்—அதிகாரிகளின் தோற்றம் எழிலோடும் மிடுக்கோடும் இருப்பதற்காக டெரிக்காட்டன் சீருடைகள் வழங்கப்பட்டன. இதற்கு ஆண்டுக்கு ஆகும் கூடுதல் செலவு ரூ. 75 லட்சமாகும்.

1984ல் புயலிலும் மழையிலும் பணிபுரியும் காவலர்களுக்கு5,000 மழைக்கோட்டும், 3,500 இணை மழை புதைமிதியடிகளும் வழங்க ரூ. 7½ லட்சம் வழங்கப்பட்டது.

1985-86ல் காவலர்கள் மற்றும் ஊர்க் காவலர்களின் சீருடைகளைக் கொள்முதல் செய்து வழங்குவதற்காக ரூ.3.18 கோடி செலவிடப்பட்டது.

காவல்துறையில் 1976க்கு முன்பு சூரியனையே பார்க்காத அமைச்சுப் பணியாளர்கள் இருந்தனர். காரணம், அவர்கள் வேலைப்பளுவின் காரணமாக சூரிய உதயத்திற்கு முன்பே அலுவலகம் வந்து இரவே வீட்டிற்குத் திரும்புவர். அவர்களின் துயர் துடைக்கத் தாயுள்ளம் படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் 690 கூடுதல் அமைச்சுப் பணியாளர்களை வழங்கி, அமைச்சுப் பணியாளர்களின் இல்லங்களில் மகிழ்ச்சி பொங்கச் செய்துள்ளார்.

10 ஆண்டுகளில் காவலர் குடியிருப்பு என்று எடுத்துக்கொண்டால் ரூ. 13.40 கோடிக்குக் குடியிருப்புகள் கட்டித்தரப்பட்டுள்ளன என்பது தெளிவாகும்.

தமிழக அரசின் காவலதுறையில் நீதியுடனும் நேர்மையுடனும் பணியாற்றிய காவலர்கள்—அதிகாரிகள் பணி ஓய்வு பெறும்போது தங்க வீடு இன்றி அவதியுறும் நிலையைப் போக்க 1980ல் ரூ.1 கோடி மூலதனத்துடன் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் அமைக்கப்பட்டது.

திருச்சி மாவட்டம் நாவற்பட்டு கிராமத்தில் 670 வீடுகள் ரூ. 1.61 கோடியில் கட்டப்பட்டு 15.9.1985ல் மாண்புமிகுமுதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். அனைத்து வீடுகளும் ஒதுக்கப்பட்டுவிட்டன. கோவை மாவட்டம் கணபதி என்னுமிடத்தில் 432 வீடுகள் ரூ. 1.94 கோடி செலவில் கட்டப்பட்டு வீடுகள் கட்டிமுடிக்கும் தறுவாயில் இருக்கின்றனவேலூர் தொரப்பாடியில் ரூ. 35 லட்சம் செலவில் வீடுகள் கட்டப்பட்டு முடிவுறும் தறுவாயில் இருக்கின்றன.

அரசு ஆண்டு ஒன்றுக்கு ரூ.1 கோடி காவல்துறைக்கு வழங்கி, தகுதியுள்ள காவலர்களுக்கு இந்த வீடுகளை வாங்க முன்பணமாக வழங்கப்படுகிறது. எல்லா மாவட்டங்களிலும் வீடுகள் கட்டுவதற்காக நிலங்களைத் தேர்ந்தெடுத்து அந்த நிலங்களைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காவல்துறையில் ஆய்வாளர்கள் முதல் காவலர்கள் வரை இன்றியமையாப் பண்டங்களான அரிசி, எண்ணெய், சர்க்கரை, பருப்பு, மைதா, கோதுமை போன்றவைகளைக் குடும்பத்தில் ஒரு வயது வந்த நபருக்கு ரூ. 21.11 வரை ஊக்கதரவுத் தொகையாக அரசு அளித்து இப்பண்டங்களை வாங்கி விநியோகம் செய்து வருகிறது.

இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படும்பொழுது 1,88,308 பேர் பயனடைந்து ஆண்டுக்கு ரூ.2 கோடி செலவானது. தற்பொழுது காவலர்களின் எண்ணிக்கை உயர்வால் 2,27,020 பேர் பயனடைந்து செலவு ஆண்டுக்கு ரூ. 3 கோடியை எட்டியுள்ளது. பணியின் நிமித்தம் காவலர்கள் வெளியூர் சென்றாலும் அவர்கள் குடும்பத்தினர் இந்த இன்றியமையாப் பண்டங்களை உரிய நேரத்தில் பெறுவதால் அவர்களுக்கு மிகவும் பயன் தரத்தக்கதாக உள்ளது.

பணியில் கண்ணும் கருத்துமாக இருந்து உயிரையும் துச்சமென மதித்து சமூக விரோதிகளை/குற்றவாளிகளைக் கைது செய்யும்போது உயிர் மற்றும் உடல் உறுப்புகளை இழக்கும் காவலர்களின் பணியைப் பாராட்டியும், அவர்களுக்கு நிதி உதவி அளிக்கவும் ஒரு திட்டத்தைத் தமிழக அரசு 1979ல் அமல்படுத்தியது. அதன்படி 1979 முதல் 1986 (31.3.86) வரை 156 பேருக்கு ரூ. 10.37 லட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

பணியில் உள்ள காவலர்கள் அவர்கள் குடும்பங்களின் நலனுக்காகக் குழந்தைகளின் பட்டப் படிப்புக்கு நிதி உதவி, நீண்ட நாள் நோயில் இருப்பவருக்கு, இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய இன்னும் மற்ற சேமநலத் தேவைகளுக்காக, தமிழ்நாடு காவல் சேமநலநிதி ஏற்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் அரசு இந்த நிதிக்கு அளித்து வந்த மானியத்தை அதிகப்படுத்தியது விவரம் வருமாறு: 1983-ல் 1.5 இலட்சத்திலிருந்து 2.5 லட்சம் வரை, 1984-ல் 2.5 இலட்சத்திலிருந்து 3.5 லட்சம் வரை, 1985-ல் 3.5 இலட்சத்திலிருந்து 5.0 லட்சம் வரை.

தமிழ்நாட்டில் ஊர்க்காவல் படையில் 10,010 ஆண் ஊர்க்காவல் படையினரும் சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் 550 பெண் ஊர்க்காவல் படையினரும் இருக்கின்றனர். இந்த ஊர்க்காவல் படையினர் முதலில் 45 நாட்கள் கவாத்து ஆயுதங்களைக் கையாளுதல் ஆகிய பயிற்சிகளுக்குப் பிறகு மாதம் 4 முறை அல்லது சிறப்பு அழைப்பின்பேரில் அந்தந்த நிலைமைக்குத் தக்க பணிகளுக்கு அழைக்கப்படுகின்றனர்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஊர்க்காவல் படை அமைப்பு, காவல்துறை அமைப்புக்கு ஒரு துணை அமைப்பாக இயங்குகிறது. 1978ல் அரசு ஊரகக் காவல்படையைக் கடற்கரை ஓரப் பகுதிகளில் ஏற்படுத்தியது. அவர்களின் முக்கியப் பங்கு புயல், மற்றும் வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றத்திற்குக் கடற்கரை ஓரத்தில் வசிக்கும் மக்கள் உள்ளாகும்போது அரசு நிர்வாகத்திற்கு உறுதுணையாக நின்று வேகமாகச் செயல்பட்டு மக்களின் இன்னல்களை நீக்குவது அந்த வகையில் இந்த அமைப்பு தமிழ்நாட்டுக்குப்பெரிய அளவில் நல்ல பெயரைத் தேடித் தந்திருக்கிறது.

இது தவிர அரசு, 1978ஆம் ஆண்டு கடல் ஓரப் பகுதிகளில் வாழும் மக்கள் துயர்துடைப்புப் பணிக்காக 10 இயந்திரப் படகுகளை வழங்கியது. அவைகள் மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர்கள் அலுவலகங்களிலும், சென்னையைப் பொறுத்தவரையில் ஆணையர் அலுவலகத்திலும் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் வடமேற்குப் பருவ காலங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இது தவிர துயர்துடைப்புப் பணிக்காக 1983ல் அரசு 12 தனி வாகனங்களையும், ஜீப்புகளையும் வழங்கியுள்ளது. ஊர்க்காவல் படையினை நல்லமுறையில் ஊக்குவிக்கும் வகையில் அரசு சமீபத்தில் அவர்களின் பணி அழைப்புப் படியை ரூ. 6 லிருந்து ரூ. 10 ஆக உயர்த்தியிருக்கிறது.

இந்தியாவிலேயே முதன்முறையாக, தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர், ''மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்புப் பதக்கம்'' வழங்கும் முறையைக் காவல் துறையினருக்கு வழங்குவது போன்று ஊர்க்காவல் படையினருக்கும் 1982லிருந்து வழங்க ஆணை பிறப்பித்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் இந்தப் பதக்கத்தைப் பெறுகிறவர்களுக்குப் பண முடிப்பு வழங்கப்படுவதால், அவர்கள் அவ்வகையில் பயனடைந்து இக்களச் சேவையில் குறிப்பாக வெள்ளம், புயல் போன்ற இயற்கையின் சீற்றத்திற்கு மக்கள் உள்ளாகும்போது மிகுந்த ஆர்வத்துடன் துயர்துடைப்புப் பணியில் பாராட்டத் தக்க வகையில் வீரச்செயல்கள் புரிந்துள்ளனர்.

குடிமைப் பாதுகாப்பு என்ற தத்துவம், போர்க் காலங்களில் மக்களே நிர்வாகத்திற்கு உதவும் வகையில் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் உணர்வு மற்றும் பொறுப்பு உணர்ச்சி பெற வேண்டுமென்ற அடிப்படையில் தோன்றியது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்த



அமைப்பு 1976ல் தான் முதன் முதலில் தோன்றினாலும், 1978 வரையில் அதற்கு உரிய சிந்தனைகளோ, செயல்களோ ஏற்படவில்லை.

1978க்குப் பிறகுதான் மாநில அரசின் பரிந்துரைகளுக்கொப்ப மத்திய அரசு சென்னை நகரை இந்தத் திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட நகரமாக ஆக்கியது. அந்த வகையில் அதற்குரிய செயல் திட்டங்களுக்கு வடிவு கொடுத்து சென்னை மற்றும் புறநகர்ப்பகுதிகளிலுள்ள முக்கியமான ஆலைகள், உதாரணமாக மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, கல்பாக்கம் அணு மின் உற்பத்தி ஆலை மற்றும் மீனம்பாக்கம் விமானநிலையம் போன்ற அமைப்புகளுக்குப் பாதுகாப்பு தரும்வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு அந்தந்த அமைப்புகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைகளில் வாகனங்களால் ஏற்படும் விபத்துக்களைக் குறைக்கவும், விபத்துக்களால் அவதியுறும் பொதுமக்களுக்கு உடனுக்குடன் உதவி செய்யவும் தமிழக அரசு 1983-ஆம் ஆண்டில் நெடுஞ்சாலைப்போக்குவரத்து ரோந்து அமைப்பினையும், விபத்துக்குள்ளான மக்களுக்கு உதவும் வகையிலும் நெடுஞ்சாலைகளில் குறிப்பாக சென்னை திண்டுக்கல் நெடுஞ்சாலைகளில் 10 அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

1981-ல் 23 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகத்தில் அகில இந்தியக் காவல் விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடத்தப்பட்டன. அகில இந்திய அளவில் தமிழகக் காவல் துறையினர் மாநிலங்களுக்கிடையில் நடந்த போட்டிகளில் தங்கள் முத்திரையைப் பதித்து பல வெற்றிகளை ஈட்டியுள்ளனர்.

1976-ல் ரூ. 30 கோடியாக இருந்த காவல்துறைச் செலவு, 1986ல் ரூ.100 கோடியை எட்டி விட்டது. இருப்பினும் காவலர்கள் எண்ணிக்கை தமிழ்நாட்டு மக்கள் தொகையுடன் ஒப்பு நோக்குமிடத்து 1:1000 என்ற விகிதத்தில் இருப்பதால், காவல் துறையினர் அல்லும் பகலும் அயராது உழைக்கின்றனர்.

குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும், சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதிலும் தமிழகக் காவல் துறை இந்தியாவிலேயே மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருவதால், தமிழக மக்கள் பயமின்றி அமைதியாக வாழ்ந்து வருகிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது!



# நலிந்தோர்க்கு நிதியுதவி



பொருளாதார வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களில் இரு அம்சங்கள் இணைந்துள்ளன. ஒன்று அரசுத்துறைகள் அளிக்கும் மானியும், பிறிதொன்று வங்கிகள் அளிக்கும் கடனுதவி. அரசுக்கும் வங்கிகளுக்குமிடையே சிறந்த ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்குத் தலைமைச் செயலகத்தில் 1983 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ''நிறுவன நிதித்துறை'' ஏற்படுத்தப்பட்டது. முதன்மை வங்கிகள் மாவட்டங்களுக்கும் மாநிலம் முழுவதற்கும் நீண்டகாலக் கடன், ஆண்டுக் கடன் வழங்கும் திட்டங்களைத் தயாரித்துச் செயற்படுத்தும் பணியை இத்துறை கண்காணிக்கிறது. சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு உதவுவதற்காக வங்கிக் கடன்களைத் திரட்டுவதில் இத்துறை உறுதுணையாக உள்ளது.

## முன்னுரிமைத் துறைகளுக்கு வழங்கப்படும் நிறுவன நிதி உதவி

கீழ்க்கண்ட வகைகளுக்குக்கடன்கள் அளிப்பதற்கான ஆண்டுச் செயல் திட்டங்கள் மாவட்டத்திலும் தயாரிக்கப்படுகின்றன.

* பயிர்க்கடன்கள், பண்ணைக் கருவிகள், நில மேம்பாடு, கிணறு, பம்பு செட் போன்ற சிறு பாசனங்கள்.
* பால்பண்ணை, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பட்டுப் புழு வளர்ப்பு, செம்மறி ஆடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு.
* சிறு தொழில் துறை, கிராமக் கைவினைஞர்கள், கைத்தறி ஏனையவை.
* தொழில் செய்வோர், சுயவேலை செய்வோர், சிறு வியாபாரம், சைக்கிள் ரிக்ஷா ஆட்டோ, டாக்சி போன்ற சிறிய அளவிலான பேருந்து வண்டிகள், வீட்டு வசதி, கல்வி.

மேற்கண்ட முன்னுரிமைப் பிரிவுகளுக்காக ஒதுக்கப்படும் கடன் தொகை ஆண்டிற்காண்டு கீழ்க்கண்டவாறு அதிகரித்துள்ளது.

| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1982 | 547.00 |
| 1983 | 572.00 |
| 1984 | 753.00 |
| 1985 | 1024.65 |

1985ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இறுதியில் மாநிலத்திலுள்ள முன்னுரிமைத் துறைகளுக்கு வணிக வங்கிகள் கொடுத்த கடன் நிறுவனத் தொகை ரூ. 1,902 கோடியாக இருந்தது. இது 1984 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இறுதியில் இருந்ததைக் காட்டிலும் 32 சதவீதம் அதிகரித்ததாகத் தெரிகிறது. இதில் வேளாண்மைக்கு நேரடியாக வழங்கியது ரூ. 738 கோடியாகும். நலிந்த பிரிவினருக்கு வழங்கியது சுமார் ரூ. 471 கோடியாகும்.

## மாவட்டக் கடன் வழங்கு திட்டங்களும், ஆண்டுச் செயல் திட்டங்களும்

வளர்ச்சிப் பணிகளில் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள வணிகக் கூட்டுறவு வங்கிகள் அனைத்தின் திட்டங்களைப் பிரதிபலிக்கக் கூடிய மாவட்டக் கடன் வழங்கு திட்டங்களைத் தயாரிக்கும் திட்டப் பணி, 1978 ஆம் ஆண்டிலிருந்தே செயற்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை மாவட்டம் பெருநகர்ப்பகுதியாக இருப்பதால் சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. கடன் வழங்கு திட்டம் நீண்ட காலத்திற்குத் தயாரிக்கப்படுகிறது. ஆண்டுச் செயல் திட்டம் ஒவ்வொராண்டும் தயாரிக்கப்படுகிறது. ஆண்டுச் செயல் திட்டத்தின் கீழ் வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் செயல் திறன் பாராட்டத்தக்க வகையிலுள்ளது. நிதி ஒதுக்கீடுகள் ஆண்டிற்காண்டு அதிகரித்துள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:

| துறை | 1984 | 1985 | 1986 |
|---|---|---|---|
| | ஆண்டுச் செயல் திட்ட ஒதுக்கீடுகள் (ரூபாய் கோடியில்) | | |
| வேளாண்மைத் துறை | 401 | 484 | 611 |
| தொழில்துறை | 93 | 150 | 188 |
| பணி வசதிகள் துறை | 72 | 116 | 165 |
| மொத்தம் | 566 | 750 | 964 |



1985 ஆம் ஆண்டு திட்ட இலக்கு விஞ்சப்பட்டது. மேலும் முன்னுரிமைத் துறைகளுக்கு 1,025 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இது 1983-ல் வங்கிகள் வழங்கிய முன்னுரிமைப் பிரிவுக்கான கடன் தொகையில் இரண்டு பங்காகும். 1986 ஆம் ஆண்டிற்கான ஆண்டுச் செயல் திட்டம் 1985-ஆம் ஆண்டிற்கான ஆண்டுச் செயல் திட்டத்தை விட கணிசமாக உயர்ந்துள்ளது. 1986 ஆம் ஆண்டிற்கான ஆண்டுச் செயல் திட்டத்தின் திட்ட வாரியான மாவட்ட வாரியான புள்ளி விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

**சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்குக் கடன்கள்:**

சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்குக் குறைந்த வட்டிக்கு நீண்ட காலத் தவணைகளில் கடன் வழங்குவதன் மூலம் அவர்களுக்கு உதவும் பொறுப்பு, வங்கிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வங்கி வழங்கும் மொத்தக் கடன் தொகையில் குறைந்தது 10 சதவீதமாவது சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட வேண்டுமென்று இந்திய ரிசர்வ் வங்கி விதிமுறை நியதியினை வகுத்துள்ளது. வங்கிகள் வழங்கும் மொத்தக் கடன் தொகையில் குறைந்தது ஒரு சதவீதக் கடன் தொகையானது குறைந்த வட்டி வீதத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடப் பழங்குடியினருக்கும் கிராமப் பகுதிகளில் ஆண்டு வருமானம் 2,000 ரூபாய்க்கும் நகர்ப்பகுதிகளில் 3,000 ரூபாய்க்கும் குறைவான வருமானம் பெறும் ஏனைய நலிந்த பிரிவினருக்கும் வழங்கப்பட வேண்டுமென்பது மற்றொரு விதிமுறை நியதியாகும். அவ்விதம் ஒதுக்கப்பட்ட கடன் தொகை பொருத்தமானவர்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்யக் கடன் தேவைப்படும் நபர்கள் யார் என்று கண்டறிந்து, வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதற்கு உதவ வேண்டியது அவசியமாகும். இது நிறுவன நிதித்துறையின் முக்கியப் பணியாகும்.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்கள் சுய வேலையில் ஈடுபடுவதற்கு உதவும் வண்ணம் குறைந்த வட்டிக்கு நீண்ட காலத் தவணைகளில் கடன்கள் அளிக்கப்படுகின்றன. சில குறிப்பிட்ட இனங்களுக்கு மானியமும் அளிக்கப்படுகின்றது. வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள நலிந்த பிரிவினர் மேம்பாட்டுக்காக ஒவ்வொரு ஆண்டும் அளிக்கப்படும் கடனுதவி மேன்மேலும் அதிகரித்து வருகிறது. குறைந்த பட்சம் ரூ. 500ல் இருந்து உயர்ந்த பட்சம்ரூ.5000 வரை சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் வாழ்வு நலம் பெறக் கடன் வழங்கப்படுகிறது.

விவரம் கீழ் வருமாறு:

| | பயனடைந்தோர் எண்ணிக்கை (இலட்சத்தில்) | கடன்தொகை (ரூபாய், கோடியில்) |
|---|---|---|
| 1983-84 | 3.76 | 93.76 |
| 1984-85 | 8.31 | 240.00 |
| 1985-86 | 9.93 | 300.00 |

**வெள்ள நிவாரணம்:**

1985 ஆம் ஆண்டில் சென்னை மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட நலிவுற்ற பிரிவினருக்கு உதவுவதற்காகவும், அவர்கள் மீண்டும் அவர்களது பணியைத் தொடங்கி மறுவாழ்வு பெறவும் நகரிலுள்ள அனைத்துப் பொதுத்துறை நிறுவனங்களும் கடன் உதவி அளித்துள்ளன.

1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 24,003 பேருக்கு ரூ. 2.44 கோடி கடன் உதவி அளிக்கப்பட்டது.

கடன் வழங்கு திட்டங்களில் பலவற்றில் இத்துறை ஆற்றி வரும் பணிகளில் முன்னேற்றம் காணப்படுகின்றது. உதாரணமாக முன்னுரிமைப் பிரிவுகளுக்காக 1982 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ. 547 கோடி படிப்படியாக முன்னேறி 1985 ஆம் ஆண்டு ரூ.1,024 கோடி கடன் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இது போன்றே மாவட்டக் கடன் வழங்கும் திட்டங்களில் பல துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியீடு 1984 ஆம் ஆண்டு ரூ.566 கோடியாகும். 1986 ஆம் ஆண்டு இத்திட்டங்களுக்கு ஒதுக்கீடு ரூ.964 கோடியாக உயர்ந்துள்ளது. சமுதாயத்தின் நலிவுற்றோருக்குக் கடன் வழங்குவதில் 1983-84 ஆம் ஆண்டில் 3.76 லட்சம் நபர்கள் பயன் அடைந்துள்ளார்கள். அவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 93.76 கோடியாகும். 1985-86-ல் ரூ. 300 கோடி கடன் வழங்கப்பட்டு 9.93 இலட்சம் நபர்கள் பயன் அடைந்துள்ளார்கள். இந்த முன்னேற்றம் 1983ஆம் ஆண்டிலிருந்து கணக்கிடும்போது 200 சதம் உயர்ந்துள்ளது.





# மின் உற்பத்தியில் தன்னிறைவு.

வளர்ந்து வரும் தமிழகத்தில் பொருளாதார முன்னேற்றத்திற்கும் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், மின்சாரம் இன்றியமையாததாகும். வளரும் தேவைகளை முழுவதுமாகப் பூர்த்தி செய்யுமளவிற்கு மின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்பதும், மின்சக்தியின் பயன்களை ஏழை, எளியவர்களும், முக்கியமாக வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களும் பெற வேண்டும் என்பதும் இவ்வரசின் குறிக்கோளாகும்.

மின் துறையில் கடந்த ஒன்பது ஆண்டுகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களின் விவரங்கள் அட்டவணை 1ல் தரப்பட்டுள்ளன.

மின் உற்பத்தியில் தமிழ்நாடு பற்றாக்குறை மாநிலமாக இருந்து வந்ததைக் கருத்தில் கொண்டு மின் உற்பத்தித் திட்டங்களுக்கு இவ்வரசு முன்னுரிமை வழங்கி வருகிறது. நாலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மின் திட்டப் பணிகளுக்காகச் சராசரி ஆண்டொன்றிற்கு ரூ. 43 கோடி அளவே செலவு செய்யப்பட்டது. ஆனால் இவ்வரசு பொறுப்பேற்றபின் மின்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு கடந்த ஒன்பது ஆண்டுகளில் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு 1985-86ல் ரூ.333 கோடி செலவு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஒன்பது ஆண்டுக்காலத்தில், இந்த மாநிலத்தில் 1475 மெ.வா. அளவிற்குப் புதிய மின் திட்டங்கள் பயனுக்கு வந்துள்ளன. அவற்றின் விவரங்கள் அட்டவணை 3-ல் தரப்பட்டுள்ளன.

இந்தப் புதிய மின் நிலையங்கள் பயனுக்கு வந்ததன் பயன் தமிழ்நாட்டின் மின் உற்பத்தித் திறன் 2,364 மெ.வாட்டிலிருந்து 3,809 மெ.வாட்டிற்கு அதிகரித்துள்ளது. 1976-77-ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்குக் கிடைத்த மொத்தமின் சக்தியின் அளவு 8,350 மி.யூ. 1985-86-ஆம் ஆண்டு இது 13,273 மி.யூ. ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தித் திறன் சுமார் 36 விழுக்காடு என்ற அளவே இருந்து வந்தது. இம்மாநிலத்தில் மின் பற்றாக்குறையைப் போக்க மின் உற்பத்தி நிலையங்களின் உற்பத்தித் திறனைப் பெருமளவில் அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அனல் மின் நிலையங்களின் மேம்பாட்டுத் திட்டங்கள் திட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டன. இதன் மூலம் எண்ணூர் அனல் மின் நிலையத்தின் உற்பத்தித் திறன் 36 விழுக்காடு என்ற அளவிலிருந்து 1985-86-இல் 52 விழுக்காடு என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. இதேபோல் தூத்துக்குடி அனல் மின் நிலையமும் 1980-81-ல் 40 விழுக்காடு என்ற அளவிலிருந்து1985-86-ல் 65.5 விழுக்காடு என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது.

எண்ணூர் அனல் மின் நிலையத்தின் உற்பத்தி அதிகரித்துள்ளதற்காக ரூ. 4 இலட்சமும் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் உற்பத்தி அதிகரித்துள்ளதற்காக ரூ. 5.6 இலட்சமும் பரிசுத் தொகையாக மத்திய அரசு அளித்துள்ளது என்பது மிகவும் பெருமைப்படக் கூடியதாகும்.

ஏழாவது திட்டக் காலத்தில் மின்சார வளர்ச்சிக்காக ரூ. 2,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது ஆறாவது திட்டக் காலத்தில் செலவிடப்பட்ட தொகையைப்போல் இரண்டு மடங்கிற்கும் அதிகமாகும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மாநிலம் செலவு செய்யும் ரூ. 5,750 கோடியில் இது 35 விழுக்காடு அளவாகும். இத்திட்டக் காலத்தில் சுமார் 1,416 மெ.வா. நிறுவுத்திறன் கூடுதலாக இயக்கத்திற்கு வரும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில், தமிழகம் அண்டை மாநிலங்களிலிருந்து கணிசமான அளவு மின்சாரத்தை வாங்கிக் கொண்டிருந்தது. இந்த நிலை மாறி தற்பொழுது ,தமிழ்நாட்டிற்குத் தேவையான மின்சாரம் முழுவதும் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. மின்உற்பத்தியில் தன்னி

றைவை நோக்கித் தமிழகம் சென்று கொண்டுள்ளது.

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, குறிப்பாக குறைந்த வருவாயுடைய விவசாயிகளுக்கு எல்லா வகைகளிலும் உதவி செய்ய வேண்டும் என்ற இவ்வரசின் கொள்கைக்கிணங்க பம்பு செட்டுகளுக்கு மின் கட்டணம் ஜூலை1976-ஆம் ஆண்டுக்கு முன் 16 காசாக இருந்தது 14 காசாகக் குறைக்கப்பட்டது.

பின்பு 1979-ஆம் ஆண்டில், இக்கட்டணம் சிறு விவசாயிகளுக்கு 12 காசாகக் குறைக்கப்பட்டது. மற்ற விவசாயிகளுக்கு 15 காசாக மாற்றப்பட்டது. அதன் பிறகு 15.9.84 லிருந்து விவசாய நிலத்தில் பெறும் வருமானத்தை மட்டுமே சார்ந்துள்ள குடும்பங்களைக் கொண்ட சிறு விவசாயிகளுக்கு மின்சாரம் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

கிராமப்புறங்களில் வாழும் சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு மின்சக்தியின் நன்மைகள் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு விளக்குத் திட்டத்தை இவ்வரசு 1979இல் துவக்கி வைத்தது. இதன்மூலம் இதுவரை 7.1 இலட்சம் குடிசைகள் பயன் பெற்றுள்ளன. 15.9.84 முதல் இத்தகைய மின் இணைப்புகளுக்கு மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறது.



சேர்வலாறு அணையும், மின் நிலையமும்.

இந்தியாவிலேயே முதல் முறையாகத் தூத்துக்குடியில் 550 கி.வா. திறனுடைய ஒரு காற்றாடிப்பண்ணை நிறுவப்பட்டு 1986ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. மலைவாழ் மக்கள் பயனடையும் வகையில் மலைப்பாங்கான இடங்களில் உள்ள 33 கிராமங்களுக்கு சூரிய ஒளிகொண்டு இயங்கும் தெரு விளக்குகள் நிறுவப்பட்டுள்ளன.

மின் பற்றாக்குறையை அறவே நீக்கி, மின் உற்பத்தியில் தமிழ்நாடு தன்னிறைவு அடைய வேண்டும் என்பதே இவ்வரசின் நோக்கமாகும். இந்த முயற்சியில் அரசு வெற்றி பெறும் வகையில் விரைந்து செயலாற்றி வருகிறது.

**அட்டவணை—1**

| விவரம் | 1976—77 | 1985—86 |
|---|---|---|
| நிறுவுத்திறன் (மெ.வா) | 2364 | 3809 |
| மின் உற்பத்தியும் கொள்முதலும் (மியூ) | 8350 | 13273 |
| தனிநபர் பயன்படுத்தும் அளவு (யூ) | 146 | 203 |
| நுகர்வோர் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 3223 | 62.00 |
| துணைமின் நிலையங்கள் (எண்களில்) | 304 | 461 |
| மின்பங்கீட்டு நிலையங்கள் (எண்களில்) | 42,499 | 64969 |
| மொத்த கம்பித்தொடர் (கி.மீ) | 2,85,508 | 3,73,825 |
| மின்வசதி பெற்ற கிராமங்கள் (எண்களில்) | 15,516 | 15,715 |
| மின்வசதி பெற்ற ஆதிதிராவிடர் குடியிருப்புகள் (எண்களில்) | 24,608 | 26,211 |
| மின்வசதி பெற்ற பம்பு செட்டுகள் (எண்களில்) | 7,84,643 | 10,74,184 |
| மின்வசதி பெற்ற குடிசைகள் (எண்களில்) | — | 7,10,115 |

**அட்டவணை—2**

| திட்டத்தின் பெயர் | நிறுவுத் திறன் (மெ. வா) | இயக்கிவைக்கப்பட்ட நாள் |
|---|---|---|
| குந்தா புனல்மின் திட்டம் 3-ஆம் நிலை 3-ஆம் பிரிவு | 30 | 1978-பிப்ரவரி |
| சுருளியாறு புனல் மின்திட்டம் | 35 | 1978-ஆகஸ்ட் |
| குந்தா புனல் மின்திட்டம் 4ஆம்நிலை விரிவாக்கம் | 50 | 1978-அக்டோபர் |
| தூத்துக்குடி அனல்மின் நிலையம் முதல் பிரிவு | 210 | 1979-ஜூலை |
| தூத்துக்குடி அனல் மின்நிலையம் 2ம் பிரிவு | 210 | 1980-டிசம்பர் |
| தூத்துக்குடி அனல்மின் நிலைம் 3-ஆம்பிரிவு | 210 | 1982-ஏப்ரல் |
| சேர்வலாறு புனல் மின்திட்டம் | 20 | 1986-மார்ச் |
| மொத்தம் | 795 | |
| கல்பாக்கம் அணுமின்நிலையம் முதல்பிரிவு (மத்திய அரசுத்துறை) | 235 | 1983-ஜூலை |
| கல்பாக்கம் அணுமின்நிலையம் இரண்டாம் பிரிவு (மத்திய அரசுத்துறை) | 235 | 1985-செப்டம்பர். |
| நெய்வேலி இரண்டாவது அனல் மின்திட்டம் முதல் பிரிவு (மத்திய அரசுத்துறை) | 210 | 1986-ஏப்ரல் |
| ஆக மொத்தம் | 1475 | |





# சாலவும் சிறந்த ஆலயப் பணிகள்

நம் தமிழ்நாட்டில் பழங்காலத்தில் கோயில்களே கல்வி நிலையங்களாக விளங்கின, கலைவளர்க்கும் கழகங்களாகத் திகழ்ந்தன. ஏழை எளியவர்க்கு உணவளித்துப் பாதுகாக்கும் அறச்சாலைகளாக அமைந்திருந்தன. மருத்துவ மனைகளாகப் பணிபுரிந்தன. தொழில் தரும் நிறுவனங்களாகத் தொண்டாற்றின. பொது மக்களுக்குப் பொருள் கொடுத்தும் வாங்கியும் உதவி புரிந்தும் நிதி நிலையங்களாக இயங்கின. இவ்வாறு நம் தமிழகத்தில் சமய இயல், சமுதாய இயல், கலையியல், கல்வியியல், பண்பாட்டியல், பொருளியல், நாகரிக இயல் முதலிய பல்வேறு துறைகளிலும் தொடர்பு கொண்டு மக்கட் சமுதாயத்திற்கு நலன்கள் பல செய்து வந்த திருக்கோயில்கள் ''சமுதாய நல நிலையங்கள்'' ஆகத் திகழ்ந்த வரலாற்றை நமக்கு இலக்கியங்கள் படம் பிடித்துக் காட்டியுள்ளன.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆளுகையின் கீழ் 34,340 சமய நிறுவனங்கள் தற்போது உள்ளன. இதில் திருமடங்கள் 56ம் சேரும். இவற்றில் ஆண்டு வருமானம் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டன 186 நிறுவனங்கள், ஆண்டுவருமானம் ரூ.10,000க்கு மேற்பட்டவை 1,612 நிறுவனங்கள். ஆண்டு வருமானம் ரூ. 10,000-/க்குக் கீழ்ப்பட்டன 32,542 நிறுவனங்கள். இந்நிறுவனங்கள் அனைத்திலிருந்தும் பெறப்படும் ஆண்டு வருமானம் சுமார் 22.88 கோடி ரூபாய்.

ரூபாய் பத்தாயிரத்திற்குக் குறைவான ஆண்டு வருமானம் உடையவ்யாய் விளங்கும் ஆலயங்களில் சில ஒரு வேளை பூசை செய்வதற்குக்கூட வழியில்லாமல் இருக்கும் சிறுமை நிலையைப் போக்கி, அறநிலையத்துறை கொண்டு வந்து நிறைவேற்றி நடத்திக்கொண்டிருக்கும் ஒப்பற்ற திட்டமே ஆலய மேம்பாட்டுத் திட்டம் எனப்படும் எழுச்சிமிகு ஏழு கோடி ரூபாய்த் திட்டமாகும்.

வருவாய் அற்ற ஆலயங்களின் வழிபாட்டிற்கென வைக்கப்பட்ட ஐந்து கோடி ரூபாய் வைப்பு நிதி கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணிக்கென வைக்கப்பட்ட ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதி, ஆலயப் பணியாளர் மருத்துவம் மற்றும் அவர்தம் பிள்ளைகள் கல்வி நிதிக்காக அமைக்கப்பட்ட ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதி ஆகிய இம்மூன்று திட்டங்களுமே ஒரு சேர ஆலய மேம்பாட்டுத் திட்டம் அல்லது ஏழுகோடி ரூபாய் வைப்புநிதித் திட்டமென அழைக்கப்படுகிறது. ஆன்மீகத் தலைவர்களாலும் ஆன்றோர்களாலும் பெரிதும் வரவேற்றுப் பாராட்டப்பட்ட இத்திட்டம் 15.8.1984ஆம் நாளன்று மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு.இராம. வீரப்பன் அவர்களால் திருச்சி சமயபுரத்தில் தொடங்கி வைக்கப்பெற்றது. ஆலயங்களில் உபரித் தொகை 4½ கோடியிலிருந்து கடந்த ஏழெட்டு ஆண்டுகளில் 28 கோடிகளாக உயர்த்தப்பட்டுள்ளது. அவ்வாறு உயர்த்தப்பட்ட 28 கோடி ரூபாய்களில் ஏழு கோடி ரூபாய்கள் முப்பெரும் திட்டங்களுக்காக வங்கிகளில் வைப்புத் தொகையாக வைக்கப் பெற்றுள்ளன. அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி ஆலயம் மட்டும் இம்மூன்று திட்டங்களுக்காக 2½ கோடி ரூபாயை வைப்பு நிதியாக வழங்கியுள்ளது. எஞ்சிய 4½ கோடி ரூபாய்களை, இலட்ச ரூபாய்களுக்கு மேலே ஆண்டு வருமானம் பெற்று விளங்கும் இதர 69 ஆலயங்கள் வழங்கியுள்ளன.

வங்கிகளில் வைப்பு நிதியாக வைக்கப்பட்டுள்ள இவ்வேழு கோடி ரூபாய்கள் கரையாது கட்டாகப் பேணப்படுகிறது. அத்தொகையிலிருந்து வட்டியாக ஆண்டொன்றுக்குப் பெறப்படும் சுமார் எழுபத்தைந்து லட்ச ரூபாய்கள் மட்டுமே ஆலய மேம்பாட்டுத் திட்டங்களுக்குப் பயன் படுத்தப்படும். இப்புதுமையான திட்டம் அறிவிக்கப்பட்ட ஓராண்டிற்குள்ளாகவே இத்திட்டங்களின் செயல்முறை துவக்க விழாவும் 20.7.1985 அன்று தஞ்சை பெருவுடையார் ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடந்தேறியது. கிராமப்புறக்கோயில் திருப்பணிக்காக பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் நிதியினின்றும் ஒதுக்

கீடு செய்யப்பட்டுள்ள ரூபாய் ஒரு கோடியினின்றும் கிடைத்துள்ள வட்டி வருவாயினின்றும் அண்மையில் 13.3.1986ஆம் நாளன்று சென்னை அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயிலில் நடைபெற்ற விழாவில் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தேர்வு செய்யப்பட்ட 150 கிராமப்புறத் திருக்கோயில்களுக்கு ரூ. 10,000 வீதம் ரூ. 15 லட்சம் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் நிதி வழங்கப்பட்டது.

ஒரு வேளை பூசைக்குக்கூட வருமானம் இல்லாத 32 ஆலயங்களுக்குத் தலா ஐயாயிரம் ரூபாய் பூசைச் செலவிற்காக வழங்கப்பட்டுள்ளது. ஆலயப் பணியாளர்களுக்கு மருத்துவ நிதி தலா ரூ.100 வீதம் பலருக்கும், கல்வி நிதி தலா ரூ. 100 வீதம் பலருக்கும் வழங்கி இத்திட்டம் முதல் கட்டமாகச் செயல்படுத்தப் பட்டிருப்பது மட்டும் அல்லாமல், வரும் ஆண்டுகளில் மேலும் இத்திட்டங்களால் மிகஅதிகமாக ஆலயங்கள் பயன்பெற இருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாலய மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட 20.7.85ஆம் நாளன்றே இத்திட்டங்களில் குறிப்பிடப்படாத மற்றுமொரு திட்டமும் செயல்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஆலயப் பணியாளர்களுக்குச் சம்பளம் கூடத் தரமுடியாத நிலையில் தஞ்சையிலும், திருநெல்வேலியிலும் பல கோயில்கள் உள்ளன. இக்கோயில்களுக்கு நிலங்கள் ஏராளமாக இருந்தபோதிலும், அவற்றைப் பயிர் செய்யும் குத்தகைதாரர்கள் பலர் விளைவில் 25 சதவீதம் என விதிக்கப்பட்டுள்ள குத்தகையை ஆலயங்களுக்குச் சரிவரச் செலுத்துவதில்லை. குத்தகையை முறையாகச் செலுத்தாத குத்தகைதாரர்களை எதிர்த்து வழக்கு மன்றத்திற்குப் போகவும் முடியாமல், அவர்களை வெளியேற்றவும் முடியாமல் மோரடோரியம் ( Moratorium ) என்ற பாதுகாப்புச் சட்டமும் அமலில் இருந்தபடியால், 1392ஆம் பசலி முடிய வரவேண்டிய குத்தகைப் பாக்கி வேறு ரூ. 31.5 கோடியாக உயர்ந்துவிட்டது. இதனால் தஞ்சையிலும், திருநெல்வேலியிலும் ஆலயப் பணியாளர்கள் 930 பேருக்குச் சம்பள பாக்கி வழங்கப்படாமல், அவர்கள் பரிதவித்த நிலையையும் அறநிலையத்துறை பரிவுடன் பரிசீலித்து ,930 பேருக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள பாக்கி ரூ. 5,64,856 மற்றும் 41 காசுகளையும் இவ்வேழு கோடி ரூபாய்த் திட்டத்தின் துணை கொண்டு ஆலயப் பணியாளர்களின் சம்பள பாக்கியையும் 20.7.1985ல் தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தில் நடைபெற்ற ஆலய மேம்பாட்டுச் செயல்முறைத் தொடக்க விழாவில் தீர்த்து வைத்ததும் குறிப்பிடத் தக்க சாதனையாகும்.

குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பு வழங்கி வந்த மோரடோரியம் என்ற பாதுகாப்புச் சட்டமும், 1985 ஜனவரி மாதத்தோடு காலாவதியாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பல ஆண்டுகளாகக் குத்தகைதாரர்கள் சேர்த்து வைத்துள்ள குத்தகை பாக்கிகளை 1987ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முடிவதற்குள் ஐந்து தவணைகளில் அவர்கள் கட்டியாகவேண்டும். குறிப்பிட்ட தவணைகளில் பாக்கியைச் செலுத்தவில்லையானால், உடனடியாக அத்தகையவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க அறநிலையத்துறை வழிவகை செய்து, நிலுவைகளை வேகமாக வசூலிக்க ஆவன செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆலய நிர்வாக அதிகாரிகள், உதவி ஆணையர்கள், துணை ஆணையர்கள் ஒவ்வொருவருக்கும் நிலுவைகளை வசூலிக்க குறியீடு நிர்ணயம் செய்து, அறநிலையத்துறை வேகமாகச் செயல்பட்டு வருகிறது.

தமிழக அரசின் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை எண்ணற்ற சமுதாய நலப்பணிகளையும் மேற்கொண்டு செயல்படுத்தி வருவது இங்கே குறிப்பிடத்தக்கது. அறநிலையத்துறையின் கீழ் தற்போது கல்வி நிறுவனங்கள் 44, பெண்கள் தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளி 1, அன்பு இல்லங்கள் 35 ,மருத்துவமனைகள் 20, நூலகங்கள் 201 ஆகியவை இயங்கி வருகின்றன. இவை மட்டுமல்லாமல் சமுதாய வளர்ச்சிக்கு அறநிலையத்துறை மேலும் பல பணிகளை நிகழ்த்தி வருகின்றது. அவற்றில் ஒன்றுதான் சுதந்திரத் திருநாளில் ஆண்டுதோறும் நடத்தப்படும் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சிகள்.

''எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம். எல்லோரும் இந்நாட்டு மக்கள்'' என்று பாடிய மகாகவி பாரதியார், ''சாதிகள் இல்லையடி பாப்பா'' எனச் சாற்றினார். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திருமூலரும், ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்று அறிவுறுத்தியிருக்கிறார். உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவரும் ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்று பாடியிருக்கிறார். இறைவன் ஆலயத்தில் அரிசனரும் அந்தணரும் சரிநிகர் சமமானமானவர்களே என்பதை வற்புறுத்தும் பொருட்டு 1981-ஆம் ஆண்டு







முதல், ஆகஸ்ட் 15-ஆம் நாளில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சிகள் அறநிலையத்துறையால் சிறப்புற நடத்தப்பட்டு வருகின்றன. 1981ஆம் ஆண்டு 3847 ஆலயங்களில் 7 இலட்சம் மக்கள் கலந்து கொண்ட பொது விருந்து ரூ. 8.59 இலட்சம் செலவில் நடத்தப்பட்டது. 1982-ஆம் ஆண்டு 3900 திருக்கோயில்களில் 9 லட்சம் மக்கள் கலந்து கொண்ட பொது விருந்து ரூ. 10.76 லட்சம் செலவில் நடத்தப்பட்டது. 1984-ஆம் ஆண்டு 2700 திருக்கோயில்களில் 7 இலட்சம் மக்கள் கலந்து கொண்ட பொது விருந்து ரூ.13 இலட்சம் செலவில் நடத்தப்பட்டுள்ளது. 1985-ஆம் ஆண்டு 2600 திருக்கோயில்களில் ரூ. 9,14,000 செலவில் பொது விருந்து நடத்தப்பட்டுள்ளது. 1983-ஆம் ஆண்டு மட்டும் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அனுதாபம் தெரிவித்து இப் பொதுவிருந்து நிகழ்ச்சி நடத்தப்படவில்லை.

பொது விருந்து திட்டம் தொடங்கப்பட்ட அதே 1981ஆம் ஆண்டு முதல் வசதி மிக்க ஆலயங்களில் அறநிலையத்துறையால் தொடங்கி நடத்தப்படுவதே சிறப்புத் திருமணங்கள் எனும் இச் சீரிய திட்டமாகும். ஏழைகள் பலர் வயது வந்த தம் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து பார்க்க முடியாமல் அதற்குக் குறைந்த பட்சச் செலவாகத் தேவைப்படும் ஒரு ஆயிரம் ரூபாய் கூட இல்லாமல் வாடி நிற்கிறார்கள். எண்ணற்ற விதவைத் தாய்மார்கள், வயது முதிர்ந்த வறுமையில் வாடும் பெற்றோர்கள் படும் துன்பத்தைத் துடைக்க, அறநிலையத்துறை கண்ட திட்டமே சிறப்புத் திருமணத் திட்டமாகும். மாண்புமிகு அமைச்சர்கள், ஆன்மீகத் தலைவர்கள் சட்டமன்ற, நாடாளுமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், மடாதிபதிகள், பொது மக்கள் ஆகிய அனைவரும் ஒரு சேர வாழ்த்த இத்தகு திருமணங்கள் நடத்தப்பெறுவதால் ,இவற்றை இலவசத் திருமணங்கள் என்று கூறாமல், சிறப்புத் திருமணங்கள் என்றே குறிப்பிடல் வேண்டும் என்பது அரசின் விருப்பமாகும். 1981ஆம் ஆண்டில் 220, 1982-ல் 622, 1983-ல் 182, 1984-ல் 112, 1985-ல் 109 ஆக இதுவரை மொத்தம் 1245 திருமணங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இதில் பயன்பெற்றவர்கள் 979 ஜோடி, ஆதிதிராவிடர் மணமக்கள், 209 ஜோடி பிற்பட்ட மணமக்கள், 44 ஜோடி கலப்புத் திருமணங்கள்மணமக்கள், 13ஜோடி இதர வகுப்பைச் சேர்ந்த மணமக்கள் ஆவர். ஒரு திருமணத்திற்கு சுமார் ரூ.750 விருந்து ரூ.1,000 வரை அந்தந்தத் திருக்கோயில் உபரி நிதியிலிருந்து செலவிடப்பட்டுகிறது. இது வரை இத்திருமணங்களுக்காக ரூ. 9,61,200 வசதிமிக்க அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் போன்ற ஆலயங்களிலிருந்து செலவிடப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு வசதியற்றவர்க்குச் சிறப்புத் திருமணங்கள் நடத்தி வைக்கப்படுவதுடன் வசதி குறைந்தவர்கள் திருமணங்கள் நடத்திக் கொள்ளத் திருமணமண்டபங்கள் தேவைப்படுவதையும் அறநிலையத்துறை உணர்ந்து, இது வரை 109 திருமண மண்டபங்களைக் கட்டுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. அறநிலையத்துறையின் திருமண மண்டபங்களே, நடுத்தர ,கடைத்தர மக்களுக்கு வரப்பிரசாதம்போல் குறைந்த வாடகையில் கிடைக்கப் பயன்பட்டு வருகின்றன.

தல தரிசனம் காண வேண்டிப் புறப்பட்டு வரும் தமிழக மக்களுக்கும் இதர மாநில மக்களுக்கும் தங்குமிட வசதிகளைச் செய்து தருவதிலும் சிறப்பிடம் வகிக்கிறது. நம்முடைய அறநிலையத்துறை, திருக்கோயில்களில் இதுவரை 58 ஓய்வு விடுதிகளும், 231 குடில்களும், 951 அறைகளும் யாத்திரிகர்களும் வசதிகளுக்காக அமைத்திருக்கின்றது. மேலும் திருச்செந்தூர் ஜெயந்திநாதர் விடுதியில் முதல் மாடி, இரண்டாவது மாடி கட்ட ரூ. 18.36 இலட்சம், திருப்பரங்குன்றம்

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் 24 அறைகள் கொண்ட ஓய்வு விடுதி கட்ட ரூ. 5.60 இலட்சமும், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ஆலயத்தில் இப்போதுள்ள தங்கும் வசதிகளுடன் மேலும் 40 ஒற்றை அறைகள் கட்ட ரூ.17 இலட்சமும் அனுமதிக்கப்பட்டு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. தனியார் தங்குமிடங்களில் வசதிகள் குறைவாக இருந்தபோதிலும் மிக அதிகமான கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. அறநிலையத்துறை அமைத்துள்ள தங்குமிடங்களில் மிகக் குறைவான கட்டணங்களே வசூலிக்கப்படுகின்றன.

பழமையான கோயில்களைப் பழுது பார்ப்பது, திருக்குளங்களைச் சீரமைப்பது, தேர்களைச் செப்பனிடுவது போன்ற பல கோயிற்திருப்பணிகளையும் அறநிலையத்துறை முனைப்போடு செயல்படுத்தி வருகின்றது. அரசாங்கமும் இப்பணிகளில் ஆர்வம் கொண்டு ஆண்டுதோறும் மானியம் வழங்கி வருகின்றது. 1981-82-ஆம் ஆண்டிற்கு ரூ 12 இலட்சமும், 1982-83ஆம் ஆண்டிற்கு ரூ 20 இலட்சமும், 1983-84ஆம் ஆண்டிற்கு ரூ. 23 இலட்சமும் 1984-85ஆம் ஆண்டிற்கு ரூ. 30 இலட்சமும் கோயிற் திருப்பணிகளுக்காக அரசு மானியம் வழங்கப்பட்டிருக்கின்றன. இவ்வரசு மானியங்களோடு அறநிலையத்துறையும் ஆலய நிதியிலிருந்து பெருமளவில் நிதி ஒதுக்கித் திருப்பணிகளைச் செய்து வருகின்றது.

உலகிலேயே மிக உயர்ந்த கோபுரமாக 13 நிலைகளுடன் அமைக்கப்பட்டு வரும் திருவரங்கம் கோபுரத்தில் 13-வது நிலை கோபுரக் கட்டுமானப் பணிக்கு ரூ. 7 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டு திருப்பணி நடந்து வருகின்றது. அருள்மிகு காசிவிஸ்வநாதசுவாமி ஆலய இராசகோபுரத் திருப்பணி 90 இலட்ச ரூபாய், அருள்மிகு சிதம்பரம் சபாநாயகர் திருக்கோயில் திருப்பணி 38 இலட்ச ரூபாய், அருள்மிகு மாங்காடு காமாட்சியம்மன் கோயில் திருப்பணி 8 இலட்ச ரூபாய், சேலம் கோட்டை மாரியம்மன் ஆலயத் திருப்பணி 17 இலட்ச ரூபாய், ஸ்ரீரங்கம் ரெங்கநாத சுவாமி திருக்கோயில் திருப்பணி ஒரு கோடி ரூபாய், திருவாரூர் தியாராஜ சுவாமி திருக்கோயில் இராஜகோபுரத் திருப்பணி ரூ.11.57 இலட்ச ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம், திருச்செங்கோடு மலை மீது அமைந்துள்ள அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலுக்கு வாகனங்கள் மூலம் மலை மீது பக்தர்கள் சென்று வழிபடுவதற்கு வசதியாக மலைப்பாதை ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க, மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, தமிழ்நாடு கட்டுமானக் கழகம் மேற்படி மலைப்பாதை அமைக்கும் வேலையைத் துரிதமாகச் செய்து வருகிறது. அரசு மானியமாக ரூ. 5 இலட்சம் வழங்கப்பட இருக்கிறது. இதுபோன்ற பல திருப்பணிகளும் அறநிலையத்துறையின் சார்பாக நடைபெற்று வருகின்ற எண்ணற்ற திருப்பணிகளில் குறிப்பிடத்தக்க சிலவாகும்.

திருக்கோயில்களில் உள்ள பஞ்சலோக விக்கிரங்கள் விலை மதிப்பற்றவை. அவற்றைப் பாதுகாக்க தக்க பாதுகாப்புப் பணிகளையும் அறநிலையத்துறை சிறப்பாகச் செய்து வருகின்றது. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 2000 உலோகத்திருமேனிகள் உள்ளன. இவற்றைப் பாதுகாக்க அருள்மிகு திருவாரூர் தியாகராஜசுவாமி ஆலயத்தில் ரூ. 12,90,000 மதிப்பீட்டில் ஒரு சிலைகாப்புக் கூடம் அமைக்கும் பணியை அறநிலையத்துறை மேற்கொண்டு பணி முடியும் தருவாயில் உள்ளது. வங்கிகளிலுள்ளது போன்ற பாதுகாப்பான கதவுகள் பொருத்தப்பட்டுள்ளன. எளிதில் உடைக்க முடியாத கான்கிரீட்டு அறைகளும் உறுதியான தளமும் உள்ள பலமான கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மற்றும் திருவானைக்கா ஆகிய இரு இடங்களிலும் இதே போன்று பாதுகாப்பான சிலை பாதுகாப்புக் கூடம் ஏற்படுத்த மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு அரசு மான்யம் வழங்கப்பட்டு வேலை துவங்கப்பட உள்ளது.



இவ்வாறு அறநிலையத்துறையின் சீரிய முயற்சியால், எண்ணற்ற திருப்பணிகள் நடந்து முடிந்தும், நடைபெற்றுக் கொண்டும் இருக்கின்றன. நாளும் தமிழ் இன்னிசையால் சமயம் வ்ளர்த்த ஞானசம்பந்தர் வாழ்ந்த நாட்டில் தற்போது நாளும் கும்பாபிஷேகங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. 1981ல் 88 கோயில்களிலும், 1982-ல் 69 கோயில்களிலும், 1983-ல் 114 கோயில்களிலும், 1984-ல் 84 கோயில்களிலும், 1985-ல் 117 கோயில்களிலும் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவில் திருப்பணிகள் முடிந்து கும்பாபிஷேகங்கள் நடந்தேறியுள்ளன. கடந்த 8 ஆண்டுக் காலத்தில் மட்டும் ஏழு தங்கத் தேர்கள் அமைக்கப்பட்டுள்ளன. சங்கரன் கோயில், சங்கரநாயனார் ஆலயத்தில் அறநிலையத்துறையின் பத்தாவது தங்கத் திருத்தேர் 15.12.1985ல் வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது.

ஆலயங்கள் வளர்ந்தால் மட்டும் போதாது, ஆலயப் பணியாளர்கள் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் வாழ்ந்தால் மட்டும் போதாது, பல கோடி மக்களை நெறிப்படுத்த, ஆலயங்கள் தூய்மையுடன் பராமரிக்கப்பட வேண்டியதும் அவசியமாகும். திருநாவுக்கரசர் பெருமான் உழவாரத் திருப்பணி புரிந்து, ஆலயத் தூய்மையைப் பராமரித்த அருங்குணச் செல்வர் ஆவார். அவர்தம் வழியில் ஆலயங்களில் தூய்மையைப் பராமரிக்க அண்மையில் அறநிலையத்துறை மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் திருக்கோயில் தூய்மைப் பராமரிப்புப் பணியைத் தொடங்கி வைத்து, அத்தகைய பணியில் அனைத்து ஆலயங்களும் ஈடுபட ஆவன செய்துவருகிறது.

கவிச் சக்கரவர்த்தி கம்பருக்கு அவர் பிறந்த தேரெழுந்தூரில் கம்பர் கோட்டம் ரூ. 20 இலட்ச செலவில் கட்டி அதனை 10.12.84ல் திறந்து வைத்திருக்கும் அறநிலையத்துறை, இளங்கோ அடிகளுக்கும், சேக்கிழாருக்கும் சிறந்த சமயச் சான்றோர்கள் பலருக்கும் கோட்டங்கள் அமைக்க முயன்று வருகின்றது.

இவ்வாறு அறநிலையத்துறை ஆற்றியிருக்கும் பணிகள் மிகப்பல. ஆற்ற வேண்டிய பணிகளும் மிகப்பல. ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் மகேசன் தொண்டே மக்கள் தொண்டாகவும், மக்கள் தொண்டே மகேசன் தொண்டாகவும் முனைந்து செயலாற்றி வரும் அறநிலையத்துறை வருங்காலத்திலும் பல சிறந்த செயற்திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றவும் உள்ளது.





# நீதி நிர்வாகம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கோட்பாடுகளுக்கிணங்க, அனைத்துக் குடிமக்களுக்கும் நீதி வழங்குவது இவ்வரசின் கொள்கையாகும். நீதியை நிருவகிப்பது நீதிமன்றங்களின் பொறுப்பாகும்.

அரசின் செயற்பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவினின்றும் இது தனித்துச் செயல்படுகின்றது. இம்மாநிலத்தில் நீதி வழங்கும் தலைமை வாய்ந்த நீதிமன்றம் உயர்நீதிமன்றமாகும். உயர் நீதிமன்றத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 25 ஆகும்.

பதிவாளர், உயர்நீதிமன்ற அலுவலகத்தின் நிர்வாகத் தலைவர் ஆவார். இவருக்கு உதவியாகப் பல அதிகாரிகள் அதாவது, கூடுதல் பதிவாளர், மாஸ்டர், துணைப் பதிவாளர், நீதிமன்றம் நியமித்த கணக்கு ஆய்வாளர், வழக்குகளை வகைப்படுத்தும் தனி அதிகாரி, உதவிப் பதிவாளர்கள், துணை உதவிப் பதிவாளர்கள், முதுநிலைக் கணக்கு அதிகாரி ஆகியோர் உள்ளனர். உயர்நீதி மன்ற அலுவலகம் பல பிரிவுகளைக் கொண்டது.

நீதி வழங்குவதோடு, மாநில நீதித்துறையில் நிருவாகத்திற்கும் உயர்நீதிமன்றம் பொறுப்பு வகிக்கிறது.

குற்றவியல் நீதி மன்றங்களில் வழக்குகளின் விசாரணையை விரைவுபடுத்த வேண்டுமென்ற நோக்குடன், ஒவ்வொரு குற்றவியல் நீதிமன்றத்திற்கும், அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர் (நிலை) ஒருவரை அரசு நியமித்துள்ளது.

பயணச்சீட்டு இல்லாமல் பயணம்செய்வது போன்ற குற்றங்கள் குறித்து இந்திய இரயில்வே சட்டத்தின் கீழ் விசாரணை செய்து தீர்ப்பளிப்பதற்காக எழும்பூர் இரயில்வே நிலையத்தில் ஒன்றும், சென்ட்ரல் இரயில்வே நிலையத்தில் ஒன்றுமாக இரு இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன.

இம்மாநிலத்தில் 66 சார்நிலை நீதிமன்றங்கள் உள்ளன.

மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள் 127 உள்ளன. அத்துடன் மாவட்ட முன்சிப் கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் 6ம் மாவட்ட முன்சிப் நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றங்கள் 2ம் உள்ளன.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள் சென்னையில் நான்கும், மதுரையில் இரண்டும், கோயம்புத்தூரில் ஒன்றும் உள்ளன. மாநிலம் முழுவதிலும் அதிகார வரம்பைச் செலுத்தும் தொழிற்சாலைகள் நடுவர் மன்றம் ஒன்றும் சென்னையில் உள்ளது.

இம்மாநிலத்தில் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் 14 உள்ளன. இவற்றுடன், பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்ய கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒன்றும், திருநெல்வேலி மாவட்டத்தில் ஒன்றும், கும்பகோணத்தில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக நீதித்துறை கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களும், வனம் தொடர்பான குற்றங்களை விசாரணை செய்ய சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் தருமபுரி மாவட்டத்தில் கூடுதல் தனி நீதிபதி நீதிமன்றம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன.

மதுவிலக்கு வழக்குகளை விசாரணை செய்வதற்காக கூடுதல் நீதிமன்றங்கள் 22, குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்காகக் கூடுதல் நீதிமன்றங்கள் 4, வணிகக் குற்றங்களை விசாரணை செய்வதற்காகக் கூடுதல் நீதி மன்றங்கள் 3 ஆகியவை உட்பட மொத்தம் 58 நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் 144 உள்ளன.

''தீர்ப்புத் திரட்டு'' என்னும் சட்டத்தமிழ் (திங்கள்) இதழ் ஒன்றை உயர்நீதிமன்றம் வெளியிட்டுள்ளது.

ஏழை எளியவர்களுக்கு சட்ட ஆலோசனை நல்கும் பொருட்டு 1977ஆம் ஆண்டில் அரசு அமைத்த தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழு உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதிகள் இருவரின் கீழ் செயல்பட்டு வருகிறது. மாவட்டங்களிலும் வட்டங்களிலும், சட்ட உதவிக் குழுக்கள் இருப்பதுடன், மாநகரிலும், மாவட்டங்களிலும் சட்ட ஆலோசனைப் பிரிவுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள 34 சட்ட உதவி மையங்களுடன் 18 மாவட்டக் குழுக்களும், 85 வட்டக் குழுக்களும் உள்ளன. இக்குழுவின் செலவிற்கு அரசு மானியம் அளிக்கிறது.

இக்குழு ஏழை எளியவர்களுக்கும், சட்ட ஆலோசனை பெறத் தகுதியுடையோருக்கும், சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கும், சட்ட ஆலோசனை வழங்கி வருகிறது.

# குடும்ப நலத் திட்டம் மக்கள் இயக்கமாகிறது

குடும்பநலத் திட்டத்தை, மக்கள் இயக்கமாகக் கொண்டு அரசியல் கட்சிகள், மதச் சார்புள்ள அமைப்புகள் ஆகியவற்றின் முழு ஆதரவுடன் அனைவரும் முன் வந்து ஏற்றுக் கொள்ளும் வகையில் தமிழக அரசு, 1956ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் செயற்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் தொண்டு நிறுவனங்கள் பலவும் ஈடுபட்டுள்ளன.

தமிழ்நாட்டில் இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுவதை பிறப்பு, இறப்பு பற்றிய பின்வரும் புள்ளிவிவரங்கள் தெளிவுபடுத்துகின்றன.

| மக்கள் தொகை வளர்ச்சி வீதம் 1971-81 | சதவீதம் |
|---|---|
| இந்தியா | 25.00 |
| தமிழ்நாடு | 17.50 |

**தம்பதியினர் குடும்பநலக்காப்பு வீதம்**

குடும்பநலத் திட்டத்தின் வாயிலாக தம்பதியினர் நலக்காப்பு வீதம் ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. இதனைப் பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்.

| | | |
|---|---|---|
| 1981-82 | 28.9 | சதவீதம் |
| 1982-83 | 30.2 | ,, |
| 1983-84 | 34.2 | ,, |
| 1984-85 | 39.0 | ,, |
| 1985-86 | 43.5 | ,, |

குடும்ப நலஅறுவைச் சிகிச்சைக்குரிய தம்பதியினர் நலத்தைப் பாதுகாத்து அத்தகையோர் சதவீதத்தைப் பெருக்கி மக்கள் தொகை பெருக்கத்தைக் குறைப்பதே இதன் நோக்கமாகும். அதே சமயத்தில் பிறப்புவீதம், இறப்பு வீதம், குழந்தை இறப்பு வீதம் ஆகியவற்றைக் குறைப்பதிலும் கவனம் செலுத்தப்படும் தேசிய சுகாதாரக் கொள்கையாக இந்நாட்டில் கி.பி. 2000க்குத் திட்டமிடப்பட்ட இலக்குக்கு மாறாக 1990 ஆண்டில் 1000 பேருக்கு பிறப்பு இறப்பு வீதத்தை முறையே 21:9 ஆகக் குறைப்பதே நம் திட்டங்களின் நோக்கமாகும்.

**இலக்கும் எய்திய சாதனையும்**

1977-78 முதல் 1985-86 வரையிலான கால அளவுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்கிணங்க கருத்தடை அறுவைச் சிகிச்சையின் கீழ் எய்திய சாதனையைப் பின்வரும் விவர அறிக்கை காட்டுகிறது.

தமிழ்நாடு 1981-82, 1983-84, 1984-85, 1985-86-ஆம் ஆண்டுகளில் கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கு நிர்ணயித்த இலக்கைக் காட்டிலும் அதிக அளவு சாதனையை எய்தியுள்ளது என்பதை இவ்விவர அறிக்கையிலிருந்து காணலாம்.

பல்வேறு வகையிலும் குடும்ப நலத்திட்டத்தின் வெற்றிக்கு உழைத்து வரும் தமிழக அரசு 1986ஆம் ஆண்டினைத் திட்டமிட்ட குடும்ப நல ஆண்டாக அறிவித்துத் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. மத்திய அரசின் முதல் பரிசாக ரூ. 2.5 கோடி 1984-85-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் குடும்பநலத் திட்டச் சாதனைக்காக வழங்கப்பட்டது. தொடர்ந்து தமிழ்நாடு இரண்டாவது முறையும் முதலிடம் பெற்றுள்ளது. இத்தொடர் வெற்றிக்குக் காரணம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அளித்து வரும் ஆலோசனைகளும், ஊக்கமும் ஈடுபாடுமே ஆகும்.

| | தமிழ்நாடு | | இந்தியா | | தமிழ்நாடு |
|---|---|---|---|---|---|
| ஆண்டு | 1000பேருக்கு பிறப்புவீதம் | 1000பேருக்கு இறப்புவீதம் | 1000பேருக்கு பிறப்புவீதம் | 1000பேருக்கு இறப்புவீதம் | பிறந்த 1000 குழந்தைகளில் இறப்புவீதம். |
| 1977 | 29.3 | 13.7 | 33.0 | 14.7 | 113.5 |
| 1978 | 28.9 | 12.8 | 33.3 | 14.2 | 99.6 |
| 1979 | 29.1 | 12.0 | 33.2 | 12.8 | 98.5 |
| 1980 | 27.1 | 10.9 | 33.5 | 12.5 | 99.8 |
| 1981 | 26.1 | 10.9 | 33.9 | 12.5 | 91.2 |

| ஆண்டு | இலக்கு | சாதனை | சாதனைவீதம் |
|---|---|---|---|
| 1977-78 | 3,50,000 | 1,11,587 | 31.9% |
| 1978-79 | 2,76,700 | 2,16,478 | 78.2% |
| 1979-80 | 2,82,000 | 1,57,642 | 55.9% |
| 1980-81 | 1,82,000 | 1,38,831 | 76.2% |
| 1981-82 | 1,82,000 | 1,88,828 | 103.4% |
| 1982-83 | 2,92,000 | 2,66,279 | 91.2% |
| 1983-84 | 3,99.000 | 4,96,780 | 124.5% |
| 1984-85 | 4,75,000 | 5,25,431 | 110.6% |
| 1985-86 | 4,75,000 | 5,13,990 | 108.2% |



# அருந்தமிழ் நாட்டில் பெருந் தொழில்கள்

தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தும் சீரிய நோக்குடன் கீழ்க்கண்ட அரசு சார்பு நிறுவனங்களை இவ்வரசு அமைத்துள்ளது. தமிழ்நாடு அரசு தொழில் துறையின் நேரடிப் பார்வையில் இந்நிறுவனங்கள் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் அனைத்து வகைத் தொழிற்சாலைகளும் பெருகி வளமுறப் பாராட்டத்தக்க பணிகளை ஆற்றி வருகின்றன.

(1) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்
(2) தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம்.
(3) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்.
(4) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்.
(5) தமிழ்நாடு அச்சுத்தாள் காகித நிறுவனம்
(6) தமிழ்நாடு கனிம நிறுவனம்.
(7) தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம்.
(8) தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம்

தமிழ்நாட்டில் புதிய தொழில்களை அமைக்க முன்வருவோர்க்கு வேண்டிய எல்லா உதவிகளையும் தங்கு தடையின்றி இவ்வரசு செய்து வருகிறது. புதிய விண்ணப்பங்களை பரிந்துரை செய்து, இசைவுக் கடிதம் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட பின் அதைத் தொழில் உரிமங்களாக மாற்ற உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1977 முதல் 1986 மார்ச் மாதம் வரை 819 விண்ணப்பங்களைப் புதிய தொழில்கள் துவங்குவதற்காகப் பரிந்துரை செய்து இவ்வரசு மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. அவற்றுள் 468 தொழிற்சாலைகளுக்கு மத்திய அரசால் அனுமதியளிக்கப்பட்டும் 255 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டும் உள்ளன.

1985-ஆம் ஆண்டில் (டிசம்பர் வரையில்) தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளை அமைக்கத் தொழில் முனைவோருக்கு 97 இசைவுக் கடிதங்களும், 155 தொழில் உரிம மாற்றங்களும் வழங்கப்பட்டுள்ளன. 1985-ஆம் ஆண்டில் 35 எஸ். ஐ. ஏ. பதிவுகளும், 163 டி.ஜி.டி.டி. பதிவுகளும் செய்யப்பட்டுள்ளன.

இவ்வரசு எடுத்த தீவிர நடவடிக்கை மற்றும் தொடர்ச்சியான முயற்சிகளின் பலனாக 1977 முதல் 1986 வரை தமிழ்நாட்டில் ரூ. 1,600கோடிக்கு மேலாக முதலீடு செய்து புதிய தொழிற்சாலைகள்/விரிவாக்கப் பணிகள் மையஅரசைச் சார்ந்த நிறுவனங்களில் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

தொழில் வளர்ச்சியில் தமிழகம் சிறப்பு இடத்தைப் பெற்றுள்ளது. முன்னணியில் உள்ள முதல் நான்கு மாநிலங்களுள் ஒன்றாக உள்ளது.

பம்பாயிலுள்ள இந்தியப் பொருளாதார வளர்ச்சி ஆய்வு மையம் என்ற நிறுவனம், 1985 செப்டம்பர் மாதம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, பொதுவாகத் தொழில் வளர்ச்சியை நிர்ணயிக்கும் கீழ்க்கண்ட ஐந்து அம்சங்களில் தமிழகம் முதல் நான்கு இடங்களுள் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்:

1. புதிய தொழில்களுக்கு அடிப்படை வசதிகளைப் பெருக்கும் குறிப்பு : இதில் தமிழகம் மூன்றாவது இடத்திலுள்ளது.

2. தொழிற்சாலைகளில் உற்பத்தி மதிப்பு: இதில் தமிழகம் நான்காவது இடத்தில் உள்ளது.

3. 1960-61 முதல் 1980-81 வரையிலான காலத்தில் ஆலைகளில் சேர்க்கப்பட்ட மதிப்பீட்டை ஒப்பிடுதல்: இதில் தமிழகம் நான்காவது இடத்திலுள்ளது.

4. தொழில்களின் எண்ணிக்கை, வேலை வாய்ப்பு மற்றும் உற்பத்தி பற்றிய ஒப்பீடு: தொழிற்சாலைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை தமிழ்நாடு நான்காவது இடத்திலும், தொழிலாளர்களின் எண்ணிக்கையில் தமிழகம் மூன்றாவது இடத்திலும் உள்ளது.

5. தொழிற்சாலைத் துறையில் மதிப்பு பெருக்கம்: (தேசிய வருமான உற்பத்தி அடிப்படையில்)

அகில இந்திய நிதி நிறுவனங்களிலிருந்து உதவித்தொகை பெறும் இனத்தில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது

என்பதையும் பெருமையுடன் குறிப்பிடலாம்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) 1965-ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. இது தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான ஒரு பெருமை வாய்ந்த நிறுவனமாகும். இதன் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூல தனம் ரூ. 60 கோடியாகும். இதில் ரூ.59.72 கோடி செலுத்தப்பட்டுள்ளது.

டிட்கோ இது வரையில் பொதுத் துறையிலும் கூட்டுத் துறையிலும் 45 தொழிற்சாலைகளை நிறுவியுள்ளது.

டிட்கோவினால் நிறுவப்பட்ட 45 தொழிற் திட்டங்களில் 38 திட்டங்கள் இம் மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன.

தொடக்கத்தில் டிட்கோவின் ஒரு பிரிவாக நிறுவப்பட்ட தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனம், 3-4-1984 முதல் டிட்கோவின் ஒரு கிளை நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டது.

3-4-1984 முதல் மீள் உருளை ஆலையும் தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் திட்டச் செலவு ரூ. 782.10 இலட்சமாகும். இதன் நிறுவுத் திறன் ஆண்டொன்றுக்கு 25,000 டன்கள் ஆகும். இது 109 நபர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கியுள்ளது.

தமிழ்நாடு கெமிக்கல் பிராடக்ட் லிமிடெட் டிட்கோவினுடைய ஒரு நிறுவனமாகும். இத்தொழிற்சாலை காரைக்குடியில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திட்டச் செலவு ரூ. 756 இலட்சமாகும். இது சுமார் 271 நபர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கியுள்ளது. இலாபத்தில் இயங்கி வரும் இந்நிறுவனம் 30-9-1985 வரை ரூ. 83.10 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

தமிழ்நாடு தொழிலியல் மருந்து நிறுவனத்தின் திட்டச் செலவு ரூ. 2,350 இலட்சமாகும். இத்திட்டத்தினால் சுமார் 450 நபர்களுக்கு வேலை வாய்ப்பும், ஏறக்குறைய 100 பேருக்கு நேரடி அல்லாத வேலை வாய்ப்பும் கிடைக்கும். இத்திட்டம் தன் வணிக அளவிலான உற்பத்தியை 9-2-1986 முதல் தொடங்கியுள்ளது.

மாநிலத்தில் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கு அரசு பொதுத்துறை நிறுவனங்களை ஏற்படுத்தி வருகிறது. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் (டான்சம்) நிறுவனமானது தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தினரால் (டிட்கோ) முழுவதும் உடைமை ஆக்கப்பட்ட ஒரு நிறுவனமாக 1976ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. இதன் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனமான ரூபாய் பன்னிரண்டரைக் கோடியில் ரூபாய் 12.36 கோடி இது வரையில் செலுத்தப்பட்டு உள்ளது. இந்நிறுவனம் 1-4-1976 முதல் செயல்படத் தொடங்கியது.

ஆலங்குளம் சிமெண்ட் ஆலையின் நிறுவுத் திறன் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம்மெட்ரிக் டன் ஆகும். இதன் திட்டச் செலவு ரூ. 666 இலட்சமாகும். இந்த ஆலை 1970-ஆம் ஆண்டு முதல் வணிக உற்பத்தியைத் தொடங்கியது.

இவ்வாலை, இப்பின்தங்கிய பகுதியில் சுமார் 1,600 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் மற்றும் மூலப்பொருட்கள் உற்பத்திப் பொருட்களின் போக்குவரவு வகையினில் கணிசமான அளவில் நேரடி இல்லாத வேலை வாய்ப்பினையும் அளிக்கிறது.



அரியலூர் சிமெண்ட் ஆலை ஓர் உவர் செய்முறை ஆலை ஆகும். இதன் நிறுவுத் திறன் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் மெட்ரிக் டன். இதன் திட்டச் செலவு ரூ. 2,876 இலட்சம். வணிக அளவிலான உற்பத்தி 1977-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் தொடங்கியது.

இவ்வாலை சுமார் 900 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் மற்றும் மூலப்பொருட்கள், செய் பொருட்கள் முதலியவற்றின் போக்குவரத்து வகையில் கணிசமான அளவில் நேரடி அல்லாத வேலை வாய்ப்பும் அளிக்கிறது.

ஆண்டொன்றுக்கு 36,000 மெட்ரிக் டன்கள் அளவில் 80 மி.மீ. முதல் 600 மி.மீ. வரை விட்ட அளவுகள் கொண்ட ஆஸ்பெஸ்டாஸ் அழுத்த சிமெண்ட் குழாய்களை உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலை திருச்சி மாவட்டம் மாயனூரில் அமைக்கப்பட்டது. இதன் திட்டச் செலவு ரூபாய் 945 இலட்சம்.

1984-85-ஆம் ஆண்டில் இதன் ஆறுமாத கால உற்பத்தியில் 8,427 மெ. டன். ஆஸ்பெஸ்டாஸ் குழாய்களை உற்பத்தி செய்தது. நடப்பு ஆண்டில் 10,886 மெ. டன். குழாய்கள் மற்றும் துணைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தின் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில் வளர்ச்சிக்கான நிதிஉதவி மற்றும்தொழில் நுட்ப உதவிகளான திட்ட அறிக்கை, வளர்ச்சி மையங்களில் தேவையான அடிப்படை வசதிகள் செய்து முதலீட்டுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் மாநில அரசு வழங்கும் உதவிகளைத் தொழில்களுக்கு முறைப்படுத்தி வழங்குதல் போன்ற பணிகளைத் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) ஏற்றுச் செயல்பட்டு வருகின்றது.

வட்டியில்லா விற்பனைவரிக் கடன் வழங்கும் ஊக்கச்சலுகை திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் துவங்கியதிலிருந்து 1985-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள்31ஆம் தேதி வரை 250 தொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் ரூபாய் 29,15.49 இலட்சம் ஒப்புதல் அளித்து, அதில் ரூபாய் 25,07.46 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் மானியம் (உதவித்தொகை) வழங்கும் திட்டத்தின்கீழ், சிறிய, நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் பயன்பெறுகின்றன.

**இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்ப மூலதன நிதியுதவி:**

திட்டத்தின் கீழ் சிப்காட் நிறுவனம் ஒப்புதல் அளித்தது மற்றும் வழங்கியது 31-3-1985 முடிய முறையே ரூ. 519.24 இலட்சம் மற்றும் ரூ. 382.61 இலட்சம் ஆகும்.

1984-85-ஆம் நிதியாண்டில் எல்லாச் செலவினங்களும் தேய்மானங்களும் போக நிகர லாபம் ரூபாய் 116.56 இலட்சம், 1983-84-ஆம் ஆண்டு இலாபம் ரூ. 124.42 இலட்சமாகும்.

**வேலை வாய்ப்பு**

1985-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் தேதி முடிய சுமார் 88,000 பேர்கள் சிப்காட்டில்நிதியுதவி பெற்ற நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்**

உலக வங்கியிடமிருந்து ரூ. 105 கோடி உதவியுடன், கரும்புச்சக்கையை மூலப்பொருளாகக் கொண்டு இயங்கும் ஒரு பெருமை வாய்ந்த காகித ஆலை திட்டத்தை நிறுவும் நோக்கத்துடன் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தைத் தமிழக அரசு உருவாக்கியது. இந்த ஆலை நாளொன்றுக்கு 300 டன்கள் செய்தித்தாள் காகிதமும், 240 டன்கள் அச்சிடும்/எழுதும் காகிதமும் உற்பத்தி செய்யும் திறனுடையதாம்.

1-4-1985லிருந்து 31-12-85 முடிய உள்ள கால கட்டத்தில் இந்நிறுவனம் 39,535 டன்கள் செய்தித்தாள் காகிதமும் 6,797 டன்கள் எழுதுதாள் அச்சிடும்தாள் காகிதமும் உற்பத்தி செய்து, தனது உற்பத்தித் திறனின் 70 சதவிகிதத்தை எட்டியுள்ளது. ரூ. 40 கோடி மதிப்புள்ள அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்த உதவியுள்ளது.

1,500 பேருக்கு நேர்முக வேலை வாய்ப்பும், 5,000 பேருக்கு மறைமுக வேலை வாய்ப்பும் அளிக்கும் இந்த ஆலை 24-5-86 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

மாநில அளவில் நிதியுதவி அளிக்கும் நிறுவனத்தைச் சார்ந்த தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் அதன் விரைவான முன்னேற்றத்திற்கும் நிதி உதவி அளிக்கும் தனது பணிகளுடன் இருபது அம்சத் திட்டம் உள்ளிட்ட அரசின் சமூகப் பொருளாதாரக் கொள்கைகளைச் செயல்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகித்து வருகின்றது.

கடன் தொகைக்கு அனுமதித்தல், வழங்குதல், வசூலித்தல் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், இந்நிறுவனத்தின் பணி கணிசமான அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளது.



தமிழ்நாடு உப்பு நிறுவனம் ரூபாய் 200 இலட்சம் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் 1974ஆம் ஆண்டு ஜூலை திங்கள் நிறுவப்பட்டு 1975ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22-ஆம் நாள் முதல் இயங்கத் தொடங்கியது. அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் முறையே ரூபாய் 200 இலட்சம், ரூ. 145 இலட்சமாகும்.

மிகவும் பின் தங்கிய பகுதியில் அமைந்துள்ள இத்திட்டம் 1975-ஆம் ஆண்டு திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு 1976-ஆம் ஆண்டு முதல் உப்பு உற்பத்தியைத் தொடங்கியது.

இத்திட்டம் 1985-ஆம் ஆண்டு இரசாயனத் தொழிற்சாலைக்குகந்த தரமான 33,600 டன் உப்பு உற்பத்தி செய்தது. 31-12-1985 முடிய 27,202 மெட்ரிக் டன் உப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

உப்பு உற்பத்திக் காலத்தில் 70 பேர்களுக்கு நிரந்தரவேலை வாய்ப்பும் 150 பேர்களுக்குப் பருவகால வேலை வாய்ப்பும் அளிப்பதுடன், ஒப்பந்தக்காரர்கள் மூலமாகச் சுமார் 200 பேர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. தற்பொழுது 32 நபர்கள் அலுவலக வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

தொழில்களுக்குப் பயன்படும் சிலமுக்கிய கனிமங்களை வணிக முறையில் வெட்டியெடுப்பதற்கும் கரும்பாறை மற்றும் இதர நிறப் பாறைகளை வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்யும் பணிகளை மேற்கொள்ளவும் தமிழ்நாடு கனிம நிறுவனம் 1978-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறுவப்பட்டது. நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் தற்போது ரூ. 300 இலட்சம் ஆகும். இதில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 207-50 இலட்சம் ஆகும்.

தனியாரின் பிடியிலிருந்த கனிம வளத்தை இந்த அரசு, அரசுடைமையாக்கியதுடன் டாமின் என்னும் கனிம வள நிறுவனத்தை 1978-ல் உருவாக்கி உள்ளது. அதன் தொடர்பாக கருங்கல் பாறை மெருகேற்றும் தொழிற்சாலை மணலியில் ரூ. 6 கோடியே 40 இலட்சம் மூலதனத்துடன் 25-3-86-ல் தொடங்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு 266 இலட்ச ரூபாய் அந்நியச் செலாவணி கிடைக்கும். அடுத்து வரும் ஆண்டுகளில் இந்தத் தொகை மேன்மேலும் அதிகரிக்கும்.

தற்போது கூட்டுறவுத்துறையில் 11 சர்க்கரை ஆலையும், தனியார் துறையில் 10 சர்க்கரை ஆலையும், பொதுத்துறையில் 3 சர்க்கரை ஆலையும் இம் மாநிலத்தில் இயங்கு வருகின்றன.

ஒவ்வொரு சர்க்கரை ஆலையும், தான் அரவை செய்யும் கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ.5 வீதம் கரும்பு மீதான மேல் வரி (செஸ்) அரசுக்குச் செலுத்துகின்றன. மேற்படி தொகை கரும்பு வளர்ச்சிக்கான ஆராய்ச்சி, சர்க்கரைஆலைகள் அமைந்துள்ள பகுதிகளில் புதிய சாலைகள் அமைத்தல் மற்றும் தற்போதுள்ள சாலைகளைப் பராமரித்தல் போன்ற இனங்களுக்குச் செலவழிக்கப்படுகின்றது. 1985-86-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 200 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### சிறுதொழில்கள்

| | |
|---|---|
| 1978ல் நிரந்தரமாகச் சான்றிதழ் பெற்ற சிறு தொழில்களின் எண்ணிக்கை | 18,789 |
| 1986 மார்ச்சுத் திங்களில் இந்த எண்ணிக்கை | 72,979 |
| 1978ல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை | 297 |
| 1986 மார்ச்சுத் திங்கள் நிலவரப்படி இந்த எண்ணிக்கை | 597 |

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கடந்த 30 ஆண்டுகளில் அதாவது 1949 லிருந்து 1973 வரை சிறு தொழில்களுக்கு வழங்கியுள்ள நிதி ரூ. 34 கோடி ஆகும்.

| | |
|---|---|
| ஆனால் 1982-83ல் மட்டும் | ரூ. 49 கோடி |
| 1983-84ல் | ரூ. 53.33 கோடி |
| 1984-85ல் | ரூ. 62.69 கோடி |
| 1985-86ல் | ரூ. 86.45 கோடி |

1-4-78 முதல் 31-5-86 வரை சிறுதொழில்கள் தொடங்க மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை மட்டும் 26,439 ஆகும்.

சர்க்கரைத் தொழில் பெருமளவில் நேரடி வேலைவாய்ப்பு அளிப்பதோடு சர்க்கரைஆலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பு வழங்கி வருகின்றது.

மாநில அரசின் நிறுவனமான தமிழ்நாடு மின்னணுக் கழகம் இம்மாநிலத்தில் மின்னணுவியல் தொழிற்சாலைகளில் முன்னேற்றத்தினை தனது தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மொத்த மூலதனம் ரூ. 5 கோடியாகும். அதில் 1-3-86 வரை தமிழக அரசு ரூ. 3.24 கோடி முதலீடு செய்துள்ளது.

'எல்காட்' இதுவரை சுமார் 400பேர்களுக்கு அதன் சொந்த நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அளித்துள்ளது. இத்தொழிற்சாலை தருமபுரி மாவட்டத்தில் ஹோசூரில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த முதலீடு ரூ. 179.31 இலட்சமாகும். மிகக் குறுகிய கால அளவில், அதாவது 18 மாதங்களில் இது நிறுவப்பட்டு, 1983 மார்ச் திங்களில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் கொள்கலன்கள் விற்பனைச் சந்தையில் சிறந்த இடத்தைப் பிடித்துள்ளன. இத்தொழிற்சாலை தொலைக்காட்சிப் பெட்டிகள் தயாரிக்கப் பெரிதும் உபயோகிக்கப்படும் உதிரி உறுப்புகளை தயார் செய்கின்றது. இத்தொழிற்சாலையின் உற்பத்தி 1985-86-ல் ரூ. 178 இலட்சமாக இருந்தது. 1986-87-ல் ரூ. 380 இலட்சமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒப்பந்தப் பிரிவின் விற்பனை அளவு வெகுவாக அதிகரித்துள்ளது. 1983-84-ல் இப்பிரிவின் விற்பனை அளவு ரூ. 3.29 இலட்சமாக இருந்தது; 1984-85ல் ரூ. 24.58 இலட்சமாக உயர்ந்தது. 1985-86-ல் ரூ. 50 இலட்சமாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. 1985 86-ல் ரூ. 18.60 இலட்சம் மதிப்புள்ள 3100 வானொலிப் பெட்டிகளை இப்பிரிவு ஊராட்சிகளுக்கு வழங்கியுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள மார்க்கோனி நிறுவனத்தின் தொழில் நுட்ப ஒத்துழைப்புடன் 'எல்காட்' நிறுவனத்தின் தகவல் தொடர்புக் கருவிப் பிரிவானது 1985-ஏப்ரலில் இருந்து தகவல் தொடர்புக் கருவிகளை விற்பனைக்காக உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ.150 இலட்சம். சென்னையை அடுத்த திருவான்மியூரில் இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. அரசுத் துறைகளான காவல் துறை, நல்வாழ்வுத் துறை ஆகியவற்றிற்கும், இரயில்வேக்கும் இக்கருவிகள் தயாரித்து அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் உற்பத்தி மதிப்பு 1985-86-ல் ரூ. 60 இலட்சமாகவும், 1986-87-ல் ரூ.120 இலட்சமாகவும் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தனியார் சிறுதொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் குவார்ட்ஸ் அனலாக் சுவர்க் கடிகாரங்களை இந்நிறுவனம் விற்பனை செய்து உதவி வருகிறது. 1983-84-ல் 334 கடிகாரங்களும், 1984-85-ல் ரூ. 6.55 இலட்சம் மதிப்புள்ள 2,248 கடிகாரங்களும் விற்கப்பட்டன. 1985-86-ல் ரூ. 11 இலட்சம் மதிப்புள்ள கடிகாரங்களும், 1986-87-ல் ரூ. 14 இலட்சம் மதிப்புள்ள கடிகாரங்களும் விற்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாநிலத்தில் விற்பனையாகும் தொலைக்காட்சிப் பெட்டிகளின் விற்பனை வரிசையில் 3-வது இடத்தை 'சியர்ஸ்' எல்காட்' பெற்றுள்ளது. 1985 86-ல் 20,000 தொலைக்காட்சிப் பெட்டிகள் விற்கப்பட்டன. வரும் ஆண்டில் அதன் விற்பனை 30,000 வரை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.








தமிழகத்தின் கல்வித்துறை

1. பள்ளிக்கல்வி
2. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி
3. கல்லூரிக் கல்வி
4. தொழில்நுட்பக் கல்வி
5. பொது நூலகங்கள்

என ஐந்து பெரும் பிரிவுகளைக் கொண்டு இயங்கி வருகின்றது. இந்த ஐந்து துறைகளிலும், கடந்த ஒன்பது ஆண்டுகளில் தமிழக அரசு செய்து வருகின்ற சாதனைகள் தமிழகத்தின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்துள்ள என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகும்.

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் விடுப்புச் சலுகைகள் அனைத்தும் தனியார் நிதி உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் பொருந்தும் வகையில் ஆணை இடப்பட்டது.

பணியிலிருக்கும்போது இறந்து விடும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் தமிழ் நாடு குடும்ப நலப் பாதுகாப்புத் திட்டம், தனியார் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு விஸ்தரிக்கப்பட்டது.

கல்லூரிகளில் இருந்து வந்த புகுமுக வகுப்புகள் 1.7.78 முதல் ரத்து செய்யப்பட்டன. 10+2 +3 கல்வி முறை தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் புகுத்தப்பட்டது. +2 நிலையை பள்ளிகளோடு சேர்த்திட இந்த அரசு செய்த புரட்சிகரமான முடிவின் விளைவாக எஸ்.எஸ்.எல்.சி. க்கு மேலான உயர்கல்வி வசதி முதன் முதலாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்களில், அதுவும் பெரும்பாலான கிராமப் புறங்களில் எளிதில் கிடைத்திட வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. முதுகலை பட்டம் பெற்ற பல்லாயிரக் கணக்கான ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டது.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வைப் பாடம், பாடமாகத் தேற வகைசெய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. ( Compartmental System ). 1, 2, 3 வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவியர்களை யாரும் தோல்வியுறச் செய்யக்கூடாது என்ற ஏற்பாடு செய்யப்பட்டது. கல்வி நிலையங்களில் மாணவர்களைச் சேர்க்கும்பொழுது பிற்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீடு 31 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்தப்பட்டது.

அரசு பணியாளர்கள் ஏற்கெனவே பெற்று வந்த பின்வரும் சலுகை தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

1977-78 லிருந்து ஆசிரியர்களின் பிள்ளைகளுக்குத் தொழில் படிப்பு படிக்க படிப்புதவித் தொகை ஆசிரியர் நலனுக்காகத் தேசிய நிதியிலிருந்து வழங்கப்படுகின்றது. பணியிலுள்ள ஓய்வு பெற்ற மற்றும் இறந்துவிட்ட ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு இப் படிப்புதவித் தொகைகள் கிட்டும். பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவப் படிப்புகளுக்குப் படிப்புதவித் தொகைகள் வழங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

1978-79ல் மேல்நிலைப் பள்ளிகளில் கலை, அறிவியல் பாடங்களைக் கற்றுத் தருவதற்கான ஆசிரியர் தேவை பெரும்பகுதி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை (முழுத் தகுதி பெற்றவர்களும் பெறாதவர்களும்) மேல்நிலைப் பள்ளிகளில் நியமித்து பூர்த்தி செய்யப்பட்டது. மேற்கொண்டு தேவையாயிருந்த அப் பாட ஆசிரியர்கள் தேவையைப் பூர்த்தி செய்ய 1978-79ஆம் ஆண்டில் 1,300 கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்

டன. 1979-80ல் மேல்நிலைப் பள்ளிகளுக்கான கூடுதல் ஆசிரியர் பதவிகள் 2,438 ஏற்படுத்தப்பட்டன. 1980-81ல் கூடுதலாக மேலும் 2,100 பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. உயர் நிலைப்பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் உடற்பயிற்சியைக் கவனிக்கப் போதுமான ஆசிரியர்கள் இல்லாததால் 1980-81ல் கூடுதலாக 200 உடற்பயிற்சி இயக்குநர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன.

ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் சுமார் 95,000 பேர்களும் 1.6.1981 முதல் அரசுப் பணியாளர்களாக ஆக்கப்பட்டு அரசு ஊழியர்களுக்குரிய அனைத்துச் சலுகைகளும் விஸ்தரிக்கப்பட்டன.

1982-83ல் இளஞ்சிறார்கள் கல்விக்கெனப் பெரிய அளவிலான திட்டம் தொடங்கப்பட்டது. இளஞ்சிறார்களுக்கு பள்ளி செல்லும் மனப்போக்கைப் புகட்டுதல் மூலம் இளஞ்சிறார் கல்வியானது தொடக்கக் கல்வி வளரவும் உதவும். இத்திட்டத்தின் முதற்கட்டமாக இம் மாநிலத்திலுள்ள 4,433 குழந்தைகள் நல மையங்கள் (பால்வாடிகள்) ஒவ்வொன்றிலும் ஒரு நர்சரி பிரிவு ஏற்படுத்த வகை செய்யப்பட்டது.

1980-ஆம் ஆண்டிலிருந்து எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவ, மாணவிகளுள் அதிக மதிப்பெண் பெற்று முதலிடம் பெற்று தேர்ச்சி காட்டிய மாணவர் அல்லது மாணவிக்குத்தங்கப் பதக்கம், இரண்டாம் இடம் பெற்ற மாணவர் அல்லது மாணவிக்கு வெள்ளிப் பதக்கம் மற்றும் முதன் மூன்று இடங்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்குச் சான்றிதழ்கள் வழங்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இளநிலை, இடைநிலை மற்றும் அவற்றுக்குச் சமமான நிலைகளிலான ஆசிரியர்களுள் 20 ஆண்டு தத்தம் நிலையில் திருப்திகரமாகப் பணியாற்றுபவர்களுக்கு அவர்கள் தம் பதவிக்குரிய தேர்வு நிலையில் 10 ஆண்டு பணியாற்றி முடித்திராவிட்டாலும் கூட சிறப்பு நிலை வழங்கும் சலுகை 1.6.81 முதல் அமலாக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் அனைவரையும் 1.1.81 முதல் முதனிலைத் தமிழாசிரியர்களைத் தரஉயர்வு செய்து ஆணை இடப்பட்டது.

அரசு உயர் நிலைப் பள்ளிகளில் காலி ஏற்படும் தலைமை ஆசிரியர் பதவிகளுக்கு, தமிழாசிரியர்களாகப் பணிபுரிபவர்களையும் பதவி உயர்வு செய்து நியமனம் செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தேர்வு நிலைத் தகுதி பெற்றுள்ள பள்ளி உதவி ஆசிரியர்கட்கு அவர்கள் தேர்வு நிலை பெற்று 10 ஆண்டுக் காலம் பணி முடிக்காமல் இருந்தாலும், பள்ளி உதவி ஆசிரியர் பணியில் 20 ஆண்டுக் காலம் பணி முடித்திருந்தால், சிறப்பு நிலை பெறத் தகுதியுடையவர்கள் என்று அறிவிக்கப்பட்டு, அவ்வாணை 1.4.82 முதல் அமலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.


அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழக தொடக்க விழா

1976-77ஆம் ஆண்டில் பள்ளிக் கல்வித் துறைக்கென அரசால் 127 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1985-86ஆம் நிதி ஆண்டிற்குப் பள்ளிக் கல்வித் துறைக்கென மட்டும் ரூ. 445 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**முதலமைச்சரின் மூன்று முன்னோடித் திட்டங்கள்**

முதலமைச்சரின் குழந்தைகளுக்கான சத்துணவுத்திட்டம் 1.7.82 முதல் துவக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கூடுதலான மாணவர் சேர்க்கையில் முன்னேற்றம் காண்பதோ "பள்ளிக்கு வராமையும்" இடையில் பள்ளியை விட்டு "விலகுதலும்" பெருமளவுக்குக் குறைய வழிவகுத்துள்ளது.

1984-85ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையினைத் தொடர்ந்து முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் உணவு உண்ணும் மாணவர்கட்கு இலவசப் பாடப் புத்தகங்கள் இந்தக் கல்வி ஆண்டு முதல் வழங்கப்படுகின்றன. ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

**ஆசிரியர்கள் எண்ணிக்கை**

| | 1976-77 | 1985-86 |
|---|---|---|
| முதல்நிலைப் பள்ளிகள் | 1,11,033 | 1,16,625 |
| நடுநிலைப் பள்ளிகள் | 67,846 | 66,919 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 72,838 | 39,978 |
| மேல் நிலைப்பள்ளிகள் | — | 64,347 |
| | 2,51,717 | 2,87,869 |





**இலவச சீருடை மற்றும் இலவச பாடப் புத்தகங்கள்-பயன்பெறுவோர் எண்ணிக்கை (1-ஆம் வகுப்பு முதல 8-ஆம் வகுப்பு வரை)**

| | |
|---|---|
| ஆண்கள் | 33,05,286 |
| பெண்கள் | 25,63,067 |
| மொத்தம் | 58,68,353 |

புதிய கல்விக் கொள்கை பற்றிய கருத்துக்கள் பல நிலைகளில் விவாதிக்கப்பட்டு தமிழ்நாட்டு அரசினுடைய கருத்து நடுவண் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. புதிய கல்விக் கொள்கை பற்றிய பொது அம்சங்களை ஆசிரியர் சமுதாயம் தெரிந்து கொள்வதற்கான புத்துணர்வுப் பயிற்சி நாடு பூராவும் நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் 180 மையங்களில் 720 புத்துணர்வுப் பயிற்சி முகாம்கள் மூலமாக 36,000 ஆசிரியர்கள் 6.6.86 முதல் தொடங்கி பயிற்சி பெற்றார்கள்.

15.9.85 முதல், மாண்புமிகு முதலமைச்சரின் சத்துணவு திட்டத்தின் கீழ் உணவு உண்ணும் ஒன்று முதல் எட்டு வகுப்பு வரையிலான எல்லா மாணவ, மாணவிகட்கும் இலவசச் சீருடை வழங்கப்பட்டுள்ளது. இதன் பயனாக சுமார் 60 லட்சம் மாணவ, மாணவிகள் பயன் பெறுகின்றனர்.

**பள்ளிகளின் எண்ணிக்கை**

| | 1976-77 | 1985-86 |
|---|---|---|
| முதல் நிலைப் பள்ளிகள் | 27,306 | 29,118 |
| நடுநிலைப் பள்ளிகள் | 5,730 | 5,691 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 3,020 | 2,569 |
| மேல் நிலைப் பள்ளிகள் | | 1,554 |
| மொத்தம் | 36,056 | 38,932 |

**பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி**

இன்றைய தேசிய கொள்கையான 'எல்லோருக்கும் ஆரம்பக் கல்வி' என்ற இலக்கை அடைவதற்கான முயற்சியில் தமிழ் நாடு முன்னணியில் இருக்கிறது. இவ் வளர்ச்சி, கடந்த பத்து ஆண்டுகளில் சீரிய திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செவ்வனே நிறைவேற்றிய தன் விளைவேயாகும்.

மேற்குறிப்பிட்ட தேசிய குறிக்கோளை நிறைவேற்றும் அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக 1976-ம் ஆண்டே பள்ளிசாராக் கல்வி இயக்ககம் தமிழ்நாட்டில் தனியாகத் தோற்றுவிக்கப்பட்டது. 1976-77ம் ஆண்டில் 11 இலட்சம் அளவில் மட்டும் திட்டத்திற்கான செலவு செய்த இவ்வியக்ககம் 1986-87ஆம் ஆண்டில் பெற்றுள்ள மொத்த நிதி ஒதுக்கீடு ஏறத்தாழ ரூ. 550 இலட்சம் ஆகும்.

1976-77ஆம் ஆண்டு முதல் பள்ளிசாராக் கல்வித் திட்டம் நமது மாநிலத்தில் நடைமுறையில் உள்ளது. இத்திட்டம் பள்ளிப் படிப்பைத் தொடர இயலாத 6-14 வயதினருக்குக் கல்வி அளிக்கும் வகையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

ஊரகச் செயல் முறை எழுத்தறிவுத் திட்டமானது நடுவண் அரசின் முழு நிதியுதவியுடன் தமிழ்நாடு அரசின் மூலம் 1979-80ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகின்றது.

இத்திட்டத்தின் மூலம் , 8100 மையங்கள் நடைமுறையில் உள்ளன. ஒரு திட்டப் பகுதிக்கு முதலாண்டிற்கு ஆகும் செலவு ரூ. 10.48 இலட்சம் ஆகும். அடுத்து வரும் ஆண்டுகளுக்கு ஆகும் செலவு ரூ. 9.75 இலட்சம் ஆகும். தற்போது இத்திட்டத்திற்கு இந்த ஆண்டில் சுமார் 256 இலட்சம் செலவு செய்யப்பட உள்ளது.

**மொத்த மாணவர்கள் எண்ணிக்கை**

| | 1976-77 | 1985-86 |
|---|---|---|
| மாணவர் | 47.10 | 61.38 |
| மாணவியர் | 33.93 | 47.87 |
| மொத்தம் | 81.03 | 103.25 |

மேல்நிலைப்பள்ளி நிலையில் தொழிற்கூடங்களைப் பொறுத்தவரை தமிழ் நாடு பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக இருந்து வருகிறது. 1985-86ல் மொத்தம் 1,126 மேல் நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. சில பள்ளிகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொழிற் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. 1985-86ல் மேல் நிலைப் பள்ளிகளில் பயின்று வந்த 3.49 லட்சம் மாணவர்களில் 67,765 பேர் அதாவது சுமார் 17 விழுக்காட்டினர் பாடங்களைப் பயின்று வந்தனர்.

1979-80ஆம் ஆண்டில் மாநில வயது வந்தோர் கல்வித் திட்டமானது முழுவதும் மாநில அரசின் நிதியுடன், தமிழ்நாட்டில் 61 தன்னிறைவுத் திட்டத்துக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் 140 இலட்ச ரூபாய் செலவில் 6100 மையங்கள் செயல்படுத்த ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாண்டில் பயன்பெறுவோர் பற்றிய விவரம்

| | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| கற்போர் | 25,306 | 2,27,384 | 2,52,690 |
| இவர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் | 12,385 | 99,869 | 1,12,254 |
| இவர்களில் பழங்குடியினர் | 807 | 1,652 | 2,459 |

இத்திட்டமானது 1983-84-ஆம் ஆண்டில் மேலும் 54 ஊராட்சி ஒன்றியங்களுக்கு விரிவு படுத்தப்பட்டு தற்போது இந்த 5,400 மையங்களிலும் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது தவிர இத்திட்டம் 1985-86-ஆம் ஆண்டில் மேலும் 6 ஒன்றியங்களுக்கு விரிவு படுத்தப்பட்டு 600 மையங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தற்போது மொத்தம் 121 ஒன்றியங்களில் ஒவ்வொன்றிலும் 100 மையங்கள் வீதம் 12100 மையங்கள் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் கல்லூரிக் கல்வித்துறையின் கீழ் கலைக் கல்லூரிகள் கல்வியியல் கல்லூரிகள், தமிழ்க் கல்லூரிகள் மற்றும் சமூகப் பணிக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக் கல்லூரிகள் சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக் கழகம் மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழங்களின் இணைவு பெற்று செயல்பட்டு வருகின்றன.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன் முதலாகப் பல்கலைக் கழக மான்யக் குழுவின் ஆலோசனைப்படி தேர்ந்தெடுக்கப் பட்ட சில தனியார் கல்லூரிகளுக்கு 1979-80 முதல் தன்னாட்சி வழங்கப்பட்டது.

கடந்த பத்து ஆண்டுகளில் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 2 இலட்சம் ஆகும். 1979-80-ஆம் ஆண்டு புகுமுக வகுப்பு கல்லூரிகளிலிருந்து நீக்கப் பட்டு விட்டதால் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 1.35 இலட்சமாகக் குறைந்து விட்டது. 1985-86ஆம் ஆண்டு மாணவர்களின் எண்ணிக்கை 2 இலட்சமாக அதிகரித்துள்ளது. இதைத் தவிர அஞ்சல் வழிக் கல்வி மூலம் சுமார் 2 இலட்சம் மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். சென்னை, மதுரை காமராசர் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள் அஞ்சல் வழிக் கல்வியை வழங்கி வருகின்றன.

1976-77-ஆம் ஆண்டு கல்லூரி ஆசிரியர்களின் எண்ணிக்கை சுமார் 12,000 ஆகும். 1 986-87ஆம் ஆண்டுஇது சுமார் 14,100 ஆகும்.

பத்து ஆண்டுகள் பணி முடித்திருந்த எல்லா உதவிப் பேராசிரியர்களுக்கும் 1.4.80 முதல் பேராசிரியர்களாகப் பதவி மேம்பாடு செய்து அரசு ஆணையிட்டது. இதுவரையில் 4357 உதவிப் பேராசிரியர்கள் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டு அதிக ஊதியம் பெற்று வருகிறார்கள்.



தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் மாதந்தோறும் முழுமையாகவும் குறித்த காலத்திலும் ஊதியம் பெறும் வகையில் நேரடிச் சம்பளப் பட்டுவாடா திட்டம் 1.4.80 முதல் செயல்பட்டு வருகின்றது.

இவற்றைத் தவிர தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றும், கொடைக்கானலில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டன. வள்ளல் அழகப்பர் அவர்களின் நினைவைப்போற்றும் வகையில் அழகப்பர் பல்கலைக் கழகம் 1985-86 முதல் செயல்பட்டு வருகின்றது. இப்புதிய பல்கலைக் கழகங்களின் வளர்ச்சிக்காக அரசு அதிக அளவில் மான்யம் அளித்து வருகின்றது. புதிய பாடத்திட்டங்கள் அமலாக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள கலைக் கல்லூரிகள் சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக் கழகங்களுடன் இணைவு பெற்று செயல்பட்டு வந்தன. ஒவ்வொரு பல்கலைக் கழகத்துடன் நூற்றுக்கும் மேற்பட்ட கல்லூரிகள் இணைந்து செயல்பட்டன. இந்த நிலையை மாற்றியமைப்பதற்காக 1982-ஆம் ஆண்டில் பாரதியார் பல்கலைக் கழகம் கோவையிலும், பாரதிதாசன் பல்கலைக் கழகம் திருச்சியிலும் நிறுவப்பட்டன.

1977-78ஆம் ஆண்டு முடிய தொழில் நுட்பக் கல்வித்துறையின் கீழ் 6 பொறியியற் கல்லூரிகளும் 3 மகளிர் பாலிடெக்னிக்குகள் உள்ளிட்ட 38 பாலிடெக்னிக்குகளும் இருந்தன. தற்போது (1985-86 முடிய) 30 பொறியியற் கல்லூரிகளும் 12 மகளிர் பாலிடெக்னிக்குகள் உள்பட 129 பாலிடெக்னிக்குகளாக உயர்ந்துள்ளது. அதாவது கடந்த ஏழெட்டு ஆண்டுகளில் 24 புதிய பொறியியற் கல்லூரிகளும் 91 புதிய பாலிடெக்னிக்குகளும் துவக்கப்பட்டவையாகும்.

மேற்கண்ட வளர்ச்சியின் காரணமாகப் பொறியியற் கல்லூரிகளின் சேர்ப்பு எண்ணிக்கை 1977-78ஆம் ஆண்டு முடிய 1500ஆக (125 மகளிர் எண்ணிக்கை உட்பட) இருந்தது, தற்போது 5700 (890 மகளிர் எண்ணிக்கை உட்பட) ஆக அதிகரித்துள்ளது. இதுபோன்று 1977-78ஆம் ஆண்டில் 5700 (445 மகளிர் எண்ணிக்கை உட்பட) ஆக இருந்த பாலிடெக்னிக்குகளின் சேர்ப்பு எண்ணிக்கை தற்போது 21,100 (1600 மகளிர் எண்ணிக்கை உட்பட) ஆக அதிகரித்துள்ளது.

# இணையற்ற இந்திய முறை மருத்துவம்



இந்திய முறை மருத்துவம் மற்றும் ஓமியோபதி முறை மருத்துவத்தை மேம்படுத்துவதற்காக அரசு தீவிரமாக முயற்சிகள் மேற்கொண்டது என்பதை 1977-78 முதல் 1986-87 வரை அத்துறைக்காக அரசு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் தொகை ஒதுக்கீடு செய்துள்ளதிலிருந்தே அறிந்து கொள்ளலாம்.

நிதி ஒதுக்கீடு அதிகரித்துக் கொண்டே வருவதைப் பின்வரும் விவர அட்டவணையிலிருந்து காணலாம்.

| ஆண்டு | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு | | |
|---|---|---|---|
| 1977—78 | ரூ. | 63.88 | லட்சம் |
| 1978—79 | ,, | 64.72 | ,, |
| 1979—80 | ,, | 113.70 | ,, |
| 1980—81 | ,, | 129.45 | ,, |
| 1981—82 | ,, | 231.20 | ,, |
| 1982—83 | ,, | 235.72 | ,, |
| 1983—84 | ,, | 243.09 | ,, |
| 1984—85 | ,, | 266.57 | ,, |
| 1985—86 | ,, | 330.47 | ,, |
| 1986—87 | ,, | 348.82 | ,, |

**மருத்துவக் கல்வி**

1977-78-ஆம் கல்வியாண்டில் பி. எஸ். எம்.எஸ். என்னும் பட்டப்படிப்பு இந்திய மருத்துவ மையக் கழகத்தால் அனுமதியளிக்கப் பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 1978-79-ஆம் ஆண்டு முதல் பி.எஸ்.எம்.எஸ். படிப்புக்கு ஆண்டு தோறும் தேர்ந்து எடுக்கப் படும் மாணவர்களின் எண்ணிக்கை 40-லிருந்து 44க்கு உயர்த்தப்பட்டது. 1980-81-ஆம் ஆண்டு முதல் அதன் எண்ணிக்கை 75க்கு அதிகரிக்கப்பட்டது. 1983-84-ஆம் ஆண்டு 75-லிருந்து 77-ஆக உயர்த்தப்பட்டது. மேற்கொண்டு 1984-85-ஆம் ஆண்டு 77-லிருந்து 100-ஆக பி.எஸ்.எம்.எஸ். மாணவர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. மூன்றாண்டு பயிற்சிக் காலமுள்ள சித்த மருத்துவம், சித்த குணபாடம் ஆகிய இரு பிரிவுகளைக் கொண்ட சித்தா மேற்பட்டப் படிப்பு அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் பயிற்சி பெறத் தேர்ந்து எடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மேற்கண்ட ஒவ்வொரு பிரிவிலும் 10 ஆகும். மேற்கண்ட இரு பிரிவுகளுக்கும் சேர்த்துப் பட்ட மேற்படிப்பு மாணவர்களின் எண்ணிக்கை 21-ஆக1983-84ல் உயர்த்தப்பட்டது.

1985-86-ஆம் ஆண்டு அரசு பட்ட மேற்படிப்பில் சிறப்பு மருத்துவம், பாலர் மருத்துவம் ஆகிய மேலும் இரு பிரிவுகள் தொடங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இப்பட்ட மேற்படிப்புப் பயிற்சியாளர்களுக்கு அதிகப் படியான உதவித்தொகை 20.10.1981 முதல் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அவை வருமாறு:—

5 ஆண்டுகள் முறைப்படுத்தப்பட்ட பணி முடித்த பணியிலுள்ளவர்கள் மற்றும் அவர்

களின் தகுதி காண் பருவம் முடிந்திருந்தால் மாதம் ஒன்றிற்கு ரூபாய் 650 பெறுவார்கள்.

5 ஆண்டுகள் முறைப்படுத்தப்பட்ட பணி முடிந்த பணியிலுள்ளவர்கள் மாதம் ஒன்றிற்கு ரூ. 525 பெறுவார்கள்.

தற்காலிக நியமனங்களிலுள்ளவர்களும் பணியில்லாதவர்களும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 325 பெறுவார்கள். மருந்தாளுநர் பட்டயப்படிப்புப் பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியிலும், சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையிலும் நடத்தப்பட்டு வருகிறது. 1981/82க்கு முன் ஆண்டுதோறும் சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் சித்தாவில் 7 பேர்களும், ஆயுர்வேதாவில் 5 பேர்களும், யுனானியில் 5 பேர்களும் பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் சித்தாவில் 8 பேர்களும் தேர்ந்து எடுக்கப்பட்டார்கள். 1981-82 முதல் பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் 8-லிருந்து 25 மாணவர்களாகவும் சென்னை அரசினர் அண்ணா இந்திய மருத்துவ மனையில் 7-லிருந்து 25 சித்தா மாணவர்களாகவும் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. 1983-84-ஆம் ஆண்டு முதல் ஆயுர்வேதம், மற்றும் யுனானிக்கான பட்டயப்படிப்பு (டிப்ளமா இன் ஃபார்மசி) தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு அவற்றிற்கான அனுமதிக்கப்பட்ட தலா 5 இடங்களை சித்தா மருந்தாளுநர் படிப்புடன் சேர்த்துக் கொள்ளப்பட்டு எண்ணிக்கை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி பாளையங்கோட்டையில் 30 இடங்களும், அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை, சென்னையில் 30 இடங்களும் ஆக மாற்றப்பட்டன.

1984-85-ஆம் ஆண்டு மருந்தாளுநர் பட்டயப் படிப்பு மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பயிற்சி நிலையங்களிலும் 50-ஆக உயர்த்தப்பட்டது. மே 1982-ல் அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி (சித்தா) என்ற பெயர் அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி என்று மாற்றப்பட்டது. பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியில் கீழ்க்கண்ட சாதனைகள் நிகழ்த்தப்பட்டன.

உடல் கூற்றியல் பிரிவுக் கட்டடம் கட்டுதல் (1979-80).

ஆண், பெண் மாணவர்களுக்கு தனித்தனி மாணவர் இல்லம் கட்டுதல் (1979-80).

பயிற்சி பெறுபவர்களுக்கு விடுதி கட்டுதல் (1979-80).

உடற்கூற்றியல் பிரிவுக்கான தளவாடங்கள் வாங்குவதற்காக 1981-82-ல் அனுமதி வழங்கப்பட்டு வாங்கப்பட்டன. 1983-84-ஆம் ஆண்டு பட்ட மேற்படிப்புக்கான தனிக்கட்டடமும், விலங்கின (Animal house) கூடத்திற்கான கட்டடமும் கட்ட அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

1984-85-ல் பட்டப்படிப்பில் குணபாடம் உடற்கூறுகள், உடல் தத்துவம், நோய் நாடல் ஆகிய நான்கு பிரிவுகளின் வளர்ச்சிக்காக, பேராசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பிற பணியாளர்களும் நியமிக்க ஆணை வழங்கப்பட்டது.



1985-86-ஆம் ஆண்டு பட்டப்படிப்பில் (1) மருத்துவம் (2) அறுவை மருத்துவம் (3) சூல் மருத்துவம் மகளிர் மருத்துவம், மற்றும் பிள்ளைப்பிணி மருத்துவம் (4) நஞ்சு நூல், மருத்துவ நீதி நூல் ஆகிய நான்கு துறைகளின் மேம்பாட்டிற்கான கூடுதல் பணியாளர்கள் நியமிக்க ஆணை வழங்கப்பட்டது.

15.11.1985 அன்று அண்ணா மாவட்டம், பழனியில் புதிய மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 50 மாணவர்கள் பி.எஸ்.எம். எஸ். பட்டப்படிப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அதற்குரிய பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளவர்.

1979-80ஆம் ஆண்டு அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி (யுனானி) சென்னையில் 15 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. நவம்பர் 1982-ல் அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி (யுனானி) என்ற பெயர் அரசினர் யுனானி மருத்துவக் கல்லூரி என்று மாற்றப்பட்டது.

இந்திய முறை மருத்துவ நிலையங்களில் செவிலியர் பணிகளைக் கவனித்துக் கொள்ள அலோபதி முறைப் பயிற்சி பெற்ற செவிலியர் தற்போது பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு மூன்று மாதங்களுக்கு இந்திய முறை வைத்தியத்தில் பயிற்சி தரும் திட்டத்தை 1980-81-ல் அரசு அனுமதித்துள்ளது.

1982-83-ல் அரசு யோக முறையை ஒரு வைத்திய முறையாக ஏற்றுக் கொண்டுள்ளது.

கீழ்ப்பாக்கம் மருத்துவமனை வளாகத்தில் இருந்த ஓமியோபதி மருத்துவக் கல்லூரி 28.8.1985-ல் சென்னையிலிருந்து மதுரை மாவட்டம் திருமங்கலத்திற்கு மாற்றப்பட்டு இயங்கி வருகிறது. 1983-84-ஆம் ஆண்டு ஒரு இடம் அதிகரிக்கப்பட்டு மொத்த இடங்கள் 22-ஆக உயர்த்தப்பட்டது. 1985-86-ஆம் ஆண்டு ஓமியோபதி மருத்துவ பட்டயப்படிப்பு ஓமியோபதி பட்டப்படிப்பாக (பி.எச்.எம்.எஸ்) மாற்றி ஆணை பிறப்பிக்கப்பட்டது.



மருத்துவமனைகள்

1977க்குப் பிறகு சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையில் செய்யப்பட்ட வளர்ச்சிப் பணிகள் பின் வருமாறு:

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் அரசிதழ் பதிவில்லா ஊழியர்களுக்கு என்று தனி வெளி நோயாளிகள் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

1979-80-ல் நூல் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

மருந்து செய் நிலையம் இயந்திரமயமாக்கும் பணி 1979-80ல் ஆரம்பிக்கப்பட்டது.

1982-83-ஆம் ஆண்டில் நோய்க் குறியியல் ஆய்வகம், உயிர் வேதியியல் ஆய்வகம் ஆகியவற்றிற்குப் பணியாளர்கள் நியமிக்கவும் சாதனங்கள் வாங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பிரிவுகள் 19.4.1982 முதல் இயங்கி வருகின்றன.

1982-83-ஆம் ஆண்டு, ஊடுகதிர் சாதனம் வாங்கவும் அதற்கான பணியாளர்களையும் நியமிக்க ஆணை வழங்கப்பட்டு 25.8.1983 முதல் இயங்கி வருகிறது.

1983-84-ஆம் ஆண்டு மருத்துவ ஆவணப் பிரிவு (மெடிகல் ரெகார்டு செக்ஷன்) ஏற்படுத்தப்பட்டது.

1977-க்கு பிறகு பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியின் மருத்துவமனையில் செய்யப்பட்ட சாதனைகள் பின் வருமாறு:

ஒரு புதிய புற நோயாளர் பிரிவு டிசம்பர் 1978-ல் திறக்கப்பட்டது.

1980-81ல் நவீன வசதிகளோடு கூடிய சமையற்கூடம் அனுமதிக்கப்பட்டது.

இயந்திரமயமாக்கப்பட்ட மருந்து செய் நிலையம் 1980-81லும், 1982-83 லும் அனுமதிக்கப்பட்டது.

ஊடுகதிர்ப் பிரிவுக்கான கட்டடம் கட்ட 1982-83ல் அனுமதியளிக்கப்பட்டது.

1982-83ல் 24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவின் கட்டடம் கட்ட அரசு அனுமதித்துள்ளது.

1983-84-ஆம் ஆண்டு ஊடுகதிர் சாதனம் வாங்கவும், அதற்குரிய பணியாளர்களை நியமிக்கவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

1984-85-ஆம் ஆண்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த்தொட்டி கட்ட அனுமதி வழங்கப்பட்டது.

1986-87-ஆம் ஆண்டு மருத்துவமனையின் படுக்கைகளின் எண்ணிக்கை 232-லிருந்து 250 ஆக உயர்த்தப்பட்டது.

1979-80-ல் தாலுக்கா, மற்றும் தாலுக்கா அல்லாத மருத்துவ மனைகளில் 15 சித்தா பிரிவுகளும், 1980-81-ல் 15 சித்தா பிரிவுகளும் திறக்க அரசு அனுமதியளித்துள்ளது. தற்போது மாவட்ட தலைமை, தாலுக்கா மற்றும் தாலுக்கா அல்லாத மருத்துவமனைகளில் 103 சித்தா பிரிவுகள் இயங்குகின்றன.

தமிழ்நாட்டில், 8 அரசினர் சித்த மருந்தகங்களும் 5 ஆயுர்வேத மருந்தகங்களும் இயங்கி வருகின்றன. 1984-85-ஆம் ஆண்டு சென்னையில் இரண்டு மருந்தகங்கள் தொடங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. 1985-86-ஆம் ஆண்டு சென்னை பட்டினப்பாக்கத்தில் ஒரு மருந்தகம் தொடங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையுடன் இணைக்கப்பட்ட மருந்து செய் நிலையம் ஒன்றும், பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட மருந்து செய் நிலையம் ஒன்றும் இயங்கி வருகிறது.

25 படுக்கைகள் கொண்ட அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனை இயங்கி வருகிறது.

1975-76-ஆம் ஆண்டு அரசின் மாவட்ட தலைமை மருத்துவமனை திண்டுக்கல்லில் ஒரு ஓமியோபதி பிரிவு தொடங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. 1978-79-ஆம் ஆண்டு சேலம் மாவட்ட தலைமை மருத்துவமனையில் ஓமியோபதி பிரிவு தொடங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. 1980-81-ஆம் ஆண்டு ஆறு மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் ஓமியோபதிப் பிரிவு தொடங்க ஆணை வழங்கப்பட்டது. 1981-82ஆம் ஆண்டு 7 மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலும் ஓமியோபதி பிரிவு தொடங்க ஆணை வழங்கப்பட்டது. 1984-85-ஆம் ஆண்டு சென்னையில் இரண்டு அரசினர் ஓமியோபதி மருந்தகங்கள் தொடங்க ஆணை வழங்கப்பட்டது. மேற்கண்ட அனைத்து ஓமியோபதி பிரிவுகளும் இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம் 1983-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அதன் கீழ் இயங்கி வரும் விற்பனைப் பிரிவு மூலம், சித்தா, ஆயுர்வேதம், யுனானி தொடர்பான நூல்கள் வெளியிடப்படுகின்றன.

சித்த மருத்துவ வாரியத்தால் நாட்டு மருந்துகள் குறித்துப் பன்னாட்டு மாநாடு ஒன்று 1986 சனவரி 23 முதல் 25-ஆம் நாள் வரையில் சென்னையில் நடத்தப்பட்டது.

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்தில் தமிழ் நாடு மருந்துச் செடிப் பண்ணைகள்-மூலிகை மருந்துக்கழகம் 1.8.1984 முதல் இயங்கி வருகிறது.

மூலிகைக் கூந்தல் தைலத்தைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

மூலிகைத் தேயிலை, மூலிகை இனிப்பு, மூலிகை பால்பெருக்கி, மூலிகைப் பற்பொடி, கண்சொட்டு மருந்து, ஏனைய இந்திய முறை மருந்துகள் ஆகியவற்றைத் தயாரிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது.



# உணவுத் துறையின் ஒப்பற்ற பணிகள்

**1985-86**-ஆம் நிதி ஆண்டின் துவக்கத்தில், மாநிலத்தின் உணவு நிலைமை மிகவும் திருப்திகரமாக இருந்தது. 1984-ஆம் ஆண்டு குறுவை மற்றும் 1985-ஆம் ஆண்டு சம்பா பருவங்களில் உணவு உற்பத்தி சிறப்பாக இருந்தால் வெளிச்சந்தையிலும், அரசிடமும் கணிசமான இருப்பு இருந்தது. 1985ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் பொது விநியோகத்தில் கேட்பு அதிகரித்தது. 1985ஆம் ஆண்டு ஜூலை ஆகஸ்டு, செப்டம்பர் அக்டோபர் மாதங்களில், பொதுவிநியோகத்தில் மட்டும் கேட்பு 1 லட்சம் மெ.டன்களுக்கும் மேல் கூடியது.

விவசாயிகளுக்கு அளிக்கப் பட்ட இடுபொருள் மானியமும் குவிண்டாலுக்கு ரூ.20-லிருந்து ரூ. 35 ஆக உயர்த்தப்பட்டது. மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட கீழ்குறிப்பிட்டுள்ள விலைகளுக்கும் மேலாக இடுபொருள் மானியம் வழங்கப்படுகிறது.

| ரகம் | குவிண்டால் நெல்லுக்கு 1984-85 ரூ. | 1985-86 ரூ. |
|---|---|---|
| சாதாரணம் | 137 | 142 |
| சன்னம் | 141 | 146 |
| மிகச் சன்னம் | 145 | 150 |

1985ஆம் ஆண்டு குறுவையில் 3.75 இலட்சம் விவசாயிகளும், 1986-ஆம் ஆண்டு சம்பாப் பருவத்தில், 15-2-1986 முடிய 1.80 இலட்சம் விவசாயிகளும் இடுபொருள் மானியம் பெற்று பயனடைந்துள்ளனர். குறுவையில் அளிக்கப்பட்ட இடுபொருள் மானியத்தின் மதிப்பு ரூ.11.62 கோடியும், சம்பாவில் இதுவரை அளிக்கப்பட்ட இடுபொருள் மானியத்தின் மதிப்பு ரூ. 5.50 கோடியும் ஆகும்.



1981ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் மத்திய அரசு ஐந்து தடவை விலையை உயர்த்தியுள்ளபோதிலும், தமிழக அரசு பொது விநியோகத்தில் அரிசியின் விற்பனை விலையை மாற்றி அமைக்கவில்லை.

இம்மாநிலத்தில் 20,723 நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 15,648 கடைகள் கூட்டுறவுச் சங்கங்களாலும், 5011 கடைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும், 64 கடைகள் மலைத்தோட்ட நிர்வாகங்கள், தொழிற் சங்கங்கள் போன்ற அமைப்புகளாலும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நியாய விலைக் கடைகள் மூலமாக 119.65 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் நியாயவிலைக் கடைகள் அனைத்தையும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்ற வேண்டும் என்ற அரசு ஆணைக்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. இது குறித்து மற்றொரு வழக்கு உச்சநீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் விரைவில் உச்ச நீதி மன்றத்தின் ஆணைகள் பெறத்தேவையான நடவடிக்கைகளை இவ்வரசு எடுத்து வருகிறது.

நியாய விலைக் கடைகளின் பொருளாதார நிலை பற்றி ஆராய மாநிலக் கருவூலங்கள் மற்றும் கணக்குகள் துறை இயக்குநரை தலைவராகக் கொண்டு அரசு அமைத்த குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**அரிசி**

1985-86-ஆம் ஆண்டில், இதுவரை எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு அரிசி விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 28-2-1986 வரையில் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்ட மொத்த அளவு 9.98 லட்சம் டன்களாகும். ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் மாதமொன்றுக்கு 1.03 லட்சம் டன்களாக இருந்த அரிசின் விநியோக அளவு, குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் அளவைக் குறைத்ததாலும், போலிக் குடும்ப அட்டைகளை ஒழிப்பதை தீவிரப்படுத்தியதாலும், ஆண்டின் கடைசி நான்கு மாதங்களில் மாதமொன்றுக்கு சுமார் 70,000 டன்களாகக் குறைந்துள்ளது.

**கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்கள்:**

மத்திய அரசு முன்பு போலவே இந்த ஆண்டும் மாதமொன்றுக்கு 30,000 டன்கள் கோதுமையை இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்தது. ஆனால், பொது விநியோக முறையின் கீழ் கோதுமை வாங்குவது தொடர்ந்து குறைவாகவே உள்ளது. மத்திய அரசின் மொத்த ஒதுக்கீடான 3,30,000 டன்களில் 1.4.1985 முதல் 28.2.1986 வரையிலான காலத்தில் 57,702 டன் கோதுமைதான் நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசு 1-2-1986 முதல் கோதுமை விற்பனை விலையை குவிண்டால் ஒன்றுக்கு 172 ரூபாயில் இருந்து 190 ரூபாயாக உயர்த்தியது. இதன் காரணமாக மாநில அரசு கோதுமையில் சில்லறை விற்பனை விலையை கிலோ ஒன்றுக்கு 2.05 ரூபாயாக நிர்ணயித்துள்ளது.

நாடு முழுவதும் ஒரே விலையில் விற்கப்படும் லெவி சர்க்கரை நியாய விலைக் கடைகள் மூலம் மாதமொன்றுக்கு நபர் ஒருவருக்கு 450 கிராம் என்ற அளவில் விநியோகிக்கப்படுகிறது. கிலோ ஒன்றுக்கு 4 ரூபாயாக இருந்த லெவி சர்க்கரையின் விலை 1-4-1985 முதல் 4.40 ரூபாயாகவும் 1-12-1985 முதல் 4.80 ரூபாயாகவும் மத்திய அரசால் உயர்த்தப்பட்டது. 1985-ஆம் ஆண்டில் ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களிலும், ஆகஸ்ட் முதல் சனவரி 1986 முடியவும், கார்டிற்கு மாதமொன்றுக்குக் கூடுதலாக ஒரு கிலோ லெவி சர்க்கரை வழங்கப்பட்டது.

1985 ஜூன் முதல் நவம்பர் வரையிலான காலத்தில் வெளி அங்காடியில் சர்க்கரை விலை உயர ஆரம்பித்தபோது வழக்கமாக இம்மாநிலத்துக்கு ஒதுக்கப்படும் 21,292 டன்களும், கூடுதலாக மாதமொன்றுக்கு 3,402 டன்கள் லெவி சர்க்கரை ஒதுக்கப்பட்டதால் வெளிச் சந்தை விலை கட்டுப்படுத்தப்பட்டது. இதைத் தவிர, விலையைக் கட்டுப்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்பட்டது. மத்திய அரசு ஒதுக்கீடு செய்த வெளிச்சந்தை சர்க்கரை விநியோகத்தை முறைப்படுத்தி, சர்க்கரை விலை வெளிச் சந்தையில் உயர்வதை இந்த அரசு தடுத்தது.

மாதம் ஒன்றுக்கு இம்மாநிலத்துக்கு தேவைப்படும் 60,000 கிலோ லிட்டரில, மத்திய அரசு 47,000 கிலோ லிட்டரைத்தான் ஒதுக்கீடு செய்கிறது. வெள்ளநேரத்தில் அதிகப்படியாக 1,000 டன் மண்ணெண்ணெய் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. குடும்ப அட்டைதாரர்களின் தேவைக்கு அதிகமாக மண்ணெண்ணெய் இருந்தால், நகராட்சிகள் மற்றும் நகரியப் பகுதிக் குடும்ப அட்டைதாரர்களுக்கு, அதை வழங்க மாவட்ட ஆட்சி தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பெட்ரோலியம் பொருட்களின் விலையை மத்திய அரசு ஏற்றிய காரணத்தால், மண்ணெண்ணெய்யின் விற்பனை விலை சென்னையிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும் லிட்டர் ஒன்றுக்கு 2.25 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது.

மத்திய அரசு, இம்மாநிலத்துக்கு மாதமொன்றுக்கு 3,600 டன்கள் சமையல் எண்ணெய் ஒதுக்கீடு செய்கிறது. இது தவிர இந்துஸ்தான் தாவர எண்ணெய்க் கழகத்தின் மூலம் மாதமொன்றுக்கு 1,000 டன்கள், டின்களில் அடைக்கப்பட்ட சமையல் எண்ணெய்யும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சமையல் எண்ணெய்யைச் சீராக விநியோகம் செய்வதற்குத் தேவையான உள்ளமைப்பை இம்மாநிலம் ஏற்கெனவே ஏற்படுத்தியுள்ளது. 1.4.1985 முதல் 28.2.1986 வரையிலான காலத்தில் 56,645 டன்கள் சமையல் எண்ணெய் பொது விநியோக முறையில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட அளவை விட இந்த ஆண்டு சமையல் எண்ணெய் குறைவாகவே ஒதுக்கப்பட்டிருப்பினும், உள்ளூர் உற்பத்தி அதிகமான காரணத்தால் வெளி அங்காடியில் சமையல் எண்ணெய் விலை கட்டுப்பாட்டிலேயே உள்ளது. மத்திய அரசு பாமாலின் விலையை டன்னுக்கு 1000 ரூபாய் ஏற்றியதால், சில்லறை விலையை கிலோ ஒன்றுக்கு 11.85 ரூபாயாக இவ்வரசு நிர்ணயித்துள்ளது.

மத்திய அரசு, 1985 ஏப்ரல் மாதம் கிராமப் பகுதிகளில் உள்ள நலிவுற்றோருக்குச் சென்றடையும் வகையில் கட்டுப்பாட்டுத் துணியின் விநியோகம் ஒழுங்கு படுத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டது. கட்டுப்பாட்டுத்துணி அனைத்து நலிவுற்றோருக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் இவ்வரசு கிராமப் பகுதிகளிலும் நகர்ப்புறங்களிலும் மாதம் 1,000 ரூபாய்க்குக் குறைவான வருவாய் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டும் கட்டுப்பாட்டுத்துணி வழங்கப்பட வேண்டுமென ஆணையிட்டுள்ளது. 1985-86ஆம் ஆண்டுக்கு 18 மில்லியன் சதுர மீட்டர் கட்டுப்பாட்டுத்துணி இந்த மாநிலத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச்சங்கங்களின் அதிகாரிகளோடு காலமுறைக் கட்டங்கள் நடத்தி உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளர் கட்டுப்பாட்டுத்துணி வழங்கப்படுவதை கண்காணித்து வருகிறார்.



1985-86-ஆம் ஆண்டில் 28-2-1986 வரை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 2.02 இலட்சம் டன்கள் அரிசியையும், 28,710 டன்கள் பருப்பு வகைகளையும், 6,179 டன்கள் சமையல் எண்ணெயையும், 66,504 சத்துணவு மையங்களுக்கு வழங்கியது. இதனால் 86.88 இலட்சம் குழந்தைகளும் 1,99,794 முதியோர் உதவித்தொகை பெறுவோரும், 112 முன்னாள் படைவீரர்களும, பயனடைகிறார்கள். சென்ற ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் அறிவித்தபடி, இம்மாநிலத்தின் எல்லா சத்துணவு மையங்களுக்கும் அரிசி, பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் ஆகிய பொருட்களைக் கொண்டு செல்லும் பணியைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஏற்று நடத்துகிறது.

அரிசி அரைவை ஆலைகளை நவீனமயமாக்குவதன் அவசியத்தை உணர்த்தும் பொருட்டு, இதுவரை 10 கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. 15 செயல்முறை விளக்க மையங்களில் பொருத்துவதற்குத் தேவையான இயந்திரங்களை வாங்குவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசுக்கு முழுவதும் சொந்தமான தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் நெல் கொள்முதல் செய்தல், கொள்முதல் செய்த நெல்லை அரிசியாக்கி, அதைக் கிட்டங்கிகளில் சேமித்து வைத்தல் மற்றும் இன்றியமையாப் பொருட்களைப் பொது விநியோகத்திற்கு வழங்குதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளது. 1985-86-ஆம் ஆண்டில் இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ. 20 கோடியிலிருந்து ரூ.30 கோடிக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இக்கழகத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ. 19.89 கோடியாகும்.

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், குடும்ப அட்டை தாரர்களுக்கான அரிசியை விநியோகம் செய்வதற்காக நெல், அரிசியை தமிழக அரசின் முகவராக இருந்து நேரடிக் கொள்முதல் செய்கிறது. 1985-86-ஆம் ஆண்டில், சம்பாவில் 15-3-1986 வரை இக்கழகம் 4.68 இலட்சம் டன்கள் நெல் கொள்முதல் செய்துள்ளது. இதற்கென இக்கழகம் 832 நேரடிக் கொள்முதல் நிலையங்களையும், 45 லெவி சேகரிப்பு நிலையங்களையும் நிறுவியுள்ளது.

இக்கழகம் 1985-86-ஆம் ஆண்டில், இதன் 3.20 லட்சம் டன்கள் கொள்ளளவு கொண்டசேமிப்புக்கிடங்குவசதியுடன்மேலும் 30,4000 டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்புக்கிடங்கு வசதியைப் பெருக்கியுள்ளது. அரசால் அனுமதியளிக்கப்பட்ட 5 நேரடிக் கொள்முதல் நிலையங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சேமிப்புக் கிடங்குகள், நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மற்றும் லெவி கொள்முதல் நிலையங்கள் ஆகியவற்றை ரூ. 73.73 கோடி செலவில் கட்டுவதற்காக திட்டம் ஒன்றைத் தீட்டியுள்ளது. வரும் நிதியாண்டில் நேரடிக்கொள்முதல் நிலையங்கள் கட்டுவதற்காக ரூ.10 லட்சமும், செயல்முறை சேமிப்புக் கிடங்குகள் கட்டுவதற்கு ரூ. 10 லட்சமும் அரசு அனுமதி அளித்துள்ளது.

1985-86-ஆம் ஆண்டில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நிர்வகிக்கப்பட்டுவரும் 13 நவீன அரிசி ஆலைகளின் அரைவைத் திறனை ஆண்டுக்கு மேலும் 60,000 டன்கள் அதிகரிக்கும் திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இதைப் போன்று ஆறு நவீன அரிசி ஆலைகள் கட்டுவதற்கான திட்டத்திற்கும் அரசு அனுமதி அளித்துள்ளது. இதைத் தவிர, ஏழாவது ஐந்தாண்டுத் . திட்ட காலத்தில், இரண்டு நவீன அரிசி ஆலைகளைநிறுவுவதற்குத் திட்டக் குழுவினால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் அனுமதியளிக்கப்பட்டு, தஞ்சாவூர் மாவட்டத்தில், சீர்காழி வட்டத்தில், எருக்கூர் கிராமத்தில் கட்டப்பட்டு வரும் நவீன அரிசி ஆலை,1986 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் முதல் செயல்படத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், தமிழ்நாடு முழுவதும் சேமிப்புக் கிடங்கு வசதியை அளிக்கிறது. விவசாய விளைபொருட்கள் மற்றும் அறிவிப்பு செய்யப்பட்ட பொருள்களுக்குப் பூச்சிமருந்து அடிக்கும் பணியையும் மேற்கொள்ளுகிறது. இந் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ.6 கோடியாகும். 1985-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் முடிய இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனத் தொகை ரூ. 5.01 கோடியாக இருந்தது. 1985-86-ஆம் ஆண்டு, அரசு இந்நிறுவனத்திற்கு ரூ. 20 லட்சம் பங்கு மூலதனமாக வழங்கியுள்ளது. இதே போன்று மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனமும் அதன் பங்கான ரூ. 20 லட்சத்தை இந்நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. 1986-87ஆம் ஆண்டு, இந்நிறுவனம் இதன் பங்குத்தொகையை ரூ. 60 லட்சமாக உயர்த்தக் கருதியுள்ளது.

1985-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 321-ம் நாள்முடிய, இந்நிறுவனம் 43 இடங்களில்123 கிட்டங்கிகளை நடத்தி வந்தது. இவற்றின் கொள்திறன் 3.37 லட்சம் டன்களாக இருந்தது. 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் 2.52 லட்சம் டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்பு வசதியை, ரூ. 12.86 கோடி செலவில் ஏற்படுத்த இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. 1985-86-ஆம் ஆண்டிற்கு, கூடுதல் சேமிப்பு வசதியை ஏற்படுத்த இந்நிறுவனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 40,000 டன்கள் மட்டுமேயாகும். இந்நிறுவனம், 75,000 டன்கள் கூடுதல் சேமிப்பு வசதியை ஏற்படுத்தி இந்த இலக்கைத் தாண்டியுள்ளது.

இந்நிறுவனம், தொடர்ந்து பல ஆண்டுகளாக லாபத்தையே ஈட்டி வருகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் இந்நிறுவனம் ஈட்டியுள்ள லாபம் பின்வருமாறு

| ஆண்டு | இலாபம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1980—81 | 24.62 |
| 1981—82 | 69.31 |
| 1982—83 | 84.58 |
| 1983—84 | 100.10 |
| 1984—85 | 125.23 |







# வருவாய் ஈட்டித்தரும் வணிகவரித் துறை

மக்களாட்சியில் சமுதாயப் பணிகளுக்கான செலவினங்களுக்கு வருவாய் திரட்டுவதில் வணிக வரிகள் மூலம் அரசுக்குக் கிடைக்கும் வருவாய், பெரும்பங்கு வகிக்கிறது. வணிக வரிகளுள் முதன்மையானது விற்பனை வரியே. இவ்வரி விதிப்பு மிகச் சிறிய அளவில் அதாவது விற்பனைத் தொகையில் ஒரு ரூபாய்க்கு ஒரு காசு (1/192) என்ற விகிதத்தில் 1939-ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டது.

மாநிலங்களின் அதிகார வரம்பிற்குட்பட்ட இந்த வரி விதிப்பின் மூலம் அரசுக்கு வருவாய் வழிவகுத்ததில் மற்ற மாநிலங்களுக்குத் தமிழ்நாடு முன்னோடியாக விளங்குகிறது. இவ்வரிகள் உள்மாநில இடைமாநில விற்பனையின் மேல் விதிக்கப்படுகிறது. வெளிநாட்டு மது, உள்நாட்டில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகள், உள்நாட்டு மதுவான சாராயம் ஆகியவற்றிற்கு அதிகபட்ச வரியாக 50, 30 மற்றும் 20 விழுக்காடு விதிக்கப்படுகிறது. ஆடம்பரப் பொருள்களுக்கு 15% வரியும் மற்றப் பொருட்களுக்கு அவற்றின் உற்பத்தி தேவை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு இந்த அரசினால் வரி விகிதம் நிர்ணயிக்கப்படுகிறது. மொத்த, வரி வசூலில் தமிழ்நாடு அனைத்திந்திய அளவில் மகாராஷ்டிரத்திற்கு அடுத்த இடத்தைப் பெற்று வருகிறது. 1976-77-ஆம் ஆண்டில் வணிக வரிகள் மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ. 255.58 கோடியாக இருந்தது. 1985-86-ஆம் ஆண்டில் ரூ. 1035.08 கோடி. அதாவது நான்கு மடங்காக உயர்ந்துள்ளது.

இத்துறையின் மற்றுமோர் சாதனை 1976—77 ஆம் ஆண்டில் 55, 683 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ. 43.71 கோடி விற்பனைத் தொகை மறைப்பு வெளிக் கொணரப்பட்டு அரசுக்கு ரூ.1 கோடி 74 இலட்சம் அதிக வரி கிடைக்க வழி செய்யப்பட்டது. 1984—85ஆம் ஆண்டில் 96,746 குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டு ரூ.245 கோடி விற்பனைத் தொகை மறைப்பு வெளிக்கொணரப்பட்டு, அரசுக்கு ரூ.21 கோடி 57 இலட்சம் அதிகவரி கிடைக்க வழி செய்யப்பட்டது.

இம்மாநிலத்தில் வரி விதிப்பின் மூலம் ஏழை, எளிய நடுத்தர மக்களைப் பாதிக்காமல் இருக்க, அம்மக்களுக்குஅடிப்படையாகத் தேவைப்படும் பொருட்களின் விற்பனையின் மேல் முழு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. ஏழை எளிய மக்களின் அன்றாடத் தேவையான விறகின் மேல் முழு வரி விலக்குள்ளது.

உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவுப் பொருட்களுக்கும், பன், பொறை, ரொட்டி முதலியவற்றிற்கும் முழு வரி விலக்களிக்கப் பட்டுள்ளது. அப்பளம், சேமியா பொருட்களின் மேலும் 1981-ஆம் ஆண்டிலிருந்து வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. முதியோரின் நலன் காக்கும் பொருட்டு மூக்குக் கண்ணாடிகளுக்கு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. கையினால் செய்யப்படும் செங்கற்கள், மண்பாண்டங்கள் ஆகியவைகளுக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகங்கள், கரும்பலகைகள், எழுது பொருட்கள் ஆகியவற்றிறகும் முழு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. புத்தகங்கள் அனைத்திற்கும் வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. கால்நடைகள் மற்றும் விலங்கினங்கள் விற்பனையின் மேலும், கால்நடைகளுக்கு இரையாக உள்ள புல், வைக்கோல், தாழ், தவிடு முதலியவற்றிற்கும் வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. மனிதர்கள் மற்றும் விலங்குகள் சக்தி மூலம் இயக்கப்படும் விவசாயத் துணைப் பொருட்கள் மேலும் வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும் இயற்கை உரத்திற்கு முழு வரி விலக்களிக்கப் பட்டுள்ளது. ஆனால், இரசாயன உரங்கள் மீதும், பூச்சி, காளான், வேர்க் கொல்லி மீதும் குறைந்த வரியாக மூன்றரைச் சதவீதம் விதிக்கப்படுகிறது.

நடுத்தர மக்களுக்கும் வரி விதிப்பில் சலுகைகள் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் தயார் செய்யப்படும் மின்னணுக் கருவிகளுக்கு வரிவிதிப்பு 6 சதவிகிதமாகவும், பிற இடங்களில் தயாரிக்கப்படும் மின்னணுப் பொருட்களுக்கு 10 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. சைக்கிள்கள் அவற்றின் டயர், டியூபுகள், கையால் செய்யப்படும் சோப்புகளுக்கு வரி விகிதம் குறைக்கப்பட்டுள்ளது. இயற்கைச் சக்திகளான சூரிய ஒளி, காற்று, தழை மற்றும் சாணம் ஆகியவற்றை மக்களுக்குப் பயன்படும் எரிபொருள் மற்றும், மற்றச் சக்திகளாக மாற்றிடும் கருவிகளுக்கு வரி விலக்களிக்கப் பட்டுள்ளது. உயிர்காக்கும் 41 மருந்து வகைகளுக்கு வரி 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

பலமுனை வரிக்குட்பட்ட பொருட்கள் மட்டுமே விற்பனை செய்யும் வணிகர்கள் பதிவு செய்து கொள்வதற்கான விற்பனைத் தொகை வரம்பு ஆண்டொன்றுக்கு ரூ.75,000 இந்நிதியாண்டிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும், இப்பொருட்களில் வாணிபம் செய்யும் சிறு வணிகர்களுக்கு, ஆண்டொன்றிற்கு விற்பனைத் தொகை ஒரு இலட்சம் ரூபாய்க்குள் இருந்தால் வரி விதிப்பு இல்லை. இவ்வணிகர்களின் ஆண்டு விற்பனைத் தொகை ஒரு இலட்சத்திலிருந்து இரண்டு இலட்சம் ரூபாய்க்குள் இருந்தால் சலுகை வரி விதிப்பு முறை அமலில் உள்ளது.

கேளிக்கை வரி விதிப்பு இம்மாநிலத்தில் 1926-ஆம் ஆண்டு முதல் அமலில் உள்ளது. இதன் மூலம் கிடைக்கும் வருவாய் பெரும் பகுதி உள்ளாட்சி-ஊராட்சி ஒன்றியங்களுக்கே அளிக்கப்பட்டாலும், வணிகவரித்துறையே இவ்வரியையும் வசூலித்துவருகிறது. 1939-ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட சட்டத்தில் 77-ஆம்ஆண்டிலிருந்து, முழு அளவில் நகராட்சி மற்றும் பஞ்சாயத்து எல்லைகளுக்குட்பட்ட திரையரங்கங்கள் இணக்கத் தொகையான வரி செலுத்தும் முறை அமல் செய்யப்பட்டு வரி ஏய்ப்பு எண்ணம் ஏற்படாத வண்ணம் அரசு காத்துள்ளது.

பந்தய வரி, சென்னை மற்றும் ஊட்டியில் நடக்கும் குதிரைப் பந்தயங்களின் மேல் 1935-ஆம் ஆண்டு முதல் விதிக்கப்பட்டு வருகிறது. இவ்வரியும் இத்துறை மூலமே வசூலிக்கப்படுகிறது. மேலும், ஓட்டல்கள் மற்றும் தங்குமிடங்களில் விதிக்கப்படும் சொகுசு வரி 13.11.80லிருந்து இத்துறை மூலம் வசூலிக்கப்படுகிறது.

வணிகர்களின் நலனுக்காக வணிகர் நல ஆலோசனைக்குழு மாநில அளவில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அரசுக்கு வரி விதிப்பு ஆலோசனை கூறவும், வணிகர்களின் பொதுக் குறைகளைக் களைவதற்கும், மாநில அளவில் வணிகவரித்துறை அமைச்சரின் தலைமையில், மாநில விற்பனை வரி ஆலோசனைக்குழு செயல்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் குறைகளைக் களைவதற்காக மாவட்ட ஆட்சியாளர் தலைமையிலும், துறை அலுவலர்கள், வணிகர்களின் பிரதிநிதிகள் ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட மாவட்ட விற்பனை வரி ஆலோசனைக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

வரி ஏய்ப்புத் தொடர்பான இரகசியத் துப்புகள் அளிப்பவர்களுக்குத் துறையின் மூலம் தகுந்த பரிசு வழங்கப்படுகிறது. அது போன்றே, வரி தவிர்ப்பு அல்லது ஏய்ப்பினை ஆராய்ந்து கண்டுபிடித்து அரசுக்கு வரி வசூலித்துத் தரும் இத்துறை அலுவலர்களுக்கு முதலமைச்சரின் திறமைச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. தமிழகத்தைப் பின்பற்றி, பிற மாநிலங்களும் இம்முறைகளைக் கடைப்பிடிக்கின்றன.

வணிகர்களின் குறிப்பிட்ட புகார்களை விசாரித்து நடவடிக்கை எடுக்க வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் உயர் மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. அக்குழுவினிடம் தெரிவிக்கப்படும் புகார்களின் மேல், உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு
—திருக்குறள்


**குங்குமச்சேற்றில் குழைத்தெடுத்த தங்கத்தூணே!**

**தமிழ்க்குலம் தழைக்க மணம் வீசும் மல்லிகைப் பந்தலே!**

பசிப்பிணி என்ற அந்தகார இருளை அனாதையாக்கி
ஒரு சுபிட்சபுத்திரனை சுவீகாரமாக ஏற்றுக்கொண்ட
எங்கள் ஞானத் தந்தையே!

குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற கொள்கைக்கு
அரங்கேற்றம் நடத்தும் எங்கள் ஆருயிர்த் தலைவரே!

முப்பது இலட்சம் வீடுகள் என்ற முனைப்பான
திட்டத்திற்கு முகவுரை எழுதிய எங்கள் முத்தான
முதல்வரே!

**பல்லாண்டு வாழ்க நின் ஆட்சி!**

[illegible]
தலைவர்

**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்**





# மக்கள் தேவைக்கேற்ப சேவை அதுவே சென்னை குடிநீர்



- சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியம் 1.8.1978 அன்று சட்டப்படி தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனமாக அமைக்கப்பட்டது.

## இதன் நோக்கம் :

- சென்னைப் பெருநகர் பகுதியின் பொதுச் சுகாதாரத்தை பேணிக் காத்து நகர மக்களின் வளர்ந்து வரும் தேவைகளைக் கவனித்து குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் ஆகியவையே ஆகும்.
- இவ்வாரியம் தொடங்கி எட்டு ஆண்டுகளுக்குள் சேவை மனப்பான்மையில் திறம்படப் பணி புரிந்து மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ளது.

1981 முதல் 1983 வரையிலான 3 ஆண்டுகள் நிலவிய கடுமையான வறட்சி நிலைமையை இவ்வாரியம் ரூ. 10 கோடி செலவிட்டு வெற்றிகரமாக சமாளித்தது.

## நிதி :

மாநில அரசின் உதவியோடு பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு குடிநீர் பிரிவின் கீழ் ரூ. 37.84 கோடி செலவில் ஒப்புதல் அளிக்கப்பட்டு 31 திட்டங்களில் 18 திட்டங்களும் கழிவு நீரகற்று பிரிவின் கீழ் ரூ. 33.53 கோடி செலவில் ஒப்புதல் அளிக்கப்பட்டு 21 திட்டங்களில் 7 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன.

## உலக வங்கித் திட்டம் :

நிலத்தடி நீரை எடுத்து குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு தமிழக அரசு ரூ. 15 கோடி வழங்கி ஆழ்துளை கிணறுகள் போடப்பட்டுள்ளன.

மேலும் ரூ. 136 கோடி உலக வங்கித் திட்டம் செயல்படுத்திட தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## குடிநீர் வழங்குதல் :

1978-ம் ஆண்டு நாளொன்றுக்கு வழங்கப்பட்ட குடிநீர் சராசரியாக 48 மில்லியன் காலன் (215 Mld.) பயன் பெற்றோர் — 26.39 இலட்சம் மக்கள், பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியதால் இன்று நாளொன்றுக்கு வழங்கப்படும் குடிநீர் சராசரியாக 54 மில்லியன் காலன் (245 Mld.) பயன் பெறுவோர் 33.35 இலட்சம் மக்கள்.

இதைத் தவிர மீஞ்சூர், பஞ்சட்டி, தாமரைப்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள கிணறுகளிலிருந்து நாள் ஒன்றுக்கு 53 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்கப்பட்டு மணலி மற்றும் எண்ணூர் அனல் மின் நிலையப் பகுதிகளில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

1978ம் ஆண்டில் 12 ஊராட்சிகள் சென்னை மாநகரோடு இணைக்கப்பட்டு, திருவான்மியூர், கோடம்பாக்கம், சாலிக்கிராமம் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும் கொடுங்கையூர், எருக்கஞ்சேரி, வில்லிவாக்கம், ஆகிய பகுதிகளுக்கும் குடிநீர் விரைவில் வழங்கப்படும்.

## கழிவு நீரகற்றல் :

சென்னைப் பெருநகர் 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்திலும் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு அந்நீர் புல் வளர்ப்புக்குப் பயன்படுத்தப்படுகிறது. 1978ம் ஆண்டு நிலவரப்படி கழிவு நீரகற்று நிலையங்களின் திறன் நாள் ஒன்றுக்கு 190 மில்லியன் லிட்டராகும். ஆனால் இப்பொழுது பல்வேறு திட்டங்களை மேற்கொண்டதால் ஏற்பட்டுள்ள திறன் 220 மில்லியன் லிட்டராகும். மேலும் புதிதாக 6 கழிவு நீரேற்று நிலையங்கள் கட்டப் பட்டுள்ளன. பெருங்குடி, கோயம்பேடு ஆகிய இடங்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்படத் தொடங்கி உள்ளன.





ரூ. 12 கோடி செலவில் சின்னமலை, வேளச்சேரி சாலை, அரும்பாக்கம், அமிஞ்சிக்கரை ஆகிய பகுதிகளில் புதியதாக கழிவு நீரகற்று அமைப்புகள் ஏற்படுத்தபட்டுள்ளன. மேலும் 10 நிலையங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

## தமிழ் நாடு முதலமைச்சரின் ''சத்துணவுத் திட்டம்''

சென்னை குடிநீர் வாரியம், சென்னை நகரில் 1609 சத்துணவு கூடங்களுக்கு குடிநீர் வசதி அளித்துள்ளது. இவற்றில் பல்வேறு கூடங்களுக்கு 671 குடிநீர் குழாய் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட முடியாத 397 கூடங்களில் எஃகு தொட்டிகள் வைக்கப்பட்டு நாள்தோறும் லாரிகள் மூலம் அவற்றில் குடிநீர் நிரப்பப் படுகிறது. இது தவிர 395 குழாய் கிணறுகள், கழுவும் பணிகளுக்காக முடிந்த இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

## கழிவு நீர் சுத்திகரிப்பு சாதனங்கள் :

கழிவு நீரகற்றுப் பணிகளை நவீனப்படுத்துவதற்காக, ஆழமான, சிக்கலான கழிவுநீர் அடைப்புகளை அகற்றுவதற்காக ''மான்ஸ்டர் 2000'' என்னும் சாதனம் ஒன்று ரூ. 40 லட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது.

## குடிசைகளுக்கு குடிநீர்—கழிவு நீரகற்று வசதி :

இவ்வாரியம் 225 குடிசைப் பகுதிகளுக்கு குடிநீர் வசதியும் 35 குடிசைப் பகுதிகளில் கழிவு நீரகற்று வசதிகளும் செய்து கொடுத்துள்ளது.

## ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் :

ஏழாவது திட்டக்கால முடிவில் — நாள் ஒன்றுக்கு குடிநீர் சுத்தப்படுத்தப்படும் திறனளவு மேலும் 90 மில்லியன் லிட்டர் அதிகரிக்கப்படும்.

நிலநீர் திட்டத்தின் முதல் கட்டப் பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் சென்னைக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு நாளொன்றுக்கு 55 மில்லியன் லிட்டர் அதிகரிக்கப்படும். கொடுங்கையூரில் அமைந்துள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் திறன் மேலும் அதிகரிக்கப்படும். பள்ளிப்பட்டு, மேல்பட்டடை, கோட்டூர், மாம்பலம் ஏரிக்கரை, திருவான்மியூர், வில்லிவாக்கம் ஆகிய பகுதிகளில் புதிதாக கழிவு நீரகற்று வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**இவை மட்டுமல்ல. . . . சாதனைப் பட்டியல் இன்னும் தொடரும்.**

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியம்**

1, பம்பிங் ஸ்டேஷன் சாலை, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-600 002.

DIPR 28263/939/86-10 (R)

அன்று
ஏழையின் சிரிப்பில் இறைவனைக்
கண்டார் அண்ணா

இன்று
ஏழையின் சிரிப்பினில் அண்ணாவைக்
காண்கின்றார் புரட்சித் தலைவர்



**ஆண்ட பத்தாண்டு காலத்தில்
அடித்தளத்து மக்கள் வாழ்வில்
அமைதி ஒளி ஏற்றிய
தங்கத் தலைவர்,
தமிழக முதல்வர்
அடிச்சுவட்டினில்
தமிழ்நாடு குடிசைப்பகுதி
மாற்று வாரியம்
தனது புனிதப் பணியை
தொடர்கிறது.**

முப்பது இலட்சம் வீடுகள் தருவது
புரட்சித் தலைவரின் இலட்சியம் — அதனை
கட்டித்தந்து நிறைவேற்றுவதே எங்கள் கடமை

**என்.வி.என்.செல்வம்**
தலைவர்

**தமிழ்நாடு
குடிசைப்பகுதி
மாற்று வாரியம்**




# வளர்ந்து வரும் போக்குவரத்துத் துறை

**பே**ரறிஞர் அண்ணா அவர்கள் 1967ல் தமிழகத்தில் முதல்வர் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன் பல்வேறு நலப் பணியில் ஈடுபட்டார். மக்களின் குரலுக்கு மதிப்பளித்து வந்த அண்ணா அவர்கள், தனியாரின் ஆதிக்கத்திலிருந்து வந்த பேருந்துகளை நாட்டுடைமையாக்கும் மாபெரும் திட்டத்தை நடைமுறைப் படுத்தினார். பேருந்துகள் ஏழை, எளிய மக்களுக்கு நல்ல விதத்தில் பயனளிக்க வேண்டும் என்பதற்காகவும், பேருந்துகளின் மூலம் வருகின்ற வருமானம் நாட்டு மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காகவும் தான் பேருந்துகளை நாட்டுடைமையாக்குவதில் அண்ணா அதிக ஆர்வம் காட்டினார். பேருந்துப் போக்குவரத்துக் கழகங்களை உருவாக்குவதற்கும் அவர் திட்டமிட்டிருந்தார்.

அவரது கொள்கைகளை அப்படியே கடைப்பிடித்து வரும் அண்ணாவின் அரசு, போக்குவரத்துக் கழகங்களை அதிக அளவில் உருவாக்கி, பொதுமக்களுக்கு ஏராளமான வசதிகளைச் செய்து தருகிறது. குக்கிராமங்களில்கூட பேருந்துகளைச் செலுத்தி அங்கு வாழும் மக்கள் பயணம் செய்வதற்கு வழிவகைகளைச் செய்து வருகிறது. சுருக்கமாகச் சொன்னால், ஒரு நாளின் எந்த நேரத்திலும் தமிழக அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த பேருந்துகள் ஓடிக்கொண்டே இருக்கின்றன. மக்கள் நலனையே கருத்தில் கொண்டு இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் பணியாற்றுகின்றன.

போக்குவரத்துக் கழகங்களின் கடந்த ஒன்பது ஆண்டு வளர்ச்சி

1. போக்குவரத்துக் கழகங்கள்

| 1977 | 1986 |
|---|---|
| பல்லவன் | பல்லவன் |
| பாண்டியன் | பாண்டியன் |
| சேரன் | சேரன் |
| சோழன் | சோழன் |
| அண்ணா | அண்ணா |
| கட்டபொம்மன் | கட்டபொம்மன் |
| தந்தை பெரியார் | தந்தை பெரியார் |
| | பட்டுக்கோட்டை அழகிரி |
| | மருது பாண்டியர் |
| | ஜீவா |
| | தீரன்சின்னமலை |
| | நேசமணி |
| | திருவள்ளுவர் |
| | இராணிமங்கம்மான் |

| | 1977 | 1986 |
|---|---|---|
| 2. டெப்போக்களின் எண்ணிக்கை | 106 | 187 |
| 3. பேருந்துகளின் எண்ணிக்கை | 4,974 | 10,201 |
| 4. அரசுடைமையாக்கப் பட்ட பேருந்துகளின் (சதவீதம்) | 51 | 66 |
| 5. வழித்தடங்கள் எண்ணிக்கை | 2,045 | 5,230 |
| 6. நாளொன்றுக்கு ஓடிய கிலோ மீட்டர்கள் (இலட்சத்தில்) | 12 | 32 |
| 7. நாளொன்றுக்கு ஏற்றிச் சென்ற பயணிகள் (இலட்சத்தில்) | 37 | 92 |
| 8. பணியாளர்களின் எண்ணிக்கை | 40,904 | 75,700 |
| 9. ஒரு பணியாளரின் சராசரி மாத வருமானம் | ரூ.534 | ரூ.1370 |
| 10. போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் உள்ள வைப்புத்தொகை (ரூ. கோடியில்) | 3.11 | 69.11 |



| | | |
|---|---|---|
| 11. போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் ஓராண்டிற்கு அரசு போக்குவரத்துக்கழகங் களுக்கு அளித்த கடனுதவி (ரூ.கோடியில்) | 6.05 | 62.44 |
| 12. இக்கடனுதவியாலும், சொந்த ரொக்க உற்பத்தி யாலும் ஓராண்டில் வாங்கப்பட்ட புதிய பேருந்துகள் | 674 | 2,200 |

**போக்குவரத்துத் துறையில் கடந்த ஒன்பது ஆண்டுப் பணிகள்**

1. சாலைப் போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவதற்காக முன்னாள் மத்திய அமைச்சர் திரு பட்டாபிராமன் தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டியின் 236 பரிந்துரைகளையும் விரைவில் ஆராய்ந்து, அதன் பேரில் நடவடிக்கைகளை எடுத்துச் சாதனை புரிந்தது.

2. 1979ல் மாநிலம் முழுவதும் பெருமளவில் சாலைப் போக்குவரத்து ஆய்வு கணக்கீட்டுப் பொறியியல் செய்தது.

3. மாநிலத்தில் ஏழு போக்குவரத்துக் கழகங்களாக இருந்ததை மாவட்டத்திற்கு ஒரு போக்குவரத்துக் கழகமாக 14 போக்குவரத்துக் கழகங்கள் அமைத்தது. சிறுசிறு பொறியியற் கழகங்களை அதன் தாய்க் கழகங்களோடு இணைத்தது.

4. 1981-82ஆம் ஆண்டு முதல் பேருந்துகள் வாங்குவதற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து சுலபக் கடன் வாங்கி தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம் மூலம் விநியோகம் செய்தது.

5. முதன் முதலாக தூங்கும் வசதி கொண்ட சொகுசுப் பேருந்து இயக்கியது.

6. டீசல் எண்ணெய் மிச்சப்படுத்தும் வகையில் ஆர்ப்பிலிரான் போன்ற வடிவமைப்பில் ஜீவா ஜெட் பேருந்து இயக்கியது.

7. அதிகப் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு வசதியாக ஆர்டிகுலேட் பஸ் இயக்கியது.

8. கிராமப் பகுதிகளில் சாமான் ஏற்றிச் செல்ல வசதியாக அங்காடிப் பேருந்துகள் இயக்கியது.

9. சாலைப் பயணிகள் வசதிக்காக சாலையோர விடுதிகள் அமைத்தது.

10. முக்கிய இடங்களில் போக்குவரத்துக் கழகங்களால் அனைத்து வசதிகளுடன் நவீன பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட்டன.

11. உலகெங்கிலும் உள்ள சாலைப் போக்குவரத்து நிறுவனங்களுக்குப் பரிந்துரை கூற பல்லவன் போக்குவரத்து பரிந்துரைப் பணிக்குழு அமைத்தது.

12. கடந்த 9 ஆண்டுகளில் சுமார் 13,000 புதிய பேருந்துகள் ரூ.400 கோடிக்கு வாங்கி, பழைய பேருந்துகளுக்குப் பதிலாக மாற்றியமைத்தும், பழைய வழித்தடங்களில் கூடுதலாகவும் புதிய வழித்தடங்களிலும் ஓடவிடப்பட்டிருக்கின்றன.

13. நகர்ப்புறப் பேருந்து வழித்தடங்களின் நீளத்தை 25 கி.மீட்டரிலிருந்து 30 ஆக மாற்றியது.

14. இந்தியாவிலுள்ள மற்ற பெரும்பாலான மாநிலங்களைவிட நமது மாநிலத்தில் பேருந்துக் கட்டணம் குறைவானது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

15. பேருந்துக் கூடு கட்டுவதில் தன்னிறைவு அடைந்தது மட்டுமல்லாமல், அந்தமான், டில்லி, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், கேரளம் ஆகிய பிற மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கும் பேருந்துக் கூடு கட்டிக் கொடுத்தது.

16. அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி கொண்டு செல்வதற்காக நவீன கப்பல் வாங்கி மிக அதிக அளவில் குறைந்த செலவில் நிலக்கரி கொண்டு சென்று சாதனை புரிந்தது.

17. கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் பாறை நினைவுச் சின்னத்திற்கு படகுப் போக்குவரத்து ஏற்றுக்கொண்டது.

18. அரசு கட்டுமானக் கழகம் துவக்கியது.





# ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலன்

**1981**-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி, தமிழ்நாட்டின மொத்த மக்கள்தொகை 484 இலட்சமாகும். இதில் ஆதிதிராவிடர் 88.81 இலட்சம் பேர். இது மொத்த மக்கட் தொகையில 18.35 விழுக்காடு ஆகும். பழங்குடியினர் 5.20 இலட்சம் பேர். இம்மாநிலத்தில் மொத்த மக்கட் தொகையில் கல்வியறிவு பெற்றவர்கள் தொகை 46.76 விழுக்காடு ஆகும். ஆதிதிராவிடர்களில் 29.67 விழுக்காடும், பழங்குடியினரில் 20.45 விழுக்காடும் கல்வி அறிவு பெற்றுள்ளனர். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்தில் பல்வேறுபணிகள் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் 12-வதுவகுப்பு வரை எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு முதுநிலை பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. பள்ளிக்குச் செல்லும் வயதுடைய 25 இலட்சம் ஆதிதிராவிடர் குழந்தைகளில்19.56 இலட்சம் பேர் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

1985-86-ஆம் ஆண்டிலிருந்து முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் எல்லா மாணவ, மாணவியருக்கும் இலவசமாகப் பாடப் புத்தகங்கள் கல்வித்துறையால் வழங்கப்படுகின்றன. மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்புப் பயில்கின்ற-தங்கிப் பயிலும் ஆதிதிராவிடர் மாணவர்கட்கும் அவர்களது பெற்றோர்களின் வருட வருமானம் ரூ. 6,000த்திற்கு அதிகப்படாமல் உள்ளவர்கட்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

தற்பொழுது ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு உதவித் தொகை பெறுபவர் ஆணா/பெண்ணா என்பதைப் பொறுத்தும், படிக்கின்ற படிப்பின் தன்மையைப் பொறுத்தும் உணவு மற்றும் உறைவிடச் செலவுக்கு ரூ. 250-லிருந்து ரூ. 350 வரை வழங்கப்படுகிறது.

முதுநிலை பட்டப் படிப்பு வரை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. விடுதியில் தங்கிப் பயிலாத மாணவர்கள் மற்றும் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு அவர்கள் எந்தப் பாலினர் மற்றும் எந்தப் படிப்புப் பயிலுகின்றனர் என்பதைக் கணக்கில் கொண்டு பராமரிப்பு உதவித்தொகை மாதத்திற்கு முறையே ரூ. 50லிருந்து ரூ. 120 மற்றும் ரூ. 75லிருநது ரூ. 200 வரை தற்போது தரப்படுகிறது.

மாநிலத் திட்டத்தின் கீழ் இவ்வுதவித் தொகை மாதத்துற்கு ரூ. 50லிருந்து ரூ. 75 வரை கொடுக்கபபடுகிறது. மேற்கண்ட இவ்விரு திட்டங்களின் கீழ், ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 62,000 ஆதிதிராவிட மாணவர்களும் 300 பழங்குடி வகுப்பு மாணவர்களும் பயனடைகிறார்கள்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மாணவர்களில் 7 மாணவர்களுக்கு ஒரு ஜதைப் புத்தகம் என்ற விகிதத்தில் ரூ. 2,300 பெறுமான புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதோடு அலமாரி வாங்குவதற்கு 5 ஜதைப் புத்தகங்களுக்கு ஒன்று என்ற விகிதத்தில் ரூ. 1,000, இதர செலவுக்காக ரூ. 100 வழங்கப்பட்டன.

1982-83-ஆம் ஆண்டில் இது 4 ஆதிதிராவிடர் / பழங்குடியினர் ஜுன மாணவர்களுக்கு ஒரு ஜதை என்ற விகிதத்தில் ரூ. 5000 என்று உயர்த்தப்பட்டது. அது மேலும் 3 மாணவர்களுக்கு ஒரு ஜதை என்ற விகிதத்தில் ரூ. 5,000 என்று 1985-86 லிருந்து மாற்றப்பட்டது. 1985-86-ல் இதற்காக ரூ. 28.75 இலட்சம் செலவிடப்பட்டது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில், ஒன்று முதல் எட்டுவரை உள்ள வகுப்புகளில் பயிலும் எல்லா மாணவர்களுக்கும் இலவசமாக இரண்டு ஜதைச் சீருடைகள் வழங்கப்படுகின்றன. பழங்குடியினர் மாணவர்களின் பயன் கருதி அரசு 170 உண்டி, உறைவிடப் பள்ளிகளை நடத்தி வருகிறது. இப்பள்ளிகளில் 10,795 பழங்குடியினர் மாணவர்களுக்கு உணவு மற்றும் உறைவிட வசதிகள் இலவசமாகவழங்கப்படுகின்றன. இப்பள்ளிகளில் முதல்வரின் சத்துணவுத் திட்டமும் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆதிதிராவிட மாணவர்கள் இலவசமாக உணவு மற்றும் தங்கும் வசதியுடன் கல்வி பயில ஆதிதிராவிடர்களுக்கு 728 விடுதிகளும், பழங்குடியினர்களுக்கு 22 விடுதிகளும் அரசால் நடத்தப்படுகின்றன. இவ்விடுதிகளில் 51,924 ஆதிதிராவிடர் மற்றும்



பிற மாணவர்கள் தங்கிக் கல்வியைத் தொடருகிறார்கள்.

தங்கிப் படிப்பவர்களுக்காக எல்லா வசதிகளையும் கொண்ட விடுதிகள் படிப்படியாகக் கட்டப் படுகின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டங்களுக்காகச் செய்யப் படும் நிதி ஒதுக்கீட்டில் 50 விழுக் காடுகளுக்கு மேல் ஆதிதிராடர் மற்றும் பழங்குடியினர் கல்விக் கெனச் செலவிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் வசிக்கும் ஆதி திராவிடர்களில் சுமார் 7.40 இலட்சம் பேர் விவசாயிகள் ஆவர். இவர்களுடைய பொரு ளாதார மேமபாட்டிற்காக, பாசனக் கிணறுகள் வெட்டு வதற்காக ரூ. 6000, உழவு மாடுகள் வாங்குவதற்காக ரூ. 600 மான்யமாக வழங்கப்படு கின்றன.

ஆதிதிராவிடர்கள் கறவை மாடுகள வளர்ப்பதில் ஆர்வம் காட்டுவதாலும், பாலுக்கு அதிகத் தேவையிருப்பதாலும, பால் வழங்கு கூட்டுறவுச் சங் கங்கள் இவர்களுக்காக நிறுவப் பட்டு வருகின்றன. ஒவ்வொரு கறவை மாடும் ரூ. 2,500 விலை யாகிறது. இதில் ரூ. 833, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி யினர் நலத்துறையில் மானிய மாக வழங்கப்படுகிறது. எஞ்சிய ரூ. 1667 தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளால் கடனாக வழங்கப் படுகிறது. ஒவ்வொரு உறுப்பின ரும் இரண்டு கறவை மாடுகள் வாங்குவதற்குத் தகுதியுடைய வர் ஆவர்.

தமிழ்நாடு தேர்வாணைக்குழு வால் நடத்தப்படும் தொகுதி-4 பணிக்குரிய போட்டித் தேர் வினை எழுத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படு கிறது. இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல் பணி போன்ற அனைத்திந்தியப் பணிகளுக்கு முன்பயிற்சி 1966ஆம் ஆண்டி லிருந்து அளிக்கப்படுகிறது. வழக்கறிஞர் தொழில் செய்ய விரும்பும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியைச் சேர்ந்த சட்டப் பட்டதாரிகளுக்குப் பதிவு செய்ய வும், அறை வாடகை போன்ற செலவினத்திற்குக் கடனாக ஒவ் வொருவருக்கும் ரூ. 750, சட்ட புத்தகங்கள், மரச் சாமான்கள் முதலியவை வாங்குவதற்கு ரூ. 750 அரசு மான்யமாக வழங்கு கிறது.

ஒவ்வொரு ஆதிதிராவிடர் குடும்பத்திற்கும் 3 சென்ட் நிலம் வீட்டு மனையாக ஒப்படைப்பு செய்யப்படுகிறது. இதுவரை 4,58,568 வீட்டு மனைகளுக்கு நில எடுப்பு செய்யப்பட்டுள்ளது. இவற்றைச் சேர்த்து இதுவரை 10 இலட்சத்திற்கும் அதிக மான ஆதிதிராவிடர் குடும்பங் களுக்குப் பல்வேறு திட்டங் களின் கீழ் வீட்டு மனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் 1974-ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது. இதுவரை இக்கழகத் தின் மூலம் 57,884 வீடுகள் ஆதிதிராவிடருக்காகக் கட்டப் பட்டுள்ளன. தொடக்கச் செலவு வழங்கும் திட்டத்தைச் செயல் படுத்தும் பொறுப்பும் தாட்கோ விடமே விடப்பட்டிருக்கிறது. 1,51,276 ஆதிதிராவிடர்கள் பயன்பெறும் வகையில் தாட்கோ இதுவரை ரூ. 662.26 இலட்சம் வழங்கியுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் நலன் என்ற பிரிவின் கீழ், ஒரு கிணற்றுக்கு ரூ.7,500 செலவு என்ற முறையில் குடி நீர்க் கிணறுகள் அமைக்கப்படு கின்றன. ரூ. 13,000 செலவில் தரைமட்ட சென்டிரிபிகல் குழாய்க் கிணறுகளும் ரூ. 15,000 செலவில் ஆழ்குழாய்க் கிணறு களும் அமைக்கப்பட்டிருக்கின் றன.

இந்த அரசு, மாநிலத்தில் குடி யியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தைத் தீவிரமாகச் செயல் படுத்திக் கொண்டு வருகிறது. நடமாடும் காவல் படைப் பிரிவுகள் 22 இம்மாநிலத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தக் காவல் படைப் பிரிவுகள் 1985 டிசம்பர் முடிய 11,531 வழக்குகளைப் பதிவு செய்துள்ளன. இவற்றில் 4,134 வழக்குகள் நீதி மன்றங்களால் தண்டனை வழங் கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

குடியியல் உரிமைகள் பாது காப்புச் சட்டத்தின் கீழ் இழைக் கப்படும் குற்றங்களை விசாரிக்க நான்கு தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ் வொரு ஆண்டும் ஜனவரி 24 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி முடிய தீண்டாமை ஒழிப்பு வாரம் கொண்டாடப்படுகிறது. தீண்டாமைக் கொடுமை ஒழிப் பினைப் பிரச்சாரம் செய்வதற் காக "தீர்த்த யாத்திரை" என்ற செய்தித் திரைப்படம் தயாரிக்கப்பட்டு அதை கிராமங் களில் திரையிட்டுக் காட்ட ஒரு கூண்டு உந்து வண்டி வாங்கப் பட்டிருக்கிறது.

கலப்பு மணம் புரிந்த தம்பதி யருக்குத் தங்கப் பதக்கங்களும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இவை தவிர, இத்தகைய தம்பதியரின் இணைந்த ஆண்டு வருமானம் ரூ. 6,000 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் அவர்கள் பெயரில் ரூ. 4,000 தேசிய சேமிப்புப் பத்திரங்களில் முதலீடு செய்யப்படுகிறது. மேலும் திருமணச் செலவிற்காக ரூ. 300 வழங்கப்படுகிறது.



கலப்புத் திருமணத் தம்பதி களின் குழந்தைகளுக்கென்று ஒருங்கிணைந்த எம். பி.பி.எஸ்., முதலாம் ஆண்டு பட்டப் படிப் பிற்காக 12 இடங்களும், சித்த மருத்துவக் கல்லூரியில் 2 இடங் களும் முதலாம் ஆண்டு பொறி யியல் பட்டப் படிப்பிற்காக 5 இடங்களும், நாட்டு முறை மருந் தாக்கப்பட்ட பார்மஸி வகுப்பில் 1 இடமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினருக்குக் கல்வி நிலையங் களில் முறையாகப் பிரதிநிதித் துவம் வழங்கும் பொருட்டு மருத்துவம், பொறியியல் மற்றும் தொழில் கல்வி நிலையங்கள் உட் பட ஒவ்வொரு பிரிவிலும் 19 விழுக்காடு என இட ஒதுக்கீடு தற்பொழுது வழக்கத்தில் உள் ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினருக்கு மாநில அரசுப் பணி களில் 18 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனைக் கண்காணிக்கப்பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள ஆதி திராவிடர்களின் மேம்பாட்டைத் துரிதப்படுத்துவதற்காக அரசு 1980-81 ஆம் ஆண்டிலிருந்து சிறப்பு உள்ளடக்கத் திட்டத் தினைச் செயல்படுத்தி வருகிறது.

ஆதிதிராவிட விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்வு வளம் பெற 25 விழுக்காடு மானிய விலையில் விவசாய இடு பொருள்கள் வழங்கப்படுகின் றன. நில உச்சவரம்புச் சட்டத் தின் கீழ், நிலமில்லாத ஆதிதிரா விடர்களுக்கு நிலங்களும் வழங் கப்படுகின்றன. இந் நிலத்தைப் பண்படுத்தி சாகுபடிச் செய்ய ஒரு எக்டருக்கு ரூ. 2,500 நிதி உதவி அளிக்கப்படுகிறது. 1985-86 ஆம் ஆண்டில் சிறப்பு மத்திய உதவியாக அரசு ரூ. 13.39 கோடி அளித்துள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் 2 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களுக்குப் பொருளாதார மேம்பாட்டிற் காக உதவிகள் நல்கப்பட்டன.



தமிழ்நாட்டில் பழங்குடி மக்கட் தொகை 5.20 இலட்ச மாகும். அவை மொத்த மக்கட் தொகையில் 1.07 சதவீதமாகும். பழங்குடியினர் அதிகமாக உள்ள 9 பகுதிகள் தேர்ந்தெடுக்கப் பட்டன. இட்டத்தட்ட 2.10 இலட்சம் தமிழகப் பழங்குடி யினர் இந்த 9 பகுதிகளில் வசிக் கின்றனர். இவர்களின் பொரு ளாதார முன்னேற்றத் திட்டங் களான தோட்டக்கலை, கால் நடை வளர்ப்பு, சிறு பாசனம், மண்வளப் பாதுகாப்பு, பட்டுப் புழு வளர்ப்பு, சிறுதொழில், தேனீ வளர்த்தல் போன்றவை செயல்படுகின்றன.

மேற்கண்ட தொழிலுக்குத் தேவையான இப்பொருள்கள் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள கல்ராயன் மலை தவிர (75 சதவீதம் மானியம் தரப்படு கிறது) மற்றப் பகுதிகளின் பழங் குடியினருக்கு 50 சதவீதம் மானியமாகக் கொடுக்கப்படு கிறது. 1985-86ல் உயர்ரக விளைச்சல் தரக்கூடிய விதைகள் மற்றும் நாற்றுகள் வினியோகிக் கும் திட்டம் 3000 ஏக்கர் பரப் புள்ள பழங்குடியினர் நிலத்தில் செயல்படுத்தப்பட்டது.

பட்டுப்புழு வளர்க்கும் தொழி லில் 400 பழங்குடியினர் குடும் பங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 50 விழுக்காடு மானிய விலையில் 1332 பழங்குடியினர் குடும்பங் களுக்குக் கறவைமாடுகள் வழங் கப்பட்டன. 331க்கு மேற்பட்ட பழங்குடியினர் குடும்பங்களுக்குத் தேனீ வளர்ப்புக்கூடுகள் வழங் கப்பட்டன.

ஆறாவது ஐந்தாண்டுத் திட் டத்தில் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் வாயிலாக 28,884 குடும்பங் களுக்கு உதவி வழங்கப்பட்டுள் ளது. பழங்குடியினருடைய பொருளாதாரத்திற்குப் பாதிப்பு உண்டாக்கக் கூடிய இடைத் தரகர்களின் நடவடிக்கைகளைத் தடுக்கும் பொருட்டு 12 பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டு றவுச் சங்கங்கள் (லேம்ப்ஸ்) இப்பகுதிகளில் ஏற்படுத்தப்பட் டுள்ளன.

இருபது அம்சத் திட்டத்தில் ஏழாவது அம்சம் ஆதிதிரா விடர்கள் மற்றும் பழங்குடியின ரின் முன்னேற்றத்தை விரைவு படுத்துவதற்கு வழிவகை செய் கிறது. 1980-85 ஆம் ஆண்டு களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறி யீடான 9 இலட்சம் ஆதிதிரா விடர் குடும்பங்களில் 8.90 இலட்சம் ஆதிதிராவிடர் குடும் பங்கள் பொருளாதார முன் னேற்றத் திட்டங்களினால் பயன் பெற்றுள்ளனர். ஆறாவது ஐந் தாண்டுத் திட்டக் காலத்தில் 19,999 பழங்குடியினர் குடும் பங்கள் பயன் பெறும் என்று குறியீடு நிர்ணம் செய்யப்பட்டி ருந்தும் இத்திட்டக் காலத்தில் 28,884 பழங்குடியினர் குடும் பங்கள் பொருளாதாரத் திட்டங் களின் மூலம் பயன் பெற் றுள்ளன.



# அகதிகளுக்கு மறுவாழ்வு

**1983** ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கையில் இனக் கலவரம் மூண்டது முதல் இந்திய வம்சா வழியினர் இந்தியாவுக்குப் புகலிடம் தேடி வருகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் இராமேஸ்வரம் துறைமுகத்திலும், சிலர் விமானம் மூலம் திருச்சி சென்னை, திருவனந்தபுரம் விமான நிலையங்களிலும் வந்து சேருகின்றனர். இராமேஸ்வரத்தில் அவர்கள் வந்தவுடன் வருவாய்த்துறை அலுவலர்கள் அவர்களை வரவேற்று உடனே காப்பி, டீ, குழந்தைகளுக்குப் பால் முதலியவைகளை இலவசமாக வழங்குகின்றனர். நோய் தடுப்பு ஊசியும் போடப்படுகிறது. சுங்கத்துறை அலுவலர்களின் பரிசோதனை நடந்து முடிந்தவுடன் அவர்களுக்கு இலவசச் சிற்றுண்டி, சாப்பாடு முதலியவை வழங்கப்படுகின்றன. இவர்கள் இராமேஸ்வரத்தில் சத்திரங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். பிறகு ஒன்று அல்லது இரண்டு நாட்களில் இராமேஸ்வரத்திலிருந்து இரயில் மூலம் மண்டபம் முகாமிற்கு அனுப்பப்படுகின்றனர்.

முகாம்களில் சேர்க்கப்படும் எல்லா அகதிக் குடும்பங்களுக்கும் கீழ்க்கண்ட நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்றன.

(அ) இலவச தங்குமிடம், மின்வசதி, குடிநீர் வசதி.

(ஆ) குடும்பத்திலுள்ள நபர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து குடும்பப் பராமரிப்புத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 110 முதல் ரூ. 357.50 வரை.

(இ) கிலோ ஒன்றுக்கு 57 காசு என்ற முறையில் மலிவு விலையில் அரிசி வழங்கல்.

(ஈ) குடும்பத்திலுள்ள எல்லா நபர்களுக்கும் ஒரு ஜதை உடுப்புகள்.

(உ) பெரியவர்கள் எல்லோருக்கும் பாய், போர்வை வழங்கல்.

(ஊ) சமையல் பாத்திரங்கள், உடைகள் சராசரி மதிப்பு ரூ. 620 வரையில் கொடுக்கப்படுகின்றன.

24-7-1983 முதல் இந்தியாவிற்கு வரும் ஆதரவற்ற அகதிகள் எல்லோருக்கும் இந்த உதவிகள் வழங்க மைய அரசு அனுமதித்துள்ளது. இதற்கான செலவுத் தொகை முழுவதையும் மைய அரசே ஏற்கிறது. இதுவரை இலங்கையிலிருந்து இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டு இந்தியா வந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. 22-5-86 நிலவரப்படி.

1. மொத்த அகதிகள் வந்தவர்கள் 1,26,277.

2. அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளவர்கள் 32,142.

3. வெளியிடங்களில் தங்கியுள்ளவர்கள் 94,135.

வன்செயலில் பாதிக்கப்பட்டு வரும் இலங்கை பிரஜா உரிமை பெற்ற இந்த அகதிகள் இலங்கையில் நிலைமை சீரடைந்தவுடன் திரும்பிச் செல்ல வேண்டும் என்பதால் இவர்களில் திக்கற்றவர்களை மட்டும் அகதிகள் முகாம்களில் சேர்த்துக் கொண்டு பத்தி (2) கூறப்பட்ட நிவாரண உதவிகள் மட்டும் வழங்கப்பட்டு வருகின்றன. 5-2-85 முதல் இலங்கையிலிருந்து படகுகள் மூலம் அகதிகளின் வருகை அதிகரித்துள்ளதால் மாவட்ட அளவிலும் அகதிகள் மையங்கள் ஏற்படுத்தப்பட்டு நிவாரண உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை மண்டபம் முகாம், கொட்டப்பட்டு முகாம் ஆகிய இரண்டு இடைத்தங்கல் முகாம்களுடன் மாவட்ட அளவிலும் சேர்த்து சுமார் 170 முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு இதுவரை 8,482 குடும்பங்கள் அடங்கிய 32,142 நபர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

**அகதிகளுக்கு வீடுகள் கட்டும் பணி**

இராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபத்தில் உள்ள இடைத்தங்கல் முகாம் இந்திய இலங்கை ஒப்பந்தப்படி தாயகம் திரும்பும் இந்திய வம்சா வழியினர் தற்காலிகமாக சிறிது காலம் தங்கியிருக்க உதவும் நோக்கத்துடன் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட முகாம். பெருமளவில் அகதிகள் வந்ததால் இந்த முகாமில் இடநெருக்கடி ஏற்பட்டு கூடுதல் இடவசதித் தேவைகளைச் சமாளிப்பதற்கு, கீழ்க்கண்ட விவரப்படி கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) மண்டபம் முகாமில் ரூ. 9.065 இலட்சம் செலவில் புதிதாக 200 வீடுகள் மாநில பொதுப்பணித் துறையால் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) மண்டபம் முகாமிலேயே மேலும் கூடுதலாக ரூ. 92.50 இலட்சம் செலவில் 500 வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழக அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன.

(இ) இதேபோல் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் மூலமாகவே மேலும் 700 புதிய வீடுகள் ரூ. 112 இலட்சம் செலவில் மண்டபம் முகாமில் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதில் இதுவரை 200 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 500 வீடுகளும் கட்டி முடிவடையும் தருவாயில் உள்ளது.

(ஈ) இதல்லாமல் மண்டபம் முகாமில் ஏற்கெனவே உள்ள 141 பழைய வீடுகள் பழுதுபார்க்க ரூ. 8 . இலட்சமும், 150 பழைய வீடுகளைப் பழுது பார்க்க ரூ. 5.30 இலட்சமும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பணி முடிவடைந்து விட்டது.

(உ) இதே போல் திருச்சி மாவட்டத்தில் உள்ள கொட்டப்பட்டு அகதிகள் முகாமிலும் ரூ. 6.23 இலட்சம் செலவில் 100 புதிய வீடுகள் கட்ட அரசு அனுமதி வழங்கப்பட்டு, கட்டுமானப் பணி 31-8-1985ல் முடிந்துவிட்டது. இது பொதுப்பணித்துறையால் கட்டப்பட்டது. இவற்றில் அகதிகள் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுவிட்டன.

(ஊ) திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடிக்கு அருகில் மாப்பிள்ளை ஊரணி என்னும் இடத்தில் ரூ. 10 இலட்சம் செலவில் 100 புதிய வீடுகள் கட்ட அரசு அனுமதி அளித்தது. மாநிலப் பொதுப்பணித் துறையினரால் வீடுகள் முடிக்கப்பட்டு அகதிகள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

(எ) மதுரை மாவட்டம் விளாங்குடியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கட்டிய 792 வீடுகள் இலங்கை அகதிகளின் உபயோகத்திற்கு அரசு விலைக்கு வாங்க உத்திரவிடப்பட்டுள்ளது. இந்த வீடுகளைக் கிரயம் பெற தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் நடவடிக்கையுள்ளது.



(ஏ) தஞ்சாவூர் மாவட்டத்தில் வேதாரண்யம், நாகப்பட்டினம், பிள்ளையார்பட்டி கிராமங்களில் 1000 குடிசைகள் அமைத்து இலங்கை அகதிகளைக் குடியமர்த்த ரூ. 10 இலட்சம் அரசினரால் வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

6. அரசு செயல்பாட்டுடன் ஒத்துழைத்து கூடுதல் உதவிகள் வழங்க சில சமூக சேவை நிறுவனங்கள் முன் வந்துள்ளன.

(அ) சென்னையில் உள்ள கிறிஸ்துவ திருச்சபையின் தொழில் பயிற்சிப் பிரிவு, மண்டபம் முகாமில் உள்ள அகதி குழந்தைகளுக்கு தச்சு வேலை, மின்சாரம், தையல் போன்ற பயிற்சிகள் அளித்து வருகிறது.

(ஆ) மைத்திரி என்ற தனியார் நிறுவனம், மண்டபம் முகாமில் பள்ளி ஒன்று நடத்தி வருகின்றது.

(இ) இராமகிருஷ்ணா மிஷன் ஆசிரமம், மண்டபம் முகாமில் உள்ள அகதி குழந்தைகளுக்கு காலையில் சிற்றுண்டி, பிரசாதம் போன்ற உணவுகள் வழங்குகிறது. திருச்சி கொட்டப்பட்டு முகாமில் அகதிகள் குழந்தைகளுக்குத் தனியாகப் பள்ளி ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று வருகிறது.

மண்டபம் முகாமில் அகதி குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருள்கள் வழங்கி தேக ஆரோக்கியத்தை வளர்க்கப் பாடுபட்டு வருகிறது. மேற்கண்ட சமூக சேவை சங்கங்களைத் தவிர, தொண்டு இயக்கங்களும் மாவட்ட அளவிலுள்ள முகாம்களின் குடும்பங்களுக்கு உடைகள், உணவுப் பொருள்கள் இலவசமாக வழங்குகின்றன.

(உ) பம்பாய் மற்றும் சென்னை நூற்பாலைக் குழுவின்மூலம் அகதிக் குடும்பங்களில் பெரியோர்களுக்கு 30,190 ஆடைகள் வழங்கப்பட்டன.

(7) அகதிகளுக்கு அளிக்கப்படும் நிவாரண உதவிகளுக்கும் மற்றும் அவர்கள் தங்குவதற்காக தற்காலிகக் கட்டடங்கள் கட்டுவதற்கும் ஆகும் செலவு முழுவதையும் மைய அரசு ஏற்கிறது. 24-7-83முதல் 1986 மார்ச் மாதம் வரை நிவாரண உதவிகளுக்காக ரூ. 326.81 இலட்சமும், கட்டட வேலைகளுக்காக356.66 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 683.47 இலட்சம் மாநில அரசு செலவு செய்துள்ளது. இதற்காக மைய அரசு இதுவரை கொடுத்துள்ள தொகை ரூ. 651.36 இலட்சமாகும்.

பாரஸ் ஃபோட்டோஸின்த் உண்மையிலேயே அதிசயமானது. பயிர்கள் உரங்களை நல்ல முறையில் பயன்படுத்த உதவுகிறது. இதன் மூலம் அதிக மகசூல் கிடைக்கிறது.

**ஆனால் பாரஸ் ஃபோட்டோஸின்த் எப்படி செயல்படுகிறது.**



பாரஸ் ஃபோட்டோஸின்த்திலுள்ள மிக்ஸ்டாலோல் எனும் பொருள் நேரடியாக ஃபோட்டோஸின்த் தெஸில் செயலை துரிதப்படுத்து கிறது. 80 % முதல் 90 % பயிர் வளர்ச்சிக்கு இதுவே காரணம்.

பாரஸ் ஃபோட்டோஸின்த் காரணமாக பயிர்கள் நிலத்திலிருந்து அதிக நீரையும் மண்ணிலுள்ள போஷாக்கையும் உறிஞ்சிக் கொள்வதுடன் காற்றிலிருந்து கரியமில வாயுவையும் எடுத்துக் கொண்டு வேகமாக வளர்கின்றன.

**பாரஸ் ஃபோட்டோஸின்த் பயன் தரும் என்று நான் எப்படி நம்புவது?**

உங்கள் வயலை இரு பாகங்களாகப் பிரியுங்கள். இரு பாகங்களிலும் சம அளவு நீர், எரு இவைகளை இடவும். ஆனால் ஒரு பாகத்தில் மட்டும் பாரஸ் ஃபோட்டோஸின்த் தெளியுங்கள்.




15 தினங்களுக்கு பிறகு, நீங்களே காண்பீர்கள் பாரஸ் ஃபோட்டோஸின்த் உபயோகித்த பகுதியிலே பயிர்கள் உயரமாகவும் பெரிதாகவும் வளர்ந்திருக்கும். மேலும் இவற்றின் வேர்கள் நீண்டும் உறுதியாகவும் இருப்பதையும் காணலாம். இதன் பயனாக இப்பயிர்கள் அதிக சக்தியுடன் நீரையும் சத்துக்களையும் உறிஞ்சிக் கொள்ள முடியும்.

எந்தப் பயிர்களில் பாரஸ் ஃபோட்டோஸின்த் தெளிக்கப்பட்டுள்ளதோ, அப்பயிர்களில் பூக்கள் வாடி விழுவதில்லை. எனவே பழங்கள்/காய்கறிகள் இவற்றில் உங்களுக்கு அதிக விளைச்சல் கிடைக்கிறது. தானியங்களும் எண்ணிக்கையிலும் அளவிலும் பெருகி வளரும்.

**எருவுக்குப் பதிலாக பாரஸ் ஃபோட்டோஸின்த் உபயோகிக்கலாமா என்ன?**

கூடாது. பாரஸ் ஃபோட்டோஸின்த் எருவுமல்ல, மைக்ரோ நியூட்ரியென்ட்டும் அல்ல எனவே வழக்கமான எல்லா எருவையும் நீங்கள் பயன்படுத்தும் போது, கூடவே பாரஸ் ஃபோட்டோஸின்த்தையும் பயன்படுத்துங்கள். அதிக சாகுபடி, உங்களுக்குக் கிடைக்கும்.

**பாரஸ் ஃபோட்டோஸின்த், அரசுத்துறை விஞ்ஞான அமைப்புகள் மூலம் சோதிக்கப் பட்டுள்ளதா?**



ஆம். இந்திய விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம் மற்றும் விவசாய பல்கலைக்கழகங்கள் பாரஸ் ஃபோட்டோஸின்த்தைப் பற்றிய பரிசோதனை செய்து நெல், கோதுமை, சோளம் மற்றும் பற்பல பயிர்களுக்கும் பாரஸ் ஃபோட்டோஸின்தை உபயோகித்துப் பயன்பெறலாம் என நிரூபித்துள்ளன.

**எந்த பயிருக்கும் பாரஸ் போட்டோஸின்த் பயன் படுத்தலாமா?**



ஆம். கோதுமை, நெல், கம்பு, பருத்தி, நிலக்கடலை, பஜ்ரா, காய்கறி, பழம், தேயிலை எதற்கும் பாரஸ் ஃபோட்டோஸின்த் பயன் மிக்கது.

| பயிர்கள் | சாகுபடி பெருக்கம்* |
|---|---|
| கோதுமை | ஏக்கருக்கு 300 கிலோ |
| நெல் | ஏக்கருக்கு 400 கிலோ |
| தக்காளி | ஏக்கருக்கு 2000 கிலோ |
| பருத்தி | ஏக்கருக்கு 200 கிலோ |

* அரசுத்துறை அமைப்புகள் நடத்திய பரிசோதனை மூலம் கிடைத்த அளவுகள்.

**பாரஸ் ஃபோட்டோஸின்த் மூலம் எனக்கு வருமானம் எவ்வளவு பெருகும்?**



பாரஸ் ஃபோட்டோஸின்த் மிக சிக்கனமானது. 50 ரூபாய் மதிப்புள்ள பாரஸ் ஃபோட்டோஸின்த் உபயோகிப்பதன் மூலம் சுமார் 500 ரூபாய்க்கும் அதிகம் ஆதாயம் கிடைக்கிறது. மேலும் இது ஏறக்குறைய எல்லா பயிர்களுக்கும் பொருந்தும்.

**பாரஸ் பயன்படுத்துவது எப்படி?**

250 மி.லி பாரஸ் ஃபோட்டோஸின்த் ஸ்ப்ரே, 200 லிட்டர் நீரில் கலந்து, விதைத்து/நாற்று நட்டு 15 நாட்களுக்குப்பின் ஏக்கர் ஒன்றுக்கு என்ற கணக்கில் தெளிக்கவும். பூவிடத் தொடங்கும் முன், ஒரு முறை தெளிக்கவும், பயிர்களில் இலைகள் நன்கு நனையும்படி

பாரஸ் ஃபோட்டோஸின்த் கிரான்யூல், ஏக்கருக்கு 10 கிலோ என்ற அளவில், விதைத்து/ நாற்று நட்டு 15 நாட்களுக்குப்பின் வயலில் உரங்களைத் தூவுவது போல், தூவவும்.

பாரஸ் ஃபோட்டோஸின்த் உடன், வழக்கமான உரங்களையும் எருக்களையும் பயன்படுத்தவும்.

பாரஸ் ஃபோட்டோஸின்த் உங்கள் அருகாமையிலுள்ள விவசாய வியாபாரியிடம் கிடைக்கும்.

பாரஸ் ஃபோட்டோஸின்த் பற்றிய மேல் விபரங்களுக்குக் கீழ்க் கண்ட முகவரிக்கு எழுதவும்,

அக்ரி ப்ராடக்ட்ஸ்
டிவிஷன்,
இந்துஸ்தான்
லீவர் லிமிடெட்.,
165/166 பேக்பே ரிக்ளமேஷன்,
பம்பாய் 400 020.

**பாரஸ் தெளியுங்கள். வயலில் பொன் விளையும்.**







# அதே அளவு உரங்களைப் பயன்படுத்தி, பயிர்கள் பெரிய வேர்களைப் பெற்று, அதிக சாகுபடியைத் தரும் வழி இதோ!



# பாரஸ் ஃபோட்டோஸின்த்

சூரிய ஒளி, தண்ணீர், எரு இவைகளைச் சிறப்பாக உபயோகித்துப் பயிர்களுக்கு உதவி, சாகுபடியைப் பெருக்குகிறது.

# சமூக நலத் துறையின் சாதனைகள்



நமது நாடு சுதந்தரம் அடைந்த பிறகு மகளிர், குழந்தைகள், உடல் ஊனமுற்றோர் மற்றும் நலிந்த பிரிவினரின் நலனில் தமிழக அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. சமுதாய வளர்ச்சித்துறையின் ஓர் அங்கமாக இம்மாநிலத்தில் சமூகநலத் துறை செயல்பட்டு வருகிறது.

1975-76-ல் இத்துறைக்கு நிதி ஒதுக்கீடு ரூ. 1.30 கோடியாக இருந்தது. 1986-87-ஆம் ஆண்டில் ரூ. 76.04 கோடியாக உயர்ந்துள்ளது என்பதிலிருந்தே இத்துறையால் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் மீது தமிழ்நாடு அரசு காட்டிவரும் அக்கறை தெளிவாகும்.

**மகளிர் நலம்:**

மகளிர்க்கென்றே பதிவு செய்யப்பட்ட தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் உற்பத்தி நிலையங்கள் ஆகியவை அமைத்து எழுதுபொருள் உற்பத்தி, பனைப் பொருள் தொழில்கள், கிராம நூற்பு மையம், சாக்குக்கட்டி, மெழுகுவர்த்தி, தீப்பெட்டித் தொழில், கயிறு பின்னும்தொழில், பட்டுநூல் எடுத்தல், தையல் தொழில், சிற்றுண்டிச்சாலைகள், தட்டெழுத்துப் பயிற்சி, சுருக்கெழுத்துப் பயிற்சி, கணக்குப் பயிற்சி போன்ற பல சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இச்சிறப்புத் திட்டங்களின் மூலமாக 69,000 ஏழை எளிய பெண்கள் பயனடைந்துள்ளனர்.

**சேவை இல்லங்கள்:**

ஏழை விதவைகள், ஆதரவற்ற பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோரின் நலனுக்காக சேவை இல்லங்கள் 6 இயங்கி வருகின்றன. இச்சேவை இல்லங்களில், அப்பெண்கள் கல்வி பயிலவும், பலவகைத்தொழில்களில் பயிற்சி பெற்று சமுதாயத்தில் தனித்து சுய தேவையுடன் வாழவும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

**பணிபுரியும் மகளிர் விடுதி:**

பணிபுரியும் மகளிர்க்குப் பாதுகாப்பும் வசதியும் செய்யும் பொருட்டு, பணிபுரியும் மகளிர் விடுதிகள் தமிழ்நாட்டில் 6 இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

**வழிகாட்டி நிலையங்கள்:**

ஏழை விதவைகள் மற்றும் ஆதரவற்ற ஏழைப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் வேலை வாங்கிக் கொடுக்கவும் வங்கியின் மூலம் கடன் உதவிபெறவும் வழிகாட்டி நிலையங்கள் 1978-79-ஆம் ஆண்டு முதல், 8 மாவட்டங்களில் துவக்கப்பட்டு 50,000 ஏழைப் பெண்களுக்கு வங்கி மூலம் ரூ. 78 இலட்சம் கடன் உதவி பெற வகை செய்துள்ளன.

**இலவசப் பாடப்புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகம் வழங்குதல்:**

ஆண்டு வருமானம் ரூ.3,000க்கும் குறைவான ஏழை விதவைகளின் குழந்தைகள் பயன்பெற இலவச பாடப்புத்தகம் மற்றும் நோட்டுப்புத்தகம் வழங்கும் திட்டம் 1978-79ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது; ஆண்டுதோறும் 3,000 குழந்தைகள் பயன்பெறும் வகையில், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**ஆதரவற்ற விதவைகளின் பெண்களுக்குத் திருமண உதவி:**

ஆண்டிற்கு ரூ. 3,000 க்கும் குறைவான வருமானம் உள்ள விதவைகளின் பெண்களுக்கான திருமணத்திற்காக நிதி உதவும் திட்டம் 1981-82ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, ஆண்டொன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 1,000 வீதம் 1,000 ஆதரவற்ற விதவைகள் பயன்பெறும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 4,300 விதவைகளின் பெண்கள் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டம் 1984-85-ஆம் ஆண்டு முதல் 10.15 இலட்சம் செலவில் 1015 விதவைகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**அனாதைப் பெண்களின் திருமண நிதியுதவித் திட்டம்:**

இத்திட்டம் 1985-86ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு, ஒரு நபருக்கு ரூ. 1000 வீதம் ஆண்டொன்றுக்கு 1,000 பெண்கள் பயன் பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



**மகளிர் மேம்பாட்டுக் கழகம்:**

நகர்ப்புறம் மற்றும் கிராமப் புறங்களில் உள்ள பெண்கள் கல்வி, உடல்நலம், வேலை வாய்ப்பு போன்ற எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடைவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் 1983-ஆம் ஆண்டு ஒரு கோடி ரூபாய் மூலதனத்துடன் தோற்றுவிக்கப்பட்டது.

**சமூக வளர்ச்சித் திட்டம்:**

சிவகாசி, சாத்தூர், வேம்பக் கோட்டை வட்டாரங்களிலும் சிவகாசி, சாத்தூர் நகராட்சிகளில் அடங்கிய பகுதிகளில் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிர் மற்றும் சிறுவர்களுக்கு சுகாதாரம், கல்வி, குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக ''யுனிசெப்'' மற்றும் பொதுமக்கள் உதவியுடன், தமிழக அரசு சமூக வளர்ச்சி மூன்றாண்டுத்திட்டம் ஒன்றை 1984-85 முதல், மொத்தம் ரூ. 736.97 இலட்சம் செலவில் நிறைவேற்றி வருகிறது.

**பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசச் சீருடை வழங்குதல்:**

கற்கக் கல்வியும், உண்ண உணவும் வழங்குவதோடல்லாமல், 1 முதல் 8-ஆம் வகுப்புவரை படிக்கும் பள்ளிக் குழந்தைகளுக்கு, ஏறத்தாழ 16 கோடி ரூபாய் செலவில், இலவசச் சீருடை வழங்கும் திட்டத்தை 1985-86-ஆம் கல்வி ஆண்டு முதல், தமிழக அரசு துவங்கி உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 59.43 இலட்சம் மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர். சீருடை தைக்கும் பணி, மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், மகளிர் மன்றம், சேவை நிறுவனங்கள், தொழில்வளர்ச்சித்துறை தையல் தொழிற் கூடங்கள் மற்றும் சமூக நல வாரியத்தைச் சார்ந்த நிறுவனங்கள் ஆகியவைகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்பணியினால், 40,000 மகளிர்க்கு வேலை வாய்ப்புக் கிட்டியது.

**பாலர் பள்ளிகள்:**

கிராமப் புறங்களில் நர்சரி பள்ளிகளை ஆரம்பிக்கலாம் என்பதனை அரசு கொள்கையளவில் ஏற்று, படிப்படியாகச் செயல்படுத்தி வருகிறது. 1982-83ஆம் ஆண்டில் 4,343 நர்சரி பள்ளிகளும் 1983-84ல் 5,000 நர்சரி பள்ளிகளும் 1984-85-ல் 5,000 நர்சரி பள்ளிகளும், 1985-86-ல் 10,462 நர்சரிப்பள்ளிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பாலர் பள்ளிகள் சிறந்த முறையில் இயங்குவதற்கு கல்வி உபகரணங்கள், விளையாட்டுக்கருவிகள் முதலியன வழங்கப்பட்டுள்ளன.

**உடல் ஊனமுற்றோர் நலம்:**

ஊனமுற்றோர் சமுதாயத்துடன் ஒருங்கிணைந்த ஒரு பகுதி ஆவர். இவர்களில் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றைக் கருதி, கல்வி, தொழிற் பயிற்சி, மருத்துவ உதவி போன்ற பல்வேறு திட்டங்களாகத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இவர்களின் நலனுக்காக 1977-78-ஆம் ஆண்டில் 36.67 இலட்சமாக இருந்த நிதி ஒதுக்கீடு 1986-87-ஆம் ஆண்டில் 201.51 இலட்சங்களாக உயர்ந்துள்ளது.

சுமார் 4500 உடல் ஊனமுற்ற சிறுவர்கள் இலவச தங்கும் வசதி மற்றும் உணவு வசதிகளுடன் சிறப்புக் கல்வி பெறுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் அவர்களுக்கு தலா இரண்டு ஜோடி இ சீருடைகள் வழங்கப்படுகின்றன.

பார்வையற்ற பெண்களுக்கென்றே தனியாக, 1985-86-ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியில் பள்ளியொன்று தொடங்கப்பட்டுள்ளது.

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக சென்னை குரோம்பேட்டையில் 1984-ல் மன வளர்ச்சி குன்றியோர் நிறுவனம் அரசால் துவங்கப்பட்டது.

**பார்வையற்றோர்க்கான அரசு தொழிற்பயிற்சி நிலையம், கிண்டி**

பார்வையற்றவர்களுக்குத் தகுந்த தெரிந்தெடுக்கப்பட்ட தொழிலில் அவர்களுக்குப்போதுமான திறமை ஏற்படவும் வேலை வாய்ப்பை அளிக்கவும், ஒவ்வொரு ஆண்டும் 30 பார்வையற்ற நபர்கள் பொறியியல் பயிற்சித் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, பொறிப்பகுதி பொருத்துதல், புத்தகம் கட்டுதல் மற்றும் மின்கம்பி சுற்றுதல் ஆகிய மூன்று





பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர்.

### காது கேளாதோர்க்குத் தொழிற்பயிற்சி நிலையம்

சென்னை (கிண்டி) மற்றும் மதுரையில் உள்ள தொழிற் பயிற்சி மையங்களில் முழுவதும் காது கேளாதோர்க்குப் பொறிப் பகுதி பொருத்துதல் மற்றும் மின் கம்பி சுற்றுதல் ஆகிய தொழில்களில் பயிற்சி கொடுக்க 1981-82ஆம் ஆண்டில் இரண்டு சிறப்புப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு 1982-83-ஆம் ஆண்டுகளில் காது கேளாதோர் 30 பேருக்கு 2 ஆண்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### ஊனமுற்றோர்க்கு சுயவேலை வாய்ப்பு

வங்கிகளின் மூலம் கடனுதவி பெற்று சென்னை நகரம் மற்றும் பிற மாவட்டங்களிலும் பெட்டிக் கடைகள் அமைக்க ரூ. 250 முதல் ரூ. 500 வரை மானியமாக அரசு வழங்குகிறது. இதுவரை 1240 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

உடல் ஊனமுற்றோர்க்கு (பார்வையற்றோர், காது கேளாதோர், உடல் ஊனமுற்றோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோர்) தனிக்கவனிப்பும் கல்வி வசதியும் தேவைப்படுவதால் அவர்களைப் பயிற்றுவதற்கு சிறப்புச் செய்முறை நுட்பம் நிறைந்த ஆசிரியர்களைக் கொண்டு 22 சிறப்புப் பள்ளிகளையும் ஒரு பயிற்சிப் பள்ளியையும் அரசு நடத்தி வருகிறது.

| | |
|---|---|
| பார்வையற்றோர் பள்ளி | ...11 |
| காதுகேளாதோர் பள்ளி | ... 9 |
| மனவளர்ச்சி குன்றியோர்க்கான பள்ளி | ... 1 |
| உடல் ஊனமுற்றோர்க்கான பள்ளி | ... 1 |
| பார்வையற்றோர்க்குப் பயிற்சிப் பள்ளி | ... 1 |

### பயிற்சி பெற்ற ஊனமுற்றோரை தொழில் பழகுவோராக நியமனம் செய்தல்

1979-80-ஆம் ஆண்டு முதல் துவங்கப்பட்ட சிறப்புத்தொழில் பழகுவோர் திட்டத்தின்படி வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள ஊனமுற்றோர்கள் மாநிலத்தில் உள்ள பல்வேறு தொழில் நிறுவனங்களில் அரசு உதவித் தொகையாக மாதம் ரூ. 150 வழங்கப்பட்டு, ஓராண்டிற்கு தொழில் பழகுவோராக அமர்த்தப்படுகின்றனர். இத்திட்டத்தில் 1,327 உடல் ஊனமுற்றோர் பயனடைந்துள்ளனர்.

### பார்வையற்ற மகளிர்க்கு மறு வாழ்வு இல்லம்

1978-ஆம் ஆண்டு முதல், பார்வையற்ற மகளிர்க்கான உறைவிட வசதிகளுடன் கூடிய ஒரு மறுவாழ்வு இல்லம் சென்னையில் இயங்கி வருகிறது. ஆதரவற்ற 40 வயதுக்குக் குறைந்த, பார்வையற்ற பெண்கள் இவ்வில்லத்தில் சேர்க்கப்பட்டு, நெய்தல், சாக்குக்கட்டி செய்தல் போன்றவைகளில் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகின்றனர். பயிற்சிக் காலத்தில் அரசு உதவித்தொகையாக நபர் ஒருவருக்கு மாதம் ரூ.50 வழங்கப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ், பார்வையற்ற மகளிர் 260 பேர் பயனடைந்துள்ளனர்.

### வேலையற்ற பார்வையற்றோர்க்கு நிவாரணம் வழங்குதல்

எஸ்.எஸ்.எல்.சி. / ஐ.டி.ஐ. படித்த பார்வையற்றோர் வேலை வாய்ப்பகத்தில் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பதிவு செய்து 40 வயதுக்குக் குறைந்தவராயின் அவர்களுக்கு மாதம் ரூ. 50 நிவாரணத் தொகையாக வழங்கும் திட்டம் 1981ஆம் ஆண்டு உலக ஊனமுற்றோர் ஆண்டின் திட்டங்களில் ஒன்றாகத் துவங்கப்பட்டது.

ஊனமுற்றோர்களின் தன்மைக்கேற்ப முச்சக்கர வண்டிகள், மற்றும் காதொலிக் கருவிகள் இலவசமாக வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. 1984-85-ல் 1696 ஊனமுற்றோர்களுக்கும், 1985-86ல் 135 ஊனமுற்றோர்க்கும் முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இதேபோல், 1984-85-ல 4581 காது கேளாதோர்க்கும், 1985-86-ல் 10,419 காது கேளாதோர்க்கும், காதொலிக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஊனமுற்றோருக்கென, சக்கர நாற்காலிகள் வழங்கும் திட்டம் 1981-82ல் தொடங்கப்பட்டது. ஆண்டுக்கு 100 ஊனமுற்றோருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்படுகின்றன.

### ஏனைய திட்டங்கள்

காது கேட்காத, பார்வையற்ற, கைகால் ஊனமுற்ற குழந்தைகள், தொழு நோயாளிகளின் குழந்தைகள் ஆகியோர்களைப் பராமரிப்பதற்குத் தொண்டு நிறுவனங்களுக்கு பராமரிப்பு மானியமாக நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 30 வீதம் அரசால் வழங்கப்படுகிறது.

### உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு பயணச் சலுகை

உடல் ஊனமுற்ற மாணவ-மாணவியர்களுக்கு வீட்டிலிருந்து பள்ளி மற்றும் மருத்துவ மனை சென்று வர வழங்கப்பட்ட இலவசப் பயணச் சலுகைத் திட்டத்தினால் 13,139 ஊனமுற்ற குழந்தைகள், மாணவ மாணவிகள் பயனடைந்துள்ளனர்.

### ஊனமுற்றோர் வாரியம்

உடல் ஊனமுற்றோர், பார்வையற்றோர், காது கேளாதோர், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் தொழு நோயால் பாதிக்கப்பட்டோர்களின் மணவாழ்விற்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் நோக்குடன் 1971ல் ஆரம்பிக்கப்பட்ட மாநில ஊனமுற்றோர் வாரியம் 1978ல் சமூக நலத்துறையின் கீழ் கொண்டு வரப்பட்டது. இவ்வாரியம் தற்போது சங்கங்கள் பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு சமூக நல அமைச்சரின் தலைமையின் கீழ் 1984-ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது.

### பார்வையற்றோருக்கான திருமண உதவி

கலப்புத் திருமணம் புரிந்து கொள்ளும் தம்பதிகளுக்கு வழங்கப்படும் சலுகை பார்வையுள்ளவர், பார்வையற்றோரை மணந்து கொள்வதற்கும் நீட்டிக்கப்படுகிறது. இத்திட்டத்தினால் பயன்பெறுபவர் ரூ. 6,000 பெறுவர்.

### சீர்திருத்தப் பள்ளிகள்

சீர்திருத்தப்பள்ளி மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறையின் கீழ் இராணிப்பேட்டையில் அரசினர் இளநிலை சீர் திருத்தப் பள்ளிகளில் ரூ. 5.34 இலட்சம் செலவில் பற்றவைப்பு மற்றும் உற்பத்தித் தொழிற் கூடம் துவங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஒழுக்க நெறி தவறியவர்களுக்குப் புது வாழ்வு அளிக்க தமிழ்நாடு நல நிதி ஒன்று துவங்கவும், 1984-85ஆம் ஆண்டில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பயன் பெறும் இத்திட்டம் 1986-87-ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப் படுத்தப்படும்.

### தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டம்

உலக வங்கியின் முதலீட்டு உதவியுடன் ஊட்டச்சத்துக் குறைந்த மிகவும் நலிந்த பிரிவினரான 6 மாதம் முதல் 36 மாதம் வரையிலான குழந்தைகள், கருவுற்ற பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், முன்பருவக்கல்வி பயிலும் குழந்தைகள் இவர்களுக்கு முறையான ஒருமுகத்தோடு ஊட்டச் சத்துடன் இணைந்த பணிகளைப் பரவலாகவும் மற்றும் பயனுள்ளதாகவும் செய்யும் குறிக்கோளிற்கிணங்க உலகவங்கி முதலீடு ரூ. 55.78 கோடி உதவியுடன் முதற்கட்டப் பணியாக மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் முன்னோடித் திட்டமாக 1980ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, பின்பு படிப்படியாக 9 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 6 மாதம் முதல் 3 வயதிற்குட்பட்ட எல்லாக் குழந்தைகளின் எடையும் மாதந்தோறும் எடுக்கப்பட்டு, அவர்களுக்குச் சத்துணவு தரப்படுகிறது. வயிற்றுப் பூச்சிக்கு மருந்தும், தடுப்பு ஊசிகளும் கொடுக்கப்படுகின்றன. 5,000 மக்கட் தொகைக்கு ஒரு சுகாதாரத் துணை நிலையம் ஏற்படுத்த 9 மாவட்டங்களில் 1600 சுகாதார துணை நல மையங்கள் கட்டத் திட்டமிடப்பட்டு, இதுவரையிலும் 1,071 மையங்கள் முடிக்கப்பட்டுள்ளன.

### ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்

தமிழ்நாட்டில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் 1975-76-ஆம் ஆண்டு, முதல் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் படிப்படியாக விரிவு படுத்தப்பட்டுள்ளது.

குழந்தைகள் வருங்காலத்தில் நம்பிக்கை விளக்குகள். எனவே நாட்டிற்கு அவர்கள் உடல் நலத்துடனும், வளத்துடனும் இருத்தல் மிகவும் இன்றியமையாதது. உடலாலும், உள்ளத்தாலும் உறுதியாக உள்ள குழந்தைகளை உருவாக்குதல் வலுவான நாட்டினை அமைக்கச் சிறந்ததொரு வழியாகும்.

இவ்வகையில் கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் உடல் நலனும் முக்கியத்துவம் வாய்ந்ததே. இக்குறிக்கோள்களை அடைவதே ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் பாராட்டுவதற்குரிய நோக்கங்களாகும். இளஞ் சிறார்களிடையேயும், தாய்மார்களிடையேயும், ஊட்டச் சத்துக் குறைவினைப் போக்குவதிலும், குழந்தைகள் சரியான மன வளர்ச்சி, உடல் வளர்ச்சி மற்றும் சமுதாய வளர்ச்சி பெற உதவுவதிலும், இத்திட்டம் சிறப்பான சேவை புரிகிறது.

## ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் பாடநூல்கள்

தமிழ்நாட்டில் 65 இலட்சம் மாணவ, மாணவிகள் சத்துணவு சாப்பிடுகிறார்கள் இவர்களில் 1-வது முதல் 8-வது வகுப்புவரை படிக்கும் ஏழை மாணவர்களுக்குத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் இலவசமாக நோட்டு, புத்தகம் வழங்கி வருகிறது. 1986 ஆம் ஆண்டு ரூ. 12 கோடிக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் குழந்தைகளுக்குத் தமிழ்ப்புத்தகங்கள் கிடைக்காததால், தமிழ் படிக்க வாய்ப்பு இல்லாமல் இருந்து வந்தது. இப்போது அந்தமான், பர்மா, பிஜித்தீவு ஆகிய வெளிநாடுகளுக்கும் இலவசமாகத் தமிழ்ப் புத்தகங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதில் பிஜித்தீவுக்கு மட்டும் ரூ. 85 ஆயிரம் மதிப்புள்ள புத்தகங்கள் இலவசமாக அனுப்பப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம் ஆண்டு தோறும் தனது நிதியில் இருந்து நலிந்து போன பள்ளிக்கூடங்களுக்குக் கூடுதல் கட்டடம் கட்ட ரூ. 25 இலட்சம் இலவசமாக வழங்குகிறது அது இந்த ஆண்டு முதல், ரூ. 50 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.





# வீட்டு வசதியில் முன்னேற்றம்

உணவு உடைக்குப் பிறகு வீட்டுவசதி மக்களின் முக்கிய அடிப்படைத் தேவையாக உள்ளது. அவ்வாறிருப்பினும், நீண்டகாலமாக வீட்டு வசதித் துறையில் முதலீடு செய்வதென்பது உற்பத்தித் திறனில்லாதது என்ற தவறான எண்ணப்போக்கைப் பொருளாதார திட்ட வல்லுநர்கள் கொண்டிருந்தனர். எல்லாக் குடிமக்களுக்கும் அடிப்படை வசதியான வீட்டுவசதி அளிக்காதவரை மக்கள் சக்தியையும், மக்கள் வளத்தையும் வலுப்படுத்த இயலாது. வீட்டு வசதிப் பணிகள் தீவிரப்படுத்தப் பட்டலொழிய, கட்டிடத் தொழிலினைச் சார்ந்த ஆக்கப் பொருள்கள் தயாரித்தல் மற்றும் இதர பணிகள் வளர்ச்சி அடையாமல் பொருளாதார வளர்ச்சியிலும் ஒரு தேக்க நிலை ஏற்படும். மூன்றாவதாக, நகர மற்றும் கிராமப்புறங்களில் உள்ள தொழில் துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினரும் தங்களது மிகக் குறைவான வருவாய் மூலம் வீடுகளைக் கட்ட இயலாது. எனவே, மாநிலத் திட்டம், இதனைக் கருத்தில் கொண்டு சமுதாய வளர்ச்சித் திட்டங்களில் மிக முக்கியமான இச்சமூகநல முதலீட்டில் ஏற்படும் பற்றாக்குறையை நிரப்ப வேண்டும். பொருளாதாரத்தில் நலிவுற்றோரின் செலவு செய்யும் சக்தியை மனத்தில் கொண்டு எல்லாப் பிரிவினருக்கும், வீட்டு வசதியினைச் செய்து கொடுப்பதுதான் இந்த அரசின் அடிப்படைக் கொள்கையாகும். இக்கொள்கைகளுக்கேற்ப தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், மற்றும் கிராமப்புற வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், குடிசைப்பகுதி மாற்று வாரியம், நகர்ப்புற வளர்ச்சித்துறை ஆற்றிய 9 ஆண்டுச் சாதனைகளை இப்போது காண்போம்.

**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்:**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அதன் துவக்கக் காலத்திலிருந்தே 1985-86 ஆம் நிதியாண்டு முடியப் பல்வேறு வருமான வரம்பு அடிப்படையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கையும், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ள வீடுகளின் தகவல்களும் வருமாறு:

1960-61 ஆம் ஆண்டு முதல், 5 ஆம் ஐந்தாண்டுத் திட்டம் (1979-80) முடிய குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 1970 குடியிருப்புகளும், நடுத்தர மற்றும் உயர் வருவாயினருக்கு 8164 குடியிருப்புகளும், அரசு அலுவலர்களுக்கு 10731 வாடகைக் குடியிருப்புகளும், தொழிலாளர்களுக்கு 2494 மலிவு வாடகைக் குடியிருப்புகளும், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்க்கு 9046 குடியிருப்புகளும், குடிசைப் பகுதியினருக்கு 14956 குடியிருப்புகளும் என மொத்தம் 59022 குடியிருப்புகளை அரசு கட்டித் தந்துள்ளது.

6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1980-1981) குறைந்த வருவாயினருக்கு 10917 குடியிருப்புகளும், நடுத்தர மற்றும் உயர் வருவாயினருக்கு 11917 குடியிருப்புகளும், அரசு அலுவலர்களுக்கு 4733 வாடகைக் குடியிருப்புகளும், தொழிலாளர்களுக்கு 636 குடியிருப்புகளும், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு 21656 குடியிருப்புகளும், குடிசைப் பகுதியினருக்கு 4576 குடியிருப்புகளும் என மொத்தம் 56888 குடியிருப்புகளை அரசு கட்டித் தந்துள்ளது.

1986-87 ஆம் நிதியாண்டில் மொத்தம் 16,400 வீடுகள் - மனைகள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. இதற்காகும் மொத்தச் செலவு ரூ.3742.50 இலட்சம், அரசின் நிதி உதவி ரூ. 1567.50 இலட்சமாகும். இதன் விவரங்கள் கீழ்வருமாறு.:

இவை தவிர, குறைந்த வருவாய்த் தொகுதியினர் / நடுத்தர மற்றும் உயர் வருவாய்த் தொகுதியினருக்கும் வீட்டு வசதி செய்து தருகின்ற திட்டமாகும். 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 20,081 வீடுகள் (நடுத்தர மற்றும் உயர் வருவாய்த் தொகுதியினருக்கும்) கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய 3,761 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்-1 மற்றும் 2 மூலமும் வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

| | | குடியிருப்பு எண்ணிக்கை | 1986-87-ஆம் ஆண்டின் ஒதுக்கீடு | அரசின் நிதி உதவி |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. | பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் (தன்னிறைவு வீட்டுமனைகள் திட்டத்தின்கீழ்) | 7,200 | 700.00 | 600.00 |
| 2. | குடிசைப்பகுதி மாற்றுத்திட்டம் | 96 | 67.50 | 67.50 |
| 3. | குறைந்த வருவாய்ப் பிரிவினர் | 1,300 | 300.00 | 100.00 |
| 4. | நடுத்தர மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர் | 5,016 | 1875.00 | .. |
| 5. | அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டம் | 2,788 | 800.00 | 800.00 |
| | மொத்தம் | 16,400 | | |

**தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டம்:**

இத்திட்டம், சென்னை நகரம், மாவட்டம் மற்றும் வட்டத் தலைமையகங்களில் பணிபுரியும் அரசு அலுவலர்களுக்குச் சலுகை வாடகை அடிப்படையில் வீட்டு வசதி வழங்க உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை அரசுச் சார்பில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செயல்படுத்துகிறது. மேலும், வாரியம், கட்டி முடித்த வீடுகளைப் பேணிப் பாதுகாக்கவும் செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் குடியிருப்புகள் அரசுக்குச் சொந்தமாகும். 1985-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வரை வாரியம் 15,464 குடியிருப்புகளைக் கட்டி முடித்துள்ளது. 1986-ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் இறுதி வரை 1962 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக 1986-87 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 800 இலட்சம், 2,788 குடியிருப்புகள் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்:**

1971 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், சென்னை மாநகரில் மூன்று குறிப்பிடத்தக்க திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

1. குடிசை அகற்றுதல் மற்றும் குடியிருப்புகளைக் கட்டுதல்.
2. விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டம்.
3. சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குடிசைப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள்.

1983—84 ஆம் ஆண்டு வரை குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் சென்னை மாநகரத்தில் மட்டும் நடைபெற்றது. பின்பு, இவ்வாரியத்தின் பணிகளைக் கட்டம் கட்டமாகப் பிற நகர்ப்புற மையங்களுக்கு விரிவுபடுத்த முடிவெடுக்கப்பட்டது. தற்போது குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் சென்னையைத் தவிர 43 நகரங்களுக்கு விரிவுப் படுத்தப்பட்டுள்ளன.

இது தவிர குறைந்த விலை வீட்டு வசதித் திட்டமும் உருவாக்கப்பட்டுள்ளது.

**குறைந்த விலை வீட்டு வசதித் திட்டம்:**

சமீப ஆண்டுகளில், குடியிருப்பின் விலை மிகவும் உயர்ந்துள்ளது. இந்தப் பிரச்னையிலிருந்து மீள்வதற்கென நலிந்த பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் வெளியூர்ப் பகுதிகளில் உள்ள குடிசைவாசிகளுக்கு நன்கு திட்டமிடப்பட்டுள்ள வீட்டு மனைப் பிரிவு, வசதி செய்யப்பட்ட பகுதிகளில் வீட்டு வசதிகளையும், அடிப்படை வசதிகளையும் அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். முடிந்தவரை உள்ளூரிலேயே கிடைக்கும் கட்டிடப் பொருட்களைப் பயன்படுத்தி, அதிகரித்து வரும் செலவைத் தடுத்து, குறைந்த செலவில் கட்டுவதற்கான தொழில் நுட்பம் மேற்கொள்ளப்பட உள்ளது. இவ்வீடுகள், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளைப் போல் வாடகை முறையிலோ அல்லது நீண்ட காலத் தவணை முறையிலோ ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

1985-86ஆம் ஆண்டில், மதுரையில் பெரியார் நகரில், ரூ. 232 இலட்சம் செலவில் 2,010 வீடுகளை, நலிவுற்ற குடிசைவாசிகளுக்குக் கட்டுவதற்கான இத்திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டம், 1986-87ஆம் ஆண்டில் முடிவு பெறும். 1986-87ஆம் ஆண்டில் மற்ற இடங்களில் சுமார் 10,000 வீடுகளை அளிப்பதற்கெனக் குடிசைப்பகுதி மாற்று வாரியம் திட்டங்களுக்கான செய்முறைகளை வகுத்து வருகிறது.

குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் கைவசமுள்ள சில காலி நிலங்களில், தன்னிறைவு வீட்டு மனைகள் வழங்கும் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

**கிராமப்புற கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள்**

மாநிலம் முழுவதிலும் உள்ள 104 வட்ட மற்றும் கோட்ட அளவிலான பிரதம கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின்

வாயிலாக இம் மாநிலத்தில் கிராமப்புற வீட்டுவசதித் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. பிரதான சங்கமான தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம், இச்சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கிறது.

1.4.19843 முதல் கிராமப்புற வீட்டு வசதித்திட்டத்தின் கீழ், கட்டித் தரப்படும் குடியிருப்பு ஒன்றின் உயர்ந்த பட்சக் கட்டுமான மதிப்பு ரூ.6,000 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மலைப் பகுதிகளிலும் இராமேஸ்வரம் தீவிலும் கட்டப்படும் வீடுகளின் உயர்ந்த பட்சக் கட்டுமான மதிப்பு ரூ. 7,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தினால் மொத்தம் ரூ. 5,440 இலட்சம் கடனாக வழங்கப்பட்டு 1,86,523 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதில் 1,53,543 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்காகவும் 33,070 வீடுகள் மற்றவர்களுக்காகவும் கட்டப்பட்டுள்ளன.

**நகர்ப்புறக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள்**

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் நகர்ப்புறங்களிலுள்ள கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களுக்கும் கூட நிதி உதவி அளித்து வருகிறது. இதற்காக, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெறுகிறது. பிரதம கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் பொருளாதார நிலையில் பின் தங்கிய பிரிவினர், குறைந்த வருவாய்ப் பிரிவினர், நடுத்தர வருமானப் பிரிவினர் மற்றும் உயர்ந்த வருமானப் பிரிவினர் ஆகியோருக்கு ரூ. 10,000 முதல் ரூ 80,000 வரை கடனாக வழங்குகின்றன. இத் தலைமைச் சங்கம் துவக்கப்பட்ட நாள் தொடங்கி பிரதான வீட்டுவசதிச் சங்கங்களின் உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கியதன் வாயிலாக 1984-85 வரை ,59,490 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதற்காக, தலைமைச் சங்கம் பிரதான சங்கங்களுக்கு ரூ. 16,671.35 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது. 1985-86ஆம் நிதி ஆண்டில் 1986 பிப்ரவரி மாதம் முடிய தலைமைச் சங்கம் பிரதான சங்கங்களுக்கு ரூ. 1,848.32 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது. மேலும் 4,040 வீடுகள் கட்ட நிதியுதவி அளித்துள்ளது. 1985-86ஆம் ஆண்டு நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்திற்கு ஆயுள் காப்புறுதிக் கழகம் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திற்கு ரூ. 13 கோடி கடனுதவி வழங்கியுள்ளது.



**அரசு ஊழியர்களுக்கு வீடு கட்ட முன்பணம்**

வீடு கட்ட முன்பணம் வழங்குத் திட்டத்தின் கீழ் மாநில அரசு ஊழியர்களுக்குத் தற்போது பொதுக்கடன் ரூ. 1,75,000 வழங்கப்படுகிறது. இந்த உச்ச வரம்புக்குட்பட்டு வீட்டை விரிவுபடுத்த மற்றும் மேம்படுத்த ரூ. 75,000 வரை கடன் பெறலாம்.

1985-86ஆம் ஆண்டில் வீடு கட்ட முன்பணம் வழங்க ரூ. 1,280 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

1986-87ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் வீடு கட்ட முன்பணம் வழங்க ரூ. 1,290 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வீடு கட்ட முன்பணம் குடும்ப நலநிதிச் சிறப்புத் திட்டம்**

வீடு கட்ட முன்பணம் வழங்க விதிகளின் படி, அரசு ஊழியர் வீடு கட்டுவதற்கு முன்பணம் பெற்று அக்கடனை முழுவதும் திரும்பச் செலுத்துவதற்கு முன் அகால மரணமேற்பட்டு இறக்க நேரிட்டால் அவர் அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன் பாக்கித் தொகையுடன் வட்டியும் சேர்த்து அரசுக்கு அவரது குடும்பத்தினர் செலுத்த வேண்டும். மேற்கண்ட விதியினை நடைமுறையில் அமல்படுத்துவதால் பல குடும்பங்கள் மிகவும் அவதியுறுகின்றன. அவ்வாறு அவதியுறும் குடும்பங்களின் அவலை நிலையைப் போக்க முன்பணம் பெற்ற அரசு ஊழியர்களுக்கென ஒரு தனிக் குடும்ப நலத்திட்டத்தை அரசு இப்போது ஆரம்பித்திருக்கிறது. வீடு கட்ட முன்பணம் பெற்ற அரசு ஊழியர்களும், ஓய்வு பெறுவதற்கு முன்பு ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பணிக்காலம் உள்ளவர்களும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு அவர்கள் மாதந் தோறும் செலுத்தும் கடன் தொகையில் ஒரு தனி விழுக்காடு தொகையினை மேற்கண்ட குடும்பநலநிதித் திட்டத்திற்குத் தவணையாகச் செலுத்த வேண்டும். இத்திட்டம், வீடுகட்ட முன்பணம் பெற்ற அரசு ஊழியர் அகால மரணமேற்பட்டு இறக்க நேரிட்டால் அவர் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் பாக்கித் தொகையை வட்டியுடன் தள்ளுபடி செய்ய வழிவகை செய்கிறது. இதற்காகும் செலவினை அரசு ஊழியர் மாதந்தோறும் செலுத்தும் தொகையிலிருந்து ஈடு செய்யப்படும். இத்திட்டத்தை 1986ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் தேதியிலிருந்து அமல்படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் மாமன்றம் 1987 ஆம் ஆண்டை, வீடு இல்லாதவர்களுக்கு வீடு தரும் ஆண்டு என்ற இலட்சியம் கொண்ட ஆண்டாக அறிவித்துள்ளது.

வரும் ஆண்டுகளில் வறுமைக் கோட்டில் உள்ள அனைத்து மக்களும் அரசு ஆதரவுடன் சொந்தமாக வீடுகளைப் பெற வேண்டும் என்பதே தமிழக அரசின் கொள்கையாகும்.

ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற இலட்சியத்தை மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையிலான தமிழக அரசு நிறைவேற்றி வருகிறது.



# TAMILNADU LEATHER DEVELOPMENT CORPORATION LIMITED

857, Periyar EVR High Road, Kilpauk,
**MADRAS-600 010.**

Development Projects:

* Training Centres to improve skills of members of Scheduled Caste.
* Market support to traditional artisans engaged in the production of footwear and leather goods. Over 100 artisans regularly supported now.
* Help for the establishment of Small Scale Leather Industries.
* Material Banks at Dindigul & Erode to help small tanners.
* Establishment and operation of Common Effluent Treatment Plant at Vaniyambadi.
* Service to Public with quality leather footwear and leather goods at competitive price.

Commercial Projects:

* Production and sales of quality finished leather hide/skin from tanneries at Vinnamangalam and Madhavaram.
* Quality industrial safety footwear and Derby shoes for Industries and Commercial Establishments.

TALCO SUPRA TALCO



# டாம்ப்கால்

## கூந்தல் மூலிகைத் தைலம்

தலைமுடி உதிர்கிறதா!
தடுத்து நிறுத்தும்
மூலிகைத் தைலம்

அருமையான
மூலிகைத் தைலத்தால்
அடர்த்தியான
கூந்தல் வேண்டுமா!

குளிர்ச்சியான
மூலிகைத்
தைலத்தால்
வளர்ச்சியான
கூந்தலைப்
பெறவேண்டுமா!

இள நரையா!
பொடுகா!! இதோ!!!
மூலிகைத் தைலம்






டாம்ப்கால்

கரிசலாங்கண்ணி, மருதாணி,
கீழாநெல்லி, பொடுதலை,
செம்பருத்தி, குமரி போன்ற
30 வகை உயர் ரக மூலிகைகளைக்
கொண்டு தேங்காய் எண்ணெய்
மற்றும் ஆலிவ் எண்ணெயுடன்
தயாரிக்கப்பட்ட கூந்தல் தைலம்.

குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

# தமிழ்நாடு கனிம நிறுவனம்
## சென்னை-600 005.
( தமிழ் நாடு அரசு நிறுவனம் )

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்துக்குச் சொந்தமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய "டாமின் கிரானைட்ஸ்" 2-3 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்திய தர மணல் | : | ஐ.எஸ். 650/1966 |
| 2. | சுண்ணாம்புக் கல் | : | கெமிகல் கிரேடு சராசரியாக +91% $CaCo_3$ |
| 3. | வெங்கக் கல் (குவார்ட்ஸ்) | : | +99.8% $Sio_2$ |
| 4. | பெல்ட்ஸ்பார் | : | +12% $K_2o$ |
| 5. | ரோஸ் குவார்ட்ஸ் | | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது |
| 6. | சிலிகா மணல் | : | +99.7% $Sio_2$ |
| 7. | வெப்பத்தாங்கும் களிமண் | : | ரிப்ராக்டரி கிரேடு 32.1% $Al_2 O_3$ |
| 8. | வெர்மிகுலைட் | : | சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது. |
| 9. | விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் | : | பொன் நிறமானது |
| 10. | சுண்ணாம்புச் சிப்பி | : | சராசரியாக $CaCo_3$ +94% |

**தேவைக்கு அணுக வேண்டிய முகவரி:**

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்,
TWAD House 31 காமராஜர் சாலை
தபால் பெட்டி எண். 2961
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண். 848932
டெலக்ஸ் — 41 6081 TNMLIN
டிஐபிஆர்/17735/363/86/எஸ்ஏஎஸ்.

**தொழிற்சாலை**

டாமின் கிரானைட்ஸ்
மணலி - பொன்னேரி ரோடு
மணலி,
சென்னை - 600 068.
தந்தி - MINESALITE



# சரித்திரம் படைக்கும் சத்துணவுத் திட்டம்

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் 1.7.1982 முதல் தமிழகத்தில் செயல்பட்டு வருகிறது. ஆரம்ப காலத்தில் கிராமப் புறங்களில் 2 வயது முதல் 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப் பட்டது.

பிறகு 15.9.82 முதல், நகர்ப்புறங்களிலுள்ள மேற்குறிப்பிட்ட வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கும் விரிவாக்கப்பட்டது. அப்போது ஏற்கெனவே 10 முதல் 14 வயது வரை பழைய திட்டத்தின் மூலம் உணவு பெற்று வந்த மாணவர்களுக்கும் இத்திட்டத்தின் மூலம் தொடர்ந்து சத்துணவு அளிக்கப்பட்டது.

பின்பு, இத்திட்டம் 15.1.83 முதல் முதியோர் ஓய்வூதியம் பெற்று வரும் நபர்களும் பயன்பெற வழிவகை செய்யப்பட்டது.

பாலர் பள்ளி மையங்களில் பயிற்சிபெற்ற குழந்தைகள் நல அமைப்பாளர்களைக் கொண்டு, 2 வயது முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குச் சத்துணவு பரிமாறப்படுகிறது. இப்போது 28,134 பாலர் பள்ளி மையங்கள் இயங்கி வருகின்றன. அவற்றின் மூலம் 21,55,540 குழந்தைகள் பயன் அடைகின்றனர். இதுதவிர 5 வயது முதல் 10 வயதுக்குட்பட்ட மாணவர்கள் 46,30,009 பேரும் மற்றும் 10 வயது முதல் 15 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் 16,13,653 பேரும் பயன் பெறுகின்றனர். தற்போது பள்ளி மையங்களின் எண்ணிக்கை 37,939 ஆகும்.

முதியோர் ஓய்வூதியம் பெறும் நபர்கள் அருகாமையிலுள்ள பாலர்பள்ளி மையம் அல்லது பள்ளி மையங்களில் உணவு பெறுகிறார்கள். இவர்களது எண்ணிக்கை சுமார் 1.98 இலட்சம் ஆகும். இத்திட்டம் 1.1.84 முதல் 112 இராணுவத்தில் இருந்து ஓய்வூதியம் பெற்றவர்கள் அல்லது அவர்களது விதவைகளுக்கும் விரிவாக்கப் பட்டது. இவர்களது பெயர் முதியோர் ஓய்வூதியம் பெறும் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது. அளிக்கப்படும் உணவுப் பொருட்களில் ஒவ்வொருவருக்கும் பின்கண்ட அளவுகள் உள்ளன.





| அளிக்கப்படும் பொருட்கள் | பாலர்பள்ளி மையங்கள் | தொடக்கப்பள்ளி/ நடுநிலைப்பள்ளி மையங்கள் | உயர்நிலைப்பள்ளி மையங்கள் | ஒய்வூதியம் பெறும் முதியோர் |
|---|---|---|---|---|
| அரிசி | 80 கிராம் | 100 கிராம் | 120 கிராம் | 200 கிராம் |
| பருப்பு | 10 கிராம் | 15 கிராம் | 15 கிராம் | 15 கிராம் |
| எண்ணெய் | 3 கிராம் | 3 கிராம் | 3 கிராம் | 3 கிராம் |
| காய்கறி மற்றும் தானிதங்கள் | 50 கிராம் | 50 கிராம் | 50 கிராம் | 50 கிராம் |

பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் ஒய்வூதியம் பெறும் நபர்களுக்கும் அரசாங்க, விடுமுறை நாட்களைத் தவிர மற்ற எல்லா நாட்களிலும் உணவு பரிமாறப் படுகிறது. அம்மாதிரியான விடுமுறையின்போது முந்திய நாளே மறுநாளைக்கு வேண்டிய உணவு அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. 10 முதல் 15 வயதுள்ள மாணவர்களுக்கு 200 பள்ளி நாட்கள் மட்டும் உணவு அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தினால் சுமார் 2 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. முக்கியமாகக் கிராமம் மற்றும் நகர்ப்புறப் பெண்கள் வேலைவாய்ப்பு கிடைக்கப் பெற்றனர். வேலையில் அமர்த்தப் பெறும் போது விதவைகளுக்கும் ஊன முற்றோர் மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தினால் கிராமப்புறங்களில் இருக்கும் 2 முதல் 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப் பட்ட பல்பொடி இலவசமாகக் கொடுக்கப் படுகிறது.



இத்திட்டத்திற்காக ஆண்டுதோறும் ஆகும் செலவு சுமார் ரூ.175 கோடியாகும்.

கோவை திரு அவினாசிலிங்கம் மனையியற் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர்களும் முதுகலைப் படிப்பு மாணவிகளும் 1983 ஜூன் தொடங்கி 1984 மே முடிய 12 திங்கள் இத்திட்டத்தினால் பயனடைந்த சிறுவர்கள் எந்த அளவிற்கு உடல் நலம் தேறியுள்ளனர் என்பதை ஆராய்ந்தனர். கோயம்புத்தூரிலும் அதைச் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளிலும் உள்ள பாலர் பள்ளிகள் மற்றும் பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள சிறுவர்களின் உடல்நலன்களைப் பற்றி ஆராய்ந்தனர்.

அந்த மதிப்பீட்டில் சிறுவர்களின் எடை 1.50 கிலோ கிராம் முதல் 2.63 கிலோ கிராம் வரையில் கூடியுள்ளது என்றும் சிறுமியரின் எடை 1.54 கிலோ கிராம் முதல் 2.75 கிலோ கிராம் வரை அதிகரித்துள்ளது எனவும் கண்டு பிடித்தனர்.

மேலும் முன்பு 50 சதவிதத்திற்கு மேற்பட்ட சிறார்களின் தலைமுடி பழுப்பு நிறமுடையதாக இருந்ததோடு முடிவளர்ச்சியும் குறைவாக இருந்தது. இத்திட்டத்தில் பயன் பெற்ற சிறுவர்களுக்கு முடி வளர்ச்சி கருமையாகவும் செழுமையாகவும் ஏற்பட்டுள்ளது. மேலும் கண் பார்வை, பற்கள், உதடுகள், ஈறுகள் ஆகியவை நல்லநிலைமையில் இருக்கின்றன. சிறுவர்கள் சுறுசுறுப்பாகவும், தெம்பாகவும் காணப்படுகின்றனர். பள்ளிகளுக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இருமல், சீதளம், ஜுரம் முதலியவை குறைந்துள்ளன என்று தாய்மார்கள் கூறியுள்ளனர்.

இந்த சத்துணவுத்திட்டத்தின் கீழ் உள்ள பாலர்பள்ளி மையங்களில் குழந்தைகள் உடல் நலத்தைக் கவனிப்பதற்காக விரிவான உடல் நலத் திட்டம் ஒன்று வரையப்பட்டிருக்கிறது. அதன்படி, குழந்தைகளின் உடல்நலம் மற்றும் எடையைக் குறிக்கும் அட்டைகள் மையங்களில் பராமரிக்கப்படுகின்றன. UNICEF நிறுவனத்தின் உதவி மூலம் குழந்தைகளின் எடையைக் கணக்கிட அளவு சாதனங்கள் சத்துணவு மையங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

இதே போன்று காந்தி கிராமம் பல்கலைக் கழகம் மற்றும் தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் (SCERT) இத்திட்டப் பற்றி ஆய்வு செய்து, சத்துணவினால் உடல் வலிமை, சமூக ஏற்றத் தாழ்வுகள் குறைதல், சாதி மனப்பான்மையில் மாறுதல் ஆகிய நன்மைகள் ஏற்பட்டுள்ளன என்று காட்டியிருக்கிறார்கள்.

இந்த வகையில் முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் இந்நாட்டின் எதிர்கால மக்களின் நல்வாழ்விற்குச் சீரிய அடித்தளமாக அமைந்துள்ளது. இவ்வாறு இத் திட்டம் மனித ஆற்றலின் வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் சிறந்த மூலதனமாகத் திகழ்வதால் நாடளாவிய தேசிய முழு வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒரு திட்டமாக உள்ளது.



## முதலமைச்சரின் குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்ட மையங்களின் மொத்த எண்ணிக்கை

| | |
|---|---|
| பள்ளிக் கல்வி இயக்குநர் மூலம் | 35,477 |
| ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல்வாழ்வு இயக்குநர் .. | 1,053 |
| பிற்பட்ட வகுப்பு இயக்குநர் .. | 277 |
| வன தலைமைக் காப்பாளர் .. | 18 |
| மாநகராட்சி ஆணையாளர், சென்னை .. | 366 |
| மாநகராட்சி ஆணையாளர், கோயம்புத்தூர் .. | 95 |
| மாநகராட்சி ஆணையாளர், மதுரை .. | 90 |
| நகராட்சி நிருவாக இயக்குநர் .. | 1,023 |
| சமூக நல இயக்குநர் .. | 28,105 |
| மொத்தம் .. | 66,504 |

## பயன்பெறுவோர் மொத்த எண்ணிக்கை

| | |
|---|---|
| 2 முதல் 4 ஆண்டு .. | 22,88,111 |
| 5 முதல் 9 ஆண்டு .. | 45,59,732 |
| 10 முதல் 15 ஆண்டு .. | 18,40,259 |
| ஒய்வூதிய முதியோர் .. | 1,99,794 |
| | 88,87,896 |

# பட்டுதனைப் பெருக்கிடுவோம் பாரெல்லாம் அனுப்பிடுவோம்

விவசாயத்தை அடிப்படையாகக்கொண்ட குறைந்த மூலதனத்தில் கிராமப்புறங்களில் அதிக வேலைவாய்ப் பளிக்கக் கூடிய தொழில் பட்டுத் தொழிலாகும். 1977ஆம் ஆண்டு தொழில் வணிகத்துறையில ஒருஅங்கமாக பட்டு வளர்ப்புப் பிரிவு செயல்பட்டு வந்தது.

தமிழக அரசின் ஆக்கமிக்க திட்டங்களால் பல வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்த வேண்டிய தருணத்தில் தமிழக அரசு பட்டு வளர்ச்சித்துறை, தனியாக சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனித்துறையாகச் செயல்பட 1979ஆம் ஆண்டில் ஆணையிட்டது. பட்டுவளர்ப்புத் தொழில் ஒசூர், தாளவாடி ஆகிய மலைப்பகுதிகளில் மட்டுமே நடைபெற்று வந்தது. தமிழக அரசின் தளராத முயற்சியின் காரணமாக, சமவெளிப் பகுதிகளிலும் பட்டுவளர்ப்புத் தொழில் 1977ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, தற்போது அனைத்து மாவட்டங்களிலும் பட்டு வளர்ப்புத் தொழில் மேற்கொள்ளப்பட்டு, கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பினை அதிகரிப்பதுடன், நல்ல பணப்பயிராக விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தியுள்ளது.

மாநிலத்தில் 1977ஆம் ஆண்டு 15382 ஏக்கரில் விவசாயிகளால் மல்பரி சாகுபடி செய்யப்பட்டு வந்தது. 1986ஆம் ஆண்டு முடிய கடந்த 9 ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி 72,662 ஏக்கர் மல்பரி நடவு செய்யப்பட்டு 3,76,368 நபர்கள் வேலை வாய்ப்பினைப் பெற்றனர். நடப்பு 1986-87ஆம் ஆண்டில் மேலும் புதியதாக 5 ஆயிரம் ஏக்கரில் மல்பரி சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழக அரசின் பெருமைக்குரிய சாதனை. மாநிலத்திற்குத் தேவையான பட்டு வளர்ப்பு முட்டைகள் தயாரிக்க நமது மாநிலத்திலேயே தேன்கனிக் கோட்டைப் பகுதியில் நாட்டின விதைப் பகுதியை 1978ஆம் ஆண்டிலேயே அரசின் சீரிய திட்டங்களால் நிறுவப்பட்டது.

நாம் கடந்த காலங்களில் அண்டை மாநிலமான கர்நாடகத்தையே நாட்டின் விதைக்கூடுகளுக்கு அணுக வேண்டியிருந்தது. இந்நிலை 1978ஆம் ஆண்டிலேயே மாறி சுயதேவை பூர்த்தி செய்யப்பட்டது. மாநிலத்தில் தர்மபுரி மாவட்டம் ஒசூர் மற்றும் ஈரோடு மாவட்டம் தாளவாடிப் பகுதிகளில் மட்டுமே முட்டை தயாரிப்பு வித்தகம் செயல்பட்டு வந்தது. தற்போது பட்டு வளர்ப்புத தொழில் அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொளளப்பட்டு வருவதால் விவசாயிகளின்தேவை பூர்த்தி செய்யப்பட்டு, பட்டு முட்டை வித்தகங்கள் கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, சேலம், வாணியம்பாடி, திண்டுக்கல், கும்பகோணம், தென்காசி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மத்திய பட்டு வாரியத்தின் கட்டுப்பாட்டில் 3 வித்தகங்கள் ஒசூர், கோயம்புத்தூர் மற்றும் ஆலங்காயம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இவைதவிர தனியார் நிறுவனங்களுக்கும் உரிமம் வழங்கப்பட்டு அரசின் கண்காணிப்பில் முட்டை வித்தகங்கள் ஒசூர் மற்றும் தாளவாடிப் பகுதிகளில் செயல்படுகின்றன. 1977ஆம் ஆண்டில் 16.05 இலட்சம் முட்டைகள் மாநிலத்தில் வளர்க்கப்பட்டன. தற்போது 130 இலட்சம் முட்டைகள் ஆண்டிற்கு வளர்க்கப்படுகின்றன. இந்த முட்டை வளர்ப்பு ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

விவசாயிகள், உற்பத்தி செய்த பட்டுக்கூடுகளை விலை நிர்ணயம் செய்யவும், கொள்முதல் செய்யவும் மாநிலத்தில் பட்டுக்கூடு அங்காடிகள் 1977ல் 3 அங்காடிகள் மட்டுமே இருந்தன. தற்போது 29 அங்காடிகள் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.





கூடுகளிலிருந்து பட்டினை எடுப்பதற்குப் பட்டு நூற்பு நிறுவனங்கள் மாநிலத்தில் 1977ஆம் ஆண்டில் 93 ஏனங்கள் செயல்பட்டு வந்தன. பல திட்டங்களால் மாநிலத்தின் தற்போது 188 ஏனங்கள் கொண்ட 21 பட்டு நூற்பு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. தனியார் துறையில் பட்டு நூற்பத் தொழில் ஆரம்பக்காலத்திலேயே அதாவது 1978ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படுவதற்கு அரசினரால் சலுகைகள் வழங்கப்பட்டு தற்போது 2699 ஏனங்கள் தனியார் நிறுவனங்களில் செயல்பட்டு வருகின்றன. மல்பரி சாகுபடி செய்வோர்களை உறுப்பினராகக் கொண்ட பட்டு நூற்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் 68 மாநிலத்தில் அமைக்கப்பட்டு, 303 ஏனங்கள் நன்கு செயல்பட்டு வருகின்றன.

பட்டுத் தொழில நூற்பு கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவுவதற்கு அரசினரால் உதவிகளும் வழங்கப் பட்டுள்ளன. மாநிலத்தில் 1977-ஆம் ஆண்டில் 16.05 இலட்சம் கிலோ கிராம் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. தற்போது மாநிலத்தில் 1985-86-ஆம் ஆண்டில் 100 இலட்சம் கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டன. கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டத்தின் அருகே ஒரு சிறிய பட்டு நூற்பாலை ரூ.25 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு 1981ஆம் ஆண்டு முதல் செயல் பட்டு வருகிறது. இதுபோன்ற சிறிய நூற்பாலை வடஆர்க்காடு, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

பட்டு வளர்ப்பு விரிவடைவதற்கும் விவசாயிகளின் தேவையினைப் பூர்த்தி செய்யவும் இத் தொழிலுக்கு வேண்டிய உள்ள மைப்புகள் அதாவது மல்பரி விதைக் குச்சுகள் வழங்குவதற்கு மாநிலத்தின் ஆங்காங்கே பண்ணைகளும் விவசாயிகளுக்கு மல்பரி சாகுபடி முறை, புழுவளர்ப்பு முறை ஆகியவற்றில் பயிற்சி வழங்குவதற்கும் மாவட்டங்களில் செயல் விளக்கப்பண்ணைகளும், மாவட்டப் பட்டு வளர்ப்பு மையங்களும் நிறுவப்பட்டுள்ளன. இவை தவிர, நலிவடைந்த மலைவாழ் மக்கள் மேன்மையடைய கல்ராயன் மலை, கொல்லி மலை, சித்தேரி மலை, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை ஆகிய பகுதிகளின் முன்னோடிப் பயிற்சி பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. சீரிய வளர்ச்சிக்கும் அதிக மகசூலுக்கும் விவசாயிகளுக்கு முட்டைகள் வழங்குவதற்குப் பதிலாக இளம்புழுக்கள் வழங்கத் திட்டங்கள் செயல்படுத்தி, தற்போது தமிழ்நாட்டில் 115 கிராமிய இளம்புழு வளர்ப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

வறட்சிக்கு இலக்காகும் பகுதி மாவட்டங்களான தர்மபுரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பட்டு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தியதால். கிராமப் பொருளாதாரம் மறுமலர்ச்சி அடைந்துள்ளது.

தமிழக அரசு ஆக்கமிக்க பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. இத்திட்டங்கள் செயல்படுத்தப் போதிய தொழில் நுணுக்கம் தெரிந்த நபர்களின் தேவை ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. அரசின் தேவையைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு முன்கூட்டியே திட்டமிட்டு 1981-ஆம் ஆண்டில் ஒசூரில் பட்டு வளர்ப்புப் பயிற்சிப் பள்ளி ஒன்றை நிறுவி, ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்த நபர்களுக்குப் பயிற்சி வழங்கி பின்னர் இத்துறையில் சேர்த்துப் பணியாற்றித் திட்டங்களைச் செயல்படுத்த வழிமுறை செய்துள்ளது. மேல்மட்டத் தொழில் நுட்ப வல்லுநர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய விவசாயப் பல்கலைக் கழகம் கோயம்புத்தூரில் இதற்கென ஒரு பட்ட மேற்படிப்பைத் துவக்கிச் செயல்படுத்தி வருகிறது.

உற்பத்தி செய்த பட்டினை விற்பனை செய்வதற்குக் காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு பட்டு உற்பத்தியாளர்கள் தொழில் கூட்டுறவு விற்பனை இணையம் 1979-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்திற்குத் தமி

ழக அரசின் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் மத்திய பட்டு வாரியம் ஆகியவை வேண்டிய நிதி உதவி வழங்கி, கச்சாப் பட்டு கொள்முதல் செய்வதற்கு வழி வகை செய்துள்ளது. இந்த நிறுவனத்தின் கிளைகள் சேலம், கோவை, தர்மபுரி, மதுரை ஆகிய இடங்களில் செயல்பட்டு தனியார் கூட்டுறவுத்துறை மற்றும் அரசுத்துறைப் பட்டினைக் கொள்முதல் செய்து வருகின்றன. 1985-86ஆம் ஆண்டில் பட்டு இணையம், காஞ்சிபுரம் ரூ. 5.92 கோடி மதிப்புள்ள 1.08 இலட்சம் கிலோ பட்டுக் கொள்முதல் செய்து விற்பனை செய்துள்ளது.

பட்டுத்தொழில் மேற்கொள்ள நமது அரசு உயர் ரக எம்.5 இன விதைக் குச்சிகள் நடவு செய்வதற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.100 மானியமாக வழங்குகிறது. பட்டுப் புழு வளர்ப்பு மேற்கொள்ளத் தேவையான புழு வளர்ப்புத் தளவாடங்கள் வாங்கவும் புழு வளர்ப்பு மனை கட்டவும் கடனாக ரூ. 5000 வங்கிகள் மூலம் பெற்று விவசாயிகளுக்கு வழங்குகிறது. இவர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மூலம் 25% மானியம் வழங்கப்படுகிறது.

1977-ஆம் ஆண்டு முதல், தமிழக அரசின் ஆக்கமிகு திட்டங்களால் பட்டு வளர்ச்சித்துறை அடைந்த சாதனைகள் எண்ணிலடங்கா. அவை வருமாறு:

மல்பரி பரப்பு 1977-ஆம் ஆண்டில் 15,382 ஏக்கர் இருந்தது. 1985-86-ஆம் ஆண்டில் 72,622 ஏக்கராக அதிகரித்துள்ளது. பட்டு முட்டை உற்பத்தி 1977-ஆம் ஆண்டில் 16.05 இலட்சம் இருந்தது. 1985-86-ஆம் ஆண்டில் 130 இலட்சம் முட்டைகளாக அதிகரித்துள்ளது.

பட்டுக்கூடு உற்பத்தி 1977-ஆம் ஆண்டில் 16.05 இலட்சம் கிலோவாக இருந்தது. 1985-86-ஆம் ஆண்டில் 100 இலட்சம் கிலோவாக அதிகரித்துள்ளது.

கச்சாப் பட்டு உற்பத்தி 1977-ஆம் ஆண்டில் 0.28 இலட்சம் கிலோவாக இருந்தது. 1985-86ஆம் ஆண்டில் 3 இலட்சம் கிலோவாக அதிகரித்துள்ளது. புழுவளர்ப்புத் தளவாடங்கள் வாங்குவதற்கான மானியம் 1977-ஆம் ஆண்டில் 531 ஆக இருந்தது. 1985-86-ஆம் ஆண்டில் 1,4824 ஆக அதிகரித்துள்ளது. புழுவளர்ப்பு மனைகட்ட மானியம் 1977-ஆம் ஆண்டில் 431 ஆக இருந்தது. 1985-86ல் 12969 ஆக அதிகரித்துள்ளது.

வேலை வாய்ப்புப் பெருக்கம் 1977-ஆம் ஆண்டில் 76910 ஆக இருந்தது. 1985-86ல் 3,76,368 ஆக அதிகரித்துள்வன.

பட்டு வித்தகங்கள் 1977-ஆம் ஆண்டில் 1 ஆக இருந்தது. 1985-86-ஆம் ஆண்டில் 8 ஆக அதிகரித்துள்ளன.



பட்டு நூற்பு நிலையங்கள் 1977-ஆம் ஆண்டில் 4 ஆக இருந்தன. 1985-86-ஆம் ஆண்டில் 21 ஆக அதிகரித்துள்ளன.

அரசு பட்டுக்கூடு அங்காடிகள் 1977-ஆம் ஆண்டில் 3 ஆக இருந்தன. 1985-86-ஆம் ஆண்டில் 29 ஆக அதிகரித்துள்ளன.

மாவட்ட பட்டு வளர்ச்சி மையம் 1977-ஆம்ஆண்டில் ஒன்றும் இல்லை. 1985-86-ஆம் ஆண்டில் 4 ஆக அதிகரித்துள்ளன.

கிராமிய நூற்பு மற்றும் பயிற்சி மையம் 1977-ஆம் ஆண்டில் ஒன்றும் இல்லை. 1985-86-ஆம் ஆண்டில் 7 ஆக உயர்ந்துள்ளது.

கிராமிய இளம்புழு வளர்ப்பு மையங்கள் 1977-ல் ஆண்டில் ஒன்றும்இல்லை. 1985-86-ஆம் ஆண்டில் 115ஆக அதிகரித்துள்ளன.

தொழிற்நுட்ப சேவை மையங்கள் 1977-ஆம் ஆண்டில் ஒன்றும் இல்லை. 1985-86-ஆம் ஆண்டில் 34 ஆக உயர்ந்துள்ளன.

முன்னோடி சேவை மையங்கள் 1977ஆம் ஆண்டில்ஒன்றுமில்லை. 1985-86-ஆம் ஆண்டில் 10ஆக உயர்ந்துள்ளது.

பட்டு வளர்ச்சி முன்னேற்ற மையங்கள் 1977-ஆம் ஆண்டில் ஒன்றுமில்லை. 1985-86-ஆம் ஆண்டில் 15 ஆக அதிகரித்துள்ளது.

விளக்கம் மற்றும் பயிற்சி மையங்கள் 1977-ஆம் ஆண்டில் ஒன்றுமில்லை. 1985-86-ஆம் ஆண்டில் 11 ஆக அதிகரித்துள்ளது.

மல்பரி நாற்றங்கால்கள் 1977-ஆம் ஆண்டில் ஒன்றுமில்லை. 1985-86ஆம் ஆண்டில் 5 ஆக அதிகரித்துள்ளது.

மாதிரி மல்பரி பண்ணை 1977-ஆம் ஆண்டில் ஒன்றுமில்லை. 1986-86-ஆம் ஆண்டில் 13ஆக உயர்ந்துள்ளது.

பட்டு விற்பனை இணையம் 1977ஆம் ஆண்டில் ஒன்றுமில்லை.

1985-86-ஆம் ஆண்டில் 1 ஆக உயர்ந்துள்ளது.

"பட்டுதனைப் பெருக்கிடுவோம் பாரெல்லாம் அனுப்பிடுவோம்" என்ற கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் முன்னேற்றம் அடைந்து வருகிறது.





1981-82-ஆம் ஆண்டிற்கு முன்பு வரை உதவித்தொகை பெற, வருமான வரம்பு ரூ. 2,500 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1981-82-ஆம் ஆண்டிலிருந்து வருமான வரம்பை ரூ. 5000 ஆக உயர்த்தி, மேலும் அதிக மாணவர்கள் உதவித் தொகை பெற்றுப் பயன் பெற வசதி செய்யப்பட்டுள்ளது. 1977-78-ஆம் ஆண்டு வழங்கிய உதவித்தொகை ரூ. 312.33 இலட்சமாகும். 1986-87-ஆம் ஆண்டில் சுமார் 2,90,000 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.377.98 இலட்சம் செலவிடப்படும். இவ்வரசு, கல்விக்குமிக முக்கியத்துவம் தருவதை இவ்வுயர்வு எடுத்துக்காட்டு வருகிறது.

### பள்ளிகள்

இத்துறையின் மூலம் சீர் மரபினர் மாணவர்களுக்காக 2 மேல் நிலைப் பள்ளிகளும், 8 உயர் நிலைப்பள்ளிகளும் 36 நடுநிலைப் பள்ளிகளும் 123 ஆரம்பப் பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் மொத்தம் சுமார் 53,000மாணவ-மாணவிகள் பயின்று வருகின்றனர். பள்ளிகளின் பராமரிப்பிற்காக 1986-87ஆம் ஆண்டு ரூ.210.72 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

# பிற்படுத்தப்பட்டோர்க்குப் பேருதவி

பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனைக் கவனிப்பதற்காகத் தனியாக ஒரு துறை "பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை" 1969-ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இத்துறையின் திட்டங்களை மாவட்ட அளவில் செயல்படுத்த 1975-ஆம் ஆண்டிலிருந்து துணை ஆட்சியர் நிலையில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடிப் பார்வையில் செயல்பட்டு வருகின்றனர்.

இத்துறையின் மூலம், பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தப் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### உதவித் தொகை

பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் எவ்வித இடையூறுமின்றித் தொடர்ந்து கல்வி பயிலும் வகையில் அவர்களை ஊக்குவிக்க உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. பள்ளிப் படிப்பு உபகாரச் சம்பளத்திற்கு சீர் மரபினருக்கு நான்காம் வகுப்பிலிருந்தும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 'ஒன்பதாம் வகுப்புலிருந்தும் புத்தகமாகவும் சிறப்புக்கட்டணம் [illegible] செய்தும், தேர்வுக் கட்டணம் [illegible] செய்தும் தரப்படுகின்றன. [illegible] பட்டப்படிப்பு, மற்றும் பட்ட மேற்படிப்புக்கான உதவித் தொகை பணமாக வழங்கப்படுகிறது.

### விடுதிகள்

1977-78ஆம் ஆண்டில் 284 விடுதிகளில் சுமார் 19,000 மாணவர்கள் தங்கிப் படித்து வந்தனர். 1985-86-ஆம் ஆண்டில் 543 விடுதிகளில் சுமார் 32,500 மாணவர்கள் பயன் பெற்றனர். நடப்பாண்டில், மேலும் 15 புதிய விடுதிகள் திறக்கப்படும். விடுதிகளைப் பராமரிக்க ரூ. 411.89 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 49 விடுதிகள் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் உள்ளன. மற்ற விடுதிகளுக்கு, சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 1986-87ஆம் ஆண்டில் சுமார் 10 விடுதிகள் கட்ட ரூ. 54 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### புத்தகங்கள் மற்றும் சீருடை வழங்கல்

சீர் மரபினர் பள்ளிகளில் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை படிக்கும் எல்லா மாணவர்களுக்கும், புத்தகங்களும், இரண்டு செட் சீருடைகளும் வழங்கப்படுகின்றன. இதே போன்று விடுதிகளில் தங்கிப் பயில்வோருக்கும் இரண்டு செட் சீருடைகள் வழங்கப்படுகின்றன. 1977-78ஆம் ஆண்டில் ரூ.15.10 லட்சம் செலவிடப் பட்டது. இத்தொகை தற்போது மும்மடங்காகப் பெருகி, இவ்வாண்டு ரூ. 48.27 இலட்சம் செலவில் இவை வழங்கப்படும்.

### இலவசத் தொழிற் கருவிகள் வழங்கல்

சலவை மற்றும் சவரத்தொழிலாளர்கள், கல்லுடைப்போருக்கு இலவசமாகக் கருவிகள், முறையே ரூ. 443.10, ரூ. 137-15, ரூ.200 மதிப்பில் தங்கள் தொழிலைச் செய்ய ஏதுவாக வழங்கப்படுகின்றன. 1977-78-ஆம் ஆண்டில் 4095 நபர்களுக்கு ரூ. 7 இலட்சம் செலவில் கருவிகள் வழங்கப்பட்டன. 1986-87ஆம் ஆண்டு. ரூ. 15.75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### சலவைத்துறை கட்டுதல்

சலவைத் தொழிலாளர்களுக்கு செய்து தரப்படும் முக்கிய வசதி சலவைத்துறை கட்டித் தருவதாகும். இதற்காக அரசு 75% மானியம் வழங்குகிறது. மீதியில் 20% உள்ளாட்சிகளின் பங்காகவும் 5% பயனாளிகளின் பங்காகவும் செலுத்தப்படுகிறது. 1977-78-ஆம் ஆண்டு ஒரு சலவைத் துறை ரூ. 8,000 செலவில் கட்டப்பட்டுள்ளது. இந்த ஆண்டு (1986-87) ரூ. 2 லட்சம் செலவில் சுமார் 6 சலவைத் துறைகள் கட்டப்படும்.

### நில எடுப்பு

நரிக்குறவர், நாவிதர், ஒட்டர், வண்ணார் இனத்தைச் சார்ந்த மிக பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களில் வீட்டுமனை இல்லாத நிலமற்ற ஏழைகளுக்கு வீட்டு மனை வழங்கும் சிறப்புத் திட்டமொன்றை அரசு 1981-82லிருந்து செயல்படுத்தி வருகிறது. 1981-82 முதல் இதுவரை ரூ. 81.65 இலடசம் செலவிடப் பட்டுள்ளது. 1986-87-ஆம் ஆண்டு ரூ. 10 இலட்சம் இதற்காக ஒதுக்கப் பட்டுள்ளது.

### சட்டக் கல்வி பயின்ற இளம் பட்டதாரிகளுக்குப் பயிற்சி

அரசியல், சட்டம் போன்ற சட்டத்தின் பல்வேறு தனித்துறைகளில் திறமை பெற்ற பிரபல வழக்கறிஞர்களிடம், இளம் சட்டப்பட்டதாரிகள் 20 பேர்களைத் தேர்ந்தெடுத்து மூன்றாண்டுப் பயிற்சிக்கு அனுப்ப ரூ. 1.88இலட்சம் ,1986-87-ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளது.

### வேலைவாய்ப்புக்கான குறுகிய காலப் பயிற்சி

இத்திட்டத்தின்படி, பிற்படுத்தப்பட்ட வகுப்பு சீர் மரபினருக்கு வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கோடு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்ற பல்வேறு நிறுவனங்களில் பணி நியமனங்களுக்கான போட்டித் தேர்வுகள் எழுதப் பயிற்சியும், கம்ப்யூட்டர் புரோகிராமிங், விற்பனையாளர் போன்ற துறைகளில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதற்கு விடுதி வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. 1986-87-ஆம் ஆண்டு 600 மாணவர்கள் பயனடையும் இத்திட்டத்திற்கு ரூ. 697 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### சிறப்புப் பயிற்சி நிலையம்

பிற்படுத்தப்பட்ட வகுப்பு-சீர் மரபினர், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி போன்ற அனைத்திந்தியப் பணிகளுக்கான தேர்வு எழுதப்பயிற்சியளிக்கும் சிறப்புப் பயிற்சி நிலையம் சென்னையில் 1971-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இதைத்தவிர 1983-ஆம் ஆண்டிலிருந்து டெல்லியில் உள்ள டாக்டர் ராவ் ஐ.ஏ.எஸ்., பயிற்சி மையத்தில் ஆண்டுதோறும் இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி போன்ற தேர்வுகள் எழுதப் பயிற்சி அளிக்கப்படுகிறது.





### தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்காக ஏற்படுத்தப்பட்ட இரண்டாம் உயர் ஆணைக்குழு

1982ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு 28.2.1985 ஆம் நாளன்று அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்து அதனடிப்படையில், பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்பட்டிருந்த 50% இட ஒதுக்கீடு தொடர்ந்து நீடிக்க அரசு வகை செய்து ஆணை பிறப்பித்தது அரசு தனது 31.7.'85தேதியிட்ட ஆணையில் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்புப் பட்டியலை அறிவித்துள்ளது.

### மதம் மாறிய கிருத்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்:

பிற்படுத்தப்பட்ட வகுப்பிலிருந்து கிருத்துவ மதத்திற்கு மாறியவர்களையும், பிற்படுத்தப்பட்ட வகுப்பு எனக் கருதிச் சலுகைகளை வழங்கலாம் என அரசாணை 558 (சமூக நலத்துறை) நாள்: 24.2.'86-ல் உத்தரவிட்டுள்ளது.

### தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார ரீதியில் மேம்பாடு அடைந்து வாழ்க்கையில் முன்னேற்றம் பெற உதவும் பொருட்டு இக்கழகம் 1981-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இக்கழகம் பிற்படுத்தப்பட்டோர் தொழில் தொடங்குவதற்காக ஆரம்ப மூலதனத் தொகையை, குறைந்த வட்டி விதத்தில் வழங்கி, வங்கிக் கடன் பெற்றுத் தரவும் உதவுகிறது.

### இதர திட்டங்கள்

பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மேம்பாட்டுக்காகத் தொழிற்பயிற்சி நிலையங்கள், பொதுநோக்குத் தொழில் பட்டறைகள், இணை மான்யம், வீடு கட்டித் தருதல், பரிசுப் புத்தகம் வழங்கல் போன்ற பல்வேறு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கூறிய பல்வேறு முன்னேற்றத் திட்டங்களுக்காக 1986-87-ஆம் ஆண்டு ரூ.12.9 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது 1967-68ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 1.61 கோடியை விட 8 மடங்குக்கும் அதிகமாகும். இவ்வுயர்வு, பிற்படுத்தப்பட்ட வகுப்பு நிலையை உயர்த்துவதற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை தீவிரமாகச் செயல்பட்டு வருவதை எடுத்துக்காட்டுகிறது.

### முதியோர் உதவித் தொகைத் திட்டம்

முதியோர் உதவித் தொகை 31.3.79 வரை, மாதம் ரூ.20 கொடுக்கப்பட்டது. 1.4.79 முதல், இத்தொகை மாதம் ரூ. 25 ஆக உயர்த்தப்பட்டது. பின்னர், மீண்டும் 1.4.82 முதல், இத்தொகை மாதம் ரூ. 35 ஆக உயர்த்தப்பட்டது.

முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1976-ஆம் ஆண்டு முடியப் பயன்பெற்ற முதியோர் 50,663 பேர். 1977 முதல் 1986 வரை முதியோர் உதவித் தொகைத்திட்டத்தின் கீழ் பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை 3,31,058 ஆகும்.

## Like the port after which it's named, Poompuhar Shipping Corporation itself has made some history.



Centuries ago, the port city of Poompuhar in Tamilnadu was bustling with ships, sailors and hectic commercial activity.
It made history, exporting the famous silks and spices of India to far-off countries around the world.
At Poompuhar Shipping Corporation, we've made a bit of history ourselves.
We're the largest movers of coal along the Indian coast: 24.50 lakh tonnes of coal in 1985-86.
All the way from Haldia and Paradeep to thermal stations in Tamilnadu.
Moreover, we've acquired our own 39,990 DWT bulk carrier, mv TAMIL ANNA, from Japan to speed up the transport of coal and to economise our operations. Two more bulk carriers will be delivered before the end of 1986.
To streamline unloading, we have our own specially trained personnel and other facilities.
This enables us to maintain a very high rate of coal discharge comparable to international norms.
In fact, we offer integrated shipping and handling services that no other shipping company offers!
Now, isn't that making history?

**Poompuhar Shipping Corporation Limited**
304/305 Anna Salai Teynampet Madras 600 018




# சிறப்பிடம் வகிக்கும் கதர் கிராமத் தொழில்கள்

இந்தியத் திருநாட்டின் உயிர் நாடி கிராமங்களில் இருக்கிறது என்பதைக் கண்ட அண்ணல் காந்தியடிகள் அவற்றின் வளர்ச்சிக்காகப் பல திட்டங்களை வகுத்துத் தந்தார். அவற்றில் ஒன்று தான் கதர் கிராமத் தொழில் திட்டம்

தமிழ்நாட்டில் இத்திட்டங்களைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் போற்றி வளர்த்தார்கள். அண்ணா வழியில் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1977-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக்கொண்டது முதல், கதர் கிராமத்தொழில் திட்டங்கள் சீரும் சிறப்புமாக வளர்வதற்கு வழிவகைகளை வகுத்துத் தந்துள்ளார்கள்.

புரட்சித் தலைவர் அவர்களின் 10 ஆண்டுப் பொற்கால ஆட்சியில் அகில இந்திய அளவில் மத்திய அரசும், கதர் கிராமத்தொழில் ஆணைக்குழுவும் பாராட்டும் வகையில் இவ்வாரியம் வளர்ச்சியடைந்துள்ளது. அகில இந்தியாவிலேயே கதர் கிராமத் தொழில் திட்டங்களை நேரடி நிர்வாகத்தில் செயல்படுத்திக் கொண்டு வருவது தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தான் என்பது குறிப்பிடத்தக்கது. மற்ற மாநிலங்களுக்குத் தமிழ்நாடு ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அகில இந்திய அளவில் கீழ்க் கண்ட கிராமத் தொழில் பொருட்கள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்றது.

எண்ணெய்த் தொழில், பனைத் தொழில், குளியல் சோப்பு தயாரிப்பு, சலவை சோப்புத் தொழில், தேனீ வளர்ப்பு, பாலியஸ்டர் துணி தயாரிப்பு.

1977-78ல் வாரியத்தின் கதர் கிராமத்தொழில் பொருட்கள் மொத்த உற்பத்தி ரூ.44 கோடியாக இருந்தது. 1985-86-ல் ரூ. 121 கோடியாக உயர்ந்துள்ளது. 10 ஆண்டுகளில் வாரியத்தின் வளர்ச்சி 275 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

அகில இந்திய அளவில் கதர் உற்பத்தியில் உத்தரப் பிரதேசத்திற்கு அடுத்த இடத்தையும், கிராமத்தொழில் உற்பத்தியில் இந்தியாவிலேயே முதலிடத்தையும் தமிழ்நாடு வகிக்கிறது.

புரட்சித் தலைவர் 1977ஆம் ஆண்டு பதவி ஏற்றுக் கொண்ட போது இவ்வாரியத்தின் மூலம் வேலைவாய்ப்புப் பெற்றோர் எண்ணிக்கை 3,33,157. 1985-86-ல் வேலைவாய்ப்புப் பெறுவோர் எண்ணிக்கை 7,17,750 ஆகும்.

மேற்படி வேலைவாய்ப்புப் பெறுவோர் விவரம்:

| | |
|---|---|
| ஆதிதிராவிடர் | 93,710 |
| மலைவாழ் மக்கள் | 9,355 |
| பெண்கள் | 2,04,873 |
| மற்றவர்கள் | 4,09,812 |
| மொத்தம் | 7,17,750 |

கதர்த் திட்டத்தின் மூலம் பெண்களுக்குத் தான் அதிக அளவில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 588 கிராமிய நூற்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒரு கிராமிய நூற்பு நிலையத்துற்கு 30 நபர்கள் வீதம் சுமார் 17,000 பேருக்கு நிரந்தர வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

இவற்றின் மூலம் உற்பத்தியாகும் நூலைக் கொண்டு சுமார் 6000 பரம்பரை நெசவாளர்கள் கதர்த்துணிகளை உற்பத்தி செய்து நிரந்தர வேலை வாய்ப்புப் பெறுகிறார்கள். வாரியத்தில் 281 கதர் உற்பத்தி அலகுகள் செயல் படுகின்றன.

ஆதிதிராவிட மக்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் கிராமப்புற மக்கள் ஆகியோரை கதர் நெசவுத்தொழிலில் ஈடுபடுத்தி அவர்களுக்கு மாற்றுத் தொழிலாக அமையும் வகையில் நேபாளித் தறிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு அரசுத் திட்டங்கள் கதர் ஆணைக்குழுத் திட்டங்கள் மூலம் 68 நேபாளித் தறி அலகுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்த 68 அலகுகள் மூலம் 5280 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

கிராமிய நூற்பு நிலையங்கள், கதர் உற்பத்தி நிலையங்கள், காதிகிராப்டுகள், தையல் அலகுகள், சாயமிடும் - அச்சிடும் நிலையங்கள், பட்டு உற்பத்தி நிலையங்கள் அனைத்தும் சேர்ந்த மொத்தம் 882 அலகுகள் செயல்படுகின்றன.

கதர்த்துறையில் பாலியஸ்டர் உற்பத்தி ஒரு புதிய முற்போக்குத் திட்டமாகும். மக்களின் நாகரிகத் தேவைகளுக்கு ஏற்பத் தரமான பாலியஸ்டர் துணி வகைகள் வாரியத்தால் தயாரிக்கப்படுகின்றன. வாரியத்தில் மொத்தம் 38 பாலியஸ்டர் நூல் உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

1985-86ல் மொத்தம் ரூ 75.50 இலட்சத்திற்கு கதர் பாலியஸ்டர் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. சேலம் மாவட்டம் எஸ்.பாலம் கிராமத்தில் பாலியஸ்டர் மற்றும் பஞ்சுக் கலவை அலகு ரூ. 55 இலட்சம் மதிப்பில் அனுமதிக்கப்பட்டு, பூ வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

பாலியஸ்டர் துணி ரகங்களை, சாயமிட்டு அச்சிடுவதற்குப் பிரத்தியேகமாக பவானிசாகரில் தனித் தொழில்கூடம் துவக்கப்பட்டுள்ளது. கதர் உறபத்தியில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு கதர்

கிராமத்தொழில் வாரியம் தான் கதர் பாலியஸ்டர் துணிகளைத் தயாரித்து அறிமுகப்படுத்தியது.

தரமுள்ள நவீன ரகப்பட்டுப் புடவைகள் கதர் வாரியத்தில் தயாரிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில்17பட்டு அலகுகள் செயல்படுகின்றன. 1977ஆம் ஆண்டு கதர் பட்டு உற்பத்தி மதிப்பு ரூ. 61 இலட்சமாக இருந்தது. 1985-86ல் ரூ. 322.92 இலட்சத்திற்கு உற்பத்தி உயர்ந்துள்ளது. இவற்றின் மூலம் 1200 பட்டு நெசவாளர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. பட்டு நெசவாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.600 முதல் ரூ.700 வரை வருவாய் கிடைக்கிறது.

வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்படும் கிராமத்தொழில்களில் சோப்புத்தொழில் மிக முக்கியமான ஒன்று. வாரியத்தில் தயாரிக்கப்படும் வேம்பு, குறிஞ்சி சோப்பு, சந்தனசோப்பு, ஆயுர்வேத மூலிகை சோப்பு ஆகிய குளியல் சோப்புகள் சுகாதாரத்திற்கு ஏற்றவை. நல்ல தரமுள்ளவை. இன்று மக்கள் மத்தியில் அவை மிகவும் பிரபலமடைந்துள்ளன. திருக்கழுக்குன்றத்தில் உள்ள குளியல் சோப்பு அலகில் இவை தயாரிக்கப்படுகின்றன.

வாரியத்தில் 37 சலவைசோப்பு அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் சுமார் 200 நபர்கள் நிரந்தர வேலை வாய்ப்புப் பெறுகிறார்கள். வாரியத்தின் மூலம் உற்பத்தியாகும் சலவை சோப்பிற்கு ''கோபுரம் மார்க்'' சலவை சோப்புகள் என்று பெயர். அரசின் துறைகளான மருத்துவமனைகள், தொழிற்சாலைகள் போன்றவற்றிற்கும், இந்த சோப்புகள் அனுப்பப்படுகின்றன. முதன் முதலாக குளியல் சோப்புகள் இந்தியப் பாதுகாப்புத்துறைக்கு அனுப்பப்படுகின்றன. சுற்றுலாத் துறையின் தேவைக்கான குளியல் சோப்பு முழுவதையும் வாரியம் தயாரித்துக் கொடுக்கிறது. வாரியத்தின் சலவை சோப்பிற்குக் கேரள மாநிலத்தில் அமோக வரவேற்புள்ளது.

தோல் தொழிலில் ஈடுபட்டுள்ள அருந்ததிய சமுதாயத்தினர் வாழ்வு வளம்பெற வாரியம் பத்பல முன்னோடித் திட்டங்களைத் தீட்டியுள்ளது. அவர்களுக்கு நிதியுதவியும், தொழில் நுட்பஉதவியும்,பொதுப்பணிக்கூட உதவியும் வேலைவாய்ப்பும் வாரியம் அளித்து வருகிறது.

வாரியத்தில் 25 காலணிஅலகுகள், 26 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. இவற்றில் தயாராகும் தரமிகு காலணிகள், பெட்டிகள், பணப்பைகள் யாவும் காவல்துறை, போக்குவரத்துத்துறை, நகராட்சிகள், பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை ஆகிய அரசு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. தரமிக்க வாரிய காலணிகளுக்குப் பொது மக்களிடம் நல்ல வரவேற்பு இருக்கிறது. 1977ல் ரூ.124 இலட்சமாக இருந்த உற்பத்தி 1985-86ல் ரூ. 723 இலட்சமாக உயர்ந்துள்ளது.

கொளுத்தும் வெயிலிலும், கொட்டும் மழையிலும், நாள் முழுவதும் சாலை ஓரங்களில் துன்பப்படும் காலணித் தொழிலாளர்களின் துயர் துடைக்கப் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, நிழல் தரும் காலணித் தொழில் கூடங்களை இந்தியாவிலேயே முன்னோடி திட்டமாக தயாரித்து வழங்கி வருகிறது.



ஒவ்வொன்றும் ரூ 8500 மதிப்புள்ள காலணித் தொழில்கூடம், கருவிகள், தையல் இயந்திரம் உட்பட காலணித் தொழிலாளருக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. இவ்விதம் தமிழகம் முழுவதும் 1000 பணிக்கூடங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இவ்வாண்டு 750 பணிக்கூடங்களை வழங்கத் தமிழக அரசு ஆணை வழங்கியுள்ளது.

தோல் பதனிடுவோர் மற்றும் காலணித் தொழிலாளர்களுக்கு கடன், மானியமாக வாரியம் நேரடியாக நிதியுதவி செய்து வருகிறது. இதுவரை தோல் பதனிடுவோர் சுமார் 5500 நபர்களுக்கும் காலணித் தொழில் செய்வோருக்கும் கடனும்,மான்யமும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 1608 பனை தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களும், 6 மாவட்ட பனைவெல்ல சம்மேளனங்களும் சென்னையில் மாநிலப் பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு சம்மேளனமும் செயல்பட்டு வருகின்றன.

1977-78ல் பனைப்பொருள் உற்பத்தி ரூ. 1018 இலட்சமாக இருந்தது. 1985-86ல் பனைப் பொருட்களின் மொத்த உற்பத்தி ரூ. 3475 இலட்சத்தைத் தாண்டியுள்ளது. பனஞ்சீனி, பனஞ்சர்க்கரையைக் கொண்டு தயாரிக்கப்படும் ''பாம்டா, பாம்கூலா'' போன்ற பானங்கள் உடல் நலத்திற்கு மிகவும் இன்றியமையாதவை. மக்களிடத்தில் இவை நல்ல வரவேற்புப் பெற்றுள்ளன. இத்தொழிலில் 1977-78ஆம் ஆண்டில் வேலைவாய்ப்புப் பெற்றோர் சுமார் 2,60,000 நபர்களாவர். 1985-86ல் வேலை வாய்ப்புப் பெறுவோர் 5 இலட்சத்திற்கு மேல் ஆகும். இதில் சுமார் 2,14,000 பெண்கள் ஈடுபட்டுள்ளனர்.

பனைத்தும்பு மற்றும் பனை ஓலைப் பொருட்கள் ஆண்டு தோறும் ரூ. 75 இலட்சத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

பனைத்தொழிலாளர்கள் தங்கள் தொழிலில் ஈடுபடும்போது ஏற்படும் விபத்துக்களுக்கு அரசு நிவாரணம் வழங்கி வருகிறது. சிறு விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 100ம் பெரும் விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.500ம், மரணமுற்றவரின் குடும்பத்திற்கு ரூ.1000ம் நிவாரணமாக வழங்கி வந்தது. புரட்சித் தலைவர் ஆட்சிக்காலத்தில் மரணமடைந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ. 5000 நிவாரணமாக உயர்த்தப்பட்டுள்ளது. இது வரையில் 1065 நபர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.



உடல் நலத்திற்கு ஒரு அருமருந்து தேன். தமிழகத்தில் 4,286 கிராமங்களில் இத்தொழில் செயல்பட்டு வருகிறது. இத்தொழிலில் 44,581 நபர்கள் ஈடுபட்டுள்ளனர். ஆண்டுக்கு 12 இலட்சம் கிலோ தேன் உற்பத்தியாகிறது. அக்மார்க் செய்யப்பட்ட சுத்தமான தேன், தரக் கட்டுப்பாட்டுடன் சீசாக்களில் அடைக்கப்பட்டு, சென்னை குறளகம் கதர் அங்காடியிலும், தமிழகத்திலுள்ள அனைத்து கதர் அங்காடிகளிலும் விற்பனை செய்யப்படுகின்றது. தேனீத் தொழிலில் பல தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களையும், தேனீ வளர்ப்பு உபகிளை, தேனீ பண்ணை முதலியவற்றையும் வாரியம் துவக்கிச் செயல்படுத்தி வருகின்றது.

ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ஜவ்வாது மலை, கல்ராயன் மலை, கொல்லிமலை ஆகிய மலைப்பிரதேசங்களில் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், தேனீ வளர்ப்பு உபகிளைகள் துவங்கப்பட்டுள்ளன. இது வரை 19,400 தேனீ பெட்டிகள் மலைவாழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ, நீலகிரி மாவட்டத்தில் 13500 தேனீப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அதிக அளவில் தேனை உற்பத்தி செய்து வருகின்றது.

பரம்பரையாக இயங்கி வந்த மாட்டுச் செக்குத் தொழிலில் புதிய தொழில் நுட்பங்களைப் புகுத்தி மின்விசைச் செக்கினை வாரியம் தமிழகத்தில் அறிமுகம் செய்தது. மாட்டுச் செக்கினை இயக்குவதில் ஆகும் செலவினத்தைவிட மின்விசைச் செக்கினை இயக்கிட செலவினம் மிகவும் குறைவாகும். இதுகாறும் தமிழகத்தில் 3728 மின் விசைச் செக்குகள் வழங்கப்பட்டுள்ளன. எளிதில் இடம் விட்டு இடம் மாற்றிக் கொள்ள ஏதுவான நவீன மின் விசைச் செக்குகள் வாரியத்தின் மூலம் வழங்கப்படுகின்றன. தமிழகத்தில் 36 எண்ணெய் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. எண்ணெய் உற்பத்தியில் அகில இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கின்றது. 1977-78ல் எண்ணெய் உற்பத்தி ரூ. 351 இலட்சமாகும். 1985-86ல் ரூ. 3468 இலட்சம் மதிப்பு உற்பத்தியை அடைந்துள்ளன. இது சுமார் 10 மடங்கு அதிக வளர்ச்சியாகும்.

தமிழ்நாட்டில் மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு புரட்சித் தலைவரின் ஆட்சியில் பல்வேறு நன்மைகள் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன.பல கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு அவர்களுக்கு வேண்டிய நிதியுதவி தடையில்லாமல் அளிக்கப்பட்டு வருகிறது. இன்று தமிழ்நாட்டில் 66 மட்பாண்டக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. வாரியம் 3 அலகுகளை நடத்தி வருகிறது. இவை தவிர 6420 மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு வாரியம் நேரடியாக நிதியுதவி அளித்து அவர்கள் சுயமாகத் தொழில் செய்து வாழ்க்கையில் முன்னேற வழிகாட்டியுள்ளது.

தச்சுக் கருமாரத் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 8964 நபர்களுக்கு வாரியம் கடன், மான்யமாக நிதியுதவியும் அவர்களுக்குத் தொழில் கருவிகளும் வாங்கி வழங்கியுள்ளது. வாரிய நிர்வாகத்தில் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் 38 தொழில் கூட்டுறவுச் சங்கங்களும், 4 அலகுகளும் இயங்கி வருகின்றன.

இத்தொழிலில் 15920 கைவினைஞர்கள் வேலை வாய்ப்புப் பெறுகின்றார்கள். 1977-78-ஆம் ஆண்டில் இத்தொழிலின் உற்பத்தி ரூ. 54 இலட்சமாக இருந்தது. 1985-86ல் ரூ. 793 இலட்சமாக உயர்ந்துள்ளது.



பல தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு உகந்த தொழில் கைமுறைக் காகிதத் தொழிலாகும். வாரியத்தில் 11 அலகுகளும்,5 கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. 1977-78ஆம் ஆண்டில் ரூ. 13 இலட்சமாக இருந்த உற்பத்தி, 1985-86ல் ரூ. 37½ இலட்சமாக உயர்ந்துள்ளது. சுமார் 1,500 நபர்கள் இதன் மூலம் நிரந்தரமான வேலைவாய்ப்புப் பெறுகிறார்கள்.

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய சாதனைகள் ஆண்டு வாரியாக முன்னேற்ற விவரம்

| ஆண்டு | வேலைவாய்ப்புப் பெறுவோர் | உற்பத்தி ரூ. இலட்சத்தில் | விற்பனை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1977-78 | 333132 | 4433.12 | 4627.17 |
| 1978-79 | 357691 | 4654.78 | 4919.43 |
| 1979-80 | 382590 | 5037.16 | 5260.49 |
| 1980-81 | 410561 | 5580.15 | 5663.38 |
| 1981-82 | 442065 | 6305.57 | 6636.36 |
| 1982-83 | 482860 | 7251.30 | 8054.60 |
| 1983-84 | 527195 | 8454.72 | 10079.21 |
| 1984-85 | 582265 | 10096.[illegible] | 10580.00 |
| 1985-86 | 717750 | 12116.[illegible] | 13160.45 |



DIPR/12149/603/86/ELEGANT



# பாசனத் திட்டங்களும் மேம்பாட்டுப் பணிகளும்

**1977**-ஆம் ஆண்டிலிருந்து 1986 வரையான ஒன்பது ஆண்டுகளில் பொதுப்பணித் துறையின் நீர்ப்பாசனப் பிரிவின் கீழ் பல பாசனத் திட்டங்களும், மேம்பாட்டுப் பணிகளும் செயலாக்கப்பட்டுள்ளன.

இவற்றில் திருநெல்வேலி மாவட்டத்தில் குண்டாறு, கருப்பாநதி நீர்த்தேக்கத் திட்டங்களும், மதுரை மாவட்டத்தில் பி. டி. ராஜன் கால்வாய்த் திட்டமும், மருதாநதி, வரதமாநதி, பெரியாறு வைகை நீர்த்தேக்கத் திட்டங்களும், அண்ணா மாவட்டத்தில் பாலாறு-பொருந்தலாறு நீர்த்தேக்கத் திட்டமும், காமராஜ் மாவட்டத்தில் குள்ளூர் சந்தை, வேம்பக்கோட்டை நீர்த்தேக்கத் திட்டங்களும், திருச்சி மாவட்டத்தில் காவிரி மேலணைத் திட்டமும், உப்பாறு நீர்த்தேக்கத் திட்டமும், தென்னார்க்காடு மாவட்டத்தில் திருக்கோவிலூர் அணையினைத் திருத்தியமைக்கும் திட்டமும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் வரட்டுப் பள்ளம், குண்டேரிப் பள்ளம் நீர்த்தேக்கத் திட்டங்களும், வட்ட மலைக்கரை நீர் ஓடை நீர்த்தேக்கக்கால்வாயை நீட்டிக்கும் திட்டமும், கோவை மாவட்டத்தில், பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் கீழ் கீழ்நீரார் அணையும், பரம்பிக்குளம்-ஆழியாறு ஆயக்கட்டு விரிவாக்கத் திட்டம் கட்டம் (1) மற்றும் (2)ம், தர்மபுரி மாவட்டத்தில் சின்னாறு, பாம்பாறு, கேளவாரப்பள்ளி, தும்பலகள்ளி, வாணியாறு, ஈச்சம்பாடி மற்றும் சூளகிரிச் சின்னாறு நீர்த்தேக்கத் திட்டங்களும் அடங்கும்.

இவை நீங்கலாக, வைகை வடிநிலத்தில் இருந்து வரும் வெள்ளப் பெருக்கை, கிருதமால், குண்டாறு நீர்த்தேக்கங்களுக்குத் திருப்பும் திட்டமும், சென்னை மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களில் ஒட்டேநல்லா வடிகால் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரி இவற்றிற்கான மேம்பாட்டுப் பணிகளும் மேற்குறிப்பிட்ட காலத்தில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட பட்டியலில் 1977 ஆம் ஆண்டிற்கு முன்னரே தொடங்கப்பட்டு முடிக்கப்பட்ட பணிகளும், அடங்கியுள்ளன. எனினும், பெரும்பாலான திட்டங்கள் இந்த ஒன்பது ஆண்டுக் காலத்தில் தொடங்கப் பட்டவையாகும்.

மேற்கண்டவை தவிர திருச்சி மாவட்டத்தில் சித்தமலலி நீர்த்தேக்கத திட்டமும் அண்ணா மாவட்டத்தில் குடகனாறு நீர்த்தேக்கத்தை மீள அமைக்கும் பணியும், குதிரையாறு நீர்த்தேக்கத் திட்டமும், சேலம் மாவட்டத்தில் ஆனைமடுவு, கரியக்கோவில் நீர்த்தேக்கத் திட்டங்களும், காமராஜர் மாவட்டத்தில், கோல்வாரப்பட்டி, ஆணைக்குட்டம், நீர்த்தேக்கத் திட்டங்களும் பெரியார் மாவட்டத்தில்நொய்யல், பெரும்பள்ளம்,நொய்யல் ஓரத்துப் பாளையம் நீர்த்தேக்கத் திட்டங்களும், பரம்பிக்குளம்-ஆழியாறு ஆயக்கட்டு விரிவாக்கத் திட்டத்தின் மூன்றாவது கட்டமும், தர்மபுரி மாவட்டத்தில் கேசரிகுலிகள்ளா, தொப்பையாறு, நாகாவதி நீர்த்தேக்கத்திட்டங்களும், மதுரை மாவட்டத்தில் பெரியார் அணையை வலுவூட்



டும் பணியும், சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டமும், கன்னியாகுமரி மாவட்டத்தில் அனந்தனார் கால்வாய் மேம்பாட்டுப் பணிகளும், திருப்பரப்பு அணையின் வலதுகரைக் கால்வாயை நீட்டிக்கும் திட்டமும், தற்போது செயலாக்கத்தில் உள்ளன.

இவற்றில் நாகாவதி, கேசரி குலிகள்ளா, தொப்பையாறு நீர்த்தேக்கங்களும், அனந்தனாறு மேம்பாட்டுப் பணிகள், திருப்பரப்பு அணைக்கட்டு வலதுகரைக்கால்வாய் நீட்டிப்பு வேலைகள், நொய்யல் நீர்த்தேக்கம் ஆகிய திட்டங்களும் 1986-87-ல் முழுமையாக நிறைவு பெறும்.

சென்னை நகரின் குடிநீர்த் தட்டுப்பாட்டை முழுமையாக நீக்கும் பொருட்டு, ஆந்திர மாநிலத்தின் ஒத்துழைப்புடன் கிருஷ்ணா நதியில் இருந்து சென்னைக்கு நீர் கொண்டு வரும் திட்டம் தற்போது செயலாக்கத்தில் உள்ள திட்டங்களில் குறிப்பிடத்தக்க திட்டமாகும்.

இவற்றுடன் கீழ்க்கண்ட திட்டங்கள் நடப்பாண்டில் ஒப்பளிக்கப்பட்டு தொடங்கப்படும் நிலையில் உள்ளன.

மதுராந்தகம் ஏரி வலதுபுறக்கால்வாய் நீட்டிப்புத் திட்டம்.

கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம்.

சின்னவேடம்பட்டி ஏரியமைப்புத் திட்டம்.

சண்முகாநதி நீர்த்தேக்கத் திட்டம்.

இவற்றுடன் தற்போது பயன் அளித்து வருகின்ற நீர்த்தேக்கங்களின் பயன் திறமைமிகுவிக்கும் பொருட்டு, கால்வாய் மேம்பாட்டுத்திட்டங்கள் தொடர்ந்து ஆய்வில் உள்ளன.

## மலைவாழ் மக்கள் நல் வாழ்வு பெற்றிட...

தமிழ்நாட்டில் மலைவாழ் மக்கள், பழங்குடியினருக்கான ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் சேலம், வட ஆர்க்காடு, தென்ஆர்க்காடு, தர்மபுரி, திருச்சி ஆகிய 5 மாவட்டங்களில் 9 இடங்களில் செயல்படுத்தப்படுகின்றன.

அந்த மலைவாழ் மக்களுக்குச் சாலை, பாசனம், கல்வி, பட்டுப்பூச்சி வளர்த்தல், விவசாயம், காடு வளர்ப்பு, கூட்டுறவு போன்ற வசதிகள் பலவகைகளில் செய்து கொடுக்கப்படுகின்றன. இதற்காக 1980-81ல் 3.5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. கடந்த 1985-86-ல் 6½ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் 9.5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டில் ஒதுக்கப்பட்ட 6½ கோடி ரூபாய் முழுவதும் செலவாகிவிட்டது. அதன் மூலம் அந்த மலைவாழ் மக்களின் வாங்கும் சக்தி உயர்ந்து இருக்கிறது. குடும்பங்கள் நன்மை அடைந்திருக்கின்றன.

அந்த மலைவாழ் மக்கள் தாங்கள் சேகரிக்கும் தேன், அரக்கு, ஜாதிக்காய் போன்றவற்றைக் கூட்டுறவுச் சங்கத்தில் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக அத்தியாவசியப் பொருள்களான மண்ணெண்ணெய், உப்பு, அரிசி போன்றவற்றை வாங்கிக் கொண்டு போகிறார்கள். அப்படி சராசரி குடும்பத்துக்கு 800 ரூபாய்க்கு ஓர் ஆண்டுக்கு வாங்குகிறார்கள். அப்படி வாங்கி வளம் பெறும் அளவை, 1,500 ரூபாய்க்கு உயர்த்தும்படி மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அவர்கள் கொடுக்கும் பட்டுப் பூச்சிக் கூடுகளுக்கும் உடனே பணம் கொடுக்கும்படியும் அவர் கூறியுள்ளார்.

இந்த மலைவாழ் மக்களுக்காக 400 ஏக்கர் நிலத்தில் பாசன வசதி செய்யப்பட்டுள்ளது. இதை நல்ல முறையில் பயன்படுத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது

## நலிந்த பிரிவினருக்கு 50 ஆயிரம் வீடுகள்!



நலிந்த பிரிவினருக்கு 30 இலட்சம் வீடுகள் கட்டும் அரசின் திட்டத்தின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் இந்த ஆண்டு 50 ஆயிரம் வீடுகளைக் கட்டும். இதற்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழக (ஹட்கோ) உதவியும் பயன்படுத்திக்கொள்ளப்படும். தமிழக அரசின் வீட்டுவசதித் திட்டங்களுக்காக இந்த ஆண்டு ரூ. 45 கோடி நிதி உதவி அளிக்க 'ஹட்கோ' முன் வந்துள்ளது.

சென்னை நகரிலுள்ள சுமார் 1200 குடிசைப் பகுதிகளில் 575 ஏற்கெனவே மேம்பாடு செய்யப்பட்டுள்ளன.





# ஊரக வளர்ச்சியில் பெருகிடும் வசதிகள்

கிராமங்களின் பொருளாதாரம் மற்றும் சமூக நிலையை உயர்த்தி, கிராம மக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி, வாழ்க்கையில் அவர்களுக்கு ஒரு பிடிப்பை ஏற்படுத்தும் பெரும் பணியை அரசின் ஊரக வளர்ச்சித்துறை நிறைவேற்றி வருகிறது.

கடந்த ஒன்பதாண்டுகளில் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள கிராம வளர்ச்சிப் பணிகள் தனிச் சிறப்புடையவை, ஈடு இணையற்றவை.

1975-76-ஆம் ஆண்டு ஒன்றியங்களுக்கு அளிக்கப்பட்ட சராசரித் தொகை ரூ. 29.74 இலட்சம். ஆனால் இதுவே 1980-81ஆம் ஆண்டு ஏறத்தாழ மும்மடங்காகவும், பின்பு பல மடங்காகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசு பதவி ஏற்ற பின்பு, முதற்கண் நிறைவேற்றிய 'தன்னிறைவுத் திட்டம்' முதலில் குறிப்பிட வேண்டிய ஒன்று. வேறு எந்த மாநிலமும் நிறைவேற்றி இராத இந்தத் திட்டத்தை தமிழ்நாடு அரசுதான் முதன் முறையாக மிக விரிவாகவும் விரைவாகவும் நிறைவேற்றியது.

குடிநீர் வசதி, சாலைகள் வசதி, கல்வி வசதி மருத்துவ வசதி போன்ற அடிப்படை வசதிகள் கிராமங்களில் ஏற்படுத்திக் கொடுக்காமல் வளர்ச்சித் திட்டங்களின் முழுப்பயனை எய்த முடியாது என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தன்னிறைவுத் திட்டம் உருவாக்கப்பட்டது. மூன்றாண்டுக் கால அளவிற்குள் அதாவது 1980-81ஆம் ஆண்டு தொடங்கி 1982-83ஆம் ஆண்டு இறுதிக்குள் தமிழகத்தின் எல்லாக் கிராமப்பகுதிகளுக்கும் ஏறத்தாழ 215 கோடி ரூபாய் செலவில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

கிராமங்கள் பெற்ற இந்த அடிப்படை வசதிகள் தன்னிறைவை பேரூராட்சிகள் பெற வேண்டும் என்ற நோக்கத்தில், 1982-83-ஆம் ஆண்டு முதல் பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்தியது இந்த அரசு. மொத்தத்தில் ஊராட்சிப் பகுதிகளில் மட்டுமன்றி பேரூராட்சிப் பகுதிகளிலும் அனைத்து அடிப்படை வசதிகளும் மிகக்குறுகிய கால அளவிற்குள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுவிட்டன.

கிராமத்தின் மொத்த தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த பின்பு, கிராமங்களின் அங்கமாக அமைந்துள்ள கிராம மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் திட்டங்களை முனைப்புடன் செயல் படுத்தியது இன்றைய அரசு.

கிராமப்புற மக்களுக்குத் தக்க வேலைவாய்ப்பையும் நல்ல ஊதியத்தையும் அளிக்கும் பல்வேறு திட்டங்களுள் முதலில் குறிப்பிடத்தக்கது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

வறுமையில் வாடும் தனிக் குடும்பங்களைக் குறிப்பாக ஆண்டு வருவாய் ரூ. 3,500க்கு மேற்படாத குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து அக்குடும்பங்களுக்கு கடன் மற்றும் மானியம் வழங்கி, தக்க தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து தங்களைத்தாங்களே உயர்த்திக் கொள்ள வழிவகை செய்கிறது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

1980-ஆம் ஆண்டு முதல் நிறைவேற்றப்பட்டு வரும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஒப்பில்லா முறையில் சாதனைகளை ஏற்படுத்தி உள்ளது.

மேலும் இந்தத் திட்டத்தின் கீழ் உதவி அளிக்கப்பட்ட குடும்பங்களுள் ஆண்டுதோறும் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டு, எண்ணற்ற ஆதிதிராவிடர் குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளன.

ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் மட்டும் மொத்தம் 4,62,828 ஆதிதிராவிடர் குடும்பங்கள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயன் பெற்றுள்ளனர். மொத்தமாக ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்கு மட்டும் நிதி இலக்கு ரூ.13,188 இலட்சங்கள். சாதனை இலக்கு 11,30,100 குடும்பங்கள்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழான மற்றொரு அங்கம், ''கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம்'' இத்திட்டம் கிராமப்புற இளைஞர்களும், இளம் பெண்களும் பல்வேறு பணிகளில் பயிற்சி பெற்று தங்களுக்குத் தாங்களே வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் இது வரை 1,66,102 இளைஞர்களும் இளம் பெண்களும் தக்க தொழிற் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்களில் எண்ணற்றவர்கள் சுயமாகத் தொழில் செய்து ஒருவருடைய உதவியும் இன்றி, வளமான வாழ்வை அமைத்துக் கொண்டுள்ளனர்.

அடுத்து, குறிப்பிடத்தக்கது தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம். இந்தத் திட்டம் 1980 அக்டோபர் மாதம் முதல் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1981 மார்ச் திங்கள் இறுதி வரை இத்திட்டத்திற்கான செலவு முழுவதையும் மத்திய அரசு ஏற்றுக் கொண்டது. ஆனால் தற்போது இத்திட்டத்திற்கான செலவு முழுவதையும் மத்திய அரசும் மாநில அரசும் ஆளுக்குப் பாதியாக ஏற்றுக் கொள்கின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு ஏற்படுத்திட்ட சாதனைகள் பாராட்டத்தக்கவை. இத்திட்டத்தின் கீழ் ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் மட்டும் 2,000 பள்ளிக் கட்டடங்களும், 5,500 சமுதாய நலக் கூடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்காக மொத்தம் 9,358 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 37,460 எக்டேர் நிலப்பரப்பில் சமூகக் காடுகள் வளர்க்கப்பட்டன. 63,639 கிலோ மீட்டர் நீளத்திற்கு கிராமப்புறச் சாலைகள் அமைக்கப்பட்டன அல்லது மேம்படுத்தப்பட்டன.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தை மொத்தமாக எடுத்துக் கொண்டால், ரூ.156.17 கோடி செலவில் மொத்தம் 1,87,248 வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 17.98 கோடி மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டு, 1,63,193 மெட்ரிக் டன் அரிசி தொழிலாளர்களுக்குக் கூலியாக வழங்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் மட்டும் இத்திட்டத்திற்கென ரூ. 41.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 297 லட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பல்வேறு பணிகளுள் குறிப்பிடத்தக்கது சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம். ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் மட்டும் 37,460 எக்டேர் நிலப்பரப்பில் சமூகக் காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன. மேலும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 31.3.1985 முடிய மொத்தம் 9,358 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1985-86-ஆம் ஆண்டு மொத்தம் 9,899 வீடுகள் கட்டிக் கொடுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை மிஞ்சி 1986 மார்ச் திங்கள் இறுதிக்குள் மொத்தம் 10,229





வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்ற செய்தி ஆதிதிராவிட மற்றும் மலைவாழ் மக்களின் நல்வாழ்வில் இந்த அரசு கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்தும்.

அடுத்துக் குறிப்பிடத்தக்க திட்டம் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம். கிராமப்புற மக்களுக்குத் தக்க வேலைவாய்ப்பை அளிக்கும் அதே வேளையில் சமுதாயச் சொத்துகளையும் உருவாக்கி அவர்களுக்கு அளிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு இத்திட்டம் 1980-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர் குடும்பங்களில் குறைந்த பட்சம் ஒருவர்க்கு ஓராண்டில் 100 நாட்களாவது வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டது இத்திட்டம். மத்திய அரசின் முழு உதவியோடு நிறைவேற்றப்பட்டு வரும் இத்திட்டத்திற்கென 1984-85 ஆம் ஆண்டிற்காக ரூ. 51.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 23,453 வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இணைப்புச் சாலைகள் அமைத்து சிறு பாசன ஆதாரங்களை வளப்படுத்துதல், சமூகக் காடுகள் வளர்த்தல், சமுதாயத்தில் நலிவுற்ற ஆதிதிராவிடர் பழங்குடியினர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தல் போன்ற பல்வகையான வேலைகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு திறம்பட நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கென 1985-86-ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 34.57 கோடி.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கும் திட்டம் முன்னுரிமை வழங்கப்பட்டது. தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு முடிந்த பின்பும்கூட குடிநீர் வழங்கு திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மட்டும் ரூ.89.84 கோடி செலவில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் ரூ. 24.79 கோடி ரூபாய் செலவில் வறட்சி நிவாரணப் பணியின் கீழ் 21,992 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டன. ஆறாவது ஐந்தாண்டு திட்ட இறுதிக்குள் ரூ.108.19 கோடி செலவில் குடிநீர்ப் பிரச்சனை கொண்ட 7,226 கிராமங்களுக்கு (பகுதி அளவில்) நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.



அதாவது குடிநீர் பிரச்சனை கொண்ட 7,226 கிராமங்களுக்குக் குறைந்த அளவு ஒரு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 1985-86-ஆம் ஆண்டில் 250 முதல் 300 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு குடி இருப்புக்கும் ஒரு கை பிறைப்பான் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர 1985-86-ஆம் ஆண்டில் அடிப்படைத் தேவைத் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்குவதற்கென ரூ. 24 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மக்களுக்குக் குடிநீர் கிடைப்பதில் எந்தத் தடையும் இருக்கக் கூடாது எனவும், இறைப்பான்கள் மற்றும் குடிநீர் வழங்கும் அமைப்புகள் எப்போதும் நல்ல நிலையில் இயங்கி வர வேண்டும் எனவும் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அண்மையில் நடத்திய மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாட்டின் போது ஆணை இட்டுள்ளார்கள்.

கை இறைப்பான்கள் மற்றும் நீர் இறைக்கும் எந்திரங்கள் பழுதுபட்டால் அவை ஒரு வார காலத்திற்குள் பழுது பார்க்கப்பட்டு குடிநீர் தங்கு தடையின்றிக் கிடைக்கச் செய்யப்பட வேண்டும் எனவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை இட்டதோடு, 1986-87-ஆம் ஆண்டில், குடிநீர் வழங்கும் அமைப்புகளைப் பராமரிப்பதற்கென ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யவும் ஆணை இட்டார்கள். இந்த அமைப்புகளைப் பராமரிப்பதற்கென முதலில் ஒதுக்கப்பட்டிருந்த தொகை ரூ.20 இலட்சம் மட்டுமே. இதை பத்து மடங்காக உயர்த்தி ரூ. 2 கோடியைக் குடிநீர் அமைப்புப் பராமரிப்புக்கென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி உள்ளார்.

எல்லாத் திட்ட நிறைவேற்றத்திலும் சாதனை ஏற்படுத்தியது போலவே, சாண எரி வாயு அமைக்கும் திட்டத்திலும் தமிழ்நாடு அரசு மாபெரும் சாதனை ஏற்படுத்தி உள்ளது. 1982-83 1983-84, 1984-85 ஆகிய மூன்றாண்டுகளில் 18,000 சாண எரி வாயுக் கலன்கள் நிறுவ இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 29,000 கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.



# கைத்தறியில் கலை நயம்

கைத்தறித் தொழிலானது மிகவும் தொன்மை வாய்ந்தது.வேலை வாய்ப்பு அளிப்பதில் வேளாண்மைக்கு அடுத்தபடியான இடத்தை வகிப்பது. இத்தொழிலானது பஞ்சாலைகள், விசைத்தறிகள் ஆகியவற்றுடன் போட்டி போட்டுக் கொண்டு இயங்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளது. இம்மூன்று பிரிவுகள்(அதாவது கைத்தறி, பஞ்சாலை மற்றும் விசைத்தறி) ஒன்றுடன் ஒன்று இணைந்து ஒன்றின் தேவையைப் பிறிதொன்று பூர்த்தி செய்யும் வகையில் செயல்படுவதற்கும், தேவையற்ற போட்டியைத் தவிர்ப்பதற்கும் இம்மூன்று துறைகளின் நடவடிக்கைகளையும் வகைப்படுத்த அரசு முயற்சி எடுத்து வருகிறது.

நம்நாட்டில் மட்டும் அல்லாது வெளிநாட்டிலும்கூட கையினால் தயாரிக்கப்பட்ட பருத்தி, நூலிழை, பட்டு ஆகியவற்றாலான கைத்தறித் தயாரிப்புப் பொருட்களின் தேவை உயர்ந்துள்ளது.

நம் மாநிலத்தில் குறிப்பாக ஊரகப் பகுதிகளில் இத்தொழில் நன்கு வளர்ச்சியடைந்து உள்ளது. கைத்தறித் தொழில் இயங்குவதற்குத் தேவையான அளவு இயல்பான ஆதரவையும், விற்பனை வசதியினையும் கொண்டுள்ளது.

அடிப்படை வசதி மூலப் பொருட்கள் வழங்கல் உற்பத்தி, விற்பனை ஆகிய வசதிகள் அடங்கிய ஒருங்கிணைந்த அணுகுமுறை ஒன்றைப் புதிய இருபது அம்சத் திட்டம் கைத்தறித் துறையின் வளர்ச்சிக்கு வகை செய்கிறது.

இம்மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குதல் உறுதியான வருமானம் கிடைக்கச் செய்தல் ஆகிய இரண்டு முக்கிய நோக்கங்களுக்குக் கீழ்க்காணும் கைத்தறி வளர்ச்சித் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகின்றது.

1. நெசவாளர்கள், தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பங்கேற்பதற்காக அவர்களுக்கு நிதியுதவி வழங்குவதன் மூலம் கூட்டுறவு அமைப்பின் கீழ் கைத்தறிகளை அதிக அளவுக்குக் கொண்டு வருதல்.



2. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை வளர்க்க அவற்றின் விற்பனை வசதியுடன் நிதியுதவி வழங்குதல்.

3. இம்மாநிலத்திலுள்ள தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தலைமை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றிற்குப் போதிய விற்பனை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அவற்றின் பங்கு மூலதனத்தை வலுப்படுத்துதல்.

4. கூட்டுறவுத் துறையின் கீழ் வருகின்ற கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயவிலைகளில் நூலிழை (கையினால் தயாரிக்கப்பட்ட நூலிழை உட்பட) பட்டு, நார்ப்பட்டு, பாலியஸ்டர் ஜரிகை, சாயம், இரசாயனப் பொருட்கள் போன்ற இன்றியமையா இடு பொருட்களை வழங்குதல்.

5. உற்பத்தி மேம்பாடு தொழில் நுட்ப உத்திகளைத் தரம் உயர்த்துவதன் மூலம் அவற்றைப் பலமுனைப் படுத்துதல், வடிவமைப்பு நிலையங்கள் ஏற்படுத்துதல், நவீன முறையில் நெசவாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகிய திட்டங்களைச் செயற்படுத்தல்.

6. பருத்தி நூலிழைகளாலான துணிகளையும், செயற்கை நூலிழைகளாலான துணிகளையும் பதப்படுத்த வசதிகள் செய்து கொடுத்தல்.

7. நம்நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொடுப்பதற்காகக் கைத்தறித் துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைப் பெருக்குதல்.

8. "கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு காப்புறுதித் திட்டம்" "நெசவாளர்கள் வீட்டுவசதித் திட்டம்' போன்ற நலத் திட்டங்களைச் செயற்படுத்துல்.

இம்மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களின் நன்மைக்கான திட்டங்கள் வருமாறு:

நம் மாநிலத்திலுள்ள 5.56 இலட்சம் கைத்தறிகளில் 31.3.86 வரையில் 3.82



இலட்சம் கைத்தறிகள் 1606 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களாக அமைக்கப்பட்டுள்ளன. 1977-78ஆம் ஆண்டில் 2.07 இலட்சம் தறிகள் 946 சங்கங்களில் இயங்கி வந்தன-அதாவது 660 சங்கங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. 1.75 இலட்சம் தறிகள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

வங்கி வட்டி விதத்தைக் காட்டிலும் 2½ சதவீதம் குறைவாகக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சலுகை அடிப் படையில் நிதியுதவி வழங்கும் தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கித் திட்டம் "நபார்டு" தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு, கைத்தறிகளின் கோட்டையாக விளங்குகிறது.ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ.170 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் நம்மாநிலத்தில் உற்பத்தியாகின்றன.

தமிழ்நாட்டில் "மிசேரியர்" கூட்டுறவு நூற்பாலையும் சேர்த்து மொத்தம் 18 கூட்டுறவு நூற்பாலைகள் 4.50 இலட்சம் கதிர்களைக் கொண்டு தோராயமாக 16.5 இலட்சம் கிலோ பருத்தி நூல்களை உற்பத்தி செய்கின்றன. இதில் மாத உற்பத்தி 10,000 முதல் 12,000 (பேல்கள்) வரை "சிட்டா நூல்" மீதமுள்ள "கோன்" வகை நூல்களும் ஆகும். மேற்கண்ட உற்பத்தியில் 4,500 முதல் 6,000 (பேல்கள்) வரை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பிரதி மாதமும் தேவைப்படுகிறது. கூட்டுறவின் கீழ் உள்ள நெசவாளர்களுக்குத் தேவையான நூல்களைவிட அதிக அளவிற்கு கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்து வருக்கின்றன.

கோ-ஆப்டெக்ஸ் என்ற புகழ்பெற்ற நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைச் சங்கம், அதனுடன் இணைக்கப்பட்டுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை வசதியை அளித்து வருகிறது. தற்போது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் துணிகளில் 50% கொள்முதல் செய்து வருகிறது. 1977-78ல் 18.31 கோடி அளவிற்குக் கொள்முதல் செய்து ரூ. 23.01 கோடி அளவிற்கு விற்பனை செய்துள்ளது.

கோ-ஆப்டெக்ஸ் 1985-86ஆம் ஆண்டில் மட்டும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து ரூ. 75 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்துள்ளது. 1986-87ஆம் ஆண்டில் ரூ. 85 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்யத் திட்டமிட்டுள்ளது. 1985-86-ஆம் ஆண்டிற்கான கைத்தறித் துணி விற்பனை ரூ.102 கோடியாகும். 1986-87ஆம் ஆண்டு கோ-ஆப்டெக்ஸ் கைத்தறித் துணி விற்பனை ரூ.110 கோடியாக இருக்கும். கோ-ஆப்டெக்ஸ்570 கிளை விற்பனை நிலையங்களை நிர்வகித்து வருகிறது.

கைத்தறித் துணி விற்பனையைப் பெருக்க அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு திட்டங்களுள் ஒன்று கைத்தறித் துணி விற்பனைகள் மீது அளிக்கப்படும் தள்ளுபடிச் சலுகையாகும். 1977-78ல் ரூ. 2.50 கோடியாக இருந்த தள்ளுபடி மானிய செலவினம் தற்சமயம் ரூ. 16.00 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது.

கூட்டுறவுத் துறையின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் ,"சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்" என்றொரு நலத் திட்டம் தற்போது அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நெசவாளர்கள் அனைவரும் ஆயுட் காப்பீட்டுக் கழகத்தின் கீழ் இணைக்கப்படுகிறார்கள்.

இதுவரை 1,12,000 கைத்தறி நெசவாளர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளார்கள். இத்திட்டத்தின்படி. ஒவ்வொரு நெசவாளரும் தான் சம்பாதிக்கும் ஒவ்வொரு ரூபாயிலும் 6 பைசாவைச் சந்தாத் தொகையாகக் கொடுக்கின்றார். அந்த ஒரு ரூபாய்க்கு அரசு 3 பைசா கொடுக்கிறது.

இத்திட்டத்தின் கீழ், சேர்ந்துள்ள நெசவாளர் இறந்துவிட்டால், அவரது நியமனதாரர் அவருடைய சேமிப்புக் கணக்கில் உள்ள தொகையுடன் அரசு பங்குத் தொகை, வட்டி மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் இருந்து ரூ. 3,000 பெறுவர். இதைத் தவிர தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) தனது பொன்விழா ஆண்டினை ஒட்டி இத்திட்டத்தின் கீழ் இறந்து போகும் நெசவாளர் உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ.2,000 தனது பங்காக அளிக்க முன் வந்துள்ளது. எனவே இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் தொகை 1.7.1984 முதல் அதிகபட்சம் ரூ. 5,000 ஆக உயர்ந்திருக்கிறது.

தனியார் துறை நெசவாளர்களுக்கும் கூட்டுறவுத் துறை நெசவாளர்களுக்கும் காப்பீட்டு ஓய்வு நலத் திட்டத்தினை நீட்டித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்படும் நெசவாளர் மாதம் ஒன்றுக்கு ரூ.10 வீதம் அவரது 58வது வயது முடியும்வரை செலுத்த வேண்டும். அதன் பிறகு அவருக்கு அவரால் செலுத்தப்பட்ட சந்தாத் தொகையும் அதன் மீது குவிந்த வட்டியும் திருப்பித்தரப்படும்.

பதினெட்டு வயதில் இத்திட்டத்தில் சேரும் ஒரு நெசவாளிக்கு 40 ஆண்டு

கழித்து அவரது 58வது வயதில் ரூ.33500 கிடைக்கிறது. நெசவாளி 58வது வயது அடையும் முன்பே இறக்க நேரிட்டால் ஆயுள் காப்பீட்டுக் கழகம் காப்பீட்டுத் தொகையான ரூ. 5000 த்துடன் இறக்கும் வரை அவர் செலுத்தியுள்ள சந்தாத் தொகை மற்றும் அதன் மீதான வட்டியும் சேர்த்து அளிக்கப்படுகிறது.

தனியார் துறையில் உள்ள நெசவாளர்களுக்கு விபத்து நிவாரணத்திட்டம் ஒன்றினை அரசு செயல்படுத்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வேலையில் ஈடுபட்டுள்ளபோது நெசவாளர் ஒருவர் விபத்து காரணமாக இறக்க நேரிட்டாலோ, அல்லது உடல் உறுப்பினை இழக்க நேரிட்டாலோ அவருக்கு அதிகபட்சமாக ரூ. 10,000 நட்ட ஈடாக அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு உறுப்பினர் சந்தாத்தொகை எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

இத்திட்டத்தைக் கூட்டுறவுத் துறை நெசவாளர்களுக்கும் விரிவாக்குவது தொடர்பாகப் பிரேரணை அரசின் பரிசீலனையில் உள்ளது. மேற்படி இரு திட்டங்களும் தலைமைச் சங்கத்தின் பொன் விழாவையொட்டி நெசவாளர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டங்களாகும். இத்திட்டங்கள் தமிழ்நாட்டில் மட்டும்தான் முதல் முதலாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி கூட்டுறவுத் துறையிலுள்ள நெசவாளர்களுக்கு ஒரு காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நெசவாளர் உறுப்பினரும் மேற்படி யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனிக்கு ஆண்டுச் சந்தாவாக ரூ.14.40 செலுத்த வேண்டும். இத்தொகையில் உறுப்பினர் சார்ந்துள்ள சங்கம் ரூ.9.60ம் உறுப்பினர் ரூ.4.80ம் செலுத்த வேண்டும்.

எதிர்பாராத வகையில் பெருவெள்ளம், நெருப்பு, கொள்ளை, களவு போன்ற இயற்கையின் இடர்ப்பாடுகளால் நெசவாளர்களுக்குத் தொழில் தொடர்பாக ஏற்படும் நட்டத்தை ஈடுகட்டும் வகையில் மேற்படி இன்சூரன்ஸ் கம்பெனியானது ரூ. 2,000 வரையில் பலவிதமான இழப்புகளுக்கும் நட்ட ஈடு அளிக்க முன்வந்துள்ளது.

1962ஆம் ஆண்டுடன் நிறுத்தி வைக்கப்பட்ட நெசவாளர் வீட்டுவசதித் திட்டம் மீண்டும் 1979-80ஆம் ஆண்டில் இருந்து அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி தற்போது ஒரு வீடு கட்ட ஆகும் செலவு ரூ.12,000 ஆகும். இதில் மாநில அரசு ரூ. 1,000ஐ மானியமாகவும், ஹட்கோ நிறுவனம் (வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம்) ரூ. 9,700ம் மீதமுள்ள ரூ. 1,300-ஐ பயனடையும் நெசவாளரும் செலுத்த வேண்டும். கூட்டுறவுத் துறையில் உள்ள நெசவாளர் பயனடையும் வகையில் 3,219 வீடுகள் கட்ட எடுத்துக்கொள்ளப்பட்டதில், டிசம்பர் 1985 வரையில் 3,027 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 192 வீடுகள் பல கட்டுமான நிலையில் உள்ளன.


## சிட்கோ அளிக்கும் அரண்—
## சிறுதொழில் தயாரிப்புகளுக்கு விற்பனை உதவி

**சிறுதொழில் தயாரிப்புகளை விற்பனை செய்ய சிட்கோ பெரிதும் உதவுகிறது. சிறுதொழில்களின் சார்பில் மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகள்/நிறுவனங்களின் கொள்முதல் துறைகளுடன் தொடர்பு கொண்டு சிறுதொழில் தயாரிப்புகளின் விற்பனைக்கு உதவுகிறது, சிட்கோ. DGS & D-க்கு பல்வேறு பொருட்களையும் ஆர்டரின் பேரில் வழங்கும் வாய்ப்பு ஏராளமாக உள்ளது.**


அறை ஏர்கண்டிஷனர்


காதொலி கருவி


கால்குலேட்டர்


அம்மோனியா பிரிண்டிங் & டெவலப்பிங் மெஷின்


டிராக்டர் டிரெயிலர்

தயவு செய்து தொடர்பு கொள்ளவும் :
விற்பனை பிரிவு
**தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்**
(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
5, கிரீம்ஸ் சாலை, சென்னை-600 006.
தொலைபேசி : 472171, 475004
தந்தி : TANSIDCO டெலக்ஸ் : 041-7581

DIPR/88 (R)




# வேளாண்மை:
## ஒளிமயமான ஒன்பதாண்டுகள்

'சுழன்றும்ஏர்ப்பின்னது உலகம்' என்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். மற்றத் தொழில்களுக்கெல்லாம் முன்னதாக விளங்கும் வேளாண்மைத் தொழில், முதன்மையானதாக நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்கிறது. தமிழகத்தில் முக்கால் பங்கு மக்கட்தொகையினர், உழவினையும், அதனைச் சார்ந்த பிற தொழில்களையுமே நம்பி வாழ்கின்றனர். உழவு செழித்தால் நாட்டில் இல்லாமை, பேதமை, அறியாமை, கல்லாமை ஆகியவை ஒழிந்து அனைவரும் நல்வாழ்வு வாழ முடியும்.

நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், பருத்தி, மற்றும் கரும்புப் பயிர்களின் உற்பத்தியை உயர்த்தப் பல திட்டங்கள் வேளாண்மைத் துறையின் மூலம் செயலாக்கப்படுகின்றன.

அரிசி உற்பத்தி 1976-77-ல் 42.15 லட்சம் டன்களாக இருந்தது. 1985-86-ஆம் ஆண்டில் 56.00 லட்சம் டன்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோல் அரிசி உற்பத்தித் திறன் எக்டேருக்கு 1846 கிலோவாக இருந்தது, எக்டருக்கு 2507 கிலோவாக உயர்த்தப்பட்டுள்ளது.

உயர் விளைச்சல் தரவல்லபூச்சி நோய் தாக்குதலைத் தாங்கும் தன்மையுள்ள 10 புதிய இரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, உழவர்களிடையே பிரபலமாயின.

நெல் விளையும் அனைத்துப் பருவங்களிலும் நிலங்களிலும் குறைந்தது எக்டேருக்கு 5 டன் நெல் உற்பத்தி செய்யும் திட்டம் துவக்கப்பட்டு சுமார் 50 சதம் பரப்பில் வெற்றியடைந்துள்ளது. தொடர்ந்து இத்திட்டம் தீவிரப் படுத்தப்பட்டு வருகிறது.

நீர் பராமரிப்பு முறைகளையும் மற்ற தொழில் நுட்ப உத்திகளையும் கடைப்பிடிக்க மும்மணித்திட்டம் என்ற நிருபணத்தை சுமார் 200 இடங்களில் அமைத்து உற்பத்தியைப் பெருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நில வளத்தைப் பெருக்கவும் குறைந்த செலவில் அதிக விளைச்சலைப் பெறவும் உயிரியல் உரங்கலான நீலப் பச்சைப்பாசி மற்றும் அசோலா உரங்கள் சுமார் 9 இலட்சம் எக்டாரில் இடப்பட்டன.

காவிரி ஆற்றுப் படுகை உழவர்களின் உற்பத்தி முயற்சியை ஊக்குவிக்க சுமார் 30 கோடி ரூபாய் மான்யம் வழங்கப்பட்டது. உயர் விளைச்சல் "தரவல்ல சான்றிதழ் பெற்ற நெல்விதை



களை ஆண்டுதோறும் 8,000 டன்கள் என்ற அளவிலிருந்து 16200 டன்கள் என்ற அளவிற்கு விநியோகம் உயர்த்தப்பட்டுள்ளது.

நெல் குருத்துப் புழுவைக் கட்டுப்படுத்த, ஆண்டுதோறும் சுமார் 45 லட்சம் ரூபாய் விதம் கடந்த ஒன்பது ஆண்டுகளில் சுமார் 405 லட்சம் செலவழித்து 3.60 லட்சம் எக்டரில் பரந்த அளவில் மருந்து தெளிக்கப்பட்டது.

நெல்லில் புகையானை ஒழிக்க ஆண்டுக்கு 25 லட்சம் ரூபாய் விதம் 225 லட்சம் ரூபாய் செலவில் பரந்த அளவில் மருந்து தெளிக்கப்பட்டது.

நெல்லில் தோன்றும் துங்ரோ நோயைப் பரப்பும் பச்சைத் தத்துப் பூச்சியைக் கட்டுப்படுத்த 60 லட்சம் ரூபாய் மான்யமாக வழங்கப்பட்டது.

வயல் எலிகளைக் கட்டுப்படுத்த 8 லட்சம் ரூபாய் செலவில் எலிகொல்லி மருந்துகள் மான்யமாக வழங்கப்பட்டன.

இச்சீரிய திட்டங்களைச் சிறப்புடன் செயல்படுத்தியதன் விளைவாக உணவுப் பற்றாக்குறையுடன் இருந்த தமிழகம் இன்று தன்னிறைவு அடைவதோடல்லாமல் பிற மாநிலங்களுக்கும் வழங்கும் அளவிற்கு உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் நெல்லிற்கு அடுத்தபடியாக சிறுதானியங்கள் 18 லட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு, சுமார் 16 லட்சம் டன் விளைச்சல் கிடைக்கிறது. இவற்றில் சுமார் 85 சதம் மானாவாரியாகப் பயிராகிறது.



வறட்சி தாங்கும் குறைந்த வயதும் உயர்விளைச்சல் தரவல்லதுமான 10 புதிய இரகங்கள் பிரபலப்படுத்தப்பட்டுள்ளன.

முன்னேறிய தொழில் நுட்ப உத்திகளையும், உயர்விளைச்சல் இரகங்களையும் கையாண்டு எக்டர் சிறுதானிய உற்பத்தித் திறன் 986 கிலோவாக உயர்த்தப்பட்டுள்ளது.

மானாவாரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழகமெங்கும் 316 ஆயிரம் ஏக்கர் பெருவிளக்கப் பண்ணைகள் அமைத்து முன்னேறிய தொழில்நுட்ப முறைகளைக் கடைப்பிடித்து சிறுதானிய உற்பத்திக்கு வழிவகை செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 4 இலட்சம் எக்டரில் மானாவாரிச் சாகுபடி முறைகள் கடைப்பிடிக்கப்பட்டன.

மானாவாரிச் சாகுபடியில் உர உபயோகத்தினை அதிகப்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வகை செய்யப்பட்டது.

இயற்கையில் உள்ள தழைச் சத்தினைக் கிரகித்துப் பயிருக்கு அளிக்கவல்லவிதையுடன் கலக்கும் அசோஸ்பிரில்லம் நுண்ணுயிர்ப் பொட்டலங்கள் ஆண்டுதோறும் 2 இலட்சம் வழங்கப்படுகின்றன.

**பயறு வகைகள்**

பயறுவகைகளில் உற்பத்தியைப் பெருக்க தனிப்பயிராக, கலப்புப் பயிராக, ஊடு பயிராக மற்றும் நெல் தரிசுகளில் விளைவிக்கப்படுகிறது.

1976-77-ம் ஆண்டில் 4.71 லட்சம் எக்டராக இருந்த பயறு வகைகள் பரப்பளவு 9.67 லட்சம் எக்டராக உயர்த்தப்பட்டுள்ளது.

1976-77ஆம் ஆண்டில் 1.27 லட்சம் டன்களாக இருந்த பயறு உற்பத்தி 3.67 லட்சம் டன்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோல் பயறுவகைகள் உற்பத்தித்திறன் எக்டருக்கு 270 கிலோவாக இருந்தது எக்டருக்கு 386 கிலோவாக உயர்த்தப்பட்டுள்ளது.

விதை விநியோகம் 800 டன்களிலிருந்து 2700 டன்களாக உயர்த்தப்பட்டுள்ளது.



உயிரியல் உரமான விதையுடன்



கலக்கும் நுண்ணுயிர்க் கலவைப் பொட்டலங்கள் ஆண்டுதோறும் 6 லட்சம் விநியோகம் செய்யப்படுகின்றன.

1976-77ல் 2.98 லட்சம் டன்களாக இருந்த உர உபயோகம், 1985-86ல் 668 லட்சம் டன்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோல்12,000ஆக இருந்த உர விற்பனை நிலையங்கள், 16,500 நிலையங்களாக உயர்த்தப்பட்டு, கிராம விவசாயிகளுக்கு உரம் எளிதில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் சுமார் 8கோடி ரூபாய் மதிப்புள்ள பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் வாங்கி 772 வேளாண் கிடங்குகள் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றன.

வாரந்தோறும் மாநிலம் முழுவதும் 7,116 இடங்களில் பூச்சிநோய் புலனாய்வுசெய்துவிவசாயிகளுக்கு முன்னறிவிப்புச் செய்து பயிர்ப் பாதுகாப்பு மேற்கொள்ள ஆவன செய்யப்படுகிறது.

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் தொழில் நுட்ப முறைகளை விவசாயிகளுக்குச் செயல் விளக்கம் செய்து காட்ட 40 எக்டர் கொண்ட 158 தளைகள் அமைக்கப்பட்டுள்ளன.

களைக்கொல்லி மருந்து உபயோகம் விவசாயிகளிடையே பரவிட மான்ய விலையில் களைக்கொல்லிகள் வழங்க ஆண்டுதோறும் சுமார் ரூ.10 லட்சம் செலவிடப்படுகிறது.

இலை மூலம் உரச்சத்திலை அளித்து உற்பத்தியைப் பெருக்க ஆண்டுதோறும் ஒரு லட்சம் எக்டரில் டிஏபி தெளிக்கப்படுகிறது.

1976-77ஆம் ஆண்டில் கரும்புப் பயிரான 1.54 லட்சம் எக்டர் பரப்பு 1985-86ல் 2.05 லட்சம் எக்டருக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோல் 16.36 லட்சம் டன்னாக இருந்த வெல்ல உற்பத்தி 22.75 லட்சம் டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது.

எக்டருக்கு 107 டன் கரும்பு மகசூல் விளைவித்து இந்தியாவில் முதலிடத்தைத் தமிழகம் வகிக்கிறது.

3.47 லட்சம் பொதிகளாக இருந்த பஞ்சு உற்பத்தி, சென்ற ஆண்டு சுமார் 6 லட்சம் பொதிகளாக உயர்ந்துள்ளது.

அதேபோல் உற்பத்தித் திறனில் எக்டருக்கு 246 கிலோவாக இருந்தது 358 கிலோவாக உயர்ந்துள்ளது.

**சிறப்புத் திட்டங்கள்**

சாகுபடிக்குத் தகுதியற்ற நிலங்களை பயன்படுத்தும் நோக்குடன் சிறு-குறு விவசாயிகளுக்கு இலவசமாக ரூ.242 லட்சம் மதிப்புள்ள 10 கோடி பழ, எரிபொருள், மற்றும் தீவனக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

சிறு-குறு விவசாயிகளிடையே பயறு வகைகளின் புதிய இரகங்களைப் பரவிடச் செய்ய ரூ.208 லட்சம் மதிப்புள்ள 4.61 லட்சம் மினிகிட்டுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல் நெல் மற்றும் சிறுதானியங்களின் புதிய இரகங்களை எல்லா உழவர்களிடையே பரவிடச் செய்ய ரூ. 88 லட்சம் மதிப்புள்ள 7.60 லட்சம் மினிகிட்டுக்களை இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.



5 அணுகுமுறை என்ற புதிய திட்டம் இவ்வாண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் நெல் விளைச்சலில் எக்டருக்குச் சுமார் 570 கிலோ அதிக மகசூல் பெற வாய்ப்புண்டு.

விவசாயிகளுக்கு முன்னேறிய தொழில் நுட்பங்கள் காலத்தே கிடைத்திட உலகவங்கி நிதிஉதவியுடன் பயிற்சி வழித்தொடர்பு திட்டம் ரூ. 36 கோடி செலவில் 1981-82 ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது.

1000 பண்ணைக் குடும்பங்களுக்கு ஒரு விரிவாக்கப் பணியாளர் நியமித்து எல்லா தொழில் நுட்பங்களும் செயல்விளக்கம் மூலம் செய்து காட்டப்படும்.

நாளும் பெருகிவரும் சமையல் எண்ணெய் தேவையைப் பூர்த்தி செய்யவும், எண்ணெய் வித்து பயிரிடும் உழவர்கள் நல்விளைச்சல் கண்டிடவும் எண்ணெய் வித்துக்கெனப் புதிய துறை ஒன்று 1979-80 ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

இத்துறையில் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல் படுத்தியதால் 1976-77ஆம் ஆண்டில் 9.50 லட்சம் டன்கள் உற்பத்தியிலிருந்து 1985-86ஆம் ஆண்டில் 15.51 லட்சம் டன்கள் உற்பத்தி காணப்பட்டது.

விதை விநியோகம் 2,500 டன்னிலிருந்து 11,620டன் அளவிற்கு உயர்த்தப்பட்டது.

12 லட்சம் தென்னங்கன்றுகள் விநியோகத்திலிருந்து,25 லட்சம் நெட்டை, குட்டை மற்றும் குட்டை நெட்டை தென்னங்கன்றுகள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

தமிழக அரசு 1979-80-ஆம் ஆண்டு முதல் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்களுக்கெனத் தனியே தோட்டக்கலைத்துறை என்ற புதிய துறையைத் தோற்றுவித்தது. இதன்மூலம் உழவர் வாழ்வு மலரப்பல்வேறு நலத்திட்டங்களைச் சிறப்புடன் செயலாக்கி வருகிறது.

1977-76-ஆம் ஆண்டு 9 மாதிரி பழம் மற்றும் நாற்றுப்பண்ணைகளே நடைபெற்று வந்தன. இன்று இது விரிவடைந்து 54 பண்ணைகளாகப் பெருகியுள்ளன.

உழவர்களிடையே 8 லட்சம் பழக்கன்றுகளே விநியோகம் செய்திருந்த நிலைமாறி இன்று 30 லட்சம் கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அதேபோன்று 16 டன்களாக இருந்த காய்கறி விதை விநியோகம் இன்று 80 டன் அளவை எட்டியுள்ளது.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புக்காகக் கட்டப்பட்ட கசிவு நீர்க்குட்டைகள் 1,719. செலவு ரூ.1,435 இலட்சம்.

உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்பு 89 லட்சம் மனித நாட்கள்.

இது தவிர 1986-87ஆம் ஆண்டு தஞ்சையில் உள்ள காட்டுத் தோட்டத்தில் ஓர் புதிய வேளாண்மைக் கல்லூரி ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இப்பல்கலைக் கழகத்தின் கீழ் இரண்டு கால்நடை கல்லூரிகள் சென்னையிலும் நாமக்கல்லிலும் நடைபெற்று வருகின்றன. இது தவிர தூத்துக்குடியில் மீன்வளக் கல்லூரி ஒன்றும் செயல்படுகிறது.



# நாளும் தழைக்கும் கூட்டுறவு



தமிழகத்தில் தழைத்து வளர்ந்து வரும் கூட்டுறவு இயக்கம், கிராமப் பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினரின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் அரிய பங்கை ஆற்றி வருகின்றது. மாநிலத்தில் உள்ள பல்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களின் பல்வகைப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளில், அவர்களுக்குப் பணி செய்து வருகின்றன.

தமிழகத்தில் உள்ள விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சுமார் மூன்று கிராமங்களுக்கு ஒரு சங்கம் என்ற வீதத்தில் 4,655 விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும், வட்டம் மற்றும் வட்டார அளவிலுமான 183 பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகளும் இயங்கி வருகின்றன.

ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில் கூடுதலாகப் பங்கு தொகை செலுத்துவதற்கு ஏதுவாக, 1985-86ஆம் ஆண்டில் நபர் ஒருவருக்கு 250 ரூபாய் வீதம் 1000 பேருக்கு 2.50 இலட்சம் ரூபாய்க்கு வட்டியில்லாக் கடன்களை அரசு வழங்கியுள்ளது. 1986-87ஆம் ஆண்டில், இவ்வகை உறுப்பினர்கள் 1250 பேர், இத்திட்டத்தின்கீழ் உதவி பெறுவர்.

விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், பயிர் செலவிற்காகவும், ஆடு, பால்மாடு வளர்த்தல் மற்றும் கோழி வளர்த்தல் போன்ற துணைத் தொழில்களை ஏற்று நடத்துவதற்காகவும், விவசாயிகளுக்குக் கடன்களை வழங்கி வருகின்றன.



நடப்பு ஆண்டில் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்களை 18 கோடி ரூபாய் அளவிற்கும், நீண்டகாலக் கடன்களை 20 கோடி ரூபாய் அளவிற்கும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தேவையான குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்களை வழங்குவதற்கு ஏதுவாகும் பொருட்டு கடன் கூட்டுறவுச் சங்கங்கள், தமது உள் நிதிகளைப் பெருக்குவதில் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருகின்றன. 1976-77 ஆம் ஆண்டு இறுதியில் 156.89 கோடி ரூபாய்க்கு நிலுவையாக இருந்த, அவற்றின் மொத்த வைப்புத்தொகை ஆண்டுக்கு ஆண்டு கணிசமாகப் பெருகி 1985-86-ஆம் ஆண்டின் இறுதியில் 668.80 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்து கடந்த ஒன்பது ஆண்டுகளில் 326 சதவீதப் பெருக்கத்தை அடைந்துள்ளன.

விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்கும் நோக்கத்துடன் 1979-80ஆம் ஆண்டிலிருந்து வட்டி தள்ளுபடி செய்த அல்லது திருப்பித்தந்த வகையில் 42 கோடி ரூபாயும், சிறுவிவசாயிகளிடம் நிலுவை நின்ற மத்திய காலக் கடனாக மாற்றியமைக்கப்பட்ட அல்லது தவணை நீட்டித்துத் தரப்பட்ட கடன்களைத் தள்ளுபடி செய்த வகையில் 57 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 99 கோடி ரூபாய் அளவிற்கு அரசு நிதி உதவி அளித்துள்ளது.

1984-ஆம் ஆண்டு ஜூன் 30-ஆம் தேதியில் தவணை தவறி நின்ற கடன் பாக்கிகள் முழுவதையும் 1985ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதிக்குள் திருப்பிச் செலுத்திய பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகளின் கடன்தாரர்களுக்குத் தவணை தவறிய தொகை மீதான வட்டியையும் அபராத வட்டியையும் அரசு தள்ளுபடி செய்தது. இச்சலுகையை 93,364 கடன்தாரர்கள் 3.71 கோடி ரூபாய் அளவிற்குப் பெற்றுள்ளனர்.

விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் குறித்த காலத்திற்குள் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு தமது குறுகிய காலக் கடன்களையும், மத்திய காலக் கடன் தவணைகளையும் உரிய காலத்தில் திருப்பிச் செலுத்துகிற சிறு விவசாயிகளுக்கு 2 சதவீத வட்டி தள்ளுபடியை அரசு 1981-82ஆம் ஆண்டிலிருந்து அளித்து வருகிறது.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் 88.32 கோடி ரூபாய் அளவிற்கு குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றியமைக்கப்பட்டன. இந்தக் காலத்தில், 33.14 கோடி ரூபாய் அளவிற்கு மத்திய காலக் கடன்கள் மொத்தம் ஐந்து ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும்வகையில் மாற்றியமைக்கப்பட்டன. நீண்ட காலக் கடன்களைப் பொறுத்த வரையில் இயற்கைப் பேரிடர்களினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவள வங்கிக் கடன்தாரர்களின் கடன் தவணைகள் 45.90 கோடி ரூபாய் அளவிற்கு மாற்றியமைக்கப்பட்டன அல்லது தள்ளிப் போடப்பட்டன.

1981-82ஆம் ஆண்டில், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 2.95 இலட்சம் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு நெல், பருப்பு வகைகள், தானிய வகைகள், குளிர் பருத்தி, நிலக்கடலை மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்கள் ஆகியவைகள் பயிரிடுவதற்குச் சலுகை விலையில் உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகள் செலவாக, 503.94 இலட்சம் ரூபாய் அரசு மானியம், ஒரு வறட்சி நிவாரண நடவடிக்கையாக வழங்கப்பட்டது.

அதுபோலவே 1983-84ஆம் ஆண்டில் 3.33 இலட்சம் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்கு சலுகைச் விலையில் உர விநியோகம் செய்ததற்காக 360 இலட்சம் ரூபாய் அளவிற்கு அரசு மானியம் வழங்கியுள்ளது.

அரசு நிர்ணயித்த அதிகபட்ச அளவிற்குட்பட்டும், பரிந்துரை செய்யப்பட்ட உர அளவிற்குட்பட்டும், சிறுவிவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகளின் விலையில் 25 சதவீதம் வரையிலும் மிகச் சிறு விவசாயிகளுக்கு 331/3 சதவீதம் வரையிலும். அரசு மானியம் வழங்கப்பட்டது.

1983 டிசம்பர் மற்றும் 1984 பிப்ரவரி, மார்ச் ஆகிய காலத்தில் மாநிலத்தில் பெரும்பான்மையான பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்குச் சலுகை விலையில் உரங்களை விநியோகம் செய்ததில் 36.39 இலட்சம் ரூபாய்க்கு அரசு மானியம் வழங்கியுள்ளது.

முன்னோடி பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் 14 பருவங்களுக்கு 89,785 ஏக்கர் அளவிற்கு 47,459 விவசாயிகளுக்கு 747.57 இலட்சம் ரூபாய் அளவிற்குப் பயிர் ஈட்டுறுதி செய்யப்பட்டது.

விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் தமிழ்நாட்டில் நெற்பயிர் மற்றும் நிலக்கடலைப் பயிர்களுக்கு 1-4-85 முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. பொது ஆயுள் காப்பீட்டுக் கழகமும், தமிழ்நாடு பயிர் ஈட்டுறுதித் திட்ட நிதியும், பிரிமியம் மற்றும் ஈட்டுறுதித் தொகையினை 2:1 என்ற விகிதத்தில் பங்கேற்கின்றன. மத்திய அரசும் மாநில அரசும் மேற்கண்ட நிதிக்குத் தலா ஒரு கோடி ரூபாயை ஆரம்பக் கட்ட நிதி உதவியாக ஒப்பளிப்பு, வழங்கியுள்ளது.

விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் இரசாயன உரங்களை உறுப்பினர்களுக்குப் பயிர்க்கடன்களின் ஒரு பகுதிக்கும், உறுப்பினர்களுக்கும் உறுப்பினர் அல்லாதவர்களுக்கும் ரொக்கத்திற்கும் தொடர்ந்து விநியோகித்து வருகின்றன. 1985-86ஆம் ஆண்டில் 73.38 கோடி ரூபாய் மதிப்புள்ள உரங்கள் விநியோகம் செய்யப்பட்டன. 1986-87ஆம் ஆண்டில் 82 கோடி ரூபாய் மதிப்புள்ள உரங்களை விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த 1985 சம்பா பருவத்தில் 4.57 கோடி ரூபாய் மதிப்புடைய உரங்களையும் 1985 குறுவைப் பருவத்தில் 11.46 கோடி ரூபாய் மதிப்புடைய உரங்களையும், 1986 சம்பா பருவத்தில் (7-6-86 வரை) 8.54 கோடி ரூபாய் மதிப்புடைய உரங்களையும் விநியோகம் செய்துள்ளன.

மாநிலத்தில் 114 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இருக்கின்றன. அவை தம் உறுப்பினர்களின் விளை பொருட்களை விற்பனை செய்வதன் மூலமாக, அவர்கள் நியாயமான வருமானம் பெறத்தொடர்ந்து உதவி செய்து வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயவிளை பொருட்களை விற்பனை செய்ததில் 1980-81ஆம் ஆண்டிலிருந்து அடைந்துள்ள முன்னேற்ற விவரங்கள் பின்வருமாறு:

| ஆண்டு | விற்பனை செய்யப்பட்ட விவசாய விளைபொருட்களின் மதிப்பு (கோடி ரூபாயில்) |
|---|---|
| 1980-81 | 86.87 |
| 1981-82 | 89.98 |



| | |
|---|---|
| 1982-83 | 121.30 |
| 1983-84 | 99.76 |
| 1984-85 | 117.16 |
| 1985-86 | 149.29 |

காய்கறி பயிரிடுவோர்க்கு நியாயமான ஊதியம் கிடைப்பதுடன் நுகர்வோர்க்குத் தரமான காய்கறிகள் நியாயமான விலைகளில் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடனும் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் .செயற்படுத்தப்பட்டு வரும் சூழ்நிலையிலும் காய்கறி பயிரிடுவார்க்கெனத் தனியே, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் குறைந்த பட்சம் ஒரு சங்கமென மாநிலத்தில் 544 காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவு. விற்பனைச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1985-86ஆம் ஆண்டில் 5.78 கோடி ரூபாய் அளவிற்கு இச்சங்கங்கள் மூலம் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலமெங்கும், கிராமப்புறங்களிலும் ' நகர்ப்புறங்களிலும் நகையீட்டின் பேரில், குடும்பச் செலவிற்காகக் கடன்களை வழங்கி வருகின்றன. சவரன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் வீதம், நபர் ஒருவருக்கு 6,000 ரூபாய்க்கு மேற்படாமல் இக்கடன்கள் வழங்கப்படுகின்றன. இவ்வகைக் கடன்களின் பேரில் வசூலிக்கப்படும் வட்டி ஆண்டொன்றுக்கு 16 சதவீதமாகும். 1980-81 ஆம் ஆண்டிலிருந்து, இக்கடன்களை வழங்கியதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது.

1985-86 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நகையீட்டுக் கடன்கள் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு அதிகமாக வழங்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 1981-82ஆம் ஆண்டிலிருந்து நலிந்த பிரிவினருக்குச் சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களை மேற்கொள்ள சலுகை வட்டியில், அதாவது ஆண்டொன்றுக்கு 4 சதவீத வட்டிக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன்களை வழங்கி வருகின்றன. சாதாரண வட்டிக்கும், இச்சலுகை வட்டிக்கும் உள்ள வித்தியாசத்தை அரசு கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானியமாக வழங்கி வருகிறது. ஆண்டு வருவாய் கிராமப்புறங்களில் 2500 ரூபாய்க்கும், ஓரளவு நகர்ப்புறங்களிலும், நகரங்களிலும் 3,000 ரூபாய்க்கும் அதிகமாகாமல் உள்ளவர்களுக்கு



நபர் ஜாமீன் பேரில் 7,000 ரூபாய் வரையில் இவ்வகைக் கடன்கள் வழங்கப்படுகின்றன. 1981-82 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்ட இவ்வகைக் கடன்களின் விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன:

| ஆண்டு | வழங்கப்பட்ட கடன் (இலட்சம் ரூபாயில்) |
|---|---|
| 1981-82 | 85.74 |
| 1982-83 | 108.00 |
| 1983-84 | 130.57 |
| 1984-85 | 135.37 |
| 1985-86 | 191.98 |

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செய்த சில்லறை விற்பனையின் மதிப்பு 1984-85ஆம் ஆண்டில் 285 கோடி ரூபாயில் இருந்து கணிசமாகப் பெருகி 1985-86ஆம் ஆண்டில் 605 கோடி ரூபாய்க்கு உயர்ந்துள்ளது.

இன்றியமையாப் பொருட்களை விற்பனை செய்ய ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் ஒரு நியாய விலைக்கடை துவக்கி நடத்த 1978ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் மாநிலத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கென ஒதுக்கப்பட்ட வருவாய் கிராமங்களில் 11,159 நியாய விலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டன.

தற்போது 12596 நியாய விலைக்கடைகள் ஊரகப் பகுதிகளில் நடத்தப்படுகின்றன. அவை ஊரகப் பகுதி மக்களுக்கு இன்றியமையாப் பொருட்கள் தாராளமாகக் கிடைப்பதை உறுதி செய்கின்றன.

மாநிலத்தில் 13 பெரும் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் 43694 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன. முதலாவது பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் அமைக்கப்பட்டது. 1984-85ஆம் ஆண்டு வரை இச்சங்கங்கள் பயிரிடுவதற்கும் இதர உற்பத்திக் காரியங்களுக்கும் ஆண்டொன்றுக்கு 4 சதவீத சலுகை வட்டியில் கடன்களையும் இதர சேவைகளையும் ஒரே இடத்தில் வழங்கி வந்தன.

சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்திக் கொள்ள உதவும் திட்டம் 1982-83ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் ஒவ்வொருவருக்கும் செலவில் 25 சதவீத அளவிற்கு 1125 ரூபாய்க்கு மேற்படாமல் அரசு மானியம் அளிக்கிறது. மீதி செலவை மத்திய கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதன் மூலம்கூட்டுறவுச் சங்கங்களால் ஏற்கப்படுகிறது. இவ்வுதவி உரிமம் பெற்ற சொந்தக்காரரே ஓட்டும் சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது. 1982-83-லிருந்து 1984-85வரை தென்சென்னை, வடசென்னை மற்றும் திண்டுக்கல் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களில் 217 பேர்களுக்கு அவர்களின் சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்திக் கொள்ள 2.15 இலட்சம் ரூபாய்க்கு அரசு மானியம் வழங்கப்பட்டது.

உலக உடல் ஊனமுற்றோர் ஆண்டாகிய 1981ஐக் கொண்டாடும் தருணத்தில், 1981-82 ஆம் ஆண்டில், மாநிலத்தில் ஐந்து உடல் ஊனமுற்றோர் நலக்கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது மாநிலத்தில் இவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆறு உள்ளன. சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள இரண்டு சங்கங்களுக்கு, 1985-86ஆம் ஆண்டில் அரசு நிதி உதவி அளித்துள்ளது. 1986-87-ஆம் ஆண்டில் மேலும் இரண்டு சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படும்.






தமிழக அரசு, மாநிலத்தில் உள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும், நகர்ப்புற, நகராட்சி, மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர்ப் பகுதியிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காகத் திட்டமிட்டுத் தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

கடந்த 1977-78 முதல் 1986-87 ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில் அரசு மேற் கொண்ட பலமுனை நடவடிக்கைகளின் பயனாக 100 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியினைப் பெற்று வருகிறார்கள்.

செயலாக்கப்படும் குறைந்த பட்சத் தேவைத்திட்டம், டேனிடா, யுனிசெப், ஐரோப்பிய பொருளாதாரக் குழுமம், போன்ற பன்னாட்டு அமைப்புகள் மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நிதியுதவியுடன் நிறைவேற்றப்பெறும் குடிநீர்த்திட்டங்கள், உலக வங்கி உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வரும் குடிநீர்த்திட்டங்கள், இவை அனைத்தையும் ஒருமுனைப்படுத்திப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மாநிலத்தில் அனைத்து மக்களுக்கும் முழுப் பயன் அளிக்கும் வகையில் ''மக்கள் நல்வாழ்வே மாநிலத்தில் பெருவாழ்வு'' என்ற இலட்சிய நோக்குடன் குடிநீர்த்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

தமிழகத்தில் முதன்முறையாக 1976-77ல் அனைத்துக் குடியிருப்புகளிலும் உள்ள நீர் ஆதாரம், நீரின் தன்மை, நீர்ப் பற்றாக்குறை பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மாநிலத்தில் உள்ள 18,167 குடியிருப்புகள் குடிநீர் வசதி பெறாத பிரச்சினைக் குடியிருப்புகளாக அறுதியிடப்பட்டு, அவைகளுக்குத் திட்டச் செயலாக்கத்தில் முன்னுரிமை கொடுக்கப்பட்டது. 1977-78ஆம் ஆண்டு 1140 குடியிருப்புகளில் ரூ. 7.15 கோடி செலவில் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1980-85) 3,465 பிரச்சினைக் குடியிருப்புகளுக்கு ரூ. 25.97 கோடி செலவில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. 31.3.1985-வுடன் முடிவு பெற்ற ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 11,614 பிரச்சினைக் குடியிருப்புகளுக்கும் மற்றும் புதிதாகத் தோன்றிய குடியிருப்புகளுக்கும் சேர்த்து மொத்தம் 16,5υ5 குடியிருப்புகளுக்கு ரூ. 198.υ3 கோடி செலவில் குடிநீர் வசதி செய்து தரப்பட்டது.

புதிதாகத் தோன்றிய 2,486 குடியிருப்புகளையும், ஏற்கனவே குடிநீர் வசதி பெற்றிருந்தும், நீர் ஆதாரங்கள் வறண்டுபோய் விட்டதால் பிரச்சினைக் குடி



ஊரகக் குடிநீர்த் திட்டம்

மத்திய அரசு நிதியுதவியுடன் விரைவு படுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டம், மாநில அரசின் நிதியிலிருந்து



யிருப்புகளாக மாறியுள்ள 12,340 குடியிருப்புகளையும் சேர்த்து நடப்பிலுள்ள 7வது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் 13,023 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதியளிக்கப்பட வேண்டியிருந்தது. அவற்றில் 10,900 குடியிருப்புகளில் குடிநீர்த்திட்டங்களை நிறைவேற்ற அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கான தமிழக அரசின் நிதி ரூ. 175 கோடி ஒதுக்கீட்டுடன், மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படும் மானியம் ரூ. 100- கோடியும் சேர்த்து மொத்தம் ரூ. 275 கோடி யாகவும் 4 அதிக சக்தியுள்ள ஆழ் துளைப்பான்களையும், 75,000 மீட்டர் அளவு நீளம் பெரும் குழாய்களையும் அளித்துள்ளது. இதுவரை 2,300 பழைய கைபிறைப்பான்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் 726 குடியிருப்புகளில் உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்கக் கூடிய அளவுக்குக் குடிநீரில் ஃபுளோரைட் கலந்து இதனால் 40 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர் களுக்கு வெகுதூரத்தில் இருந்து நல்ல நீர் கொண்டு வந்து வழங்க ஐரோப்பிய பொருளாதார குழுமத்தின் நிதியுதவியுடன் 15.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பெரும் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருகிறது.

கோவை, மதுரை, சேலம் இம்மூன்று நகரங்களிலும், 75 நடுத்தர நகரங்களிலும், 740 வழியோர ஊரகக் கிராமங்களிலும் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் 14 நகரங்களில் குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டங்கள்

## சுற்றுலா



இந்தியாவின் பேரெழில் பகுதி தமிழகமே என்று வருணிக்கிறது 'போடாரின்' இந்திய வழிகாட்டி என்னும் நூல். தமிழகத்தின் குன்றாத சுற்றுலா வளம் ஆண்டுதோறும் தமிழக அரசால் அதிகரிக்கப்பட்டு வருகிறது. 1984-ஆம் ஆண்டைக் காட்டிலும் 1985-ல் தமிழ்நாட்டில் சுற்றுப் பயணிகள் எண்ணிக்கை 30.4 சதவீதம் அதிகரித்

அளவிற்குத் திட்டக் காலத்தில் நிதி ஒதுக்கீட்டிற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

ஆக, 1977-78ஆம் ஆண்டில் 1,140 குடியிருப்புகளில் ரூ. 7.15 கோடி செலவில் சுமார் 3 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் குடிநீர்த்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. 1985-86-ல் முடிவுற்ற ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 92.8 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் 16,505 குடியிருப்புகளுக்கு ரூ. 198.03 கோடி செலவில் குடிநீர் வழங்கப்பட்டது.

யுனிசெப் மற்றும் டேனிடா நிறுவனங்களின் உதவியோடு ஊரகப்பகுதிகளில் கையிறைப்பான்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை யுனிசெப் நிறுவனம் 20 ஆழ்துளையிடும் கருவிகளையும் 46 ஊர்திகளையும், 6615 கையிறைப்பான்களையும் தந்துள்ளது. அத்துடன் நம் மாநிலத்தில் உள்ள பழைய கையிறைப்பான்களுக்குப் பதிலாகப் புதிய இந்திய மார்க்-2 கையிறைப்பான்கள் அமைக்க டேனிடா நிறுவனம் ரூ. 72 இலட்சம் நிதி





உலக வங்கியின் ரூ. 149.42 கோடி உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் வரும் கையிறைப் பான்களும், விசையிறைப்பான்களும் சிறந்த முறையில் பராமரிக்கப்படவேண்டிய முக்கியத்துவம் கருதி இதுவரை ரூ.20.70 லட்சம் அளவிலேயே இருந்த அரசு மானியம் ரூ. 375 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. பொதுமக்களுக்குத் தங்கு தடையின்றிக் குடிநீர் வழங்கப்பெற எந்த ஒரு கையிறைப்பானும் 7 நாள்களுக்கு மேல் பழுதடைந்த நிலையில் இருக்கக் கூடாது, என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். துருப்பிடித்து பழுதடைந்த நிலையில் உள்ளமேல்நிலைஇரும்பு (எஃகு) தொட்டிகளை மாற்றி அவற்றிற்குப் பதிலாக சிமெண்ட் தொட்டிகளை அமைக்க 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாகப் பருவ மழை பொய்த்ததன் காரணமாகத் தமிழ்நாடு முழுவதும் வறட்சி நிலை கடுமையாகியது. அப்போது ஏற்பட்ட குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க ரூ.43.95 கோடி செலவில் ஊரகப் பகுதிகளில் 22,230 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன.

1985-86ல் கோயம்புத்தூர், அண்ணா, சேலம், திருச்சி, மதுரை மற்றும் பெரியார் மாவட்டங்களில் மிகவும் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு நிலவிய பகுகளில் 571 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. தற்போது 11 மாவட்டங்களில் நிலவி வரும் கடும் வறட்சியினால் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க 3,000 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கவும் மற்றும் லாரிகள் மூலமாகத் தண்ணீர் விநியோகம் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



## சென்ற இதழில்....

உலகச் சுற்றுப்புறத் தூய்மைப் பாதுகாப்பு நாளையொட்டி 5.6.1986 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், தலைமைச் செயலக வளாகத்தில் மகிழ மரக் கன்றினை நட்டு வைத்த காட்சியைச் சென்ற இதழ் (16.6.86) அட்டை அலங்கரித்தது.



தமிழகத்தில் தற்போதுள்ள 652 பேரூராட்சிகள் 413 ஊரகப் பேரூராட்சிகள் என்றும், 219 நகரப் பேரூராட்சிகள் என்றும் வகைப் படுத்தப்பட்டு, ஊரகப் பேரூராட்சிகளில் முழு மானிய அளவில் குடிநீர்த் திட்டங்கள் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் இவற்றில் குடிநீர்த் திட்டங்கள் எதுவும் இல்லாத 277 ஊரகப் பேரூராட்சிகள் குடிநீர்த்திட்டங்கள் பெறும் வாய்ப்பினைப் பெற்றுள்ளன. அத்துடன் குடிநீர்த் திட்டங்களுக்கு என முன்பணமாகப் பேரூராட்சிகளிடமிருந்து பெறாமல் வடிவமைப்புப் பணிகளைக் குடிநீர் வாரியம் மேற்கொள்ள வேண்டும் எனவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் அமைக்கப்பட்ட பின் சென்னை நகரின் குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று அமைப்பின் அபிவிருத்திக்காகப் பல பணிகள் விரைவு படுத்தப்பட்டன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் இவ்வாரியம் குடிநீர் வழங்குவதற்காக ரூ. 1,543 இலட்சம் செலவிலும், கழிவு நீரகற்றுவதற்காக ரூ. 2,018 இலட்சம் செலவிலும் பணிகளைச் செயல்படுத்தியுள்ளது.

சென்னை நகரில் 1978-ல் குடிநீர் மற்றும் தொழிற்சாலைகளின் தேவைக்காக நாள் ஒன்றுக்கு மொத்தம் 268 மில்லியன் லிட்டர் அளவுக்கே நீர் வழங்கப்பட்டது. தற்போது நாள் ஒன்றுக்கு 298 மில்லியன் லிட்டர் அளவு குடிநீர் வழங்கப் படுகிறது.



## காடுகள்

தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சமுதாயக் காடு வளர்ப்புத்திட்டம் இந்தியாவிலேயே இவ்வகையில் முதல் திட்டமாகும். சுவீடன் நாட்டு அரசின் உதவியோடு 45 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வனத்துறைப் பொருட்கள் ஏற்றுமதியால் நாட்டிற்குப் பெரிய அந்நியச் செலாவணி கிடைக்கிறது. உலகச் சந்தையில் விற்கப்பட்ட நமது சந்தன எண்ணெயின் அளவு 1,000 கிலோ ஆகும். அதனால் கிடைத்த வருமானம் 18.25 லட்ச ரூபாய் ஆகும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23




# தமிழரசு





# வீரன் வாஞ்சி

இந்திய நாட்டின் விடுதலை நாடி
எழுந்தனர் இளைஞர் கோடி-அன்னார்
சிந்திய ரத்தம் நதியாய்க் கூடி
தேசத்தை மீட்டது ஓடி

இளைய வீரன் வாஞ்சி நாதன்
இணைத்தனன் தன்னைக் களத்தில்-வெள்ளையர்
தலையை வீழ்த்தி, தானும் வீழ்ந்தான்
தாயகம் காத்திடும் தொண்டில்

தேவியைத் துறந்து சேயை மறந்து
தேசப் போரினில் குதித்தான்-மேலாம்
ஆவியை ஈந்து தியாகம் புரிந்து
அனைவரின் நெஞ்சினில் நிலைத்தான்



செங்கோட்டையில் வாஞ்சிநாதன்
சிலைத் திறப்பு விழா (17.6.1986)

# பாபுவுக்குப் புகழஞ்சலி



ஈடு இணையற்ற தலைவராக இந்திய அரசியல் வானில் சுடர்விட்டுப் பிரகாசித்த ஜோதி அணைந்து விட்டது. எழுச்சி மிக்க இளைஞராக 78 வயதிலும் அரசியலில் அயராது பாடுபட்ட பாபு ஜெகஜீவன்ராம், 6-7-86 அன்று இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டு இந்திய நாடே அதிர்ச்சிக்குள்ளானது.

மூன்று நாள் துக்கம் கொண்டாட மத்திய அரசு உத்தரவிட்டது. நாடு முழுவதிலும் அரசு அலுவலகங்கள் ஒரு நாள் மூடப்பட்டன. தமிழக அரசு தனது அலுவலகங்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் ஒரு நாள் விடுமுறையளித்து, மறைந்த தலைவருக்குத் தனது மரியாதையைச் செலுத்தியது.

தேசியத் தலைவர்கள் பாபுவுக்குச் சூட்டிய புகழஞ்சலிகளில் சில:

**மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர்**

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில்சிங் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறி இருப்பதாவது:

''நாட்டுப் பணியில் நீண்ட காலம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். மிகச் சிறந்த ஜனநாயகவாதி, தேர்ந்த நிர்வாகி, 40 ஆண்டுகளாக மத்திய அரசில் பல்வேறு பொறுப்புகளை நிர்வகித்துப் பெயர் எடுத்தவர். அரசியல் வாழ்வில் பல ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தவர். எல்லோருக்கும் இனிய நண்பர்.

''தாழ்த்தப்பட்டவர்களுக்காகவும், ஏழைகளுக்காகவும் பாடுபட்டவரை நாம் இழந்து விட்டோம். பிற்படுத்தப்பட்ட, ஒதுக்கப்பட்ட சமுதாயத்தினருக்கு அவர் நம்பிக்கையின் சின்னமாக விளங்கினார். அவரது வாழ்க்கை இளைஞர்களுக்கு எழுச்சி தரும் ஊற்று ஆகும்.''

**மாண்புமிகு இந்தியப் பிரதமர்**

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் தமது செய்தியில் கூறி இருப்பதாவது:

''காந்தி, நேரு ஆகியோரின் அரசியலால் ஈர்க்கப்பட்ட ஜெகஜீவன்ராம் இந்தியாவை நவீனமயமாக்கப் பெரிதும் பாடுபட்டார். தேசியப் பற்றுமிக்க தலைமுறையின் தளபதி அவர். முன்னேற்றத்துக்கான போராட்டத்தில் முன்னணித் தலைவராக இருந்தவர். எந்த இலட்சியங்கள் அவரை ஈர்த்ததோ, எதற்காக அவர் போராடினாரோ, அவற்றை அடைய நாம் தொடர்ந்து போராட வேண்டும்.

''பாபுஜி என்று இலட்சக்கணக்கான மக்களால் அழைக்கப்பட்ட ஜெகஜீவன்ராம் இன்று இல்லை. ஆனால் அவரது பெயர் நமது விடுதலைப் போராட்டத்துடன் என்றும் இணைந்து நிற்கும்.''

**மேதகு தமிழக ஆளுநர்**

மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் கூறி இருப்பதாவது:

''ஜெகஜீவன்ராம் மரணம் ஈடு செய்ய முடியாத இழப்பு ஆகும். சுதந்திரப் போராட்ட வீரரான அவர், மதச்சார்பின்மைக் கொள்கை மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றின் பாதுகாவலராகவும் இருந்தார். பல்வேறு பொறுப்புகளில் இருந்து பணியாற்றியவர். ஏழை மக்களின் உரிமைக்காகப் பாடுபட்டவர்.''

**மாண்புமிகு தமிழக முதல்வர்**

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் கூறி இருப்பதாவது:

''ஜெகஜீவன்ராம் மரணச் செய்தி கேட்டு வருத்தம் அடைந்தேன். சுதந்திரப் போராட்ட வீரராகவும் சிறந்த நிர்வாகியாகவும் இருந்து அவர் இந்தியாவின் மறுமலர்ச்சியில் பெரும் பங்கு கொண்டார். அவர் நாட்டு விடுதலைக்காகப் போராடியது மட்டும் அல்லாமல், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் வாழ்நாள் முழுவதும் போராடினார்.

''தமிழ்நாட்டின் மீது அவர் தனி ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதும் அனைவரும் அறிந்ததே. அவருடன் என்னுடைய அலுவலக மற்றும் தனிப்பட்ட தொடர்புகளின் போது அவர் என்மீது காட்டிய அன்பையும், மதிப்பையும் நான் மறக்க முடியாது.

''அவரது மரணத்தால் இந்தியத்தாய் தனது தலைசிறந்த மகன்களில் ஒருவரை இழந்து விட்டாள். தமிழக அரசு சார்பாகவும், தமிழக மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.



# தன்னிகரற்ற தலைவர்

ஜி.கே.மூப்பனார்
பொதுச் செயலாளர், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி



புதிய தமிழகத்தின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பெருந்தலைவர் காமராஜரின் 84-வது பிறந்த நாளை இன்று இந்த நாடு கொண்டாடுகிறது. அவருடைய வரலாறு தமிழகத்தின் அரசியல் வரலாற்றுக்கு ஒரு தனிப் பாதை காட்டியது. பணம் படைத்தவர்கள், செல்வாக்கு மிகுந்தவர்கள், சாதிப் பெருமை பெற்றவர்கள் மட்டுமே அரசியலில் தலைமையேற்க முடியும், பதவிபெற முடியும் என்றிருந்த நிலையை மாற்றியமைத்தவர்.

எளிய தொண்டனாக, ஆர்வமுள்ள சுதந்தரப் போராட்ட வீரனாக காங்கிரஸ் இயக்கத்தில் இணைத்துக் கொண்ட அவர் தன்னுடைய சொந்தச் சேவையினால், சலியாத உழைப்பினால் தலைமை நோக்கி நடை போட்டவர். காங்கிரஸ் கட்சியின் மாநிலத்தலைமை அவரைத் தேடிவந்தது. மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பு எதிர்பாராத சூழ்நிலையில் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவருடைய 10 ஆண்டுக் கால ஆட்சி, தமிழகத்தின் பொற்காலம். அடித்தள மக்கள் சமுதாயத்தினுடைய அடித் தளத்தைத் தாங்கி நிற்கின்ற ஏழைகளும், நலிந்தவர்களும், பிற்படுத்தப்பட்டவர்களும், பின் தங்கியவர்களும், படிக்காதவர்களும், படிக்கும் துடிப்புப் பெற்றிருந்தவர்களும் காமராஜருடைய ஆட்சி, தங்கள் நலம் காக்கும் ஆட்சி எனக் கருதினர். மின்சாரம் கிராமங்களுக்குச் சென்றது. விவசாயத்தை வளர்த்தது. உணவு உற்பத்தியைப் பெருக்கியது. நாளுக்கொரு தொழிற்சாலை என மாநிலத்தினுடைய தொழில் துறை முன்னேற்றப்பாதையில் வேகமாக நடைபோட்டது. கல்விக் கூடங்களின் கதவுகள் அனைவருக்கும் திறந்துவிடப்பட்டன. இலவசக் கல்வி. சீருடை. எனப் பல திட்டங்கள் தமிழகத்தினுடைய கல்வித்தரத்தை உயர்த்தின

பண்டித நேருவின் வேண்டுகோள் காமராஜரை டெல்லிக்கு ஈர்த்தது. அகில இந்திய காங்கிரசின் தலைவராகப் பொறுப்பேற்றவர் நாட்டின் ஜனநாயகத்திற்கும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும், சோசலிச சமுதாய அமைப்புக்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். இந்தியாவிற்கு அன்னை இந்திராகாந்தியின் தலைமையை அடையாளம் காட்டியவர். தமிழகத்தின் தன்னிகரற்ற தலைவர் தேசத்தலைவராக உயர்ந்து நின்றார். நாட்டின் பொருளாதார வளர்ச்சியில், உணவு உற்பத்தியில் அவர் காட்டிய ஆர்வம் சிறப்புக்கு உரியது.

இந்திய ஜனநாயகம் இன்றைக்கு அவராலே வாழ்கிறது. பாரதத்தின் பிரதமரை மூன்று முறை தேர்ந்தெடுக்கின்ற பெரும் பொறுப்பினை ஏற்றவர் அவர். தமிழகத்தின் செயல்பாட்டுத் திறமைக்குப் பெருமை தேடித்தந்த பெருந்தலைவர் அவர். இன்று அவரை நாம் போற்றுகிறோம். அவர் வழிநடப்போம். நாட்டைக் காப்போம்.

## ஆற்றல்மிக்க தலைவர்

—பண்டித ஜவகர்லால் நேரு

'உண்மையான தலைவன் என்பதற்கு எடுத்துக்காட்டத் தக்கதோர் உதாரணம்; மக்கள் மத்தியில் உருவானதோர் தலைவன்; தான் ஏற்றுக் கொண்டுள்ள பொறுப்பை நிறைவேற்றத்தக்க ஆற்றல் கொண்ட தலைவன்; செயலில் தன்னை மறந்து ஈடுபடும் தலைவன் சிலையைத் திறக்கிறேன். உயிரோடு இருப்பவர்களுக்குச் சிலை அமைப்பதை நான் விரும்புவதில்லை. மறைந்தபின் மரியாதை செலுத்துவதே ஏற்றது என எண்ணுபவன் நான். ஆனால் காமராஜ் என் நண்பர் என்ற முறையிலும், அவர் மக்களிலிருந்து தோன்றிய மக்கள் தலைவர் என்ற முறையிலும், அவரது உருவச் சிலையைத் திறக்கச் சம்மதிக்கிறேன்''.

(காமராஜர் சிலைத் திறப்பு விழா 9-10-1961)



# தத்துவ மேதை காமராஜர்



—ந.சோமயாஜுலு

**1923** முதல் காமராஜர்அமரராகும் வரை நாங்கள் நல்ல நண்பர்கள். அரசியலில் ஒரே கொள்கையும், லட்சியமும் உடையவர்களாக இருந்தபோதிலும், சிலசில சமயங்களில் பேதம் கொள்வது சகஜம். எனினும் நண்பர்களாகவே வாழ்ந்தோம்.

ஒருவரிடத்தில் மற்றொருவர் நண்ணுவது நட்பாகும். இந்த நட்பு - மனநட்பு, உடல்நட்பு என்றும் இருவகையாக உளது. மன நட்பின இலக்கணம், விலகி நின்றாலும் குணாதிசயங்களைக் கண்டு பிரமித்தல், காணும் இடத்தில் மகிழ்ச்சியுடன் குலாவுதல், பிறர்குறை கூறின் அவர்களைத் தண்டித்தல், அவரது துன்பத்தைத் தனதெனக் கொள்ளல், மற்றும் நட்பின் இலக்கணத்தைக் கடைப்பிடித்தல் போன்றவையாகும்.

உடல் நட்பு-காணும் இடத்தில் நகைத்தல் காணா இடத்தில் ஓரம் பேசல், எள்ளிநகையாடுதல் மற்றும் பலவாகும். எங்கள் நட்பு மனநட்பாகும். நான ராஜாஜியின பரமபக்தன். காமராஜரின் நெருங்கிய நண்பன். ஸ்தாபனத் தேர்தல் வந்த சமயமெல்லாம், அவருக்கு எதிர்த்தே வாக்களித்தேன். காமராஜரை எதிர்த்து சி.பி. சுப்பையாவுக்கு வாக்களித்தேன். அதே போல் சா. கணேசனுக்கும் ஆதரவளித்தேன். சட்டசபை கட்சித் தேர்தல் வந்த சமயம் சி. சுப்ரமணியத்துக்கு வாக்களித்தேன். இதே போல் சுபாஷ்சந்திரபோசுக்கும் வாக்களித்தேன்.

இது என் கொள்கை.கொள்கை மாறுபாட்டால், நட்பு சிதைந்து விடாது. எனவே என் நட்பு மனநட்பாகும். கூடவே இருந்து கழுத்தறுப்பதைக் காட்டிலும், 'சின்ன சின்ன விஷயத்தில் நாம் மாறுபடுகிறோம்' என்று, ஒருவரை ஒருவர் தெரிந்து கலந்து கொள்வதில் நட்பின் வளர்ச்சி அதிகமாகும். இதைக் காமராஜர் நன்கு அறிந்திருந்ததனால் தான், நான் எப்பொழுது சென்றாலும், எனக்கு முதலில் பேட்டி கொடுத்து, முடிந்த பின்னர்தான் மற்றவர்களிடத்தில் பேசுவார். இது அனைவருக்கும் தெரிந்த விஷயமாகும்.

1940-41-ல் நாங்கள் இருவரும் வேலூர் சிறையில் பாதுகாப்புக் கைதிகளாக இருந்தோம். ஒரே அறையில் இருந்தோம். நான் சிறிது முரடன், சண்டைக்கோழி என்று எல்லோரும் என்னை அழைப்பார்கள். அண்ணாமலை சர்வகலாசாலையில் படித்த இளைஞர்கள் சர்வகலாசாலையில் நடத்திய போராட்டத்தில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

கம்யூனிஸக் கொள்கை உடையவர்கள், அவர்களைத் தங்கள் கொள்கைகளுக்காக வகுப்புப் பாடங்கள், தெளிவாக்குதல், விவாதித்தல் போன்றவைகளை நடத்தி வந்தார்கள். கம்யூனிசத்தைப் பற்றித் தெரிந்தவன் நான். புகழ்ச்சி இல்லை. மாணவர்கள் வேறு வழிக்குச் சென்று விட்டால் அவர்களது கதி என்ன? என்பதை நினைத்து, நெருங்கிய சகாவான சேலம் எஸ். ஆர். கிருஷ்ணன அவர்களை வகுப்பிற்கு அனுப்பி வைத்தேன். வகுப்பு முடிந்ததும், கிருஷ்ணன் விவரங்களைக் கூறினார். நெருடலான சில கேள்விகளை அவரை விட்டு அந்த வகுப்புகளில் கேட்கச் சொன்னேன். இதற்குக் காரணம் நான்தான் என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள். பாம்பின்கால் பாம்பறியும். ஒருநாள் வாதத்திற்கோ, குழப்பத்திற்கோ எனது அறைக்கு வந்தார்கள்.

இவர்களது நோக்கத்தை அறிந்த காமராஜர் அவர்களை எதிர்த்து, சண்டையிட்டு மீண்டும் என் பக்கம் வராதபடி எச்சரித்து கண்டித்து அனுப்பினார். மன நட்பின் இலக்கண ஆதர்ஷ புருஷர் காமராஜர்.

1952-53-ல் விருதுநகர் ராவ் சாகிப்ரத்னசாமி நாடார் வாசகசாலையின் ஆண்டு விழாவில் கலந்து கொண்டேன். கிருஷ்ணசாமிபாரதி, ஆதித்தன் மற்றும் பலரும் கலந்து கொண்டார்கள். கலவரம் மூண்டது. மற்றவர்கள் மேடையிலிருந்து கீழிறங்கி தங்களைப் பாதுகாத்துக் கொண்டார்கள். நான் மேடையிலேயே இருந்தேன். ஒரு கம்பு என் மீது பறந்து வந்தது. சிலம்பாட்டம் தெரிந்தவனாதலால் கம்பு இல்லாதபோது கையால் தடுத்தேன். வந்த வேகத்தில் என் கையில் அடிபட்டு, இடது புருவத்திற்கு மேல், செவிக்குச் சமீபத்தில் அடி விழுந்து மயங்கிவிழுந்தேன்.

மயக்கம் தெளிவிக்கப்பட்டது. கூட்டம் நடைபெறவில்லை. சட்டசபைக் கூட்டத்திற்கு முன் ராஜாஜியைச் சந்தித்தபோது "அடி பலமா?" என்று கேட்டார். நகைத்தேன். நடவடிக்கை எடுக்கப் பட்டதாகச் சொன்னார்.

காமராஜர் முதலமைச்சர் ஆனதும் விருதுநகருக்கு முதன் முறையாக விஜயம் செய்தார். அதே ராவ்சாகிப் ரத்னசாமி நாடார் வாசகசாலையில் அவருக்கு வரவேற்புஅளிக்கப்பட்டது. விருதுநகருக்கு வரும்படி எனக்குத் தந்தி வந்தது. அதே மேடையில் தனக்கு அளித்த வரவேற்புகளை எல்லாம் தள்ளிவிட்டு, எனக்கு முதல் கௌரவம் அளித்த அவரது பெருந்தன்மையை நினைக்க, நினைக்க என் மனம் அவரிடம் இடையறாத ஈடுபாட்டைக் கொண்டதில் வியப்பில்லை.

கல்வி, கேள்வி, அறிவு, அனுபவம், எனும் மொழிகள் தமிழ நாட்டில் வழங்கி வரும் கர்ண பரம்பரையானவைகள். அனுபவத்தாலும் கேள்வியாலும் அறிவையும், கல்வியையும் தனதாக்கிக் கொண்டவர் காமராஜர், எனவே தான் அவர் 'படிக்காத மேதை'. காமராஜர் அதிகம் பேசமாட்டார். பேசுபவைகளில் சொற்சுருக்கமும், பொருட் பெருக்கமும் செயலாற்றலும் நிறைந்ததாக இருக்கும்.

காமராஜர் இடத்தில் நான் கண்டது என்ன? வேகமான கருத்துக்கள், அறிவின் எல்லை. மனச்சான்றின் கருவூலம், உயிர்களிடத்தில் உள்ள அன்பு, உண்மையான பிரதிபலிப்பு, உணர்வின் பெட்டகம், சத்தியத்தின் வழிகாட்டி. தத்துவவாதிகளுக்கும் இது ஒரு எடுத்துக்காட்டு. எனவேதான் காமராஜர் ஒரு தத்துவமேதை என நினைத்து மகிழ்கிறேன். ஆனந்தமடைகிறேன். அவரது கொள்கை ஸ்திரமாக நிலவட்டும். எங்கும் பரவட்டும்.





# மாசற்ற தலைவர்

ஜி.உமாபதி

**பெ**ருந்தலைவர் காமராஜர் மாசற்ற தலைவர். அடக்கமே பொருளாகக் கொண்டவர். அன்பின் இருப்பிடமாகவும், பண்பின் உறைவிடமாகவும், ஒழுக்கத்தின் உதாரணமாகவும் வாழ்ந்து காட்டியவர். அவர் பள்ளியில் படித்தது மிகக்குறைவு-ஆனால், அவர் நமக்கெல்லாம் சொல்லித் தந்த பாடம் மிகப்பெரியது. அப்பாடத்தைப் போலவே வாழ்ந்து காட்டிய மகத்தான தலைவர்!

காமராஜர் அவர்கள் இளம் வயதிலேயே 'உலக உத்தமர்' மகாத்மா காந்தியடிகள் தென்னாப்பிரிக்கப் போராட்டத்தை முடித்து, நம் தேசத்திற்குத் திரும்பி, காங்கிரஸ் மகாசபையின் தலைமை யேற்று, வழிநடத்த ஆரம்பித்த காலத்திலிருந்து அவர் நடத்திய ஒவ்வொரு போராட்டத்திலும் பங்கெடுத்துக் கொண்டு சிறை சென்று, இந்தத் தேச விடுதலைக்கும், தமிழகத்தின் புகழுக்கும் பாடுபட்டார்.

பிறகு சொல்லாற்றல் மிக்க எஸ்.சத்தியமூர்த்தி அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியின் தலைவரானார். அதன்பிறகு ...சுகட்சியின் ஈடு இணையற்ற தலைவராகத் தொடர்ந்து விளங்கினார். காமராஜர் அவர்களின் விருப்பப்படி அவர் யார் யாரை நினைக்கிறாரோ அவர்களைத் தமிழ்நாட்டின் காங்கிரஸ் கட்சியின் தலைவராக்கினார். ஆனால், கர்மவீரர் காமராஜரின் யோசனையை மீறி எந்தத் தலைவரும் நடந்ததில்லை. இத்தகைய நற்பெயர் பாரதத்தில் எந்த மாநிலத்திலும் யாருக்கும் இருந்ததில்லை. அதன் பிறகு அவர் ராஜாஜி அவர்கள் "குலக்கல்வி"த் திட்டத்தைக் கொண்டு வந்த போது ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தால் தானே சட்டசபையின் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படும் சூழ்நிலை உருவாயிற்று. அதன் பின்னரே தமிழகத்தின் "பொற்காலம்" தொடர ஆரம்பித்து, மக்களுடைய வாழ்கைத்தரமும் பொருளாதாரத்தின் சிறப்பும் ஓங்க ஆரம்பித்தன.

'...சிய ஜோதி' ஜவஹர்லால் ... அவர்கள் இவருடைய நிர் ... திறனைக் கண்டு, என் ... தமிழ்நாட்டின் ... த்திற்குத் தேவையா ... அனைத்தையும் செய்து ... து உதவினார்கள்

...றைய சூழ்நிலையில், ... நய அரசாங்கத்தில் ... கொண்டு ... தீட்டி, ... டின் வாழ்க்கைத் தரத்தை ... காம ராஜர் உயர்த்தினார். அப்போது தான் நாம் பெருமைப்படும் திருச்சியிலுள்ள 'பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்டின்' முதற்பகுதியும், ஆவடி 'டாங்க்' தொழிற்சாலை, உரத்தொழிற்சாலை, பல லட்சக்கணக்கான ஏக்கருக்குச் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், பஸ் பாடி கட்டும் லேலாண்ட் தொழிற்சாலை, உலகத்திலேயே பெருமை கொள்ளும் நெய்வேலி நிலக்கரி மற்றும் மின் சாரத்திட்டமும் கிண்டி, அம்பத்தூர் போன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழிற்பேட்டைகளும் உருவாகி தொழில்வளர்ச்சி ஓங்கிட அவர் பாடுபட்டது ஊரறிந்த செய்தியாகும்.

இதுபோன்ற மகத்தான செயல்களைச் செய்த செயல் வீரர் காமராஜர் அவர்கள் மேலும் இந்த நாட்டை உயர்த்திட வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தால், நேருஜி அவர்களிடம் மூத்த தலைவர்கள் எல்லாம்சுதந்திரமடைந்த நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், மக்களுக்குச் சேவை உணர்ச்சியைஊட்டுவதற்காகவும், அரசுத் தலைமைப் பதவியை விட்டுக் கட்சிக்குப் பாடுபட வேண்டுமென விரும்பினார். அதை நேரு பெருமான் ஏற்று "கே-பிளான்" (காமராஜர் திட்டம்) என்று அதற்கு மகுடம் சூட்டி, பாரதத்தி ...ள்ள பெரும் தலைவர்களை எல்லாம் ராஜினாமா செய்ய ...வைத்து, கட்சியின் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபடச் செய்தார்கள்.

...ற்ற வழிகாட்டியாக முத... போலவே ந... முதலமைச்சர் ... ராஜினாமா செய்து, ... காங்கிரஸ் கட்சியின் பொறுப்பை ஏற்று, ஒருமைப்

பாட்டிற்கு உழைத்து வந்ததோடு மட்டுமல்லாது நேரு பெருமான் மறைந்த பிறகு, நாணயத்தின் திருவுருவமாக விளங்கிய லால்பகதூர் சாஸ்திரி அவர்களைப்பிரதம மந்திரியாக உருவாக்கினார்கள்.



அதன் பிறகு, பாகிஸ்தான், சைனா போன்ற நாடுகளின் எதிர்ப்பைச் சமாதானப் படுத்தி, அமைதியாக வாழத் தூது சென்ற லால்பகதூர் சாஸ்திரி மறைவெய்தினார்கள். அந்த மாணிக்கத் தலைவர் மறைந்த பிறகு, பழைய பெருந் தலைவர்களின் எதிர்ப்புகளுக்கிடையே தீர்க்க தரிசியாக அன்னை இந்திரா அவர்களை இந்த நாட்டின் பிரதமராகத் தேர்ந்தெடுத்தார்கள்.

அன்னை இந்திராவின் ஆட்சிக் காலத்தில் அவருக்கும் காமராஜருக்கும் அபிப்பிராய பேதங்கள் இருந்தாலும் கூட, இந்திரா அவர்கள் காமராஜரின் உள்ளாசியுடன் ஆட்சிபுரிந்து வந்தார்கள். அவருடைய ஆட்சித்துறனையும், பாரதம் உயாந்த நலையில் உருவாகிய துறலையும கணடு உலகத் தலைவர்கள் அனைவரும் மகிழ்ந்தார்கள்.

நம்முடைய பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இந்திரா அவர்களைப் பிரதமராக்கிய போது, எதிர்த்தவர்கள் கூட அவருடைய ஆட்சித் திறனைக் கண்டு அகம் மகிழ்ந்தார்கள். இப்படி ஒவ்வொரு துறையிலும், நாட்டின் முன்னேற்றமே குறிக்கோளாக வாழ்ந்து வந்தார்கள்! அவர் மீது எல்லாக்கட்சியினைச் சார்ந்த தலைவர்களும், கட்சியில் பாடுபட்டவராக இருந்தாலும் இந்த மாபெரும் பாரத தேசத்தின் விடுதலைப் போராட்ட வீரர், 'கர்ம வீரர்' என்ற காரணத்தால் எல்லாரும் பெருந் தலைவரை மனதார விரும்பினார்கள்.

இன்றைய எல்லாக்கட்சியையும், கழகத்தையும் சார்ந்த மாணவமணிகளுக்கு நான் தரும் விஷயம் முன்பே தெரிந்திருக்க முடியாது. மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களைக் காமராஜரின் திருவுருவப்படத்தை திறந்து வைக்க வேண்டுமென்று நான் அழைத்தபோது, அண்ணாவைத் தமது தலைவராக ஏற்றுக்கொண்டபோதிலும், காமராஜர் ஒரு தேசத்தலைவர் என்பதால், அவர் பெருந்தலைவரின் படத்தைத் திறக்க ஒப்புக் கொண்டு வந்தார்கள்.

தலைவர் காமராஜர் அவர்கள் [illegible]த்தின் முதல் அமைச்சர் [illegible]ந் துறந்து அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்க டில்லிக்கு செல்லும் சூழ்நிலை ஏற்பட்ட போது தமிழ்நாட்டின் முன்னேற்றம் தடைபட்டுப்போகும் என்ற நல்ல எண்ணத்தால் அண்ணா அவர்கள் எம்.ஜி.ஆர் அவர்களைத் தூது அனுப்பினார்கள். அவர், பெருந்தலைவரை சந்தித்து 'போக வேண்டாம்' என்று வேண்டினார்கள். தேசமும், நேரு பெருமானும் பெருந்தலைவர்க்கு மிக முக்கிய மானதால் அவர் காங்கிரஸ் மகாசபையின் தலைமைப்பொறுப்பை ஏற்றுக் கொள்ளச் சென்றார்கள்.

காமராஜர் அவர்களை எதிர்த்துத் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வேட்பாளராக நிறுத்தப்பட்ட பெ.சீனிவாசன், அவரை வென்றபோது காமராசர் வருத்தப்பட வில்லை. பெ.சீனிவாசன் தான் காமராஜரைத் தோற்கடித்து விட்டோமென்று பெருமைசாற்றியபோது அண்ணா அவர்கள் அதைக் கண்டித்து, கழகத்தில் சீனிவாசனுக்கு இருந்த முக்கியத்துவத்தைக் குறைத்தார்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற நேர்கோட்டுக்குள் வாழ்ந்து வந்த அண்ணா அவர்களுக்குப் பெருந்தலைவர் மீது உள்ள மரியாதைக்கு இது ஒரு சான்றாகும்.



பெருந்தலைவர் அவர்களோடு 38 ஆண்டுகளாக அவரது அணுக்கத் தொண்டனாகவே இருந்து வந்தேன். என் குடும்பத்திலுள்ள எல்லா மக்களுக்கும் மணமுடித்து வைத்து என்னை வாழவைத்தார்கள். நான் எந்த விதமான அரசியல் லாபமும் பெறவில்லை. அப்படி அரசியல் லாபம் பெற நினைத்தவர்கள் அவரிடம் இருக்க முடியாது. அவர் எனக்கு ஆசானாகவும், என் குடும்பத்தாருக்குத் தலைவராகவும் இருந்து வந்தார்கள்.

பெருந்தலைவர் அவர்கள் தன்னுடைய எண்ணற்ற செயல்களின் மூலமாகவும், சிந்தனைகளின் மூலமாகவும் நாட்டின் முன்னேற்றத்திற்கும், தேச வளர்ச்சிக்கும் பாடுபட்டார்கள். அவரை நினைத்து, அவரை உயர்த்தி, நாமும் உயர்வோமாக!

வாழ்க கர்மவீரர் காமராஜரின் திருநாமம்.

# சமய சஞ்சீவித் தலைவர்

பெருந்தலைவர் காமராஜ் நமது தேசியச் சொத்து.

புகழ் பூத்த தமிழ்! தமிழ்மகன் ஒருவன், பாரதப் பெருநதலைவனாக - அதுவும் மத்திய ஆட்சியை உருவாக்கி வழி நடத்தும் 'மகாசக்தி'யாகப் பரிமளித்து விஸ்வரூபம் - பேருருவத் தரிசனம் தந்தவன்.

அன்று, 1975 ஆம் ஆண்டு பெருந் தலைவர், நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். உத்தமர் மகாத்மா காந்தி பிறந்த நாளன்று



நமது 'காலா' (கறுப்பு) காந்தி' வானுலகம் சென்று உத்தமனுடன் கலந்துவிட்டார்.

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரியர்ர் - பெரியவாள் சந்திரசேகரேந்திரர் அவர்கள் காமராஜ் மறைவு குறித்து ஓர் இரங்கல் செய்தியினை உலகிற்கு அறிவித்தார்.

'பாரத மக்களை நேசித்த காமராஜ் அவர்களது இழப்புஈடு செய்ய முடியாத இழப்பு ஆகும்'.

பெரியவர் சங்கராச்சாரியின் வாசகத்தைக் கூர்ந்து கவனியுங்கள்.

பொதுவாக மக்களால் நேசிக்கப்பட்டவர் என்றுதான் எவரும் குறிப்பிடுவார்கள்.

ஆனால் ஜகத்குரு அவர்கள் ''மக்களை நேசித்த காமராஜ்'' என்று குறிப்பிட்டது தனிச் சிறப்பும் பச்சை உண்மையுங்கூட.

ஆம், மக்களை நேசித்தவர் தான் காமராஜ். எனவே அவரை மக்களும் நேசித்தனர்.

காமராஜ், மக்களில் பலருக்கு சமயத்தில் கை கொடுக்கும் மருந்தாக - சமய சஞ்சீவியாகத் திகழ்ந்தார். அது எப்படி? இதோ ஒரு காட்சி! காணுங்கள்.

வருடம் 1962. பாரதத் திருநாட்டின் சகோதர நாடு எனப் பறை சாற்றிக் கொண்டு வந்த நமது அண்டை நாடான சீன நாடு, இந்தியா மீது எதிர்பாராதவிதமாகப் படையெடுத்துப் போர் தொடுத்துவிட்டது.

சமாதான சக வாழ்வே எனது தாரக மந்திரம் எனக் கோலோச்சி வந்த நமது பிரதமர் பண்டித நேரு கலங்கவில்லை. நண்பனே, பகையாளியான கொடும் சோதனையைச் சாதனையாக மாற்றினார். பாரததேசம், ஓர் அணியில் திரண்டு, தனது தேசப் பற்றினை உறுதிப்படுத்தியது.

சீன-பாரதப் போர் நடந்த போது (1962-1963) இந்திய நாட்டில் சீன ஆதரவாளர்களும்-உளவாளிகள் எனக் கருதப்பட்டோரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த வகையில், சென்னையில் அரசாங்க வழக்கறிஞர் ( Govt. Pleader ) அழகிரிசாமியின் கீழ் பணியாற்றிய பார்-அட்-லா ஒருவரும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்.

பாவம் அந்த வழக்கறிஞர். ஓர் அப்பாவி! உளவு வேலையில் கிஞ்சித்தும் ஈடுபடாதவர். இது அரசு வழக்கறிஞர் அழகிரிசாமிக்கும் தெரியும். ஏதும் செய்ய முடியவில்லை.

ஆனால், அரசு அவரைக் கைது செய்ய, ஒரே ஒரு ஆதாரம் இருந்தது. அது என்ன?

கைது செய்யப்பட்ட வழக்கறிஞர் மனைவி ஒரு லேடி டாக்டர். மலேசியாவில் டாக்டராகப் பணியாற்றி வருகிறார். அந்த டாக்டரம்மாவின் சகோதரர் சீன உளவாளி. சீன நாட்டிற்கே ஓடிப்போய் விட்டவன். அந்தச் சீன உளவாளி - மனைவியின் சகோதரர், அடிக்கடி தபால் மூலம் சில துண்டுப் பிரசுரங்கள் - அக்காளின் கணவனுக்கு அனுப்பிக் கொண்டிருந்தான். சீனத்து மச்சான் அனுப்புகிற துண்டுப்பிரசுரங்களைப் படிக்காமலேயே தூக்கி ஒரு மூலையில் எறிந்து வந்தார், வக்கீல் மாமா.

மச்சான் செய்தது, மாமாவுக்கு வினையாகப் போய்விட்டது. சிறையில் வாடினார், சொகுசாக வாழ்ந்து வந்த பார்-அட்-லா!

வக்கீல் சிறையில் வாடிய காலத்தில், அவரது மனைவி - மலேசிய டாக்டரம்மா சென்னைக்கு வருகிறார். கணவனைக் கண்டு பேசி, உறவாடிக் களிக்க வந்த மனைவி திடுக்கிடுகிறாள்! காராக்கிரகத்தில் உள்ள கணவனைச் சந்திக்கக்கூட இயலவில்லை. வாடி, வெதும்பித் தேம்புகிறாள்.

இன்றைய உயர்நீதி மன்ற நீதிபதி திரு எஸ். மோகன் அவர்களது அண்ணன் எஸ். அருணையப்பன் - அன்று 'நவஇந்தியா' தமிழ் நாளிதழின் செய்தி ஆசிரியர். அடியேன் (மு. நமசிவாயம்) செய்தி நிருபர்.

சீன உளவாளியெனக் கருதப்பட்டுச் சிறையில் வாடிய வக்கீல்

**மு. நமசிவாயம்**

'நவ இந்தியா' அருணையப்பனது உயிர்த்தோழர். மலேசியாவில் இருந்து, சென்னை வந்து, கணவனைக் காண முடியாது வாடிய மனைவியின் 'தாப'த்தைத் தணிக்க முனைகிறார் அருணையப்பன்!

ஒருநாள் காலை,'நவஇந்தியா' நாளிதழ் அலுவலகம் செல்கிறேன்.

'நமசிவாயம்! நீ ஒரு காரியம் உடனே செய்து முடிக்க வேண்டும்' - எனது செய்தி ஆசிரியரின் அன்புக் கட்டளை இது!

'அதற்கென்ன! முடித்து விடுகிறேன்! சொல்லுங்கள்!' - என்று துடிக்கிறேன்.

ஏதோ, புதிய செய்தி சேகரிப்பு என்று கருதினேன். ஆனால் சீன உளவாளியைப் 'பரோலில் விடுதலை செய்ய வேண்டும்; மனைவியைப் பார்க்கும்படி செய்ய வேண்டும்' என்று அறிகிறேன்.

ஒரு நிமிட நேரம் ஒரே மலைப்பு! மறுகணம் 'சரி! அந்த லேடி டாக்டரை என்னுடன் அனுப்புங்கள்!' என்று அவசரப் படுத்துகிறேன்.

சில நிமிட டாக்சிப் பயணம், லேடி டாக்டருடன் முதலமைச்சர் காமராஜ் இல்லத்திற்குள் பாய்ந்து ஓடுகிறேன்.

முதலமைச்சர் அறைக்குள் பேசிக் கொண்டிருந்த சிலர், வெளியே வருவதற்காகக்காத்திருக்கிறேன். சமயம் வருகிறது. லேடி டாக்டர் உள்ளே வரத் தயங்குகிறார். அச்சம்-கூச்சம்! டாக்டரம்மாவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே, காமராஜ் முன்னால் ஓடி நிற்கிறேன், பதட்டத்தோடு!

''உம்! நமசிவாயமா? என்ன? ஒரே பதட்டம்! முதலில் உட்கார். இவங்க யாரு. அவங்க கையை விடு! உட்காருங்க, அம்மா! உம்!'' என்று கனிவுடன் கண்டிப்பாக உட்கார வைக்கிறார், காமராஜ்!

''நீங்க (காமராஜ்)இன்றைக்கு மாலையே ஆந்திராவுக்குப் போகிறீர்கள். அதற்குள் ஒரு ''அஸ்வமேத'' யாகத்தையே செய்து முடிக்க வேண்டும். அது தான் அவசரம்; ''பதட்டம்'' என்று பேச்சைத் தொடங்குகிறேன்.

''மாலைக்குள் அஸ்வமேத யாகம் என்கிறாய்? விஷயத்தைச் சொல்லு, முதலில்''.

காமராஜ் குறுக்கிடுகிறார்.

வக்கீலின் மச்சான் செய்த தபால் காரணமாக பார்-அட்-லா சிறையில் இருப்பது - அவரது மனைவி மலேசியாவிலிருந்து வந்திருப்பது யாவற்றையும் படு வேகத்தில் கூறி முடிக்கிறேன்.

''இப்போது அந்த வக்கீலை..!'' பேச்சை முடிக்கவில்லை நான்.

''அந்த வக்கீலைப் 'பரோலில்' விடுதலை செய்ய வேண்டும். புருஷனும் பெண்டாட்டியும் சந்தித்துப் பேசிச் சந்தோஷப்படனும் அவ்வளவுதானே விஷயம்! சரி. செய்துடலாம்,'' என்று சர்வ சாதாரணமாகத் தாமே முந்திக் கொண்டு வாக்களிக்கிறார், அந்த சமய சஞ்சீவித் தலைவர்.

''என்ன? மலேயா டாக்டரம்மா? நிம்மதியாகப் போங்க! இன்னிக்கு ராத்திரி, உங்க புருஷனுக்கு உங்க வீட்டிலேதான் படுக்கை. சரிதானே? சந்தோஷமாகப் புறப்படுங்க!'' என்று துரிதப் படுத்துகிறார் முதலமைச்சர்.

''அதெப்பிடிங்க முடியும். உளவாளிக் கைதியைப் பார்க்கவே விடமாட்டேங்கறாங்க. பரோலில் விடவே முடியாது - யாராலும் முடியாது என்கிறாங்களே!'' என்று அழத் தொடங்குகிறாள் வக்கீலின் மனைவி!

''நீங்க, என்னா டாக்டருங்கறேன்! எல்லாருக்கும் மனத்தைரியம் சொல்லி, வைத்தியம் பார்க்கிறவங்க, உங்களுக்கு இப்போ, மற்றவங்க மனோவைத்தியம் பண்ணனும் போல இருக்கே! Doctor Madam, look here-I-who is the Chief Minister with all power is assuring you! understand! பேசாம, தைரியமாப் போங்க'' என்றதும் லேடி டாக்டர் தெம்பாக எழுந்து வணக்கம் செலுத்துகிறார்.

''உம், நமசிவாயம்! அந்த அம்மாகிட்ட இருந்து ஒரு Petition காகிதம் வாங்கி வந்து கொடுங்க. உடனே கொடுங்க. Petition மேலே தானே Order போட முடியும்! சீக்கிரம் போய் காகிதத்தைக் கொண்டாங்க!'' விரட்டுகிறார், காமராஜ்.

''நீங்க, சாயந்திரம் ஆந்திரா போறீங்களே, அதுக்குள்ள..!''

''அதுக்குள்ள எப்படி முடியும்னு கேக்கிறியா! என்ன நிருபர் நீ? உணர்ச்சி வசப்படாதே. புத்தி கூர்மை மழுங்கி விடும். நல்ல காரியத்திற்குத் துணிச்சலோடு வந்தே! உடனே போய் காகிதத்தைக் கொண்டா! கோட்டைக்கே வந்துரு: சீக்கிரம்'' மீண்டும் விரட்டுகிறார்.

முதலமைச்சர் காமராஜ் வீட்டிலிருந்து, 'நவஇந்தியா' அலுவலகம் திரும்புகிறோம்.

என்ன வேடிக்கை! விபரீத வேடிக்கை தெரியுமா!

காமராஜ் கேட்ட, பரோல் விடுதலைக் கோரிக்கை பெரிய பெரிய வக்கீல்கள் பலர் கூடித் தயாரித்து, அழகாக டைப் செய்து எனது கைக்கு வந்து சேரும்போது பிற்பகல் ஒருமணி!

காகிதப் பெட்டிஷனோடு கோட்டை வரச் சொன்ன முதலமைச்சரைத் தேடி, கோட்டைக்கு டாக்சியில் பறக்கிறேன். ஆனால் காமராஜரைத்தான் 'கோட்டை' விட்டு விட்டேன். பகல் ஒருமணிக்கெல்லாம் வீடு

(தொடர்ச்சி 43 ஆம் பக்கம்)





# கறுப்புச் சூரியன்

அரசவைக் கவிஞர்
புலவர் புலமைப்பித்தன்





"படிக்கவோர் சாதி படித்தவர் பாதம்
பிடிக்கவோர் சாதி" என்றுதான் இங்கே
ப்டைக்கும் போதே பிரம்மா நம்மைப்
படைத்தான்! "அப்படிப் படைத்ததே ஆண்டவன்
தர்மம்!" என்று தம்பட்டம் அடித்த
மர்ம ஏடுகள் மறைநூல்கள் ஆயின!
ஆயிரம் நீதி நூல்கள் இருக்கும்
ஆயினும் இங்கே அநீதிதான் சட்டம்!
கல்விக் கோயிலின் கருவறைக் குள்ளே
செல்லும் உரிமை 'சிலருக்கு மட்டுமே'!
வேர்க்க வேர்க்க உழைத்தவன் முகத்தைப்
பார்ப்பது கல்விக்கே பாவமாம்! இந்தத்
தீயஏற் பாட்டுக்குத் தீயைவைத் தானோர்
தூய கறுப்புத் துரை அவன்பெயர், சிவ
காமித் தாயின் கருணையாற் கிடைத்த
காம ராசெனும் கர்ம வீரன்!
ஏட்டைப் படிப்பது எதற்கென எண்ணி
நாட்டைப் படித்த நல்லறி வாளன்
கல்வித் தேவியின் கால்படா ஊரே
இல்லை எனும்நிலை இவன்தான் ஆக்கினான்!
"எல்லாச் சாதிக்கும் கல்வி; கல்வி
இல்லாச் சாதியே இல்லை" என்று
புதியஏற் பாட்டை புகுத்திக் கல்வியை
பொதுஉடைமை ஆக்கிய புனிதன், மடமை
இருட்டிலே கிடந்த இடமெலாம் இந்தக்
கறுப்புச் சூரியன் கதிரொளி பாய்ச்சினான்
இவன்படிக் காதவன் என்னுமோர் இழிவு
தவறியும் இனிஒரு தமிழனின் வாழ்வில்
இருக்கலா காதென எண்ணினான்; கல்வீநீர்
பெருக்கினான்,காடெலாம் கழனிகள் ஆக்கினான்
நச்சுப் படர்ந்த நாட்டிலே இந்தப்
பச்சைத் தமிழனின் பணிகள் எத்தனை!
சிந்தை அணுக்கள் சிலிர்க்கச் சிலிர்க்கத்
தந்தை பெரியார்இத் தமிழனை வாழ்த்தக்
காரணம்; பெரியார் கருதிய அனைத்தையும்
காரியம் ஆக்கிக் காட்டினான் என்பதே!
விருது நகரம் இவனைப் பெற்றதால்
விருது பெற்றது! வெல்க இவன்புகழ்!

# புதிய சமுதாயம்



— பெருந்தலைவர் காமராஜர்

நம்முடைய தேசப் பிதாவும் வழிகாட்டியுமான மகான் காந்திஜி பின் வழியில் நாம் பாடுபட்டு சுதந்தரமடைந்துவிட்டோம்.

சுதந்தரத்தைப் பெற்றுவிட்டோம். சுதந்தர ஆட்சி நடக்கிறது. சுகம் வந்துவிட்டது, என்றுதான், சுதந்தரம் வந்ததும் மக்கள் நினைத்து மகிழ்ந்தார்கள். இதில் தப்பு ஒன்றுமில்லை. ஆனால், சுதந்தரம் வந்ததும் சுக வாழ்வு அப்படியே வந்துவிட்டதா? ஏதோ சிலருக்கு, சில சூழ்நிலையில் உள்ளவர்களுக்கு வந்திருக்கலாம். ஆனால் எல்லோருக்கும் குறிப்பாக நாட்டில் உள்ள கோடானு கோடி ஏழைமக்களுக்கு வாழ்வு வந்ததா, வறுமை நீங்கி விட்டதா என்று கேட்டால் 'இல்லை' என்றுதான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன?

இரண்டு நூற்றாண்டுகளாக அன்னிய ஆட்சியில் அடிமைப்பட்டு இருந்த நேரத்தில், உலகத்தில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களோடு தொழில், விஞ்ஞான, கருத்துப் புரட்சிகளோடு நாமும் நமது நாடும் ஒட்டி முன்னேறவில்லை. மாறுதலுக்கு உட்படாமல் பின் தங்கி விட்டோம். இதனால்தான் சுதந்தரம் வந்தும், உடனே சுக வாழ்வு கிடைக்கவில்லை.

சுதந்தரம் சுக வாழ்வுக்கான யாத்திரையின் ஒரு கட்டம்-முதல் கட்டம்தான். நாட்டில் உள்ள பின் தங்கிய நிலைமையை -சூழ்நிலைகளை மாற்ற வேண்டும். அறியாமையை அகற்றி தொழில் பெருக்கத்திற்கும் வேலை வாய்ப்புக்கும் ஏற்ற வழி காண வேண்டும். இயற்கைச் சக்திகளையும் மனித சக்தியையும் அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்தி சுபிட்சத்துக்கு வழிகண்டு பிடிக்கவேண்டும். இந்த மகத்தான வேலைதான் சுகவாழ்வுக்கான யாத்திரையின் இரண்டாவது கட்டம். இந்தக் கட்டத்தில்தான், நாம் இன்று இருக்கிறோம்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், சுதந்தரம் சுயராஜ்யம் என்பதற்கான சூழ்நிலையையும் தன்னம்பிக்கையையும் எழுச்சியையும் வீர உணர்ச்சியையும், அன்று, அதாவது 1947க்கு முன் எப்படி ஏற்படுத்தினோமோ அதைப் போலவே, ஏன், அதையும் விட மிகவும் வேகமாகவும் நல்ல முறையிலும் சுக வாழ்வுக்கான வழி வகைகளைக்காண, நாம் தனிக் கவனம் செலுத்தியாக வேண்டும்.

சுதந்தர அரசாங்கத்தால் நாட்டின் ''புதிய சமுதாயம்'' உருவாக்கப்பட்டு வருகிறது. புதிய சமுதாயம் என்றால் என்ன? தன்னைத்தானே தன்னம்பிக்கையோடு ஆண்டு கொள்ளும் சக்திபடைத்தது அது. தனக்குரிய தேவைகளைத் தானே பூர்த்தி செய்துகொள்ளவல்லது. எத்தகைய ஏற்றத் தாழ்வும் ஏற்பட முடியாத சூழ்நிலையில் உள்ளதே நாம் காண விரும்பும் ''புதிய சமுதாயம்''. அது எப்படிப்பட்டது? கவலையற்ற வாழ்வு -பிறரைக் கவலைக்குள்ளாக்காத, நம்மைப்போலவே மற்றவர்கள் வாழ்கிறார்கள், மற்றவர்களைப் போலவே நாமும் வாழ்கிறோம் என்ற திருப்தி படைத்தது ''புதிய சமுதாயம்''.

இத்தகைய கவலையற்ற சமுதாயத்தை-புதிய சமுதாயத்தைப் படைக்க, சட்டம் போட்டு முடியாது. பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் மட்டும் போதாது. மக்களிடையே மகத்தான மன மாறுதல், மனப்புரட்சி ஏற்பட்டாக வேண்டும்.

இந்த வழியிலேயே நம்முடைய சென்னை மாகாணம் வழி காட்டியதைப் பார்த்து நாம் எல்லாரும் பெருமைப்படலாம். நம்முடைய தேசத்தில் ஐந்தாவது வரையில் கட்டாயக் கல்வியைக் கொடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, தேசம் பூராவும் பிரயத்தனங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் இதைப்போன்று நல்ல நிலைமையில் பொதுமக்களுடைய உதவி நமக்குக் கிடைத்துக் கொண்டு வருமேயானால், எட்டாவது வரையில் கட்டாயக் கல்வித் திட்டத்தை நம்முடைய மாகாணத்தில் ஆரம்பித்துவிடலாம். அடுத்து, பத்தாம் வகுப்பு வரையிலும் கட்டாயக் கல்வியை விஸ்தரிக்க முடியும். அதைச் செய்யத்தான் போகிறோம்.

பிற மாகாணங்களெல்லாம் ஏழைக் குழந்தைகளுக்குப் பகலுணவு கொடுக்கத் தயங்கிக் கொண்டு, முடியுமா என்ற பரிசீலனை செய்துகொண்டிருந்த காலத்தில், துணிந்து மக்களுடைய உதவியினாலேயே அந்தந்தக் கிராமத்திலுள்ள ஏழைக் குழந்தைகளுக்குச் சாப்பாடு அளிக்கலாம் என்ற தைரியத்தோடு, அந்தத் திட்டத்தை நாம் ஆரம்பித்தோம். வெற்றிகரமாக நடந்து வருகிறது. இன்னும் பல இடங்களுக்கும் விஸ்தரித்துக் கொண்டே இருக்கிறோம்.



எந்தக் கட்சியானாலும் சரி, மக்கள் வாழ வேண்டும், என்றுதான் சொல்லுகின்றது. ஆனால் எப்படி மக்களை வாழ்விப்பது? எந்த வழி வகுத்து இதை நடத்துவது என்பதில் கருத்து வேறுபாடும், மாறுபாடும் இருக்கலாம். இது கூட இல்லை என்றால் தனித்தனிக் கட்சி வைத்திருப்பதற்கு அர்த்தமே இல்லாமல் போய் விடாதா?



சில கட்சிகளது கருத்துக்கு மக்கள் ஆதரவு அதிகம் இல்லாமல், ஆட்சிப் பீடத்தில் அமர முடியாமல் போகலாம். இது ஜனநாயகத்தில் சாதாரண சம்பவமாகும். ஆனால் ஆளும் சந்தர்ப்பம் ஏற்படவில்லையே என்பதால் சலிப்பும், சஞ்சலமும் ஏற்பட்டு, இதுவே பெரிதாகி ஆள்பவர் செய்வதைக் கண்மூடித்தனமாகக் குறை கூறுவது எக்கட்சிக்கும் நல்லதே அல்ல.

எத்தனைக் கட்சிகள் — கொள்கைகள் — கோட்பாடுகள் வேண்டுமானாலும் இருக்கலாம். நாட்டில் அமைதி நிலவ வேண்டும். இது மிகவும் அவசியம். அமைதியான சூழ்நிலையில்தான் ஆக்க வேலைகளில் ஆள்வோர் மட்டுமல்ல, மக்களும் தகுந்த கவனம் செலுத்த முடியும். கட்சிகள் காரணமாகவும், அவற்றிற்கிடையே உள்ள கொள்கை மாறுபாடு, வேறுபாடு காரணமாகவும் நாட்டின் பொது அமைதி குலையும் போக்கு ஒரு சிறிதும் ஏற்படக் கூடாது. அமைதி குலைந்தால் மக்கள் வாழ்வே குலைந்து போகும். தேசத்தின் செல்வங்கள்தான் பாழாகும்; மக்களது நிம்மதிதான் கெட்டுப் போகும். நம்முடைய சக்திதான் வீணாகும், விரயமாகும். இந்த நிலைமை ஏற்படவே கூடாது. எந்தச் சிக்கலுக்கும் ஜனநாயக முறையில், அமைதியான முறையில் தீர்வு காண முடியும். அமைதியைக் காப்பதில் நம் அனைவருக்குமே பொறுப்பு உண்டு. கட்சிக்குக் கட்சி இதில் வித்தியாசம் இல்லை. ஜாதி, மதம், மொழி வேற்றுமை கூட இதற்கு முன் நிற்கக் கூடாது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி நடக்கும் இந்த நேரத்தில், அமைதியைக் கலைத்துத்தான் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற மனப்பான்மை வேண்டுமா?

மக்கள் வாழ்வில் சாந்தியும் இன்பமும் நிலவ வேண்டும்: பொறுப்புணர்ச்சி உடையவர்களின் லட்சியமும் வேலைத்திட்டமும் இதுவாகத்தான் இருக்க வேண்டும். இந்த உணர்வுடன் காந்திஜி கண்ட புதிய சமுதாயத்தை அமைக்க உறுதி கொள்வோம்; அதற்கான முயற்சிகளில் உற்சாகத்துடன் ஈடுபடுவோம்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மகத்தான மாறுதலை நம் நாடு இப்பொழுது அடைந்து வருகிறது. இந்த நாட்டை ஒரு லட்சியத் திருநாடாக மாற்றியமைக்கும் மகத்தான பணியில் நாமும் நம்முடைய பங்கைச் செய்கின்ற வாய்ப்பு நமக்குக் கிடைத்திருப்பது நாம் செய்த அதிர்ஷ்டமேயாகும். எதிர்காலத்திலே சரித்திராசிரியர்கள் இந்தியாவின் மகத்தான சாதனையைப் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதிப் புகழ் மாலை சூட்டப் போகிறார்கள். ஆகவே, இந்த மிக முக்கியமான கட்டத்தில் சிறு சிறு பொல்லாங்குகளும் பூசல்களும் மனக்கிலேசங்களும் நம்முடைய வேகத்தைத் தடுத்து நிறுத்தி விடாமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மகத்தான எதிர்கால வாழ்வை உருவாக்கும் திருப்பணியிலே தோளோடு தோள் நின்று முன்னேற்றப் பாதையில் ஏறு நடை போடும் நாற்பது கோடி மக்களிலே நானும் ஒருவன் என்ற பெருமிதமும் உள்ளுணர்வும் ஒவ்வொரு பிரஜையின் இதயத்திலுள்ளும் ஏற்படும்படியான ஒரு நல்ல சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டும்.

சிறுசிறு பூசல்கள், தேவையற்ற விதண்டா வாதங்கள் பலனளிக்காது. மகாத்மா காந்தி அடிகள் சொன்ன மாதிரி எவ்விதமான நயவஞ்சகமோ, களங்கமோ இல்லாமல், எந்தப் பிரச்சினையையும் திறந்த மனத்துடன் நாம் சீர்தூக்கிப் பார்த்துச் செயலாற்ற வேண்டும். புதிய சமுதாயம் தானே அமைந்துவிடும்.

புதிய சமுதாயம் என்னும் நூலிலிருந்து

## கடமைராஜன்!

(பாலபாரதி ச. து. சு. யோகி)

உலகம் தழைக்க நாடெங்கும்
ஊரும் தழைக்க உயிர் தழைக்க
விலகும் கலகக் கொடுமையெலாம்
வெறுமைக் கயமைத் தீமையெலாம்
இலகும் செம்மைச் செல்வமென
எங்கும் செழுமைத் திட்டமிடும்
திலகம் காம ராஜரென்றும்
தெய்வத் திருவன் வாழியவே.

சொந்தக் குடும்பம் இல்லாதான்
சொத்தும் சுகமும் கொள்ளாதான்
பந்த பாசம் தனைவிட்டும்
பரம ஞானத் தவனே போல்
இந்த நாடே தம் வீடாய்
இதில் உள்ளோரே தன்னவராய்
எந்த நாளும் பணிபுரிவான்
இவன் எந் நாளும் வாழியவே.

படிப்பே இல்லான், பார் முழுதும்
படித்தே அறிந்தான், வீண்வாதப்
பிடிப்பே இல்லான், நன்மை எனில்
பிடிப்பாய் பிடிவாதத்துடனே
நொடிப்பே இல்லாமல் கடமை எனில்
நொடிக்குள் முன்னே வந்திடுவான்
நடிப்பே இல்லான் பசப்பறியான்
நாட்டின் தலைவன் வாழியவே.

காம ராஜன் நாட்டு நலக்
கடமை ராஜன் ஏழைகளின்
சேம ராஜன் எங்கள் முதல்
திருவாம் ராஜன் வாழியவே.



## வாழ்க காமராஜர்!

பாரி—சு. செல்லையப்பர்

வாழ்க வாழ்க காமராசன்
வாழ்க வாழ்க வாழ்க வே
தாழ்வி லாத தருமம் ஓங்கித்
தமிழர் நாடு வாழ்க வே!

அறுப தாண்டு வாழ்ந்த சீலன்
ஆண்டவன் தன் அருளினால்
குறைவி லாமல் ஆண்டு நூறு
குவல யத்தில் வாழ்க வே!

தமிழர் ஆட்சி ஓங்கி இந்தத்
தரணி யெல்லாம் வாழ்க வே!
அமிழ்தின் இனிய தமிழும் இந்த
அவனி யெல்லாம் ஓங்க வே!

வறுமை நீங்கிச் சிறுமை நீங்கி
வளங்கள் எங்கும் ஓங்க வே
அறிவி லாத போராட் டங்கள்
அழிந்து மக்கள் வாழ்க வே!

அன்பும் அறமும் ஓங்கி மக்கள்
அமரர் என்ன வாழ்க வே
இன்ப வடிவ மான ஈசன்
கருணை என்றும் ஓங்க வே!



# செங்கோட்டையில் ஒரு சிலை

டி.கே.டி. துரைராசன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி மாவட்டம்

ஒரு வாரத்துக்கு முன்பிருந்தே செங்கோட்டை நகர மக்களிடம் ஒரு எதிர்பார்ப்பு ஏற்பட்டுவிட்டது.

வீரவாஞ்சிநாதனுக்குத் தமிழக அரசு சிலை வைக்கப் போகிறது! அதற்காக மாபெரும் விழா நடக்கவிருக்கிறது! அந்த விழாவில் மாண்புமிகு மத்திய, மாநில அமைச்சர்கள் கலந்து கொள்கிறார்கள்!

நகரம் முழுவதும் இந்தச் செய்தி பரவிவிட்டது. அதற்கேற்றாற்போல் சென்னையிலிருந்து வீரவாஞ்சிநாதனின் சிலையும் வந்து சேர்ந்துவிட்டது!

சிலையைப் பார்ப்பதற்கென்று தினமும் ஒரு கூட்டம். திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பி.ஆர். பிந்துமாதவன், இ.ஆ.ப., அவர்களின் நேரடிப் பார்வையின்கீழ், அரசு நடத்தும் விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்வதில் மாவட்ட நிர்வாகம் ஆர்வத்துடன் ஈடுபட்டது.

செங்கோட்டை நகராட்சிப் பேருந்து நிலையத்துக்கருகில், கொல்லம் சாலை சந்திப்பில் சிலை அமைப்பதற்கான ஏழரை அடி உயர பீடம் ஏற்கெனவே அமைக்கப்பட்டிருந்தது. அதற்கு அருகிலேயே மிகப் பெரிய மேடையும் பந்தலும் போடப்பட்டன.

அரசு அலுவலர்கள் பலர் இரவு பகலாய் விழாவின் பல்வேறு பணிகளைக் கவனித்தனர்.

அதன் பயனாக, செங்கோட்டை நகரம் இதுவரை கண்டிராத ஒரு மாபெரும் விழா ஜூன் திங்கள் 17-ஆம் நாள் நடைபெற்றது.

வீர வாஞ்சிநாதனின் திருஉருவச் சிலைத்திறப்பு விழா!

மாண்புமிகு தமிழகப் பொதுப் பணி அமைச்சர் திரு ஒய்.எஸ்.எம். யூசுப் அவர்கள் இந்த விழாவிற்குத் தலைமையேற்றார். மாவட்ட ஆட்சித் தலைவர் வரவேற்புரை நிகழ்த்தியபின் விழாத் தலைவர் தமது தலைமை உரையில்

"வீரவாஞ்சிநாதன் வீரமரணம் அடைந்து எழுபத்தைந்து ஆண்டுகள் கடந்து விட்டன. இடையில் எத்





வாஞ்சிநாதனின் ஒரே சகோதரரான திரு. கோபால கிருஷ்ண அய்யர் அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் சார்பில் ரூ. 50 ஆயிரத்தை மாண்புமிகு செய்தி- அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வழங்கினார்.

தனையோ அரசுகள் தமிழகத்தில் ஆட்சி புரிந்துள்ளன. ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் அரசுதான் வீர வாஞ்சிநாதனுக்குச் சிலை எடுத்து, விழாக் கொண்டாடுகிறது''...என்று குறிப்பிட்டார்.

விழாவைத் தொடங்கி வைத்தவர் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. பி.எச்.பாண்டியன் அவர்கள். அவர் தமது தொடக்க உரையில்—

''வீர வாஞ்சிநாதனின் திருவுருவச் சிலையை அமைத்ததன் வாயிலாக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் இன்றைய இளைஞர் சமுதாயத்தின் கவனத்தை இந்திய வரலாற்றின் பக்கம் திருப்பிவிட்டிருக்கிறார்.......'' என்று கூறினார்.

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் குமரி அனந்தன், எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன், டி. ஆர். வெங்கடரமணன், டி. பெருமாள், எஸ். பாலசுப்பிரமணியன், ஆர். எஸ். ஆறுமுகம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

மாண்புமிகு மத்தியதொழில் துறை இணை அமைச்சர் திரு எம். அருணாசலம் அவர்கள் முன்னிலை வகித்தார். அவர் தமது உரையில், ''வீரவாஞ்சிநாதனின் தியாகத்தையும்- நினைவையும் போற்றும் வகையில் ஏதாவது ஒருசின்னம் திறுவ வேண்டும் என்றதேசிய உணர்வை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் நிறைவேற்றிவிட்டார்கள்'' என்று கூறி மைய அரசின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

இறுதியாக மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் வீரவாஞ்சிநாதனின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்துச் சிறப்புரை ஆற்றினார்.

அவரது எழுபது நிமிட உரை, எழுச்சியூட்டும் ஒரு உரையாகும். இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழகம் ஆற்றியுள்ள பங்கு ஏன் இன்னும் இந்தியா முழுமையும் சரியாகத் தெரியவில்லை என்று வினா எழுப்பினார் அமைச்சர்.

''பஞ்சாபில் ஆங்கில அதிகாரியைக் கொன்ற பகத்சிங் பெயர் இன்று பாரத தேசம் முழுவதும் தெரிகிறது. லாலா லஜபதிராய்- பால கங்காதர திலகர் போன்ற பல்வேறு தலைவர்களுக்கு இங்கே நினைவகங்கள் - மன்றங்கள் இருக்கின்றன. ஆனால் வீரவாஞ்சிநாதனின் பெயர் அங்கே எத்தனை பேருக்குத் தெரியும்? வ.உ.சி. யைப் பற்றி வடக்கே அறிந்து வைத்திருப்பவர்கள் எத்தனை பேர்?

''தமிழகத்திலேயே பலருக்கு இது தெரியாது. இதற்குக் காரணம் இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பற்றி- தமிழகத் தலைவர்கள் ஆற்றிய தியாகங்களை - வீர தீர சாகசங்களைச் சொல்கிற விதமாகச் சொல்லவில்லை...ஏழை எளிய பாமர மக்கள் புரிந்து கொள்கிற மாதிரி யாரும்



இதுவரை எடுத்து வைக்கவில்லை. இந்தக் குறையைப் போக்குவதற்காக விடுதலைப் போராட்டத்தை விளக்கும் வகையில் ஓவியக் கண்காட்சி ஒன்றினை அமைக்க அரசு திட்டமிட்டிருக்கிறது. இதற்காக எட்டயபுரம் பாரதி மணி மண்டபத்துக்கு அருகே நிலம் கையகப்படுத்தப் பட்டிருக்கிறது. இதற்கு ஆகக்கூடிய செலவுத் தொகையான ரூ. 75 இலட்சத்தை மத்திய அரசு வழங்கவேண்டும்'' என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

வாஞ்சிநாதனின் தம்பி திரு. கோபாலகிருஷ்ணனின் குடும்பத்துக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் சொந்த நிதியிலிருந்து கொடுத்த ஐம்பதாயிரம் ரூபாயை மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வழங்கினார்.

''ஏற்கெனவே இவரது குடும்பத்துக்கு அரசு மாதந்தோறும் 500 ரூபாய் உதவித் தொகை அளித்து வருகிறது. அதோடு போதும் என்று நின்றுவிடவில்லை தமிழக முதல்வர். வாஞ்சிநாதனின் பெயரில் ஒரு வீடு இருக்க வேண்டும்.... அந்த வீட்டில் வாஞ்சிநாதனின் வம்சத்தினர் தலைமுறை தலையாக வசிக்க வேண்டும். அதற்காக மாண்புமிகு முதல்வரின் அன்புக் காணிக்கையாகத் தரப்படும் இந்தப் பணத்தைக் கொண்டு ஒரு வீடு வாங்க வேண்டும்....அதற்கான ஏற்பாடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் செய்வார்கள்.....'' என்று கூறினார் அமைச்சர்.

நலிந்த பிரிவினருக்கு அரசு தரும் பல்வேறு உதவிகளையும் அமைச்சர் வழங்கினார். வாஞ்சிநாதனின் வரலாற்றைப் புத்தகமாக வெளியிட்ட திரு. ரகமி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப் பட்டார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., நன்றி உரை ஆற்றினார்.

விழா முடிவில் திரு. டி. கே. எஸ். கலைவாணன் குழுவினரின் தேசியப் பாடல் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவின் ஒரு பகுதியாக வாஞ்சிநாதனின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப் படக் கண்காட்சியினை அரசின் செய்தித்துறை சிறப்பாக அமைத்திருந்தது.

வீரவாஞ்சிநாதனின் ஏழரை அடி உயர வெண்கலச் சிலை இப்போது அங்கே கம்பீரமாக நிற்கிறது. இனி காலகாலத்துக்கும் அது நிற்கும்..!





## காமராஜர் கருத்துரைகள்

யானை சாப்பிடும்போது ஒரு கவளம் சோறு கீழே சிந்திவிடுகிறது. யானைக்கு ஒரு கவளம் தான்நஷ்டம். ஆனால் அதுவே லட்சக்கணக்கான எறும்புகளுக்கு ஆகாரமாகக் கிடைக்கிறதே! இது போல, அளவுக்கு மீறி சம்பாதிப் பதில் கொஞ்சம் வரி கொடுத்தால், பலபேர் பட்டினி தீர வழி செய்யலாமே!

இந்திய நாடு சுதந்திரம் அடைந்தால்தான் ஏழைகளாக உள்ளவர்களுடைய வறுமை நீங்க வழி செய்ய முடியும். ஏழைகளை நல்ல முறையில் வாழ வைத்து, எல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டும். அதுதான் சுதந்திரம், அதற்காகத் தான் சுதந்திரம் கேட்டார், மகாத்மா காந்தி.

ஏழ்மையையும் இல்லாமையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்க வேண்டும். ஆனால் ஒரேயடியாக ஒரேநாளில் இவற்றைத் தீர்த்துவிட முடியுமா என்ன? எப்படி முடியும்? யாராலும் முடியாது! அப்படி யாராவது செய்து காட்டுகிறேன் என்றால் ரொம்ப சந்தோஷம். சும்மா சத்தம் போட்டுச் சொன்னால் மட்டும் காரியம் நடந்துவிடாது. நடைமுறையில் இந்தப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண, நல்ல வழி வகுத்து படிப் படியாக வேலை செய்தால் தான் நடக்கும். அப்படித்தான் செய்து வருகிறோம்.

## தலைவருக்குக் காணிக்கை

பெருந்தலைவர் காமராஜர் பள்ளிக்குச் சென்று படித்ததில்லையே. தவிர-ஏராளமான நூல்களைப் படித்து உலக அறிவை வளர்த்துக் கொண்டிருக்கிறார். ஆங்கில நூல்களையும் அவர் விரும்பிப் படித்திருக்கிறார். தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்கள் பலர், தங்களது நூலை காமராஜருக்கு அன்பளிப்பாகத் தந்து, அவரிடம் தங்களுக்குள்ள அன்பைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த வகையில் காமராஜரிடம் சேர்ந்துள்ள நூல்கள் எண்ணற்றவை. அவை எல்லாம் சென்னை திருமலைப்பிள்ளை தெருவில் உள்ள காமராஜர் நினைவு இல்லத்தை அலங்கரிக்கின்றன. தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்கள் கவிஞர் கண்ணதாசன், ஜெயகாந்தன், கா. திரவியம் ஆகியோரின் எழுத்துக்கள் இங்கே இடம் பெற்றிருக்கின்றன.





# காந்தி நெறிக் காவலன்

நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்

காந்திமகான் நன்னெறிக்குக் காவ லாளன்
    களைத்தவர்கள் குறைதீர்க்கும் ஏவ லாளன்
ஓய்ந்திருத்தல் அறியாமல் உழைக்கும் வல்லோன்
    ஒன்னார்க்கும் தீங்குவரச் சகியா நல்லோன்
ஆய்ந்துணர்ந்த மெய்யறிவின் சின்ன மாகும்
    ஆசைகளை ஆண்டடக்கும் மன்ன னாகப்
போந்துளநம் முதலமைச்சர் காம ராசன்
    புகழோங்க நெடிதிருக்கப் புரிவான் ஈசன்!

அதிகார போதைகளில் மயங்க மாட்டான்
    அலங்காரப் பகட்டுகளில் முயங்க மாட்டான்
துதிபாடும் இச்சகத்தில் களிக்கமாட்டான்
    சொன்ன சொல்லை ஒருநாளும் அழிக்க மாட்டான்
எதிராளி இருந்தாலும் ஏச மாட்டான்
    ஏழையுடன் உறவாடக் கூச மாட்டான்
பதிபோற்றும் முதலமைச்சர் காம ராசர்
    பல்லாண்டு சுகித்திருக்கக் காக்கும் ஈசன்!

உரமிகுந்த உள்ளத்தான் உண்மை யாளன்
    உற்றவர்க்கும் மற்றவர்க்கும் வண்மை யாளன்
தரமறிந்து உதவிசெய்யும் தன்மை யுள்ளோன்
    தகுதியற்ற பேர்களுக்கும் மென்மை யுள்ளோன்
பரவிஇந்த நாட்டிலுள்ள வறுமை தீரப்
    பகலிரவாய்ப் பாடுபடும் கர்ம வீரன்
விரவுபுகழ் முதலமைச்சர் காம ராசன்
    வெகுகாலம் வாழ்ந்திருக்க அருள்வான் ஈசன்!



# கால்நடை வளர்த்து மேல்நிலை பெறுவோம்!

தன்னிறைவு பெற்ற மாநிலமாகத் தமிழகத்தை மாற்றும் நோக்குடன், வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டு அரிய பல ஆக்கப்பூர்வமான கால்நடை பராமரிப்புத் திட்டங்களை அரசு செயற்படுத்தி வருகிறது.

ஆவின வளர்ப்பைப் பொறுத்த வரையில், நம் நாட்டினப் பசுக்களின் தரம் உயர்த்துவதற்குத் தேவையான அயலினக் காளைகளைப் பெருமளவில் கிடைக்கச் செய்வது அத்தியாவசியமாகும். இந்நோக்கை மனத்திற்கொண்டு, உருவாக்கப்பட்டதே தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஈச்சங்கோட்டையில் அமைக்கப்பட்டிருக்கும் அயலினக் கால்நடை வளர்ப்புப் பண்ணையாகும். முதன் முதலாக 1977ல் அடிப்படை இருப்பாக 50 ஜெர்சி இளங்கிடேரிகளும், 2 இளங்காளைகளும் ஆஸ்திரேலியாவிலிருந்து பெறப் பட்டுப் பண்ணை துவக்கப்பட்டது. 1979-ல் பெரும் முயற்சிகளுக்கு பின்னர், மேலும் 100 ஜெர்சி இளங்கிடேரிகள் ஆஸ்திரேலியாவிலிருந்து பெறப்பட்டன. தற்போது இப்பண்ணையில் கால்நடைகளின் இருப்பு 433 ஆக உயர்ந்துள்ளது. இப்பண்ணையில் பிறக்கும் சிறந்த காளைகள் செயற்கைமுறை இனவிருத்திப் பணிக்கென்று மாநிலத்தில் பல பகுதிகளில் பயன்படுத்தப்படுகின்றன.

பால் உற்பத்திக்கும், உழைப்புக்கும் ஏற்ற இரட்டைப் பயனுள்ள ஆவினங்களையே நமது விவசாயிகள் பெரிதும் விரும்புகின்றனர். எனவே, இரட்டைப் பயனுள்ள ஓங்கோல் இன மாடுகளைப் பராமரிக்கும் நிலையம் ஒன்று, அடிப்படை இருப்பாக 20 பசுக்கள், 2காளைகளுடன், முதன் முதலாக 1980-இல் ரூ. 1.9 இலட்சம் செலவில் சின்னசேலத்தில் துவக்கப்பட்டுள்ளது. பின் அங்கிருந்து மாற்றி மாதவரம் அரசு பால் மற்றும் புல்பண்ணையில் பராமரிக்கப்படுகிறது. இனவிருத்திக்கான காளைகளும் பசுக்களும் இந்நிலையத்திலிருந்து விநியோகிக்கப்படும். இதன் தற்போதைய இருப்பு 88 ஆக உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் செயற்படுத்தப்படும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் வழங்குவதற்குத் தேவையான கறவைப் பசுக்களின் தேவையை இப்போதுள்ள ஏழு மாவட்டக் கால்நடைப் பண்ணைகளினால் மட்டும் பூர்த்தி செய்ய இயலவில்லை. ஆகவே, இவ்விடர்ப்பாட்டைக் களையும் நோக்குடன் இரண்டு 'கிடேரி உற்பத்தி நிலையங்கள்' முறையே புதுக்கோட்டையிலும், உதகமண்டலத்திலும் முதன் முதலாக 1980-ல் நிறுவப்பட்டுள்ளன. இந்நிலையங்களின் மூலம் இளம் பசுக்கன்றுகள் வாங்கப்பட்டு, பருவம் எய்தும் வரை பராமரிக்கப்பட்டு சிறந்த உயர்ரகக் காளைகளுடன் கருத்தரிப்பு செய்யப்பட்டு கன்று ஈன்றவுடன் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

கால்நடை பராமரிப்பின் அதி முக்கியப் பணியான செயற்கை முறைக் கருவூட்டல் முறையில் தற்போது உலகெங்கும் பின்பற்றப்படும் முன்னேற்ற முறை திரவ விந்திற்குப் பதிலாக உறைவிந்து முறையைப் பின்பற்றுவதாகும்.

தமிழகத்திலும் இம்முறையை பின்பற்றிப் பெருமளவில் அளிக்கும் நோக்குடன், முதல் முதலில் 1977-ல் ரூ. 38.81 இலட்சம் செலவில், ஈச்சங்கோட்டையிலுள்ள பண்ணையில் டென்மார்க் அரசின் உதவியுடன் உறைவிந்து வங்கி தோற்றுவிக்கப்பட்டது.

பின்னர் 1979ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தி

ஓுள்ள அபிஷேகப்பட்டியிலுள்ள மாவட்டக் கால்நடை பண்ணையில் ரூ. 14.45 இலட்சம் செலவில் திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்து நிலையம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டது.வறட்சிப் பகுதி நிவாரணத் திட்டத்தின் கீழ் தர்மபுரி மாவட்டத்தில் இம் முறை 1979-80-ஆம் ஆண்டு முதற்கொண்டு வெற்றிகரமாகக் கையாளப்பட்டு வருகிறது. இது தவிர, 1982-83ஆம் ஆண்டில் மற்றுமொரு உறைவிந்துத் திட்டம் ரூ. 117.31 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே அதிகமான ஆடுகளைக் கொண்ட மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். ஆடுகளைச் சீரிய முறையில் பேணி, இறைச்சி உற்பத்தியை அதிகரிப்போமேயானால், வருங் காலங்களில் ஆட்டிறைச்சியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதன் மூலம் அந்நியச் செலாவணியை அதிகரிக்கச் செய்யலாம் என்பது திண்ணம். இறைச்சி உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் குடற்புழுக்கள் நீக்கத் திட்டமொன்று முதன் முதலாக 1979-80-ல் திருச்சி, புதுக்கோட்டை மற்றும் செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் துவக்கப்பட்டது.

ஆடு வளர்ப்பில் இலாபம் பெற வேண்டுமானால், ஆட்டினப் பராமரிப்பிலுள்ள பாரம்பரிய முறைகளை மாற்றி, நவீன முறைகளைப் புகுத்த வேண்டுவதும் இன்றியமையாததாகும். இதன் பொருட்டு, தரமுள்ள கடாக்கள் வழங்கப்படுகின்றன. வேலையற்ற கிராமப் புற இளைஞர்களுக்கு ஆடு பராமரிப்பில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. 1981-82-ஆம் ஆண்டில் 400 இளைஞர்கள் பயிற்சி பெற்றனர். இவ்வாண்டு 4,900 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 1971-72-ஆம் ஆண்டு முதற்கொண்டு ஆடு வளர்ப்பு கூட்டுறவு முறையில் வளர்ச்சி பெற்று வருகிறது. இது தவிர, கால்நடை சிறப்புத் திட்டங்களின் கீழ் எண்ணிறந்த ஆடு வளர்ப்பு அலகுகள் உருவாக்கப்பட்டுள்ளன. 1976-77-இல் தமிழகத்தில் 142 கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டன. 131 ஆடு வளர்ப்பு அலகுகள் வழங்கப்பட்டன. தற்போது 1376 சங்கங்களாக உயர்ந்துள்ளதுடன் 1976-77-லிருந்து 85-86 வரை 19,210 ஆடு வளர்ப்பு அலகுகள்மூலம் 40,34,10 ஆடுகள் விநியோகிக்கப்பட்டு வெற்றிகரமாக விவசாயிகளால் ஆடு வளர்ப்புத் தொழில் செய்யப்படுகிறது. இதற்கென 1976-77-லிருந்து 85-86 வரை 208.65 இலட்சம் ரூபாய் மானியமாக அளிக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டையிலுள்ள மாவட்டக்கால்நடைப்பண்ணையில் வெள்ளாடு வளர்ப்பு நிலையமொன்று முதல் முதலாக 1980-81-ல் ரூ. 15.98 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. இந்நிலையத்தில் சிறந்த பால் இனமான தென்னிச்சேரி ஆடுகள் பராமரிக்கப்படுகின்றன. இது தவிர சின்ன சேலத்திலுள்ள ஆட்டுப் பண்ணையில் பால் மற்றும் இறைச்சிக்குப் பெயர் பெற்ற சிறந்த இனமான ஜமுனாபாரி ஆடுகள் பாராமரிக்கப்படுகின்றன.

அதிக அளவில் வெள்ளாடு வளர்ப்பை நம்பியுள்ள இராமேஸ்வரம் தீவிலுள்ள தங்கச்சிமடம் பகுதியில் உள்ள மக்களுக்கு உதவி செய்யும் நோக்குடன், 1982-83-ல் புதிய திட்டமொன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஆடு வளர்ப்போர் 50 பேரைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு 50 சதம் மானிய விலையில் நபர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஜமுனாபாரி கிடா வழங்கப்படுகிறது.

கோழி வளர்ப்பு தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாக வேரூன்றியுள்ளது. கோழியின் அபிவிருத்திக்கான நடவடிக்கைகள், கோழியின அபிவிருத்திக் கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட போதிலும், கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கும் 2 குஞ்சுபொரிக்கும் நிலையங்கள் மற்றும் 29 கேந்திர கிராம நிலையங்கள் மூலம் இனவிருத்திக்கான முட்டைகளும், கோழிகளும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடம் ஒன்று பெரியார் மாவட்டத்தில்உள்ள ஈரோட்டில் ரூ. 3.18 இலட்சம் செலவில் நிறுவப்பட்டது.

கோழி வளர்ப்பைக் கூட்டுறவு முறையில் முன்னேற்றும் பொருட்டு 151 சங்கங்கள் நிறுவப்பட்டு தற்போது 18 செயல்முறையில் சங்க அங்கத்தினர்களுக்குப் போதிய வசதிகள் செய்து தரப்படுகின்றன.

பால், முட்டை, இறைச்சி மற்றும் கம்பளி போன்ற முக்கிய கால்நடை விளைபொருட்களைப் பற்றிய புள்ளி விவரங்கள் சேகரிக்கும்படியான திட்டமொன்று 1977-ல் தமிழகத்தில் முதல்முதலாகத்தோற்றுவிக்கப்பட்டது. மேற் கண்ட





ஆய்வின்படி முட்டை உற்பத்தி 1977-ஆம் ஆண்டில் இருந்ததை காட்டிலும் தற்போது 1985-86-ல் 300 சதம் உயர்ந்துள்ளது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இது கோழி வளர்ப்பில் தமிழகம் கண்டுள்ள பெரும் முன்னேற்றத்தையே தெளிவுபடுத்துகிறது.

குறைந்த காலத்தில் நிறைந்த வருவாய் அளிப்பது பன்றிப் பராமரிப்பே ஆகும். 1982-ல் வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் மொத்தமாக 125 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு ஆளுக்கு ஒரு யார்க்ஷையர் பன்றி வழங்கப்பட்டது.

1980-81-ல் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் ரூ. 32 ஆயிரம் செலவில் 40 பன்றி வளர்ப்பு அலகுகள் ஏற்படுத்தப்பட்டு அவற்றில் பன்றிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மேலும் 1982ல் சிறப்புக் கால்நடைத் திட்டத்தின் கீழ் முதன் முதலாக மதுரை மற்றும் வட ஆர்க்காடு மாவட்டங்களில் மாவட்டம் ஒன்றுக்கு, 25 விதம், ஒவ்வொரு அலகிலும் 3 பன்றிகள் கொண்ட 50 அலகுகள் மானிய உதவியுடன் விநியோகிக்கப் பட்டுள்ளன. இதுவரை மொத்தம் 200 அலகுகள் மான்ய உதவியுடன் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் சிறு விவசாயிகளுக்கு 25 சதவீதமும் (ரூ.. 1,125) குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களுக்கு 33 1/3 சதவீதமும் (ரூ.1500) மானியமாக அளிக்கப்படுகிறது. இதுவரை ரூ. 3.065 இலட்சம் மானியமாக அளிக்கப்பட்டுள்ளது.

ஆவினத் திட்டங்கள் அனைத்தின் வெற்றியும் தீவனப்பயிர் உற்பத்தியையே சார்ந்துள்ளது. எனவே, தீவனப் பயிர் உற்பத்திக்கான மூலவளத்தை மேம்படுத்துவதில் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. 1975-ம் ஆண்டு தீவனப் பயிர் விதை உற்பத்தி நிலையங்கள் இரண்டு இயங்கிவந்தன. தற்போது 8 நிலையங்கள் தீவனப் பயிர் உற்பத்தியை அதிகரிக்க உதவுகின்றன.

பல்வேறு வகையான நோய்களிலிருந்து கால்நடைகளைக் காப்பதன் மூலமே அவற்றின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்ய முடியும். எனவே தடுப்பு மற்றும் சிகிச்சை நடவடிக்கைகளில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

1971-72-ல் ஒரே ஒரு பிரதம மருத்துவ நிலையம மட்டுமே சென்னையிலுள்ள சைதாப்பேட்டையில் இயங்கி வந்தது. இதன் எண்ணிக்கை 1977-78-ல் 6 ஆகவும், தற்சமயம் 22 ஆகவும் உயர்ந்து தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன. இப்பிரதம மருத்துவ நிலையங்களில் நோய் ஆய்வுக் கூடம், அறுவைச் சிகிச்சைக் கூடம் போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

கால்நடை மருத்துவ வசதி அளிப்பதற்கு 1976-77-ல் 630 கால்நடை நிலையங்கள் இயங்கின். மேலும் 1977-78 லிருந்து ஆண்டு தோறும் அதிக மருந்தகங்கள் திறக்கப்பட்டு, 1985-86-ல் 782 நிலையங்களாக உயர்ந்து செயல்படுகின்றன.

கால்நடை நோய்ப் புலனாய்வு நிலையங்கள் முதன் முதலாக 1977-78ஆம் ஆண்டில் மதுரை, திருநெல்வேலி, வேலூர் ஆகிய மூன்று இடங்களில் நிறுவப்பட்டன. மேலும் 3 நிலையங்கள் 1978-79-ஆம் ஆண்டிலும், மற்றும் 1979-80ல் திருச்சி, சிவகங்கை ஆகிய இரண்டு இடங்களிலும் நிறுவப்பட்டன. தற்போது மொத்தம் 11 நிலையங்கள் உள்ளன. இந்நிலையங்களின் முக்கியப் பணி, நடமாடும் ஆய்வுக் கூடத்தின் உதவியோடு கால்நடைகளின் சாணம், சிறுநீர், ரத்தம் போன்றவைகளை எடுத்து, சோதனை செய்து என்னென்ன வியாதிகள், எங்கெங்கு உள்ளன என்பதைக் கண்டுபிடித்து, அதற்கான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும்.

மேலும் தமிழகத்தில் எந்தெந்தக் காலத்தில் எந்தெந்த நோய்கள் வருகின்றன என்பதையும் தயாரித்து விவசாயிகளுக்கும் தொழில் நுட்ப அலுவலர்களுக்கும் முன்னறிவிப்பு தரப்படுகிறது. இதன் மூலம் நோய்க் கிளர்ச்சித் தடுப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டு, மக்களுக்கு கால்நடை மூலம் ஏற்படும் இழப்பு தவிர்க்கப்படுகிறது. இதன் பயனாக தமிழகத்திற்கு பல இலட்சக்கணக்கான ரூபாய் மிச்சப்படுகிறது. இந்தியாவிலேயே இம்மாதிரி நிலையங்கள் தமிழகத்தில்தான் முதன் முறையாக ஏற்படுத்தப் பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

அயலின மற்றும் கலப்பினப் பசுக்களில் ஏற்படும் கோமாரி நோய் தடுப்புக்கான பணிகள் முதன் முறையாக 1980-81ஆம் ஆண்டில் ரூ. 7.40 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது.

## கால்நடை சிறப்புத் திட்டங்கள்

மத்திய அரசின் உதவியுடன் கால்நடை பராமரிப்புத்துறை சிறப்பு உற்பத்தித் திட்டங்கள் தமிழகத்தில் தேர்ந்தெடுக்கப் பட்ட மாவட்டங்களில் செயல் படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலமாக சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள், நிலமற்ற விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் ஆகியோர் பெரிதும் பயன்பெற்று வருகின்றனர்.

கால்நடை சிறப்புத் திட்டத்தின் கீழ் கலப்பினக் கன்று வளர்ப்பில் சேலம், வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, கோயமுத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் 1977-78-ஆம் ஆண்டு முதற் கொண்டு 1985-86-ஆம் ஆண்டு

முடிய 40803 விவசாயிகளுக்கு கன்று வளர்ப்பு மானியம். தீவனச் செலவிற்காக வழங்கப்பட்டுள்ளது. 487.99 இலட்சம் 9 ஆண்டுகளில் உதவப்பட்டுள்ளது.

ஆடு வளர்ப்புத் திட்டம்

கால்நடை பராமரிப்புத் துறையினரால் சேலம், வட ஆர்க்காடு மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் இத் திட்டத்தின்கீழ் 1976-77முதற் கொண்டு 1985-86 ஆண்டு முடிய 19210 விவசாயிகளுக்கு 20 செம்மறியாடுகளும் 1 ஆட்டுக் கிடாவும் கொண்ட செம்மறியாட்டுப் பிரிவுகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. மானியம் ரூ. 208.65 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

கோழி வளர்ப்புத் திட்டம், சேலம், வட ஆர்க்காடு, மதுரை மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களில் கோழியின அபிவிருத்தி நிறுவனத்தாரால் செயற்படுத்தப்படுகின்றது. இத் திட்டத்தின் மூலம் 1977-78-ஆம் ஆண்டு முதல் கொண்டு 1985-86 முடிய 3098 விவசாயிகளுக்கு முட்டையிடும் 100 கோழிகள் கொண்ட கோழி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. மானியம் ரூ. 85.27 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

பன்றி வளர்ப்புத் திட்டம் 1981-82-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. அவ்வாண்டில் 50 விவசாயிகளுக்குப் பன்றிப் பிரிவுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. 1985-86ஆம் ஆண்டுவரை 200 பன்றிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு ரூ. 3.06 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம் தருமபுரி, இராமநாதபுரம் ஆகிய இரு மாவட்டங்களிலும் 74-75-ஆம் ஆண்டுமுதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 1001 கறவைப் பசுக்களும் 502 ஆட்டு அலகுகளும் வழங்கப்பட்டுள்ளன. இதுபோலவே தொடர்ந்து செயல்பட்டு தற்போது 9 ஆண்டுகளில் இராமநாதபுரம் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு 6696 கறவைப் பசுக்களும் 2068 ஆடு அலகுகளும் வழங்கப்பட்டுள்ளன. 1870 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் 281 கறவைப் பசுக்களும், 2124 ஆட்டு அலகுகளும் 19 கோழி அலகுகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, சேலம் மற்றும் திருச்சி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இது 1976-77ஆம் ஆண்டு முதற் கொண்டு 1985-86 முடிய 2699 கறவைப் பசுக்கள் வழங்கியும் 4068 உழவு மாடுகள் வழங்கியும் 6019 செம்மறியாட்டுப் பிரிவுகள் 910 கோழி வளர்ப்புப் பிரிவுகள் மற்றும் 358 பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தியும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் கோவை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியிலும், அதைச் சார்ந்த சில வட்டாரங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1976-77லிருந்து 1985-86 வரை 3470 கிடேரி கன்றுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றிற்கு ஆகும் தீவனச் செலவினத்திற்காக சிறு விவசாயிகள், மிகச்சிறுவிவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்கு மானியம் ரூ. 39.05 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இந்த மான்யம் சிறு விவசாயிகளுக்கு 50 சதவீதமும் மிகச் சிறு விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் 66 2/3 சதவீதமும் ஆகும்.

**பால் உற்பத்தி**

| | | | |
|---|---|---|---|
| 1977-78-ல் | 1679.03 | மில்லியன் | கிலோ |
| 1978-79-ல் | 1726.58 | | |
| 1979-80-ல் | 1860.07 | ,, | ,, |
| 1980-81-ல் | 1737.93 | ,, | ,, |
| 1981-82-ல் | 1885.45 | ,, | ,, |
| 1982-83-ல் | 1788.42 | ,, | ,, |
| 1983-84-ல் | 2561.58 | ,, | ,, |
| 1984-85-ல் | 2846.13 | ,, | ,, |
| 1985-86-ல் | 3047.00 | ,, | ,, |

**முட்டை உற்பத்தி**

| | | |
|---|---|---|
| 1977-78 | 681.91 | மில்லியன் |
| 1978-79 | 782.05 | ,, |
| 1979-80 | 852.95 | ,, |
| 1980-81 | 734.75 | ,, |
| 1981-82 | 917.13 | ,, |
| 1982-83 | 898.18 | ,, |
| 1983-84 | 996.02 | ,, |
| 1984-85 | 1063.95 | ,, |
| 1985-86 | 2067.06 | ,, |

**இறைச்சி உற்பத்தி**

| | | | |
|---|---|---|---|
| 1977-78 | 31.64 | மில்லியன் | கிலோ |
| 1978-79 | 29.79 | ,, | ,, |
| 1979-80 | 25.31 | ,, | ,, |
| 1980-81 | 24.09 | ,, | ,, |
| 1981-82 | 27.20 | ,, | ,, |
| 1982-83 | 27.57 | ,, | ,, |
| 1983-84 | 31.53 | ,, | ,, |
| 1984-85 | 31.31 | ,, | ,, |
| 1985-86 | 28.33 | ,, | ,, |

**கால்நடை மருத்துவ நிலையங்கள்**

| | |
|---|---|
| 1977-78 | 633 |
| 1978-79 | 647 |
| 1979-80 | 659 |
| 1980-81 | 671 |
| 1981-82 | 693 |
| 1982-83 | 722 |
| 1983-84 | 748 |
| 1984-85 | 772 |
| 1985-86 | 782 |

**ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் எண்ணிக்கை**

| | |
|---|---|
| 1978-79 | 350 |
| 1979-80 | 350 |
| 1980-81 | 587 |
| 1981-82 | 714 |
| 1982-83 | 787 |
| 1983-84 | 1015 |
| 1984-85 | 1148 |
| 1985-86 | 1376 |

**கன்று பிறப்பு**

| | | |
|---|---|---|
| 1977-78 | 1.10 | இலட்சம் |
| 1978-79 | 1.32 | ,, |
| 1979-80 | 1.44 | ,, |
| 1980-81 | 1.55 | ,, |
| 1981-82 | 2.25 | ,, |
| 1982-83 | 2.11 | ,, |
| 1983-84 | 4.72 | ,, |
| 1984-85 | 4.25 | ,, |
| 1985-86 | 4.45 | ,, |





# பால் பெருக்குத் திட்டம்

பால் உற்பத்தியைப் பெருக்குவதும், உற்பத்தியாளர்களுக்கு இலாபகரமான விலையை அளிப்பதும், நகர்ப்புறங்களில் வாழ்ந்து வரும் மக்களுக்குத் தரமான பாலை நியாயமான விலையில் வழங்குவதும் பால் பெருக்குத் திட்டங்களின் அடிப்படையில் கொள்கைகள் ஆகும். இந்த அடிப்படையில் இந்திய அரசு பால் பண்ணைத் தொழிலைத் தீவிர முறையில் அபிவிருத்தி செய்வதற்குத் தேசிய அளவிலான பால் பெருக்குத் திட்டம் ஒன்றை அமைத்து, அனைத்து மாநிலங்களிலும் செயல்படுத்துவதற்கு நிதி உதவி வழங்கியது.

இதனடிப்படையில் நமது மாநிலத்தில் பால் பெருக்குத் திட்டம் 1972ஆம் ஆண்டில் முதல் கட்டமாக 9 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. (1 செங்கற்பட்டு, 2. வடார்க்காடு, 3. தென் ஆர்க்காடு, 4. தர்மபுரி, 5. சேலம், 6. பெரியார், 7. கோயம்புத்தூர், 8. நீலகிரி, 9. மதுரை) இத்திட்டத்தின் முதல் கட்டத்திற்கு ரூ. 15.62 கோடி செலவிடப்பட்டது. இத்திட்டத்தின் முதல் கட்டம் 1982 மார்ச் மாதத்தில் முடிவடைந்தது.

இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தும் வகையில் 1982-ஆம் ஆண்டு பால் பெருக்குத் திட்டம் (2ஆம் நிலை) ரூ.42.87 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. தற்போது தமிழ்நாட்டில் மொத்தம் 13 மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டம், தேசிய



பால் பண்ணைக் கழகம் மற்றும் இந்தியப் பால் பண்ணைக் கழகத்தின் நிதி உதவியுடன் ரூ. 56.89 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. எஞ்சியுள்ள 5 மாவட்டங்களான இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மத்திய அரசு மற்றும் மாநில அரசு உதவியுடன் பால் பெருக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

ஒருங்கிணைந்த வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களும், இவைகளை ஒன்றாக இணைத்து மாநில அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையமும் அமைக்கப்பட்டுள்ளன.

கிராமப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் சேகரிக்கப்படுகின்ற பால், பால் சேகரிக்கும் வண்டிகளின் மூலமாக அண்மையில் உள்ள பால் குளிரூட்டும் நிலையங்கள் அல்லது பால் பதனம் செய்யப்படுகின்ற ஆலைக்கு எடுத்துச் செல்லடபடுகின்றன. உள்ளூர் பால் விற்பனை மூலமாக அந்தந்தப் பகுதித் தேவைகள் முழுவதுமாகப் பூர்த்தி செய்யப்பட்டு, மீதமாகிய பால் இணையத்திற்குக் கொண்டு வரப்பட்டு நகர விற்பனைக்கும், பால்பொடி, வெண்ணெய், நெய்

போன்ற பால் பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி, உயர்ரகக் கால்நடை அபிவிருத்தி, கால்நடை தீவனம் அளித்தல், போன்ற பால் உற்பத்திக்கான வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

நமது மாநிலத்தில் பால் பெருக்குத் திட்டம் செயல்படத் தொடங்கியபின் பால் பண்ணைத் தொழில் அதிக முன்னேற்றம் அடைந்துள்ளது. குறிப்பாகக் கடந்த 9 ஆண்டுகளில் இத்தொழிலில் அடைந்துள்ள முன்னேற்றம் மற்ற மாநிலங்களின் முன்னோடியாக அமைந்துள்ளது.

கால்நடை மருத்துவத் திட்டத்தில் உயர்ரகக் காளைகளின் விந்துகளிலிருந்து உயர்ரகக் கறவை மாடுகளை உருவாக்கி வளர்ப்பது ஒரு முக்கிய அம்சமாக உள்ளது. வெகு தூரத்திலுள்ள கிராமங்களுக்கு உயர்ரகக் காளைகளின் உறைவிந்தை எடுத்துச் சென்று கலப்பின உயர்ரகக் கால்நடை வளர்ச்சி காண்பது இன்று தமிழகமெங்கும் ஒரு நடைமுறை சாத்தியமாகிவிட்டது. இரண்டாவது பால் பெருக்குத் திட்டங்கள் செயல்படும் 13 மாவட்டங்களில் 1,727 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்கை முறைக் கருத்தரிப்புப் பணி நடந்து வருகின்றது.



1977-78க்குப் பிறகு நிறுவப்பட்ட பால் பதனிடும் ஆலைகள் மற்றும் குளிருட்டும் நிலையங்கள்

| ஆண்டு<br>1. | பதன ஆலைகள்<br>2. | கொள்ளளவு (லட்சம் லிட். நாளொன்றுக்கு)<br>3. | முதலீடு (லட்சத்தில்)<br>4. | குளிருட்டும் நிலையங்கள்<br>5. | கொள்ளளவு (லட்சம் லிட். நாளொன்றுக்கு)<br>6. | முதலீடு (லட்சத்தில்)<br>7. |
|---|---|---|---|---|---|---|
| 1977-78 | ... | ... | ... | தர்மபுரி | 0.40 | 13.50 |
| | | | | திண்டுக்கல் | 0.20 | 11.50 |
| | | | | அச்சரப்பாக்கம் | 0.10 | 8.43 |
| | | | | தேனி | 0.10 | 5.70 |
| 1978-79 | ... | ... | ... | சுல்தான்பேட்டை | 0.20 | 13.12 |
| | | | | பரமத்தி வேலூர் | 0.50 | 18.17 |
| | | | | வாழைத்தோட்டம் | 0.04 | 5.00 |
| | | | | கடலூர் | 0.04 | 7.00 |
| 1980-81 | கொடைக்கானல் | 0.10 | 15.00 | ... | ... | ... |
| 1981-82 | ஈரோடு | 1.50 | 369.00 | சின்னசேலம் | 0.30 | 10.00 |
| | | | | விழுப்புரம் | 0.30 | 10.00 |
| | | | | ஆம்பூர் | 0.30 | 10.00 |
| 1982-83 | ... | ... | ... | சங்கராண்டான் பாளையம் | 0.30 | 30.00 |
| | | | | சத்தியமங்கலம் | 0.30 | 30.00 |
| 1983-84 | கிருஷ்ணகிரி | 1.00 | 350.00 | திருவண்ணாமலை | 0.30 | 10.00 |
| | சேலம் | 1.00 | 355.50 | சேத்தியாதோப்பு | 0.10 | 13.00 |
| | | | | ஆத்தூர் | 0.50 | 41.50 |
| 1984-85 | ... | ... | ... | மார்த்தாண்டம் | 0.04 | 3.65 |
| 1985-86 | ஊட்டி | 0.50 | 300.00 | திருவள்ளூர் | 0.50 | 62.00 |
| | திருநெல்வேலி | 0.50 | 160.00 | அனக்காவூர் | 0.30 | 35.00 |
| | | | | புதுக்கோட்டை | 0.10 | 19.00 |



**சென்னை நகரில் பால் பொருட்களின் விற்பனை**

| பொருட்கள் | 1980-81 | 1984-85 | 1985-86 |
|---|---|---|---|
| வெண்ணெய் (டன்களில்) | 583 | 885 | 970.80 |
| நெய் (டன்களில்) | 108 | 72 | 145.67 |
| கொழுப்பு நீக்கப்பட்ட பால் பொடி (டன்களில்) | 65 | 576 | 552.46 |

**பால் விற்பனை செய்யும் அமைப்புகள் வளர்ச்சி**

| | 1980—81 | 1984—85 | 1985—86 |
|---|---|---|---|
| பால் விற்பனை நிலையங்கள் | 454 | 498 | 516 |
| பாலகங்கள் | 47 | 52 | 53 |
| தானியங்கி நிலையங்கள் | 14 | 27 | 70 |

**பால் பொருட்கள் உற்பத்தி (டன்களில்)**

| ஆண்டு | வெண்ணெய் | நெய் | பால்பொடி |
|---|---|---|---|
| 1977—78 | 1,086.0 | 337.8 | 850.4 |
| 1980—81 | 1,177.4 | 500.6 | 767.0 |
| 1984—85 | 3,767.0 | 1.157.0 | 3,490.0 |
| 1985—86 | 4,432.0 | 2,824.0 | 4,745.0 |

**பால் பண்ணைத் தொழில் வளர்ச்சிக்குச் செலவிடப்பட்டுள்ள நிதி விவரம்**

| 1977—78 முதல் 1979—80 வரை | 1980—81 முதல் 1985—86 வரை (ரூ. இலட்சத்தில்) | மொத்தம் |
|---|---|---|
| 1,240.68 | 3,679.65 | 4,920.33 |

இன்றைய தினம் பால் பெருக்குத் திட்டங்களின் கீழ் வாரத்திற்கு ஒருமுறை கால்நடை மருத்துவர் கிராமங்களுக்கு நேரில் சென்று பார்க்கிறார். இதன்படி கால்நடை மருத்துவ வசதி விவசாயிகளின் வீட்டு வாசற்படிக்கே வந்துவிட்டது. இதுதவிர அவசர கால்நடை மருத்துவ உதவும் சங்க உறுப்பினர்களுக்கு நாள் முழுவதும் கிடைக்க வசதியுள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தம் 91 கால்நடை மருத்துவ அமைப்புகள் உள்ளன. (பால் பெருக்குத் திட்டம் செயல்படும் 13 மாவட்டங்களில் 85 கால்நடை மருத்துவ அமைப்புகளும், இதர 5 மாவட்டங்களில் 6 கால்நடை மருத்துவ அமைப்புகளும் உள்ளன) இதில் 29 அவசர அமைப்புகளாகவும் மற்றவை நடமாடும் அமைப்புகளாகவும் உள்ளன.

1985-86ஆம் ஆண்டு 7,54,980 கால்நடைகள் மருத்துவ வசதி அமைப்பின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. அத்துடன், 4,58,032 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

| | 1977-78 | 1985-86 |
|---|---|---|
| மருத்துவக் கவனிப்பில் உள்ள கால்நடைகள் | 3,75,420 | 7,54,980 |
| மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்ட கால் நடைகள் | 1,78,179 | 4,58,032 |

**பால் குளிருட்டுதலும் பதனப்படுத்துதலும்:**

கறந்த பாலின் வெப்ப நிலை 85° பாரன்கீட் ஆக உள்ளது. இந்த நிலையில் பாலை அதே நிலையில் சிறிது நேரத்திற்குத்தான் வைக்க முடியும். நுகர்வோருக்கு நல்ல நிலையில் பால் வழங்க, முதலில் குளிருட்டு நிலையங்களில் பால் குளிர வைக்கப்படுகிறது. பிறகு ஆலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பதனப்படுத்தப்படுகிறது.

ஆவின் என்பது சென்னை நகரில் எல்லா இல்லங்களிலும் தெரிந்த பெயராகும். பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனை பன்மடங்கு பெருகியுள்ளது. தரத்திற்காகவும் நியாய விலைக்காகவும் ஆவின் வெண்ணெய் சென்னையில் பெரிதும் விரும்பி வாங்கப்படுகிறது. ஆவின் பால் பொடியும் பெரிய நகரச் சந்தையில் நல்ல விற்பனையைப் பெற்றுள்ளது.

யோகாட் மற்றும் லஸ்ஸி கோடைக் காலத்தில் சிறப்பான ஆவின் பொருட்களாகும். அவை அப்போது மிக அதிக அளவில் விற்பனையாகின்றன.

சென்னை நகரெங்கும் 516 பால் விற்பனை நிலையங்கள், 53 ஆவின் பாலகங்கள், 70 ஆவின் தானியங்கி நிலையங்கள் உள்ளன. 31.12.1985-ஆம் நாள் நிலவரப்படி சென்னை நகரில் 6,00,000க்கு மேல் நுகர்வோர்கள் உள்ளனர்.



# தமிழ்நாட்டில் நூலகப் பணி

**1977 முதல், பத்தாண்டுக்காலத்தில் நூலக வளர்ச்சி விவரம்**

*நூலகங்கள்:* மாநில அளவில் உள்ள நூலகங்களின் எண்ணிக்கை 1455 லிருந்து 1531க்கு வளர்ந்துள்ளது.

*நூல்கள்:* நூல் இருப்பு 61.09 இலட்சத்திலிருந்து 108.67 இலட்சத்திற்கு அதிகரித்துள்ளது.

*வாசகர்கள்:* வாசகர்களின் வருகை 296.75 இலட்சத்திலிருந்து 334.98 இலட்சத்திற்கு உயர்ந்துள்ளது.

*உறுப்பினர்கள்:* உறுப்பினர்களின் எண்ணிக்கை 6.78 இலட்சத்திலிருந்து 10.70 இலட்சத்திற்கு உயர்ந்துள்ளது.

*பணிகள்:* உறுப்பினர்களுக்கு வழங்கிய நூல்களின் எண்ணிக்கை 64.34 இலட்சத்திலிருந்து 117.82 இலட்சத்திற்கு உயர்ந்துள்ளது.

நவீன வசதிகளுடன் நூலகக் கட்டடங்கள் அமைத்துத்தரும் தீவிரத் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் சென்னை நகரில் 6 வட்டார நூலகங்களும் 16 கிளை நூலகங்களும் கட்டப்பட்டுள்ளன. மேலும் 2 வட்டார நூலகங்களும் 18 கிளை நூலகங்களும் கட்டப்பட்டு வருகின்றன.

1980ல் திருச்சி மாவட்டத்தில் ரூ.33 லட்சம் மதிப்பீட்டில் பலமாடிக்கட்டடம் ஒன்றும் மேலும் 1982-ல் குளித்தலைபீமநகர் மற்றும் அரியலூர் ஆகிய மூன்று இடங்களில் கிளை நூலகங்களும் கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளன.

கோவை மாவட்டத்தில் இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று 1980ல் ரூ. 34 இலட்சம் மதிப்பீட்டிலும், மற்றொன்று 1984ல் 32 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டத்தில் மூன்று கிளை நூலகங்கள் கட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும் சமீபத்தில் இரண்டு புதிய கிளை நூலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளன.

வடார்க்காடு மாவட்டத்தில் 3 கிளை நூலகங்களும் திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு கிளை நூலகங்களும் மதுரை, தஞ்சாவூர், செங்கற்பட்டு, பெரியார் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஒவ்வொரு கிளை நூலகமும் கட்டப்பட்டுத் திறக்கப்பட்டுள்ளன.

கீழ்க்கண்ட மாவட்டங்களில் கிளை நூலகக் கட்டடப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மதுரை 4, செங்கல்பட்டு 3, வடார்க்காடு 4, நீலகிரி 1, தஞ்சாவூர் 2, புதுக்கோட்டை 4.

நல்ல தரமான பயன்பாடு உள்ள நூல்கள் நூல் தேர்வாணைக் குழுவின் மூலம் அனைத்து மாவட்டங்களுக்குமாகப் பொது நூலக இயக்கத்தில் தேர்வு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் 1984-85ஆம் ஆண்டில் சுமார் ரூ. 50 இலட்சம் மதிப்புள்ள நூல்களும் 1985-86ல் ரூ. 75 இலட்சம் மதிப்புள்ள நூல்களும் வழங்கப்பட்டுள்ளன.

ஆண்டு ஒன்றுக்கு நலிந்த நூலகங்களுக்கு நூல்கள் வாங்குவதற்குத் தொடர்மானியமாக 1984-85ஆம் ஆண்டு முதல் ரூ. 11 இலட்சம் வழங்கப்படுகிறது.

இராஜாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளையின் கீழ் ரூபாய் எட்டு இலட்சம் 1985-86ஆம் ஆண்டில் பெறப்பட்டு மொத்தம் பதினாறு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.







# மீன் வளம்

கடலோர மீனவர்களுக்கு மீன்பிடிப்பு இல்லாத காலங்களில் உதவி செய்யும் வகையில் ''மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்'' 1982-83-ஆம் ஆண்டிலிருந்து தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மீனவர் கூட்டுறவுச் சங்க அங்கத்தினர் ஒவ்வொருவரிடமிருந்தும் மாதம் ரூ. 10 வீதம் 9 மாதங்களுக்கு வசூலிக்கப்படுகிறது. வசூலிக்கப்பட்ட ரூ. 90 உடன் அரசின் சமபங்கான ரூ. 90ம் சேர்த்து ஆக மொத்தம் ரூ. 180 மீன் பிடிப்பு இல்லாத 3 மாதங்களுக்கு மாதம் ரூ. 60 வீதம் மீனவர்களுக்குத் திருப்பி வழங்கப்படுகிறது. இதுவரை 20,913 மீனவர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு, பயனடைந்துள்ளார்கள்.

பிரதமரின் 20 அம்சத் திட்டத்தில் ஒன்றான ''மீனவர் காப்புறுதித் திட்டம்'' தமிழக அரசால் 1-1-84 முதல் அமல்படுத்தப்படுகிறது. இதற்காக இத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட மீனவர்கள் செலுத்த வேண்டிய ஆண்டு பிரிமியம் ரூ. 12-ம் மாநில அரசும் மத்திய அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டத்தின் கீழ் விபத்தில் உயிரிழக்கும் மீனவர் குடும்பத்திற்கு ரூ. 15,000 உதவித் தொகை வழங்கப்படுகிறது.

அதேபோன்று முழுவதும் தொழில் செய்ய இயலாது ஊனமுற்றோருக்கும் அதே தொகை வழங்கப்படுகிறது. அதே சமயம் ஒரு கண் பார்வை இழப்பு, ஒரு கால் இழப்பு அல்லது ஒரு கை இழப்பு ஆகிய பாதிப்புகளுக்கு உள்ளான மீனவருக்கு ரூ. 7500 உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதுவரை 1,16,264 மீனவர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதுவரை 143 மீனவ குடும்பங்கள் இதனால் பயனடைந்துள்ளன.

இலங்கைக் கடற்படையின் துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழக்கும். மீனவர்களுக்கு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக உதவித் தொகை வழங்க வசதியாக ரூ. 50,000 இருப்புடன் கூடிய சுழல் நிதி 1985-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இச்சுழல் நிதியிலிருந்து இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழக்கும் மீனவர் குடும்பத்தினருக்கு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் மூலம் ரூ. 2,000 உதவித் தொகை வழங்கப்படும். காயமடைந்த மீனவருக்கு உதவித் தொகையாக ரூ. 500 வழங்கப்படும்.

1977-78ஆம் ஆண்டு முதல் 1984-85-ஆம் ஆண்டு வரை 7,713 வீடுகள் கடல் மீனவர்களுக்குக் கட்டித் தர அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வீடுகள் ஒவ்வொன்றும் 207 மற்றும் 237 சதுர அடியில் ரூ. 9,460 மற்றும் ரூ. 9,850 செலவில் கட்டி மீனவர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. இவ்வீடுகளில் வலைகளை வைத்துக் கொள்ளவும், சமையல் செய்யவும் இட வசதிகுறைவாக இருந்ததால் 248 சதுர அடி பரப்பில் கூடுதல் வசதியுடன் கூடிய வீடுகள் புதிதாக வடிவமைக்கப்பட்டு ஒவ்வொன்றும் ரூ. 16,000 செலவில் 300 வீடுகள் கட்ட அரசு 1985-86ல் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கம் மட்டுமே இருக்க வேண்டும் என்றும், இச்சங்கம், அந்த வட்டத்தின் பேரிலேயே இருக்க வேண்டும் என்றும் அரசு சமீபத்தில் ஆணை பிறப்பித்துள்ளது.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பெருமளவில் நிதியுதவி அளிக்கப்படுவதால், இக்கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படும் முறையைச் சீர்படுத்தி மேம்பாடு செய்தல் அவசியமாகும். சங்கங்களின் நிர்வாகத் திறனை மேம்படுத்தி அவைகள் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம், வணிக வங்கிகள், இன்னும் பிற நிதி நிறுவனங்களின் உதவியுடன்

பெரிய மீன்பிடி திட்டங்களைச்செயல்படுத்த உதவியாக அவைகளுக்கு 1983-84-ஆம் ஆண்டு முதல் 1985-86-ஆம் ஆண்டு வரை 200 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு எழுத்தர் நியமிக்க நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

பல கூட்டுறவுச் சங்கங்கள் தேவையான நிதிவசதி இல்லாமல் நலிவுற்று இருக்கின்றன. மேலும் மீன் விற்பனை மற்றும் மீனவர்களுக்குத் தேவையான மீன்பிடி உபகரணங்கள் வாங்கி மீனவர்களுக்கு வழங்க அவைகளிடம் போதுமான முதலீடு இல்லை. எனவே மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் குறையைப் போக்க 1984-85 முதல் 1985-86 வரை 65 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 9.25 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மீனவ மகளிர் முன்னேற்றத்திற்காக ஒரு முன்னோடித் திட்டம் 1981-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, அத்திட்டம் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்க அமைப்புகளின் மூலமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. மீன் விற்பனை செய்யக் கடனுதவி, சேமிப்பு, வலைப்பின்னுதல், தையல், கைத்தொழில், நியாய விலைக் கடைகள் நடத்துதல், மலிவு விலையில் கட்டுப்பாடான துணிகளை விற்பனை செய்தல், பாலர் பள்ளி ஆரம்பித்தல் ஆகிய பணிகள் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் மீனவ கிராமங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. தற்பொழுது 32 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன.

உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக மதுரை மற்றும் தென்னார்க்காடு மாவட்டங்களிலுள்ள பொதுப் பணித்துறை மற்றும் வருவாய்த் துறைக்குச் சொந்தமான பெரிய, சிறிய நீர்ப்பாசன ஏரிகளில் தீவிர மீன்வளர்ப்பு மற்றும் மீன் பிடிப்புத் திட்டம் 1984-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன்படி தென்னார்க்காடு மாவட்டத்தில் 20,000 எக்டேர் பரப்பிலும் மதுரை மாவட்டத்தில் 10,000 எக்டேர் பரப்பிலும் தரமான அதிக அளவிலான மீன்குஞ்சுகள் இத்துறையே இருப்புச் செய்து, அந்தந்தப் பகுதிகளில் அமைந்துள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களைக் கொண்டு மீன்பிடிப்புச் செய்து, பிடிக்கப்படும் மீனை மீன்துறையும் மீனவர் சங்கங்களும் சமமான அளவில் பகிர்ந்து கொள்கின்றன.

கூட்டின மீன்வளர்ப்பு மூலம் எக்டேர் ஒன்றுக்கு 1,000 கிலோ மீன் உற்பத்தியை அடைய பஞ்சாயத்து மற்றும் இதர துறைகளுக்குச் சொந்தமான குளங்கள் மற்றும் ஏரிகள் நீண்டகாலக் குத்தகையின் அடிப்படையில் எடுத்துக் கொண்டு மீன்வளர்ப்போருக்கு 10 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விடப்படுகின்றன. இத்திட்டத்தினைச் செயல்படுத்த 1977-78 முதல் 1985-86 வரை 11 மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அமைக்கப்பட்டு அவைகளின் மூலம் 2745.083 எக்டேர் பரப்புள்ள 2,768 குளங்கள் 3,159 மீன் வளர்ப்போருக்கு வழங்கப்பட்டுள்ளன.

இரவு நேரங்களில் மீன்பிடி படகுகள் பாதுகாப்பாகக் கரைக்கு வந்துசேர வழிகாட்டி விளக்குகள் உதவி புரிகின்றன. 1979-80-ஆம் ஆண்டிலிருந்து 1985-86-ஆம் ஆண்டு வரை 47 கிராமங்களில் இவ்விளக்குகள் அமைத்துத்தர அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

சிறு மீனவர்கள் தங்களுடைய நாட்டுப்படகுகள் மற்றும் கட்டுமரங்களின் மீன்பிடி திறனை அதிகரித்துத் தங்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள, இப் படகுகளுக்கு உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் 20





சதவீதம் மானியத்துடன் 1981-82 முதல் 1986-87 வரை 327 இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

விசைப்படகுகளின் விலை வெகுவாக அதிகரித்துவிட்டதால், அவைகளுக்குப் பதிலாகக் கண்ணாடி இழைப் படகுகள் உபயோகிப்பது நலமெனக் கருதப்பட்டது. இதன்படி இதுவரை 49 கண்ணாடி இழைப்படகுகள் 20 சதவீதம் மானியத்துடன் 15 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

நாட்டுக் கலங்கள், கட்டுமரங்கள், வள்ளங்கள் இவற்றின் மீன்பிடி திறன் மிகவும் குறைவு. எனவே இவைகளுக்கு மாற்றாக ஒரு கலனை உருவாக்கும் அவசியம் உணரப்பட்டது. சென்னையிலுள்ள வங்காள விரிகுடாத் திட்ட அலுவலகம் பல்வேறு சோதனைகளை நடத்தி, முடிவாகக் கட்டுமரம் போன்ற நாட்டுப்படகுகளைப் போல் அவைகளைக் கடந்து செல்லக்கூடிய கரையேற்றும் படகினை வடிவமைத்து வெற்றிகரமாகச் சோதித்துள்ளது. இப்புதிய படகினை மீனவர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்குடன் 1985-86-ல் 45 சதவீதக் கடன் மற்றும் 50 சதவீதம் மானியத்துடன் இரண்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 15 கரை






யேறும கலன்கள் வழங்க அரசு ஒப்புதல் தந்துள்ளது.

நாட்டுப்படகு மீனவர்களின் நலனுக்காக ஆண்டுதோறும் ரூ. 8 இலட்சம் மதிப்பில் கடன் மற்றும் மான்ய அடிப்படையில் நைலான் நூல் விநியோகமும் இத்துறை மூலம் செய்யப்பட்டு வருகின்றது.





# தொழிலாளர் நலன் காப்போம்

தொழிலாளர் நலன் கருதி, தமிழ்நாடு அரசு தொழிலாளத் தோழர்களுக்கு அளித்துள்ள சலுகைகள் அளவற்றவைகளாகும்.

'காண்பதெலாம் தொழிலாளி
செய்தான்-அவன்
காணத் தகுந்தது வறுமையோ?
பூணத் தகுந்தது பொறுமையோ?'

—என்று மனங்குமுறிப் பாடினார் பாவேந்தர் பாரதிதாசனார்.

அந்த நிலை நீங்கிட இந்த அரசு ஒன்பதாண்டுக் காலமாக ஓய்வின்றி ஆற்றிவரும் உன்னதப் பணிகள் எண்ணியெண்ணி மகிழத்தக்கவைகளாகும்.

அதுபற்றிய விவரங்களின் தொகுப்பே இந்தக் கட்டுரை.

தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு விசாரணையில் இருக்கும் பணியாளர்களுக்குத் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள கால அளவிற்குக் கீழ்க்கண்ட அளவில் வாழ்க்கைப்படி வழங்க-நிர்வாகங்களைப் பொறுப்பேற்கத் தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கல் சட்டம் 1981 வழிவகை செய்கிறது.



முதல் 90 நாட்களுக்கு: சம்பளத்தில் 50 சதவிகிதம்.

91 முதல் 180 நாட்கள் வரை: சம்பளத்தில் 75 சதவிகிதம்.

180 நாட்களுக்கு மேல் : முழுச்சம்பளம்.

இச்சட்டம் 1-1-1982 முதல் அமல்படுத்தப்படுகிறது.

24 மாதங்களில் 480 நாட்கள் தொடர்ச்சியாகப் பணி புரிந்த எந்தத் தொழிலாளியின் பணியினையும் நிரந்தரமாக்கச் சட்டம் வழிவகை செய்கிறது. தொழிலாளியினால் அல்லது பணியில் ஏற்படும் எந்தத் தொடர்ச்சியின்மையையும் நிரந்தரம் செய்வதற்காகக் கணக்கில் சேர்த்துக் கொள்ளலாம் என்ற நிபந்தனை இச்சட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இதனால், எந்த நிர்வாகமும் தொழிலாளர்களைப் பணியிலிருந்து விலக்கி, அதனால் பணித் தொடர்ச்சி இல்லாமல் செய்ய முடியாது.

இச்சட்டம் 1-1-1982 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இச்சட்டம் தற்போது 20 மற்றும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் நிறுவனங்ளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு கைத்தறி நெசவா வாளர்கள் (வேலை முறைமற்றும் இதர வகைகள்) சட்டம் 1981 தொழிலாளர் - தொழிலதிபர் உறவு, ஊதியம் வழங்குவதற்கான விதிமுறைகள், தொடாச்சியாகப் பணி, சுகாதாரம் மற்றும் இதர நலன்களை அளிக்க வழிவகை செய்கிறது. அமைப்பிற்குட்படாத அதிக எண்ணிக்கையுள்ள இவ்வகைத் தொழிலாளர்களின் நலனுக்காக ஒரு சட்டம் ஏற்படுத்துவது இந்தியாவிலேயே இதுதான் முதல்முறை ஆகும்.

12-3-1982 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட இச்சட்டம் உயர்நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டு இருந்தது. ஆனால் தற்போது இத்தடை நீக்கப்பட்டு இச்சட்டம் அமல்படுத்தப்படுகிறது.

தொழில் தகராறு சட்டம், பிரிவு 10-பி-யின் கீழ் அரசு தொழிற் தகராறுகளைத்தொழில் நீதிமன்றங்களின் தீர்ப்பிற்காக விடும்போது தொழில் அமைதி காத்தல், சட்டம் ஒழுங்குமுறை மற்றும் அத்தியாவசியப் பண்டங்களின் தொடர்ந்த விநியோகம் ஆகியவற்றை ஏற்படுத்த அதாவது இச்சமயங்களில் தொழிலாளர்களுக்கும், தொழிலதிபர்களுக்கும், தேவையான உத்தரவுகளைப் பிறப்பிக்கவும், மற்றும் பொதுப்பயன் பணிகளில்(பப்ளிக் யூடிலிட்டி சர்வீஸ்) ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளை மூடாமலிருக்கவும் ஆணைகள் பிறப்பிக்கவும் அரசுக்குச் சில பிரத்தியேகமான அதிகாரங்கள் தேவைப்படுகின்றன. இக்கருத்தை மனத்தில் கொண்டு இவ்வரசு தொழில் தகராறு சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வந்துள்ளது. இச்சட்டம் 15-8-1982 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், 1982-என்கிற இச்சட்டம் அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களாகிய உடலுழைப்புத் தொழிலாளர்களின் வேலை மற்றும் இதர பணி நிலைமைகளை முறைப்படுத்துகிறது. இச்சட்டம் விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

கட்டடம் கட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ள அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் பணி நிலைமைகள், வேலை முறைப்படுத்துதல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவைகளை அளிக்க இவ்வரசு ஒரு சட்டம் இயற்றியுள்ளது. இச்சட்டம் விரைவில் அமல்படுத்தப்படும்.

1965-ஆம் ஆண்டு சிறப்பூதியச் (போனஸ்) சட்டம் 1-க்கு மேல் 19-க்குள்ளாக ஆட்களை வேலைக்கு அமர்த்தும் தொழிற்சாலைகள், கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள் மற்றும் பத்திரிகை நிறுவனங்கள் ஆகியவற்றிற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

எல்லாத் தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழும் தொழிலாளர் துறை அலுவலர்கள், தொழில் வழக்கு மன்றங்கள், தொழில் தீர்ப்பு மன்றங்கள் முன்பாகத் தொழிலாளியினாலோ அவரின் சார்பிலோ தரப்படும் மனுக்களுக்கு முத்திரைக் கட்டண விலக்களிக்கப்படுகிறது.

தொழிற்சாலைகள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு தயாரிக்கும் நிறுவனங்கள், கடைகள், நிறுவனங்கள் முதலியவற்றில் பணியாற்றும் தொழிலாளர்களில் இதுவரை அவர்கள் மேற்கண்ட நிறுவனங்களில் பணியாற்றிய காலம், அல்லது பெற்ற ஊதியம் பற்றிய எந்தவிதச் சான்றும் அவர்கள் கைவசம் இல்லாதிருந்தது. அதனால் அவர்களால் சட்டப்படிப் பெற வேண்டிய சலுகைகளைப் பெற இயலாமல் இருந்து வந்தது. இந்த நிலைமையை மாற்றும் வகையில் இந்த அரசு அந்தத் தொழிலாளர்களுக்கு மேற்படி நிறுவனங்கள் (பணிச்சீட்டு/நேர அட்டை) சர்வீஸ் கார்டு/டைம் கார்டு கட்டாயமாக வழங்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது.

1948-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் கீழ் மாநில அரசு சம்பந்தப்பட்ட அட்டவணையிலுள்ள வேலைகளுக்கும், தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டத்தின் விதிகளை அரசு தற்போது நீட்டித்துள்ளது. இதன் பலனாக இந்த நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களும், தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள் பெற உரிமை பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிச் சட்டத்தினைத் திருத்தியதன் மூலம், தற்சமயம் இச்சட்டத்தினை 5 நபர்கள் மற்றும் அதற்கு மேல் பணியாற்றும் உணவு விடுதிகள் மற்றும் கடைகள் நிறுவனங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தத் திருத்தச் சட்டம், தொழிலாளர்கள் மற்றும் தொழிலதிபர்களின் சந்தாவினை முறையே ரூ. 1 லிருந்து ரூ. 2 ஆகவும், ரூ. 2-விருந்து ரூ. 4 ஆகவும் உயர்த்த வழி வகை செய்துள்ளது. இது தவிர அரசுத் தரப்பிலும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 2 சந்தா அளிக்க வகை செய்கிறது. இத்திருத்தச் சட்டம் 15.9.82 முதல் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள கடைகள், நிறுவனங்கள் மற்றும் உணவு விடுதிகளின் பெயர்ப் பலகைகள் தமிழிலும் எழுதப்பட வேண்டும் என்பதற்காக, இவ்வரசு 1948-ஆம் ஆண்டில் தமிழ்நாடு கடைகள் மற்றுய நிறுவன விதிகள் மற்றும் 1959-ஆம் ஆண்டின் தமிழ்நாடு உணவு விடுதிகள் ஆகியவற்றில் ஏற்கெனவே திருத்தங்கள் கொண்டு வந்துள்ளது. எனினும் தமிழ்மொழிக்கு மேலும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று இவ்வரசு விரும்பியதால் 1948-ஆம் ஆண்டின் தமிழ்நாடு கடைகள் நிறுவன விதிகள் (விதி 15) மற்றும் 1959ம் ஆண்டின் தமிழ்நாடு உணவு விடுதிகள் விதிகள் (விதி 42 பி) ஆகியவற்றில் தக்க திருத்தங்கள்கொண்டு வந்துள்ளது. இதன்படி இம்மாநிலத்திலுள்ள கடைகள், நிறுவனங்கள் மற்றும் உணவு விடுதிகளின் பெயர்ப் பலகைகளில் பெயர்கள் தமிழ் மொழியில் முதலிலும், மற்றும் இதர மொழிகளை விடப் பெரிய அளவிலும் மேலும் சீர்திருத்தத் தமிழிலும் எழுதப்பட வேண்டும்.

சிறந்த தொழில் உறவுக்கான பரிசுத் திட்டத்தின் கீழ் நிர்வாகத்தினருக்கும் தொழிற் சங்கத்தினருக்கும் சிறப்புப் பரிசு



**தொழில்**

1970 ஆம் ஆண்டில் தொழில் உற்பத்திக் குறியீட்டை 100 என்று கொண்டால் 1977 இல் அது 141.1 ஆகும். 1982 இல் இக்குறியீடு அகில இந்தியாவிலும் 172 ஆக இருந்தது. ஆனால் தமிழகத்தின் குறியீடு 213.3 என்னும் உயர்ந்த அளவை எட்டியிருக்கிறது.

**வேளாண்மை**

எக்டேருக்கு 100 மெட்ரிக் டன் கரும்பு உற்பத்தி செய்து உலக சாதனையை நிகழ்த்தியதும், இந்தியாவிலேயே உயர்ந்தபட்ச கரும்புக்கு விலையை நிர்ணயித்திருப்பதும் தமிழக அரசு வேளாண்மைத் துறையில் நிகழ்த்திய சாதனைகள் ஆகும்.



களை வழங்குவதன் மூலம் நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே சிறந்த தொழில் உறவைப் பராமரிக்கவும், அதைத் தொடர்ந்து பாதுகாத்து வரவும் ஊக்குவிப்பதற்காக 1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு சிறந்ததொரு நடவடிக்கை எடுத்தது. பரிசு பெறுவதற்கு உரியவர்களைத் தேர்ந்தெடுக்க ஒய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் இயங்கி வரும் குழு பரிசு பெறும் நிர்வாகத்தினரையும், தொழிற்சங்கங்களையும் தேர்ந்தெடுக்கிறது. இத்திட்டத்தின் கீழ் முதல் பரிசாக ஒரு சுழற்கேடயமும் மற்றொரு நிரந்தரக் கேடயமும், மற்றும் 2 ஆம் பரிசாகச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.



**முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி அளித்தல் (1977 முதல் 1986 மார்ச் வரை)**

தொழில் தகராறுகளுக்குத் தீர்வு காணப்பட்டதோடு மட்டுமல்லாமல் தொழிற்சாலைகள் மூடப்பட்டதன் விளைவாகத் தொழிலாளர்கள் அடையும் துயரைப் போக்க அரசு கீழ்க்காணும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி அளித்துள்ளது.

1. சேலத்திலுள்ள செளத் இந்தியா கிளாஸ் அண்டு எனாமல் ஒர்க்ஸ் லிமிடெட் நிறுவனத்தைச் சேர்ந்த 330 நிரந்தரத் தொழிலாளர்களுக்கு தலா ரூ. 100 வீதம் 1-10-77 அன்று வழங்கப்பட்டது.

2. குரோம்பேட்டையிலுள்ள குரோம் லெதர் தொழிற்சாலையைச் சேர்ந்த 390 தொழிலாளர்களுக்குத் தலா ரூ. 200 வழங்கப்பட்டது.

3. 14-1-80 அன்று சென்னையிலுள்ள பைலட் பேனா கம்பெனியைச் சேர்ந்த 218 தொழிலாளர்களுக்கு தலா ரூ. 200 வழங்கப்பட்டது.

4. 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சென்னை பாலு கார்மென்ட்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த 275 தொழிலாளர்களுக்குத் தலா ரூ. 200 வழங்கப்பட்டது.

5. 1981-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் சென்னையிலுள்ள கேன்ஜஸ் பிரிண்டிங் இங்க் தொழிற்சாலையைச் சேர்ந்த 78 தொழிலாளர்களுக்கு தலா ரூ. 200 வழங்கப்பட்டது.

6. சென்னையிலுள்ள பி & சி மில் நிறுவனத்தைச் சேர்ந்த 13,000 தொழிலாளர்களுக்குத் தலா ரூ. 200 வீதம் வழங்க ரூ. 26 இலட்சம் அளிக்கப்பட்டது. இத்தொகைதொழிலாளர்களுக்கு 6-5-81 அன்று வழங்கப்பட்டது. தொழிலாளர்களின் நலனுக்காக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து இவ்வளவு தொகை வழங்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

## 1982

7. கோவையிலுள்ள ஜோதி மில்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த 707 தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 200 வழங்கப்பட்டது.

8. கோயம்புத்தூரிலுள்ள ஜெயலட்சுமி மில்ஸ் நிறுவனம் நிதி பற்றாக்குறை காரணமாக அக்டோபர் 1981-ல் மூடப்பட்டது. இந்நிறுவனம் கடந்த 8-9-82 அன்று மீண்டும் திறக்கப்பட்டது. இந்நிறுவனத்தைச் சேர்ந்த 675 தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 200 வழங்கப்பட்டது.

## 1983

9. சென்னையிலுள்ள டிரான்ஸ்பார்மர் ஸ்விட்ச்கியர் லிமிடெட்நிறுவனத்தைச் சேர்ந்த 220 தொழிலாளர்களுக்குத் தலா ரூ. 250 வழங்கப்பட்டது.

10. திருப்பூரிலுள்ள ஸ்ரீ ராமலிங்க சூடாம்பிகை மில்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த சுமார் 1400 தொழிலாளர்களுக்குத் தலா ரூ. 500 வழங்கப்பட்டது.

11. நீலகிரியில் அருவங்காட்டிலுள்ள கார்டைட் பேக்டரியில் பணிபுரியும் 7 தொழிலாளர்களுக்குத் தலா ரூ. 1,000 வீதம் இந்நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

## 1984

12. கோவையில் உள்ள ஜனார்த்தனா மில்ஸ் லிமிடெட்டில் உள்ள 604 தொழிலாளர்களுக்கு ரூ.200 வழங்கப்பட்டது.

13. கோவை ஆண்டிப்புதூரிலுள்ள தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்லில் பணிபுரியும் 250 தொழிலாளர்களுக்குத் தலா ரூ. 200 வழங்கப்பட்டது.

14. கோவை மாவட்ட காளப்பட்டியிலுள்ள பத்மா மில்ஸ் தொழிற் சாலையில் பணிபுரிந்த 150 தொழிலாளர்களுக்குத் தலா ரூ. 200 வழங்கப்பட்டது.

## 1985

15. கோவையிலுள்ள ஸ்ரீ ஹரி மில்ஸ் தொழிற்சாலையில் பணிபுரிந்த 657 தொழிலாளர்களுக்கு தலா ரூ. 200 வழங்கப்பட்டது.

## 1986

16. கோவை மாவட்டத்திலுள்ள வசந்தா மில்ஸ் தொழிற்சாலையில் பணிபுரிந்த 1351 தொழிலாளர்களுக்கு ரூ. 200 உதவிப் பணம் அளிக்க (அரசு ஆணை எண். 565 நாள் 12-3-86,ன் படி) அரசு உத்தரவிட்டது.

17. கோவை மாவட்டத்திலுள்ள இராமகிருஷ்ணா இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் என்ற நிர்வாகத்தில் பணிபுரிந்த 400 தொழிலாளர்களுக்கு ரூ. 200 வீதம் உதவி வழங்கப்பட்டது.

18. இந்தியா போர்ஜ் ட்ராப் ஸ்டாம்பிங்க்ஸ் லிமிடெட், சென்னை என்ற தொழிற்சாலையில் பணிபுரிந்த சுமார் 490 தொழிலாளர்களுக்கு ரூ. 200 வீதம் வழங்க அரசு ஆணை எண் 6, நாள் 3-1-86-ன் படி அரசு உத்தரவிட்டபடி தொழிலாளர்கட்குப் பணம் வழங்கப்பட்டது.

**1-7-1977-க்குப் பின், குறைந்த பட்ச ஊதியத்தின் கீழ் இவ்வரசு அளித்த சலுகைகள்**

1. இவ்வரசு பதவி ஏற்றபின் (1977க்குப் பின்) புதியதாக குறைந்த பட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் சேர்க்கப்பட்ட தொழில்கள்—14

2. இவ்வரசு பதவி ஏற்றபின் குறைந்தபட்ச ஊதியம் முதன் முதலாக நிர்ணயிக்கப்பட்ட தொழில்கள்—17

3. இவ்வரசு பதவி ஏற்றபின் குறைந்தபட்ச ஊதியம் திருத்தி அமைக்கப் பெற்ற தொழில்கள்—33

நெசவாளர்களுக்கான விபத்து உதவித் திட்டத்தைப் போன்று, தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணி புரியும் 14 வயது முதல் 65 வயது வரையுள்ள தொழிலாளர்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் இவ்வரசு ஒரு விபத்துதவித் திட்டத்தை அறிவித்துள்ளது. தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் விபத்தின் காரணமாக இறந்தாலோ, உடலுறுப்புக்கள் அல்லது கண் பார்வை இழக்க நேரிட்டாலோ, உதவித் தொகை கிடைக்க இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டம் நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனியின் உதவியுடன் அமல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் முதலில், தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகள் அதிகமுள்ள காமராசர் மாவட்டத்தில் அமல்படுத்தப்படும். இதில் 14 முதல் 65 வயது வரையிலுள்ள தொழிலாளர்கள் உறுப்பினர்களாகச் சேரலாம். இத்திட்டத்திற்கான சந்தாத் தொகை ஒரு நபருக்கு ஒரு வருடத்திற்கு 7 ரூபாயாகும். இன்ஷூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்தி, அதனைப் பின்னர் தொழிலாளரின் போனஸ்/சம்பளத்தில் பிடித்தம் செய்து கொள்வார்.

இத்திட்டத்தின்படி தொழிலாளர்கள் விபத்தில் இறக்க நேரிட்டாலும், நிரந்தர ஊனமுற்றாலும் ரூ. 16,000 உதவித் தொகையாகக் கிடைக்கும். நிரந்தர ஊனமில்லாத மற்ற விபத்துகளுக்கு, ஊனத்தைப் பொறுத்து உதவித் தொகை கிடைக்கும்.

இத்திட்டத்தை அமல் செய்வதில் சிவகாசி தொழிற்சாலை துணைத் தலைமை ஆய்வர் முக்கியப் பங்காற்றுவார்.

**நெசவாளர்களுக்கு இன்ஷூரன்ஸ், விபத்து உதவித் திட்டம்**

நெசவாளர்களுக்கு இன்ஷூரன்ஸ் இணைந்த பணி ஓய்வுத் திட்டம் ஒன்றையும், விபத்து உதவித் திட்டம் ஒன்றையும் இவ்வரசு அறிவித்துள்ளது.

தனியார் மற்றும் கூட்டுறவுத் துறை நெசவாளர்களுக்கும் இன்ஷூரன்ஸ் இணைந்த பணி ஓய்வுச் சலுகைத் திட்டம் பொருந்தும்.

இதன்படி உறுப்பினராகப் பெயரைப்பதிவு செய்துகொண்ட ஒரு நெசவாளி தனது 58-வது வயது வரை மாதம் ரூ. 10 செலுத்தி வரவேண்டும். 58 வயது முடிவில் அந்த உறுப்பினர் செலுத்திய மொத்தத் தொகை, அதற்குண்டான வட்டி எல்லாம் சேர்த்து 33 ஆயிரத்து 500 ரூபாய் பெறுவார்.

இடையில் அந்த உறுப்பினர் இறந்து போனால் அவர் வாரிசுக்கு ரூ. 5 ஆயிரமும் அந்த உறுப்பினர் இறக்கும் வரை கட்டிய தொகையையும் வட்டியும் சேர்த்து வழங்கப்படும்.

தனியார் துறை நெசவாளர்களுக்கு விபத்து உதவித் திட்டம் அமல்படுத்தப்பட இருக்கிறது.

இதன்படி நெசவாளர், பணியில் இருக்கும்போது விபத்தில் இறந்து விட்டாலோ, உடல் உறுப்புக்களை இழந்து விட்டாலோ அவருக்கோ அவர் வாரிசுக்கோ ரூ 10 ஆயிரம் நஷ்டஈடாகத் தரப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் இந்தத் திட்டங்களுக்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்கள் வேறு எந்த மாநிலங்களிலும் நிறைவேற்றப்படாத புதுமையான திட்டங்களாகும்.

**ஆயுள் காப்புறுதி, பணி ஓய்வு கல சிறப்புத் திட்டம்**

சிறிய ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள், உழவுத் தொழிலாளர்கள், கிராமக் கைவினைஞர்கள், கட்டிடத் தொழிலாளர்கள், சுமை ஏற்றி இறக்கும் தொழிலாளர்கள், கைவண்டி இழுப்பவர்கள், துணி வெளுப்பவர்கள், முடி திருத்துபவர்கள் ஆகியோரை இதற்கென தொடங்கப்பட்ட சிறப்புத் திட்டத்தில் சேர்த்து, அவர்களிடமிருந்து திங்கள் தோறும் சிறு சந்தாத் தொகையை வசூலிப்பதன் மூலம் அவர்களுக்கு ஆயுள் காப்புறுதியும் பணி ஓய்வுப் பலன்களும் கிடைக்கச் செய்யும் திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1984-ஆம் ஆண்டு சுதந்திர தினக் கொண்டாட்டத்தின்போது அறிவித்த மக்கள் நலத் திட்டங்கள் பலவற்றுள் ஒன்றாகும். இதன்படி, ஆயுள் காப்புறுதி பணி ஓய்வு நலச் சிறப்புத் திட்டத்தை அரசு அனுமதித்தது.



இம்மாநிலத்தில் 18 வயது முதல் 58 வயது வரையுள்ள உழவுத் தொழிலாளர்கள், சிறு, ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள், கிராமக் கைவினைஞர்கள், சுமை ஏற்றியிறக்கும் தொழிலாளர்கள், கை வண்டி இழுப்பவர்கள், துணி வெளுப்பவர்கள், முடி திருத்துபவர்கள், லாரி ஓட்டுநர்கள், லாரி துடைப்பவர்கள், டாக்சி ஓட்டுபவர்கள், ஆட்டோ ஓட்டுபவர்கள், சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர்கள், காய்கறிகள், பழங்கள் உப்பு முதலியவற்றை விற்பவர்கள் ஆகியோர் இத்திட்டத்தின் மூலம் பயனடைவர்.

இத்திட்டத்தில் சேர விரும்புவோர் திங்கள் தோறும் 10 ரூபாய் வீதம் அவர்கள் 58 வயது அடையும் வரை செலுத்த வேண்டும். இத்திட்டம், ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படும். உறுப்பினர் ஒவ்வொருவரும் ஆண்டொன்றுக்குப் பிரிமியத் தொகையாக 45 ரூபாயை ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடம் செலுத்துவர். ஒருவர் இறக்க நேர்ந்தால், தொழிலாளரின் நேமகதாரருக்கு ஆயுள் ஈட்டுறுதி கழகம் 5,000 ரூபாய் வழங்கும். அதனுடன் அவ்வுறுப்பினர் செலுத்திய தொகையைப் பொறுத்து சரகம் ஓரளவு தொகையை வழங்கும்.

58 வயது முடிந்தவுடன் அவர் தொகை செலுத்திய கால அளவிற்கேற்ப, பணி ஓய்வுப் பலனாக அவ்வுறுப்பினருக்குத் தொகை வழங்கபபடும். 10 ஆண்டுகள் தொகை செலுத்திய உறுப்பினர் 1,200 ரூபாயும், 20 ஆண்டுகளுக்கு 4,300 ரூபா

யும், 25 ஆண்டுகளுக்கு 7,400 ரூபாயும், 30 ஆண்டுகளுக்கு 12,400 ரூபாயும், 35 ஆண்டுகளுக்கு 20,400 ரூபாயும், 40 ஆண்டுகளுக்கு 33,500 ரூபாயும் பெறுவார்.

இத்திட்டத்தில் சேர்ந்த பின்னர் இறந்துவிட்ட 215 பேருக்கும் அதிகமானவர்களுக்கு ஈட்டுறுதித் தொகை 5,000 ரூபாயை இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் இதுவரை வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்குப் பொதுமக்களிடமிருந்து நல்ல வரவேற்புக் கிட்டியுள்ளது.

**விபத்து நிவாரணத் திட்டம்**

இத்திட்டம் உழவுத் தொழிலாளர்கள், சிறு - ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள், கிராமக் கைவினைஞர்கள் ஆகியோருக்கான "விபத்து நிவாரணத் திட்டம்'' எனப் பெயர் பெறும். நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள் 2.5 ஏக்கருக்கும் குறைவாக நிலம் வைத்திருக்கும் சிறு-ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள், கிராமக் கைவினைஞர்கள் ஆகியோர் தொழிலில் ஈடுபட்டிருக்கையில் விபத்துக் காரணமாக உயிரையோ அல்லது கை-கால்களையோ இழக்க நேரிட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

**மூடப்பட்ட நிர்வாகங்கள் அரசின் உதவியால் திறக்கப்பட்ட விவரங்கள்**

13-8-74 அன்று மூடப்பட்ட 765 தொழிலாளர்கள் பணியாற்றி வந்த இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட்நிறுவனத்தை8-12-77ல் திறப்பதற்கு இந்த அரசு வழிவகை செய்தது.

1-1-73-ல் மூடப்பட்ட - 192 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புத் தந்த அம்பத்தூர் நான்கோ ரப்பர் மற்றும் பிளாஸ்டிக் லிமிடெட், கோயமுத்தூர் நிறுவனம் இந்த அரசின் முயற்சியினால் 20-12-77 அன்று திறக்கப்பட்டது.

10-4-76 அன்று மூடப்பட்ட- 110 நபர்களுக்கு வேலை வாய்ப்பளித்த கோயமுத்தூர் காளாபட்டி பத்மா மில்ஸ் லிமிடெட் நிறுவனத்தை 10-1-79 அன்று திறப்பதற்கு இவ்வரசு வழிவகை செய்தது.

கோவை லோட்டஸ் மில்ஸ் லிமிடெட் 22-7-76 அன்று மூடப்பட்டது. 804 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துவரும் இந்த ஆலை 2-2-78-ல் திறக்கப்படுவதற்கு அரசு ஆவன செய்தது.



முத்தனேந்தல் சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட் நிறுவனம் 30-7-76 அன்று மூடப்பட்டது. 200 பேர் வேலை பார்த்து வரும் இந்த நிறுவனத்தை 6-12-77 அன்று திறப்பதற்கு அரசு ஆவன செய்தது.

திருப்பூர் தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் நிறுவனம் 25-10-75 அன்று மூடப்பட்டது. 101 பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ள இந்நிறுவனம் 20-2-78 அன்று



திறக்கப்படுவதற்கு இந்த அரசு வழிவகை செய்தது.

125 பேருக்கு வேலை வாய்ப்புத் தந்த 20-11-76அன்று மூடப்பட்ட - மதுரை ராஜா மில்ஸ் லிமிடெட் நிறுவனம் 19-5-78 அன்று திறக்கப்படுவதற்கு இந்த அரசு ஆவன செய்தது.

10-12-76 அன்று மூடப்பட்ட 330 தொழிலாளர்களுக்குவேலை வாய்ப்பளித்த சேலம் சௌத் இந்தியா கிளாஸ் மற்றும் எனாமல் ஒர்க்ஸ் லிமிடெட் நிறுவனம் 24-9-79 அன்று திறக்கப்படுவதற்கு இந்த அரசு ஆவன செய்தது.

140 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் திருநெல்வேலி சிவகுமார் ஸ்பின்னிங் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் 18-2-77 அன்று மூடப்பட்டது. இது 13-12-77 அன்று திறக்கப்படுவதற்கு அரசு வழிவகை செய்தது.

349 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் கோவை பிரகாஷ் மில்ஸ் லிமிடெட் நிறுவனம் 13-5-77ல் மூடப்பட்டது. இந்நிறுவனம் 28-12-77 அன்று திறக்கப்படுவதற்கு இவ்வரசு ஆவன செய்தது.

250 தொழிலாளர்க்கு வேலை அளித்துவரும் சென்னை ஃபௌண்டரி மற்றும் என்ஜினியரிங் லிமிடெட் நிறுவனம் 23-5-77-ல் மூடப்பட்டது. அது 1978 பிப்ரவரியில் திறக்கப்படுவதற்கு இந்த அரசு வழிவகை செய்தது.

13 ஆயிரம் தொழிலாளர்க்கு வேலைவாய்ப்பு நல்குவதும் புகழ் பெற்றதுமான சென்னை பி & சி ஆலை 1-1-81-ல் மூடப்பட்டது. இந்த ஆலை 19-6-81 அன்று திறக்கப்படுவதற்கு அரசு ஆவன செய்தது.

675 பேருக்கு வேலைதரும் கோவை ஜெயலட்சுமி மில்ஸ் 16-10-81-ல் மூடப்பட்டது. இதனை 8-9-82-ல் திறப்பதற்கு அரசு உதவி செய்துள்ளது.

220 பேருக்கு வேலைதரும் சென்னை டிரான்ஸ்பார்மர் ஸ்விட்ச்கீர் லிமிடெட் நிறுவனம் 1-4-82-ல் மூடப்பட்டது. இதனை 18-11-83-ல் திறப்பதற்கு அரசு வழிவகை செய்தது.

1400 பேர் பணியாற்றும் திருப்பூர் ஸ்ரீராமலிங்க சூடாம்பிகை மில்ஸ் லிமிடெட் நிறுவனம் 25-7-82-ல் மூடப்பட்டது. 15-12-83-ல் இது திறக்கப்படுவதற்கு அரசு வழிவகைசெய்தது.

452 பேர் பணியாற்றும் குடியாத்தம் திருமகள் மில்ஸ் 14-10-82-ல் மூடப்பட்டது. 15-7-85-ல் இது திறக்கப்படுவதற்கு அரசு ஆவன செய்தது.

24-1-84 அன்று மூடப்பட்ட- 120 பேருக்கு வேலை தந்த கோவை, மீனா எக்யூப்மெண்ட்ஸ் நிறுவனம் 16-5-84-ல் திறக்கப்படுவதற்கு இந்த அரசு ஆவன செய்தது.




நம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை காடுகளைப் பெரும்பாலும் மலையும் மலை சார்ந்த இடங்களிலும் பரக்கக் காணலாம். இந்நிலப்பகுதி குறிஞ்சி எனப்படும்.

கடந்த ஒன்பதாண்டுகளில் வனத்துறை ஈட்டியுள்ள மொத்த வரவு 153.78 கோடி ரூபாயாகும். 1977-78-ல் கிடைத்த வருவாய் ரூ. 10.52 கோடி. அது 1985-86-ல் ரூ. 25.98 கோடியாக உயர்ந்துள்ளது.

பல்வேறு காடு வளர் திட்டங்களும், சமூகக் காடுகள் தோட்டங்களும், பல மேம்பாட்டுத் திட்டங்களும் காடுகள் மேம்பாட்டுப் பணிகளுக்காக, கடந்த ஒன்பதாண்டுகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதால் அரசுச் செலவு உயர்ந்துள்ளது. காடுகள் மேம்பாட்டுப் பணிகளுக்காக 1977-78-ல் ரூ. 8.03 கோடி செலவு செய்யப்பட்டது. 1985-86-ல் ரூ. 28.60 கோடி செலவு செய்யப்பட்டது.

திட்டப் பணிகளுக்கென இந்த ஒன்பதாண்டுக் காலத்தில் ரூ.106.16 கோடி மொத்தமாகச் செலவிடப் பட்டது. இதில் மாநில அரசின் திட்டங்களுக்கென மட்டும் ரூ. 89.85 கோடி ரூபாயும் மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின் கீழ் ரூ. 16.12 கோடி ரூபாயும் செலவிடப்பட்டது.

இயற்கை வளமான காடுகள் மேம்பாட்டுக்கு இவ்வரசு மேற்கொண்ட பல்வேறு திட்டப் பணிகளின் விவரம் வருமாறு :

**வனப்பரப்பும் வன வளப் பாதுகாப்பும் :**

தமிழ்நாட்டில் காடுகளின் பரப்பு 22.31 இலட்சம் எக்டேராகும். இதில் காப்பு வனம் 18.30 இலட்சம் எக்டேர். 3.40 இலட்சம் எக்டேர் காப்பு நிலம்; ஊரகப்படுத்தப்படாத காடுகள் 0.61 இலட்சம் எக்டேர். காடுகளின் பரப்பை மிகுதிப்படுத்தும் நோக்கோடு வனப் பகுதிகளுக்கு வெளியே உள்ள - அரசுக்குச் சொந்தமான - புறம்போக்கு நிலங்களிலும், ஊராட்சி நிலங்களிலும், குளக்கரைகள், தேசிய நெடுஞ்சாலைகளிலும், சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ், பெருமளவில் மரங்கள் வளர்க்கப் பட்டுள்ளன.

வனக் குற்றங்களைக் கண்டு பிடித்துக் குற்றவாளிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதையே முழுநேரப் பணியாகக் கொண்டு செயல்படும் பொருட்டு வனப் பாதுகாப்புப் படைகள் பல நிறுவப்பட்டன. தற்போது வனக் குற்றங்களைக் கண்டுபிடிக்க வனப் பாதுகாப்புப் படைகள் பல நிறுவப் பட்டுள்ளன. சோதனைச் சாவடிகள் 89 நிறுவப்பட்டன.

பாதுகாப்பு நடவடிக்கைக்கெனத் துப்பாக்கிகள், ஜீப்புகள் மற்றும் தொலைபேசி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

1979 ஜூலைத் திங்கள் வரை, வனத்துறையில் நான்கு வன் எல்லைப் பிரிவு வட்டங்களே (Territorial Circles) இருந்து வந்தன. சரியானபடி முழுமையான கவனத்துடன் நிருவகிக்கப்பட வேண்டியதன் இன்றியமையாமை கருதி மேலும் மூன்று வன எல்லைப்பிரிவு வட்டங்கள் திருநெல்வேலி வட்டம்,

வேலூர் வட்டம், நீலகிரி வட்டம் என அமைக்கப்பட்டன.

**சமூக நலக்காடுகள் வளர்ப்புத் திட்டம் :**

பல்வேறு திட்டங்களின் கீழ் 1977-78 முதல் 1985-86 வரை ஏறத்தாழ 3.74 இலட்சம் எக்டேர் பரப்பில் தோட்டம் வளர்க்கப்பட்டது. இதில் சமூக நலக் காடுகள் தோட்டமும் அடங்கும். இவ்வாறு ஒன்பது ஆண்டுகளில் தோட்டம் வளர்க்கப்பட்டுள்ளபரப்பு மாநிலத்திலுள்ள காடுகளின் மொத்தப் பரப்பில் ஏறத்தாழ ஆறில் ஒரு பங்காகும். அதாவது சுமார் 17 விழுக்காடு; இவ்வாறு கடந்த ஒன்பது ஆண்டுக் காலத்தில் மட்டும் ஆறில் ஒரு மடங்கு காட்டுப் பகுதியினையும், மற்றத் தோட்டப் பகுதிகளையும் தொழில் வள உற்பத்திப் பெருக்கிற்குப் பெரிதும் உதவும் வகையிலும், பொருளாதார மேம்பாட்டுக்கு உதவும் வகையிலும் நல்ல பலன் தரும் தோட்டப் பகுதிகளாக வளர்க்கப்பட்டது மாபெரும் சாதனையாகும்.

சுவீடன் அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் (Swedis International Development Authority) நிதியுதவியுடன் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் 1981-82 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டப் பணியில் முதல் கட்டக் கால அளவு 5 ஆண்டுகள் ஆகும். இத்திட்டத்தின் முதல் கட்ட மதிப்பீடு ரூ. 45 கோடியாகும். இத்திட்டத்தின் முதல் கட்டம் மேலும் ஓராண்டுக் காலம் 1986-87 முடிய நீட்டிக்கப்பட இந்திய அரசு அனுமதி அளித்துள்ளது.



சிதம்பரத்திற்கு அருகிலுள்ள முட்லூரில்- மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், அரசினர் கலைக் கல்லூரி வளாகத்தில் 6-7-86ல் மரக்கன்று நட்டார். மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு வி. வி. சுவாமிநாதன் அவர்கள் உடனிருக்கிறார்.

ஏரிநிலங்கள், கிராமத்திலுள்ள காலி நிலங்கள் சாலைக் கடற்கரை, இருப்புப் பாதை ஓர நிலங்கள் போன்ற அரசு மற்றும் ஊராட்சி நிலங்களையும், தனியாரிடம் உள்ள வளம் குன்றிய நிலங்களையும் பயன்படுத்திக் காடுகளும், மரங்களும் வளர்க்கப்படுகின்றன. கிராமப்புற மக்களின் தேவையான விறகு, சிறுமரம், தீவனம், காடுபடு சிறு பொருட்கள் ஆகியவற்றின் தேவையை இது நிறைவு செய்கிறது. இதன் மூலம் ஒரு நிலையான சொத்தினை அரசுக்கு ஏற்படுத்தி, மக்களுக்கு அதன் பலனை வழங்குவது நோக்கமாகும்.



வண்டலூரில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் மினி ரயில்.

இத்தோட்டங்களும், மரங்களும் சுற்றுப்புறச் சூழ்நிலையை நல்ல முறையில் பாதுகாக்க உதவுவதோடு கிராமப்புற ஏழைமக்களுக்கு, குறிப்பாக நிலமற்றோர்க்கு வேலை வாய்ப்பினையும் நல்கும்.

இத்திட்டத்தின் கீழ், முதல் ஐந்தாண்டுகளில் (1981 - 82-1985-86) 1,21,629 எக்டேர் பரப்பில் மரம் வளர்ப்புப்பணி நடை பெற்றுள்ளது. இதுதவிர தொடர் தோட்டங்கள் 7602 கிலோ மீட்டரில் வளர்க்கப்பட்டன. 10.38 கோடி மரக்கன்றுகள் பொது மக்களுக்கும் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டன.

**விளை பொருட்கள்:**

வன விளை பொருள்களில் வனத்துறைக்கு வருவாய் பெற்றுத் தருவதில் சந்தன மரம் எப்போதுமே தனியிடம் பெற்று வந்திருக்கிறது. 1977-ஆம் ஆண்டில் ஒரு டன் சராசரி விலை ரூ. 54,000 வீதம் 750 டன் அறுவடைக்குகந்த சந்தன மரம் விற்றதில் அரசுக்கு வருவாய் 4 கோடி ரூபாய் கிட்டியது. 1985-ஆம் ஆண்டில் சராசரி விலை டன்னுக்கு ரூ. 64,000 வீதம் 2090 டன் சந்தனமரம் விற்றதில் அரசுக்கு வருவாய் 13 கோடி ரூபாய் கிடைத்தது.

**ரப்பர்**

தமிழ்நாட்டில் கன்னியா குமரி மாவட்டத்தில் மட்டுமே ரப்பர் பயிரிடுவதற்கு ஏற்ற தட்பவெப்ப நிலையுள்ளது. தமிழக அரசு வனத்துறையினரால் 1960 முதல் 1980 ஆம் ஆண்டு வரை 4786 எக்டேர் பரப்பளவில் ரப்பர் தோட்டங்கள் அமைக்கப்பட்டு 1-10-84 முதல் தனிக் கழகமாக அரசு ரப்பர்க் கழகமென தமிழக அரசு பொது நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது. இத்தோட்டங்களிலிருந்து பெறப்படும் ரப்பர் பால்

தரத்தினை உயர்த்துவதற்காக வனத்துறை பல்வேறு நல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பழங்குடியினரின் மேம்பாட்டிற்கென, கடந்த ஒன்பது ஆண்டுகளில் 2.60 கோடி ரூபாய் செலவிடப்பட்டது.

**வனவிலங்குப் பாதுகாப்பு**

வன விலங்குகளைப் பாதுகாக்கும் நோக்கோடு பல்வேறு பணிகளை வனத்துறை மேற்கொண்டு வருகிறது. நமது காடுகளில் அரிய வனவிலங்குகள் பல வாழ்கின்றன. களக்காட்டிலுள்ள சிங்கவால் குரங்கு, முண்டந்துறையிலுள்ள புலிகள், முதுமலையில் யானைகள், வேடந்தாங்கலில் வந்தடையும் பறவை இனங்கள்போன்ற இன்ன பிற இயற்கை அன்னையின் அதிசயப் படைப்புகளைக் காக்கும் சீரிய பணியில் அரசு என்றுமே தனிக்கவனம் செலுத்தி வந்திருக்கிறது. இப்பணிக்காக மைய அரசு தரும் நிதி உதவியினையும் அவ்வப்போது பெற்று வருகிறது.

இப்பணிக்காக மைய, மாநிலத் திட்டங்களின் கீழ், கடந்த ஒன்பதாண்டுகளில் செலவிடப்பட்ட தொகை 8.63 கோடி ரூபாயாகும்.

வன விலங்குப் பாதுகாப்புச் சட்டம் 1972-ல் வகை செய்யப்பட்டுள்ளபடி, தீவிர நடவடிக்கை எடுத்து வன விலங்குகளைக் காக்கும் பணி செவ்வனே நடைபெற்று வருகிறது.

**அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா**

வண்டலூரில் நவீனமான உயிரியல் பூங்காவினை அமைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தநவீன பூங்காவினை 140 எக்டேர் பரப்பளவில், 3 கோடி ரூபாய் செலவில் அமைப்பதெனத் திட்டமிடப்பட்டிருந்தது. இத்திட்டத்தின் முதல் கட்டத்தினை 105 இலட்சம் ரூபாய செலவில் 1979-80ஆம் ஆண்டில் துவக்கி,வேலைகள் செய்து முடிக்கப் பெற்றன. விலங்குகளுக்கு ஏற்றவாறு இயற்கைச் சூழல் கொண்ட பரப்பளவு போதுமானதாக இல்லை. வருங்காலத்தில் பூங்காவினை விரிவுபடுத்துதல், ஆராய்ச்சிப் பணிகளுக்குத் தேவையான இடங்கள் ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு 510 எக்டேர் பரப்பளவில் சுமார் 7 கோடி ரூபாய் செலவில் இப் பூங்காவினை அமைப்பதென மாற்றம் செய்யப்பட்டது.

வன விலங்குகள், குறிப்பாக நீர்யானை, வரிக்குதிரை, சிறுத்தை, ஆப்பிரிக்கசிங்கம், யானை, புள்ளிமான் மற்றும் சில பறவையினங்கள் சென்னை மாநகராட்சி விலங்ககத்திலிருந்து இப்புதிய நவீன பூங்காவிற்கு மாற்றப்பட்டுள்ளன.



பறவையினங்களும், விலங்கினங்களும் காடுகளில் இருந்து பிடிக்கப்பட்டும், மற்றைய விலங்ககங்களிலிருந்துமாற்றுதல் மூலமாகவும், இப்பூங்காவில் சேர்க்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில் சுமார் 3.15 இலட்சம் ரூபாய் செலவில் அஸ்லாம் மாநிலத்தில் இருந்து ஆண் காண்டாமிருகம் ஒன்று இப் பூங்காவிற்கென வாங்கப்பட்டுள்ளது.

மலேசியா தேசத்து நேகரா என்ற மிருகக் காட்சியகத்திலிருந்து பலவகை மிருகங்களை விலங்கு மாற்று முறையில் வாங்கியுள்ளோம்.

தற்போது 288 மிருகங்கள் (45 வகைகள்), 353 பறவைகள் (69 இனங்கள்), மற்றும் 65 ஊர்வன வகையைச் சேர்ந்த பிராணிகள் இப் பூங்காவில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இவ்விலங்ககம் மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் நினைவாக அவருடைய பெயரில் 'அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா' என அழைக்கப்பட்டு 24-7-1985 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த ஜனவரி 1986வரை 4.48 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் 1.63 கோடி ரூபாய் செலவு செய்வதென வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மற்ற மாநிலங்களை ஒப்பு நோக்குங்கால், இயற்கை அமைப்பின்படி நமது தமிழகத்தில் வனச் செல்வம் குறைவாகவே உள்ளது. இருப்பினும், இக்குறைவான நிலையினை ஒரு குறையாகக் கருதாமல், நிருவாகச் செயல் திறனில் முழுமூச்சுடன் ஈடுபட்டு, நாட்டின் பொருளாதார மேம்பாடு, சமூகநலம், தொழில் வளம் இவற்றினைக் கருத்திற்கொண்டு மேம்பாட்டு பணிகளை முனைப்புடன் தொடர்ந்து செய்து வருகிறது. இவ்வரசு எடுத்து வரும் நன் முயற்சிகள், கடைப்பிடிக்கும் சீரிய கொள்கைகள் காரணமாக நிறைவேற்றப்படும் மேம்பாட்டுப் பணிகள் மக்களுக்குப் பல நன்மைகள் தந்து வருகின்றன. தொடர்ந்து இதே கொள்கைப் பிடிப்போடு இத்துறை செயல்படும் என உறுதி கொள்வோம்.

மரங்களை வளர்ப்போம்!
காடுகளைக் காப்போம்!



# குடும்பநலம்காக்கும் வழிமுறைகள்

குடும்பநலம் காக்க, பிறப்பினைக் கட்டுப்படுத்த, தள்ளிப்போட பல்வேறு வழிமுறைகள் உள்ளன. அவரவர் உடல் நிலைக்கும், தேவைகளுக்கும், விருப்பத்திற்கும் ஏற்ப எந்த முறையையும்ஏற்றுக்கொள்ளலாம். இதற்கென அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்பச் சுகாதார மையங்களிலும் தேவையான வசதிகளும் உதவிகளும் உள்ளன. அவற்றைப் பயன்படுத்தியதால் பெற்ற சாதனை குறிப்பிடத்தக்கது.

கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டத்தின் கீழ் அடைந்த வெற்றி குறிப்பிடத்தக்க அளவுக்குக் கணிசமாக இருந்ததுடன் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வருவதால் தற்காலிக முறையின் கீழ் சாதனையை உயர்த்தவும் நாம் தற்போது முயன்று வருகிறோம். கருத்தடை வளையங்களைப் பொருத்துவதில் இதுவரையில் 943 பெண் சுகாதாரப் பணியாளர்களுக்கு நாம் பயிற்சி அளித்துள்ளோம். இத்திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 3 ஆண்டுப் பணி அனுபவமுடைய அனைத்துப் பெண் சுகாதாரப் பார்வையாளர்கள் துணைச் செவிலிப்பணி பேறுகால உதவியாளர்கள்அனைவருக்கும்1986-87-ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் கருத்தடை வளையம் பொருத்துவதில் பயிற்சி அளிக்கப்படும். சட்டப்படி கருவைக் கலைத்து கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்வதும், கருத்தடை வளையங்களைப் பொருத்துவதும் இயன்ற வரையில் மருத்துவ மனைகளில் செய்யப்பட்ட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு திட்டவட்டமாக நம்புகிறது. இதனை எய்தும் பொருட்டு, மகப்பேறுக்குப் பிந்திய கருத்தடை அறுவைச் சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் படுக்கை வசதிகள் கீழே குறிப்பிட்டுள்ளபடி உயர்த்தப்பட்டு வருகின்றன.



*1982-83: 300* படுக்கைகள்: மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் 20 என்ற விகிதத்தில்.

*1983-84: 375* படுக்கைகள்: மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் 25 சதவிகிதம்.

*1984-85: 100* படுக்கைகள்: மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில்.

*1985-86: 200* படுக்கைகள்: தலைமையிட மருத்துவமனைகளிலும் தொடக்கச் சுகாதார நிலையங்களிலும்.

மொத்தம் 975 படுக்கைகள்.

பழைய முறையான சினைக்குழல் முடிச்சு அறுவைச் (Tubectomy) சிகிச்சை செய்து கொள்வதில் மகளிரிடையே குறிப்பாக ஆர்வம் காணப்படுகிறது. இருப்பினும் 'லாப்ராஸ்கோப்' கருவி மூலம் கருத்தடை அறுவைச் சிகிச்சை எளிதாகச் செய்யப்படுவதைக் கருத்திற்கொண்டும் இந்த முறையையும் பெரும்பாலான மகளிர் விரும்பிச் செய்து கொள்ள முன்வருவதாலும், மருத்துவமனைகளில் இக் கருத்தடை அறுவைச் சிகிச்சை முறையை நடத்தும் நோக்குடன் அரசு மருத்துவமனைகளிலும் உள்ளாட்சி மன்ற மருத்துவமனைகளிலும் உள்ள263லாப்ராஸ்கோப் கருவிகளில் 114 கருவிகளைத் தமிழ்நாடு அரசு வாங்கியுள்ளது. 116 கருவிகளை மத்திய அரசு நன்கொடையாக அளித்துள்ளது. மூன்று கருவிகளைத் தனியார் நிறுவனங்கள் நன்கொடையாக அளித்துள்ளன. இந்த 'லாப்ராஸ்கோப்' கருவிகளைக் கையாள்வதில் மருத்துவர்களுக்குக் குழு குழுவாகத் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

ஆடவருக்கு விந்துநாள அறுவைச் சிகிச்சை செய்வதுடன் (Vasectomy) மகளிருக்கும் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்ய இயலும் பொருட்டு 140 தொடக்கச் சுகாதார நிலையங்களில் அறுவைச் சிகிச்சை அறைகளுக்கு வகை செய்யும் திட்டத்தை மாநில அரசு செயற்படுத்தி வருகிறது. இத்திட்டத்தை 1985-86ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்கக் கருதப்பட்டுள்ளது.

குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இயன்ற அளவு தனிப்பட்ட மருத்துவர் பலரை ஈடுபடுத்தும் நோக்குடன் தொண்டு நிறுவனங்கள் அல்லது தனிப்பட்ட மருத்துவர்கள் ஏற்பளிக்கப்பட்ட அறுவைச் சிகிச்சையகங்களில் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்ய ஏற்பளிப்பதற்கு மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டுள்ள குழுவுக்கு அரசு அதிகாரம் அளித்துள்ளது. ஏற்பளிக்கப்பட்ட அறுவைச் சிகிச்சையகத்தில் கருத்தடை அறுவை சிகிச்சைகளைச் செய்யும் தனிப்பட்ட மருத்துவர்கள், கருத்தடை அறுவைச் சிகிச்சை ஒன்றுக்கு ரூ.50-ம் ஒருவருக்குக் கருத்தடை வளையம் பொருத்துவதற்கு ரூ.5 வீதமும் ஊதியம் பெறுகின்றனர். இந்திய மருத்துவச்சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள தனிப்பட்ட மருத்துவர்களும் தங்களுடைய சொந்த 'லாப்ராஸ்கோப்' கருவியைக்கொண்டு அரசினர் மருத்துவமனைகளில் கருத்தடை அறுவைச் சிகிச்சை ஒன்றுக்கு ரூ. 50 என்ற வீதத்தில் 1985 அக்டோபர் 31ஆம் நாள் வரையில் ஊதியம் பெற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இம்மாநிலத்தில் அரசு மருத்துவமனைகள், உள்ளாட்சி மன்றங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவை நகர்ப்புறக் குடும்பநல நிலையங்களை நடத்தி வருகின்றன. 1971ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி நகர்ப்புறக் குடும்பநல நிலையங்கள் அமைக்கப்படுவதற்குத் தகுதியுள்ள நகர்ப்புறப் பகுதிகள் அனைத்திலும் கிட்டத்தட்ட நகர்ப்புறக் குடும்பநல நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பல்வேறு முகவரமைப்புகளின் கீழ் செயற்பட்டு வரும் நகர்ப்பகுதி குடும்பநல நிலையங்கள் பற்றிய விவரம் பின்வரும்அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:

| | வகை 1 | வகை 2 | வகை 3 | மொத்தம் |
|---|---|---|---|---|
| அரசு | 83 | 23 | 63* | 169 |
| உள்ளாட்சி மன்றங்கள் | — | 6 | 75 | 81 |
| தொண்டு நிறுவனங்கள் | 1 | 2 | 13 | 16 |
| மொத்தம் | 84 | 31 | 151 | 266 |

* மேம்படுத்தப்பட்ட அரசு மருத்துவமனைகளில் உள்ள 50 பேறுகால பின்பணித் திட்ட மையங்களை உள்ளடக்கியது.

**பச்சை அட்டைகள், சமுதாய வெகுமதிகள் வழங்குதல்:**

குடும்பநலத் திட்டத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்குப் பச்சை அட்டைகள் வழங்க வேண்டுமென்ற மத்திய அரசின் கருத்தைத் தமிழ்நாடு அரசு செயற்படுத்தியது. இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கும் மருத்துவ கவனிப்புத் தொடர் பணிகளை மேற்கொள்ள நகர எல்லைப்பகுதி சுகாதாரப் பணியாளர்கள் அவர்களுடைய குடும்பங்களுக்கு அடிக்கடி சென்று அவர்களைக் கவனித்துக் கொள்வதற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை ஏற்றுள்ளவர்கள் வைத்துள்ள பச்சை அட்டைகள் காரணமாக அவர்கள் சுகாதாரப் பணியாளர்களிடமிருந்து மருத்துவ உதவி பெறத் தகுதியுடையவராவர். இலக்கை நிறைவு செய்த பணியாளர்கள், குடும்பநலத் திட்டத்தை நிறைவேற்றுவதில் அரசு எதிர்பார்க்கும் பணியை நிறைவேற்றுவதற்காகத் தாமாகவே முன்வந்து ஈடுபட்ட சமுதாயத்தினர் ஆகியோருக்குப் பல்வேறு வகையிலான பரிசுகளை வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

மரபு வழியிலான அல்லது உள்ளூர் ஆயாக்கள் கிராம சமுதாயத்தினரிடையே முக்கியப் பங்கு வகிக்கின்றனர். ஆயாக்கள் தாய்மார்களுக்கு அருகிலேயே இருந்து பிள்ளைப்பேற்றில் உடனடியாக உதவுகின்றனர். கிராமப் பகுதிகளில் நடைபெறும் மகப்பேறு மருத்துவத்தில் பெரும்பாலானவை ஆயாக்கள் உதவியுடனேயே நடைபெறுகின்றன. மகளிர் பேறுகாலம் குழந்தை வளர்ப்பு ஆகியவற்றில் ஆயாக்கள் தாய்மார்களுக்கு விளக்குவதோடு சிறு குடும்பம் என்னும் கொள்கையைக் கடைப்பிடிப்பது குறித்தும் அவர்களிடையே பிரச்சாரம் செய்கின்றனர். இம்மாநிலத்தில் 31.3.1986ஆம் நாள் வரை 32 847 ஆயாக்களுக்கு மேற்சொன்ன வகையில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

சூலுற்ற மகளிர் கள்ளத்தனமாகக் கருவைக் கலைப்பதால் ஏற்படக்கூடிய இறப்பு விகிதத்தையும் அவர்கள் நோயுற்றிருத்தலையும் குறைக்கும் நோக்கத்துடன் 1971ஆம் ஆண்டு சட்ட சம்மதத்துடன் மருத்துவ முறையில் கருவைக் கலைக்கும் சட்டம் இயற்றப்பட்டது. இச் சட்டம் மருத்துவப் பாதுகாப்பு நடவடிக்கையை முக்கிய நோக்கமாகக் கொண்டு இயற்றப்பட்ட ஓர் ஏற்பாடாக இருந்த போதிலும் திட்டமிட்ட குடும்பம் என்ற கொள்கையை அவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு செய்யப்பட்டு மருத்துவ முறையில் சட்ட சம்மதத்துடன் மகளிர் கருவைக் கலைத்துக் கொள்வது குடும்பநலத் திட்டத்தின் ஒரு துணை ஏற்பாடாக அமையும்.

தற்போது 165 அரசு மருத்துவமனைகள் 47 தனியார் மருத்துவமனைகள் ஏனைய அமைப்புகள் ஆகியவற்றின் மருத்துவமனையில் சட்ட சம்மதத்துடன் கருவைக் கலைக்கும் வசதி உள்ளது.

குடும்பநலத் திட்டத்தில் பல்வேறு கருத்தடை முறைகளின் கீழ் 1985-86ஆம் ஆண்டின் இலக்கும் எய்திய சாதனையும் வருமாறு :

| குடும்பக்கட்டுப்பாடு முறை | நிர்ணயிக்கப் பட்டஇலக்கு | சாதனை | சதவீதம் |
|---|---|---|---|
| கருத்தடை அறுவைச் சிகிச்சை | 4,75,000 | 5,13,990 | 108.2 |
| கருத்தடை வளையம் பொருத்திக் கொண்டவர்கள் | 1,68,000 | 1,92,120 | 114.4 |
| கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவோர் | 2,00,000 | 1,77,214 | 88.6 |
| கருத்தடை மாத்திரை பயன்படுத்துவோர் | 76,000 | 47,885 | 63.0 |

மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு 1986-87ஆம் ஆண்டிற்குக் கருத்தடை முறைகளில் நிரந்தர, தற்காலிக முறைகளுக்குப் பின்வரும் இலக்குகளை நிர்ணயித்துள்ளது:

| முறை | 1986-87ஆம் ஆண்டுக்கு ஒதுக்கிய இலக்கு |
|---|---|
| நிரந்தர முறை: | |
| கருத்தடை அறுவைச் சிகிச்சை | 5,60,000 |
| தற்காலிக முறைகள்: | |
| கருத்தடை வளையம் பொருத்துதல் | 2,00,000 |
| கருத்தடை மாத்திரை பயன்படுத்துவோர் | 76,000 |
| கருத்தடைச் சாதனங்களைப் (காண்டோம்) பயன்படுத்துவோர் | 1,30,000 |



சென்னையில் உள்ள அரசு பல்மருத்துவக் கல்லூரியில் ரூ. 18 இலட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்ட நவீன பல்மருத்துவ ஆய்வுக் கூடத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எச். வி. ஹண்டே அவர்கள் திறந்துவைத்தார் (26.6.86).



## சுடர் விடு

தஞ்சை பாண்டியன்

காலையில் எழுந்ததும் படித்திடு - தம்பி
கனிவாய்ப் பழகிடத் தெரிந்திடு
சாலையில் பார்த்தே நடந்திடு - யாரும்
சமத்துவம் என்பதை உணர்ந்திடு!

சாதியை உலகினில் ஒழித்திடு - நல்ல
சான்றோர் வழியினில் சென்றிடு
நாதியற் றோரை அணுகிடு - நீ
நன்மையைச் செய்தே உயர்ந்திடு!

தூய ஆடையை அணிந்திடு - நெஞ்சம்
தூய்மை பெற்றிட முயன்றிடு
ஆய கலைகள் அனைத்தையும் - நாட்டில்
அழகாய்ச் செழித்திடச் செயல்படு!

வாழும் வழியை அறிந்திடு - காணும்
வஞ்சகர் உறவினை அகற்றிடு
பாழும் மூடநம் பிக்கையை - நீ
பதறி எழுந்தே தகர்த்திடு!

காலம் முழுவதும் உழைத்திடு - நீ
காட்டும் திறனால் தழைத்திடு
ஞாலம் சிறக்க எழுந்திடு - இளம்
ஞாயிறு நீயே சுடர்விடு!

## நூற்றாண்டு விழாக்காணும் சுதந்திர தேவிசிலை!



நியூயார்க் நகரின் தலைவாயிலிலுள்ள சுதந்திரதேவி சிலை, புதுப்பிக்கப்பட்டுப் புது மெருகூட்டப்பட்டுப் புதுப்பொலிவுடன் காட்சி தருவதைக் காணலாம். குறிப்பாக, இச்சிலையின் கையில் கம்பீரமாகக் காட்சி தரும் சுதந்தர ஜோதி புத்தம் புதிது; 1886ல் பிரெஞ்சு மக்களால் அன்பளிப்பாகத் தரப்பட்ட இச்சிலையின் நூற்றாண்டு விழா, அமெரிக்கச் சுதந்தர தினமான ஜூலை 4ஆந்தேதி கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இச்சிலையின் சுதந்தர ஜோதியை அமெரிக்க அதிபர் ரேகன் அன்றைய தினம் முறைப்படி ஏற்றி வைத்தார். இந்தச் சிலை 84 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப் பட்டுள்ளது. 161 அடி உயரமுள்ளது இது. இதன் உச்சி வரை செல்ல 'லிப்ட்' வசதி உள்ளது.

## மாணவர் பக்...

## அதிசய கடற் குதிரை!



அதிசயக் கடற்குதிரை ஒன்று அண்மையில் சென்னையில் பிடிபட்டது. இது சென்னை மெரீனா கடற்கரையிலுள்ள நீர்ப் பிராணிகள் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளது.

கடற்குதிரை பிடிபடுவது என்பது அபூர்வமாகும். 1983ல் இதே போல் ஒரு கடற்குதிரை பிடிபட்டது. ஆனால் இன்று அது இல்லை.

இப்போது பிடிபட்டிருக்கும் கடற் குதிரையின் நீளம் 4 அங்குலம். அட்லாண்டிக் கடலில் வாழும் கடற்குதிரை இனத்தைச் சேர்ந்தது இது.

# உயிர் காத்த உறவு



—புலவர் அண்ணாமலை

பவானியின் மகள் கமலம் சிறு குழந்தை. அவள் விளையாட்டிற்கு இந்தக் குட்டிநாய் பயன்பட்டது. டாமியும் கமலமும் வளர்த்தார்கள். கமலத்திற்குப் பின் சொக்கு பிறந்தான். சொக்கு 'அப்பா' என்று தன் தந்தையை அழைப்பதற்கு முன் அவர் இறந்து விட்டார்.

பவானியின் குடும்பம் பல வேளை உணவின்றிப் பட்டினி கிடந்தது. ஆனால் டாமியை மட்டும் அவள் பட்டினி போட்டது கிடையாது. டாமிக்கு எப்படியாவது உணவு கொண்டு வந்து கொடுப்பாள்.

கமலம் ஆறாம் வகுப்பு படிக்கிறாள். அவள் வளர்ச்சியைப் போலவே டாமியும் வளர்ந்தான். இரண்டரை அடி உயரமுள்ள டாமியைப் பார்த்தவர்கள் பயந்தார்கள். அதன் குரலைக் கேட்டவர்கள் அஞ்சி ஓடினார்கள். இரவு நேரங்களில் அந்தக் குடிசைப் பகுதிக்குக் காவல் அரசனாக டாமி விளங்கினான்.

குடிசைப் பகுதியில் வாழ்பவர்கள் டாமிக்கு உணவும் பலகாரங்களும் கொடுத்து அதன் உடலில் வலிமை ஏற்றினார்கள். ஊராருக்கு அன்புப் பிள்ளையாகவும் வீட்டாருக்குச் செல்லபிள்ளையாகவும் டாமி வளர்ந்து வந்தான்.

கமலம் பள்ளியைவிட்டு வீட்டிற்கு வந்ததும் முதலில் டாமியைத்தான் பார்ப்பாள். அதனுடன் சிறிது நேரம் விளையாடுவாள். பிறகு வீட்டுப் பாடங்களைச் செய்வாள். வீட்டு வேலைகளைச் செய்ய அம்மாவுக்கு உதவியாக இருப்பாள்.

பவானியின் குடிசை வீட்டில் டாமிக்கு என்று தனி இடம் கிடையாது. கமலமும் சொக்குவும் இருக்கும் இடத்தில் டாமி இருப்பான். இரவில் கமலத்தின் அருகில் டாமி படுத்துக் கொள்வான்.

ஒருநாள் பவானி தன் பிள்ளைகளை வீட்டிற்குள் தூங்கச்செய்து விட்டு வெளியில் வந்து படுத்துக் கொண்டாள். கமலத்தின் பக்கத்தில் படுத்திருந்த டாமி எழுந்து வந்து பவானியின் காலருகில் படுத்துக் கொண்டது. எல்லோரும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தனர்.

இரவு 12 மணி... ''தீ..தீ...தீ'' என்று மக்கள் அலறிக்கொண்டு ஓடினார்கள். கமலம் வீட்டிற்கு அடுத்து ஐந்தாவது வீடு தீப்பிடித்துக்கொண்டது. அந்தத் தீயை அணைக்க மக்கள் பெரும் முயற்சி எடுத்தார்கள்.

காற்று வேகமாக வீசியது. தீப்பிடித்த குடிசையில் இருந்து தீப்பொறிகள் பறந்தன. குடிசையில் இருந்த மூங்கில்கள் வெடித்தன. நெருப்புகள் சிதறின. அதனால் தீ அடுத்த குடிசைகளுக்கும் பரவியது.

பவானியின் வீட்டில் தீப்பிடித்துக்கொண்டது. பவானி பானைகளில் பிடித்து வைத்த தண்ணீரை எடுத்துக் குடிசைமீது ஊற்றினாள். வீட்டிற்குள் தூங்கிக்கொண்டிருக்கும் கமலத்தையும் சொக்குவையும் காப்பாற்றத் துடித்தாள். தீப்பிடித்து எரியும் குடிசைக்குள் எப்படிச் சென்று காப்பாற்றுவது? யார் உதவிக்கு வருவார்கள் என்று கதறி அழுதாள்.

எரியும் குடிசைக்குள்ளிருந்து, ''அம்மா! டாமி! எங்களைக் காப்பாற்றுங்கள்'' என்ற கமலத்தின் அழைக்கும் குரல் கேட்டுத் திடுக்கிட்டாள் பவானி.

''டாமி! கமலத்தைக் காப்பாற்று. அவள் வீட்டிற்குள் இருக்கிறாள். போ. அவளைக் காப்பாற்று'' என்று ஆவேசமாகக் கத்தினாள் பவானி.

பவானியின் கட்டளையைக் கேட்டதும் டாமி வீட்டிற்குள் புகுந்தது. மயங்கிக் கிடந்த கமலத்தின் சட்டையை வாயால் கடித்து வெளியில் இழுத்து வந்தது. பவானி கமலத்தைத் தூக்கி அணைத்துக் கொண்டாள். அவள் முகத்தில் தண்ணீர் தெளித்தாள்.

''டாமி! சொக்கு உள்ளே இருக்கிறான். அவனைக் காப்பாற்று. போய் அவனையும் இழுத்துவா'' என்று சொல்லிக் கதறி அழுதாள் பவானி.

டாமி கொழுந்து விட்டெரியும் குடிசையைப் பார்த்தது. தன்னை வளர்த்த தாயின் கட்டளையைக் கேட்டது. எப்படித் தீக்குள் போவது என்று துடித்தது. குடிசைக்குள்ளிருக்கும் சொக்குவைச் சுற்றித்தீ எரிந்துகொண்டிருந்தது. சொக்கு மண்சுவரின் மூலையில் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

டாமி நெருப்புக்குள் பாய்ந்து குடிசைக்குள் ஓடியது. எரியும் தீயில் சொக்குவைத் தேடியது. சொக்குவைச் சுற்றி நெருப்பு எரிவதைப் பார்த்தது அவன் மீது பாய்ந்தது. அவன் கால்சட்டையைக் கடித்து இழுத்துக்கொண்டு வெளியில் வந்தது.

டாமி தன்மகனை இழுத்துக் கொண்டு வருவதைப் பவானி பார்த்தாள். ஓடிப்போய் அவன் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டாள். அப்பொழுது ஒரு பெரிய மூங்கில் எரிந்துகொண்டு டாமியின் தலை மீது விழுந்தது. டாமி ''லொள்..லொள்..லொள்'' என்று கத்தி விழுந்தது. அடுத்த நிமிஷம் கூரையின் பகுதி எரிந்து டாமி மீது விழுந்தது. டாமியின் உடல் கருகியது.

மூர்ச்சை தெளிந்த கமலம் டாமியைப் பார்த்தாள். டாமி நெருப்பில் அகப்பட்டுத் துடிப்பதைப் பார்த்தாள். ''அம்மா! டாமியைக் காப்பாற்றுங்கள். டாமியைக் காப்பாற்றுங்கள்'' என்று கதறி அழுதாள்.

தீ அணைக்கப்பட்டதும் டாமியின் கண்கள் பவானியைப் பார்ப்பதுபோல் இறந்து கிடந்தது. ஊரார் டாமியைப் பார்த்தனர். உறவுக்காக உயிர்கொடுத்த டாமி என்று கூறிச் சென்றனர்.

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பிவிட்டார் என்பதைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போகிறேன்.

பிற்பகல் மணி 1.30. மாலை 4.30 மணிக்கு ஆந்திரா புறப்படுகிறார் காமராஜ். அதற்குள் 'பரோல்' விடுதலை -அஸ்வமேத யாகம் நடந்தாக வேண்டும்.

அஸ்வமேதக் குதிரையான 'பெட்டிஷன்' என் கையில். மூன்று மணி நேரத்தில் அஸ்வமேதக் குதிரை, எல்லா நாடுகளையும் சுற்றி வர வேண்டும். அதாவது எல்லா டிபார்ட்மெண்டுகளையும் சுற்றி வர வேண்டும். இடையில் எத்தனை அதிகார வர்க்கக் குறுக்கீடுகள் வருமோ? சட்டதிட்டச் சிக்கல்கள் தலை நீட்டுமோ? காமராஜ் ஊரில் இருந்தால் பரவாயில்லை. அவரோ, வெளியூர் போகிறாரே? இப்படி, ஏதோதோ எண்ண அலைகள்! புரியாத பிரமிப்புகள்!

''ச்சீ! காமராஜ் கையில் காகிதத்தைக் கொடுக்காமல், கோட்டையிலே பித்தம் பிடித்ததுபோல் நிற்பதா'' நறுக்கென்று தலையில் ஒரு குட்டு. ஓகோ என் தலையில் நானே குட்டிக் கொள்கிறேன். நன்றாக வேண்டும், எனக்கு.

எனது தலையில் அதிகப் பலமாக விழுந்த குட்டின் வலியைத் தடவிப் பொறுத்தபடியே, காமராஜ் வீட்டுக்குப் பறக்கிறேன்.

மாடியில், மொட்டை மாடியில் உலவிக் கொண்டிருக்கிறார், காமராஜ்.

''அப்பாடா! காமராஜ் தூங்கப் போய்விடவில்லை'' நிம்மதிப் பெருமூச்சு விடுகிறேன். அடுத்த கணம்....!

''என்னப்பா! நமசிவாயம். ஒரு காகிதம் - நாலு வரி பெட்டிஷன் எடுத்துக் கொண்டு வர நாலு மணி நேரமா? காகிதத்தைக் கொடு, சீக்கிரம்!'' கண்டிப்புடன் அதே சமயம் கனிவாகப் பிடுங்கிக் கொள்கிறார், எனது கையிலிருந்த பெட்டிஷன் காகிதத்தை!

அயர்ந்துபோய் நிற்கிறேன்.

பல பக்கங்கள், ஆங்கிலத்தில், பல பெரிய வக்கீல்கள் தயாரித்த பெட்டிஷனை 'கிடுகிடு' வெனத் தாளைத் தள்ளிப் படிக்கிறார்.

''எனது புருஷன் ஜெயிலில் இருக்கிறார். மலேசியாவிலிருந்து வந்திருக்கிறேன். பரோலில் விடும்படி வேண்டுகிறேன்'' என்று



எழுதினால் போதாதா? இவ்வளவு பக்கம் சட்டம் பேசணுமா எந்தச் சட்டம், தேசத் துரோக உளவாளியை வெளியே விடச் சொல்லுகிறது? வக்கீல்கள் வாதமே தனி ரகம்! அவங்க படிச்ச சட்டப்படிப்புக்கு நல்ல சான்ஸ். நல்லாத்தான் எழுதியிருக்காங்க!''

வாய்விட்டுப் பேசிக் கொள்கிறார், காமராஜ்.

''சாயங்காலத்திற்குள் -நீங்கள் புறப்படுவதற்குள் முடியுமா?'— குழைவாகக் கேட்கிறேன்.

''சும்மா இருப்பா! ஐந்து நிமிஷத்தில் தயார் பண்ணிக்கொடுக்க வேண்டிய காகிதத்தைப் புரியாம நேரங்கடத்திட்டே பாவம், நீ என்ன செய்வே? வங்கீலுங்க அவங்க கைவரிசையைக் காட்ட நேரமாயிடுச்சு! இப்பவாவது வந்தியே, அதுபோதும். எல்லாம் சரியாக நடக்கும். கவலைப் படாதே!''

முதுகில் தட்டிக் கொடுத்த காமராஜரின் அன்புத் தட்டல்-'ஷொட்டு' ஐந்துநாள் வரை வலித்தது. ஆனால் தட்டிய போது வலியே தெரியவில்லை.

என்னைத் தட்டிக் கொடுத்த காமராஜ் 'கிருஷ்ணையா'! என்று தமது பிரைவேட் செக்ரட்டரியை அழைக்கிறார். தயாராக அருகிலேயே நின்று கொண்டிருந்த தனிச் செயலாளர் முன்னே வருகிறார்.

நின்ற நிலையிலேயே, என்னிடமிருந்து பிடுங்கிக் கொண்ட பெட்டிஷனில் நான்கு வார்த்தைகள் தான் எழுதுகிறார்.

காகிதம் செயலாளரிடம் கைமாறுகிறது. காதில் மேலும் ஏதோ சொல்கிறார்.

''நமச்சிவாயம் சாப்பிடலையே? உடனே போய்ச் சாப்பிடு. டாக்டரம்மாவுக்கு சொல்லு அவங்க புருஷன் இன்று ராத்திரியே வீட்டுக்கு வந்துடுவார்னு''!

பிரமித்து நின்ற என்னைப் பார்த்துச் சிரிக்கிறார். ''சும்மா போப்பா?''

''நான் ஊரிலிருந்து வந்ததும், என்னைப் பார்த்து நன்றி சொல்ல வரப்போறே. உம். புறப்படு''

காமராஜ் அன்புக் கட்டளைப் படி எல்லோருக்கும் 'நம்பிக்கை' ஊட்டுகிறேன்.

சாதாரணமாகப் 'பரோல்' விடுதலைப் பெட்டிஷனைப் பைசல் செய்ய வாரக் கணக்கு ஆகும். முதலமைச்சர் ஊரில் இல்லாத நேரத்தில் ஒரு இரவிற்குள் என்ன நடக்க முடியும்? என்றுதான் எனக்குத் தெரிந்த சட்டதிட்ட விற்பன்னர்கள் - அதிகார வர்க்கத்தினர் வியப்புடன் கேள்விக் குறி தொடுத்தனர்.

என் வரையில் நிம்மதியாகத் தூங்கி எழுந்தேன்.

காலையில் அந்த நல்ல செய்தி செந்தேனாகக் காதில் பாய்ந்தது!

நேற்று நடு நிசியில் லேடி டாக்டரம்மா வீட்டுக் கதவு 'படபட'எனத் தட்டப்படுகிறது.

''யாரது, இரவில் கதவைத் தட்டி உடைப்பது?'' எரிச்சலுடன் கதவைத் திறக்கிறார்கள்.

எதிரே! வக்கீல் - சிறையில் கிடந்த பார்-அட்-லா-லேடி டாக்டரின் கணவன் பூரித்த முகத்தோடு நிற்கிறார். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ!

நீண்ட நாட்களாகப் பிரிந்து கிடந்த கணவன் மனைவியை ஒன்று சேர்த்து வைப்பதில் பிரம்மச்சாரி காமராஜ் காட்டிய பரிவு வாயுவேக - மனோவேக நடவடிக்கை! அப்பப்பா? ஒரே ஒரு நாளில் 'அஸ்வமேத' யாகம் செய்துவிட்ட மன்னாதி மன்னனின் பூரிப்பு எனக்கு. சங்கடத்தில் சிக்கித் தவிப்பவருக்குத் தக்க தீர்வு - சமயசஞ்சீவித் தலைவன் அவன்!

காமராஜ் வாழ்க! பெருந்தலைவன் பிறந்த நாளினை அரசு விழாவாகக் கொண்டாடி வரும் புரட்சித் தலைவர் வாழ்க!

குடும்பத்துக்கே குதூகலமூட்டும்

**டாப்கோ ப்ராய்லர்**

ம்ம்... அருமையான வாசனை! மிருதுவான புத்தம் புது சுவை!

மேலும் மேலும் உண்ணத்தூண்டும் டாப்கோ ப்ராய்லர்களை அளித்து
உங்கள் குடும்பத்தின் பசியாற்றுங்கள். அவை நிச்சயம் உங்களை மகிழ்வூட்டும்.
ஏனென்றால், டாப்கோ ப்ராய்லர்...

- அதிகப்புரதமும், குறைவான கொழுப்பும் கொண்டவை
- சுகாதார முறைப்படி 'ஹலால்' செய்து உரிக்கப்படுபவை
- உடனுக்குடன் தீர்ந்து போவதால் புத்தம் புதியவை
- வசதியாக அமைந்த விற்பனை நிலையங்களில் கிடைக்கின்றன.

டாப்கோ வழங்கும் மற்ற சுவைமிக்க உணவுகள் :

- **பண்ணைக் கோழிகள்** • **காடைகள்**
- **வெண்பன்றி இறைச்சி & இறைச்சிப் பொருட்கள்**
- **முட்டைகள்**




உங்கள் புரதத் தேவைக்கு
**TAPCO**
முழுமையான வட்டமுள்ள முட்டை, கோழி, இறைச்சி நிலையம்
8, கிரீன்வேஸ் சாலை (சத்யா ஸ்டுடியோ பின்புறம்)
சென்னை-28 தொலைபேசி: 417147
பெரும்பான்மையான அரசு மருத்துவமனைகளுக்கு
நாங்கள் முட்டைகள் வழங்குகிறோம்.

# Department of Continuing Education
# Institute for Social Sciences and Research
## Vellore - 632 006.

Announces the following One-Year Post-graduate Diploma Programmes by Correspondence-cum-Contact Classes for the academic year 1986-87:

1. Hospital Administration
2. Health Education
3. Public Health Administration
4. Social Welfare Administration
5. Family Welfare and Child Development
6. Nutrition and Dietetics
7. Educational Administration
8. Personnel Management
9. Public Relations
10. Journalism and Mass Communication
11. Computer Programming-BASIC Language.

**ELIGIBILITY :** Graduates and Post-graduates of any discipline, including Doctors and Nurses with or without experience can join in any of the above courses

The cost of prospectus and application form is Rs. 25 by D.D./M.O. drawn in favour of the Institute.

**Phone : 24645** LAST DATE : 31-7-'86 **Registrar.**



## கறுப்பு ரோஜா

### புலவர் இளஞ்செழியன்

வானுயர்ந்த தமிழ்நாட்டுத் தலைவர்! நல்ல
வரலாற்றுப் பெருந்தலைவர் காமராஜர்:
தானுயர்ந்த தன்மைபோல் தாம்பிறந்த
தமிழகமும் உயர்ந்திடவே உழைத்தார்! மீண்டும்
மீனுயர்ந்தார் நாட்டினிலே பிறந்த மேதை!
மிகஉயர்ந்த இமயம்போல் உயர்ந்து நின்றார்!
ஏனுயர்ந்தார் எவ்வாறு உயர்ந்தார் என்றால்,
எளிமையினால் கடமையினால் உயர்ந்தார் என்போம்!

விருதுபல பெற்றவராம் காம ராஜர்
விருதுநகர் பெற்றெடுத்த செல்ல மாவார்!
திருவாகத் திறமைபெற்ற ஏந்தல்! மக்கள்
நெஞ்சத்தில் இடம்பெற்ற கறுப்பு ரோஜா!
திருமணத்தை நிறுத்திவைத்துத் துறவி யாகத்
திருநாட்டுத் தொண்டரானார்! புகழ்ப டைத்தார்!
வருந்தலைவர் அனைவர்க்கும் உவமை யானார்!
வரலாற்றில் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டார்!

படிக்காத மேதையென்னும் காரணத்தால்
படித்தவரின் பிழையவர்பால் படிய வில்லை!
வடிக்காத காவியமாய் வையக த்தில்
வாழ்ந்திருந்து மறையாமல் மறைந்து போனார்!
குடிக்காத தமிழகத்தைப் படைத்துக் காட்டக்
கொண்டிருந்தார் நெஞ்சத்தில் உறுதி! ஆனால்,
முடிக்காத தொடர்கதையாய் இடையில் அந்த
முடிசூடாத் தமிழ்க்காந்தி மூச்சை விட்டார்!

ஏழைபங்கா ளர்அவர்! பங்க ளாக்கள்
ஏதுமில்லாப் பாங்காளர்! அவரைப் போலக்
உழைத்தான் காய்ச்சித் தான் குடிப்போர் தம்மைக்
கொண்டுயர்த்த தொண்டுசெய்தோர்! எவருமில்லை!
வாழத்தான் முடியாமல் ஒவ்வோர் நாளும்
வாடத்தான் பிறந்துவிட்டோர் நிலையை மாற்றி
ஆளத்தான் வந்தபச்சைத் தமிழ ரானார்!
அவரைத்தான் [illegible] [illegible]றோம் தமிழைப் போல!

ஆவியன்வாலாபாக் படுகொலையே இளைஞர் காமராஜரின் உள்ளத்தில் தேச பக்திக் கனலைத் தூண்டிவிட்டு, தேசிய இயக்கத்தில் அவரை இணைய வைத்தது.

காமராஜர் அதிகம் சாப்பிடமாட்டார். காலையில் ஒரு கப் காபி. மதியம் குறிப்பிட்ட நேரத்தில் சாப்பாடு என்பது கிடையாது. அதனால் பல சமயங்களில் சாப்பாடு தவறிப் போகும். இரவில் இரண்டு இட்டிலி, ஒரு கிளாஸ் பால மட்டுமே.

காமராஜர் காலையில் 6 அல்லது 7 மணிக்கு எழுந்து கொள்வார். இரவு படுக்கப் போக நடு நிசியாகிவிடும்.

காமராஜர் உடற் பயிற்சி எதுவும் செய்தது இல்லை. சொத்து எதுவும் சேர்த்தது இல்லை. விருதுநகரில் ஒரு சிறு வீடுமட்டுமே அவருக்குச் சொந்தமாக இருந்தது. அதில் தான் அவரது தாயாரும் சகோதரியும்வாழ்ந்து வந்தனர். ஒரு அங்குல நிலம் கூட அவருக்குக் கிடையாது.

காமராஜர் மூன்று பேரைத் தமது அரசியல் குருவாகக் கொண்டிருந்தார். அவர்களில் தலையாயவர் காந்தியடிகள். காந்தியடிகளின் எளிமை, அஞ்சாமை, உறுதி, கொள்கைகளில் விட்டுக் கொடுக்காத தன்மை, சத்தியம், அஹிம்சை ஆகியவை காமராஜருக்கு காந்தியடிகளிடம் ஒரு பிடிப்பை ஏற்படுத்தியிருந்தன.

இரண்டாவதாக அவரைக் கவர்ந்த தலைவர் நேரு.தேசியம்,சோஷலிசம்.மனிதாபிமானம் ஆகிய பண்புகளுக்காக நேருவைக் காமராஜர் தமது தலைவராக ஏற்றார்.

மூன்றாவதாக சத்தியமூர்த்தியைத் தமது குருவாகக் கொண்டிருந்தார் காமராஜர். சத்தியமூர்த்தியின் தீவிர தேசபக்தி காமராஜரை ஆட்கொண்டிருந்தது.

(இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆஃப் இந்தியா 24-1-1965 இதழிலிருந்து)



இந்த
வயதினிலே
அறியாப்
பருவத்திலே...



**1903 ஜூலை 15**
விருதுபட்டி என்னும் விருதுநகரில் குமாரசாமி நாடார் - சிவகாமி அம்மாள் தம்பதிக்கு மகனாகத் தோன்றினார்.

**1907**
தங்கை நாகம்மாள் பிறப்பு

**1908**
காமராஜர், திண்ணைப் பள்ளிக் கூடத்தில் சேர்க்கப் பெற்றார். அரிச்சுவடியும் ஏட்டுக் கணக்கும் பயின்றார். சிறிது காலம் கழித்து ஏனாதி நாயனார் வித்யாசாலாவில் சேர்க்கப்பட்டார்.

**1909**
சத்திரிய வித்தியாசாலாவில் சேர்க்கப்பட்டார்.

**1910**
தந்தையார் குமாரசாமி நாடார் திடீரென்று காலமாகிவிட்டார். தாய் மாமன் கருப்பையா நாடார் காமராஜரின் குடும்பத்துக்கு உதவி செய்தார்.

**1914**
6ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தபோது பள்ளி செல்வதை நிறுத்திக் கொண்டார்.

**1919 ஏப்ரல்**
ரவுலட் சட்டத்தை எதிர்த்து காந்தியடிகள் விடுத்த அழைப்பை ஏற்று, காங்கிரசின் முழுநேர ஊழியரானார்.



அண்ணலின்
தொண்டராக
ஆர்வமுடன்
உழைத்தவராம்....

**1920**
ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டார். தாயார், திருமணப் பேச்சைத் தொடங்கினார்; மணம் செய்து கொள்ள மறுத்துவிட்டார் காமராஜர்.

**1922**
சாத்தூர் தாலுகா காங்கிரஸ் மாநாட்டில் வரவேற்புச் செயலாளராகப் பணியாற்றினார்.

**1923**
மதுரையில் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார்.

**1926**
சத்தியமூர்த்தி - சீனிவாச அய்யங்கார் ஆகியோருடன் பணி ஆற்றினார். பொதுத் தேர்தலில் பல ஊர்களுக்குச் சென்று தேர்தல் பணிபுரிந்தார்.

# பெருந்தலைவர் வாழ்க்கைக் குறிப்பு

**1927**
சென்னையில் கர்னல் நீல் சிலை அகற்றும் போராட்டத்தை நடத்த அண்ணல் காந்தியிடம் அனுமதி பெற்றார். ஆனால் போராட்டம் நடைபெறவில்லை. நீல் சிலையை அரசாங்கமே அகற்றி விட்டது.

**1928**
மதுரைக்கு வருகைபுரிந்த சைமன் குழுவை எதிர்த்தார். வேதாரண்யத்தில் நடைபெற்ற உப்பு சத்யாக்கிரகத்தில் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டார். இரண்டாண்டு சிறைத் தண்டனை பெற்றார். அலிபூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

**1931**
காந்தி இர்வின் ஒப்பந்தத்தின் காரணமாக காமராஜர் விடுதலை செய்யப்பட்டார். விருதுநகரில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

**1933**
இங்கிலாந்தில் நடைபெற்ற வட்ட மேஜை மாநாடு தோல்வியுற்றதால் நாடெங்கும் கிளர்ச்சி ஏற்பட்டது. பல தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். காமராஜரும் ஓராண்டு சிறைத் தண்டனை பெற்றார்.

**1934 ஜனவரி**
பீகாரில் ஏற்பட்ட பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வேண்டுமென பாபு ராஜேந்திர பிரசாத் விடுத்த வேண்டுகோளை ஏற்று, [illegible] உதவிகளைச் செய்[illegible] [illegible]ஜர்.

**1936**
காரைக[illegible] [illegible] காங்கிரஸ கமிட்டித [illegible] ப

மூர்த்தி தலைவராகவும் காமராஜர் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**1937**
சட்டமன்றப் பொதுத் தேர்தலில் சாத்தூர்த் தொகுதியில் காங்கிரஸ் சார்பாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். விருதுநகர், நகராட்சி மன்றத் தேர்தலில் 7வது வார்டில் போட்டியிட்டு வென்றார். நகராட்சித் தலைவராகும்படி பலரும் வேண்டியும், அவர் மறுத்துவிட்டார்.

**1940**
தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். யுத்த நிதிக்குப் பணம் தர வேண்டாம் என்று மக்களிடையே பிரச்சாரம் செய்ததால் அந்நிய ஏகாதிபத்தியத்தால் கைது செய்யப்பட்டு, வேலூர் சிறைக்கு அனுப்பப்பட்டார்.

**1941 மே-31**
சிறையிலிருந்த காமராஜர், விருதுநகர் நகராட்சி மன்றத் தலைரவாக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1942 மார்ச்**
காமராஜர் விடுதலை பெற்றார். விருதுநகரில் மகத்தான வரவேற்பு. மாநகராட்சிக் கூட்டத்தில் முதன் முறையாகக் கலந்து கொண்டு, அன்றைய தினமே கட்சிப் பணியின் காரணமாக நகராட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார். ஆகஸ்ட் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்டார்.

**1945**
இரண்டாவது உலகப் பெரும் போரில் வெள்ளையர்கள் வெற்றி பெற்றதனால், பாதுகாப்புக் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். காமராஜரும் அவர்களுள் ஒருவர். திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற காங்கிரஸ் ஊழியர் மாநாட்டில் காமராஜரின் கை வலுத்தது.

**1946 மே 16**
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்றார்.

**1947 ஆகஸ்ட் 15**
இந்தியா விடுதலை பெற்றது. பண்டித நேருவின் தலைமையில் இடைக்கால அரசு உருவானது. இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தந்த அண்ணல் காந்தியடிகளைப் போற்றி ஓர் அறிக்கை வெளியிட்டார் காமராஜர்.



ஆசிய
ஜோதியுடன்
அரும்பணிகள்
ஆற்றிவந்தார்.

**1948**
கோயம்புத்தூரில நடைபெற்ற தமிழ் மாகாண மாநாட்டுக்குத் தலைமை வகித்தார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகப் போட்டியின்றி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1949**
இலங்கை இந்தியர் அழைப்பின் பேரில் இலங்கைக்குச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார்.

**1950**
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்றார்.

**1951**
பிரதமர் நேரு, அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகத் தேர்வு பெறுவதற்குக் காமராஜர் மிகவும் உதவியாக இருந்தார்.

**1952**
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக டாக்டர் சுப்பராயன் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வழி வகுத்தார் காமராஜர்.

சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் பூரண பெரும்பான்மையை அடையவில்லை. ராஜாஜி முதலமைச்சரா



சுப்பராயன்
தோழராவார்
அர்ப்பணிப்பே
வடிவமானவர்.

வதற்கு காமராஜர் ஒத்துழைப்பு நல்கினார். டிசம்பர் திங்களில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தலில் காமராஜர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1953**
இலங்கை சுற்றுப்பயணத்தை இரண்டாவது முறையாக மேற்கொண்டார்.

**1954 பிப்ரவரி:**
மலாய்நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். முதலமைச்சர் ராஜாஜி அறிமுகம் செய்த குலக் கல்வித் திட்டம் பெருத்த எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டதால் அவர், பதவியில் நீடிக்க முடியவில்லை. ராஜினாமா செய்தார். நிலைமையைச் சமாளிப்பதற்காக சட்டமன்றக் காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவிக்குக் காமராஜர் போட்டியிட்டு வென்றார்.

**1954 ஏப்ரல் 13**
காமராஜர் சென்னை மாநிலத்தின் முதல்வரானார். குடியாத்தம்



தமிழகத்தின் முதல்வரானார் சமதர்மம் தழைக்கச் செய்தார்.

தொகுதியில் இடைத்தேர்தலில் போட்டியிட்டு வென்று சட்டமன்ற உறுப்பினரானார்.

**1955**
ராமநாதபுரத்தில் கிழக்குப் பகுதியில் புயலாலும் பேய் மழையாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்த்து, நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார்.

**1956**
மொழிவாரி மாகாணம் என்ற திட்டத்தின்படி, புதிய தமிழகம் உருவாவதற்கு ஆதரவு தெரிவித்தார்.

பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தை அறிமுகம் செய்தார்.

**1957**
பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, வெற்றி பெற்று, மீண்டும் முதலமைச்சரானார்.

**1960**
ஏழைப் பிள்ளைகள் அனைவருக்கும் 11ஆம் வகுப்பு வரை இலவசக்



கல்வி அளிப்பதற்கு ஆணையிட்டார்.

**1961 அக்டோபர் 9**
சென்னை மாநகராட்சியினர் உருவாக்கிய காமராஜர் திருஉருவச் சிலையைப் பிரதமர் நேரு திறந்து வைத்தார்.

**1962**
பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றார்—மூன்றாம் முறையாக முதலமைச்சர் ஆனார்.

**1963**
எல்லாருக்கும் இலவசக் கல்வித் திட்டத்தை அமல்படுத்தினார்.

**அக்டோபர் 2**
காமராஜர் திட்டத்தின்படி பதவியை ராஜினாமாச் செய்தார்.
பின்னர் காமராஜர் அனைந்திந்திய காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1964 ஜனவரி 9**
பிரதமர் நேரு மே 27-ல் மறைவெய்தியதால் - அடுத்து லால் பகதூர் சாஸ்திரி பிரதமராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு ஆவன செய்தார் காமராஜர்.

**1965**
இந்தியா - பாகிஸ்தான் போர் ஏற்பட்டது. பஞ்சாபில் போர்





முனைப் பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்தார். பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி யுத்த நிதி திரட்டுவதற்காகச் சென்னைக்கு வந்தபோது— காமராஜர் பேராதரவு தெரிவித்தார்.

**1966**
தாஷ்கண்ட் சென்ற பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி, எதிர்பாராது மறைவு எய்தியதால் மறுபடியும் பிரதமர் தேர்வு நடைபெற்றது. இந்திரா காந்தி பிரதமராவதற்குக் காமராஜர் பெரும் முயற்சிகள் எடுத்துக் கொண்டார்.

**ஜூலை 22**
காமராஜர் சோவியத் நாட்டில் இருபது நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

**நவம்பர் 7**
டெல்லியில் சில விஷமிகள் - காமராஜரின் இல்லத்தைத் தாக்கினர். ஆயினும், ஆபத்தின்றித் தப்பித்தார்.

**1967**
பொதுத் தேர்தலில் போட்டியிட்ட காமராஜர் தோல்வியுற்றார். பேரறிஞர் அண்ணா பெரும் பான்மை பெற்று முதல்வரானார்.

**1969**
நாகர் கோவில் நாடாளுமன்ற இடைத் தேர்தலில் காமராஜர் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

**1971**
நாடாளுமன்ற இடைத்தேர்தல் வந்தது. காமராஜர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்



பெற்றார்.

**1972**
தாமிர பத்திர விருது பெற்றார்.

**1975 அக்டோபர் 2**
பிற்பகல் 2 மணி அளவில் எதிர்பாராமல் காமராஜருக்கு உடல் வியர்த்தது. டாக்டர் வருவதற்குள் அவர் உயிர் துறந்தார். அவரது உடல் பொதுமக்களின் பார்வைக்காக ராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டது.

**அக்டோபர் 3**
அவரது உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. காமராஜரின் தங்கையின் பேரன் கனகவேல் உடலுக்கு எரியூட்டினார்.

காமராஜருக்கு கிண்டியில் நினைவகத்தைத் தமிழக அரசு உருவாக்கியது.

**1976**
ஜூலை 15 ஆம் நாளன்று காமராஜர் நினைவு 25 காசு அஞ்சல் தலையை மைய் அரசு சென்னை கலைவாணர் அரங்கத்தில் வெளியிட்டது.
பாரத ரத்னா விருது வழங்கியது.



அண்ணாவின் தொண்டரென அக்டோபர் 2ல் மெய்ப்பித்தார்.

**1977 ஆகஸ்டு 18**
தமிழ்நாடு சட்டப் பேரவையில் காமராசர் படம், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் சஞ்சிவ ரெட்டியால் திறந்து வைக்கப் பட்டது.

**1978 ஜூலை**
தியாகராய நகரில் காமராஜர் வாழ்ந்த இல்லத்தை அரசுடைமையாக்கி நினைவில்லமாக்கியது தமிழக அரசு.

சென்னைக் கடற்கரைச் சாலைக்குக் காமராஜர் சாலை என்று பெயர் சூட்டியது தமிழக அரசு.

**1984 ஜூலை 15**
விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்ட காமராசர் மாவட்டத்தைத் தமிழக அரசு உருவாக்கியது.

தொகுப்பு தமிழ்ப்பித்தன்
ஆதாரம்: முருக தனுஷ்கோடி எழுதிய காமராஜர் ஒரு சரித்திரம்



## சென்ற இதழில்....

தமிழக அரசு, கடந்த 9 ஆண்டுகளில் ஆற்றிய அரும்பணி மகுடத்தின் முத்துக்கள் சிலவற்றை, சென்ற இதழ் ( 1 .7.86) அட்டை அலங்கரித்தது.

85377

# சமுதாய மேதை

**கவிஞர் வானம்பாடி**

சரித்திரத்தில் உருவானோர் பலரைக் கண்டோம்.
சரித்திரத்தை உருவாக்கும் சக்தி மிக்கோர்
சரித்திரத்தில் மிகச்சிலரே! சித்த மெல்லாம்
சலியாது உழைப்பதிலே தேக்கி வைத்து-
சரித்திரத்தை அற்புதமாய் மாற்றி, இங்கு
சமதர்மம் காப்பதற்கு முனைந்து நின்று-
சரித்திரத்தைத் தந்தவொரு தீரன்; இந்த
சமுதாய மேதையவன்; காம ராஜன்!

மக்களது உள்ளத்திலே மலர்ந்த மேதை
மகாத்மா காந்தியண்ணல் மதித்த கீதை!
பக்கபலம் தேடுதற்குப் பாடங் கேட்டு
பட்டங்கள் பெற்றதனால் மேதையல்ல!
தக்கபல செயல்கண்டு தன்னைக் கொண்டு
தலைநிமிர்ந்த மேதையவன்; தாயைப்போல
மிக்கநலம் புரிந்திருந்த காம ராஜன்
மண்ணாண்ட மேதைகளில் மேதை யன்றோ?

நெஞ்சத்தில் சுமைமிகுந்த நேரு ஜிக்கு
நேசமுடன் காமராஜன் திட்டம் தந்தான்!
கொஞ்சத்தில் மறந்திடுமோ சரிதம்? அந்தக்
கோமகனாம் நேருபிரான் வீழ்ந்த நேரம்
வஞ்சத்தில் பாரதத்தை விழுங்க வெண்ணி
வலைவிரித்துக் காத்திருந்தோர் வாய் புதைக்க-
மஞ்சத்தில் லால்பகதூர் அமர்ந்த தெல்லாம்
மாமேதை காமராஜன் செயலா லன்றோ?

எத்தனையோ பேரறிஞர் இந்த நாட்டில்
இருந்ததைநா மறிந்திடுவோம்; எனினும் அன்று,
அத்தனைபேர் மத்தியிலும் அருமை நேரு
அடுத்தபடி இந்நாட்டை வழி நடத்த
சித்தனைப்போல் வாழ்ந்துவரும் காமராஜன்
சீர்தலைமை பெறுகவென்று சொன்னா ரன்றோ?
இத்தனையும் ஜெகமறியும் என்றால் அந்த
இசைமிகுந்த மேதைபுகழ் இயம்பப் போமோ?

சொல்வதெனில் சொல்லலாம் நூறு நூறு-
சொல்பிந்தி செயல்முந்தி என முடித்த
வல்லமையின் சின்னமந்த காம ராஜன்
வழிகாட்டும் மேதையென்போம், தியாகத் தாயின்
செல்வமகன் கூட்டிவைத்த பெருமை இங்கு
செந்தமிழர் நாட்டுக்கே புதுமை யாகும்!
கல்வியெனும் வெள்ளமதில் மிக்க நம்மோர்
கண்திறந்த மேதையவன்; போற்றி! போற்றி!



15.7.86 அன்று பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 84-வது பிறந்த நாளையொட்டி, அண்ணா சாலையிலுள்ள காமராஜர் சிலைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மாலை அணிவித்தார்கள்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

